2907

J.N.L.A. Debates
Official Report

No. 445

Voc 18

21st & 24th March 1986

V211,31 N86
N86·18·445
136454

வெளியீடு 17-10-1986] [Issued 17-10-1986

888/87
2907

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
## செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
## OFFICIAL REPORT

வெள்ளிக்கிழமை, மார்ச் 21, 1986 - தொகுதி 18 எண் 4

Friday, 21st March 1986 - Volume 18 No. 4

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை - 600 009
Legislative Assembly Secretariat, Fort St. George,
Madras - 600 009

விலை ரூ. 3-00] [Price Rs. 3-00

136454
சென்னை-600 008.

## உள்ளடக்கம்

**21-3-1986**

| | பக்கங்கள் |
|---|---|
| 1 வினாக்கள்—விடைகள் | |
| (அ) உடுக்குறியிட்ட வினாக்கள் | 405—442 |
| (ஆ) உடுக்குறியிடாத வினாக்கள் | 443—495 |
| 2 தகவல் கோரல்: | |
| (அ) கரும்பு பண்ணைக்கழக ஆண்டு அறிக்கைகள் குறிப்பிட்ட காலத்தில் அவையில் வைக்கப் பெறாதது .. .. | 496—497 |
| (ஆ) சென்னை மாநகராட்சியினரால் வாங்கப் பெற்றுள்ள சாலை போடும் கருவி .. | 497 |
| 3 வரவு-செலவுத் திட்டம் 1986-87 பொது விவாதம் (தொடர்ச்சி) .. .. | 497—578 |
| திரு. ந. சிவஞானம் | 497—508 |
| திருமதி பா. வளர்மதி | 508—518 |
| திரு. மா. மணிமாறன் | 518—528 |
| திரு. கூடலூர் இ. வி. வேலு | 527—540 |
| திரு. குமரி அனந்தன் | 544—557 |
| திரு. அ. ஆறுமுகம் | 557—566 |
| டாக்டர் தே. குமாரதாஸ் | 566—573 |
| திரு. வை. பாலச்சந்திரன் | 573—578 |
| 4 அறிவிப்பு | |
| டாக்டர் பி. சி. ராய் விருது பெற்றுள்ள டாக்டர் எச். வி. ஹ்ண்டே அவர்களுக்குப் பாராட்டு .. .. | 565—566 |
| 5 பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள் .. .. | 578—579 |

[1986 மார்ச் 21

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ் மொழியை பயிற்று மொழியாகக் கொண்டு, போதிய தகுதி பெற்றவர்கள் இல்லாத போது ஆங்கில மொழியைப் பயிற்று மொழியாகக்கொண்டு படித்துப் பட்டம் பெற்றவர்களை நியமிக்கலாம் என்று ஒரு அரசாணை பிறப்பிப்பதற்கு நாம் யோசித்தோம். ஆக முதல் முன்னுரிமை தமிழ் மொழியை பயிற்று மொழியாகக் கொண்டவர்களுக்குத் தான். அதை சட்டத்துறையுடன் கலந்து ஆலோசிக்கின்றபோது அரசியல் சட்டம் அதற்கு இடம் தரவில்லை என்று குறிப்பிட்டார்கள்.

இப்போது தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைக்குழு நடத்தும் அத்தனைப் போட்டித் தேர்வுகளுக்கும், வினாத் தாள்கள் தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் தயாரிக்கப்பட்டு, விண்ணப்பதாரர்களுக்கு இவ்விரு மொழிகளில் ஏதாவதொன்றில் விடையெழுத அனுமதிக்கப்படுகின்றனர். ஆக எல்லாப் போட்டிகளிலும், தமிழிலே எழுதலாம் அல்லது ஆங்கிலத்திலும் எழுதலாம் என்கின்றபோது தமிழையே தாய்மொழியாகக் கொண்டு விடை எழுதுகின்ற வாய்ப்பை எளிதாகக் கொண்டவர்கள், ஆங்கிலத்தில் எழுதுகின்றவர்களுக்கு ஈடாக எழுதுகின்ற தன்மை உண்டு. இதிலே வருகின்றபோது அவர்களுக்கு அதிக வாய்ப்பு இயல்பாக ஏற்படுகின்ற வாய்ப்பு ஏற்படுகிறது. எனவே தனியே அவர்களுக்கென்று முன்னுரிமை அளிப்பது என்பதுதான் சட்டத்திற்குப் புறம்பாக இருக்கும். ஆனால் தமிழ் மொழியை தாய்மொழியாக எடுத்து, பயிற்று மொழியாக எடுத்து, வேலையில்லாமல் இருப்பவர்களின் எண்ணிக்கை எவ்வளவு என்று குறிப்பிடப்படவில்லை. தனிக் கேள்வி போட்டால் அதனுடைய விவரத்தை அறிவிக்கலாம்.

**திரு. கு. சுப்பராயன் :** தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் தற்போது ஆங்கிலக் கல்வி முறை மோகத்தின் மீது ஏற்பட்டிருக்கிற விபரீதத்தின் காரணமாக தமிழ்நாட்டில் தமிழ் பேச்சு வழக்கிலிருந்து அகற்றப்பட்டு விடுமோ என்கிற அபாயம் இருக்கிறது. எனவே தமிழ்நாட்டிலுள்ள இங்கிலீஷ் மீடியம் ஆங்கிலப் பள்ளிகளிலும், தமிழ்மொழியை முதல் மொழியாக கற்றுத்தர வேண்டும் என்ற அளவிற்கு அரசு சட்டம் இயற்ற முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, இப்போது அரசு உதவிபெறும் எந்தப் பள்ளியாக இருந்தாலும், அதிலே தமிழ் கட்டாயமாக இருக்க வேண்டும். தமிழ் பயிற்று மொழியாக இருக்க வேண்டுமென்றும் நாம் வற்புறுத்தி வருகிறோம். அரசின் சார்பாக நடத்தப்படுகின்ற உயர்நிலைப் பள்ளிகளில், மேல் நிலைப் பள்ளிகளில், நாம் ஆங்காங்கே இருக்கின்ற சூழ்நிலைக்கேற்ப, பெரிய நகரங்களில், 5, 6 வகுப்புகள் இருக்குமானால், அதிலே ஒன்றிரண்டு வகுப்புகள்



1986 மார்ச் 21]

என்று கணக்கு எடுத்து, அனுமதி பெற்று, அவர்களுக்கு மட்டும் ஒன்றிரண்டு வகுப்புகள் ஆங்கிலப் பயிற்று மொழியாக இருக்கலாம். 6, 7 வகுப்புகள் இருந்தால் அரசினுடைய அனுமதி பெற்று, மாண்புமிகு கல்வி அமைச்சரின் அனுமதியைப் பெற்றுத்தான் நடத்த வேண்டும். ஆக அரசாங்கத்தைப் பொறுத்தவரையில், உதவி பெறுகிற பள்ளிகளில் தமிழ் சொல்லிக் கொடுக்க முடியாமல் இருக்க முடியாது. அரசின் உதவி பெறாது மத்திய அரசினுடைய பல்வேறு வகைகளில் இருக்கின்ற திட்டங்களின் அடிப்படையில் பள்ளிகளைத் துவக்குகிறவர்கள், மெட்ரிக்குலேஷன் பள்ளிகளைத் துவக்குகின்றபோது, அவர்களுடைய பயிற்று மொழியாக ஆங்கில மொழியை வைத்திருக்கிறார்கள். மெட்ரிக்குலேஷன் சென்னைப் பல்கலைக் கழகத்தின் கீழ் இருப்பதால், தமிழ் மொழி ஒரு பாட மொழியாக இருந்து வருகிறது. தமிழ் அல்லது ஹிந்தி அல்லது பிரெஞ்ச் அல்லது ஜெர்மனி என்று வைத்திருக்கிறார்கள். அதிலே ஒன்றை அவர்கள் எடுத்துக்கொள்கிற சூழ்நிலை இருக்கிறது.

**திரு. செ. செம்மலை :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழைப் பயிற்றுமொழியாக்குகின்ற திட்டத்திற்கு ஊக்கம் அளிக்கின்ற வகையிலே நாம் உதவித் தொகைகளை வழங்கி வந்தாலும்கூட அந்த வகுப்புகளில் மாணவர்களுடைய சேர்க்கை குறைவாக இருந்து வருவதற்குக் காரணம் அப்படிப்படித்து வந்தவர்களுக்கு எதிர்காலத்திலே வேலைவாய்ப்புக்கு உத்திரவாதம் இல்லையென்ற அச்ச உணர்வு இருக்கிறது. இன்னும் சொல்லப்போனால் காம்பெடிஷன் தேர்வுகளிலே—தமிழ்நாடு தேர்வாணைக் கழகத்தினாலே நடத்தப்படுகிற தேர்வுகள் இருக்கின்றன—அதைத் தவிர யூனியன் பப்ளிக் சர்வீஸ் கமிஷன், பேங்கிங் சர்வீஸ் போன்றவைகளுக்கு தேர்வுகள் நடத்தப்படுகிறபோது ஆங்கில அறிவைச் சோதிக்கின்ற முறையிலே தான் அந்தத் தேர்வுகள் இருக்கின்றன. அந்த அளவிலே தமிழில் படித்தவர்கள் பின்னுக்குத் தள்ளப்படுகிற நிலைமை இருக்கிறது. எனவே தமிழில் படித்தவர்களையும் சரிசமமாக ஆக்குகிற அளவுக்கு அரசு அதை ஆராய்ந்து வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுக்க முன்வருமா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழைப் பயிற்றுமொழியாக எடுத்தவர்களை தமிழகத்தைப் பொறுத்தவரையிலே இருக்கின்ற நிர்வாகத் துறைகளிலேயும் மற்றவைகளிலேயும் பயன்படுத்திக்கொள்கிற ஒரு சூழ்நிலையை எப்படி எப்படி உருவாக்கலாம் என்பதிலே நாம் கண்ணுங்கருத்துமாக இருந்து வருகிறோம். ஆனால் அகில இந்தியாவைப் பொறுத்தவரையிலே ஆங்கிலத்திற்கு முன்னுரிமை தருகின்ற அளவுக்கும் ஆங்கிலத்தைப் பயிற்றுமொழியாக எடுத்துப் படித்தவர்கள் அதிலே வெற்றிபெருகின்ற அத்தகைய ஒரு சூழ்நிலை

இருக்கிறது என்பது உண்மைதான். தமிழைப் பயிற்றுமொழியாக எடுத்துப் படித்துவிட்டு வருகிறவர்களைவிட ஆங்கிலத்தை பயிற்றுமொழியாக எடுத்துப் படித்தவர்களுக்கு எதிர்காலம் நன்றாக இருக்கும் என்ற நம்பிக்கை இருக்கிறது. அதற்கான சூழ்நிலைகள் இருப்பதை நாம் மறுப்பதற்கு இல்லை. அத்தகைய நிலைமைகள் நாளுக்கு நாள் குறைந்து வரவேண்டும். அதற்கான முயற்சிகளிலே நாம் ஈடுபட வேண்டும். தற்போது மேல்நிலைப் பள்ளி இறுதிவகுப்பு பன்னிரண்டாவது வகுப்பு வரையிலும் ஆங்கிலம், தமிழ் இரண்டிலும் படித்து இரண்டு மொழிகளிலேயும் அவர்கள் வல்லவர்களாக விளங்க வேண்டுமென்பதுதான் நம்முடைய குறிக்கோள். ஆங்கிலம், தமிழ் ஆகிய இந்த இரண்டு மொழிகளிலும் நன்கு பயிற்சி பெற்று அகில இந்திய அளவிலே நடைபெறுகின்றவைகளுக்குத் தேவையான மொழி அறிவை அவர்கள் 12 வது வகுப்புகளிலேயே இரண்டு மொழிகளிலேயும் பெறவேண்டும். அதற்குப்பிறகு அந்த மொழியறிவை அவர்கள் பயன்படுத்திக் கொள்கிற ஒரு சூழ்நிலை வரவேண்டும். தமிழகத்தைப் பொறுத்தவரையிலே பல்வேறு நிலைகளிலே தமிழை ஆட்சிமொழியாகவும், பழக்கமொழியாகவும் ஆக்குகின்ற சூழ்நிலைகள் வளர வளர அந்த மாணவர்களுக்கு அதிகமான வாய்ப்புகள் ஏற்படும்.

**இந்திய கால்நடை மருத்துவ சங்கத்திற்கு நிலம் ஒதுக்கீடு.**

(219—*வினா எண்) 5759 திருமதி பா. வளர்மதி: மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இந்தியக் கால்நடை மருத்துவச் சங்கத்திற்கு மயிலாப்பூரில் கட்டிடம் கட்டுவதற்கு நிலம் ஒதுக்கப்பட்டுள்ளதா ?

(ஆ) அதற்கு அந்தச் சங்கத்திடம் எவ்வளவு பணம் வசூல் செய்யப்பட்டது ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(ஆ) ரூ. 59,675 (ரூபாய் ஐம்பத்தொண்பதாயிரத்து அறுநூற்று எழுபத்து ஐந்து மட்டும்) வசூலிக்கப்பட்டது.

திருமதி பா. வளர்மதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கால்நடை மருத்துவச் சங்கத்திற்கு ஒதுக்கப்பட்ட அந்த நிலத்தை தனியார்கள் ஆக்கிரமிப்புச் செய்துள்ளார்கள். அதை அகற்றுதவற்கு அரசு முன்வருமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கால்நடை மருத்துவச் சங்கத்திற்கு ஒதுக்கப்பட்ட நிலத்திலே அவர்கள் விரும்பியபடி கட்டுவதற்கு இயலாத வகையிலே அங்கே ஆக்கிரமிப்பு இருக்குமானால் அதை முறைப்படி அகற்றுவதற்கு அரசு முயற்சிகளை மேற்கொள்ளும்.



திருமதி பா. வளர்மதி : மாண்புமிகு பேரவை தலைவர் அவர்களே, அதே போன்று 'மயிலாப்பூரிலே வெளிநாட்டுத் தூதுவர்கள் வந்தால் ஆலோசனைகள் நடத்துவதற்கு ஆலோசனை மண்டபம் ஒன்று கட்டுவதற்குத் திட்டம் அரசிடம் உண்டா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு பெரிய மாநாடு மண்டபம் தமிழகத்திலே இருக்கவேண்டுமென்ற செயற்குறிப்பு அரசிடத்திலே இருந்து வருகிறது. சாதாரணமாக அகில இந்திய அளவிலோ அல்லது ஆசிய அளவிலோ, அல்லது அகில உலக அளவிலோ, 500, 600 பேர்கள் அடங்கியிருக்கிற உலகப் பிரதிநிதிகள் அடங்கிய ஒரு பெரும் மாநாடு நடத்தக்கூடிய அளவிற்கான மண்டபம் அல்லது 100 அல்லது 150 பேர்கள் அமரக்கூடிய மண்டபம் என்ற அளவுக்கு ஒரு சிறப்பான மண்டபம் தமிழகத்தைப் பொறுத்தவரையிலே அமையவில்லை. உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமானால் டெல்லியிலே உள்ள விஞ்ஞான பவன் போன்று தமிழகத்திலே இல்லை. தந்தை பெரியார் அவர்களுடைய நூற்றாண்டு விழாவின்போது அவர்களுடைய பெயரால் ஒரு மண்டபம் அமைப்பதற்கு செயற்குறிப்பு திட்டப்பட்டது. அதற்கான இடம் தேர்ந்தெடுக்கப்படவேண்டுமென்ற நிலை இருந்து வருகிறது. அந்த மண்டபத்தை வைக்கவேண்டுமென்ற எண்ணம் அரசுக்கு உண்டு, அதை மயிலாப்பூரிலேதான் வைக்கவேண்டுமென்ற எண்ணம் இல்லையென்றாலும் பல இடங்கள் இருந்தாலும் மயிலாப்பூரைச் சேர்ந்த அரசுக்குச் சொந்தமான ஐயப்பன் கோவிலுக்கு எதிரிலே செட்டிநாடு பேலசுக்கு எதிரிலே ஒரு இடம் இருக்கிறது. அந்த இடத்திலே அமைப்பதற்கு இயலுமா என்பதை பற்றி அரசு ஆலோசித்து வருகிறது. அந்த இடம் அமைந்தால் அது நல்ல இடமாக அமையும். பெரிய மாநாட்டு மண்டபம் கட்டவும், எதிரிலே திறந்தவெளியாக விடவும், ஏராளமான கார்கள் வந்து நிறுத்தி வைப்பதற்கு வாய்ப்பாக அமையவும், பக்கத்தில் கடற்கரை பகுதி இருப்பதால் வெளிநாட்டுக்காரர்கள் வந்து தங்கவும், அந்த மாநாடு மண்டபம் கட்டப்பட்டால் வசதி வாய்ப்புகள் ஏற்படும். பலயிடங்களில் தேடிப் பார்த்ததில் அந்த இடம் சரியாக இருக்கும் என்று குறிப்பு அனுப்பப்பட்டிருக்கிறது. அது அரசின் ஆய்வில் இருக்கிறது. அரசு அதுகுறித்து தக்க முடிவு எடுத்ததற்குப் பிறகு இதுபற்றி அறிவிக்கப்படும்.

(முற்பகல் 9.10)

**குறு மற்றும் சிறு விவசாயிகள் பட்டியல்.**

220—(*வினா எண். 587) திரு. க. பாரமலை : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குறு மற்றும் சிறு நில விவசாயிகள் (Sma!l and Margina! Former) பட்டியல் சரியாகத் தயாரிக்கப்படாததால் மேற்கண்ட விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டு உள்ளார்களா ?

[1986 மார்ச் 21

(ஆ) ஆம் எனில், குறு மற்றும் சிறு விவசாயிகள் பட்டியலை மறுபடியும் தயாரிக்க சிறப்புத் திட்டம் ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் தயாரிக்கப்பட்டுள்ள, சிறு மற்றும் குறு விவசாயிகளின் பட்டியலில் குறைபாடுகள் இருப்பதாகவோ அதனால் விவாசாயிகள் பாதிக்கப்பட்டதாகவோ, அரசுக்கு எவ்வித தகவலும் இல்லை.

(ஆ) இருப்பினும், புதிய சிறு மற்றும் குறு விவசாயிகளின் பட்டியலை தயாரிக்குமாறு மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு அறிவுரை வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சிறு நில விவசாயிகளுக்காக வழங்கப்படும் சலுகையைத் தவறான வழியிலே பயன்படுத்திக் கொள்வதற்காக முறைகேடுகள் நடக்கின்றன. மாண்புமிகு அமைச்சரவர்கள் சொல்லுகின்ற நேரத்தில் அதுபோன்ற புகார்கள் வரவில்லை என்று சொன்னார்கள். ஆகவே, இம்மாதிரியான பட்டியலைத் தயாரிக்கின்ற நேரத்தில், இந்தப் பட்டியல் சரியா என்று பார்ப்பதற்கு அரசாங்கத்திடம் என்ன மானிட்டரிங் சிஸ்டம் இருக்கிறது ? எங்களைப் பொறுத்த வரையில் அம்மாதிரி புகார்கள் வந்திருக்கின்றன. எனவே, எதிர்காலத்தில் இப்படிப் பட்ட குறைபாடுகள் வராமல் இருப்பதற்கு என்ன நடைமுறைகளை அரசு கையாளும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவரவர்களே, இப்பொழுது குறைபாடுகள் அரசுக்கு வரவில்லை என்றுதான் குறிப்பிட்டேன். இருப்பினும், புதியதாகப் பட்டியலைத் தயாரிக்குமாறு அறிவுரை பிறப்பிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. அப்படித் தயாரிக்கப்படுகின்ற பட்டியலில் அல்லது தயாரிக்கப் பட்டிருக்கின்ற பட்டியலில் ஏதேனும் குறைபாடுகள் இருந்தால் அதுபற்றி அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வந்தால் அந்தக் குறைபாடுகளை நீக்குவதற்கு முறையான நடவடிக்கையை அரசு எடுக்கும்.

திரு. தி. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, குறு மற்றும் சிறு விவசாயிகளின் பட்டியலைத் தயாரிக்கின்றபொழுது வசதி படைத்தவர்கள்கூட அதிலே இடம் பெற்று விடுகிறார்கள். ஏதாவது கடன் பெற வேண்டுமென்ற விருப்பம் கொண்டவர்கள் அந்தப் பட்டியலில் இடம் பெற்று விடுகின்றனர். ஆகவே, ஒன்றிய அதிகாரிகள், வருவாய்த்துறை அதிகாரிகள் போன்றவர்களைக் கொண்ட குழு ஒன்றினை அமைத்து அத்தனை பேருக்கும் நிரந்தரமான பட்டியலைத் தயாரிப்பதற்கு அரசாங்கம் ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.



1986 மார்ச் 21]

மாண்புமிகு திரு. ப.உ. சண்முகம் : தலைவரவர்களே அப்படி அதிகாரிகளின் கவனக் குறைபாட்டினாலோ, அல்லது வேண்டுமென்றோ தவறு செய்யப்பட்டிருந்தால் தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும். அநேகமாக, வருவாய்த்துறை அதிகாரிகளால் அளிக்கப்பட இருக்கின்ற பட்டா பாஸ் கிடைக்கின்ற பொழுது இப்படிப்பட்ட குறைபாடுகள் நீக்கப்பட்டு விடும் என்று நான் கருதுகிறேன்.

திரு. கு. ரமணி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இந்தக் குறு, சிறு நில விவசாயிகளினுடைய பட்டியலைத் தயாரிப்பதற்கு அரசு வைத்திருக்கும் 'கிரைட்டேரியன்' என்ன ? எவ்வளவு பூமி என்பதா அல்லது அதில் கிடைக்கின்ற விளைச்சலா- ஈல்டா ? எந்த முறையில் கிரைட்டேரியன் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. ஏன் இதைக் கேட்கிறேன் என்றால், இதனாலே சிறு நில விவசாயிகளுக்கு - ஏழைகளாக இருக்கும் சிறுநில விவசாயிகளுக்கு அரசாங்கம் கொடுத்துவரும் சலுகைகளுக்குப் பாதிப்பு ஏற்படுகிறது. பெரியவர்கள் இதன் உள்ளே நுழைந்து விடுகிறார்கள். எனவே, அதற்கு சரியான கிரைட்டேரியன் தேவை ? அதைப்பற்றி மாண்புமிகு அமைச்சரவர்கள் அறிவிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப.உ. சண்முகம் : தலைவரவர்களே, அடுத்த கேள்வி இதையொட்டியே இருப்பதால் அதற்கு விடை அளித்துவிட்டால் உறுப்பினர் அவர்களின் கேள்விக்கு விடை கிடைத்து விடும்.

221—(*வினா எண். 2504) திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிறு விவசாயிகளுக்கு அரசு அளிக்கும் சிறப்புச் சலுகைகள் யாவை ?

(ஆ) சிறு விவசாயி என எந்தத் தகுதியைக் கொண்டு நிர்ணயிக்கப்படுகிறது ?

மாண்புமிகு திரு. ப.உ. சண்முகம் : தலைவரவர்களே, (அ) வேளாண்மை விளைபொருட்களின் உற்பத்தியைப் பெருக்க 1983–84-ஆம் ஆண்டிலிருந்து செயல்படுத்தப்பட்டு வரும் பெருந்திட்டத்தின் சிறுபாசன பிரிவின்கீழ், சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு புதியதாக கிணறு வெட்டுதல், பழைய கிணறுகளை புதுப்பித்தல், ஆழ்துளை கிணறு அமைத்தல் மின்சார பம்புசெட், மற்றும் டீசல் எண்ணெய் பம்புசெட் வாங்குதல் போன்றவற்றிற்கு மானியத்துடன் கூடிய கடன் வழங்கப்படுகின்றன. நில மேம்பாட்டுப் பணிகளுக்கும் இத்தகைய மானியத்துடன் இணைந்த கடன்கள் வழங்கப்படுகின்றன.

பருப்பு வகைகள், எண்ணெய் வித்துக்கள், தானியவகை வித்துக்கள் கொண்ட சிறுபைகள் இலவசமாக வழங்கப் படுகின்றன.

(ஆ) புஞ்சை நிலமாக இருப்பின் 5 ஏக்கருக்கு குறைவாக உள்ள விவசாயிகளும், நஞ்சை நிலத்தைப்பொருத்தமட்டில் $2\frac{1}{2}$ ஏக்கர் நிலப்பரப்பை உடைய விவசாயிகளும் சிறு விவசாயிகள் என்று கருதப்படுவார்கள்.

இரண்டரை ஏக்கர் புஞ்சை என்றும், ஒன்றரை ஏக்கர் நஞ்சை என்றும் இருந்தால் அவர்கள் சிறு விவசாயிகள் என்று கருதப்படுவார்கள்.

**திரு. இரா. தாமரைக்கனி :** பேரவைத் தலைவரவர்களே, இந்த சிறு விவசாயிகள் என்ற போலிச் சான்றிதழ் வாங்கி விடுகிறார்கள். அது மட்டுமல்லாமல், சிறு விவசாய்களுக்குக் கிடைக்க வேண்டிய ஆட்டு லோன், மாட்டு லோன், விதை, பூச்சி மருந்து போன்றவற்றிற்குக் கூட சிறு விவசாயிகள் கையெழுத்தை அதிகாரிகள் ஏமாற்றி வாங்கிக் கொண்டு, அதிகாரிகளே மோசடி செய்தார்கள் என்பது அரசுக்குத் தெரியுமா ? அதைத் தவிர்க்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** தலைவர் அவர்களே, இப்படி எங்கெங்கு புகார்கள் வருகின்றனவோ, அங்கே எல்லாம் நடவடிக்கைகள் எடுத்து வருகிறோம். ஒரு ஒன்றியத்தினுடைய ஆணையாளர் கூட, அதுபோல் தவறாக கடன் கொடுத்தார் என்பதற்காக, அவர் மீது நடவடிக்கை எடுத்து, அவர் தற்காலிகமாக வேலை நீக்கம் செய்யப் பட்டிருக்கிறார். எனவே, எங்கு தவறு நடந்தாலும் அதன் மீது நிச்சயமாக நடவடிக்கை எடுப்போம் என்று நான் உறுதி அளிக்கிறேன்.

**திரு. இரா. தாமரைக்கனி :** தலைவர் அவர்களே, கிராம அதிகாரிகள் போலிச் சான்றிதழ்கள் அளிக்கிற காரணத்தால், அதைக் கண்காணிப்பதற்கென்று ஏதாவது ஒரு உஷார் பிரிவு அமைக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப.உ. சண்முகம் :** தலைவர் அவர்களே, இந்தப் பட்டியலை ஊராட்சி ஒன்றியங்கள் சார்பிலே நாம் தயாரிக்கிறோம். அவர்கள் ஏதாவது தவறாக நடந்து கொண்டால், அவர்கள் மீது நம்மால் நடவடிக்கை எடுக்க முடியும். கிராம அதிகாரிகள் தவறான தகவல்கள் தருவார் களானால், வருவாய்த் துறை சார்பாக நிச்சயமாக நடவடிக்கை எடுக்கப்படும் என்று நான் அரசின் சார்பாக உறுதி அளிக்கிறேன்.



**திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குத்தகை விவசாயிகள், பட்டா புத்த கங்களை வைத்துக் கொண்டு, சிறு விவசாயிகள் என்று வாங்கிக் கொண்டிருக்கிறார்கள். தாசில்தார் அவர்களுக்கு சர்ட்டிபிகேட் கொடுக்க வேண்டுமென்ற நிலை இருப்பதாகத் தெரிகிறது. எம்.எல்.ஏக்களிடம் வந்து, சிபாரிசு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். சிறு விவ சாயிகளை, அதிலே சேர விடாமல் தடுக்கின்ற ஒரு சக்தி செயல்படுவதாக நான் அறிகிறேன். அதை எப்படி நீங்கள் நிர்ணயிக்கிறீர்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப.உ. சண்முகம் :** தலைவர் அவர்களே, சிறு விவசாயிகளுக்கு எவ்வளவு நிலம் இருக்க வேண்டுமென்று நான் இப்பொழுது சொன்னேன். 5 ஏக்கர்களுக்குக் குறைவாக புஞ்சையும் $2\frac{1}{2}$ ஏக்கர்களுக்குக் குறைவாக நஞ்சையும் இருக்க வேண்டுமென்று சிறு விவசாயிகளுக்கு இலக்கணம் வகுத் திருக்கிறோம். அதற்கு அதிகமாக நிலம் வைத்திருப்பவர்கள் எங்கேயும் தவறாகச் சான்றிதழ் பெற்று, வாங்கியிருப்பார் களானால், அதை அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்தால், நான் நடவடிக்கை எடுக்கிறேன் என்று உறுதி அளிக்கிறேன். ஆகையினாலே, எங்கேயாவது தவறு செய்திருப்பார்களானால், அந்த அதிகாரிகள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் நான் உறுதி அளிக்கிறேன்.

**திரு. ந. சிவஞானம் :** பேரவைத் தலைவர் அவர்களே, சிறு விவசாயிகள் பட்டியல் தயாரிக்கும் பணியை அரசாங்கம் எடுத்திருந்தாலும் பிரைவேட் ஏஜன்ஸி மூலமாக அதைச் சரி பார்ப்பதற்கு அரசு ஏதேனும் உத்தரவிட்டுள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப.உ. சண்முகம் :** தலைவர் அவர்களே, அரசாங்க அதிகாரிகள் தவறு செய்தால் அவர்கள்மீது நட வடிக்கை எடுக்கலாம். பிரைவேட் ஏஜென்ஸிஸ் தவறு செய்தால் அவர்கள்மீது எந்த நடவடிக்கையும் எடுக்க முடியாது. எனவே, அரசாங்க அதிகாரிகளை நம்பித்தான் செய்ய வேண்டியிருக்கிறது. சிறு விவசாயிகளுக்கு இதுபோன்ற கடன்கள் கிடைக்கவில்லை என்று சொல்கிறார்கள். எப்படி ? சிறு விவசாயிகளுக்குக் கிடைக்காமல் போவதற்குக் காரணம், பணம் போதவில்லை, முடிந்துவிட்டது என்று சொன்னால், அது வேறு விஷயம். ஒரு ஒன்றியத்திற்கு ரூ. 5 இலட்சம் ஒதுக்குகிறோம், சிறு விவசாயிகளுக்குக் கடன் கொடுப்பதற் கென்று. பணம் போதவில்லை, கிடைக்கவில்லையென்றால், மற்றவர்களுக்கு அடுத்த ஆண்டு கிடைக்கலாம். சிறு விவ சாயிகளுக்குக் கிடைக்கவேண்டியதைப் பெரு விவசாயிகளுக்குக் கொடுத்து விட்டால் அது தவறு. அப்படி எங்கேனும் கொடுத்து

வட்டால் அவர்கள் மீது நடவடிக்கை எடுப்பதற்கு இந்த அரசு தயாராக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. மா. சுந்தரதாஸ் : பேரவைத் தலைவர் அவர்களே, ஸ்மால் பார்மர்ஸ் அன்ட் மார்ஜினல் பார்மர்ஸ் பட்டியலை ஒன்றியங்களில் போடுவதற்கு அரசு ஆணை இட்டுள்ளது. ஆனால், ஒவ்வொரு ஒன்றியத்திலும் ஸ்மால் பார்மர்ஸ் அன்ட் மார்ஜினல் பார்மர்ஸ் லிஸ்ட் போடப்படவில்லை. இது அரசினுடைய கவனத்திற்கு வந்திருக்கிறதா? மேலும், இந்த கிராம சேவக்குகள் அவர்கள் அலுவலகத்திலேயிருந்து லிஸ்ட் தயாரிப்பது அரசுக்குத் தெரியுமா ? கலெக்டரிடம் புகார்கள் கொடுத்தாலும் நடவடிக்கை எடுக்காமல் இருப்பது அரசுக்குத் தெரியுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே, புகார்களை மாவட்ட ஆட்சித் தலைவருக்குத் தந்து, மாவட்ட ஆட்சித் தலைவர்கள் நடவடிக்கை எடுக்கவில்லையென்றால், அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்தாலன்றி, எங்களுக்குத் தெரிய நியாயம் இல்லை. இதுபோன்ற சந்தர்ப்பங்களில், உறுப்பினர்களை நான் வேண்டிக் கொள்வது, எங்கு, எப்பொழுது, தவறு நடைபெற்றாலும், அதை அரசின் கவனத்திற்குக்கொண்டு வருமாறு நான் கேட்டுக்கொள்கிறேன். அப்படிச் சிறு விவசாயிகளுக்குக் கிடைக்க வேண்டிய வசதிகளை வேறு விவசாயிகள் பறித்துச் செல்வதை நிச்சயமாக இந்த அரசு அனுமதிக்காது என்று நான் உறுதி அளிக்கிறேன். அரசின் கவனத்திற்குக் கொண்டு வருவார்களானால் நிச்சயம் நடவடிக்கை எடுப்போம். ஒன்றிய அளவில், இந்தப் பட்டியலைத் தயாரித்து ஒன்றியத்திலேயே வைத்திருக்க வேண்டுமென்று ஆணை பிறப்பித்திருக்கிறோம். அப்படி எங்கேனும் இல்லாது போயிருந்தால், அது ஒன்றிய ஆணையாளர் செய்த தவறாகும். அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்தாலும் அதன்மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்று உறுதி அளிக்கிறேன்.

திரு. செ. தங்கராசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிறு விவசாயிகள் பட்டியல் ஊர்நல அலுவலர்களால் கணக்கிடப்பட்டு, ஆணையாளர்கள் மூலம் வழங்கப்படுகிறது. அதனால் பல்வேறு தவறுகள் ஏற்படுகின்றன. மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள் தற்போது ஊராட்சிமன்றத் தேர்தலை நடத்தி இருக்கிறார்கள். அதனால் ஊராட்சிமன்றத் தலைவர்கள், பேரூராட்சிமன்றத் தலைவர்கள் மூலமாக சிறு விவசாயிகள் பட்டியலை தயாரிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.



மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவரவர்களே, அப்படிப்பட்ட உத்தேசம் எதுவும் இல்லை. அரசாங்க அதிகாரிகள் அந்தப் பட்டியலைத் தயாரிப்பதுதான் முறையாக இருக்கும். அரசு சார்பற்றவர்கள், தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் தயாரிப்பது முறையாக இராது.

(முற்பகல் 9–20)

திரு. அ. பாலுசாமி : தலைவரவர்களே, பல இடங்களில் பால் கூட்டுறவுச் சங்கங்கள், ஆடு வளர்ப்புச் சங்கங்கள் என்று வைத்து, பினாமி முறையில் ஏழைஎளிய சிறு விவசாயிகள் என்று சான்றிதழ் வாங்கிவிடுவதால் உண்மையிலேயே சிறு விவசாயிகளுக்கு அந்த லோன் கிடைக்கவில்லை என்ற குற்றச் சாட்டு பரவலாக இருக்கிறது. ஆகவே, தனித்தனியாக இந்தச் சங்கங்களில் உறுப்பினர்களாகச் சேரமுடியாமல் அவல நிலையில் இருக்கிற சிறு விவசாயிகளுக்குக் கடன் கொடுப்பதில் முன்னுரிமை அளிக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஐ. ஆர். டி. பி. பற்றி கேட்கிறார்கள் என்று கருதுகிறேன். வறுமைக் கோட்டிற்குக் கீழே இருக்கிறவர்களுடைய பட்டியல் தயாரிக்கப்பட்டு, அந்தப் பட்டியலில் இடம்பெற்றுள்ளவர்களுக்கு இந்தத் திட்டத்தின்கீழ் கடன் உதவி செய்யப்படுகிறது. பொதுவாக சிறு நீர்ப்பாசன கிணற்று மோட்டார் வாங்க கடன் வழங்கப் படுகிறது. அதைப்போலவே நில மேம்பாட்டிற்கு பணம் கொடுக்கப்படுகிறது. எண்ணெய் வித்துகள், பருப்பு வித்துகள் சிறு தானிய பயிர் வகைகள் போன்றவைகளுக்கும் சிறு, குறு விவசாயிகளுக்கு இத் திட்டத்தின்கீழ் கடன் வழங்கி வருகிறார்கள்.

திரு. குமரி அனந்தன் : கனம் சபாநாயகர் அவர்களே, சிறு விவசாயிகளுக்கு அளிக்கும் சிறப்புச் சலுகைகளில் இலவச மின் சாரமும் சேர்ந்திருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்தப் பட்டியலிலே இதையும் சொல்வார்கள் என்று நினைத்தேன் ; சொல்லவில்லை. ஆனால் அந்த சிறு விவசாயிகள் என்று சொல்லுகின்ற சான்றிதழ் வழங்க அதிகாரிகள் பணம் கொடுத்தால்தான் கொடுப்போம் என்பதால் பலர் அந்த சலுகையைப் பெற முடியாமல் இருக்கிறார்கள் என்ற குற்றச் சாட்டு பரவலாக இருக்கிறது. அதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கவனித்து, இப்படிப்பட்ட விவசாயிகளுக்கு எல்லாம் கொடுக்க வேண்டும் என்று ஒரு பட்டியல் தயாரித்து, அந்த அடிப்படையில் வழங்க ஏற்பாடு செய்வார்களா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவரவர்களே, நான் தொடக்கத்திலேயே இதுபற்றிச் சொன்னேன். வருவாய்த் துறை அதிகாரிகள் பட்டா பாஸ் புத்தகம் வழங்கும்போது

இந்தக் குறைபாடுகள் களையப்படும். அதன் பிறகும் இப்படிப் பட்ட குறை பாடுகள் இருக்குமானால் வேறு என்ன செய்யலாம் என்பது பற்றி அரசு பரிசீலனை செய்யும்.

**திரு. ஜி. ஆனந்த கிருஷ்ணா :** தலைவரவர்களே, சிறு விவசாயிகளுக்கும் குறு விவசாயிகளுக்கும் அடையாள அட்டைகள் வழங்கப்பட்டன. தற்போது அந்த நிலைமை எதுவும் காணப்படவில்லை. அவர்களுக்கு எல்லாம் அடையாள அட்டைகள் வழங்க அமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்வார்களா ?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** தலைவரவர்களே, நான் அதைதான் குறிப்பிட்டேன். பட்டா பாஸ் புத்தகம் எல்லோருக்கும் வழங்கப்பட்டிருக்கிறது. பட்டா பாஸ் புத்தகம் கொடுக்கும்போது ஒருவருக்கு எவ்வளவு நிலம் இருக்கிறது என்கிற கணக்கு வந்துவிடும். அதைப் பார்த்தே அவர் சிறு விவசாயியா குறு விவசாயியா அல்லது பெரிய விவசாயியா என்பதைத் தெரிந்து கொள்ளலாம். அதனால் பட்டா பாஸ் புத்தகம் வழங்கப்படும் போது இந்தக் குறைபாடுகள் களையப்பட வாய்ப்பு இருக்கிறது. தேவைப்பட்டால் பின்னால் பரிசீலிக்கலாம்.

**திரு. வே. கு. சின்னசாமி :** தலைவரவர்களே, இந்த சிறு, குறு விவசாயிகளுக்கு கிணறு வெட்ட கடன் வழங்குதல், ஆயில் எஞ்சின் வாங்க கடன் வழங்குதல் போன்ற சலுகைகள் இந்த ஆண்டு பெரியார் மாவட்டத்தில் இதுவரையில் அளிக்கப்படவில்லை என்று தகவல் சொல்லியிருக்கிறார்கள். அந்த சிறு, குறு விவசாயிகளுக்கு குறித்த காலத்தில் இந்த சலுகைகளை வழங்க ஏற்பாடு செய்யப்படுமா ? அதைப்போன்று சிறு, குறு விவசாயிகளுக்கு மின் இணைப்புக் கொடுப்பதில் சீனியாரிட்டி பார்க்காமல், விண்ணப்பம் போட்டவுடனேயே அவர்களுக்கு மின் இணைப்புக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படுமா ?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** தலைவரவர்களே, ஒரு ஒன்றியத்திற்கு 5 இலட்சம் ரூபாய் இந்தத் திட்டத்தின்கீழ் வழங்குகிறோம். பாரபட்சம் இல்லாமல் எல்லா ஒன்றியங்களுக்கும் இந்தத் தொகை வழங்கப்படுகிறது. எங்காவது இந்தத் தொகை வரவில்லை என்றால் அதிகாரிகள் தவறு செய்கிறார்கள் என்று பொருள். அதுபற்றி அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்தால் உரிய நடவடிக்கை எடுக்கப்படும். மின்சாரத்தைப் பற்றிக் கேட்டார்கள். அதுபற்றி தனிக் கேள்வி போட்டால் விவரம் தரப்படும்.

**திரு. டி. தீர்த்தகிரி கவுண்டர் :** தலைவரவர்களே, சிறு விவசாயிகள், குறு விவசாயிகள் என்ற சான்றிதழ் வழங்கப்பட்டு, அந்தப் பட்டியல் தயாரிக்கப்பட்டு, வட்டார வளர்ச்சி அதிகாரிகளுடைய அலுவலகங்களில் வைக்கப்பட்டிருக்கிறது. அந்தச் சான்றிதழைப் பெறுவதில் பல சிரமங்கள் இருக்கின்றன. வி.ஏ.ஓ.





சான்றிதழ் கொடுத்து, அதன்பின் அது தாசில்தாருக்கு வந்து, அவர் சான்றிதழ் கொடுத்த பின்னால்தான் அந்த சலுகைகளைப் பெறவேண்டிய நிலைமை இருப்பதால், இப்படிப்பட்ட பல்வேறு சிரமங்களினால் அந்தப் பட்டியலில் இடம் பெற முடியாமல் போன சிறு விவசாயிகள், குறு விவசாயிகள் சலுகைகளைப் பெற முடியவில்லை. அதுபற்றி அதிகாரிகளிடம் கேட்டால் நாங்கள் பரிசீலித்து கொடுக்கிறோம் என்கிறார்கள். ஆனால் அது சுலபத்தில் கிடைப்பதில்லை. அதனால் உண்மையிலேயே அந்த சிறு விவசாயிகள், குறு விவசாயிகள் படுகிறஅவல நிலையைப் பார்த்தால் ரொம்ப கஷ்டமாக இருக்கிறது. நாங்கள் எல்லாம்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** கேள்வியைச் சுருக்கமாகக் கேளுங்கள்.

**திரு. டி. தீர்த்தகிரி கவுண்டர் :** சலுகைகள் பெறுவதற்காக சம்பந்தப்பட்ட இலாகா அதிகாரிகளிடம் செல்லவேண்டிய நிலை இருக்கிறது. ஆகவே அந்தப் பட்டியலில் உள்ள பெயர்களைப் பொறுத்து அவரவர்களுக்கு ஒரு கார்ட் கொடுத்துவிட்டால் சிறு விவசாயிகள் குறு விவசாயிகள் என்பதற்கு அத்தாட்சி கொடுத்து விட்டால் சம்பந்தப்பட்ட அதிகாரிகளை அணுகி அத்தாட்சி பெற வேண்டிய அவல நிலை இருக்காது. உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டார்கள், கைமாறு பெற்று சலுகை பெறுவதாக. அப்படிப்பட்ட நிலை இல்லாது சிறு விவசாயிகளுக்கு குறு விவசாயிகளுக்கு வசதி செய்து கொடுக்க வேண்டும். இடைச் செருகல் ஏற்படாமல் இருக்க, அவர்கள் அத்தாட்சி பெறுவதற்கு நல்ல வழிவகையினைக் காண அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா ?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** பேரவைத் தலைவர் அவர்களே, சிறு விவசாயிகள், குறு விவசாயிகள் என்ற பட்டியலைத் தயாரிப்பதில் யாராவது பெயர்கள் விடுபட்டிருக்குமானால் அந்தப் பெயர்களைச் சேர்த்துக்கொள்ள எந்த தடையும் இல்லை. அந்தப் பெயர்களை, விடுபட்டவர்கள் பெயர்களைச் சேர்த்துக்கொள்ளலாம். ஆனால் தனியாக இதற்காக ஒரு அடையாள அட்டை கொடுத்துவிட்டு பாஸ் புத்தகம், பட்டா பாஸ் புத்தகம் என்று மாறி மாறி இருக்கக்கூடாது என்பதால் பட்டா பாஸ் புக்கை வருவாய்த் துறை வழங்கும்போது இவைகளையெல்லாம் கவனித்து வழங்கப்பட இருக்கிறது. அப்படி வழங்கப்பட்டும் அது போதவில்லை என்று கருதப்பட்டால் இதற்கு வேண்டிய தகுந்த ஏற்பாடுகளைச் செய்யலாம் என்று துறை சார்பாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. துரை கோவிந்தராசன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சிறு விவசாயிகளுக்கு பஞ்சாயத்து ஒன்றியத்தின் மூலம் சிறப்புச் சலுகைகள் அளிக்கும் நேரத்தில்

அந்த பஞ்சாயத்து ஒன்றியத்தில் உள்ளடங்கிய ஒருசில பகுதிகளில், ஒன்றிரண்டு பஞ்சாயத்துக்கள் மட்டுமே அந்தச் சலுகைகளைப் பெறுகிற வாய்ப்பு சிலயிடங்களில் இருக்கின்றன. அதற்காக ஒன்றியத்திலே தனியாக ஒரு குழு அமைத்து ஒட்டுமொத்தமாக ஒன்றியத்தின் எல்லாப் பகுதிகளுக்கும் இந்தச் சலுகைகள் கிடைக்கும் அளவிற்கு அரசு ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : பேரவைத் தலைவர் அவர்களே, எல்லாக் கிராமங்களிலும் எல்லோருக்கும் கிடைக்க வேண்டும் என்று சொல்வது நிதி ஆதாரத்தைப் பொறுத்துத்தான் ஏற்பாடு செய்ய முடியும். குழு அமைப்பது பற்றிச் சொன்னார்கள். அதைப் பற்றி அரசாங்கம் பரிசீலிக்கும்.

திரு. வி. பி. சிந்தன் : பேரவைத் தலைவர் அவர்களே, சிறு விவசாயிகளுக்கும் குறு விவசாயிகளுக்கும் மின்சாரம் வழங்குவதிலும் கடன் உதவி வழங்குவதிலும் ஏற்படுகிற சிக்கல் பற்றி இங்கே பேசிக் கொண்டிருக்கிறோம். பட்டியல் தயாரித்து அனைவரும் பார்வையிடக்கூடிய முறையில் திருத்தங்கள் வழங்குவதற்குள்ள வசதியுடன் அனைத்துக் கட்சிகள் அடங்கிய கண்காணிப்புக் குழு அமைத்து அல்லது விவசாயிகள் பார்வையிடுவதற்கு ஏற்பாடு செய்தால் ஒவ்வொரு பஞ்சாயத்திலும் அப்படிப்பட்ட ஏற்பாடு செய்யப்படுமானால், அது பெரிதும் உதவியளிக்கும் என்ற காரணத்தினால் அப்படிபட்டதொரு நடவடிக்கையை அமைச்சரவர்கள் கடைப்பிடிப்பார்களா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பட்டியல் ஒன்றியத்தில் வைக்கப்பட்டிருக்கிறது. சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் எப்போது வேண்டுமென்றாலும் அதைப்போய்ப் பார்க்கலாம். ஏதாவது திருத்தங்கள் சொல்வார்களானால் நியாயமான திருத்தங்களாக இருந்தால் அதிகாரிகள் ஏற்றுக்கொள்ளும்படி ஆணையிடப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

காமராஜர் (மூலக்கடை கொடுங்கையூர்) சாலையில் புதிய பாலம்.

222—(*வினா எண். 4067) திரு. ஜி. கே. ஜெ. பாரதி : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை முதல் வட்டத்தைச் சேர்ந்த மூலக்கடையிலிருந்து கொடுங்கையூர் செல்லும் காமராஜர் சாலை பாலம் விரிவுபடுத்தும் திட்டம் உள்ளதா ?





(ஆ) ஆம் எனில், அதன்மீது எடுக்கப்பட்டிருக்கும் நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. ப.உ. சண்முகம் : (அ) ஆம்.

(ஆ) 1985 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் சென்னையில் வீசிய புயல் வெள்ளத்தில் இந்தக் கண்மாய் மிகுந்த சேதத்திற்கு உள்ளாகியது. தற்காலிகமாகப் பழுதுபார்க்கும் பணி மேற்கொண்ட பிறகு, அந்தக் கண்மாய் வழியாகப் போக்குவரத்து அனுமதிக்கப்பட்டது. தற்போது, வெள்ள நிவாரண நிதியிலிருந்து பழைய கண்மாய்க்குப் பதிலாகப் புதிய பாலம் ஒன்றினை ரூ. 6 இலட்சம் செலவில் கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

திரு. ஜி. கே. ஜெ. பாரதி : மாண்புமிகு பேரவைத் தலைநாயகர் அவர்களே, இந்தப் பாலம் சிங்காரச் சென்னையினுடைய முதல் வட்டத்தில் இருக்கின்ற காரணத்தினால் விரைவாகச் செயலாற்ற வேண்டும். இல்லை என்று சொன்னால் நம்முடைய நெற்குன்றம் ஏரியிலிருந்து வருகின்ற கழிவுநீர், புழலில் இருந்து வருகின்ற கழிவுநீர் அந்த வழியாக வருகின்ற காரணத்தினால் கொடுங்கையூர், ஜம்புலி, திரு.வி.க. நகர் போன்ற பகுதிகள், அழகான பகுதிகள், ஸ்ரீநகர் ஏரியில் மிதக்கிற வீடுகள்போல் காட்சி அளிக்கின்றன. மழைக்காலங்களில் அதை நாம் பார்க்க முடிகிறது. அந்தச் சூழ்நிலையை அறிந்துதான் கடந்த காலத்தில் வெள்ளம் வந்தபோதுகூட முதல் நிலை பாதிப்பு இடமாக நடுவண் அரசுப் பார்வையாளர் வந்து பார்வையிட்டு ஆறு இலட்சம் ரூபாய்க்கு ஒரு திட்டம் தமிழக அரசுக்குத் தந்திருப்பதாக நமது அமைச்சர் பெருமான் அவர்கள் கூறுவதைக் கண்டு உள்ளபடியே மகிழ்வுற்றாலும் அந்தத் திட்டம் விரைவாக செயல்படுத்தப்படுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப.உ. சண்முகம் : பேரவைத் தலைவர் அவர்களே, சிங்காரச் சென்னையின் சிறப்பை ஓங்கச் செய்ய பாரதி கொடுக்கிற வேண்டுகோளை அரசாங்கம் ஏற்றுக்கொண்டு விரைவாக நடத்தும்.

(முற்பகல் 9—30.)

திரு. ஜி. கே. ஜெ. பாரதி : மாண்புமிகு பேரவைத் தலைநாயகர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் பெருமான் அவர்களுக்கு நன்றி என்று குறிப்பிட்டாலும், அது தொழிலாளர் நிறைந்த பகுதி, தொழிற்சாலைகள் நிறைந்த பகுதி, அந்தப் பகுதியிலே பேருந்துகள் செல்லுகின்றபோது, விரைவாகச் செல்லமுடியவில்லை. அந்தப் பாலத்தின் மேலிருக்கும் சாலை மாநகராட்சிக்குச் சொந்தமானதா? நெடுஞ்சாலைத் துறைக்குச் சொந்தமானதா ? என்று அதிகாரிகளை நாங்கள்

கேட்கின்றபோது, எங்களுக்குப் புரியவில்லை என்று அதிகாரிகள் குழம்புகிறார்கள். எனவே, இதுகுறித்து அமைச்சர் அவர்கள் விளக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மேலும், அந்தப் பகுதி தொழிற்சாலைகள் நிறைந்த பகுதி, மாதவரம், பால் பண்ணை, சிம்சன் தொழிற்சாலை, மணலி தொழிற்சாலை போன்றவைகள் உள்ளன. அங்கே முதல் தரப் பாலம் இல்லாததன் காரணமாக, குறுகிய பாலத்தின் வழியே காலங்கடந்து செல்ல வேண்டியுள்ளது. எனவே, அதை விரிவுபடுத்தி, விரைவாகச் செய்தால் தொழிற்சாலைகளுக்குப் போகும் தொழிலாளர்கள் காலங்கடந்து செல்லாமல் குறித்த காலத்திற்குச் செல்ல வசதியாக, அதற்கான வழிவகைகளை அமைச்சர் அவர்கள் செய்வார்கள் என்று நம்புகிறேன். இருந்தாலும், அதனை விரைவாகச் செய்து முடிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப.உ. சண்முகம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உள்ளாட்சித் துறை விடை அளிப்பதில் இருந்தே, உள்ளாட்சி சம்பந்தப்பட்டது என்று பாரதி அவர்கள் அறிவார்கள் என்று நம்புகிறேன். பாரதி அவர்கள் வேண்டுகோளை எப்போதும் செவி மடுக்கின்ற இந்த அரசு, நிச்சயமாக, விரைவாக எவ்வளவு வேகமாக முடியுமோ அவ்வளவு வேகமாகச் செய்து முடிக்கும்.

நெல்லை பேருந்து நிலையத்தை விரிவுபடுத்தல்.

223—(*வினா எண் 6051) **திரு. டி. ஆர். வேங்கடரமணன் :** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நெல்லை பேருந்து நிலையத்தில் நெருக்கடியை போக்கும் திட்டம் அரசு பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன ?

**மாண்புமிகு திரு. ப.உ. சண்முகம் :** (அ) ஆம்.

(ஆ) நெல்லை பேருந்து நிலையத்தினை விரிவுபடுத்துவதற்காக நிலம் ஆர்ஜிதம் செய்யப்பட்டு, 19–8–1985-ல் நகராட்சி வசம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. அந்த இடத்தில், பேருந்து நிலையத்தினை விஸ்தரிப்பதற்கான ஆக்கப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**திரு. டி. ஆர். வேங்கடரமணன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது நெல்லைப் பேருந்து நிலையத்தின் அருகே உள்ள இடம் கையகப்படுத்தப்பட்டு இருக்கிறது.





அந்த இடத்திலே, வேலிகள் மட்டும் போடப்பட்டிருக்கிறதே தவிர எந்த ஒரு பணியும் இதுவரை தொடங்கப்படவில்லை. திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்திற்கு அந்த நிலத்தை ஒப்படைக்கப் போவதாக ஒரு செய்தி இருக்கிறது. அது உண்மையா ? அல்லது நகராட்சி அந்தப் பணியைச் செய்ய இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** பேரவைத் தலைவர் அவர்களே, ஊரக ஒருங்கிணைப்பு, நகர வளர்ச்சி திட்டத்தின் கீழ் செய்யப்படுகிற திட்டமாகும். அதை நகராட்சி செய்யும்.

**திரு. டி. ஆர். வேங்கடரமணன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெல்லை நகர பேருந்து நிலையத்தில் உள்ள நெருக்கடியைத் தவிர்ப்பதற்கு, திருச்செந்தூர் மற்றும் தூத்துக்குடிக்குச் செல்லுகின்ற பேருந்துகள் இப்போது இருக்கிற ஜங்ஷன் பேருந்து நிலையத்திலிருந்து செல்வதை பாளையங்கோட்டைக்கு மாற்றியமைப்பதற்கு அரசிடம் ஏதேனும் செயற் குறிப்பு இருக்கிறதா ? அவ்வாறு செய்தால், பயணிகளுக்கு சவுகரியமாகவும், பேருந்துகள் வந்து செல்லுவதற்கும் வசதியாக இருக்கும். இதை அரசு ஆராயுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** பேரவைத் தலைவர் அவர்களே, புதிய யோசனையை உறுப்பினர் அவர்கள் சொல்லுகிறார்கள். இப்போது இருக்கின்ற பேருந்து நிலையத்தை விஸ்தரிப்பது தான் திட்டம். உறுப்பினர் கூறும் திட்டம் இப்போது அரசின் கையிலே இல்லை.

அரூர் முன்சீப் கோர்ட் கட்டிடம்.

224—(*வினா எண். 4042)—**திரு. டி. தீர்த்தகிரி கவுண்டர் :** மாண்புமிகு சட்டத்து துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரூர் நகரத்தில் முன்சீப் கோர்ட் (Munsiff Court) வாடகைக் கட்டிடத்தில் இயங்குவதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், சொந்தக் கட்டிடம் கட்டித்தர திட்டம் உள்ளதா ?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** (அ) ஆம்.

(ஆ) இல்லை.

திரு. டி. தீர்த்தகிரி கவுண்டர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரூர் நகரில் முன்சீப் கோர்ட் ஆரம்பித்து, அது தற்போது வாடகைக் கட்டிடத்தில் இயங்கி வருகிறது. அது ஒரு குடியிருப்புக் கட்டிடம். அது அலுவலகக் கட்டிடம் அல்ல. தற்சமயம் அரூர் நகரில் சர்க்கார் ஆஸ்பத்திரி ஒன்றுக்கு சிறப்பான கட்டிடம் கட்டப்பட்டு, அதற்கு திறப்பு விழா நடத்தப்பட்டு, பழைய கட்டிடம் காலியாக இருக்கிறது. மேலும் இரண்டு கட்டிடங்கள் இருக்கின்றன. கோர்ட் நடத்துவதற்குத் தகுதியான இடம். ஆக அந்தக் கட்டிடத்தில் கோர்ட் நடந்தினால் கோர்ட் ஒழுங்காகவும், அழகாகவும் இருக்கும். அடுத்து, பொது மராமத்து இலாகாவிலே வாணியாறு திட்டத்திற்கு எக்சிகியூடிங் என்ஜினியர், அசிஸ்டெண்ட் எக்சிகியூடிங் என்ஜினியர் அதிகாரிகளுக்கு அழகான கட்டிடம் கட்டி, அந்தத் திட்டம் கலைக்கப்பட்டு விட்டதனால், அவ்விரு கட்டிடங்களும் காலியாக உள்ளன. அந்த இரண்டு கட்டிடங்களும் அலுவலகத்திற்கு தகுதியுள்ளக் கட்டிடங்களாக இருக்கின்றன. எனவே, வசதியில்லாத வாடகை கொடுத்துவரும் குடியிருப்பு கட்டிடத்தைத் தவிர்த்து அரசுக்குச் சொந்தமான கட்டிடத்தில் முன்சீப் கோர்ட்டைத் திறப்பதற்கு, அதற்கான நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ளுமா என்று அறிய விரும்புவதோடு, தற்போது அந்த முன்சீப் கோர்ட்டிலே அதிகாரி இல்லாத காரணத்தினால், பல வழக்குகள் தடைபட்டு இருக்கின்றன. தற்போது கோர்ட் நடக்கவில்லை. ஆகவே, இதையும் அரசின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். இதற்கு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : பேரவைத் தலைவர் அவர்களே, அரூரிலே இருக்கிற மாவட்ட முன்சீப் நீதிமன்றத்தைப் பொறுத்தவரைக்கும் அது தற்காலிக நிலையிலே இருக்கிறது. மூன்று ஆண்டுகள் முடிவுற்றதற்குப் பிறகு உயர்நீதிமன்றம், அதை நிரந்தரமாக்க அரசுக்குப் பரிந்துரை செய்யும். அது இன்னும் வரவில்லை. வந்ததுடன் நிரந்தரமான கட்டிடம் அந்த மாவட்ட முன்சீப் நீதிமன்றத்திற்குக் கட்டித் தருவது குறித்து அரசு நடவடிக்கை எடுக்கும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறிய அந்த இரண்டு இடங்கள் குறித்தும் எழுதித் தருமாறு வேண்டுகிறேன். அப்படி எழுதித் தந்தால் உயர்நீதி மன்றத்திற்கு அதை அனுப்பி அரசு தக்க நடவடிக்கை எடுக்கும். அங்கேயுள்ள மாவட்ட முன்சீப் பதவியை நிரப்புவதைப் பொறுந்தவரையில் தேர்வாணைக் குழு தேர்வினை நடத்தி முடித்து அது பற்றிய பரிந்துரையை உயர்நீதி மன்றத்திற்கு அனுப்பி இருக்கிறது. உயர்நீதிமன்றம் விரைவிலே, இன்னும் ஒருசில தினங்களுக்குள் அதை வெளியிடும் என்று நாம் நம்புகிறோம்.





## சென்னை பெருநகர் குற்றவியல் நீதிபதிகளுக்கு வீட்டு வசதி.

225—(*வினா எண் 5519)— திரு. ஆர். ரெங்கசாமி : மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை, எழும்பூர் கோர்ட்டு வளாகத்தில், பெருநகர் குற்றவியல் நீதிபதிகளுக்கு வீட்டுவசதி செய்து கொடுக்கும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விபரம் என்ன ?

மாண்புமிகு திரு, சி. பொன்னையன் : (அ) ஆம்.

(ஆ) சென்னை எழும்பூர் கோர்ட்டு வளாகத்தில் பெருநகர் குற்றவியல் நீதிபதிகளுக்கு வீட்டு வசதி செய்து கொடுக்கும் திட்டம் 1985–86 ஆம் ஆண்டு பகுதி 2 திட்டமாக சேர்க்கப்பட்டுள்ளது. மேற்படி திட்டத்தை செயல்படுத்துவதற்கு உயர்நீதிமன்றத்திடமிருந்து வரைபடமும் மதிப்பீடுகளும் (Plan and Estimate) கேட்கப்பட்டு அதன் பதில் எதிர்பார்க்கப்படுகிறது.

திரு. ஆர். ரெங்கசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, வெளியூரில் உள்ள எல்லா நீதிபதிகளுக்கும் அங்கே குவார்ட்டர்ஸ் கொடுத்திருக்கிறார்கள். ஆனால் சென்னையில் உள்ள நீதிபதிகளுக்குக் கொடுக்கப்படவில்லை. அவர்களுக்கும் கொடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவர் அவர்களே, எழும்பூரைப் பொறுத்த வரைக்கும் 36 குடியிருப்புகளும், சைதைப் பகுதியில் 18 குடியிருப்புகளும் ஆக ஒட்டு மொத்தமாக 54 குடியிருப்புகளை 61,20,000 ரூபாய் செலவில் கட்ட அரசு முடிவு செய்து அது குறித்து உயர் நீதிமன்றத்திற்கும் தன்னுடைய கருத்தைத் தெரிவித்து இருக்கிறது. உயர்நீதி மன்றத்திடமிருந்து வரைவுபடம் முதலியவை எதிர்பார்க்கப்படுகின்றன. எனவே விரைவிலே அந்தத் திட்டங்கள் மேற் கொள்ளப்படும்.

திரு. சு. பாலன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எழும்பூர் குற்றவியல் கோர்ட்டு நீதிபதிகளுக்கு வீடுகள் கட்டுவதற்குப் பணம் ஒதுக்கீடு செய்வதாகச் சொல்லியிருக்கிறார்கள். ஆனால் கோர்ட் வளாகத்தில் பார்க்கிறபோது அங்கே ஏராளமான நீதிபதிகள் இருக்கிறார்கள். இப்படி பல நீதிபதிகள் அடங்கிய தலைமை கோர்ட்டாக இருப்பதால், அங்கே ஏராளமான வழக்குகள் வருவதால் அங்கே மக்கள் கூடுவதற்குக் கூட வசதியில்லாத நிலைமை இருக்கிறது. வழக்கறிஞர்களும் மரத்தடியிலே நின்று கொண்டு தங்களது இதர பணிகளை கவனிக்க வேண்டிய

நிலைமையிலே இருக்கிறார்கள். எனவே அதற்கு போதிய அளவில் கட்டிட வசதியை அதிகரிக்கவேண்டும். பழைய காலத் தில் இருந்த நிலைமைகளை மாற்றுகின்ற வகையில் அதாவது பள்ளிக் கூடங்கள் மற்ற வசதிகளைப் பொறுத்த வரையில் எல்லா வற்றையும் இப்பொழுது நாம் அதிகரித்துக் கொண்டு வருகிறோம். பள்ளிக் கூடங்கள் கட்டுகிறோம். அது போல் கோர்ட்டுகளுக்குப் போதிய வசதிகளை அதிகரிக்கின்ற வகையில் கட்டிடங்களைக் கட்டித்தருவதற்கு அரசு ஏதாவது நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** பேரவைத் தலைவர் அவர்களே, நீதி மன்றங்களுக்குத் தேவையான கட்டிடங்களை அதிகப்படுத்துவதற்கும், வழக்கறிஞர்கள் தங்குவதற்குரிய அறை களை ஏற்படுத்துவதற்கும் தனியாக அரசு ஒரு செயற் குறிப்பு பற்றி பரிசீலித்து வருகிறது.

THIRU. T. VENKATA REDDY : Hon. Speaker, Sir, in many courts, especially for the Bar Associations, furniture is not properly supplied. It has been the c y of the Advocates for the past 10 to 15 years that nothing has been done by the Government for them in this reg i. Will the Government come forward to help them to get the required furniture for the Bar Associations ?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** பேரவைத் தலைவர் அவர்களே, வழக்கறிஞர் சங்கத்திற்கு நாற்காலி போன்ற சாமான்களை எலலாம் வாங்குவது என்ற வகையில் அரசு உதவு வது என்பது நடைமுறையில் இல்லை. ஆங்காங்கே நீதிமன்றங் களுக்கு ஒதுக்கப்படுகின்ற செலவினத்தில் சில இடங்களில் அது சேர்க்கப்படுகிறது. எனவே பிரத்தியேகமாக அரசுக்கு ஏதேனும் கோரிக்கை உயர்நீதிமன்றத்தின் மூலமாக ,வந்தால் அரசு அதைப் பரிசீலிக்கும்.

**திரு. எஸ். இராசாராமன் :** பேரவைத் தலைவர் அவர் களே, பல்வேறு நீதிபதிகள் வீடு கிடைக்காத காரணத்தால் வாடகை வீடுகளில் குடியிருக்கிறார்கள். ஆகவே அவர்களுக்கு விரைவில் வீடு கட்டிக் கொடுக்க அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன். எக்மோர் போன்ற நீதிமன்றங்களின் கட்டிடங்கள் மிகவும் பழுதடைந்த நிலைமையில் இருக்கின்றன. அவற்றைப் புதிதாகக் கட்டித்தர வேண்டும். அங்கே இருக்கின்ற நீதிபதிகளுக்கும், வழக்குரைஞர்களுக்கும், கழிவறை வசதிகள் கூட இல்லாத நிலைமை இருக்கிறது. எனவே அதை எல்லாம் கட்டி முடிக்க அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** பேரவைத் தலைவர் அவர்களே, நீதிபதிகளுக்கு வீடுகள் கட்டித் தருவதைப் பொறுத்த வரையில் பல இடங்களில் நீதிபதிகள் இருக்கிறார்கள். உயர் நீதிமன்ற நீதிபதிகள் அனைவருக்கும் வீடுகள் கட்டிக் கொடுக்கப் பட்டு விட்டன. கீழ் மட்டத்தில் இருக்கிற நீதிபதிகளுக்கு





வீட்டு வசதி வாரியத்தின் மூலமாக ஆங்காங்கே மாவட்டத் தலை நகரங்களில் கட்டப்படுகின்ற குடியிருப்புகளில் ஒரு பகுதியை ஒதுக்க வேண்டும் என்றும் அதைப் போல வட்டப் பகுதிகளிலும் நீதிபதிகளுக்கு என பிரத்தியேகமாக ஒதுக்க வேண்டும் என்றும் செயற் குறிப்பு அரசின் பரிசீலனையில் இருக் கிறது. விரைவில் அது குறித்து முடிவு எடுக்கப்படும். சென்னையைப் பொறுத்த வரைக்கும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுவது போன்று கழிவறைகள் கூட இல்லாத நிலை அங்கே இல்லை. இடம் போதவில்லை என்பதுதான் அங்கே இருக்கிற பிரச்சினை. அதிக இடம் ஏற்பாடு செய்வதற்கான நடவடிக்கை எடுக்க அரசின் கவனத்தில் ஒரு செயற் குறிப்பு இருக்கிறது.

(முற்பகல் 9.40)

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வினா எண் 226 முதல் 228 வரை மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சரின் வேண்டுகோளுக்கிணங்க ஒத்தி வைக்கப்பெறுகின்றன.

**வேலை வாய்ப்பு அலுவலகத்திலிருந்து அரசுப் பணிகளுக்கு அனுப்பப் பெறும் பட்டியல்.**

229—(*வினா எண். 3350) **மாண்புமிகு திரு வேடசந்தூர் வி.பி. பாலசுப்பிரமணியன்** (பேரவைத் துணைத் தலைவர்) : மாண்புமிகு மறுவாழ்வு மற்றும் வேலை வாய்ப்புத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா —

அரசுப் பணிக்கு வேலை வாய்ப்பு அலுவலகத்தின் மூலம் நேர்முகத் தேர்வுக்கு அழைக்க நிர்ணயிக்கப்பட்டுள்ள வயது வரம் பில் சம்பந்தப்பட்டவர் அரசுத் துறையிலோ நிறுவனத்திலோ தற்காலிகமாக பணியாற்றிய காலத்தை நீட்டித்துக் கொடுக்கப் படுமா ?

**மாண்புமிகு திரு. த. இராமசாமி :** அரசுப் பணிகளில் தொடர்ச்சியாகவோ அல்லது இடைவெளி காலங்களில் அவ் வப்போது பணியாற்றி வேலை காலியின்மையால் பணி நீக்கம் செய்யப்பட்ட ஒருவர் 40 வயதினை நிறைவு செய்யாதிருப்பாரா னால் அரசுப் பணிக்கு மீண்டும் வேலை வாய்ப்பு அலுவலகத்தின் மூலம் அவரது பெயர் பரிந்துரைக்கப்படுகின்ற பொழுது. அவ்வாறு அவர் பணியாற்றிய கால அளவு அவருடைய அன்றைய வயதிலிருந்து கழிக்கப்பட்டு பதவி நியமனத்திற்கானஅவருடைய வயதினைக் கணக்கிடப்படுகிறது. ஆனால் பொதுத்துறை நிறுவனங்களில் பணியாற்றி வேலை காலியின்மையால் விடுவிக்கப் பட்ட ஒருவருக்கு அந்நிறுவனங்களில் பணியாற்றிய கால அளவை அரசுப் பணிக்காக வேலை வாய்ப்பகம் மூலம் பரிந் துரைக்கப்படும்போது இச்சலுகை வழங்கப் பெறுவதில்லை.

[1986 மார்ச் 21

**230—(*வினா எண். 5445)—திரு. சைதை சா. துரைசாமி :** மாண்பு
மிகு மறுவாழ்வு மற்றும் வேலை வாய்ப்புத் துறை அமைச்சர்
கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா —

வேலை வாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்து ஐந்
தாண்டு, ஏழாண்டு காலம் முடிவுற்ற இளைஞர்களுக்கு 28 வயது
பூர்த்தி ஆவதற்குள் நேர்முகத் தேர்வு அட்டை அனுப்புவதில்
முன்னுரிமை அளிக்கும் செயற் குறிப்பு அரசிடம் உள்ளதா ?

**மாண்புமிகு திரு. த. இராமசாமி:** வேலை வாய்ப்பு அலு
வலகங்களில் பதிவு செய்து ஐந்தாண்டு, ஏழாண்டு காலம் உயிர்ப்
பதிவேட்டில் காத்திருக்கும் பதிவுதாரர்களுக்கு 28 வயது பூர்த்தி
ஆவதற்குள் வேலைக் காலியிடங்களுக்கு பரிந்துரைப்பதில் முன்
னுரிமை அளித்திடும் செயற் குறிப்பேதும் அரசிடம் தற்போது
இல்லை.

**திரு, சைதை சா. துரைசாமி:** மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, அது போன்ற செயற் குறிப்பு இல்லை
என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள்.
நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களைப் பணிவோடு கேட்டுக்
கொள்வது இன்றைக்கு வேலை வாய்ப்பகத்தில் பதிவு செய்
திருக்கின்ற லட்சக் கணக்கான இளைஞர்கள் ஆண்டுதோறும்
அவர்கள் தங்களுடைய பதிவுகளை பூர்த்தி செய்து கொண்டு
தொடர்ந்தாற்போல், அப்படியே இருந்து கொண்டிருக்கிறார்
கள். ஆனால் அவர்களுடைய வயது முடியும் போது கூட
அவர்களுக்கு வேலை வாய்ப்பு அலுவலகத்தில் இருந்து ஒரு தேர்
வுக்கான இண்டர்வியூ கூட வருவதில்லை. அப்படி வராத
சூழ்நிலையில் இருந்து அவர்களை விடுவிப்பதற்காக ஒரு சட்ட
திருத்தம் கொண்டு வந்தால் என்ன ? எத்தனையோ வகையில்
மக்களின் நன்மைக்காக நாம் பல சட்டத் திருத்தங்களைச்
செய்திருக்கிறோம். அது போன்று இதற்காகவும் கொண்டு
வரலாம். ஆகவே இனிமேலாவது அப்படிப்பட்ட இளைஞர்
களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கின்ற வகையில் ஒரு சட்டத்
திருத்தம் கொண்டு வருவதற்கு ஆவன செய்வார்களா ? அப்படிச்
செய்வார்களேயானால் இன்றைக்கு நாட்டிலே பாதிக்கப்பட்
டிருக்கிற லட்சக்கணக்கான இளைஞர்கள் பயன் பெறுவார்கள்
என்ற அந்த அடிப்படையில் முன் உரிமை கொடுத்து ஆவன
செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. த. இராமசாமி :** மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, தேசிய வேலை வாய்ப்புப் பணியில்
நடை முறை மேனுவல் எனப்படும் நேஷனல் எம்பிளாயி
மென்ட் சர்வீஸ் மேனுவலைத் தான் பின்பற்றி வேலை வாய்ப்பு



1986 மார்ச் 21]

அலுவலகங்கள் இயங்குகின்றன. வேலை அளிப்பவர்கள் கொடுக்
கின்ற வயது வரம்பைத்தான் வேலை வாய்ப்பு அலுவலகங்களில்
உள்ள அலுவலர்கள் கடைபிடிக்க வேண்டும். 28 வயது நிரம்பி
யவர்களுக்காக, அந்த நடை முறை மேனுவலில் தனியாக ஏதும்
வழி வகை செய்யப்படவில்லை.

மேலும் மத்திய மற்றும் மாநில அரசுகளின் அலுவலகப்
பணிகளுக்கு குறிப்பிட்ட வயது வரம்பினை நிர்ணயம் செய்
திருக்கிறார்கள். இன்னின்ன அடிப்படையில் வயது வரம்பினை
நிர்ணயம் செய்ய வேண்டும் என்றும் அந்தந்த அரசுகளின் சட்ட
திட்டங்கள் இருக்கின்றன. ஆதித் திராவிடர் மற்றும் பின்
தங்கியோர்களுக்காக இவ்வாறு வயது வரம்பு இருக்க வேண்டும்
என்றும் அந்த சட்ட திட்டங்களின் அடிப்படையில் நிர்ணயிக்கப்
பட்டுள்ளது. ஆகவே, 28 வயது நிரம்பிய அத்தனை இளைஞர்
களுக்கும் முன் உரிமை கொடுத்து, இண்டர்வியூவிற்கு அவர்
களுடைய பெயரை ஒட்டு மொத்தமாகப் பரிந்துரை செய்ய
இயலாது என்பதை இந்த நேரத்திலே மாண்புமிகு தலைவர்
அவர்களின் மூலமாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத்
தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. சைதை சா. துரைசாமி :** மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, அப்படி வழங்கப்படுவதில்லை என்றாலும்
28 வயது பூர்த்தியாகின்ற சூழ்நிலையில் இருக்கின்றவர்களுக்கு,
அந்தக் கால கட்டத்தில் வருகின்ற இண்டர்வியூக்களுக்கு மட்டு
மாவது முன் உரிமை கொடுத்து—அதாவது இப்போது அவர்
களுக்கு சீனியாரிட்டி என்ற நடை முறையில் இருந்து வருகிறார்
கள், அதிலிருந்து விலக்களித்து—அவர்களுக்கு 28 வயது பூர்த்தி
ஆவதற்குள் வேலை வாய்ப்பு அளிக்க வேண்டும் என்ற கருணை
அடிப்படையிலாவது, வேலை வாய்ப்பு அலுவலகங்களில் மாற்றம்
செய்ய அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா ?

**மாண்புமிகு திரு. த. இராமசாமி :** தலைவர் அவர்களே,
நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வேலை வாய்ப்பை
அதிகரிக்க வேண்டுமென்ற எண்ணத்தோடு கருத்துக்களைத்
தெரிவிக்கிறார்கள். அதே உணர்வு இந்த அரசிற்கும் உண்டு,
எனக்கும் உண்டு. இன்றைய தினம் வேலை வாய்ப்பு அலுவல
கங்களிலிருந்து நேர்முகக் காணலுக்கு அழைப்புகள் அனுப்பு
கிறார்கள். அங்கே இருக்கிற சம்பந்தப்பட்ட இண்டர்வியூ
அதிகாரிகள் தான் கருணை உள்ளத்தோடு செயல் பட வேண்டும்.
அதனை வேலை வாய்ப்பகங்களால் செய்ய இயலாது என்பதைத்
தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. வி. பி. சிந்தன் :** தலைவர் அவர்களே, வேலை
வாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்யும்போது அந்தப் பெயர்
பட்டியலை வரிசைக் கிரமமாக வைத்து தேவைக்கேற்ப வரிசைக்
கிரமத்தில் அனுப்புவதற்கு அரசிற்கு ஏதேனும் திட்டமுள்ளதா ?

பல இடங்களில் ஒரு குறிப்பிட்ட தொழிலுக்கு பதிவு செய்தவர்களை, நான் அறிந்த காரணத்தால் இதனைச் சொல்கிறேன். போக்குவரத்துக் கழகத்தில் 10 டிரைவர்கள் தேவையென்றால் பதிவு செய்த ஓட்டுநர்களின் வரிசைக் கிரமத்தில் அனுப்புவதற்கு ஒரு ஏற்பாடு இருந்தால் இதில் இருக்கும் குறைபாடுகளைத் தீர்க்க முடியும். அந்த முறையில் அந்தப் பட்டியலை வெளியிடுவதற்கும், பார்வைக்கு வைப்பதற்கும் ஏற்பாடு செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன். மற்ற சில மாநிலங்களில் இதனை கடைப் பிடிப்பதால் குறைபாடுகள் இல்லாமல் போனதைக் கவனத்தில் கொண்டு இந்த நடவடிக்கையை அரசு கடைப் பிடிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. த. இராமசாமி :** தலைவர் அவர்களே, சீனியாரிட்டி அடிப்படையில்தான் இன்றைய தினம் நேர்முகக் காணலுக்கு, பேட்டிக்கு அழைப்பு அனுப்பப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அதில் முறைகேடுகள், தவறுகள் நடைபெறுகின்றன என்று கருதுவார்களானால், அதற்கான சான்றுகளுடன் நிரூபிப்பார்களானால் அதில் உரிய நடவடிக்கையை அரசு எடுக்குமென்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம் :** தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் சொல்லும்போது 28 வயது பூர்த்தி ஆவதற்குள் வேலைக் காலியிடங்களுக்கு பரிந்துரைப்பதில் முன்னுரிமை அளித்திடும் செயற் குறிப்பேதும் அரசிடம் தற்போது இல்லையென்று தெரிவித்தார்கள். அரிசன வகுப்பைச் சேர்ந்தவர்களுக்கு 35 வயது வரம்பு இருக்கிறது என்று நினைக்கிறேன். வேலை வாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்திருப்பவர்கள் அனைவரும் ஏழைகள் தான். ஆகவே இவர்களுக்கும் 35 வயது என்று அந்த வரம்பை நீடிப்பதற்கு சட்டம் கொண்டு வரப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. த. இராமசாமி :** தலைவர் அவர்களே, பிற்படுத்தப்பட்டவர்கள் எஸ்.எஸ்.எல்.சி. தேர்வு பெற்றிருப்பார்களானால் அவர்களுக்கு 28 வயது என்று நிர்ணயிக்கப் பட்டிருக்கிறது. ஆதி திராவிடர்கள் எஸ்.எஸ்.எல்.சி. தேர்வு பெற்றிருப்பார்களானால் அவர்களுக்கு 33 வயது என்று நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. பட்டதாரிகளாக இருந்தால் அவர்களுக்கு வயது வரம்பு இல்லை யென்ற அளவிலேதான் நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே அந்த அடிப்படையில் நேர்முகக் காணலுக்கு, பேட்டிகளுக்கு அழைப்புகள் அனுப்பப்படுகின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. வே. இரா. ஜெயராமன் :** தலைவர் அவர்களே, அரசுத் துறை தொழில் நிதி நிறுவனங்கள் மூலமாக கடன்களைப் பெற்று தனியார் தொழிற்சாலைகளைத் துவக்குகிறார்கள். தனியார் தொழிற் சாலைகளில் வேலைக்கு ஆட்களை தேர்வு





செய்யும்பொழுது எம்ப்ளாய்மெண்ட் எக்சேன்ஜ் மூலமாக கட்டாயமாகச் செய்ய வேண்டுமென்று ஒரு திட்டத்தை அமைச்சர் அவர்கள் அறிமுகப்படுத்துவார்களா? சில இடங்களில் அரசுத் துறை நிறுவனங்களிலிருந்து கடன்களைப் பெற்று தொழிற்சாலைகளை நடத்துபவர்கள் தங்கள் இஷ்டம்போல ஆட்களைத் தேர்ந்தெடுத்துக் கொண்டிருக்கிறார்கள். குறிப்பாக மாவட்ட பகுதிகளில் அப்படி நடக்கிறது. இந்தக் குறைகளைப் போக்க தனியார் தொழிற்சாலைகள் மற்றும் நிறுவனங்கள் வேலை வாய்ப்பு அலுவலகங்கள் மூலமாகத்தான் ஆட்களை தேர்ந்தெடுக்க வேண்டுமென்று ஒரு கட்டுப்பாட்டை அரசு நிர்ணயிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. த. இராமசாமி :** தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன கருத்தின் பிரகாரம் தனியார் நிறுவனங்களைக் கட்டுப்படுத்துகிற நிலை, எம்ப்ளாய்மெண்ட் எக்ஸ்சேன்ஜ் மூலமாகத்தான் ஆட்களை நியமனம் செய்ய வேண்டுமென்று விதிமுறை அகில இந்திய ரீதியிலே இருக்கிற வேலை வாய்ப்பு நடை முறை நூலில் கொடுக்கப்படவில்லை. பொதுவாக அரசு போக்குவரத்துக் கழகங்கள் மற்றும் அரசுக்குச் சொந்தமான நிறுவனங்களில்தான் அப்படிப்பட்ட நிலை இருக்கிறது என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வினா எண்கள் 231 மற்றும் 232 மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சரின் வேண்டுகோளுக்கிணங்க ஒத்திவைக்கப் பெறுகின்றன.

### கன்னியாகுமரியில் மிடாலம், பூத்துறை பகுதிகளில் கடலரிப்பு

233—(*வினா எண். 3869) **திரு. ஜே. ஹேமச்சந்திரன் மற்றும் டாக்டர் தே. குமாரதாஸ் :** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டத்தில் மிடாலம், பூத்துறை போன்ற பல பகுதிகளில் 1985 மே மாதம் 30, 31 தேதிகளில் ஏற்பட்ட கடலரிப்பு காரணமாக மக்கள் பாதிக்கப்பட்டுள்ளதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது ?

**மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் :** (அ) ஆம். (ஆ) மிடாலம், பூத்துறை கிராமங்களில் கடலரிப்பை தடுப்பதற்காக கற்குவியற் சுவர் கட்ட மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளன. அம்மதிப்பீடுகள் அரசின் பரிசீலனையில் உள்ளன. அரசு அங்கீகாரம் அளித்த பின் பணி எடுத்துக் கொள்ளப்படும்.

**டாக்டர் தே. குமாரதாஸ் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே; இந்தப் பணி சம்மந்தமாக மதிப்பீடு தயார் செய்து அரசுக்கு அனுப்பப்பட்டு உள்ளதாக அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். ஆனால் அந்த வேலை எப்போது ஆரம்பிக்கப்படும் என்பது குறிப்பிடப்படவில்லை. இது எப்போது ஆரம்பிக்கப்படும் என்பதை அறிய விரும்புகிறேன். இந்தத் தடுப்புச் சுவர் கட்டுகின்ற நேரத்திலே அந்தப் பகுதியில் உள்ள மீனவர்கள் குறிப்பாக மே, ஜூன் மாதங்களில் கடலில் சென்று மீன் பிடிக்கச் செல்லுகின்றபோது, மணல் அரிப்பின் காரணமாக கட்டப்படுகின்ற இந்தத் தடுப்புச் சுவர் உயர்ந்திருக்கிற காரணத்தால், மீன் பிடிக்கச் செல்ல முடியாத ஒரு அவல நிலைமை ஏற்படுகிறது. எனவே அவர்களுடைய நீண்ட கால கோரிக்கையாக உள்ள,— கேரளாவில் தூண்டில் வளைவு மாதிரி கட்டிக் கொடுத்து இருப்பது போல் கட்டிக் கொடுத்தால், இப்படிப்பட்ட சிரமங்கள் வராது என்று சொல்கிறார்கள். எனவே இவற்றைக் கருத்தில் கொண்டு, இனிமேல் அமைக்க இருக்கின்ற தடுப்புச் சுவர்களை, தூண்டில் வளைவு மாதிரி அமைத்துக் கொடுக்க அரசு முன் வருமா?

(முற்பகல் 9-50)

**மாண்புமிகு திரு. பா. சை. மு. யூசுப் :** பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கனவே சுட்டிக்காட்டியதைப்போல, கன்னியாகுமரி மாவட்டத்தில் கடல் அரிப்பைத் தடுப்பதற்காக திட்ட மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு அரசுக்கு அனுப்பப்பட்டு இருக்கின்றன. அரசு அனுமதி வழங்கிய பிறகுதான் மேற்கொண்டு பணிகள் துவங்கப்படும். இது நீங்கலாக, கேரளாவிலே இருப்பது போல், தூண்டில் வளைவு முறை வேண்டும் என்று உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். அந்த முறையிலே கடல் அரிப்பைத் தடுக்க பணிகள் மேற்கொள்ளப்படுமா என்றும் கேட்டிருக்கிறார்கள். இந்தப் புதிய திட்டத்தைப் பொறுத்தவரையிலும், இதனால் உண்மையிலேயே கடல் அரிப்பைத் தடுக்கக்கூடிய சூழ்நிலை உருவாகுமானால், அதே நேரத்தில் கடல் அரிப்பினால் பாதிப்புக்கு உள்ளாக்கப்பட்ட மீனவர்கள் இதனால் பயன் அடைவார்கள் என்று சொன்னால், அதைப் பரிசீலிக்க அரசு நிச்சயமாக தயங்காது. ஆகவே அந்த மீனவர்களையும், நம்முடைய மீனளத் துறை அதிகாரிகளையும், நம்முடைய மீனளத்துறை அமைச்சர் அவர்களையும் வைத்துப் பேச்சு வார்த்தை நடத்தி உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ள அரசு முன்வரும்.

**திரு. மா. சுந்தரதாஸ் :** பேரவைத் தலைவர் அவர்களே, தடுப்புச் சுவர் கட்டினால் மீனவர்கள் மீன் பிடிக்கப் போக முடியாது. எல்லாப் பகுதிகளிலும் இப்படிக் கட்டிவிட்டால் அவர்கள் கடலுக்குப் போக முடியாத அளவில் தடுக்கப்பட்டு விடுவார்கள் என்பது அரசுக்குத் தெரியுமா? ஆம் எனில், மீனவர்கள் மீன்



பிடிக்கப் போவதற்கு வசதியாக ஒரு வசதியான இடத்தை ஒதுக்கி விட்டு, மீதி இருக்கின்ற இடத்தில் தடுப்புச் சுவர் கட்ட ஆவன செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பா. சை. மு. யூசுப் :** பேரவைத் தலைவர் அவர்களே, தடுப்புச் சுவர் கட்டுவது கடல் அரிப்பைத் தடுப்பதற்காக. கடல் அரிப்பைத் தடுக்காவிட்டால், பாதிக்கப்படுபவர்கள் மீனவர்கள்தான். ஆகவே கடல் அரிப்பைத் தடுத்தாக வேண்டும். அதே நேரத்தில் மீனவர்களுக்கு உரிய வசதிகளையும் செய்து தரவேண்டும். இப்போதுள்ள சூழ்நிலையில் கற்குவியல்களைப் போடுவதைத் தவிர வேறு வழி இந்தத் துறைக்குத் தெரியவில்லை. ஆகவே இப்படிப்பட்ட சந்தர்ப்பத்தில் கூழுக்கும் ஆசை, மீசைக்கும் ஆசை என்று இருக்க முடியாத சூழ்நிலையில் ஏதாவது ஒரு வழியை மேற்கொள்ளவேண்டிய நிலையில் இந்தத் துறை இருக்கிறது. ஆகவே அதற்காகத்தான் ஒரு பகுதியில் கடல் அரிப்பைத் தடுப்பதற்காக கற்குவியல்கல் போடப்படுகிறது. இன்னொரு பகுதியில் நம்முடைய மீனவர்கள் கடலுக்குப் போகக்கூடிய அளவிற்குப் பாதை விடப்படுகின்றது. அதிலே மாற்று ஏற்பாடு செய்ய வேண்டும் என்று சொன்னால், நான் முன்பே சொன்னதைப் போல, சம்பந்தப்பட்ட துறை அமைச்சரையும், சம்பந்தப்பட்ட மீனவர்களையும் வைத்துப் பேசி, உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

**டாக்டர் தே. குமாரதாஸ் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மீன் பிடிக்கப் போகிறவர்களுக்கு இப்படிப்பட்ட தடங்கல்கள் சிக்கல்கள் ஏற்படுகின்றன என்ற காரணத்தாலே, தேங்காய்ப் பட்டணம் பகுதியில் 3 கோடி அளவில் ஒரு சிறிய மீன் பிடித் துறைமுகம் அமைப்பதற்கு ஆக்கபூர்வமான பணிகள் மேற்கொள்ளப்பட்டு இருப்பதாக மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் அங்கே தெரிவித்தார்கள். அதன் அடிப்படையில் ஏதாவது சிறிய மீன்பிடித் துறைமுகம் அமைப்பதற்கான பணிகளை இந்த அரசு மேற்கொண்டிருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பா. சை. மு. யூசுப் :** தலைவர் அவர்களே, மூலக் கேள்விக்கு சம்பந்தம் இல்லாத கேள்வியாக இருக்கிறது. எனினும் கன்னியாகுமரி மாவட்டத்தில் அக்கறை கொண்டவன் என்ற காரணத்தால், இதைப் பரிசீலிக்க சம்பந்தப்பட்ட அமைச்சர் அவர்களை நானும் உங்கள் சார்பாகக் கேட்டுக்கொள்கிறேன்.

## கீழ்பவானி பாசனத் திட்டம்

234—(*வினா எண். 3981) **திரு. வே.கு. சின்னசாமி :** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெரியார் மாவட்டம் கீழ்பவானி வாய்க்கால் பாசனத் திட்டம் நிறைவேற்றப்பட்ட காலத்தில் எடுத்துக் கொள்ளப்பட்ட பாசன பரப்பளவு எவ்வளவு ஏக்கர்?

(ஆ) முழுவதும் பயன் பெற்றுப் பாசன வசதி அடைந்து வருகிறதா?

(இ) இல்லையெனில், மீதமுள்ள பரப்பளவு எத்தனை ஏக்கர்?

(ஈ) அவைகளுக்குப் பாசன வசதி அளிக்க அரசிடம் திட்டம் பரிசீலனையில் உள்ளதா?

**மாண்புமிகு திரு. யா.சை.மு. யூசுப் :** (அ முதல் ஈ வரை) கீழ் பவானி திட்டத்தின் கீழ் எடுத்து கொள்ளப்பட்ட பாசன பரப்பு 2,07,500 ஏக்கர். இதில் 19,325 ஏக்கர் நிலங்களுக்கு பாசன வசதி அளித்தல் வேண்டும். இவைகளுக்கு பாசன வசதி அளிக்கும் குறிப்பு பரிசீலனையில் உள்ளது.

**திரு. வே. கு. சின்னசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, 19,325 ஏக்கர்களுக்கு பாசன வசதி மீண்டும் அளிப்பதாக இங்கே அமைச்சரவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அதற்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். இந்த விவசாயிகளுக்கு அந்த பாசன வசதி ஏற்படுகின்ற நேரத்தில் செலவுகளை அரசாங்கமே ஏற்று கொள்ளுமா அல்லது விவசாயிகளிடமிருந்து வசூலிப்பதன் மூலம் செலவை அந்தந்த விவசாயிகளே ஏற்றுக்கொள்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன். அதோடு பாசன வசதி பரப்பு 2,07,500 ஏக்கர் என்று சொல்கிறார்கள், அது வாய்க்கால் பாசனம் பெருகின்ற முதலாண்டிலிருந்தே கொடுக்கப்பட்டதா? இடையிலே சில ஏக்கர்களை ஆயக்கட்டிலே சேர்த்திருக்கிறார்கள். குறிப்பாக என்னுடைய தொகுதியில் காட்டூர் அதாவது கீழ்பவானி 22/2, காரப்பாடி 24/4 காரப்பாளையம் கிராமம் காரப்பாடி என்ற பகுதியில் பல முறை விண்ணப்பித்தும் அவர்களுக்கும் இன்னும் ஆயக்கட்டு கிடைக்காமல் இருக்கின்றது. ஆகவே இந்த 19,325 ஏக்கர் பாசனம் பெருகின்ற நேரத்தில், இவைகளும் சேர்த்துக்கொள்ளப்படுமா, அதற்கான ஆய்வு நடத்தப்பட்டதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. யா.சை.மு. யூசுப் :** பேரவைத் தலைவரவர்களே, நான் முன்பே சுட்டிக்காட்டியதைப்போல இந்த பவானி திட்டத்தின் கீழ் பாசன வசதி பெறக்கூடிய அளவுக்கு பரப்பளவுகொண்ட பகுதி 2,07,500 ஏக்கர்கள் ஆகும். இதிலே தற்போது பதிவு செய்யப்பட்ட பகுதி 1,88, 175 ஏக்கர்கள் ஆகும். தற்போது பதிவு செய்யப்பட்டுள்ள அளவு நீங்கலாக எஞ்சிய பகுதியான 19,325 ஏக்கர்களை பதிவு செய்தும் இந்தத் திட்டத்தின் அடிப்படையில் வசதியை உருவாக்க முடியும் என்பதுதான் இந்த அரசின் கருத்தாகும். என்றாலும், இந்தப் பகுதியில் தரவேண்டும். இதில் தரமுடியாது என்பதை,



யெல்லாம் நீர்ப்பாசன திட்டங்களைப் பொறுத்தமட்டிலும், நில அமைவை நிலத்திலிருக்கக் கூடிய ஏற்றத்தாழ்வுகளையும் உயர்வுகளையும் கணக்கில் எடுத்துக் கொண்டுதான், இப்படிப்பட்ட பாசன வசதி ஒரு பகுதிக்குச் செய்து தரமுடியும். அதே நேரத்தில், ஏற்கனவே இருக்கக்கூடிய கீழ் பவானி ஆயக்கட்டு நிலங்களில் பெரும்பகுதி வீடுகள் கட்டுவதற்காகவும், வேறு பல்வேறு பணிகளுக்காகவும் பயன்படுத்தப்படுவதன் காரணமாக தற்போது ஆயக்கட்டு பகுதி குறைந்திருக்கிறது என்ற முறையில், எவ்வளவு தூரத்திற்கு ஆயக்கட்டு பகுதி குறைந்திருக்கிறது, எவ்வளவு தூரத்திற்கு சிறிய ஆயக்கட்டுகள் சேர்த்து கொள்ளப்படலாம் என்ற ஆய்வினை களப்பணியாளர்கள் நடத்திக்கொண்டு இருக்கிறார்கள். விரைந்து அவர்களுடைய அறிக்கையை அரசுக்கு அனுப்பிடவேண்டுமென்று உத்தரவினை அரசு இட்டிருக்கிறது. அரசுக்கு அந்த அறிக்கை வந்தவுடன் முடிந்த அளவு அனைத்து பகுதிகளையும் சேர்த்துக் கொள்ள கூடிய நடவடிக்கையையும் மேற்கொள்ளும். அந்தமுறையில, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சுட்டிக்காட்டியிருக்கின்ற பகுதி அந்த ஆயக்கட்டுக்கு உட்படக்கூடிய அளவுக்கு நில அமைப்பு இருக்குமானால், நிச்சயமாக தகுந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

### முஸ்குந்தா நதியில் லக்கிநாயக்கன் பட்டியருகே அணை.

235—(*வினா எண். 3993) **திரு. சோ. கலிதீர்த்தான் :** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சங்கராபுரம் தொகுதியில் முஸ்குந்தா நதியில் லக்கிநாயக்கன்பட்டிக்கருகே அணை கட்டும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், திட்டத்தின் மதிப்பீடு எவ்வளவு?

(இ) திட்டம் எப்பொழுது துவங்கப்படும்?

**மாண்புமிகு திரு. யா.சை.மு. யூசுப் :** (அ) இத்திட்டம் தலைமைப் பொறியாளர் (ஆய்வு) அவர்களின் ஆய்வில் உள்ளது.

(ஆ மற்றும் இ) ஆய்வு முடிந்த பிறகே இவ்விவரங்கள் தெரியவரும்.

**திரு. சோ. கலிதீர்த்தான் :** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, சங்கராபுரம் தொகுதியிலுள்ள முஸ்குந்தா நதியில் லக்கி நாயக்கன்பட்டி மிகவும் வறட்சியான பகுதி. இந்த முஸ்குந்தா நதியிலே மழைக் காலங்களிலே அதிகமான நீர் வருகின்றது. அவை கடலிலே சென்று கலக்கிறது. நான் சென்ற

சட்டமன்றத் தொடரிலே உறுப்பினராக இருந்தபோது கூட
இந்தக் கேள்வியை கேட்டேன். அது எவ்வளவு நாட்களாக ஆய்
விலே இருக்கிறது. எப்போது அந்த ஆய்வுப்பணி முடிவடைந்து
இந்தத் திட்டம் எடுத்துக்கொள்ளப்படும் என்பதை அறிய
விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. யா.சை.மு. யூசுப் :** பேரவைத் தலை
வரவர்களே, நான் பலமுறை சொல்லியிருப்பதுபோல, பொதுப்
பணித் துறையில் குறிப்பாக பாசனப் பகுதியைப் பொறுத்த
மட்டிலும், ஆய்வுகள் மேற்கோள்ள கூடிய காலத்திலே சற்று
காலதாமதம் ஏற்படுவது தவிர்க்கமுடியாதது. ஏனென்றால்,
தண்ணீர் எவ்வளவு கிடைக்கிறது என்பதையெல்லாம் தகுந்த
அளவு ஆய்வு செய்து மழையளவு தண்ணீர் அளவு எல்லாம்
பார்த்துத்தான் ஒரு திட்டத்தினை மேற்கொள்ளக்கூடிய சூழ்
நிலை இருக்கிறது. என்றாலும் இந்தத் திட்டத்தைப்
பெக்றுத்தமட்டிலும், முஸ்குந்தா நதியில்— லக்கிநாயா கன்பட்டி
அருகே கட்டக்கூடிய இந்த அணையைப் பொறுத்த மட்டிலும்
இந்த ஆண்டுக்குள்ளேயே— 1985–86-க்குள்ளேயே திட்ட மதிப்
பீடு தயாரித்து அரசுக்குத் தரப்படவேண்டுமென்ற உத்தரவை
அரசு அப்போதே இட்டிருக்கிறது. அந்த முறையிலே இது
வரைக்கும் இந்த திட்ட மதீப்பீடு அரசுக்கு வந்திருக்குமெனக்
கருதுகிறேன். வராவிட்டாலும். விரைவில் நடவடிக்கை பெற
மேற்கொள்ளப்படும்.

திரு. சோ. கலிதீர்த்தான் : மாண்புமிகு பேரவைத் தலை
வரவர்களே, மாண்பமிகு அமைச்சரவர்கள் சொல்கிறபோது
விரைவாக இந்தத் திட்டம் கொண்டுவரப்படும் என்று கூறி
னார்கள். நம்முடைய நாட்டிலே விவசாயத்திற்கு முக்கியத்
துவம் கொடுக்கின்ற காரணத்தினாலேதான், இந்த நடப்பு
ஆண்டிலேயே முஸ்குந்தா நதியிலே அணை கட்டுவதற்கு
அமைச்சரவர்கள் அந்த திட்டம் நிறைவேற்றப்பட செயல்படு
வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 10-00)

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவையின் அனுமதியு
டன் வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்பெறுகிறது.

**மாண்புமிகு திரு. யா.சை.மு. யூசுப் :** மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, நான் முன்பே சொன்னது போல்,
திட்டம் இந்த ஆண்டு கொண்டு வரப்படும் என்று எந்த காலத்
திலும் சொல்லவில்லை. திட்டத்தின் ஆய்வு அரசுக்கு அனுப்பப்
பட்டு அரசு தகுந்த நடவடிக்கை மேற்கொள்ள கூடிய அள
வுக்கு நிலைமை உருவாக்க ஆய்வுத் துறைக்கு ஆணையிட்டு
இந்த ஆண்டு அது நடவடிக்கைக்கு எடுத்து கொள்ளப்படும்
என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.



**திரு. வே.கு. சின்னசாமி :** மாண்புமிகு பேரவைத் தலை
வர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களை நான்
கேட்டது 19,325 ஏக்கர் ஆயக்கட்டை சீராக்க அதற்கு ஆகும்
செலவை அரசு ஏற்று கொள்கிறதா? அல்லது விவசாயிகளிட
மிருந்து வசூலிக்கப்படுகிறதா என்று கேட்டேன். அதற்கு
மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லவேண்டும்
என்று கேட்டுக்கொள்கிறேன். ஆகவே அதற்கான நட
வடிக்கை என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் :** மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, இது முந்தைய கேள்வியாக
இருந்தாலும் கூட அந்த நேரத்தில் மாண்புமிகு உறுப்பினர்
திரு. சின்னசாமி அவர்கள் கேட்க தவறிவிட்டாலும் நான்
இப்போது பதில் வழங்குகிறேன். இந்தத் திட்டத்தைப் பொறுத்த
வரையில், திட்டம் ஒன்றை அரசு செயல் படுத்துமானால்
அதற்குரிய செலவுத் தொகையை பயன்படுத்துவோரிடமிருந்து
தான் அரசு வசூலிக்கும்.

**சாத்தனூர் அணையிலிருந்து பாசன வசதி பெறும் பகுதிகள்.**

236—(*வினா எண். 4025) **திரு. தி.நா.கோ.அ. மனோகரன்:**
மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்
கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) தென்னாற்காடு மாவட்டத்தில் உள்ள சாத்தனூர்
அணை மூலம் எந்த எந்த வட்டங்கள் பாசன வசதி பெறு
கின்றன ?

(ஆ) தற்போது சம்பா சாகுபடி செய்ய தண்ணீர் எப்
போது திறந்துவிடப்படும் ?

**மாண்புமிகு திரு. யா.சை.மு. யூசுப் :** (அ) சாத்தனூர்
அணை வட ஆற்காடு மாவட்டத்திலுள்ள செங்கம், திரு
வண்ணாமலை தாலுக்காக்களுக்கும், தென் ஆற்காடு மாவட்டத்
திலுள்ள திருக்கோவிலூர் கள்ளக்குறிச்சி தாலுக்காக்களுக்கும்
பாசன வசதி அளிக்கிறது.

(ஆ) இந்த ஆண்டு, சாத்தனூர் நீர்த் தேக்கத்தில் குறை
வான நீர் இருப்பின் காரணமாக சாத்தனூர் இடது கரையை
சார்ந்த ஆயக்கட்டின் ஒரு பகுதிக்கு சுமார் (7,000 ஏக்கர்)
முறைப்பாசன மூலம் 1–1–1986 முதல் புஞ்சை சாகுபடி செய்ய
நீர் வழங்கப்பட்டு வருகிறது.

**திரு. தி.நா.கோ.அ. மனோகரன் :** மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, தற்போது நடக்கின்ற பருவத்திற்கு சாகு
படி செய்ய எப்போது தண்ணீர் திறந்துவிடப்படும்? இந்த

ஆண்டு எவ்வளவு அளவு தண்ணீர் திறந்துவிடப்படும்? இதனால் எத்தனை ஏக்கர் பாசன வசதி பெறும் என்பதையும் அறிய விரும்புகிறேன். ?

**மாண்புமிகு திரு. யா.சை.மு. யூசுப் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த சாத்தனூர் நீர் தேக்கத் திட்டத்தைப் பொறுத்தவரையில் இரண்டு புற கால்வாய்கள் இருக்கின்றன. இடது புற கால்வாயைப் பொறுத்தவரையில் வழக்கமாக டிசம்பர் மாதம் 15 ஆம் தேதி முதல் ஏப்ரல் மாதம் 15 ஆம் தேதி வரை பாசனத்திற்கு தண்ணீர் திறந்து விடப்படுகிறது. அதே போல் வலது புற கால்வாயில் அக்டோபர் மாதம் 1 ஆம் தேதி முதல் பிப்ரவரி மாதம் 15 ஆம் தேதி வரை பாசனத்திற்கு தண்ணீர் திறந்து விடப்படுகிறது. வழக்கமாக தண்ணீர் எப்போது திறந்துவிடப்படும். எவ்வளவு காலத்திற்கு திறக்கப்படும் என்ற பிரச்சினைகளை எல்லாம் சம்பந்தப்பட்ட துறையைச் சேர்ந்தவர்கள் திறப்பதற்கு ஒரு வார காலத்திற்கு முன்போ அல்லது 10 நாட்களுக்கு முன்போ இருக்கக்கூடிய சூழ்நிலைக்கு ஏற்ப நடவடிக்கைகளை மேற்கொள்கிறார்கள். அந்த முறையில் தற்போது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேள்விக்கு என்னிடத்தில் பதில் இல்லை என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

### கடலாடித் தொகுதியில் களரிக் கண்மாய் பாசனம்.

237—(*வினா எண் 4297) **திரு. அ. பிரணவநாதன் :** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டம் கடலாடித் தொகுதியில் 5,000 ஏக்கர் பாசனம் உள்ள களரிக் கண்மாய் 12 ஆண்டுகளாக தூர் வாரப்படாமல் கரையே அழிந்துவிட்டதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், தூர் எடுக்கும் பணி எப்போது மேற்கொள்ளப்படும் ?

**மாண்புமிகு திரு. யா.சை.மு. யூசுப் :** (அ) மற்றும் (ஆ) : 1,722.99 ஏக்கர் பாசன பரப்பு உடைய களரிக் கண்மாயின் கரை முழுவதும் அழித்து விடவில்லை. களரிக் கண்மாய்க்கு ரூ. 46,000 செலவில் பலவீனமான பகுதியில் மராமத்து பணி செய்யப்பட்டுள்ளது. மிகச் சில இடங்களில் மட்டுமே கண்மாயின் கரை தாழ்வாக உள்ளது. சுமை தாங்கி கிராமத்திற்கருகில் கண்மாயின் கரையைப் பலப்படுத்தவும் 4 வது மடையை பழுது பார்க்கவும் ரூ. 80,000 செலவில் இவ்வாண்டில் வேலைகள் மேற்கொள்ளத் தீர்மானிக்கப்பட்டது. களரிக் கண்மாயினை முற்றிலும் தூர் எடுக்க சுமார் ரூ. 50.00 இலட்சம் செலவு ஆகும். வெட்டி எடுக்கப்பட்ட மண்ணை அப்புறப்படுத்தி கொட்டுவதற்கு ஏரியின் முன்வாயில் உள்ள நிலங்களின் உரிமையாளர்கள் எதிர்ப்பு தெரிவிப்பதாலும் ஏரிகளில் தூர்வாரும் பணி மேற்கொள்ள இயலவில்லை.



**திரு. அ. பிரணவநாதன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியைச் சேர்ந்த களரிக் கண்மாயல் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லுவது போல் ஆயிரத்து ஏழு நூற்றுச் சொச்சம் ஏக்கர் என்பது பழைய ஆயக்கட்டில் சொல்கிறார்கள். இப்போது 4 ஆயிரம் ஏக்கருக்கு மேல் பாசன வசதியாக—புஞ்சை நிலங்களை எல்லாம் நீர்ப் பாசனத்திற்கு ஏற்றதாக விவசாயிகள்— மாற்றியிருக்கிறார்கள். சென்ற ஆண்டு சில இடங்களில் மராமத்து வேலைகள் செய்வதற்காக கரைகளில் இருந்த கருவேல மரங்களை எல்லாம் அங்குள்ளவர்கள் வேரோடு பெயர்த்துவிட்ட காரணத்தால் கரைகள் எல்லாம் முழுமையாக அரித்துவிட்டு போய் இருக்கிறது. சிறிது சிறிதாக அங்கே வேலை பார்ப்பதை விட முழுமையாக அந்த கண்மாய்களை இந்த அரசு பார்வையிட்டு ராமநாதபுரத்திலேயே மிகப் பெரிய கண்மாயாக இருக்கிற காரணத்தால் முழுமையாக மராமத்து வேலைகளைச் செய்து தூர் வாரி 15 கிராமங்களுக்கு நீர் பாசன வசதியைக் கொடுக்க இந்த அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன் ?

**மாண்புமிகு திரு. யா.சை.மு. யூசுப் :** பேரவைத் தலைவர் அவர்களே, இந்த திருப்புலாணி ஊராட்சி ஒன்றியத்திலே களரிக் கண்மாய் ஆயக்கட்டுப் பகுதி 1,722.99 ஏக்கர்கள் ஆகும். உபரி நீர் பெறும் கண்மாய்களின் ஆயக்கட்டுகளைச் சேர்த்தாலும் கூட, கூடுதலாக 221 ஏக்கர்கள் அந்த வசதியைப் பெறும். ஆனால் மாண்புமிகு உறுப்பினர் தற்போது ஆயக்கட்டுப் பகுதிகள் சுமார் 4,000 ஏக்கர்கள் என்று சொன்னார். ஆயக்கட்டுப் பகுதியில் அந்தக் களரிக்கண்மாய் தூர்ந்து விட்டதாகவும் பயன்படுத்த முடியாத நிலைமை இருக்கிறது என்றும் சொல்லி விட்டு, இன்னொரு பக்கத்திலே தற்போது இருப்பதை விட இரண்டு மடங்கு பாசன வசதி பெறக்கூடிய அளவிற்கு விவசாயிகள் அந்தக் கண்மாய்களைப் பயன்படுத்துகிறார்கள் என்று சொன்னால், அது எந்த வகையில் சரியாக இருக்கும் என்று தெரியவில்லை. மாண்புமிகு உறுப்பினர் தந்த புள்ளிவிவரங்களின் படி அந்தக் கண்மாய்கள் மூலம் கூடுதலாக பாசன வசதி பெறுகின்ற வாய்ப்பு அதிகமாக இருக்கிறதென்று தெரிகிறது. ஆக அந்தக் கண்மாய்களைப் பொறுத்தவரையில் எந்தவிதமான நடவடிக்கையும் தேவையில்லை என்ற எண்ணத்திற்கு அரசு வரவேண்டியிருக்கிறது, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்த புள்ளிவிவரங்களின் அடிப்படையிலே.

**திரு. அ. பிரணவநாதன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் சொல்லிய ஆயக்கட்டுகள் 50 ஆண்டுகளுக்கு முன்னாலே, அல்லது 15 ஆண்டுகளுக்கு முன்னாலே உள்ள ஆயக்கட்டுகளைப் பற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள். அது வேறு, இப்போது தமிழகத்தைப் பொறுத்தவரையில், முழுக்க முழுக்க புறம்போக்குப் புஞ்சைகளாக இருக்கிற அத்தனை ஏக்கர்களையும் நஞ்சைகளாக இப்போது விவசாயிகள் மாற்றிக் கொண்டு வருகிறார்கள், என்பதை மாண்புமிகு

அமைச்சரவர்கள தெரிந்து கொள்ளவேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். புஞ்சையாக இருப்பதை எல்லாம் பரவலாக நஞ்சையாக மாற்றப்பட்ட காரணத்தை மாண்புமிகு அமைச்சரவர்கள் உணர்ந்து நடவடிக்கை எடுக்கவேண்டும். 10 ஆண்டு காலமாக அந்த கண்மாயில் தண்ணீரே கிடையாது. அந்த விவசாயிகளுக்கு நீர்ப்பாசன வசதி செய்துகொடுக்கப்படவில்லை. 15 மடைகள் மூடிக்கிடக்கின்ற நிலைமையில் திருப்புலானைப் பகுதி மிகச் செழிப்பாக இருக்கிறது என்று அமைச்சரவர்கள் தவறான தகவலைக் கொடுக்கிறார்கள். அந்தக் கண்மாய்கள் புதுப்பிக்கப்பட வேண்டும். தூர் வாரப்படவேண்டும். நீர்ப்பாசன வசதி பெறுவது 2,000 ஏக்கர்களாக இருந்தாலும் கூட, அமைச்சரவர்கள் பரிந்துரை செய்து, பொதுப் பணித்துறையின் மூலமாக கண்மாய்களைத் தூர் வாரவேண்டுமென்று பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் :** தலைவர் அவர்களே, இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள திருப்புலானி ஊராட்சி ஒன்றியம் வளம் கொழித்த பூமியாக இருப்பதாக நான் சொல்லவில்லை, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தான் சொல்கிறார்கள். ஆயக்கட்டுகளைப் பொறுத்தவரையில், ஒரு குளத்திற்கு, ஒரு களரிக் கண்மாய் ஏரிக்கு தேவையான பகுதி, 100 ஆண்டுகாலத்திற்கு முன்பாக 500 ஏக்கர்கள் என்று இருந்தால், அது திடீரென்று ஆயிரம் ஏக்கர்கள் என்று மாறிவிட முடியாது. ஒரு ஏரி இத்தனை ஏக்கர்கள் அளவுக்கு பாசன வசதி தரும் என்று கணக்கிட்டுத்தான் அமைக்கிறார்கள். கணக்குப் போட்டு அமைத்த பிறகு, இத்தனை ஏக்கர் ஆயக்கட்டுகள் பாசன வசதி பெறும் என்று அறிவித்து விடுகிறார்கள். திடீரென்று ஒரு நூறு ஆண்டுகளுக்குப் பிறகு விவசாயப் பகுதி அதிகமாகிவிட்டது என்றதன் காரணமாக இந்த ஆயக்கட்டுப் பகுதி நீண்டுவிடும் என்று யாராவது எதிர் பார்ப்பார்களானால் , அது தவறான கருத்தாகத்தான் இருக்க முடியும். நான் அதற்குள்ளே போய் நுழைய விருப்பவில்லை. இன்று பாசனவசதி கூடுதலாக பெறக்கூடிய பகுதியாக இருந்தாலும் கூட, மழையின் காரணமாக தண்ணீர் வரவில்லை என்றால் நாம் ஒன்றும் செய்ய முடியாது. வரக்கூடிய தண்ணீரை இருக்கக் கூடிய நிலைமைகளுக்கு ஏற்ப பயன்படுத்திக்கொள்ளக் கூடிய நிலைமையில் இருந்தாலும் கூட, அந்தக் கண்மாயின் மூலம் பாசன வசதிகளைப் பெருக்கவேண்டுமென்ற நல்ல எண்ணத்தின் காரணமாகக் கடந்த ஆண்டு ரூ. 46,000 செலவில் திட்டப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. தொடர்ந்து மேற்கொள்ள வேண்டுமென்ற நோக்கத்தோடு, ஆர்.எல்,ஈ.ஜி.பி. திட்டத்தின் கீழ் ரூ. 4.10 இலட்சத்தில் திட்டம் ஒன்று தீட்டப்பட்டது. ஆனால் ஆர்.எல்.ஈ.ஜி.பி. திட்டத்திற்குத் தேவையான நிதி வராத காரணத்தால் இந்த எண்ணத்தைக் கைவிட்டு, சுமைதாங்கி கிராமத்திற்கு அருகிலுள்ள இந்தக் கண்மாயின் கரையை வலுப்படுத்தி, பழுது பார்த்து, 4 ஆவது மடையைப் பழுது பார்க்கவேண்டுமென்ற இந்தக் திட்டத்தை மேற்கொள்ளவேண்டுமென்ற எண்ணத்தில் இந்த அரசு இருக்கிறது.





அது நீங்கலாக நம்முடைய மாவட்ட ஆட்சித் தலைவர் சிறப்பு நிதியிலிருந்து 1 லட்சம் ரூபாய் கிடைக்க கோரிக்கை வைக்கப் பட்டிருக்கிறது. அந்தக் கோரிக்கை ஏற்கப்பட்டால் அந்தக் கண் மாயின் 5—வது 7-வது பகுதிகள் புதுப்பிக்கப்பட்டு இயன்ற வரையிலே கரைகள் வலுப்படுத்தப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(முற்பகல் 10-10).

## கோவையில் மூடப்பட்ட பஞ்சாலைத் தொழிலாளர்கள்.

**கு. கா வி. எண். 1—** (*வினா எண். 8721) **திரு. ஆர். செங்காளியப்பன் :** மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவையில் பல பஞ்சாலைகள் நீண்ட நாட்களாக மூடப்பட்டுள்ளதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், பாதிக்கப்பட்டுள்ள தொழிலாளர்கள்' குடும்பங்களுக்கு முதல்வர் நிதியில் இருந்து உதவித் தொகை வழங்க அரசு முன்வருமா ?

**மாண்புமிகு திரு. கே.ஏ.கே. கிருஷ்ணசாமி :** (அ) தெரியும்.

(ஆ) மூடப்பட்டுள்ள ஜனார்த்தனா மில்ஸ், வசந்தா மில்ஸ் ஸ்ரீ ஹரி மில்ஸ், ஸ்ரீபத்மா மில்ஸ், தமிழ்நாடு ஸ்பின்னிங் மில்ஸ், தொழிலாளர்களுக்கு முதலமைச்சர் பொது நிவாரண நிதியி லிருந்து உதவித் தொகை வழங்கப்பட்டுள்ளது.

**திரு, ஆர். செங்காளியப்பன் :** மாண்புமிகு பேரவைத் தலை
வர் அவர்களே, இப்போது அமைச்சர் அவர்கள் மாண்புமிகு
முதலமைச்சர் நிதியிலிருந்து தொழிலாளர்களுக்கு நிவாரணம்
அளிப்பதாகக் கூறினார்கள். அதற்காக நான் நன்றியைத் தெரி
வித்துக் கொள்கிறேன். அந்த நிவாரணம் அவர்களுக்கு எப்
போது கொடுக்கப்படும், எவ்வளவு விரைவாக அதுகொடுக்கப்
படவேண்டுமோ அவ்வளவு விரைவாகக் கொடுக்கப்படவேண்டும்
எப்போது கொடுக்கப்படும் என்று அறியவிரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே.ஏ.கே. கிருஷ்ணசாமி :** மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, 4 ஆலைகளுக்கு 1984—85 இல் ஜனார்த்
தனா மில்ஸ், பத்மா மில்ஸ், தமிழ் நாடு ஸ்பின்னிங் மில்ஸ்,
ஸ்ரீஹரி மில்ஸ் ஆகிய ஆலைகளிலே உள்ள 3,143 தொழிலாளர்
களுக்கு ரூ. 3,88,200 கடந்த இரண்டு ஆண்டுகளில் கொடுக்கப்
பட்டிருக்கிறது. கடந்த இரண்டு நாட்களுக்கு முன்பாக மாண்பு
மிகு டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் கீழ்க்கண்ட நான்கு
நிறுவனங்களுக்கு நிவாரண நிதியை வழங்கியிருக்கிறார்கள்.

[1986 மார்ச் 21

வசந்தா மில்ஸ், கோவை 1,355 தொழிலாளர்கள் அங்கே இருக்கிறார்கள் ரூ. 2,70,200 ரூபாய் நிவாரண நிதி அளிக்கப்பட்டிருக்கிறது. கோயம்புத்தூர் ராமகிருஷ்ணா எஞ்சினியரிங் இண்டஸ்ட்ரிஸ், 400 தொழிலாளர்கள் இருக்கிறார்கள், அவர்களுக்கு 80 ஆயிரம் ரூபாய் வழங்கப்பட்டிருக்கிறது. சென்னை, இந்தியா போர்ஜ் அம்பத்தூர், அங்கே 498 தொழிலாளர்கள் இருக்கிறார்கள் அவர்களுக்கு ரூ. 99,600 அளிக்கப்பட்டு இருக்கிறது. திருச்சி அரியலூரில் மினி சிமின்ட்ஸ் ஆலையில் 72 தொழிலாளர்கள் இருக்கிறார்கள், அவர்களுக்கு 14,400 ரூபாய் அளிக்கப்பட்டிருக்கிறது. கடந்த இரண்டு நாட்களுக்கு முன்பாக மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் ஆணையிட்டிருக்கிறார்கள். 4 ஆலைகளில் 2,371 தொழிலாளர்களுக்கு 4,64,200 ரூபாய் இந்த ஆண்டு அளிக்கப்பட்டிருக்கிறது. சென்ற ஆண்டும் இந்த ஆண்டும் சேர்த்து 8 நலிந்த ஆலைகளுக்கு ரூ. 8,52,400 ரூபாய் அளிக்கப்பட்டிருக்கிறது. அதன் காரணமாக 5,464 தொழிலாளர்கள் பயன்பெற்றிருக்கிறார்கள்.

திரு. கு. ரமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த 8 ஆலைகள் மூடப்பட்டுள்ளது சம்பந்தமாக அமைச்சர்களிடம் நீண்ட நாட்களுக்கு முன்பே பேசி சீக்கிரமாக இதை முடிவுக்குக் கொண்டுவர வேண்டுமென்று சொல்லியிருக்கிறோம். அதனால் 8 ஆயிரத்திற்கும் மேற்பட்ட குடும்பங்கள் பாதிக்கப்பட்டிருக்கின்றன, 5,000 தொழிலாளர்களுக்கு உதவித் தொகை கொடுக்கப்பட்டுள்ளது. அது வரவேற்கத் தக்கது. திரு. செங்காளியப்பன் அவர்கள்கேட்ட கேள்வியில் ''பாதிக்கப்பட்டுள்ள தொழிலாளர்கள் குடும்பங்களுக்கு முதல்வர் நிதியிலிருந்து உதவித் தொகை வழங்க முன்வருமா ?'' என்று கேட்டிருக்கிறார்கள். அப்படியென்றால் இதுவரைக்கும் கொடுத்தது போதாது என்பது தான் அர்த்தம். அவர்களுடைய பிராவிடண்ட் பண்ட் நிதியெல்லாம் முடிந்துவிட்டது. நானும் அவரும் கையெழுத்துப் போட்டுக் கொடுத்து அவர்கள் அதையெல்லாம் பயன்படுத்திவிட்டார்கள், அது முடிந்துபோகிற நிலையிலே இருக்கிறது. ஆகவே உடனடியாக அந்த ஆலைகள் திறக்கப்படவேண்டும். நான் அது சம்பந்த மாக கால் அட்டென்ஷன் நோட்டீஸ் கொடுத்திருக்கிறேன். இன்றைக்கு அந்தத் தொழிலாளர்கள் 330 மைல் தூரம் நடந்தே பாத யாத்திரையாக வந்துகொண்டிருக்கிறார்கள் அவர்களுக்கு. அதிகப்படியான தொகை கொடுக்காவிட்டால் அந்த குடும்பங்கள் வாழ்வது ரொம்பக் கஷ்டம். ஆயிரம் ரூபாய்க்கு மேல் ஒவ் வொரு தொழிலாளியும் சம்பாதித்துக் கொண்டிருந்தார்கள். அதை அடியோடு இழந்து 8,000 குடும்பங்கள் தவிக்கின்றன. கொடுத்தவரையில் மகிழ்ச்சி. அது வரவேற்கத் தகுந்த விஷயம், தொழிலாளர்களைப் பாதுகாப்பதற்காகக் கொடுக்கப்பட்டது. ஆனால், இதற்குத் தகுந்த நடவடிக்கை எடுத்து மேலும் எவ் வளவு தொகையைக் கொடுப்பதற்கு அரசு முன்வரும் என்பதை அமைச்சரவர்கள் ஆறுதலாகச் சொல்ல முடியுமா என்று கேட்க விரும்புகிறேன்.



1986 மார்ச் 21]

மாண்புமிகு திரு. கே. ஏ. கே. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ரமணி அவர்கள் குறிப்பிட்டதைப் போல, நிவாரணம் அளிப்பதை விட நிரந்தரமான பணிகளைத் தொழிலாளர்களுக்கு அளிக்க வேண்டுமென்ற முனைப்போடு இந்த அரசு பல முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறது. என்ன நடவடிக்கை என்பதை விவரமாக இரண்டு அல்லது மூன்று நாட்களில் மாண்புமிகு உறுப்பினர்கள் தனியாகக் கேள்வியாகவோ அல்லது கவன ஈர்ப்புத் தீர்மானமாகவோ கேட்டால் அது சம்பந்தப்பட்ட முழுவிவரத்தையும், மூடப்பட்ட ஆலைகளைப் பற்றி இந்த அரசு என்ன நடவடிக்கை எடுக்க இருக்கிறது, எடுத்து இருக்கிறது என்பதைப் பற்றி சொல்ல முடியும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. என்.எஸ்.வி. சித்தன்: மாண்புமிக்க பேரவைத் தலைவரவர்களே, நாளும் விலைவாசி உயர்ந்து வருகின்ற இந்த நாளில் தங்களுடைய செலவினங்களைச் சரிகட்ட முடியாத நிலையில் தொழிலாளர்கள் இருப்பதால் மூடப்பட்டுள்ள இந்த ஆலைகளில் பணியாற்றும் பல்லாயிரக் கணக்கான தொழிலாளர்கள் பட்டு வருகின்ற தொல்லைகள் சகிக்க முடியாதவை என்பதை நாம் அறிவோம். ஏறக்குறைய எட்டு ஆலைகளில் பணியாற்றுகின்ற சுமார் 5,400 தொழிலாளர்களுக்கு கிட்டதட்ட 8,52,000 ரூபாய் வரையில் நிவாரணம் வழங்கப்பட்டுள்ளது பற்றி சொன்னார்கள். தமிழகம் முழுவதும் எத்தனை ஆலைகள் மூடப்பட்டு இருக்கின்றன ? அவைகளில் எத்தனை தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டு இருக்கிறார்கள். இப்படிப் பாதிக்கப்பட்ட தொழிலாளர்களுக்கு என்ன நிவாரணத்தை அரசாங்கம் அளிக்க இருக்கிறது ? நிரந்தர ஏற்பாடுகள் என்ன ? இந்த ஆலைகளைத் திறப்பதற்கு என்ன ஏற்பாடு செய்யப்பட்டு இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே.ஏ.கே. கிருஷ்ணசாமி : 'மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, தமிழ்நாட்டிலே மொத்தம் ஒன்பது ஆலைகள்தான் மூடப்பட்டிருக்கின்றன. அந்த ஒன்பது ஆலைகளில் எட்டு ஆலைகளுக்கு நிவாரணம் அளிக்கப்பட்டு விட்டது. மேட்டூரில் உள்ள ஆலையில் உள்ள தொழிலாளர்களுக்கு நிவாரணம் அளிப்பதற்காகப் பரிசீலனை செய்து விரைவில் கொடுப்பதற்கு முயற்சி எடுக்கிறோம். ஆகவே தமிழ்நாட்டில் ஒன்பது ஆலைகள் மூடப்பட்டிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கு. சுப்பராயன் : பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் அறிவித்த அறிவிப்புகள், பாதிக்கப்பட்ட தொழிலாளர்களுக்கு உதவியாக இருந்தாலும், அவரே ஒப்புக் கொண்டபடி, இது தற்காலிக உதவியாகத்தான் இருக்கிறது. நிரந்தரமான தீர்வு காண்பது என்பது அந்தப் பஞ்சாலைகளை அரசாங்கம் மேற்கொள்வது அல்லது அந்த ஆலைகளை இயங்க வைப்பது என்பதுதான். ஆனால் சம்பந்தப்பட்ட அந்த ஆலை

முதலாளிகள், அந்த ஆலைகளை இயங்க வைக்கும் நிலையில் இல்லை. சம்பந்தப்பட்ட முதலாளிகள், நிர்வாகிகளோடு தொழிலாளர் துறை நடத்திய பேச்சுவார்த்தையில் இது மிகத் தெளிவாகப் புலப்பட்டு இருக்கிறது. எனவே, பிரச்சினையின் நெருக்கடியை உணர்ந்து, மத்திய அரசை மேலும் அதிகபட்சமாக நெருக்கி, இந்தப் பிரச்சினையை, குஜராத்திற்கு உதவியதைப் போல உதவியைப் பெற்று, உடனடியாக, 31 ஆம் தேதி பாத யாத்திரை என்று இங்கே வருகின்ற நேரத்தில், மூடப்பட்ட ஆலைகள் நாட்டுடைமை ஆக்கப்படும் என்ற அறிவிப்பை அரசாங்கம் வெளியிடுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. கே. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர்களின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். அண்மையில் ஸ்டேட் லேபர் அட்வைசரி போர்டு ஸ்டாப் கூட்டம் நடந்தது. அதிலே இதற்கான விளக்கத்தை நல்கியிருக்கிறேன். இன்னும் இரண்டு மூன்று நாட்களில், மாண்புமிகு உறுப்பினர்கள் ஏதாவது கவன ஈர்ப்புத் தீர்மானம் வழங்கினால் அல்லது தனிக் கேள்வியாகக் கேட்டால் என்ன நடவடிக்கை எடுத்து இருக்கிறோம், என்ன பரிகாரம் காண இருக்கிறோம், எப்பொழுது திறக்கப்படும் என்ற விவரங்களை நிச்சயமாகச் சொல்வேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** உடுக்குறியிட்ட வினாக்கள்— விடைகள் முடிவுற்றன.

### ஆ. உடுக்குறியிடாத வினாக்கள்

### குன்னூர் கிராம ஆதி திராவிட மக்களுக்கு ஊர் சாவடி மற்றும் வானொலி அறை அமைத்தல்.

1 வினா 109—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவில்லிப்புத்தூர் தொகுதி குன்னூர் கிராம ஆதி திராவிட மக்களுக்கு ஊர் சாவடியும்,, வானொலி அறையும் கட்டிக் கொடுக்க அரசு ஆவன செய்யுமா ?

விடை.—திருவில்லிப்புத்தூர் தொகுதி, குன்னூர் கிராம ஆதிதிராவிட மக்களுக்கென்று ஏற்கனவே தனியாக ஊர் பொதுச் சாவடி உள்ளது. வானொலிப் பெட்டியும் ஆதி திராவிடர் குடியிருப்பில் ஊராட்சி வானொலி கட்டிடத்தில் உள்ளது. வானொலி அறை ஆதி திராவிடர்களுக்கென்று தனியாக கட்ட அரசிடம் திட்டம் ஏதும் தற்சமயம் இல்லை.



### வத்திராயிருப்பு—அர்ச்சுனாபுரம் சாலை.

2—வினா 113—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவில்லிப்புத்தூர் வட்டம், வத்திராயிருப்பில் இருந்து அர்ச்சுனாபுரத்திற்கு ரோடு அமைப்பதற்கு அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா—

(ஆ) இதன் மதிப்பீடு எவ்வளவு ?

விடை—(அ) ஆம்.

(ஆ) சாலை மற்றும் பாலப் பணிக்கான மொத்த மதிப்பீடு ரூ. 35 இலட்சம் ஆகும்.

### ரெங்கப்பநாய்க்கன்பட்டியில் குடிநீர் வழங்கல்.

3—வினா 122—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவில்லிப்புத்தூர் தொகுதி, வத்திராயிருப்பு ஒன்றியம், ரெங்கப்பநாயக்கன்பட்டி கிராமத்தில் உள்ள பொது மக்களுக்கு குடி தண்ணீர் பாதுகாக்கப்பட்ட ஓவர் ஹெட்டாங் மூலம் சப்ளையில், தனி வீட்டு சர்வீஸ்காரர்கள் தங்களது வீடு களில் ஆழமாக பதித்து, டேப் மூலம் பூர்த்தி செய்வதால், பொது குழாய்களில் தண்ணீர் வராமல் பாதிப்பது அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், நிவர்த்தி செய்ய அரசு எடுக்கும் நடவடிக்கை யாது ?

விடை— (அ) ஆம்.

(ஆ) குடிநீர் மேல்நிலை நீர்த்தொட்டியிலிருந்து, தற்போது ஒரு கேட் வால்வு மூலம் வீட்டு இணைப்புகளுக்கு 20 நிமிடமும், மற்றொரு கேட் வால்வு மூலம் தெருக்குழாய்களுக்கு ஒரு மணி நேரமும், குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. குழி தோண்டி வீட்டு இணைப்புக் குழாயை இறக்கி வைத்திருப்பவர்களுக்கு குழியை மூடி விட்டு முறைப்படி குழாயை அமைத்து, ஒப்பந்த விதிகளின்படி தண்ணீர் எடுக்குமாறு அறிவிப்பு கொடுக்கப்பட்டுள்ளது. தற்போது குடிநீர் விநியோகம் முறைப்படுத்தப்பட்டு, தட்டுப்பாடின்றி குடிநீர் வழங்கப்படுகிறது.

[1986 மார்ச் 21

**திருத்துறைப்பூண்டி—திருவாரூர் பேருந்து சாலையை அகலப்படுத்தல்**

4—வினா 136—திரு. பொ. உத்திராபதி: மாண்புமிகு போக்கு வரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப் பாரா—

திருத்துறைப்பூண்டியிலிருந்து திருவாரூர் வரை செல்லும் பேருந்து சாலையை அகலப்படுத்தும் திட்டம் உள்ளதா ?

விடை—வினாவில் குறிப்பிடும் சாலையில் நொடிகள் சரிபார்க்கப் பட்டு வாகனங்கள் செல்ல தகுதியாக்கப்பட்டுள்ளது. இச் சாலையை அகலப்படுத்தும் திட்டம் எதுவும் தற்போது இல்லை. மேற்படி சாலையை அகலப்படுத்தி மேம்பாடு செய்து தார் போட சுமாராக ரூ. 1 கோடி தேவைப்படுவதால், அரசின் குறுகிய நிதி வசதியில் உடனடியாக அகலப்படுத்த இயலாது. எனினும் இனிவரும் ஆண்டுகளில் அரசின் நிதிவளம், வேலையின் முக்கி யத்துவம் ஆகியவைகளை கருத்தில் கொண்டு இச்சாலையை அகலப்படுத்துதல் பற்றி பரிசீலனை செய்யப்படும்.

**திருத்துறைப்பூண்டி—மன்னார்குடி சாலையை அகலப்படுத்துதல்.**

5—வினா 139—திரு. பொ. உத்திராபதி : மாண்புமிகு போக்கு வரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப் பாரா—

(அ) திருத்துறைப்பூண்டியிலிருந்து மன்னார்குடி வரை செல்லும் பேருந்து சாலையை அகலப்படுத்துவதற்கு திட்டம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் மதிப்பீடு எவ்வளவு?

(இ) எப்பொழுது வேலை துவங்கப்படும் ?

விடை—(அ) இல்லை.

(ஆ) மற்றும் (இ) வினாவில் குறிப்பிடும் சாலையை இரு வழிப்பாதையாக அகலப்படுத்தவும் சாலையில் மூன்று இடங் களில் குறுக்கிடும் பாலங்களை அகலப்படுத்தவும் மற்றும் சிறு பாலம், மதகுகள் அகலப்படுத்தவும் உத்தேசமாக ரூ. 185.00 இலட்சம் தேவைப்படுவதால் உடனடியாக இப்பணியினை எடுத்து செய்ய இயலாது. இருப்பினும் வரும் ஆண்டுகளில் அரசின் நிதி நிலைமையைப் பொறுத்து இப்பணியினை மேற் கொள்வது பற்றி பரிசீலனை செய்யப்படும்.



1986 மார்ச் 21]

**மன்னார்குடி—முத்துப்பேட்டை பேருந்து வழித்தடம்.**

6—வினா 140—திரு. பொ. உத்திராபதி : மாண்புமிகு போக்கு வரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப் பாரா—

(அ) மன்னார்குடியிலிருந்து திருக்களர், மீனம்பநல்லூர், எடையூர் வழியாக முத்துப்பேட்டைக்கு சென்று கொண்டிருந்த பேருந்து நிறுத்தப்பட்டுள்ளதா ?

(ஆ) அதனை மீண்டும் விட அரசு நடவடிக்கை எடுக்குமா ?

விடை—

(அ) மற்றும் (ஆ) மீனம்பநல்லூருக்கும் செங்கந்திக்கும் இடையே கடுவெளி என்னும் கிராமத்தில் அமைந்துள்ள பாலம் பழுதடைந்துள்ளது. இப் பாலம் வழியே செல்ல இயலாத நிலையில் இப்பேருந்து களாப்பாலோடு நிறுத்தப்பட்டுள்ளது. பாலம் பழுது பார்த்து முடிக்கப்பட்டதும் அனுமதிக்கப்பட்ட தடத்திலேயே இப்பேருந்து இயக்கப்படும்.

**பாண்டி—கடைத் தெரு தொண்டியகாடு சாலை.**

7—வினா 141—திரு. பொ. உத்திராபதி : மாண்புமிகு போக்கு வரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

முத்துப்பேட்டை ஊராட்சி ஒன்றியம், பாண்டி கடை தெரு வில் இருந்து குன்னலூர், கீழ்பெருமழை, இடும்பவனம், கற்பக நாதர் குளம், தொண்டியகாடு பேருந்து சாலையை தார் சாலை யாக மாற்றுவதற்கு அரசிடம் திட்டம் உள்ளதா ?

விடை—

வினாவில் குறிப்பிடும் பேருந்து வழித்தட சாலையானது மூன்று சாலைகளின் பிரிவுகளாகும், அவையாவன :—

(1) பாண்டி—கற்பகநாதர்குளம் சாலை (கி. மீ. 0/0—3/2).

(2) பாண்டி—கற்பகநாதர் குளம் சாலை (கி. மீ. 3/2—8/9).

(3) கற்பகநாதர்குளம்—தொண்டியகாடு சாலை (கி.மீ. 0/0—4/6).

முதல் பகுதி நெடுஞ்சாலைத் துறையின் பராமரிப்பிலுள்ள அரசு இதர மாவட்ட சாலையாகும். இப்பகுதியில் 1984–85 ஆம் ஆண்டு பராமரிப்பு நிதியில் நொடிகள் பழுது பார்க்கப் பட்டன. மேலும் நடப்பு நிதியாண்டிலும் பராமரிப்பு நிதி யிலிருந்து சாலையை சீர் செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது.

மற்ற இரண்டு பகுதிகளும் 1981–82 ஆம் ஆண்டிற்கான பேருந்து வழித்தட ஏற்பு திட்டத்தின் கீழ் எடுத்துக்கொள்ளப் பட்டு தார் சாலையாக்கும் பணி நடைபெற்று வருகிறது.

[1986 மார்ச் 21

### கோட்டமேடு பகுதிக்குத் தெரு விளக்குகள் போடும் பணி.

8—வினா எண். 181.—திரு. செ. செம்மலை: மாண்புமிகு மின் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், தாரமங்கலம் யூனியன், கருக்கல் வாடி கிராமம் கோட்டமேடு பகுதிக்குத் தெரு விளக்குகள் போடுவதில் கால தாமதம் ஆகக் காரணம் என்ன ?

(ஆ) விரைவில் பணியினை முடிக்க எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது ?

விடை—

(அ) தெரு விளக்குகள் போடுவதற்குத் தேவையான பொருள்கள் முன்னுரிமை அடிப்படையில் விண்ணப்பம் பெறப்பட்ட தேதிக்கேற்ப ஒதுக்கீடு செய்யப்படுகிறது. சேலம் மாவட்டம், தாரமங்கலம், ஒன்றிய கருங்கல்வாடி கோட்டமேடு கிராமங்களுக்கு தெரு விளக்குகள் வேண்டி பெறப்பட்ட விண்ணப்பங்களுக்கு முன்பாகவே, மேட்டூர் திட்டத்தில் 67 விண்ணப்பங்கள் முன்னுரிமையில் உள்ளதால், இந்த கிராமங்களுக்கு அக்டோபர் 1985-க்குப் பின் தெருவிளக்குகள் வழங்கப்படும்.

(ஆ) தேவையான பொருட்கள் வாங்க தலைமை அலுவலகத்தில் ஆணைகள் பிறப்பிக்கப்பட்டு, நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

### நாகை மருத்துவமனையிலுள்ள ஆம்புலன்ஸ்.

9—வினா எண். 263—திரு. மா. மணிமாறன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாகை மருத்துவமனையில் ஆம்புலன்ஸ் இயங்கவில்லை என்பது உண்மையா ?

(ஆ) ஆம் எனில் அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

விடை—

(அ) இல்லை. தற்போது நல்ல நிலையில் இயங்குகிறது. நோயாளிகளை கொண்டு செல்ல பயன்படுகிறது.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.



1986 மார்ச் 21]

### வள்ளியூர் கூட்டுறவு சங்கப் பணியாளர்கள்.

10—வினா 331 : திரு. டி. ஆர். வேங்கடரமணன் : மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நெல்லை மாவட்டம், வள்ளியூர் கூட்டுறவு சங்கத்தைச் சார்ந்த பணியாளர்கள் கூட்டுறவு பொது விநியோகத்திற்காக வைத்திருந்த அரிசி மற்றும் சீனியை கடத்தியது உண்மையா ?

(ஆ) ஆம் எனில், அவர்கள்மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டு உள்ளது ?

விடை—(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

### சென்னித் தோட்டம் பாலத்தை புதுப்பித்தல்.

11—வினா எண். 352 : டாக்டர் தே. குமாரதாஸ் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டத்தில், தேங்கா பட்டிணம் தொடுவெட்டி சாலையில் உள்ள சென்னித் தோட்டம் பாலத்தை புதுப்பிப்பதற்கு அரசிடம் ஏதேனும் செயற் திட்டம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

விடை—(அ) இல்லை.

(ஆ) வினாவில் குறிப்பிடும் சிறு பாலம் குறுகலானதும், வலுகுறைந்தும் உள்ளது. இப்பாலத்தை புதுப்பித்து இருவழிப் பாதையாக அமைக்க தோராயமாக ரூ. 40 இலட்சம் செலவாகும். ஆனால் அரசின் குறுகிய நிதி வசதியின் காரணத்தால், இப்பணியை உடனடியாக எடுத்து செய்ய இயலாது. எனினும் இனிவரும் ஆண்டில் அரசின் நிதிநிலை, பணியில் முக்கியத்துவம் கருத்தில் கொண்டு இப்பணியினை மேற் கொள்ளுவது பற்றி பரிசீலிக்கப்படும்.

### தேங்காய் பட்டினம்—இரயமன் துறை இணைப்புப் பாலம்.

12—வினா எண். 353 : டாக்டர் தே. குமாரதாஸ் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா.—

(அ) குமரி மாவட்டத்தில்—தேங்காய் பட்டினம் இரயமன் துறை இணைப்புப் பாலம் கட்ட அரசின் செயற் குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், இத்திட்டம் எப்போது நிறைவேற்றப்படும் ?

[1986 மார்ச் 21

விடை—(அ) மற்றும் (ஆ) வினாவில் குறிப்பிட்டுள்ளபடி தேங்காய்பட்டினம் இரயமன் துறை இணைப்புப் பாலம் கட்டும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை. இருப்பினும் மேற்படி பாலத்திற்கு மாற்றாக புதுக்கடை, கொல்லங்கோடு சாலையில் தாம்பிரபரணி ஆற்றின் குறுக்கே கணபதியான் கடலில் பாலம் அமைக்கும் பணிக்கு ரூ. 80 இலட்சம் செலவில் ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் மேற்கொள்ள ஒரு திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளது. அதன் பேரில் மத்திய அரசின் ஒப்புதல் எதிர்பார்க்கப்படுகிறது.

### கன்னியாகுமரி கடற்கரை பகுதி மீனவர் குடியிருப்புகளும் இணைப்புச் சாலைகளும்.

13—வினா எண். 356 : டாக்டர் தே. குமாரதாஸ் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா.—

(அ) கன்னியாகுமரி முதல் பொழியூர் வரை இடையிலான கடற்கரை பகுதியிலுள்ள மீனவர் குடியிருப்புக்களை இணைக்கின்ற சாலைத் திட்டம் அரசின் செயற் குறிப்பில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், இத்திட்டம் எப்போது நிறைவேற்றப் படும் ?

விடை—(அ) இல்லை.

(ஆ) வினாவில் குறிப்பிட்டுள்ள பொழியூர் கிராமம் கேரளா மற்றும் தமிழ்நாடு மாநிலங்களின் எல்லையிலுள்ள நீரோடி என்னும் ஊருக்கு அப்பால் கேரள மாநிலத்தில் உள்ள கிராமமாகும். கன்னியாகுமரி முதல் நீரோடி வரை கடற்கரைப் பகுதியில் பெரும்பாலான மீனவர் குடியிருப்புகளுக்கு சாலை இணைப்புகள் உள்ளன. இச் சாலைப் பகுதிகள் பல்வேறு அரசுச் சாலைகள் மற்றும் ஊராட்சி ஒன்றிய சாலைகள் ஆகிய அமைப்பு களின் தொடர்ச்சியாக உள்ளன. இருப்பிடம் கன்னியாகுமரி முதல் நீரோடி வரை அரபிக் கடலில் கரையோரமாக ஒரே தொடர் சாலையாக அமைக்கவும் புதிய பாலங்கள் கட்டவும் புதிய சாலை இணைப்புகளை ஏற்படுத்தி பழைய சாலைகளில் சிறு பாலங்கள் புதுப்பிக்கவும் உத்தேசமாக ரூ. 915.00 லட்சம் தேவைப்படும். மேற்கண்ட பணிக்கு அதிக தொகை தேவைப் படுவதால் இப்பணியினை வரும் ஆண்டுகளில் பொருளாதாரம் மற்றும் பன் மாநில முக்கியத்துவம் வாய்ந்த திட்டத்தில் மேற் கொள்வது பற்றி பரிசீலிக்கப்படும்.



1986 மார்ச் 21]

### குழித்துறை ஆற்றின் குறுக்கே பாலம்.

14—வினா எண். 366 : டாக்டர் தே. குமாரதாஸ் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டம், குழித்துறை ஆற்றின் குறுக்கே திக்குறிச்சியில் பாலம் அமைக்கும் செயற்குறிப்பு ஏதே னும் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அது பற்றிய விவரம் என்ன?

விடை—(அ) மற்றும் (ஆ) வினாவில் குறிப்பிட்டுள்ள இடமான தேமாணர் பாலம் திக்குறிச்சி கடலின் அருகாமையில் மேற்பகுதி யில் 4.00 கி.மீ. தொலைவில் ஒன்றும், கீழ் பகுதியில் 3.00 கி.மீ. தொலைவில் நேசமணி பாலம் ஒன்றும், ஆக இரண்டு பெரிய பாலங்கள் அருகருகில் அமைந்திருப்பதால், மேலும் ஒரு புதிய பாலம் தேவையா என்பதை கருத்தில் கொண்டு முடி வெடுக்கவேண்டும். அப்படி புதிதாக பாலம் கட்டி அணுகுசாலை அமைக்கத் தோராயமாக ரூ. 100 இலட்சம் தேவைப்படும். அரசின் நிதிவளம், வேலையின் முக்கியத்துவம் ஆகியவைகளை அனுசரித்து இப்பாலம் அமைக்கும் பணியினை பற்றி இனிவரும் ஆண்டுகளில் பரிசீலனை செய்யப்படும்.

### ஏழுமலை மங்கள் ரேவு சாலை சீரமைப்பு.

15—வினா 377 : திரு. இரா. முத்தையா : மாண்புமிகு போக்கு வரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டம், ஏழுமலை மங்கள் ரேவு ரோடு பழுதடைந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில் அதனைச் சீர்படுத்த அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

விடை—(அ) இச்சாலை மலை அடிவாரத்தில் உள்ளதால் மழைக்காலங்களில் சேதமடைந்தும் அரிப்புகளால் பழுதடைந்தும் வருகின்றது.

(ஆ) இதனைச் சீர்படுத்த ஏழு இடங்களில் பாலம் அமைத்து செப்பனிட ரூ. 15 லட்சம் செலவாகும். அரசின் குறுகிய நிதிவசதியின் காரணத்தால் அபிவிருத்தி வேலைகளை உடனடியாக மேற்கொள்ள இயலாது. இருப்பினும் இனிவரும் ஆண்டுகளில் பாகம் 2 திட்டத்தின் கீழ் அரசின் நிதிவளம், வேலையின் முக்கியத்துவம் ஆகியவைகளை அனுசரித்து மேற் படி சாலை அபிவிருத்தி பணிகளை மேற்கொள்வது பற்றி பரி சீலனை செய்யப்படும்.

[1986 மார்ச் 21

**மள்ளப்புரம்—மயிலாடும்பாறை மலைச் சாலை.**

16—வினா 379 : திரு. இரா. முத்தையா: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) மதுரை மாவட்டம் மள்ளப்புரம்—மயிலாடும்பாறை மலைச் சாலை அமைக்கும் பணி அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது அத்திட்டம் நிறைவேற்றப் படும்?

விடை—(அ) ஆம்.

(ஆ) சட்டமன்ற பேரவை வினாவில் குறிப்பிடப்பட்டுள்ள சாலையின் சரியான பெயர் எம். கல்லுப்பட்டி மயிலாடும்பாறை சாலை என்பதாகும். இச்சாலை கி.மீ. 0/0-12/8 வரை சேடப்பட்டி ஊராட்சி ஒன்றியத்தாலும் கி.மீ. 12/8–8-20/8 வரை ஆண்டிப்பட்டி ஊராட்சி ஒன்றியத்தாலும் பராமரிக்கப்பட்டு வருகிறது. கி.மீ. 0/0-12/8-ல் உள்ள சேடப்பட்டி ஊராட்சி ஒன்றிய சாலை ரூ. 50 இலட்சத்திற்கு அரசால் ஒப்பளிக்கப் பட்டுள்ளது. தொழில் நுட்ப அனுமதி வழங்கப்பட்டவுடன் பணிகள் செயலாக்கத்திற்கு மேற்கொள்ளப்படும். கி.மீ. 12/8-20/8-ல் உள்ள ஆண்டிப்பட்டி ஊராட்சி ஒன்றிய சாலை அரசின் பரிசீலனையில் உள்ளது. கி.மீ. 18/10-ல் இரண்டு மூழ்கு பாலங்கள் கட்டுதல் மற்றும் கி.மீ. 16/0-17/0 மற்றும் 19/0-20/8-ல் பாதுகாப்புச் சுவர்கள் கட்டும் பணி இனிவரும் ஆண்டுகளில் அரசின் நிதி நிலைமையினைப் பொறுத்து மேற்கொள்வது சம்பந்தமாக பரிசீலிக்கப்படும்.

**கோவை நகரில் சாலைச் சந்திப்புகளில் ஒளி சமிக்ஞைகள்.**

17—வினா 420 : திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை நகரில் முக்கியமான சாலைச் சந்திப்புகளில் ஒளி சிந்தும் சமிக்ஞைகளை வைப்பதற்கு அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் யாது?

விடை—(அ) இல்லை.

**(ஆ) கேள்விக்கு இடமில்லை.**



1986 மார்ச் 21]

**திருவாடனையருகேயுள்ள பாலத்தை சீரமைத்தல்.**

18—வினா 426—திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை—தொண்டி சாலையில் திருவாடனை அருகே பழுதுபட்ட நிலையில் உள்ள பாலத்தை செப்பனிடும் செயற்குறிப்பு அரசு ஆய்வில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் யாது?

விடை—(அ) ஆம்.

(ஆ) வினாவில் குறிப்பிட்டுள்ள பாலத்தை திரும்பக் கட்டும் பணிக்கு அரசால் ஒப்புதல் அளிக்கப்பட்டு, தலைமைப் பொறியாளரால் தொழில் நுட்ப அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. இதற்கான ஒப்பந்த உடன்படிக்கை செய்யப்பட்டபின் இப்பணியினை செயல்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும்.

**பச்சைமலை மலைவாழ் மக்களுக்கான சிறப்புத் திட்டம்.**

19—வினா 442—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) திருச்சி மாவட்டத்தில் உள்ள பச்சைமலை மலைவாழ் மக்களுக்காக அரசு ஏதேனும் சிறப்பு திட்டம் தீட்டியுள்ளதா?

(ஆ) ஆம் எனில், விபரம் யாது?

விடை—(அ) திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் பச்சைமலையில் வாழும் பழங்குடியினர் நலத்திற்காக ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டம் மூலம் 1976–77-ம் ஆண்டிலிருந்து தோட்டக்கலை, கால்நடை பராமரிப்பு, மண்வளப் பாதுகாப்புமுதலிய பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப் பட்டு வருகின்றன.

[1986 மார்ச் 21

(ஆ) விபரங்கள் வருமாறு :—

| துறை. | 1976–77-ம் ஆண்டிலிருந்து 1983–84 முடிய செலவிடப் பட்டத் தொகை. ரூபாய். | அடைந்துள்ள இலக்கு. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1. தோட்டக் கலை | 7,60,000 | 2,216 ஏக்கர் நிலங்களுக்குரிய விதைகளும் பூச்சி மருந்துகளும் விநியோகிக்கப்பட்டுள்ளது. சுமார் 1,250 பழங்குடியினர் பயனடைந்து உள்ளனர். |
| 2. மண்வளப் பாதுகாப்பு. | 1,94,000 | 44.52 ஏக்கர் நிலங்கள். |
| 3. சிறுபாசனம் .. | 3,90,000 | 17, தடுப்பு அணைகள், 425 ஏக்கர் நிலங்கள். |
| 4 கால்நடை பராமரிப்பு. | 5,50,000 | 210 யூனிட் செம்மரி ஆடுகள், 105 ஜோடி காளை மாடுகள், 70 யூனிட் கன்றுகுட்டிகள், 385 பழங்குடியினர் குடும்பங்கள் 2 கிளை நிலையங்கள் (தேனூர் மற்றும் டாப் செங்காட்டுப்பட்டி). |
| 5. கிராமத் தொழில்கள். | 46,300 | 115 பழங்குடியினருக்கு கைத்தொழில்கள் ஆரம்பிக்க உபகரணங்கள் விநியோகிக்கப்பட்டுள்ளன. |
| 6. காடு வளர்ப்பு | 1,72,000 | 2,00,000 நீலகிரி தைல மரக்கன்று விநியோகிக்கப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகின்றன. |



1986 மார்ச் 21]

| துறை. | 1976-77-ம் ஆண்டிலிருந்து 1983-84 முடிய செலவிடப் பட்டத் தொகை ரூபாய் | அடைந்துள்ள இலக்கு. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 7. மருத்துவம் | .. | 1977 ஆம் ஆண்டில் டாப் செங்காட்டுப்பட்டியில் ஒரு அரசு மருத்தகம் தொடங்கப்பட்டு நடைபெற்று வருகிறது. |
| 8. கல்வி ... | 15,27,000 | 17 இடங்களில் உறைவிடப் பள்ளிகள் தொடங்கப்பட்டு வருடந்தோறும் சுமார் 800 மாணவர்கள் பயனடைந்து வருகிறார்கள். |
| 9. குடிநீர் வசதி | 2,01,600 | 14 ஆழ்குழாய் கிணறுகள் அமைக்கப்பட்டுள்ளன. |
| 10. கிராம மின்திட்டம். | 16,16,000 | 30 குக்கிராமங்களுக்கு மின்வசதி அளிக்கப்பட்டுள்ளன. |
| 11. கூட்டுறவுத் துறை | 3,34,000 | 1977 ஆம் ஆண்டு முதல் பல் நோக்கு கூட்டுறவு சங்கம் ஆரம்பிக்கப்பட்டு நடைபெற்று வருகிறது. மேலும் ஒரு சேமிப்பு அறையும் அலுவலர் குடியிருப்புகளும் கட்டப்பட்டுள்ளன. சாமான்கள் எடுத்துச் செல்ல ஒரு ஊர்தியும் வழங்கப்பட்டுள்ளது. |

| துறை. | 1976-77-ம் ஆண்டிலிருந்து 1983-84 முடிய செலவிடப்பட்ட தொகை ரூபாய். | அடைந்துள்ள இலக்கு. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 12. போக்குவரத்துத் துறை. | 1,11,000 | பச்சை மலையிலுள்ள கீழ்க்கண்ட மூன்று சாலைகளும் வனத் துறையை சார்ந்ததாகும்— (1) மூலக்காடு—செம்புவிச்சம்பட்டி சாலை. (2) சோபனாபுரம்—டாப் செங்காட்டுப்பட்டி. (3) தெனூர்—டாப் செங்காட்டுப் பட்டி. |

**ஆலந்தூர், கோயம்பேடு, மாதவரம் பகுதிகளில் லாரிகள் நிலையங்கள் அமைத்தல்.**

20—வினா 453—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு வீட்டு வசதித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை நகரின் எல்லைப் பகுதியான ஆலந்தூர், கோயம்பேடு, மாதவரம் ஆகிய இடங்களில் லாரி நிறுத்தும் இடங்கள் அமைக்க அரசு திட்டம் வகுத்துள்ளதா?

(ஆ) ஆம் எனில் அதன் விபரம் யாது?

விடை—(அ) ஆம்.

(ஆ) சென்னை மாநகரப் போக்குவரத்து நெரிசலைக் குறைக்கும் பொருட்டு நகரின் எல்லைக்கு வெளியே உள்ள வட்டச் சாலை மற்றும் சென்னையிலிருந்து பிரியும் ஒவ்வொரு தேசிய நெடுஞ்சாலையின் சந்திப்புக்கு அருகாமையில் கோயம்பேடு, நந்தம்பாக்கம் மற்றும் மாதவரம் ஆகிய மூன்று இடங்களில் பேருந்து மற்றும் லாரி நிலையங்கள் அமைக்கப்பட உள்ளன. இத்திட்டத்தை செயல்படுத்த ரூ. 331 இலட்சத்திற்கு நிர்வாக நடைமுறை ஒப்புதல் அளித்துள்ளது. இதில்



ரூ. 324 இலட்சத்தை கடனாக வழங்கவும் ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. கோயம்பேடு பகுதியில் 54 ஏக்கர் மனை லாரி நிலையம் அமைப்பதற்கு மொத்த விற்பனை அங்காடி வளாகத்தை ஒட்டி ஒதுக்கப்பட்டுள்ளது. இதில் 36 ஏக்கர் நிலம் கையகப்படுத்தப்பட்டு தாழ்வான பகுதிகளில் நில மட்டம் உயர்த்தப்படவிருக்கிறது. இத் திட்டத்திற்காக நந்தம்பாக்கத்தில் பாதுகாப்புத் துறைக்குச் சொந்தமான 52.89 ஏக்கர் நிலத்தையும், மாதவரத்தில் 79 ஏக்கர் நிலத்தையும் கையகப்படுத்தும் பணி நடைபெற்று வருகிறது.

**குரங்கணி—அகமலை சாலை.**

21—வினா 471—திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

போடி நாயக்கனூர் தொகுதியில் உள்ள குரங்கணியிலிருந்து அகமலைக்கு சாலை அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

விடை—இல்லை. குரங்கணியிலிருந்து அகமலைக்கு சாலை அமைக்கும் திட்டம் மேற்குமலைத் தொடர் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் மத்திய அரசின் நிதி ஒதுக்கீட்டுடன் மேற்கொள்ளப்பட வேண்டும். இச்சாலை அமைக்க பெரும் தொகை தேவைப்படுவதால் மாநில அரசின் நிதியில் செயல்படும் எந்த திட்டங்களிலும் உடனடியாக செயல்பாட்டிற்கு எடுத்துக் கொள்ள இயலாது.

**கோவை மத்திய சிறையில் உற்பத்தியாகும் துணிகள் மற்றும் நூல்.**

22—வினா 505—திரு. மு. இராமநாதன் : மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மத்திய சிறையில் உற்பத்தியாகும் துணிகள்-நூல் இவற்றின் ஆண்டு மதிப்பீடு எவ்வளவு ?

(ஆ) கைதிகளுக்கு இதன் மூலம் கிடைக்கும் பயன் என்னென்ன ?

விடை—(அ) 1984 ஆம் ஆண்டு (1-1-1984 முதல் 31-12-1984 முடிய) கோயம்புத்தூர் மத்திய சிறையில் உற்பத்தியான துணிகளின் மதிப்பு ரூ. 45,58,600 ஆகும். இச்சிறையில் நூல் உற்பத்தி செய்யப்படுவதில்லை.

(ஆ) (1) சிறைவாசிகளுக்கு நெசவுத் தொழிலில் நல்ல அனுபவம் ஏற்படுகிறது.

(2) நெசவுத் தொழிலில் நல்ல அனுபவம் பெறுவதினால் விடுதலை அடைந்த பின்பு ஒரு வேலையை சுயமாக தேடிக் கொள்வதற்குண்டான வாய்ப்பினைப் பெறுவதுடன் அவர்கள் வாழ்க்கையை நல்ல முறையில் அமைத்துக் கொள்ளப் பயன் படுகிறது.

(3) நெசவுப் பிரிவில் வேலை செய்யும் சிறைவாசிகளுக்கு ஊதியமும் வழங்கப்படுகிறது. கடந்த ஆண்டு (1-1-1984 முதல் 31-12-1984 முடிய) ரூ. 58,962 ஊதியமாக வழங்கப்பட்டுள்ளது.

**சாலை சந்திப்புக்களில் 'ரவுண்டானா' மற்றும் வேகத் தடைகள் அமைத்தல்.**

23—வினா 540—**திரு. ஆ. பிரேம்குமார்** : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் தேசிய நெடுஞ்சாலைகள் இதர சாலைகள் சந்திக்கும் இடங்களில் 'ரவுண்டானாவும் வேகத்தடையும்' அமைக்க நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், மதுரை மாவட்டத்தில் எங்கெங்கு அமைக்கப்பட உள்ளது ?

(இ) இதற்கான நிதி ஒதுக்கீடு எவ்வளவு ?

விடை— (அ) மைய அரசு ஒப்புதல் அளித்துள்ள 1985–86 வருடாந்திர திட்டத்தில், தமிழ் நாட்டிற்கு சாலை வளைவுகளை நேராக்குதல், சந்திப்பு இவற்றின் மேம்பாடுகளுக்காக ரூ. 30 இலட்சம் மதிப்புள்ள பணிகள் எடுத்துச்செய்யலாம். எங்கெங்கே சாலை சந்திப்புகளில் ரவுண்டானா அமைக்கப்படவுள்ளதோ அவற்றிற்கு ஒப்புதல் பெற்று பின்பு செயலாற்றப் படுகின்றன. தேசிய நெடுஞ்சாலைகளில் வேகத்தடை (Speed Breakers) வைக்க அரசு அனுமதி இல்லை. ஆனால் 'ரம்ளிங் ஸ்டிரிப்ஸ்' என்ற ஒருவகை வேகத்தடை தேவையான இடங்களில் பராமரிப்பு நிதியில் செய்யப்படுகிறது. இதற்கென தனி நிதி ஒதுக்கீடு இல்லை.



(ஆ) மதுரை மாவட்டத்தில் கீழ்க்காணும் இடங்களில் உள்ள சந்திப்புகள் சீர்படுத்தப்படுவதற்கான வடிவமைப்பிற்கு மத்திய அரசின் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது—

(1) திண்டுக்கல் புறவழிச்சாலை கி.மீ. 1/4;

(2) திண்டுக்கல் புறவழிச்சாலை கி.மீ. 6/4;

(3) திண்டுக்கல் புறவழிச்சாலை கி.மீ. 9/2;

(4) தேசிய நெடுஞ்சாலை 7-ல், கி.மீ. 357/6-ல் வட மதுரை ஒட்டன் சத்திரம் சாலை சந்திக்கும் இடம் மற்றும்.

(5) தேசிய நெடுஞ்சாலை எண் 7-ல் (பெங்களூர்—சேலம்—மதுரை சாலை), கி.மீ. 409/0-ல், பாண்டியராயன் புரம் ரயில் நிலையம் அருகே விபத்துத் தடுப்பதற்காக மேம்பாடு செய்தல் இவற்றிற்கான மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டு அவற்றிற்கு மத்திய அரசின் அங்கீகாரம் பெற்ற பிறகு அவற்றை எடுத்துக்கொள்ள ஆவன செய்யப்பட வேண்டும்.

(இ) மத்திய அரசின் பொறுப்பில் உள்ள எல்லா தேசிய நெடுஞ்சாலைகளின் மீதுள்ள பணிகளுக்காக 1985–86-க்கு ரூ. 175 இலட்சம் இதுவரை ஒதுக்கப்பட்டுள்ளது.

**நகரங்களின் வளர்ச்சிக்கு மைய அரசு நிதியுதவி.**

24—வினா 623—**திரு. இரா. தாமரைக்கனி** : மாண்புமிகு வீட்டு வசதித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1982–33 மற்றும் 1984-ஆம் ஆண்டுகளில் தமிழ் நாட்டில் உள்ள நகரங்களின் வளர்ச்சிக்கு மைய அரசு நிதி உதவி அளித்துள்ளதா ?

(ஆ) 1985 ஆம் ஆண்டுக்கு நிதி உதவி அளிக்க உத்தேசித்துள்ளதா ?

(இ) ஆம் எனில் விவரம் யாது ?

(ஈ) எந்தெந்த நகரங்கள் இவ்வுதவியை பெற்றுள்ளன ?

(உ) இன்னும் எந்தெந்த நகரங்கள் இவ்வுதவியை பெற உள்ளன ?

விடை—(அ) ஆம்.

(ஆ) ஆம்.

[1986 மார்ச் 21

(இ) 1981–82, 1982–83, 1983–84 மற்றும் 1984–85 ஆகிய ஆண்டுகளில் ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தின்கீழ் மைய அரசு கீழ்க்கண்டவாறு நிதி உதவி அளித்துள்ளது :—

| | | |
|---|---|---|
| 1981–82 | .. | 91.00 |
| 1982–83 | .. | 149.80 |
| 1983–84 | .. | 194.02 |
| 1984–85 | .. | 271.01 |

(ஈ) கீழ்க்கண்ட நகரங்கள் இவ்வுதவியைப் பெற்றுள்ளன—

1. உதகமண்டலம்
2. கரூர்
3. தர்மபுரி
4. புதுக்கோட்டை
5. திருச்செங்கோடு
6. கோபிசெட்டிபாளையம்
7. மன்னார்குடி
8. மேட்டுப்பாளையம்
9. செங்கல்பட்டு
10. குன்னூர்
11. தாராபுரம்
12. பழனி
13. ஆத்தூர்
14. திருவண்ணாமலை
15. உடுமலைப்பேட்டை
16. நாமக்கல்
17. கோவில்பட்டி
18. ஆற்காடு—ராணிப்பேட்டை—வாலாஜாபேட்டை
19. பொள்ளாச்சி
20. தேனீ—அல்லி நகரம்
21. ஓசூர்
22. நாகப்பட்டினம்
23. காரைக்குடி
24. கள்ளக்குறிச்சி
25. பண்ருட்டி
26. ஆரணி
27. சிவகங்கை.
28. அரக்கோணம்.

(உ) இந்நிதிவுதவிக்காக புதிய நகரங்களைத் தேர்ந்தெடுக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.



1986 மார்ச் 21

### சிவகங்கையில் துப்புரவுத் திட்டம்

25—வினா 641—இரா. தாமரைக்கனி : மாண்புமிகு வீட்டு வசதித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிவகங்கை நகராட்சிக்கு குறைந்த செலவிலான துப்புரவு வசதி செய்யும் திட்டத்திற்கு தமிழக அரசு கடனாக ரூபாய் வழங்கி உள்ளதா ?

(ஆ) ஆம் எனில் விவரம் யாது ?

விடை (அ) ஆம்.

(ஆ) மத்திய அரசின் ஆதரவில் நடைபெறும் ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தின் கீழ், குறைந்த செலவிலான துப்புரவுத் திட்டங்களை ரூ. 25 லட்சம் மதிப்பீட்டில் செயற்படுத்த மைய அரசு ஒப்புதல் அளித்துள்ளது. இத்திட்டங்களுக்காக முதல் தவணையாக மைய அரசு ரூ. 9.56 இலட்சமும், மாநில அரசு ரூ. 7.94 இலட்சமும் வழங்கியுள்ளன.

### சர்வராஜன்பேட்டை இணைப்புப் பாலம்.

26—வினா 682—திரு சா. ஜெயச்சந்திரன்:—மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென் ஆற்காடு மாவட்டம், காட்டுமன்னார் கோயில் வட்டம் சர்வராஜன்பேட்டை கிராமத்தை, சிதம்பரம் திருச்சி சாலையில் (நெய் வாசல் சாலைக்கு நேரில்) இணைக்க வெள்ளியங்காலில் பாலம் ஒன்று கட்ட அரசு உத்தேசித்துள்ளதா?

(ஆ) ஆம், எனில், அதன் விவரம் என்ன?

விடை—(அ) இல்லை.

(ஆ) வினாவில் குறிப்பிட்ட பாலம் கட்டப்பட வேண்டிய சாலையில் (மேல்புறத்தில் 4 கி.மீ. தொலைவிலும், கீழ்புறத்தில் 2 கி.மீ. தொலைவிலும் ஏற்கனவே இரண்டு பாலங்கள் இருப்பதாலும்) பெருந்து போக்குவரத்து தற்போது ஏதும் இல்லையாதலாலும் இது ஒரு உள்ளூர் முக்கியத்துவம் பெற்ற சாலையாக மட்டுமே இருந்து வருவதாலும், இப்பணியை நிதிநிலை வசதியானபின் எடுத்துச் செய்யப்படும்.

### வடவாற்றின் குறுக்கே பாலம்.

27—வினா 683—திரு. சா. ஜெயச்சந்திரன்: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென் ஆற்காடு மாவட்டம், காட்டுமன்னார் கோயில் வட்டம், ஈச்சம்பூண்டி கிராமத்திற்கு நேராக வடவாற்றில் குறுக்கே பாலம் ஒன்று அமைக்க அரசு உத்தேசித்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது கட்டப்படும்?

விடை—வினாவில் கோரப்பட்டுள்ள பாலம் கட்டும் இடத்திலிருந்து வடவாற்றின் கீழ்ப்படுகையில் சுமார் 11.0கி.மீ. தொலைவில் திருச்சி—சிதம்பரம் சாலை கி.மீ. 116/4ல் செங்கற்களால் கட்டப்பட்ட வளைவுக்கண்கள் பாலம் ஒன்றும், வடவாற்றின் மேல் படுகையில் சுமார் 6.00 கி.மீ. தொலைவில் வடவாறு கரைச்சாலை கி.மீ. 0/0ல் செங்கற்களால் கட்டப்பட்ட வளைவுக்கண்கள் பாலம் ஒன்றும் அமைந்துள்ளதால், இக்குறுக்கிட்டில் உடனடியாக பாலம் கட்ட வேண்டிய அவசியமில்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

### விபத்துக்குள்ளான போக்குவரத்துக் கழகப் பேருந்துகள்.

28—வினா 692—திரு. ஜே. ஹேமச்சந்திரன்: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) 1983-84-ம் வருடங்களில் ஒவ்வொரு போக்குவரத்துக் கழகத்திலும் எத்தனை பேருந்துகள் விபத்துக்குட்பட்டன?

(ஆ) அவ்விபத்துக்களில் இறந்தவர்கள் எத்தனை பேர்?

(இ) பேருந்துகளுக்கு ஏற்பட்ட சேதங்கள் எவ்வளவு?

(ஈ) விபத்தின் காரணமாக வேலை நீக்கம் செய்யப்பட்டவர்கள் எத்தனை பேர்?





விடை—

| | (அ) 1983-84-ம் ஆண்டுகளில் போக்குவரத்துக் கழகத்தில் விபத்துக்குட்பட்ட பேருந்துகளின் எண்ணிக்கை. | (ஆ) இவ்விபத்துக்களில் இறந்தவர்களின் எண்ணிக்கை. | (இ) பேருந்துகளுக்கு ஏற்பட்ட சேதங்கள். ரூபாய். | (ஈ) விபத்தின் காரணமாக வேலை நீக்கம் செய்யப்பட்ட ஓட்டுநர்களின் எண்ணிக்கை. |
|---|---|---|---|---|
| அ.போ.க. | 51 | 55 | 9,05,930.00 | 10 |
| சோ.போ.க. | 71 | 154 | 2,32,165.00 | 13 |
| சே.போ.க. | 79 | 137 | 7,87,580.48 | 18 |
| க.போ.க. | 43 | 46 | 2,58,145.22 | 12 |
| பா.போ.க. | 102 | 110 | 9,16,799.31 | 10 |
| ப.போ.க. | 98 | 101 | 3,68,032.00 | 67 |
| இ.போ.க. | 158 | 198 | 9,66,000.00 | 8 |
| த.பெ.போ.க. | 132 | 157 | 7,97,339.00 | 4 |
| நே.போ.க. | 23 | 49 | 2,46,648.08 | 8 |
| ம.பா.போ.க. | 37 | 73 | 2,66,709.39 | — |
| தீ.சி.போ.க. | 30 | 31 | 1,56,194.00 | 8 |
| ப.அ.போ.க. | 66 | 70 | 1,67,250.00 | 6 |
| ஜீ.போ.க. | 31 | 57 | 2,81,627.79 | 8 |

[1986 மார்ச் 21

**கன்னியாகுமரி மாவட்டத்தில் கிராமச் சாலைகள் பணிபூர்த்தி.**

29—வினா 698—திரு. ஜே. ஹேமச்சந்திரன்: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டத்தில் 1980க்கு முன்னால் கிராம சாலை துறையால் ஆரம்பிக்கப்பட்ட வேலைகள் ஏதேனும் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதா?

(ஆ) எத்தனை சாலை பணிகள் நிறுத்தி வைக்கப்பட்டன?

(இ) அதற்கான காரணங்கள் என்ன?

(ஈ) இச்சாலைகளைப் பூர்த்தி செய்வதற்கான திட்டம் ஏதேனும் உண்டா?

விடை—(அ) ஆம்.

(ஆ) முதற்கட்டப் பணியில் 5 சாலைகள், மூன்றாம் கட்டப் பணியில் 2 சாலைகள், நான்காம் கட்டப்பணியில் 1 சாலை ஆக மொத்தம் 8 சாலைப்பணிகள் நிறுத்திவைக்கப்பட்டன.

(இ) மற்றும் (ஈ) முதற்கட்ட 5 பணிகளும் இலஞ்ச ஒழிப்பு மற்றும் விழிப்புத்துறையினரால் புலனாய்வு செய்யப்பட்டு வந்ததால் நிறுத்தி வைக்கப்பட்டன. தற்போது இலஞ்ச ஒழிப்பு இயக்குநரின் அனுமதியுடன் சாலைப்பணிகளை முடிக்க திருத்திய மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டு வருகின்றன. மூன்றும் கட்டப்பணிகளில் ஒரு பணிக்கு நில ஆர்ஜிதம் சம்பந்தமாக தீர்ப்பு (அவார்டு) வழங்கப்பட்டு நிலம் கையகப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படுகிறது. பின்னர் மதிப்பீடுகள் தயார் செய்து வேலைகள் துவங்கப்படும் மற்ற ஒரு பணிக்கு நில ஆர்ஜித சிக்கல் தீர்ந்து, மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டு வருகின்றன. நான்காம் கட்ட பணிக்கு திருத்திய மதிப்பீட்டிற்கான செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

**சத்தியமங்கலம் கிராமத்தில் பூரான் வாய்க்காலின் குறுக்கே பாலம்.**

30—வினா 725—திரு. எஸ். இராசாராமன்: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டம், பாபநாசம் ஒன்றியம், சத்தியமங்கலம் கிராமத்தில் ஓடும் பூரான் வாய்க்காலின் குறுக்கே கட்டப்படும் பால வேலை முடிவு பெறாமல் இருப்பதை அரசு அறியுமா?



1986 மார்ச் 21]

(ஆ) ஆம் எனில், கட்டி முடிக்க அரசு எடுத்த நடவடிக்கை யாது?

விடை—(அ) மற்றும் (ஆ) வினாவில் குறிப்பிடும் பாலம் 10 ஆண்டுகளுக்கு முன் ஊராட்சி நிதியிலே கட்டப்பட்ட மூங்கில் நடைபாலம் ஆகும். தற்போது பழுதடைந்து இருக்கும் செங்கல் கட்டிட தூண்களின் மேல் புதிய மூங்கில்களால் ஆன நடைப் பாலம் தற்போது ஊராட்சி நிதியிலேயே விரைவில் கட்டி முடிக்கப்படும். இதை வண்டி பாலமாக மாற்றி கட்டுவதை ஊரக வேலை வாய்ப்பு திட்டத்தின் கீழ் நிதி ஒதுக்கீட்டிற்கு ஏற்றவாறு ஒன்றியம் மூலம் எடுத்துச் செய்யப்படும்.

**எடக்குடி கிராமத்திலிருக்கும் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி.**

31—வினா 732—திரு. எஸ். இராசாராமன்: மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டம், பாபநாசம் ஒன்றியம், திருவைகாவூர் ஊராட்சி மன்றம், எடக்குடி கிராமத்திலிருக்கும் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டி முடிக்கப்பட்டு இயங்காமல் இருப்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில் அதன் மீது அரசு நடவடிக்கை யாது?

விடை—(அ) மற்றும் (ஆ) தஞ்சை மாவட்டம், பாபநாசம் ஒன்றியம் திருவைகாவூர் ஊராட்சியைச்சார்ந்த எடக்குடி கிராமத்திலிருக்கும் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியுடன் பொருத்தப்பட்டிருந்த 'ஸ்டார்ட்டர்' 1985 ஆம் ஆண்டு மே மாதம் கடைசி வாரத்தில் பழுதானது 6–6–1985 ஆம் நாளன்று புதிய 'ஸ்டார்ட்டர்' பொருத்தப்பட்டு அத்துடன் சிறு பழுதுகளும் சீர் செய்யப்பட்டு அன்றிலிருந்து மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி நல்ல நிலையில் இயங்கி வருகிறது.

**சோலை ஆற்றின் குறுக்கே பாலம்.**

32—வினா 964—திரு. எஸ். சிவராமன்: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சின்ன சேலத்திலிருந்து பாண்டிய குப்பத்தின் வழியாக நா. குப்பம் செல்ல ''சோலை'' ஆற்றின் குறுக்கே பாலம் கட்டுவதற்கு அரசு நடவடிக்கை மேற்கொண்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் மதிப்பீடு எவ்வளவு?

விடை—(அ) மற்றும் (ஆ) இங்கு உயர்மட்டப்பாலம் கட்டி, அணுகு சாலை அமைக்க சுமார் ரூ. 10 இலட்சம் தேவைப்படும். இப்பாலம் அமைக்கும் பணி எவ்வித அங்கீகரிக்கப்பட்ட திட்டத்திலும்இடம் பெறவில்லை. அரசின் குறுகிய நிதி வசதியின் காரணத்தால் மேற்படி பாலம் கட்டும் வேலையை உடனடியாக மேற்கொள்ள இயலாது. ஆயினும், இனிவரும் ஆண்டுகளில் அரசின் நிதி வளம், வேலையில் முக்கியத்துவம் ஆகியவைகளை அனுசரித்து மேற்படி பாலப் பணியினை மேற்கொள்வது பற்றி பரிசீலனை செய்யப்படும்.

**தினக்கூலிப் பணியாளர்.**

33—வினா 970—**திரு. ஆ. நடராசன்:** மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) N.M.R. அடிப்படையில் தினக்கூலிகளாக தமிழ் நாட்டில் எவ்வளவு பேர் பணியாற்றுகிறார்கள்.

(ஆ) பொதுப் பணித் துறையில் ஏற்படும் காலியிடங்களுக்கு புதியவர்கள் நியமிக்கப்படுகிறார்களா?

(இ) ஆம் எனில் கடந்த மூன்றாண்டுகளில் ஏற்பட்ட காலியிடங்கள் எவ்வளவு?

(ஈ) நியமிக்கப்பட்டவர் எவ்வளவு?

விடை—(அ) பொதுப் பணித்துறையில் வேலையின் தன்மையைப்பொறுத்து தேவைக் கேற்றவாறு அவ்வப்போது தினக்கூலி நியமனம் செய்யப்பட்டு, பணியில் தொடரப்படுவதால் ஒரு குறிப்பிட்ட தேதியில் துறையிலுள்ள தினக்கூலிப் பணியாளரின் எண்ணிக்கையை சரியாக அறுதியிட்டு கூற இயலாது. தற்போது சுமாராக 1479 நபர்கள் பணியில் உள்ளார்கள்.

(ஆ) இத்தகைய ஒரு பணியாளர் தொகுதி ''காலியிடம்'' என்று ஏதுமில்லை. ஆதலால் காலியிடங்களில் புதியவர்கள் நியமித்தல் என்ற பிரச்சினை இல்லை.

(இ) மற்றும் (ஈ) இவ்வினாக்களுக்கு இடமில்லை.



**பூபதியூர் ஆதி திராவிடர்களுக்கு வீட்டுமனைப் பட்டாக்கள்.**

34—வினா 1030—**திரு. எம். சிவக்குமார்:** மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோத்தகிரி ஒன்றியத்திலுள்ள ஓரசோலை கிராமத்தில் வாழும் பூபதியூர் ஆதி திராவிடர்களுக்கு வீட்டுமனைப் பட்டா இன்னும் வழங்கப்படாமல் இருப்பது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில் எப்போது வழங்கப்படும்?

விடை—(அ) மற்றும் (ஆ)—நீலகிரி மாவட்டம், கோத்தகிரி வட்டம் பூபதியூர் கிராமத்தில் வசிக்கும் ஆதி திராவிடர்களுக்கு வீட்டு மனைப்பட்டா வழங்க கோத்தகிரிகிராமம் ச. எண். 410/12ல் 5 ஏக்கர் நிலம் நத்தமாக மாற்றி உத்தரவிடப் பட்டுள்ளது. வீட்டுமனைப்பட்டாக்கள் கோத்தகிரி வட்டாட்சியரால் விரைவில் வழங்கப்படும்.

**கோத்தகிரி சந்தையை விரிவாக்கும் திட்டம்.**

35—வினா 1040—**திரு. எம். சிவக்குமார்:** மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கோத்தகிரி பேரூராட்சி சந்தையை விரிவாக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

விடை—பரிசீலனையில் உள்ளது.

**அரவேணி—பேட்லாடா சாலை அமைக்கும் பணி.**

36—வினா 1045—**திரு. எம். சிவக்குமார்:** மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கோத்தகிரி ஊராட்சி ஒன்றியத்தை சேர்ந்த அரவேணியிலிருந்து பேட்லாடா கிராமம் வரை சாலை அமைக்கும் திட்டம் ஏதும் அரசிடம் உள்ளதா?

விடை—அரவேணிபட்டலாடா சாலை ஊராட்சி ஒன்றிய சாலையாகும். அதன் நீளம் 3·4 கிலோ மீட்டர் சாலையின் நிலை மன நிறைவு அளிக்கத்தக்கதாக இல்லை. அதற்கு தார் போட்டு

வெகு நாட்களாகி விட்டன. 2/4 லிருந்து 2/8 வரை செயலிடு வதற்காக ரூ. 30,000 மதிப்பீடு செய்யப்பட்டு 1984–85-ல் பணி ஒப்படைக்கப்பட்டது. பணி முடிவடையவில்லை, பணியை முடித்து தருமாறு ஒப்பந்தக்காரருக்கு அறிவிப்பு கொடுக்கப் பட்டுள்ளது என நீலகிரி மாவட்ட ஆட்சித் தலைவர் தெரி வித்துள்ளார்.

### உப்புனாற்றின் குறுக்கே பாலம்.

37—வினா 1057—திரு. கோ. வீரய்யன் : மாண்புமிகு போக்கு வரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) நாகை நகரத்திற்கும்— ஐவநல்லூருக்கும் இடையி லுள்ள உப்பனாற்றில் கல்பாலம் கட்டும் செயற் குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது கட்டப்படும் ?

விடை— (அ) உள்ளது.

(ஆ) ஐவநல்லூர்—செங்கமங்கலம்—தேயங்கலம் சாலை யில் கி.மீ. 0/2-ல் தேவநதி என்ற உப்பனாற்றின் குறுக்கே பாலம்கட்ட ரூ. 8.60 இலட்சம் செலவில் 1979-80-ம் ஆண்டு பகுதி இரண்டுத் திட்டத்தின் கீழ் இதர சாலைகள் திட்டத்தில் அரசால் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. இப்பணிக்கு நெடுஞ்சாலைத்துறைத் தலைமைப் பொறியாள ரால் திருத்திய நிர்வாக ஒப்புதல் கோரப்பட்டு அது அரசின் பரிசீலனையில் உள்ளது. திருத்திய நிர்வாக ஒப்புதல் அரசால் அளிக்கப்பட்டவுடன், நெடுஞ்சாலைத் துறைத் தலைமைப் பொறியாளரால் மேல் நடவடிக்கை எடுக்கப்படும்.

### வேப்பாடி ஆற்றின் குறுக்கே பாலம்.

38—வினா 1061—திரு. கே. அன்பழகன்: மாண்புமிகு போக்கு வரத்துத் துறை அமைச்சர் கீழ்க்சண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், ஓசூர் தொகுதியில் காடையாம் பட்டி ஒன்றியத்தில் ராமமூர்த்தி நகரில் ஓடும் வேப்பாடி ஆற்றின் குறுக்கே பாலம் கட்டப்படுமா?

விடை— சட்டமன்ற பேரவை வினாவில் குறிப்பிடும் பால மானது தருமபுரி மாவட்டம், பாப்பிரெட்டிபட்டி ஊராட்சி ஒன்றி யத்தைச் சேர்ந்த பொம்மிடி--லோக்கூர் ஊராட்சி சாலையில்



கி.மீ. 1/4-ல் வேப்பாடி ஆற்றின் குறுக்கே கட்டப்பட வேண்டும். இதற்குத் தோராயமாக ரூ. 6 இட்சம் செல வாகும். இப்பாலம் அமைக்கும் பணி எவ்வித அங்கீகரிக்கப் பட்ட திட்டத்திலும் இடம் பெறவில்லை. அரசின் குறுகிய நிதி வசதியில் மேற்படி பாலம் கட்டும் பணியினை உடனடி யாக மேற்கொள்ள இயலாது. இருப்பினும் இனிவரும் ஆண்டுகளில் பாகம் 2 திட்டத்தின் கீழ் அரசின் நிதிவளம் வேலையின் முக்கியத்துவம் ஆகியவைகளை அனுசரித்து மேற்படி பால வேலையை மேற்கொள்வது பற்றி பரிசீலனை செய்யப்படும்.

### கல்வேலிப்பட்டி குடிசை வாழ் மக்களுக்கு இலவச மின் இணைப்பு வழங்கல்.

39—வினா 1089—திரு. மெ. ஆண்டி அம்பலம் ; மாண்புமிகு மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப் பாரா—

நத்தம் தொகுதி, நத்தம் ஒன்றியம், கல்வேலிப் பட்டியில் குடிசைவாழ் மக்களுக்கு இலவச மின் இணைப்பு வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—கிராமப் பஞ்சாயத்துக்குட்பட்ட கிராமங்களிலுள்ள குடிசைகள் மட்டுமே இலவச மின்சாரம் பெறத் தகுதி யுள்ளவை, ஆனால் கல்வேலிப்பட்டி கிராமம், நத்தம் நகரப் பஞ்சாயத்தில் உள்ளதால் இத்திட்டத்திற்கு தகுதி பெற வில்லை.

### கவரயப்பட்டியில் சாலை வசதிகள்.

40—வினா 1092—திரு. மெ. ஆண்டி அம்பலம் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நத்தம் தொகுதி, நத்தம் ஒன்றியம், கவரயப்பட்டியில் சாலை வசதி செய்து தர அரசு ஆவன செய்யுமா?

விடை— நத்தம் ஊராட்சி ஒன்றியம் கவரயப்பட்டியில் சாலை வசதிசெய்வது தொடர்பாக தேசிய ஊரக வேலை வாய்ப்பு திட்டத்தின்கீழ் அரவன்குறிச்சி கவரயப்பட்டி என்ற தலைப்பில் ரூ. 60,000 மதிப்பீட்டில் சாலை வசதி செய்ய ஒதுக்கீடு கேட்டுத் திட்டம் தயார் செய்யப்பட்டு மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட அலுவலரின் அங்கீகாரத் திற்கு மதுரை கோட்ட வளர்ச்சி அதிகாரி அனுப்பியுள்ளார்.

புதூர் காலனியில் ஆழ்குழாய் அமைத்தல்.

41—வினா 1100—திரு. மெ. ஆண்டி அம்பலம் : மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நத்தம் தொகுதி, நத்தம் ஒன்றியம் புதூர் காலனியில் ஆழ்குழாய் அமைக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

விடை—இங்கு ஒரு பொதுக்கிணறு உள்ளது. மேலும் கை யிறைப்பானுடன் கூடிய ஆழ்துளைக் கிணறும் அமைக்கப் பட்டுள்ளது. குடிநீர் வசதி போதுமானதாக உள்ளதால் இங்கு புதிதாக ஆழ்குழாய் அமைக்கும் திட்டம் இல்லை.

புன்னம்பட்டி—கோவில்பட்டி சாலை.

42—வினா 1126—திரு. மெ. ஆண்டி அம்பலம் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நத்தம் தொகுதி, நத்தம் ஒன்றியம், புன்னப்பட்டி கிராமத்திலிருந்து கோவில்பட்டிக்கு புதிய சாலை ஒன்று அமைக்கும் திட்டம் ஏதும் உள்ளதா?

விடை—நத்தம் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த நத்தம் கோவில்பட்டி கைலாசநாதர் கோவில் வழியாக புன்னப்பட்டிக்கு ஒரு கிராவல் சாலை உள்ளது. சாலையின் நீளம் 3.2 கி.மீ. மதுரை நத்தம் சாலையிலிருந்து மதுக்கரைப்பட்டி செல்லும் சாலையில் 2.0 கி. மீட்டரில் புன்னப்பட்டி மற்றொரு கிராவல் சாலை உள்ளது. அதன் நீளம் 4.0கி. மீ. இச்சாலை நல்ல நிலையில் உள்ளது. மேற்படி சாலையில் தான் போக்குவரத்து மதுரை நத்தம் சாலையிலிருந்து செல்கிறது. புன்னப்பட்டியில் திண்டுக்கல் வட்டாரம் சாலை யிலிருந்து ஒரு சாலை உள்ளது. மேலும் மதுக்களப்பட்டி யிலிருந்து புன்னப்பட்டிக்கு சாலை உள்ளது. பண்ணுவார் பட்டியிலிருந்து புன்னப்பட்டிக்கு சாலை உள்ளது. ஆகை யால் புன்னப்பட்டிக்கு புதிதாக சாலை அமைக்கக்கூடிய வாய்ப்பு இல்லை என்று நத்தம் ஊராட்சி ஒன்றிய ஆணை யர் தெரிவிக்கின்றார்.

வி. குரும்பப்பட்டி உட்கடை ஆதி திராவிடர்களுக்கு வீட்டுமனைப்பட்டா வழங்கல்.

43—வினா 1134.—திரு. மெ. ஆண்டி அம்பலம் : மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நத்தம் தொகுதி சானார்பட்டி ஒன்றியம், வி. குரும்பப் பட்டி உட்கடையில் ஆதிதிராவிடர்களுக்கு வீட்டுமனைப்பட்டா வழங்கும் செயற்குறிப்பு அரசிடம் பரிசீலனையில் உள்ளதா ?



(ஆ) ஆம் எனில் எப்போது நிறைவேற்றப்படும் ?

விடை—(அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

கோட்டைப்பட்டி பிரிவுச் சாலை.

44—வினா 1139—திரு. மெ. ஆண்டி அம்பலம் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா —

நத்தம் தொகுதி நத்தம் ஒன்றியம் கோட்டைப்பட்டிப் பிரிவுச் சாலையிலிருந்து கோட்டைப்பட்டி வரை மெட்டல் ரோடு போட அரசு நடவடிக்கை ஏதும் எடுத்துள்ளதா ?

விடை—நத்தம் ஊராட்சி ஒன்றியம், கோட்டைப்பட்டி பிரிவுச் சாலையில் இருந்து, கோட்டைப்பட்டி வரை சாலை போடு வதற்கு 1985–86 ஆம் ஆண்டு தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டத்தில் செய்யப்படுவதற்கான வேலைகளில் சேர்க்கப்பட்டு திட்டம் தயார் செய்து மதுரை மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட அலுவலருக்கு அனுப்பப்பட்டுள்ளதாக கோட்ட வளர்ச்சி அலுவலர் தெரிவித்துள்ளார்.

திருப்பூர் அரசினர் மருத்துவ மனை வெளி நோயாளிகள் பிரிவு.

45—வினா 1171—திரு. கு. சுப்பராயன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

திருப்பூர் பழைய அரசினர் மருத்துவமனையை வெளி நோயாளிகள் மற்றும் அவசர சிகிச்சை பிரிவு என்ற அடிப்படை யில் நிரந்தரமாக இயங்க வைக்கும் திட்டத்தை அரசு பரிசீலிக்குமா ?

விடை—திருப்பூர் பழைய அரசினர் மருத்துவமனையில் வெளி நோயாளிகள் பிரிவு மட்டும் செயல்படுகிறது. சிறப்புத்துறை மருத்துவ வசதிகளும் மற்ற பிற ஏனைய வசதிகளும் புதிய மருத்துவ மனையில் உள்ளதால் அவசர சிகிச்சைப் பிரிவை பழைய மருத்துவ மனைக்கு மாற்றுவது இயலாது.

திரு. வி. க. கலைக் கல்லூரி மாணவர்கள் விடுதி.

46—வினா 1443—திரு. ஜே. ஹேமச்சந்திரன், மாண்புமிகு திரு. எம். செல்லமுத்து : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவாரூரிலுள்ள திரு. வி. க. கலைக் கல்லூரி மாணவர்கள் தங்கும் பொது விடுதி, சுற்றுச்சுவர், கூடுதல் கட்டிட வசதி கோரி ஏதேனும் கோரிக்கை வந்துள்ளதா ?

(ஆ) ஆமெனில், அரசு மேற்கொண்ட நடவடிக்கை யாது?

விடை :—(அ) இல்லை,

(ஆ) இக்கேள்வி எழவில்லை.

திருவாரூர் அரசு கால்நடை மருத்துவ மனை.

47—வினா 1459—திரு. எம். செல்லமுத்து, திரு. கோ. வீரய்யன் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவாரூர் அரசு கால்நடை மருத்துவ மனைக்கு சுற்றுச் சுவர் மற்றும் கூடுதல் கட்டிட வசதி கோரி அரசுக்கு முறையீடு வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அரசு அதன் மீது எடுத்த நடவடிக்கை என்ன ?

(விடை —(அ) ஆம்.

(ஆ) திருவாரூர் நகரிலுள்ள கால்நடை மருத்துவ மனைக்கு சுற்றுப்புற சுவர் எழுப்புவதற்கு பொதுப் பணித் துறையினரிடமிருந்து மதிப்பீடு பெற்று தஞ்சாவூர் கால்நடை பராமரிப்புத் துறை இணை இயக்குநர் அனுப்பியுள்ள பிரேரணை கால்நடை பராமரிப்புத் துறை இயக்குநரால் பரிசீலிக்கப்பட்டு மதிப்பீட்டுத் தொகை மீது சில விளக்கங்கள் அனுப்ப தஞ்சாவூர் கால்நடை பராமரிப்புத் துறை மண்டல இணை இயக்குநர் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளார். மேலும் கால்நடை மருத்துவ மனைக்கு செய்யப்பட வேண்டியுள்ள இதர பணிகளுக்கான வரை படம் மற்றும் மதிப்பீட்டினைப் பெற பொதுப் பணித் துறையினரிடம் தொடர்பு கொண்டுள்ளதாகவும், அவற்றைப் பெற்று விரைவில் அங்கீகாரம் பெற அனுப்புவதாகவும், தஞ்சா ஊர் கால்நடை பராமரிப்புத் துறை மண்டல இணை இயக்குநர் தெரிவித்துள்ளார்.



கும்பகோணத்தில் கொசு ஒழிப்பு தீவிரத் திட்டம்.

48—வினா 1478—திரு. கி. கிருஷ்ணமூர்த்தி : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கும்பகோணத்தில் கொசுவை ஒழிக்க தீவிரத் திட்டம் ஏதேனும் வகுத்துள்ளதா ?

விடை :—

கும்பகோணம் நகராட்சியில் கொசுப்புழு கொல்லும் பணி தேசிய யானைக்கால் ஒழிப்பு திட்ட சிப்பந்திகளாலும், நகராட்சி சிப்பந்திகளாலும் செயல்படுத்தப்பட்டு வருகிறது. கொசுப் புழுக்களையும் கொசுக்களையும் பிடித்து பரிசோதிக்கும் பணியினை களப்பணியாளர்கள் மேற்பார்வை பணியுடன் சேர்ந்து செய்து வருகின்றனர்.

பெரியாம்பட்டியில் மின்வாரிய இளநிலைப் பொறியாளர் அலுவலகம்.

49—வினா 1514—திரு. எச். ஜி. ஆறுமுகம் : மாண்புமிகு மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தர்மபுரி மாவட்டம், பெரியாம்பட்டியில் மின்வாரிய இளநிலைப் பொறியாளர் அலுவலகம் திறக்கும் உத்தேசம் அரசுக்கு உள்ளதா ?

விடை :—இல்லை.

புலவன் குடியிருப்பு, கூனியூர் கிராம அரிசன மக்களுக்கு வீடுகள்.

50—வினா 1522—மாண்புமிகு வேடசந்தூர் திரு. வி. பி. பாலசுப்பிரமணியன் பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், சேரன்மாதேவி ஒன்றியத்தைச் சேர்ந்த புலவன்குடியிருப்பு, கூனியூர் கிராமம் ஆகிய பகுதிகளில் வசிக்கும் அரிசன மக்களிடமிருந்து வீடுகட்டிக் கொடுக்கக் கேட்டு மனு ஏதேனும் வந்துள்ளதா ?

(ஆ) அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?

விடை :—(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

[1986 மார்ச் 21

## கள்ளில் கலப்படம்

51—வினா 1766—திரு. கோ. இரகுபதி : மாண்புமிகு ஆயத் தீர்வை, கைத்தறி மற்றும் நெசவாலைத்துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கள்ளில் கலப்படம் செய்பவர் மீது நடவடிக்கை எடுக் கப்படுகிறதா ?

(ஆ) ஆம் எனில் எவ்வளவு பேர்மீது நடவடிக்கை எடுக்கப் பட்டது ?

விடை :—(அ) ஆம்.

(ஆ) தர்மபுரி மாவட்டத்தில் ஒரு நபர் மீதும், வட ஆற்காடு மாவட்டத்தில் 17 நபர்கள் மீதும், சென்னையில் 4 நபர்கள் மீதும், செங்கற்பட்டு மாவட்டத்தில் 7 நபர்கள் மீதும், கன்னியாகுமரி மாவட்டத்தில் 23 நபர்கள் மீதும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

பிற மாவட்டங்களில் கள்ளில் கலப்படம் இருக்கிறதா என்பது கண்காணிக்கப்படுகிறது. இரசாயனப் பரிசோதனைக்கு அனுப்பப்பட்ட கள் மாதிரிகளில் கலப்படம் இருப்பதாகப் பரி சோதனையில் தென்படாததினால் நடவடிக்கை எடுக்கவில்லை.

## திருச்சி தந்தை பெரியார் கல்லூரிக் கட்டிடம்.

52—வினா 2063—திரு. க. சோலைராசு : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சி தந்தை பெரியார் கல்லூரியில் இரண்டாவது மாடி கட்டும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது தொடங்கப் பெறும் ?

விடை :—(அ) இல்லை.

(ஆ) எழவில்லை.

53—வினா 2064—திரு. க. சோலைராசு : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சி தந்தை பெரியார் கல்லூரியில் நூலகம், கலை யரங்கம் கட்ட அரசு உத்தேசித்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில் எப்போது தொடங்கப்பெறும் ?

விடை —(அ) இல்லை.

(ஆ) இக்கேள்வி எழவில்லை.



1986 மார்ச் 21]

## மேலூர் தொகுதியில் பழப் பண்ணைகள்.

54—வினா 2309—திரு. க. வெ. வீரானம்பலம் : மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மேலூர் தொகுதி மேலூர் மற்றும் கொட்டம்பட்டியில் பழப்பண்ணைகள் அமைக்க அரசிடம் திட்டம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில் அதன் விவரம் என்ன ?

விடை —(அ) இல்லை.

(ஆ) எழாது.

## பள்ளப்பட்டி கிராமப் புறம்போக்கு நிலத்தில் முந்திரி பயிரிடல்.

55—வினா 2312—திரு. க. வெ. வீரானம்பலம் : மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மேலூர் தொகுதி கொட்டாம்பட்டி ஊராட்சி ஒன்றியம் பள்ளப்பட்டி கிராமத்தில் உள்ள அரசு புறம்போக்கு நிலத்தில் முந்திரிப் பயிரிட அரசு நடவடிக்கைகள் ஏதும் மேற் கொண்டுள் ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன ?

விடை:. (அ) இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

## திருப்பூர் கிளைச் சிறைச் சாலையின் அறைகள்.

56—வினா 2389—திரு. கு. சுப்பராயன்: மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருப்பூர் கிளைச் சிறைச் சாலையில் அறைகளை சுகாதாரக் கேடின்றி வைத்துக் கொள்ள எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது?

விடை—திருப்பூர் கிளைச் சிறைச்சாலையில் பெண் சிறை வாசி களுக்கு குளியல் அறை மற்றும் நீரடிக் கழிப்பிடங்கள், சுற்றுச் சுவர், கிணற்றினை ஆழப்படுத்துதல், மோட்டார் அமைத்து தண்ணீர் மற்றும் சுகாதார வசதி ஏற்படுத்துதல் மற்றும் மின்

இணைப்பு அளித்தல் ஆகிய பணிகளுக்காக 9-4-1983 இல், ரூபாய் 1.95 இலட்சத்திற்கு அரசு ஒப்பளித்துள்ளது. இந்தப் பணிகள் யாவும் பொதுப் பணித்துறையினரால் எடுத்து முடிக்கப்பட்டு விட்டது. மேலும், சிறைவாசிகளின் பகல் நேர உபயோகத்திற்காக சிறை அறைகளில் வெளியே நீரடிக் கழிப் பிடங்கள் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளது. கிணறு ஆழப் படுத்தப்பட்டு, அங்கு நீர் இறைக்கும் இயந்திரமும் அமைக்கப் பட்டு, தண்ணீர் அளிக்கப்பட்டு வரப்படுகின்றது. ஆகவே, கிளைச் சிறை திருப்பூரில் சுகாதார வசதி நன் முறையில் ஏற் படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளது. அங்கு சுகாதாரக் கேடு எழுவதற்கு தற்போது வாய்ப்பு ஏதும் இல்லை.

(2) மேலும், சிறை அறைகளில் இரவு நேர அவசர உப யோகத்திற்காக நீரடிக் கழிப்பிடங்கள் அமைத்துக் கொடுத்திட பொதுப் பணித் துறையினரிடம் திட்ட மதிப்பீடுகள் சிறைத் துறைத் தலைவரால் கோரப்பட்டுள்ளது. அவை கிடைக்கப் பெற்றதும் மாநிலத்தின் நிதி நிலைமையைப் பொறுத்து உரிய நடவடிக்கை மேற் கொள்ளப்படும்.

**திருவையாறு அரசர் தமிழ்க்கல்லூரி மாணவியர் விடுதிக்காப்பாளர்.**

57—வினா 2418—திரு. எஸ். இராசாராமன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவையாறு அரசர் தமிழ்க் கல்லூரியிலுள்ள மாண வியர் விடுதிக்குப் பெண் விடுதிக் காப்பாளர் நியமிக்காமல் இருப்பது அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், இது குறித்து அரசின் நடவடிக்கை யாது ?

விடை—(அ) மற்றும் (ஆ) கல்லூரி நிர்வாகத்தின்கீழ் உள்ள திருவையாறு கல்யாணமகால் சத்திரம் உணவு விடுதிக்கு முழு நேர பெண் விடுதி காப்பாளர் நியமனம் செய்யப்பட்டு 29-7-1985 முதல் பணியாற்றி வருவதாக திருவையாறு அரசர் கல்லூரிச் செயலாளர் தெரிவித்துள்ளார்.

**கும்பகோணம் நகரில் குடிசைப்பகுதி மாற்றுப் பணிகள்.**

58—வினா 2463 —திரு. எஸ். இராசாராமன், மற்றும் திரு. இ. [illegible]மூர்த்தி : மாண்புமிகு வீட்டு வசதித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கும்பகோணம் நகரில் குடிசை மாற்று வாரியம் மூலம் குடியிருப்புகள் கட்ட திட்டம் ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?



(ஆ) ஆம் எனில், அதன் மதிப்பீடு எவ்வளவு ?

(இ) எப்பொழுது வேலை துவங்கப்பெறும்?

விடை—(அ) ஆம்.

(ஆ) மற்றும் (இ) பழைய மீன் அங்காடி திட்டப் பகுதியில் ரூபாய் 20.02 இலட்சங்கள் செலவில் 120 குடியிருப்புகள் கட்ட திட்டமிடப்பட்டுள்ளது. இது குறித்த தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்தின் செயற் குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

**கதர்த் துணி விற்பனை.**

59—வினா 2466—திரு. எஸ். இராசாராமன் : மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1983-84, 1984-85 ஆம் ஆண்டுகளில் எவ்வளவு கதர் துணிகள் விற்பனை செய்யப்பட்டன ?

(ஆ) மத்திய அரசு மற்றும் மாநில அரசு வழங்கிய, சிறப்புத் தள்ளுபடி தொகை எவ்வளவு ?

விடை—(அ) 1983-84, 1984-85 ஆம் ஆண்டுகளில் தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தால் விற்பனை செய்யப்பட்ட கதர் துணிகளின் விவரம் வருமாறு :—

(ரூபாய் இலட்சத்தில்.)

| | |
|---|---|
| 1983-84 .. .. .. | 10,78.65 |
| 1984-85 .. .. .. | 10,74.78 |

(ஆ) மத்திய அரசு மற்றும் மாநில அரசு வழங்கிய சிறப்புத் தள்ளுபடி தொகை :—

| | ரூபாய். |
|---|---|
| **1983-84.** | |
| மத்திய அரசு வழங்கிய சிறப்பு தள்ளுபடி தொகை. | 2,64,43,634.55 |
| மாநில அரசு வழங்கிய சிறப்பு தள்ளுபடி தொகை. | 57,82,256.94 |
| **1984-85.** | |
| மத்திய அரசு வழங்கிய சிறப்பு தள்ளுபடி தொகை. | 2,10,55,982.84 |
| மாநில அரசு வழங்கிய சிறப்பு தள்ளுபடி தொகை. | 1,43,84,000.00 |

[1986 மார்ச் 21

## வேடசந்தூர் வட்டத்தில் ஆதிதிராவிடர்களுக்கு மனைப்பட்டாக்கள்

60—வினா 2474—மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்): மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1980 ஆம் ஆண்டிலிருந்து 1984 ஆம் ஆண்டு முடிய வேடசந்தூர் தாலுக்காவில் ஆதிதிராவிடர்களுக்கு வீட்டு மனைப் பட்டாவிற்காக நில ஆர்ஜித நடவடிக்கை எந்தெந்த கிராமங்களில் முடிக்கப்பட்டு பட்டா வழங்கப்பட்டது ?

(ஆ) பட்டா வழங்கிய விவரம் கிராமவாரியாக எவ்வளவு ?

விடை—(அ) மற்றும் (ஆ) : வேடசந்தூர் தாலுக்காவில் 1980 ஆம் ஆண்டிலிருந்து 1984 ஆம் ஆண்டு வரை ஆதிதிராவிடர்களுக்கு வீட்டுமனைக்காக நில ஆர்ஜிதம் செய்து பட்டா வழங்கிய விவரங்கள் கிராமவாரியாக கீழே கொடுக்கப்பட்டுள்ளன :

| வருடம். | கிராமம். | பட்டா வழங்கப்பட்ட பயனாளிகள் எண்ணிக்கை. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1980 | வடக்குத்தனிப்பட்டி | 25 |
| 1980 | நத்தப்பட்டி | 17 |
| 1980–81 | வக்கம்பட்டி | 8 |
| 1980–81 | இடையபட்டி | 11 |
| 1980–81 | கொட்டணப்பட்டி | 31 |
| | ஆலப்புரம் | 30 |
| 1980–81 | வள்ளிப்பட்டி | 11 |
| 1980–81 | ஒட்டநாகம்பட்டி | 25 |
| 1981–82 | பொன்னம்பட்டி | 27 |
| 1981–82 | பாகநத்தம் | 39 |
| 1982–83 | வேலாயுதம்பாளையம் | 12 |
| 1982–83 | கருக்காம்பட்டி | 24 |
| 1982–83 | உசிலம்பட்டி | 28 |
| 1982–83 | அச்சனம்பட்டி | 10 |
| 1983–84 | கானப்பாடி | 30 |
| 1983–84 | செங்குத்துப்பட்டி | 44 |
| 1983–84 | அழகிரிகவுண்டன்குளம் | 10 |
| 1983–84 | கொசவப்பட்டி | 22 |
| 1983–84 | காக்காம்பட்டி | 31 |
| 1984 | சித்தூர் | 16 |
| | மொத்தம் | 459 |



1986 மார்ச் 21]

61—வினா 2475—மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்): மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேடசந்தூர் தாலுக்காவில் ஆதிதிராவிடர்களுக்கு வீட்டுமனைப்பட்டா கொடுப்பதற்கு எத்தனை கிராமங்களில் நில ஆர்சித நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு நடவடிக்கையில் உள்ளது ?

(ஆ) அதன் விவரங்கள் என்ன ?

விடை—(அ) மற்றும் (ஆ) : கீழ்க்கண்ட 12 கிராமங்களில் நில ஆர்ஜித நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன :—

| கிராமத்தின் பெயர். | வீட்டுமனை பெறுவோரின் எண்ணிக்கை. |
|---|---|
| (1) | (2) |
| 1. கணக்குப்பிள்ளையூர் | 30 |
| 2. பாடியூர் | 30 |
| 3. கருங்குளத்துப்பட்டி | 37 |
| 4. ராஜக்காபட்டி | 29 |
| 5. கூளக்கவுண்டன்பட்டி | 18 |
| 6. அய்யலூர் | 25 |
| 7. தோட்டணம்பட்டி | 31 |
| 8. தோளிப்பட்டி | 20 |
| 9. வேடபட்டி | 22 |
| 10. வெள்ளையம்பட்டி | 60 |
| 11. கோப்பம்பட்டி (கொல்லபட்டி) | 18 |
| 12. கல்குளம் (பிலாத்து) | 30 |
| மொத்தம் | 350 |

[1986 மார்ச் 21

### திருவில்லிபுத்தூர் தொகுதியில் வழங்கப்பட்ட தையல் இயந்திரங்கள்

62—வினா 2494—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவில்லிப்புத்தூர் தொகுதியில் 1977 முதல் 1984 ஆம் ஆண்டுகள் முடிய எத்தனை விதவைகளுக்கு தையல் மிஷின் கொடுக்கப்பட்டது ?

(ஆ) எந்த தகுதி அடிப்படையில் கொடுக்கப்படுகிறது ?

விடை—(அ) திருவில்லிப்புத்தூர் தொகுதியில் 1977 முதல் 1984 ஆம் ஆண்டுகள் முடிய 12 (பன்னிரண்டு) விதவைகளுக்குத் தையல் இயந்திரங்கள் கொடுக்கப்பட்டுள்ளன.

(ஆ) தகுதி—

வயது வரம்பு : 20 முதல் 40 வயது வரையுள்ள விதவைகள்.

ஆண்டு வருமானம் : ரூ. 2,400-க்கு குறைவாக ஆண்டு வருமானம் பெறும் விதவைகள்.

தையல் தைக்க தெரிந்தவர்களாக இருத்தல் வேண்டும்.

### நாளுக்கு ஒரு முறை பரிசுச்சீட்டு குலுக்கல்.

63—வினா 2544—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் பரிசுச் சீட்டு குலுக்கலை நாள் ஒன்றுக்கு ஒருமுறை நடத்துவது குறித்து அரசு பரிசீலித்து வருகிறதா ?

(ஆ) ஆம் எனில் விவரம் யாது ?

விடை—(அ) அரசு பரிசீலனையில் இல்லை.

(ஆ) எழவில்லை.



1986 மார்ச் 21]

### வத்திராயிருப்பு ஆதிதிராவிடர் ஆடு வளர்ப்போர் சங்கம்.

64—வினா 2545—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவில்லிப்புத்தூர் தொகுதி, வத்திராயிருப்பு ஒன்றி யம், சேதுநாராயணபுரம் ஆதி திராவிடர்—ஆடு வளர்ப்புச் சங்கத்தில் எல்லையில் இருந்து பிரித்து வத்திராயிருப்பு ஆதி திராவிடர்களுக்காக புதிய ஆடு வளர்ப்பு சங்கம் அமைக்க அரசு ஆணைப் பிறப்பிக்குமா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது முதல் செயல்படும் ?

விடை—(அ) மற்றும் (ஆ): தற்போதுள்ள சேதுநாராயணபுரம் ஆதி திராவிடர் ஆடு வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கம் வத்திரா யிருப்புப் பகுதியைத் தனியே பிரிக்கத் தேவையான தீர்மானம் நிறைவேற்றினால், ஆதிதிராவிடர்களுக்காக புதிய ஆடு வளர்ப் போர் கூட்டுறவுச் சங்கம் அமைப்பது பற்றி நடவடிக்கை எடுக்கப் படும்.

### தமிழக ஏழாவது ஐந்தாண்டுத் திட்ட ஒதுக்கீடு.

65—வினா 2580—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழக 7-வது ஐந்தாண்டு திட்டத்தின்கீழ் 1985ஆம் ஆண்டு எத்தனை கோடி ரூபாய் செலவழிக்க திட்டக் குழு வுடன் மாநில அதிகாரிகள்தரப்பு பேச்சு வார்த்தையில் டில்லி யில் முடிவு செய்யப்பட்டது ?

(ஆ) திட்டம் வாரியாக செலவிடப்படும் தொகை யாது ?

விடை—(அ) மாண்புமிகு முதலமைச்சர் திட்டக் குழுத் துணைத் தலைவருடன் நடத்திய பேச்சு வார்த்தையின் பலனாக தமிழ கத்தின் ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்திற்கு 5,750 கோடி ரூபாய் செலவழிக்க மத்தியத் திட்டக் குழு ஒப்புக் கொண்டுள்ளது. இதைத் தவிர மலைப் பிரதேச மேம்பாட்டு திட்டம் மற்றும் மேற்குத் தொடர்ச்சி மலைத் திட்டத்திற்கு ரூபாய் 54 கோடி இவ்வைந்தாண்டுத் திட்டக் காலத்தில் செல வழிக்கவும் மத்தியத் திட்டக் குழு ஒப்புதல் அளித்துள்ளது. நடப்பு ஆண்டுத் திட்டத்திற்கு (1985–86) ரூபாய் 960 கோடி, மலைப் பிரதேச மேம்பாடு மற்றும் மேற்குத் தொடர்ச்சி மலைத் திட்டத்திற்கு தனியாக பத்துக் கோடியும் செலவிட

[1986 மார்ச் 21

மத்திய திட்டக் குழு ஒப்புதல் அளித்துள்ளது. ஏழாவது ஐந்
தாண்டுத் திட்டத்திற்கும் நடப்பு ஆண்டுத் திட்டத்திற்கும்
மத்தியத் திட்டக் குழு ஒப்புதல் அளித்த திட்ட நிதி ஒதுக்கீடு
அளவை அரசு ஏற்றுக்கொண்டுள்ளது.

(ஆ) ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்திற்கும், நடப்பு
ஆண்டுத் திட்டத்திற்கும் (1985–86) பல்வேறு வளர்ச்சித்
தலைப்பின்கீழ் செலவழிக்கும் பொருட்டு மத்தியத் திட்டக்
குழு ஒப்புதல் அளித்துள்ள நிதி ஒதுக்கீடு பற்றிய விவரங்கள்
இணைப்பு * கொடுக்கப்பட்டுள்ளன.

முசிறி அறிஞர் அண்ணா அரசு கலைக் கல்லூரியில்
மேல்நிலைப் பட்டப் படிப்பு.

66—வினா 2719—திரு. க சோலைராசு : மாண்புமிகு கல்வி
அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சி மாவட்டம் முசிறி அறிஞர் அண்ணா அரசு
கலைக் கல்லூரியில் '' மேல் நிலைப் பட்டப் படிப்பு ''தொடங்க
உத்தேசம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், என்ன துறைகள் ஆரம்பிக்கப்பட
உள்ளது ?

விடை—(அ) இல்லை.

(ஆ) இக்கேள்வி எழவில்லை.

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் மூலம் நெல் கொள்முதல்.

67—வினா 2750—திரு. கி. கிருஷ்ணமூர்த்தி : மாண்புமிகு
உணவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்
பாரா—

(அ) தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் கடந்த
குறுவையில் தமிழ்நாட்டில் எவ்வளவு நெல் கொள்முதல்
செய்துள்ளது ?

(ஆ) கொள்முதல் செய்துள்ள நெல்லை சேமித்து வைக்க
அதனிடம் கிடங்கு வசதியுள்ளதா ?

விடை—(அ) கடந்த குறுவை பருவத்தில் தமிழ்நாட்டில்
6,13,959 (ஆறு லட்சத்து பதின்மூன்றாயிரத்து தொள்ளாயிரத்து
ஐம்பத் தொன்பது) டன்கள் நெல் தமிழ்நாடு நுகர் பொருள்
வாணிபக் கழகத்தால் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது.

---

* 579–582 பக்கங்களில் இணைப்பாக அச்சிடப்பெற்றுள்ளது



1986 மார்ச் 21]

(ஆ) தஞ்சை மாவட்டத்தில் கொள்முதல் செய்யும்
நெல்லை அந்த மாவட்டத்தில் சேமித்து வைப்பதற்கு தற்போது
போதிய கிடங்கு வசதி இல்லாமையால் மேற்படி நெல்லை
அடுத்த மாவட்டங்களுக்கு லாரிகள் மற்றும் வேன்கள் மூலமாக
எடுத்துச் சென்று சேமித்து வைக்கப்படுகிறது. கொள்முதல்
செய்யப்பட்ட நெல்லின் ஒரு சிறு பகுதி திறந்த வெளிக் கிடங்கு
களில் வைக்கப்பட்டுள்ளது. மேலும் போதிய கிடங்கு வசதிகளை
ஏற்படுத்த தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் மூலமாக
வும், தமிழ்நாடு சேமிப்பு கிடங்கு நிறுவனம் மூலமாகவும்
ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகிறது. கிடங்கு வசதி
பற்றாக்குறையை பூர்த்தி செய்யும் பொருட்டு VIIவது ஐந்தாண்டு
திட்டக் காலத்தில் 50 நேரடிக் கொள்முதல் நிலையங்கள் கட்ட
உத்தேசிக்கப்பட்டுள்ளது. முதற்கட்டமாக 1985–86 ஆம்
ஆண்டில் தஞ்சை மாவட்டத்தில் 400 டன்கள் நெல் சேமித்து
வைக்கும் வசதியுடன் கூடிய 5 நேரடிக் கொள்முதல் நிலையங்கள்
கட்ட அரசு திட்டமிட்டுள்ளது. இவையில்லாமல் VII-வது
ஐந்தாண்டுத் திட்டகாலத்தில் 2 இலட்சம் மெட்ரிக் டன்
கொள்திறன் கொண்ட சேமிப்பு கிடங்குகள் (தஞ்சை மாவட்டத்
தில் சுமார் 24,000 மெட்ரிக் டன் கொள்திறன் கொண்ட
சேமிப்பு கிடங்குகள் உட்பட) கட்டுவதற்கான தமிழ்நாடு
சேமிப்பு கிடங்கு நிறுவனத்தின் திட்டம் மத்திய திட்டக் குழு
விற்கு அனுப்பப்பட்டு அரசின் பரிசீலனையில் உள்ளது.

சென்னை-தாம்பரம் இரவு நேரப் பேருந்துகள்.

68—வினா 2757—திரு. எல்ல. இராசமாணிக்கம் : மாண்புமிகு
போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு
விடையளிப்பாரா—

(அ) சென்னை-தாம்பரம் இரவு நேர பேருந்துகளின்
எண்ணிக்கையை அதிகரிக்க அரசிடம் திட்டம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விவரம் யாது ?

விடை—இப்பொழுது இவ்வழித்தடத்தில் இயக்கப்படும் இரண்டு
இரவு நேரப் பேருந்துகளில் அதிக கூட்டம் இல்லாததால்
பேருந்துகளை அதிகரிக்கும் உத்தேசம் இல்லை.

பட்டுக்கோட்டையில் புதிய பெண்கள் கலைக் கல்லூரி மற்றும் தொழில்
நுட்பக் கல்விக் கூடம்.

69—வினா 2784—திரு. ப. ந. இராமச்சந்திரன் : மாண்புமிகு
கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பட்டுக்கோட்டையில் புதிய பெண்கள் கலைக்
கல்லூரி, பெண்கள் தொழில் நுட்பக் கல்விக் கூடம் ஆரம்
பிக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன ?

விடை—(அ) இல்லை.

(ஆ) இக்கேள்வி எழவில்லை.

[1986 மார்ச் 21

காசங்காடு அரசினர் உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக்கல்.

70—வினா 2786—திரு. ப. ந. இராமச்சந்திரன்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காசங்காடு (பட்டுக்கோட்டை) அரசினர் உயர் நிலைப் பள்ளியை மேனிலைப்பள்ளியாக உயர்த்தும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன ?

விடை—(அ) மற்றும் (ஆ): தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை காசங்காடு அரசினர் உயர்நிலைப் பள்ளி, 1985–86ஆம் ஆண்டிலிருந்து மேனிலைப் பள்ளியாக உயர்த்தப் பட்டுள்ளது.

காளான்கள் பயிரிட பயிற்சி நிலையங்கள்.

71—வினா 2899— திருமதி பா. வளர்மதி : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

தமிழகத்தில் காளான்களை ( MUSHROOM ) பயிர் செய்வதற்கு, பயிற்சி நிலையங்கள் அமைக்க அரசிடம் திட்டம் உள்ளதா?

விடை—ஏதும் இல்லை.

சட்டக் கல்லூரி மாணவர் விடுதிகளுக்குச் சொந்தக் கட்டிடங்கள்.

72—வினா 2911—திருமதி பா. வளர்மதி : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழகத்தில் உள்ள சட்டக்கல்லூரி மாணவர்கள் விடுதி களுக்குச் சொந்தமான கட்டிடங்கள் கட்டும் கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

விடை—தமிழகத்தில் உள்ள சட்டக் கல்லூரிகளில் சென்னை சட்டக் கல்லூரிக்கு மாணவர் மாணவியருக்கு தனித்தனியே விடுதிகள் சொந்தக் கட்டிடங்களில் இயங்கி வருகின்றன. மதுரையில் மாணவியர் விடுதி இவ்வாண்டு முதல் செயல் படுகிறது. மாணவர் விடுதிக்கு நிலம் கையகப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. திருச்சியிலும் கோவையிலும் கல்லூரி மற்றும் விடுதிக் கட்டிடங்கள் கட்ட நிலம் கையகப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.



1986 மார்ச் 21]

பள்ளிப்பட்டு வட்டத்தில் ஊரக நிலமற்றோர் வேலை வாய்ப்பு உறுதித் திட்டப் பணிகள்.

73—வினா 2920—திரு. பூ. மு. நரசிம்மன்: மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கை மாவட்டம் பள்ளிப்பட்டு வட்டத்தில் கீழ்க்கண்ட பணிகளை பொதுப்பணித் துறையால் (RLEGP) திட்டத்தின் கீழ் தொடங்க அரசு அனுமதியளித்துள்ளதா?

1. மேல்பாலாபுரம் புதிய ஏரி.
2. வேணுகோபாலபுரம் புதிய ஏரி.
3. கரிம்பேடு புதிய ஏரி.
4. குமார ராஜுபேட்டை மதிகெட்டான் ஓடை புதிய ஏரி.
5. பொம்மராஜுபேட்டை புதிய ஏரி.

(ஆ) ஆம் எனில், இவ்வாண்டே இப்பணிகள் தொடங்கப் படுமா ?

விடை—(அ) மற்றும் (ஆ) 1984–85 ஆம் ஆண்டு மத்திய அரசிடமிருந்து ஊரக நிலமற்றோர் வேலை வாய்ப்பு உறுதித் திட்டத்தின் கீழ் ரூ. 100 கோடி வரை கூடுதல் நிதி உதவி கிடைக்கக்கூடுமென எதிர்பார்த்து பொம்மராஜு பேட்டை புதிய ஏரி திட்டம் தவிர மற்ற நான்கு திட்டங் களும் அரசால் அங்கீகரிக்கப்பட்டது. ஆனால் அவ்வாறு 1984–85 ஆம் ஆண்டு கூடுதல் நிதி ஒதுக்கீடு மைய அரசிட மிருந்து கிடைக்காததாலும், 1985–86 ஆம் ஆண்டில் நிலமற்றோர் வேலை வாய்ப்பு உறுதித் திட்டத்திற்கு நிதி ஒதுக்கீடு மைய அரசால் கணிசமாகக் குறைக்கப்பட்டு விட்டதாலும் பணிகள் தொடங்கவில்லை. சென்ற ஆண்டு தொடங்கி முழுமை பெறாமலிருக்கும் வேலைகள் மட்டுமே இந்த ஆண்டு 1985–86-ல் எடுத்து செயல்படுத்தப்பட்டு வருகிறது.

தரங்கம்பாடி தாலுக்காவை பின்தங்கிய பகுதியாக அறிவித்தல்.

74—வினா 2923—திரு. என். விஜயபாலன் : மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

தரங்கம்பாடி தாலுக்காவை பின்தங்கிய பகுதி என்று அறிவித்து தொழில்கள் துவங்க ஏற்பாடு செய்யும் திட்டம் ஏதும் உள்ளதா?

விடை—தரங்கம்பாடி தாலுக்காவை பின்தங்கிய பகுதியாக அறிவிக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசிடம் இல்லை.

### தரங்கம்பாடி தாலுக்காவில் அரசு பாலிடெக்னிக்.

75—வினா 2933—திரு. என். விஜயபாலன்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தரங்கம்பாடி தாலுக்காவில் அரசு பாலிடெக்னிக் துவங்கும் செயற்குறிப்பு ஏதும் உள்ளதா?

விடை — இல்லை.

### உதவிபெறும் பள்ளி ஆசிரியர்களுக்கு வைப்புநிதி, பணிக்கொடை திட்டம்.

76—வினா 2933 பி—திரு. என். விஜயபாலன்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

அரசுத்துறை ஆசிரியர்கள் (ஊராட்சி ஒன்றிய ஆசிரியர்கள்) ஓய்வு பெறும்போது ரூ. 10,000-ம் வழங்க பிறப்பிக்கப் பெற்ற அரசாணை உதவி பெறும் (Aided Schools) பள்ளி ஆசிரியர்களுக்கும் விரிவுபடுத்தப்படுமா?

விடை—தமிழ்நாடு அரசு ஊழியர்களுக்கு அளிக்கப்பட்டுள்ள தனி வைப்பு நிதி மற்றும் பணிக் கொடைத் திட்டத்தை (Tamil Nadu Government Servants Special Provident Fund *cum* Gratuity Scheme) தனியார் பள்ளி ஆசிரியர்களுக்கு 1-4-1985 லிருந்து விரிவுபடுத்த அரசாணை நிலை எண். 432, கல்வி, நாள் 26-4-1985-ல் ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன.

### மாமல்லபுரத்தில் தொழிலாளர் ஓய்வு இல்லம்.

77—வினா 2998—திரு. எஸ். இராசாராமன்: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) மாமல்லபுரத்தில் சுமார் ரூ. 7.53 லட்சத்தில் தொழிலாளர் நலவாரியம் மூலம் தொழிலாளர் ஓய்வு இல்லம் கட்டும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் அதன் விவரம் யாது.

விடை—(அ) ஆம்.

(ஆ) தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியம் 3-4-1975 அன்று நடைபெற்ற தனது முதலாவது வாரியக் கூட்டத்தில் மாமல்லபுரத்தில் ஒரு ஓய்வு இல்லம் கட்ட முடிவு செய்தது. அதன்படி செங்கல்பட்டு வட்டாட்சியரிடமிருந்து 3.95 ஏக்கர் நிலம் பெறப்பட்டது. அதன் தொடர்ச்சியாக வாரியத்தின்



ஒப்புதல் பெற்றும், அரசின் அங்கீகாரம் பெற்றும் ரூ. 7.23 இலட்சம் செலவில் பொதுப்பணித் துறையிடம் இக்கட்டிட வேலை ஆரம்பிக்கும் பொருட்டு ஒப்படைக்கப்பட்டது. பிறகு மாமல்லபுரத்தில் கட்டப்படும் ஓய்வு இல்லம் எழில்மிக விளங்க வேண்டும் என்பதால் மேலும் எவ்வாறு அழகு படுத்தலாம் என்று ஆராய ஒரு குழு அமைக்கப்பட்டு அதன் அறிக்கையின் தொடர்ச்சியாக மேலும் ரூ. 7.21 இலட்சம் கூடுதலான செலவுக்கு பொதுப்பணித்துறையிடம் மேற்படி வேலை ஒப்படைக்கப்பட்டது. மேற்படி கட்டுமானப்பணி தொடர்ந்து நடைபெற்று வருகிறது. விரைவில் திறக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

### திருச்சி சட்டக் கல்லூரிக்குச் சொந்தக் கட்டிடம்.

78—வினா 3003—திரு. எஸ். இராசாராம்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சியில் உள்ள அரசினர் சட்டக் கல்லூரி வாடகை கட்டிடத்தில் இயங்கி வருகிறதா?

(ஆ) ஆம் எனில் மாத வாடகை எவ்வளவு?

(இ) இதற்கு சொந்தக் கட்டிடம் எப்பொழுது கட்டப்படும்?

விடை—(அ) ஆம், திருமதி பாப்பம்மாள் அன்ன சத்திரத்தில் சட்டக் கல்லூரி 1981 முதல் இயங்கிவருகிறது.

(ஆ) ரூ. 3,489 (ரூபாய் மூவாயிரத்து நானூற்று எண்பத் தொன்பது மட்டும்.)

(இ) நிலம் கையகப்படுத்தும் நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டு வருகின்றன. நிலம் கையகப்படுத்திய பின்பு கட்டிடம் கட்டும் பணிகள் துவங்கப்படும்.

### யானைகளைப் பராமரிக்கும் கோயில்களில் சாண எரிவாயு தயாரிக்கும் திட்டம்.

79—வினா 3029—திரு. குமரி அனந்தன்: மாண்புமிகு செய்தி மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

யானைகளைப் பராமரிக்கும் திருக்கோயில்களில் சாண எரிவாயு திட்டம் அமுல் செய்யப்பட்டுள்ளதா?

விடை—யானைகளைப் பராமரிக்கும் திருக்கோயில்களில் சாணஎரிவாயு திட்டம் ஏதும் அமுல் செய்யப்படவில்லை.

ஆண்டிப்பட்டி பேருந்து நிலையத்தை விஸ்தரிக்கும் திட்டம்.

80—வினா 3077—திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டம் ஆண்டிப்பட்டி பஸ் நிலையத்தை விஸ்தரிக்கும் திட்டமுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அது பற்றிய விவரம் யாது ?

விடை—(அ) திட்டம் உள்ளது.

(ஆ) ஒருங்கிணைந்த நகரமைப்புத் திட்டத்தின்கீழ் ஆண்டிப்பட்டி பஸ்நிலையம் விஸ்தரிப்பு, தக்காளி மார்க்கெட் கட்டிடம் கட்டுதல் ஆகிய காரியங்களுக்காக ரூ. 20 லட்சம் கடன் கோர ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது. இது தொடர்பாக சென்ற 18-6-85ந் தேதி மதுரை நகரமைப்பு துணை இயக்குநர் பேரூராட்சிகளின் இயக்குநர் ஆகியோர்கள் இதற்கான இடங்களைப் பார்வையிட்டிருக்கிறார்கள். 1985-86-ல் இத்திட்டம் நிறைவு பெறுமென கருதப்படுகிறது.

சுற்றுலா இடங்களில் பிச்சை எடுப்பவர்களை அகற்ற நடவடிக்கை.

81—வினா 3086—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சுற்றுலா இடங்களில் பிச்சை எடுப்பவர்களை அகற்ற அரசு நடவடிக்கை எடுக்க உத்தேசித்துள்ளதா ?

விடை—ஆம், சென்னை, மகாபலிபுரம் மற்றும் காஞ்சிபுரம் போன்ற சுற்றுலா இடங்களில் உள்ள கோவில்கள், ரெயில் நிலையங்கள், பெரிய கடைவீதிகளில் இருக்கும் பிச்சைக்காரர்களை, தேடிப்பிடித்து அவர்களை மறுவாழ்வு இல்லங்களில் சேர்த்து அவர்களுக்கு மறுவாழ்வு தரும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளது.

சாந்தோம் கடற்கரை குடிசை மாற்று வாரிய வீடுகளைப் பழுதுபார்த்தல்.

82—வினா 3123—திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு வீட்டு வசதித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை சாந்தோம் கடற்கரையோரம் கட்டப்பட்டுள்ள குடிசைமாற்று வாரிய வீடுகள் பல பாழடைந்து, இடிந்த நிலையில் இருப்பது உண்மையா ?





(ஆ) இந்த கட்டிடங்கள் எந்த ஆண்டு கட்டப்பட்டன ?

(இ) இடிந்த பகுதிகள் எப்போது பழுதுபார்க்கப்படும் ?

விடை—(அ) டொம்மிங்குப்பம் திட்டப்பகுதியில் சோதனை முறையில் குறைந்த செலவில் கட்டப்பட்ட 90 குடியிருப்புகள் மட்டும்கடல் காற்றின் உப்புத் தன்மையால் பாதிக்கப்பட்டு பழுதடைந்துள்ளன.

(ஆ) மேற்படி குடியிருப்புகள் 1974-75-ல் கட்டப்பட்டன.

(இ) ஆகஸ்டு மாத இறுதிக்குள் பழுதடைந்த குடியிருப்புகள் அகற்றப்படும். இவ்விடத்தில் ரூ. 24.70 இலட்ச செலவில் 216 புதிய குடியிருப்புகள், ஏழு மாத காலத்திற்குள் கட்டி முடிக்கப்படும். இத்திட்டத்தின்படி 120 குடியிருப்புகள் ஏற்கெனவே கட்டி முடிக்கப்பட்டுவிட்டன.

ரெவின்யூ கிராமத்திற்கு ஒரு நியாய விலைக் கடை.

83—வினா 3192—திரு. எல்ல இராஜமாணிக்கம் : மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ் நாட்டிலுள்ள ஒவ்வொரு ரெவின்யூ கிராமத்திற்கும் ஒரு நியாய விலைக்கடை திறக்கப்பட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

விடை—(அ) ஆம்.

(ஆ) கிராமப்புறங்களில், அத்தியாவசியப் பொருட்கள் தடையின்றியும், நியாயமான விலையிலும் கிடைக்க, ஒவ்வொரு வருவாய் கிராமத்திற்கும் ஒரு நியாயவிலைக் கடை, பொது விநியோகத் திட்டத்தின் கீழ் திறப்பது என்ற கொள்கை முடிவினை அரசு மேற்கொண்டது. இதன்படி புதிய அங்காடிகளை மதுரை, இராமநாதபுரம், செங்கற்பட்டு, வட ஆற்காடு, சேலம், கோயம்பத்தூர், நீலகிரி, திருச்சி, புதுக்கோட்டை மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில், திறக்க கூட்டுறவுத் துறையிடமும் மீதமுள்ள திருநெல்வேலி, தஞ்சாவூர், தர்மபுரி மற்றும் தென்னாற்காடு மாவட்டங்கள், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்திடமும் ஒப்படைக்கப்பட்டது. 500-க்கு மேற்பட்ட மக்கள் தொகை உள்ள கிராமங்களில், முழு நேர அங்காடிகளும், 500-க்கு குறைவான ஆனால் 100-க்கு மேல் மக்கட் தொகை உள்ள கிராமங்களில், பகுதி நேர அங்காடிகளும், கூட்டுறவு நிறுவனங்களால் திறக்கப்பட்டன. ஒரு ரெவின்யூ கிராமத்திற்கு, ஒரு நியாய விலைக்கடை திட்டத்தின் கீழ், கிராமப்புற பகுதியில் கூட்டுறவு

[1986 மார்ச் 21

சங்கங்கள் 11,159 கிராம அங்காடிகளை நடத்தி வந்தன. மாண்புமிகு தமிழக முதல்வர் அறிவித்த 1,000 குடும்ப அட்டைகளுக்கு ஒரு நியாய விலைக்கடை என்ற திட்டத்தின் கீழ், கிராமப்புறத்தில் கூடுதலாகத் திறக்கப்பட்ட 1,437 கடைகளையும் சேர்த்து தற்போது, கூட்டுறவு சங்கங்கள், கிராமப்புறங்களில் 12,596 நியாய விலைக் கடைகளை நடத்தி வருகின்றன.

**அவினாசி தொகுதியில் புதிய தொழிற்சாலைகள் தொடங்க அனுமதி.**

84—வினா 3209—திரு. கு. சுப்பராயன்; மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் கீழக்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அவினாசி தொகுதி பிற்பட்டதாக அறிவிக்கப்பட்டபின் எத்தனை தொழிற்சாலைகள் தொடங்க அனுமதி வழங்கப் பட்டுள்ளது ?

(ஆ) அவற்றால் எத்தனை பேருக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும் ?

(இ) அனுமதி அளிக்கப்படாமல் நிலுவையில் உள்ள மனுக்கள் எத்தனை ?

விடை—(அ) 285.

(ஆ) 950 பேருக்கு வேலை வாய்ப்பு கொடுக்க வாய்ப்ப உள்ளது;

(இ) இல்லை.

**தொழில் முதலீட்டுக் கழகம் மற்றும் தமிழ்நாடு தொழில் முன்னேற்றக் கழகத்தின் மூலம் வழங்கப்பட்ட கடன்.**

85—வினா—3258 திருமதி பா. ஊர்மதி : மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

1984—85-ஆம் ஆண்டில் (TIIC) மற்றும் (SIPCOT) தொழில் முதலீட்டுக் கழகம் மற்றும் தமிழ்நாடு தொழில் முன்னேற்றக் கழகத்தின் மூலம் வழங்கப்பட்ட கடன் தொகை எவ்வளவு?

விடை—தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் (TIIC) 1984—85.

| | | தொகை (ரூபாய் கோடியில்.) |
|---|---|---|
| ஒப்புதல் அளிக்கப்பட்ட கடன் தொகை | .. | 68.11 |
| விநியோகிக்கப்பட்ட கடன் தொகை | .. | 48.70 |
| வசூலிக்கப்பட்ட கடன் தொகை ... | .. | 32.38 |



1986 மார்ச் 21]

தமிழ்நாடு தொழில் முன்னேற்றக் கழகம் (SIPCOT) 1984-85.

| | ஒப்புதல் வழங்கியது. | வழங்கப்பட்ட தொகை. |
|---|---|---|
| | (ரூபாய் இலட்சத்தில்). | |
| 1 தவணைக் கடன் .. | 4,638.45 | 2,969.91 |
| 2 இந்திய தொழில் வளர்ச்சி வங்கியின் ஆரம்ப மூலதனம். | 179.24 | 126.58 |
| 3 வட்டியில்லாத விற்பனை வரிக் கடன் உதவி. | 494.92 | 492.74 |
| 4 மத்திய அரசின் நேரடி மானியம். | 320.03 | 387.22 |
| | (எல்லா மத்திய மற்றும் பெரும் தொழிலகங்கள்). | (சிப்காட் மட்டும்). |
| 5 மாநில அரசின் நேரடி மானியம். | 367.44 | 180.41 |

**சென்னையில் இயங்கும் ஆட்டோ ரிக்ஷாக்களின் மீட்டர்கள்.**

86-வினா 3322 மாண்புமிகு திரு வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிர மணியன் : (பேரவைத் துணைத் தலைவர்) : மாண்புமிகு போக்கு வரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிப் பாரா—

(அ) சென்னை நகரில் இயங்கும் ஆட்டோ ரிக்ஷாக்களின் கட்டணங்கள் உயருகின்றபோது மீட்டர்களும் உடனடியாக திருத்தியமைக்கப்படுவதில்லை என்பது உண்மையா ?

(ஆ) ஆம் எனில், அது குறித்து எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது ?

விடை—(அ) மற்றும் (ஆ) ஆட்டோ ரிக்ஷாக் கட்டணம் உயரும் போது அனைத்து வாகனங்களும் உடனடியாக ஒரே நேரத்தில் மீட்டர்களைத் திருத்தி விட இயலாது. அதற்குச் சில காலம் பிடிக்கும். இந்த இடைக் காலத்தில் புதிய கட்டணத்திற்கு இணங்க மாற்றுக் கட்டண பட்டியல் (Converion table) ஒவ்வொரு ஆட்டோ ரிக்ஷாவிற்கும் வழங்கப்படுகிறது. படிப் படியாக திருத்தப்பட்ட மீட்டர் சரி பார்த்து சான்று வழங்கப் படுகிறது.

]1986 மார்ச் 21

## மதுரை மாவட்டத்தில் உறைவிந்து பணி நடைபெறும் கால்நடை பராமரிப்பு நிலையங்கள்.

87— வினா 3325 மாண்புமிகு திரு. வேடசந்தூர்வி.பி. பாலசுப்பிர மணியன் : (பேரவைத் துணைத் தலைவர்) : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மதுரை மாவட்டத்தில் உள்ள கால்நடை பராமரிப்பு நிலையங்கள் எவை எவைகளில் (Frozen Semen) உபயோகப் படுத்தப்படுகிறது ?

விடை— மதுரை மாவட்டத்தில் கீழ்க்காணும் இடங்களி உறைவிந்து பணி நடைபெறுகிறது :—

| வரிசை எண்ணும் கிளை நிலையத்தின் பெயரும். (1) | | மண்டல செயற்கை முறை இனவிருத்தி நிலையத்தின் பெயர். (2) |
|---|---|---|
| 1 | பழங்காநத்தம் | |
| 2 | கூத்தியார்குண்டு | |
| 3 | அச்சம்பத்து | |
| 4 | திருப்பரங்குன்றம் | |
| 5 | தல்லாகுளம் | மதுரை |
| 6 | தென்பழஞ்சி | |
| 7 | டி. புளிப்பட்டி | |
| 8 | திருமங்கலம் | |
| 9 | டி. குன்னத்தூர் | |
| 10 | டி. கல்லுப்பட்டி | |
| 11 | உசிலம்பட்டி | |
| 12 | வடுகப்பட்டி | |
| 13 | கருமாத்தூர் | |
| 14 | சித்துப்பட்டி | |
| 15 | விக்கிரமங்கலம் | |
| 16 | பள்ளப்பட்டி | |
| 17 | சோழவந்தான் | |
| 18 | மண்ணாடிமங்கலம் | |
| 19 | மேலக்கால் | உசிலம்பட் |
| 20 | செக்கானூரணி | |
| 21 | மிடியன் | |
| 22 | அய்யங்கோட்டை | |
| 23 | திருவாலை | |
| 24 | சின்னப்பட்டி | |
| 25 | மஞ்சம்பட்டி | |
| 26 | சூலமங்கலம் | |



1986 மார்ச் 21]

## திண்டுக்கல் நகரில் பணிபுரியும் பெண்களுக்கான விடுதி.

88— வினா 3382—மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி.பி. பாலசுப்பிர மணியன் (பேரவைத் துணைத் தலைவர்) மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

திண்டுக்கல் நகரில் பணியில் இருக்கும் பெண்களுக்கான விடுதி அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

விடை— திண்டுக்கல் நகரில் பணிபுரியும் பெண்களுக்கான விடுதி அமைக்கும் செயற்குறிப்பு எதுவும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

## குளத்தூர் தொகுதியில் பிற்பட்ட மாணவர் விடுதிக் கட்டிடம்.

89—வினா 3397—திரு. த. மாரிமுத்து : மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

குளத்தூர் தொகுதியில் ஆலூர், கிள்ளுக்கோட்டைக்கு பிற்பட்ட மாணவர் விடுதிக் கட்டிடம் கட்டித் தருமாறு விடுத்துள்ள பொது மக்கள் கோரிக்கை மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

விடை—குளத்தூர் தொகுதியில் ஆலூர்,கிள்ளுக்கோட்டைக்கு பிற்படுத்தப்பட்ட மாணவர் விடுதிக் கட்டிடம் கட்டுவது சம்பந்தமான முன் மொழிவு அரசின் பரிசீலனையில் இல்லை.

## ஆலூர் கிராமத்திற்கு கால்நடை மருந்தகம்.

90—வினா 3399—திரு. த. மாரிமுத்து : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குளத்தூர் தொகுதி—ஆலூர் கிராமத்தில் கால்நடை மருந்தகம் அமைக்கும் கோரிக்கை வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது அமைக்கப்படும் ?

விடை—(அ) புதுக்கோட்டை மாவட்டம், குளத்தூர் தொகுதி விராலிமலை ஊராட்சி ஒன்றியம், ஆலூர் கிராமத்தில் கால்நடை மருந்தகம் அமைக்க பிரேரணை எதுவும் பெறப்படவில்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

[1986 மார்ச் 21

**மலம்பட்டி, களத்துப்பட்டி கிராமங்களுக்குப் புதிய சாலைகள்.**

91—வினா 3411—திரு. த. மாரிமுத்து: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

குளத்தூர் தொகுதி விராலிமலை ஒன்றியம் மலம்பட்டி களத்துப்பட்டி கிராமங்களுக்கு புதிய சாலை அமைத்துக் கொடுக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

விடை—மலம்பட்டி மற்றும் களத்துப்பட்டி கிராமங்களுக்கு ஏற்கனவே தனித்தனி சாலைகள் உள்ளதால் புதிய சாலை அமைத்துக் கொடுக்கும் செயற்குறிப்பு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**சித்த வைத்தியக் கல்லூரியில் சிறப்பு தமிழ் புகுமுக வகுப்பில் படித்தவர்களை அனுமதித்தல்.**

92—வினா 3435—திரு. எஸ். என். இராமசாமி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இந்திய சித்த வைத்தியக் கல்லூரியில் புகுமுக வகுப்பு (P.U.C.) தமிழ் சிறப்புப் பாடமாக எடுத்துத் தேறிய மாணவர்களில் 1982-83 ஆம் ஆண்டில் அனுமதித்ததுபோல் 25 மாணவர்களை அனுமதிக்க முடிவு செய்யப்பட்டுள்ளதா?

(ஆ) இல்லையெனில் நடப்பு கல்வியாண்டில் (P.U.C.) சிறப்பு தமிழ் புகுமுக வகுப்பு படித்தவர்களையும் அனுமதிப்பது சம்பந்தமாக பரிசீலிக்கப்படுமா?

விடை—(அ) இல்லை.

(ஆ) பி.எஸ்.எம்.எஸ். பயிற்சிக்கு பி.யு.சி. கற்றவர்கள் தகுதியற்றவர்கள் என நிர்ணயிக்கப்பட்டுள்ளது. எனவே, பி.யு.சி. படித்தவர்களுக்கு வாய்ப்பு அளிக்க இயலாது. மேலும், நடப்புக் கல்வியாண்டில் (P.U.C.) சிறப்புத் தமிழ் புகுமுக வகுப்பு படித்தவர்களையும் அனுமதிக்கும் உத்தேசம் இல்லை.

**கோவை மாநகரத்திலுள்ள ஆதிதிராவிடர் மாணவர் விடுதிகள்.**

93—வினா 3453—திரு. கு. ரமணி: மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாநகரத்தில் ஆதிதிராவிட மாணவர்களுக்கு எத்தனை விடுதிகள் உள்ளன? எத்தனை மாணவர்கள் தங்க முடியும்?



1986 மார்ச் 21]

(ஆ) வாடகைக் கட்டிடத்தில் விடுதிகள் ஏதாவது உள்ளனவா?

(இ) ஆம் எனில், விவரங்கள் என்ன?

விடை—(அ) கோவை மாநகரத்தில் ஆதிதிராவிட மாணவர்களுக்காக மூன்று விடுதிகள் உள்ளன. அதில் 295 மாணவர்கள் தங்கமுடியும்.

(ஆ) ஆம்.

(இ)

| | மாத வாடகை. |
|---|---|
| அரசு உயர்நிலைப்பள்ளி மாணவர் விடுதி, திருச்சி ரோடு, இராமநாதபுரம், கோவை டவுன் .. .. .. | ரூ. 825 |
| அரசு உயர்நிலைப்பள்ளி மாணவர் விடுதி, சிங்கநல்லூர், கோவை டவுன் .. | ரூ. 649 |

**கூடலூர் தொகுதி சுண்ணாம்புப் பாலத்தை புதுப்பித்தல்.**

94 வினா 3601—திரு. கே. உச்சி: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நீலகிரி மாவட்டம் கூடலூர் தொகுதி ஓவாலி பேரூராட்சியை சேர்ந்த சுண்ணாம்புப் பாலம் மிகவும் பழுதடைந்திருப்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், இப்பாலத்தைப் புதுப்பிக்கும் செயற்குறிப்பு ஏதேனும் உண்டா?

(இ) இதற்கான மதிப்பீடு தொகை எவ்வளவு?

விடை—(அ) ஆம்.

(ஆ) இப்பாலத்தைப் புதுப்பிக்கும் செயற்குறிப்பு தற்சமயம் ஏதும் இல்லை.

(இ) இப்பாலத்தைத் திருப்பிக் கட்டுவதற்கு உத்தேசமாக ரூ. 12.50 இலட்சம் தேவைப்படும்.

**கூடலூர் வட்டத்திற்கு தனி மாவட்டக் கல்வி அலுவலர்.**

95—வினா 3612—திரு. கே. உச்சி: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நீலகிரி மாவட்டம் கூடலூர் வட்டத்திற்கு தனியாக மாவட்டக் கல்வி அலுவலர் நியமிக்கும் செயற்குறிப்பு ஏதேனும் உண்டா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது செயல்படுத்தப்படும்?

விடை—(அ) இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

**ஈச்சங்கோட்டை உயரின கால்நடைப் பண்ணை.**

96—வினா 3695—திரு. ந. சிவஞானம்: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஈச்சங்கோட்டை உயரின கால்நடைப் பண்ணையில் உறைவிந்து நவீன முறையில் தயாரிக்கப்படுகிறதா?

(ஆ) ஆம் எனில், வெளிநாடு, மத்திய அரசு மானியம் கிடைக்கிறதா?

விடை—(அ) ஆம்.

(ஆ) ஆம்.

**சாலை விபத்தில் இறந்தவர்கள்.**

97—வினா 3735—திரு. மா. மணிமாறன்: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

கடந்த ஆண்டில் (1984) சாலை விபத்தால் இறந்தவர்களின் எண்ணிக்கை என்ன?

விடை—தமிழ்நாட்டில் 1984 ஆம் ஆண்டில் சாலை விபத்தால் இறந்தவர்களின் எண்ணிக்கை—4,511.

**பூம்புகார் தொகுதியில் துயர்துடைப்பு நிதி வழங்கப்பெற்ற மீனவர்கள்,**

98—வினா 3826—திரு. என். விஜயபாலன்: மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

கடந்த ஆண்டில் (1984-ல்) மீன்பிடி தொழில் இல்லாத நாட்களில் மீனவர் துயர்துடைப்பு நிதி, பூம்புகார் தொகுதி மீனவர்களில் எத்தனை நபர்களுக்கு தரப்பட்டிருக்கிறது?

விடை—கடந்த ஆண்டில் (1984-ல்) மீன்பிடி தொழில் இல்லாத நாட்களில், பூம்புகார் தொகுதி மீனவர்கள், மொத்தம் 227 (இருநூற்று இருபத்தேழு) நபர்களுக்கு துயர்துடைப்பு நிதி வழங்கப்பட்டது.



**தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவ மனைகள்.**

99—வினா 4257—திருமதி பா. வளர்மதி: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனைகளின் எண்ணிக்கை எவ்வளவு?

(ஆ) புதிய ஈ. எஸ். ஐ. மருத்துவமனைகள் கட்டும் திட்டம் அரசிடம் உள்ளதா?

விடை—(அ) தமிழ்நாட்டில் தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனைகள் ஐந்து உள்ளன. சென்னையில் இரண்டும், வேலூர், கோயம்புத்தூர், மதுரையில் ஒவ்வொன்றும் உள்ளன.

(ஆ) 50 படுக்கைகள் கொண்ட தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனைகள் சேலத்தில் ஒன்றும், சிவகாசியில் ஒன்றும் புதிதாகக் கட்டப்பட்டு வருகின்றன.

இதே போன்ற மருத்துவமனை திருச்சியில் ஒன்றும், மேட்டூர் அணை பகுதியில் ஒன்றும் கட்ட உத்தேசித்து, இதற்கான தகுதியான இடம் தேர்ந்தெடுக்கும் பணி நடந்துகொண்டிருக்கிறது.

**அதிக இலாபம் ஈட்டிய போக்குவரத்துக் கழகம்.**

100-வினா 4485—டாக்டர் நா. மாசிலாமணி: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1984-85 ஆம் ஆண்டில் அதிக இலாபம் ஈட்டிய போக்குவரத்துக் கழகம் எது?

(ஆ) திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்தின் 1984-85-ல் வருவாய் எவ்வளவு?

விடை—(அ) தந்தை பெரியார் போக்குவரத்துக் கழகம்.

(ஆ) 1984-85 ஆம் ஆண்டில் திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்தின் வருவாய் ரூ. 3239.21 இலட்சம்.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 2. தகவல் கோரல்.

### (அ) கரும்புப் பண்ணைக் கழக ஆண்டு அறிக்கைகள் குறிப்பிட்ட காலத்தில் அவையில் வைக்கப்பெறாதது.

திரு. என்.எஸ்.வி. சித்தன்: மாண்புமிக்க பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டிலே இருக்கின்ற பல்வேறு கழகங்கள், பல்வேறு நிறுவனங்கள் சார்பாக ஆண்டறிக்கைகளைப் பேரவைக்கு அளிப்பது வழக்கம். அது நாம் பின்பற்றுகின்ற ஒரு முறையாக இருக்கிறது. ஆனால் இன்றையதினம் மன்றத்தின் முன் வைக்கப்பட்டுள்ள தமிழ்நாடு கரும்பு பண்ணைக் கழகத்தின் 1978—79 ஆம் ஆண்டிற்கான அறிக்கையும், 1979-80 ஆம் ஆண்டிற்கான அறிக்கையும் இப்பொழுது காலம் கடந்து வந்திருக்கின்றன. இந்தக் காலதாமதத்திற்கு அவர்கள் கொடுத்திருக்கின்ற காரணம் வேடிக்கையாக இருக்கிறது. இந்த ஆண்டறிக்கையை அச்சடிக்க நிதியில்லாத வறிய காரணத்தால் என்று சற்றும் பொருந்தாத காரணம் சொல்லப்பட்டிருக்கிறது. நான் கூர்ந்து கவனித்தேன். பல இலட்சக்கணக்கான ரூபாய் பெறுமானமுள்ள நெல், கரும்பு உற்பத்தி செய்திருக்கிறார்கள். பல இனங்களில் தாராளமாகச் செலவிடப்பட்டிருக்கிறது. அப்படியிருக்கின்ற நேரத்தில், தங்களுடைய மெத்தனத்தை, அசட்டையை மறைப்பதற்காகச் சற்றும் பொருந்தாத காரணத்தைச் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, நான் உங்கள் மூலமாகக் கேட்டுக் கொள்வது என்னவென்றால், ஒரு ஆண்டின் அறிக்கையை அடுத்த ஆண்டு முடிவதற்குள்ளாக வைக்க வேண்டுமென்று ஏன் தாங்கள் கட்டளை பிறப்பிக்கக்கூடாது? அப்படிப் பிறப்பித்தால், நாங்கள் அந்த அறிக்கைகளைப் படித்து, பேசுவதற்கு வாய்ப்பு ஏற்படும். ஐந்தாண்டுக் காலம், ஏழாண்டுக் காலம் தாமதித்து வருகின்றபொழுது அதனுடைய முக்கியத்துவமே போய்விடுகிறது. என்ன காரணத்திற்காக வைக்கப்படுகிறது என்கின்ற அந்த முக்கியத்துவம் போய் விடுகின்ற காரணத்தால், வருகின்ற காலங்களில் குறித்த காலத்திற்குள்ளாக வைப்பதற்கான நடவடிக்கைளைத் தாங்கள் எடுப்பீர்களா என்று அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 10-20)

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கருத்தை நிறைவேற்றுவதற்கான முயற்சிகளை அந்தத் துறை மேற்கொள்ள வேண்டும். காலதாமதம் ஏன் என்று அதற்கான மானியக் கோரிக்கை வரும்போது, அதற்குரிய அமைச்சர் உரிய விளக்கங்களைத் தருவார். வேறுபல துறைகளிலே 1983—84, வரையிலும் அறிக்கைகள் வரும்போது, இதிலே ஏன், 1980-81 1981-82, 1982-83 ஆகிய ஆண்டுகளுக்கான அறிக்கைகள் வரவில்லை என்று மாண்புமிகு உறுப்பினர் கேட்பது நியாயமான





ஒன்றுதான். ஆகவே, விரைவிலே அந்த அறிக்கைகளை அளிக்கின்ற முயற்சிகளை அந்தத் துறையினர் மேற்கொள்வார்கள் என்று நம்புகிறேன். அதற்குரிய வகையில் அரசு தக்க முயற்சிகளை மேற்கொள்ளும்.

### (ஆ) சென்னை மாநகராட்சியினரால் வாங்கப்பெற்றுள்ள சாலை போடும் கருவி.

திரு. டி.ஆர். வேங்கடரமணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுமார் ரூ. 4 கோடி செலவிலே, சென்னை நகரத்திலே, ரோடு போடுவதற்காக, ஒரு கருவி வாங்கப்பட்டு, இன்றைக்கு, அண்ணா சமாதி அருகிலே அந்தக் கருவி உபயோகப்படுத்தப்படாமல் இருக்கிறது.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : பேரவைத் தலைவர் அவர்களே, அது அரசால் வாங்கப்பட்டது அல்ல. அரசுக்கும் அதற்கும் சம்பந்தமே இல்லை. மாநகராட்சிக்காக வாங்கப்பட்டது; தனியாருக்குச் சொந்தமானது; இப்போது பாதை போட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

## 3. வரவு—செலவுத் திட்டம், 1986-87, பொது விவாதம். —தொடர்ச்சி.

திரு. ந. சிவஞானம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1986—87 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையின் மீது இந்திய தேசியக் காங்கிரஸ் கட்சியின் கருத்துக்களை இங்கே சொல்ல விழைகிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை).

இந்த நிதிநிலை அறிக்கையில், இந்த மாநிலத்தினுடைய பொருளாதார வளர்ச்சி பற்றியும், மாநிலத்தினுடைய நன்மை பற்றியும் மாநிலத்தினுடைய வெல்பேர் திட்டங்களைப் பற்றியும் எந்த விதமான திட்டங்களும் அறிவிக்கப்படாமல் சாதாரண நிதிநிலை அறிக்கையாக இது சமர்ப்பிக்கப்பட்டிருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். குறிப்பாக, வேளாண்மைத் துறையிலே முன்னேற்றம் வேண்டும், தொழில் துறையில் முன்னேற்றம் இருக்க வேண்டுமென்று பல்வேறு அமைச்சர்கள் கூறிக் கொண்டிருந்தாலும் தொழில்துறைக்கு முக்கியத்துவமே கொடுக்காமல், இன்றையதினம் இந்த அரசு பின் தங்கிய நிலையிலே இருக்கிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

[திரு. ந. சிவஞானம்] [1986 மார்ச் 2

தொழில் துறை அமைச்சர் மாண்புமிகு திரு. க. இராசாராம்
அவர்கள் ஏறத்தாழ 30 சர்க்கரை ஆலைகளை இந்த மாநிலத்
திலே ஏற்படுத்த முடியும் என்ற அறிக்கையினை இங்கே தந்திருக்
கிறார்கள். பல புது திட்டங்களை எல்லாம் கூறியிருக்கிறார்
கள். ஆனால், இந்த நிதிநிலை அறிக்கையிலே, சர்க்கரை ஆலை
கள் ஏற்படுத்துவதுபற்றி எந்தவிதமான புள்ளி விவரமும் இங்கே
தரப்படவில்லை என்று நான் குற்றம் சாட்டுகிறேன். குறிப்பாக
தமிழகத்தைப் பொறுத்தவரையில் 30 ஆலைகள் இருக்கின்றன.
தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்தவரையிலே பல்வேறு ஆலை
கள் ஏற்படுத்துகின்ற சூழ்நிலைகள் இருக்கின்றன. தமிழகத்
தைப் பொறுத்தவரையிலே, சர்க்கரை ஆலைகள் துவக்குகின்ற
நல்ல சூழ்நிலைகள் இருந்தாலும், அரசுக்கு எப்படிப்பட்ட
நோக்கம், எண்ணம் இருக்கிறது என்பதை என்னாலே புரிந்து
கொள்ள முடியவில்லை. இங்கே மின்சாரப் பற்றாக்குறை,
இடப் பற்றாக்குறை என்பது மட்டுமல்ல, அரசுக்குப் பல்வேறு
உள்நோக்கம் இருப்பதால், இங்கே வருகின்ற மனுக்கள் பரிசீலிக்
கப்பட்டு, மைய அரசுக்கு அனுப்பப்படவில்லை என்ற புகாரை
இப்பொழுது கூறுகிறார்கள். குறிப்பாக, தஞ்சை மாவட்டத்
திலேயிருந்தும், தர்மபுரி மாவட்டத்திலேயிருந்தும், கோயம்
புத்தூர் மாவட்டத்திலேயிருந்தும், சர்க்கரை ஆலைகள் அமைக்க
மனுக்கள் அரசுக்கு வந்தால், அவற்றை இந்த அரசு சரியாகக்
கவனிக்காமல், கிடப்பிலே போட்டுவிட்டு, இன்றையதினம்
தொழில் துறையிலே ஏற்படவேண்டிய முன்னேற்றத்தைத் தடுப்
பதற்கான பல்வேறு காரியங்களைச் செய்து கொண்டிருக்கிறார்
கள் என்பதை நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்
கிறேன்.

குறிப்பாக, இங்கே ஆக்கப்பூர்வமான பல திட்டங்கள் இருக்
கும் என்று நாங்கள் எல்லாம் நினைத்தோம். குறிப்பாக, 30
இலட்சம் ஏழை மக்களுக்கும், தாழ்த்தப்பட்டவர்களுக்கும், நரிக்
குறவர்களுக்கும் வீடுகட்டுகின்ற திட்டம்பற்றி இந்த நிதிநிலை
அறிக்கையிலே விவரம் வரும் என்று நினைத்தோம். ஆனால்,
நினைத்ததற்கு மாறாக இருக்கிறது. குறிப்பாக, என். ஆர்.
இ.பி.திட்டம், ஆர்.எல்.இ.ஜி.பி. திட்டம் போன்ற மைய அரசு
உதவியைக் கொண்டு, மாநில அரசு செய்கின்ற நிலையைத்தான்
நிதிநிலை அறிக்கையிலே நாம் பார்க்கிறோம்.

குறிப்பாக, ரூ 6,500 மதிப்பீட்டிலே ஒரு குடியிருப்பு என்ற
திட்டத்தை நிறைவேற்றுகிறோம். அந்த தொகையிலே,
மோசமான குடியிருப்புகளை இப்பொழுது கட்டிக் கொண்டிருக்
கிறோம். தாழ்த்தப்பட்ட மக்களுக்காக, கட்டிய அந்தக் குடி
யிருப்பு ஒரு நாளிலே விழுந்து விடுகின்றது. அப்படிப்பட்ட
ஒரு துர்பாக்கியமான சூழ்நிலையினால் அரசு மிகத் திறமையான
நிலைமையில் செயல்பட, ஒரு குடியிருப்பு ரூ. 6,500க்குக் கட்டு
கின்ற திட்டத்தை மாற்றி, மாநில அரசு நிதி மூலமாக, தாழ்த்
தப்பட்ட சமுதாய மக்களுக்கு, பராமரிக்க முடியாத நலிவுற்ற



1986 மார்ச் 21] [திரு. ந. சிவஞானம்]

மக்களுக்கு, ஓரளவுக்கு பக்கா, ஆர்.சி.சி. கட்டிடமாகக் கட்டித்
தர அரசு ஏன் தயங்குகிறது என்பதையும் நான் இந்த நேரத்
திலே கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்..

6,500 ரூபாய் செலவில் பல இடங்களில் தாழ்த்தப்பட்ட
மக்களுக்கு வீடுகள் கட்டிக்கொடுக்கப்பட்டது உண்மை. ஆனால்
இந்த குறைந்த செலவில் கட்டப்பட்டதால் சரியாகக் கட்டப்
படவில்லை. கட்டிடம் கட்டுவதற்கு பயன்படுத்தப்பட்ட
சாமான்கள் தரமானவையாக இல்லாத காரணத்தால் விரைவிலே
இடிந்துவிடுகின்றன என்பதை இந்த மன்றத்திலே இருக்கிற
மாண்புமிகு உறுப்பினர்கள் நன்கு அறிவார்கள். எனவே
இந்த 6,500 ரூபாயோடு 1,000 அல்லது 1,500 ரூபாய் கூடுத
லாகப் போட்டு, அந்த வீடுகளை நல்லமுறையில் கட்டிக்கொடுக்க
வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்கு இருக்கிற சூழ்நிலையில் மின் உற்பத்தியை நாம்
பெருக்கியாக வேண்டும். இந்திய நாட்டினுடைய, குறிப்பாக
தமிழ்நாட்டினுடைய பொருளாதாரம் பெருக வேண்டுமென்
றால் அதற்கு ஏற்றபடி மின் உற்பத்தியைப் பெருக்க வேண்டு
மென்ற இலட்சியத்தில் இருந்தாலும், மின் உற்பத்திக்கு
இந்த ஆண்டு 395 கோடி ரூபாய்தான் ஒதுக்கப்பட்டிருக்கிறது.
இது மிகவும் குறைந்த ஒதுக்கீடு. 7-வது ஐந்தாண்டுத் திட்டத்
தில் முதலாண்டில் மின் உற்பத்திக்கு முன்னுரிமை கொடுக்கப்
பட்டது. ஆனால் இந்த ஆண்டு அந்த அளவுக்கு முன்னுரிமை
கொடுக்கப்படவில்லை; ஒதுக்கப்பட்டிருக்கிற தொகையும் மிக
வும் குறைவாக இருக்கிறது. தமிழகப் பொருளாதார வளர்ச்
சிக்கு மின் உற்பத்தி முக்கியமாக இருப்பதால் வேறு வகை
யிலே நிதி உதவி பெற்று, போதிய முதலீடு போட்டு, மின்
உற்பத்தியைப் பெருக்க ஏற்பாடு செய்ய வேண்டும். மின்சாரம்
இல்லை என்றால் மனிதனுடைய வாழ்க்கை இல்லை என்ற அள
வுக்கு இன்றைக்கு நிலைமை போய்க்கொண்டிருக்கிறது. ஆகவே
மின் உற்பத்தியில் தன்னிறைவு பெற அரசு நடவடிக்கை எடுக்க
வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப் போன்று, இன்றைக்கு தமிழ்நாட்டில் ஒரு புதிய
மறுமலர்ச்சி ஏற்படும் நிலைமை இருந்து கொண்டிருக்கிறது.
நாகப்பட்டினத்தில் நரிமணம் என்ற இடத்தில் கச்சா எண்ணெய்
நிறைய கிடைக்கும் வாய்ப்பு இருக்கிறது. தற்போது நாள் ஒன்
றுக்கு 12,000 லிட்டர் கச்சா எண்ணெய் அங்கே கிடைக்கிறது.
தமிழ்நாட்டினுடைய பொருளாதார வளர்ச்சிக்கு நல்லதொரு
அறிகுறியாக நரிமணம் திகழ்கிறது. அங்கே கிடைக்கின்ற எண்
ணெயை சென்னை சுத்திகரிப்பு ஆலையில் பரிசோதனை
செய்து பார்த்ததில் அந்த எண்ணெய் நல்ல தரமுள்ளதாக
இருக்கிறது என்று வல்லுநர்கள் கூறியிருக்கிறார்கள். பொருளா
தார ரீதியில் நல்ல ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படும் என்றும்

கூறியிருக்கிறார்கள். தமிழகத்தின் பொருளாதாரத்திற்கு இது வழி காட்டும். ஆகவே, விரைந்து நாகப்பட்டினத்தில் அனல் மின் நிலையம் அமைக்க இந்த அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, இந்த நாட்டில் இருக்கிற ஏழை எளிய மக்களைப் பாதிக்கிற, அறியாமையில் மக்களை ஆழ்த்துகிற மதுவை ஒழிக்க வேண்டும் என்பதிலே நாங்கள் மிகுந்த அக்கறை கொண்டிருக்கிறோம். கடந்த கால பல்வேறு நிகழ்ச்சிகளிலிருந்து, படிப்பினைகளிலிருந்து இந்த நாட்டுக்கு மதுவிலக்கு தேவை என்பதை நாம் உணர்ந்திருக்கிறோம். 1987 ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் முதல் மதுவிலக்கு அமுல்படுத்தப்படும், அதனால் இந்த ஆண்டில் 60 கோடி ரூபாய் அரசுக்கு இழப்பு ஏற்படும் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். இதைப் பார்க்கும்போது மதுவினால் வருகின்ற வருமானம் ஆண்டுக்கு 250 கோடி ரூபாய் என்று தெரிகிறது. மக்களுடைய நன்மையைக் கருதி மதுவிலக்கைக் கண்டிப்பாக அமுல்படுத்தியாக வேண்டும். இந்த மதுவிலக்குத் திட்டத்தை நீங்கள் அமுல்படுத்தவில்லை என்றால் தமிழ்நாட்டில் காங்கிரஸ் பேரியக்கம் ஒரு பெரிய போராட்டத்தை நடத்தும், அந்தப் போராட்டத்தை நீங்கள் சந்திக்க வேண்டிய நிலைமை ஏற்படும் என்பதை ஒரு எச்சரிக்கையாகத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். ஆகவே, ஏழை எளிய மக்களைப் பாதிக்கின்ற மதுவை, தாழ்த்தப்பட்ட மக்களுக்கு அநீதியை ஏற்படுத்தும் இந்த மதுவை ஒழிக்க இந்த அரசு முற்பட வேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்கு நீர்ப்பாசனத் திட்டத்தைப் பொறுத்தவரையில், தமிழ்நாட்டில் எல்லா நதிகளையும் நாம் பயன்படுத்திவிட்டோம். இயற்கை வளத்தை எல்லாம் பயன்படுத்திவிட்டோம். கட்டவேண்டிய அணைகளை எல்லாம் கட்டிவிட்டோம். இனிமேல் செய்ய வேண்டியது, தென்னகத்தில் இருக்கிற பல்வேறு நதிகளை ஒன்றாக இணைக்க முயற்சி செய்ய வேண்டும். அதற்காக மத்திய அரசுக்கு கடிதப் போக்குவரத்து நடத்தினால் மட்டும் போதாது ; சம்பந்தப்பட்டவர்களோடு நேரடியாகப் பேச்சு வார்த்தை நடத்தி, விரைந்து நடவடிக்கை எடுக்கும் முயற்சியில் அரசாங்கம் இறங்க வேண்டும். குறிப்பாக தென்னகத்தில் மகாநதிகளில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடுகிறது. கோதாவரி, கிருஷ்ணா நதி போன்ற பெரிய நதிகளை முதல்கட்டமாக காவேரி நதியோடு இணைக்க வேண்டும். அதைப் போன்று பெண்ணையாற்றையும் இணைக்க வேண்டும். அப்படி இணைத்துக் கொண்டால் நல்லதொரு திட்டமாக அதைச் செயல்படுத்த முடியும் என்பதால் கங்கை-காவேரி இணைப்புக்கு ஒரு முன்னோடித் திட்டமாக இந்த அரசு தென்னக நதிகளை இணைக்க முயற்சி மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.





குறிப்பாக, இந்த நதிகளைப் பொறுத்தவரையில் தேசியமயமாக்கப்பட வேண்டுமென்ற என்னுடைய கருத்தை வலியுறுத்திக் கூற விரும்புகிறேன். எப்படி மின்சாரத்தை தேசியமயமாக்க வேண்டுமென்று கூறுகிறோமோ அதைப் போன்று நதிகளையும் தேசியமயமாக்க வேண்டுமென்ற கருத்தை உருவாக்க வேண்டும். அதற்கு ஆக்கப்பூர்வமான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

அதைப்போன்று இருக்கின்ற நீர்வளங்களை எல்லாம் ஒழுங்காகப் பயன்படுத்திக்கொள்ள நீர்ப்பாசன வாரியம் ஒன்றை அமைக்கவேண்டும். நீர் வளத்தை மிகவும் சிக்கனமாகப் பயன்படுத்த வேண்டிய ஒரு காலகட்டத்தில் நாம் இருக்கிறோம். ஆகவே, இருக்கிற நீர்வளத்தை முறையாகப் பயன்படுத்த நீர்ப்பாசன வாரியம் ஒன்று அமைக்கப்பட வேண்டுமென்று இந்த மாமன்றத்தில் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

[முற்பகல் 10-30]

குறிப்பாக நம்முடைய பொருளாதாரத்தில் மட்டுமல்ல; கல்வியிலும் நாம் பின்தங்கித்தான் இருக்கிறோம். மறைந்த பெருந்தலைவர் காமராஜர் அவர்கள் குக்கிராமங்கள் தோறும் கல்வி இருக்க வேண்டும் என்றும், மாநகரங்கள்தோறும் கல்வி இருக்க வேண்டும் என்றும் ஒரு அடிப்படை நோக்கத்தோடு ஆங்காங்கே எல்லா இடங்களிலும் பள்ளிகளை ஆரம்பித்தார்கள். நாமும் கல்விக்காக 24.5 சதவீதம் செலவு செய்துகொண்டு வருகிறோம். ஆனால் இப்போது கிராமப்புற பகுதிகளில் பார்த்தால் ஆசிரியர்களின் கல்வி நிலையைப் பார்த்தால் கல்வித்தரம் ஏழை, எளிய மக்களுக்கு சரியாகப் போய்ச் சேருவதில்லை. அதற்கு என்ன காரணம்? 1958 ஆம் ஆண்டிலே பெருந்தலைவர் காமராஜர் அவர்கள் பஞ்சாயத்துச் சட்டத்தைக் கொண்டு வந்தார்கள். உற்பத்தி பெருக வேண்டும் என்பதற்காக வும், தொடக்கக் கல்வி பெருக வேண்டும் என்பதற்காகவும் அவ்வாறு கொண்டுவந்தார்கள். ஆனால் அந்த நோக்கம் இப்போது நிறைவேறவில்லை.

இப்போது தேர்ந்தெடுக்கப்பட்ட உள்ளாட்சி மன்றங்கள் வந்துவிட்டன. ஆனால் அவற்றுக்கெல்லாம் எந்தவிதமான பவரும் இப்போது கிடையாது. எனவே இப்போது இருக்கின்ற நிலைமையை உத்தேசித்துத் தொடக்கக் கல்வியினை பஞ்சாயத்து யூனியன்களிடத்திலே ஒப்படைக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து வேளாண்மை உற்பத்தியினைப் பொறுத்தவரையில் ஆங்காங்கே இருக்கின்ற உள்ளாட்சி மன்றங்களோடு உரிய தொடர்பு இல்லாத காரணத்தால் வேளாண்மை உற்பத்தி

136454

நல்ல நிலைமையில் இல்லை. எனவே வேளாண்மையை உள்ளாட்சி மன்றங்களோடு இணைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அவ்வாறு இணைப்பது நன்றாக இருக்கும் என்ற நம்பிக்கையின் அடிப்படையில் நான் அவ்வாறு கேட்டுக்கொள்கிறேன்.

கல்வித் துறையினைப் பொறுத்தவரையில் ஏராளமான இடங்களில் பல பதவிகள் காலியாக இருக்கின்றன. அதே போன்று பொதுப்பணித் துறையினை எடுத்துக்கொண்டாலும் பல பதவிகள் காலியாக இருக்கின்றன. இப்படி சாதாரணமாக 100, 150 போஸ்ட்கள்; பல்வேறு உயர் பதவிகள் பல இடங்களில் காலியாக இருக்கின்றன. இப்படி இருப்பதன் காரணத்தால் தான் போடப்படுகின்ற திட்டங்கள் நாட்டு மக்களுக்குப்போய்ச் சேருவதில்லை. எனவே இந்த அரசு உரிய வகையில் அதிகாரிகளுக்குப் பதவி உயர்வு கொடுப்பதில்லை என்று நான் குற்றம் சாட்ட விரும்புகிறேன். ஏன் இந்த நிலைமை ? காலியாக இருக்கின்ற பதவிகளை நிரப்புவதில் ஏற்படும் காலதாமதத்திற்குக் காரணம் என்ன ?

நீதிமன்றங்களில்கூட அதாவது சாதாரண முன்சீப் கோர்ட்டுகளில்கூட பல இடங்களில் நீதிபதி பதவிகள் காலியாக இருக்கின்றன. இவ்வாறு முன்சீப் கோர்ட்டுகளில் மட்டுமல்லாது மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டுகளிலும்கூட பல இடங்களில் பதவிகள் காலியாக இருக்கின்றன. இதன் காரணத்தால் ஏழை எளிய மக்களுக்குக் கிடைக்க வேண்டிய நீதி கிடைக்காமல் இருக்கிறது என்று நான் குற்றம் சாட்டுகிறேன். வழக்குரைஞர்கள் அத்தனைபேரும் அவ்வாறு காலியாக இருக்கின்ற இடங்கள் குறித்து கோரிக்கைகளை அனுப்பி இருக்கிறார்கள். அப்படி உடனடியாக அந்தப் பதவிகளை எல்லாம் நிரப்ப வேண்டும் என்று கோரிக்கை வந்தாலும்கூட நிரப்பப்படவில்லை. அவ்வாறு நிரப்பப்படாமல் இருப்பதற்கான காரணம் என்ன என்பது புரியவில்லை. இப்படி நாட்டிலே இருக்கின்ற பல்வேறு பதவிகள் நிரப்பப்படாமல் இருப்பதால் மக்களுக்குக் கிடைக்க வேண்டிய நன்மைகள் அவர்களுக்குப் போய்ச் சேரவில்லை.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நீதிமன்றங்களில் காலியாக இருக்கின்ற இடங்களைப் பொறுத்தவரையில் உள்ள பிரச்சினை இப்போது ஏற்பட்ட பிரச்சினை இல்லை. 1965 ஆம் ஆண்டிலிருந்தே தற்காலிகமாக கீழ்மட்ட நீதிமன்றங்களுக்கு நீதிபதிகளை நியமிக்கிற முறை நடைமுறையில் இருந்து அதன் காரணமாக உயர் நீதிமன்றத்தால் தேர்ந்தெடுக்கப்பட்ட நிர்வாகத் துறையைச் சேர்ந்தவர்கள் 1965 ஆம் ஆண்டிலிருந்து தொடர்ந்து நீதித் துறையிலே பணியில் இருந்து வந்தார்கள். அவர்களை நிரந்தரப்படுத்துவதா அல்லது தாய்த்துறைக்கு அல்லது வீட்டுக்கு அனுப்பிவிடுவதா என்ற பிரச்சினை வந்தது. வழக்குரைஞர்கள் அவர்களை நிரந்தரப்படுத்தக்கூடாது என்று கோரிக்கை எழுப்பினார்கள். 1965 ஆம் ஆண்டிலிருந்து பதவியில் இருந்து வருகிறவர்கள் அவர்களை நிரந்தரப்படுத்தவேண்டும் என்ற கோரிக்கையை எழுப்பினார்கள். இறுதியாக, கிட்டத்தட்ட 15, 20 ஆண்டுக்காலமாக அவர்கள் பதவியில் இருந்து அனுபவம் பெற்று இருக்கின்ற காரணத்தால் அனுபவரீதியில் அவர்களைப் பதவியில் நிரந்தரப்படுத்த வேண்டும் என்று அரசு முடிவெடுத்தது. அதற்கு மாறாக தடை உத்தரவை வழக்குரைஞர்கள் நீதிமன்றத்தில் பெற்றார்கள். இப்படி காலதாமதம் ஆன காரணத்தால் பல இடங்களில் நீதிபதி பதவிகள் காலியாக இருக்கின்றன. அந்தப் பதவிகளை நிரப்ப வேண்டும் என்ற வகையில் தேர்வாணைக் குழு விளம்பரப்படுத்தி, அதன் பின்னர் தேர்வுகளை நடத்தி முடித்து இருக்கிறது. அந்தப் பட்டியல் உயர்நீதி மன்றத்திற்குச் சென்றுவிட்டது. இன்னும் சில தினங்களில் அதற்கான உத்தரவு வந்துவிடும் என்று உயர் நீதிமன்றத்திடமிருந்து தகவல் வந்திருக்கிறது. எனவே அந்தப் பிரச்சினை தீர்ந்துவிடும்.





**திரு. ந. சிவஞானம் :** மாண்புமிகு பேரவைக் துணைத் தலைதலைவர் அவர்களே, நம்முடைய அமைச்சர் அவர்கள் நீண்ட விளக்கம் கொடுத்ததற்காக நன்றி. அந்த நீண்ட நாளைய காலதாமதம் ஏன்? இவ்வளவு காலம் ஆகியிருக்கக் கூடாது என்பது தான் என் கருத்து, அரசு இன்னும் சற்று சீக்கிரமாகவே அதற்கு முயற்சி செய்திருக்க வேண்டும் என்பது தான் எங்களுடைய கோரிக்கை. 1965லிருந்து இத்தகைய குறைகள் இருப்பதாகச் சொல்லபடுகிறது. இத்தகைய காலதாமதத்தை தவிர்க்க ஏதாவது சட்ட சிக்கல் இருந்திருந்தால் உடனடியாக அதைத் தீர்த்திருக்க வேண்டும் என்பது தான்.....

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சட்டச் சிக்கல் என்று ஒன்றும் இல்லை. நிர்வாகத்திலே கடந்த காலத்திலே இருந்த கோளாறு தான் காரணம். நீதித் துறைக்கும் நிர்வாகத் துறைக்கும் ஏற்பட்ட சில பிரச்சினைகள் காரணமாக இத்தகைய நிலைமை இருந்து வந்தது. இந்த அரசு வந்த பிறகு நடவடிக்கை எடுத்ததன் காரணத்தால்தான் வெளியிலேயே வந்திருக்கிறது, விரைவிலே தீர்க்கப்படவும் இருக்கிறது.

**திரு. ந. சிவஞானம் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நீண்ட காலத்திற்குப் பிறகாவது இருக்கின்ற நடை முறைச் சிக்கல்கள் தீர்க்கப்படுமானால் மக்கள் மகிழ்ச்சியடைவார்கள். ஏற்படுகின்ற சிக்கல்களை அவ்வப்போது உடனடியாகவே தீர்க்க வேண்டும் என்பது தான் எங்களுடைய கோரிக்கை என்பதையும் நான் தெரிவித்துக் கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

[திரு. ந. சிவஞானம்] [1986 மார்ச் 21

அதே போல இயற்கையின் சீற்றத்தால் தமிழகத்தில் உள்ள விவசாயப் பெருமக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டு பல்வேறு இன்னல் களையும் கஷ்டங்களையும் அனுபவித்துக் கொண்டு வருகிறார் கள். குறிப்பாக புயல் வெள்ளம் வறட்சி என்று மாறி மாறி வரும்போது, விவசாய பெருங்குடி மக்கள், அவர்கள் சிறு விவசாயி யாக இருந்தாலும் சரி, பெரிய விவசாயியாக இருந்தாலும் சரி, கடன் வாங்கி விவசாயம் செய்ய வேண்டிய நிலைமைக்குத் தான் ஆளாகிறார்கள். இதனால் அவர்களுடைய கடன் சுமை தாங்க முடியாத அளவிற்கு போகிறது. அவர்களும் இது குறித்து பல் வேறு நேரங்களில் அரசாங்கத்திடம் கோரிக்கை விட்டிருக் கிறார்கள். அரசாங்கத்திற்கும் அவர்களுடைய நிலைமை குறித்து நன்கு தெரியும் ஆனாலும், ரெவின்யூ துறை மூலம் வரியை தள்ளுபடி செய்திருக்கிறார்கள் போதிய விளைச்சல் இல்லை என்றால் மூன்றில் ஒருபகுதி வசூல் செய்து விட்டு மீதியைக் கூட தள்ளுபடி செய்திருக்கிறார்கள். ஆனால் கூட்டுறவுத் துறை யின் மூலம் பெறும் கடன்களை மட்டும் தள்ளுபடி செய்யாமல், தள்ளித் தள்ளிபோட்டுக் கொண்டே போவதால், ஆயிரம் ரூபாய் கடன் வாங்கிய விவசாயிக்கு, வட்டி மட்டும் 3,000 ரூபாய் சேர்ந்து, 4 ஆயிரம் ரூபாய் கட்ட வேண்டிய பெரும் சுமைக்கு ஒரு சாதாரண விவசாயி ஆளாக்கப்படுகிறார். என்றால், அவர் களுக்காக இந்த நிதி நிலை அறிக்கையிலே ஏதாவது சொல்லி யிருப்பீர்களா, அவர்களுக்கு ஏதாவது நிவாரணம் கிடைக்குமா என்ற நம்பிக்கையில் தேடித் தேடிப் பார்த்தாலும் எங்களுக்கு ஏமாற்றமே மிஞ்சியது.

விவசாயத்தையே நம்பியிருக்கிற விவசாய மக்கள், நாள் தோறும் உழைத்தாலும் உழக்கு கூட மிஞ்சாது மக்கள் பெரும் கஷ்டத்திலே இருக்கிறார்கள். கடனிலே சிக்கிக் கொண்டு அவதிப்படுகிறார்கள். அவர்களுக்கு என்று எந்த நிவாரணமும் இல்லையே என்று எங்களுக்கு வருத்தமாக இருக்கிறது. விவ சாயிகளை வாழ வைப்பதுதான் எங்கள் லட்சியம் என்று ஏதேதோ சொல்கிறார்கள். ஆனால் ஒன்றும் இல்லை. குறிப் பாக சென்ற முறை மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் கடைசி யிலே பேசும்போது சொன்னார்கள். விவசாய பெருங்குடி மக்கள் கடன்களை அப்படியே வைத்துக்கொண்டு, அதை திருப் பிக் கட்டக் கூடாது என்ற நிலையிலே இருப்பதாகக்கூட அவர் கள் சொன்னார்கள். நான் மாண்புமிகு நிதியமைச்சர் அவர் களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். அவர்களுக்கு கட்டக் கூடாது என்ற எண்ணம் இல்லை. சாதாரண விவசாய மக்கள் கடன் சுமையின் காரணமாகத்தான் கட்ட முடியாத சூழ்நிலை யில் தவித்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு இந்தக் கடன் சுமையே பெரும் சுமையாக இருக்கிற காரணத்தால், அவர்களுடைய சுமையை நிச்சயமாகக் குறைக்க வேண்டும். அதற் காக நம்முடைய மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் பேசும்



1986 மார்ச் 21] [திரு. ந. சிவஞானம்]

போது, அவர்களுக்கு ஏதாவது நிவாரணம் கொடுக்கக் கூடிய அளவுக்கு ஏற்பாடு செய்வதற்கான அறிவிப்பை அறிவிக்க வேண் டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக் கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

அதே போல உங்களுக்கெல்லாம் நன்றாகத் தெரியும். காவிரி யிலே இருந்து தண்ணீர் கிடைக்காது என்ற நிலைமையில் காவிரி யையே நம்பிக் கொண்டு இருக்கிற தஞ்சாவூர் பகுதி விவசாய மக்கள், மற்றும் காவிரி டெல்டாப் பகுதியில் உள்ள விவசாய மக்கள், விவசாயமே செய்ய முடியாது என்ற நிலைமை இருக் கிறது. அந்த நிலைமை காவிரி டெல்டாப் பகுதியில் முழுமையும் இருக்கிறது. பக்கத்திலே இருக்கிற கர்நாடக அரசிடம் முனைப் பாக இருந்து பேசி, இதற்கு ஒரு சரியான தீர்வு காணவில்லை என்றால், நம் மாநிலத்தில் விவசாயமே பாதிக்கப்படும். அப்படி அவர்களோடு பேசித்தீர்வு காண முடியவில்லை என்றால், டிரிப் யூனலுக்காவது சென்று ஏற்பாடு செய்ய முயற்சி செய்ய வேண்டும். அதற்காக இப்போது என்ன நடவடிக்கையை எடுத்திருக்கிறீர்கள். சாதாரணமாக காவிரி தண்ணீர் கிடைக்குமா கிடைக்காதா என்றே தெரியாத நிலையில் காவிரி டெல்டாப் பகுதி விவசாய மக்கள் பெரிதும் ஏமாற்றத்திலே இருக்கிறார்கள். இது நம்முடைய மாநிலப் பிரச்சினை. கர்நாடக மாநிலத்திற்கு சாதாரணமாக சிறிய பிரச்சினையாக இருக்கலாம். கேரளாவிற்கு சாதாரணமான பிரச்னையாக இருக்கலாம். ஆனால் நமக்கு இது பொருளாதார பிரச்னை, வாழ்வுப் பிரச்னை. ஆகவே முதலமைச்சர் அவர்களே இதில் நேரடியாக ஈடுபட்டு, கர்நாடக அரசோடு பேசித் தீர்க்க வேண்டும்.

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, தமிழகத்தின் உயிர் நாடிப் பிரச்னையாகிய இந்த காவிரி நீர் பிரச்னையைப் பொறுத்த மட்டில், தமிழக அரசு முனைப்போடு செயல்பட்டு கர்நாடக அரசோடு தொடர்ந்து பேச்சு வார்த்தை நடத்துவதற்கான முயற்சியிலே ஈடுபட்டாலும் கூட, இதிலே இரு தரப்புப் பேச்சு வார்த்தை என்பது ஒரு கை ஓசையாகத்தான் இருக்கிறது என்பது ஒரு பெரிய துரதிருஷ்ட மான நிலைமை ஆகும். அதற்கு தமிழக அரசை நிச்சயமாகக் குறை சொல்ல முடியாது. தொடர்ந்து நடவடிக்கையை மேற் கொண்டு வருகிறோம். பேச்சு வார்த்தைகளை தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் தொடர்ந்து கர்நாடக மாநிலத்தோடு தொடர்பு கொண்டு செய்து வருகிறார்கள் என்பதை மட்டும் தெரிவித்துக்கொண்டு, நிச்சயமாக எந்த மாநிலத்து மக்களிடமும் தமிழக மக்கள் ஏமாறுகின்ற அளவுக்கு தமிழக அரசு சோடை போகாது என்று நான் தெரிவித்துக் கொள் கிறேன்.

திரு. ந. சிவஞானம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்கம் கொடுத்ததற்கு நன்றி. நான் கேட்டுக் கொள்வது என்ன வென்றால் இது நம்முடைய மாநிலத்தில் உள்ள தலையாய பிரச்சினை. ஆகவே பக்கத்திலே இருக்கிற மாநில அரசுகள் செவி சாய்க்காவிட்டாலும் டிரிப்பியூனலுக்கு போக வேண்டும். அல்லது உச்ச நீதி மன்ற தீர்ப்பிற்கு செல்ல வேண்டும். அதற்கான வாய்ப்புகள் இன்றைய தினம் இருக்கின்றன என்பதைத் தான் சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

(முற்பகல் 10-40)

காலதாமதம் செய்யக் கூடாது என்று என்னுடைய எண்ணத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன். அப்படிப்பட்ட சூழ்நிலையை உருவாக்க வேண்டும்.

காவிரி டெல்டா பகுதிகளை நவீனப்படுத்த வேண்டுமென்ற நோக்கத்தில் 200 கோடி ரூபாய் உலக வங்கிக் கடன் பெற்று திட்டத்தை நிறைவேற்ற இன்வெஸ்டிகேஷன்ஸ் எல்லாம் நடத்தினார்கள். ஆனால் அந்தத் திட்டம் என்னவானது என்று தெரியவில்லை. எனக்கு கிடைத்த தகவலின்படி பக்கத்திலிருக்கிற கர்நாடக அரசுடன் இதில் தேவையான ஒப்பந்தத்தை செய்து கொள்ளாத காரணத்தால்தான் இதில் தாமதம் ஏற்பட்டிருக்கிறது என்று சொல்லப்படுகிறது. ஆகவே காவேரி டெல்டா பகுதியை நவீனப்படுத்த, அந்தப் பகுதியில் வசதிகளைப் பெருக்க உலக வங்கிக் கடன் பெற்று திட்டத்தைச் செயல்படுத்தும் சூழ்நிலையை ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

காவிரி டெல்டா பகுதியில் பூமி மட்டத்தில் தண்ணீர் இருக்கிறது. அந்தத் தண்ணீரை பூமிக்குமேலே கொண்டு வரவேண்டும் அதற்காகத்தான் பில்ட்டர் பாயிண்டுகளை அரசு பல்வேறு இடங்களில் அமைத்துக் கொண்டு வருகிறது என்பது தெரியும். சீர்காழி, மாயவரம் பகுதிகளில் பில்ட்டர் பாயின்டுகளில் தண்ணீர் வருமென்றாலும், மின் இணைப்புக் கொடுக்கப்படாததன் காரணமாக தண்ணீர் இல்லாமல் அந்தப் பகுதியில் இருப்பவர்கள் விவசாயம் செய்ய இயலாமல் இன்றைய தினம் இருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

போர்வெல்கள் (Bore-well) போன்றவற்றை அமைப்பதற்கு கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக கடன்களை அளிக்க தேவையான வசதிகளை அரசு செய்ய வேண்டும். தஞ்சை மாவட்டத்தில் போர்வெல்கள் போடுவதை கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக செயல்படுத்த வேண்டுமென்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.





அதே போல தமிழகத்தில் மக்களின் பொருளாதார வாழ்வை எடுத்துக் கொண்டால் மக்கள் கேரளாவிற்கு அடுத்தபடியாக நமது மாநிலத்தில் தென்னை உற்பத்தியை நம்பி இருக்கிறார்கள். தென்னை உற்பத்திக்கு நமது மாநிலத்தில் அதிகமாக ஊக்கம் கொடுக்கப்படவில்லை என்பதை ஞாபகப்படுத்த விரும்புகிறேன். காயர் போர்டு என்ற அமைப்பு கொச்சியில் இருக்கிறது. தென்னை வளர்ப்பதற்காகவும், தென்னை பொருள்களை உற்பத்தி செய்வதற்காகவும் காயர் போர்டிலே பல வசதிகள் செய்து கொடுக்கப்படுகின்றன. ஆனால் அந்த வசதிகள் நம்முடைய மாநிலத்தில் செய்து கொடுக்கப்படவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். காயர் போர்டு உறுப்பினர்கள் மூலமாக அத்தகைய குறைகளை சொல்லியிருக்கிறோம். வருங்காலத்தில் அந்த வசதிகளைச் செய்து கொடுப்போம் என்று அவர்கள் உறுதி அளித்திருக்கிறார்கள். ஆகவே நம்முடைய தமிழகத்தில் காயர் போர்டு ரீஜினல் ஆபிஸ் ஒன்றைத் திறந்து ஏழை எளிய மக்களுக்கு, தென்னை வளர்க்கும் மக்களுக்கு வசதிகளை மாநில அரசும், மத்திய அரசும் செய்து கொடுக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்தவரையில் தொழிற்துறையில் பின் தங்கிய பகுதியாக இருக்கிறது. இது நாவலர் அவர்களுக்கு நன்றாகத் தெரியும். நாளெல்லாம் வயலில் பொழுதைப் போக்கி ஊருக்கு உற்பத்தி செய்கிற சாதாரண தொழிலாளியாக இருக்கிற மக்களின் நிலையை மாற்றுவதற்கு தொழிற்சாலைகளை அமைப்பதற்கு இன்றைய தினம் நரிமணம் போன்றவைகள் நம்மை ஊக்குவிக்கின்றன. தஞ்சை மாவட்டத்தில் அகல ரயில் பாதை போட வேண்டும், அனல் மின்சார நிலையத்தை ஏற்படுத்த வேண்டுமென்ற நோக்கத்தோடு பல்வேறு திட்டங்களை இந்த அரசு செய்ய வேண்டும். குறிப்பாக வேதாரண்யம் பகுதியில் உப்பு அதிகமாக இருப்பதால் உப்பை மூலப் பொருளாக வைத்துக்கொண்டு பல்வேறு தொழிற்சாலைகளை ஏற்படுத்துவதற்கு அரசு முயல வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதைப் போல காவிரியில் வெள்ளம், வெண்ணாற்றில் வெள்ளம் வந்தது என்றால் வெள்ளத்தால் பாதிக்கப்படுகிற விவசாயிகள் பல்வேறு இக்கட்டான சூழ்நிலைக்கு ஆளாகிறார்கள். ஆகவே அப்படிப்பட்ட சூழ்நிலைகளை இன்றைய தினம் தடுத்து நிறுத்துவதற்கு தஞ்சை மாவட்டத்தில் முதலைமுத்துவாரித் திட்டம் என்ற திட்டத்தை நம்முடைய நீர்ப்பாசனத் துறை அமைச்சர் அவர்கள் பொதுக் கூட்டங்களிலும், இந்த மாமன்றத்திலும் அறிவித்திருக்கிறார்கள். ஆனால் அந்தத் திட்டம் இன்னும் செயல்படவில்லை. இந்தச் சிறு நீர்ப் பாசனத் திட்டம் என்பது

சாதாரணமாக வெள்ளத்தைத் தடுப்பது மட்டுமல்ல. வறட்சியால் பாதிக்கப்படுகிற புதுக்கோட்டை, தஞ்சை மாவட்டத்தில் ஓரளவிற்கு உற்பத்தியைப் பெருக்கிக் கொள்கிற அளவிற்கு உள்ள நல்ல திட்டம். ஆகவே இப்படிப்பட்ட சிறிய திட்டங்களை, ஒரு கோடியில் ஆரம்பிக்கப்பட்ட திட்டம் இப்போது 5 கோடியாக உயர்ந்திருக்கிற காட்சியை நாம் காண்கிறோம். எனவே இந்த முதலைமுத்துவாரித் திட்டத்தை நிறைவேற்ற வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பட்டது.)

அடுத்து வல்லம் பேரூராட்சிக்கு குடிநீர் மேல்நிலைத் தொட்டி புதிதாகக் கட்டவேண்டும் என்றும், பட்டுக்கோட்டை டூ சில்லத்தூர் தணிகைவிடுதி, ரகனைப்பட்டணம் வழியாக, நகரப் பேருந்து விடவேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன்.

மேலும் பட்டுக்கோட்டை, அண்ணாபுரம், வெங்கனை, கோட்டைக்காடு, தோப்புநாயகம் வழியாக கரம்பக்குடி வரை நகரப் பேருந்து விடவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். ஒரத்தநாட்டில், புதிய பஸ் நிலையம் ஒன்றையும், முன்சீப் கோர்ட் ஒன்றையும் ஏற்படுத்தித் தர வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன். மேலும் வல்லம் பகுதியில் புதிய தொழிற்சாலை ஒன்றை அமைத்துத் தர வேண்டும் என்று கேட்டுக்கொண்டு முடிக்கிறேன்.

திருமதி பா. வளர்மதி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்டு இருக்கின்ற இந்த நிதிநிலை அறிக்கையை வரவேற்று என்னுடைய சில கருத்துக்களை எடுத்து வைக்க விரும்புகிறேன். மாட மாளிகைகளையும் மணி மகுடங்களையும் பார்க்காமல், மண் குடிசைகளைப் பார்த்திருக்கிற காரணத்தால் இந்த நிதி நிலை அறிக்கையை நான் வரவேற்கக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

அரண்மனை நிலா முற்றங்களை மட்டுமே பார்க்காமல், பாமர மக்களின் பணி விண்ணப்பங்களையும் பார்த்திருக்கிற காரணத்தால் இந்த நிதி நிலை அறிக்கையை நான் வரவேற்கிறேன்.

புதிய சுமைகள் இல்லாததோடு மட்டுமல்லாமல், இருந்த சுமைகள் இறக்கி வைக்கப்பட்டு இருக்கிற காரணத்தால், இந்த நிதிநிலை அறிக்கையை நான் வரவேற்கக் கடமைப்பட்டு இருக்கிறேன். சென்ற ஆண்டு இறுதிப் பற்றாக்குறை 264 கோடி என்று சமர்ப்பிக்கப்பட்டு இருக்கின்றபோது, இந்த நிதி நிலை அறிக்கையில், இந்த ஆண்டு 12 கோடியே 24 லட்சம் இறுதிப் பற்றாக்குறை கொண்டதாக அறிவிக்கப்பட்டதிலிருந்து



இந்த நிதி நிலை அறிக்கை மக்களிடையே இன்றைக்கு டானவீக்கத்தைக் குறைக்கவும், வாங்கும் சக்தியை அதிகரிக்கவும், அந்த அளவிற்கு தயாரிக்கப்பட்டு உள்ள இந்த நிதி நிலை அறிக்கையை நான் வரவேற்கக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

இந்த நிதி நிலை அறிக்கை நாட்டு மக்களுக்கு தேவைப்படுகிற அளவிற்கு தயாரிக்கப்படவில்லை என்கிற குற்றச்சாட்டுகளை கடந்த 2 நாட்களாக இந்த மண்டபத்தில் எடுத்து வைத்துக் கொண்டு இருக்கிறார்கள். என்ன இல்லை இந்த பட்ஜெட்டில். தாய்மார்களுக்கு சலுகை இல்லையா? வியாபாரிகளுக்கு விற்பனை வரிச் சலுகை இல்லையா? அல்லது விவசாய உற்பத்தியைப் பெருக்க திட்டம் இல்லையா? அல்லது மின்சார உற்பத்திக்கு அதிக நிதி ஒதுக்கப்படவில்லையா? ஆக எல்லாத் தரப்பினருக்கும் பயன் அளிக்கக்கூடிய அளவிற்கு, இந்த நிதி நிலை அறிக்கையை இன்றைக்கு புரட்சித் தலைவர் அரசு தயாரித்து இருக்கிற காரணத்தால், எல்லாத் தரப்பினரும் இன்றைக்கு பாராட்டக்கூடிய அளவிற்கு இந்த நிதி நிலை அறிக்கை உள்ளது.

தமிழகம் கடந்த 5 ஆண்டுகளில் புயலால் சேதம், வெள்ளத்தாலும் சேதம், வறட்சியாலும் சேதம் என்று இந்த 3 கொடுமைகளாலும் மக்கள் கொடுமைக்கு ஆளாக்கப்பட்டு பாதிக்கப்பட்டது இந்த நாட்டு மக்களுக்குத் தெரியும். நெருப்பில் எரிந்தோம், நீரில் மூழ்கினோம் என்கிற விசித்திர நிலைமை இன்றைக்கு நம்முடைய தமிழகத்திலே ஏற்பட்டு இருந்தது. அப்படி இருந்தாலும்கூட, இன்றைக்கு தமிழகம் உணவு உற்பத்தியில் தன்னுடைய இலக்கை அடைவதில் வெற்றி கண்டிருக்கிறது என்று சொன்னால், இந்த அரசை நாம் பாராட்டியாக வேண்டும். தொல்லைகள் ஏற்பட்ட நேரத்தில்கூட, வளர்ச்சிப் பணிகளில் எதையும் குறைத்துக் கொள்ளாமல், அவற்றை வெற்றிகரமாக நடத்தித் தந்திருக்கிற மாண்புமிகு இதய தெய்வம், புரட்சித் தலைவர் அவர்களை நான் பாராட்டுகிறேன்.

எத்தனையோ புதிய திட்டங்கள் கடந்த ஆண்டுகளில் அறிவிக்கப்பட்டபோது, இது நடைமுறைக்கு வருமா? நடத்த முடியுமா? என்றெல்லாம் சந்தேகத்தின் பிள்ளைகள் சஞ்சலத்தில் கேள்விகளைக் கேட்டார்கள். சத்துணவுத் திட்டமாகட்டும், இல்லை ஆதரவற்ற அனாதைகளுக்கு வேட்டி சேலை வழங்குவதாகட்டும், ஏழைச் சிறுவர்களுக்கு இலவசப் பாடநூல் வழங்குகிற திட்டமாகட்டும் இல்லை, சீருடை வழங்குகிற திட்டமானாலும்கூட, சொன்னதைச் செய்வதில், நினைத்ததை முடிப்பதில் வல்லவராக உள்ள எங்களுடைய புரட்சித் தலைவர், எதற்கும் பின் வாங்கியது இல்லை.

வீடு கட்டுவதற்கு பணம் வாங்கிய அரசு ஊழியர் பணியில் இருக்கிறபோது இறந்துவிட்டால் அவர் பெற்ற கடனை, வட்டியுடன் ரத்து செய்வோம் என்று இன்றைக்கு அரசு அறிவித்து இருப்பதை நான் பாராட்டக் கடமைப்பட்டு இருக்கிறேன். அரசு ஊழியர் பட்ட கடனுக்காக அவர் இறந்த பிறகு அவர் மனைவிக்கு கடன் தொல்லை இருக்கக் கூடாது என்ற காரணத்தாலே கடனை ரத்து செய்திருக்கிற புரட்சித் தலைவர் அவர்களுக்கு தாய்மார்களின் சார்பாக நான் நன்றி செலுத்தக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

(முற்பகல் 10–50)

தமிழகத்தைப் பொறுத்தவரை தொழில் துறை மற்ற மாநிலங்களோடு ஒப்பிட்டுப் பார்க்கையில் 8.1 சதவீதம் வளர்ச்சி அடைந்துள்ளது என்ற மகிழ்ச்சியான செய்தியை இன்றைக்கு இந்த நிதிநிலை அறிக்கை தந்திருக்கிறது. தொழில் துறை வளர்ச்சியில் தமிழகம் பின்தங்கி இருக்கிறது என்ற குற்றச்சாட்டை எதிர்க்கட்சிகள் இன்றைக்கு இந்த மன்றத்திலே வைத்துக்கொண்டிருக்கிறார்கள். இதை திராவிட முன்னேற்றக் கழகம் சொல்கிறபோது எங்களால் புரிந்து கொள்ள முடிகிறது, ஆனால் எங்களோடு நெருக்கமாக இருக்கிற காங்கிரஸ் கட்சி சொல்கிறபோதுதான் எங்களால் புரிந்துகொள்ள இயலவில்லை. தமிழக அரசு நினைத்த வுடனே தமிழ்நாட்டிலே எந்தத் தொழிலையும் நடத்திவிட முடியாது. அதற்கான அனுமதி வழங்குகிற அதிகாரம் மத்திய அரசின் கையிலே உள்ளது. கடந்த 15 ஆண்டுகளில் மத்திய அரசு கனரக தொழிற்சாலை ஒன்றுகூட இன்றைக்கு தமிழ் நாட்டிற்குத் தரப்படாத நிலை உருவாக்கப்பட்டிருக்கிறது. சேலத்தில் ஆரம்பிக்கப்பட்டது கூட உருக்காலைதானே தவிர இரும்பாலை அல்ல என்பது மதிப்பிற்குரிய, மாண்புமிகு காங்கிரஸ் கட்சி உறுப்பினர்களுக்குத் தெரியும். தொழிற் சாலைகளுக்கு அனுமதி வழங்குவதில் மத்திய அரசு காட்டிக் கொண்டிருக்கிற தாமத போக்கு ஏன் என்றுதான் எங்களுக்கு இந்த நேரத்தில் புரிந்துகொள்ளமுடியவில்லை. தொழிற்சாலை தொடங்குவதோடு இன்றைக்கு அதை தொடங்குவதற்கு தடையாக இருக்கிற சூழ்நிலை தமிழகத்திலே ஏற்பட்டிருக் கிறது. தொழிற்சாலைகளுக்கு அனுமதி கொடுங்கள் என்று தமிழக அரசு மைய அரசைக் கேட்டால் அகல ரயில் பாதை இல்லையென்று சொல்கிறார்கள். சரி, அகல ரயில் பாதை தான் அமைத்துத்தாருங்கள் என்று கேட்டால் அதற்கு விசித்திரமான காரணங்களை இன்றைக்கு மைய அரசு சொல்லிக் கொண்டிருக்கிறது. ஒரு நாட்டின் தொழில் துறை வளர்ச்சி அந்த நாட்டின் மின் துறை வளர்ச்சியோடு நெருக்கமான தொடர்பு கொண்டிருக்கிறது. மின் பற்றாக்குறை யினால் நிச்சயமாக தொழில்துறை பாதிக்கவே செய்யும். இதையெல்லாம் உணர்ந்திருக்கிற காங்கிரஸ் நண்பர்கள் ஏன்





இந்தக் காரணத்தைச் சொல்கிறார்கள் என்றுதான் எங்களுக்கு புரியவில்லை. தமிழகத்தை மிரட்டுகின்ற தொழில் கேடுகளில் ஒன்று இன்றைக்கு மின்சார பற்றாக்குறை. தமிழ்நாட்டிலே புதிதாக தொழில் தொடங்க நினைப்பவர்கள்கூட இன்றைக்கு மின் பற்றாக்குறையை எண்ணி அஞ்சிக் கொண்டிருக்கிறார்கள், பயந்துகொண்டிருக்கிறார்கள். இந்த ஆண்டைப் பொறுத்த வரை மின்சக்தித் துறையால் திட்டச் செலவுக்காக 395 கோடி ரூபாய்களை தமிழக அரசு ஒதுக்கியிருக்கிறது.

நெய்வேலியில் இரண்டாவது அனல் மின்நிலையம் 630 மெகா வாட் மின்சாரத்தை உற்பத்தி செய்கிறது. இதில் தமிழகத்தின் பங்காக 176 மெகா வாட் மின்சாரம் மட்டுமே இன்றைக்கு கிடைக்கிறது. ஆறாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் மைய அரசு 19,666 மெகா வாட் மின்சாரம் கூடுதல் உற்பத்தி செய்திட திட்டமிட்டு இருக்கிறது. ஆனால் இதிலே தமிழகத்தின் பங்காக வெறும் 230 மெகா வாட் மின்சாரம் மட்டுமே ஒதுக்கப்பட்டிருக்கிறது. இருக்கிற மின் பற்றாக்குறையைப் போக்கி தமிழகத்திலே தொழில் வளர்ச்சி ஏற்படவேண்டுமானால் குறைந்தபட்சம் 2,000 மெகா வாட் மின்சாரமாவது தமிழகத்திற்குத் தேவை. கல்பாக்கம் அணு மின் நிலையம் துவக்கப்படுகிறபோது உற்பத்தி ஆகிற மின் சாரம் முழுவதும் தமிழகத்திற்கே தரப்படும் என்ற வாக்குறுதி தரப்பட்டது. ஆனால் இப்போது மற்ற மாநிலங்களுக்கும் பகிர்ந்து அளிக்கப்படும் என்று மைய அரசு நம்மிடையே பதில் தந்து கொண்டிருக்கிறார்கள். அதுமட்டுமல்ல, பழனியின் அருகே சண்முகா நதி நீர் திட்டம் 1975-வது ஆண்டு தயாரிக்கப்பட்டு மத்திய அரசின் அனுமதிக்காக தரப்பட்டது. இதன்மூலம் 30 மெகா வாட் மின்சாரம் உற்பத்தி செய்ய முடியும். இதற்கு மைய அரசின் ஒப்புதல் மறுக்கப்பட்டிருக் கிறது. அதற்குச் சொல்கிற காரணம்தான் மிக மிக வேடிக்கையான காரணம்.

சண்முகா நதி தமிழ்நாட்டிற்குள்ளே ஓடுகிற காவேரி கிளை நதி. இதில் ஒரு திட்டம் ஆரம்பிக்க வேண்டுமானால் கேரள, கர்நாடக அரசுகளின் ஒப்புதல் வேண்டும் என்று சொல்லு கிறார்கள். இந்தத் திட்டத்திற்கு ஒப்புதல் தருவதற்கு மத்திய அரசு மறுத்து இருக்கிறது. ஆனால் தமிழக அரசின் ஒப்புதல் இல்லாமல், தமிழக அரசின் அனுமதி இல்லாமல் காவேரிக்கு குறுக்கே ஒன்று அல்ல இரண்டு அல்ல, மூன்று அணைகளை கர்நாடக அரசு கட்டியிருப்பதைத் தடுப்பதற்கு நம்முடைய மத்திய அரசால் இயலவில்லை. உலகத்தில் ஒரே நதி பல மாநிலங்களுக்கு இடையே அல்ல, பல நாடுகளுக்கு இடையில் ஓடிக்கொண்டு இருப்பதற்கு பல உதாரணங்களை இந்த மன்றத் தில் வைக்க முடியும். டான்யூப் நதி ஐரோப்பாவின் பல நாடுகளுக்கு இடையில் ஓடுகிறது. செயின்ட் லாரன்ஸ் நதி கன்னடாவில் உற்பத்தி ஆகி அமெரிக்காவில் நுழைகிறது. சிந்து நதி இந்தியாவில் உற்பத்தி ஆகி பாகிஸ்தானில் நுழைந்து

[திருமதி பா. வளர்மதி] [1986 மார்ச் 21

பின் கடலில் கலக்கிறது. கங்கை நதி இந்தியாவில் உற்பத்தி ஆகி வங்க தேசத்தில் நுழைந்து பின் கல்கத்தாவின் அருகில் கடலில் கலக்கிறது. பொதுவாக நதி நீரைப் பொறுத்தவரையில் ஆற்றின் மேல் பக்கத்தில் இருக்கக்கூடிய நாடோ அல்லது மாநிலமோ கீழ் பக்கத்தில் இருக்கக்கூடிய நாட்டின் அல்லது மாநிலத்தின் ஒப்புதல் இல்லாமல் எந்த ஒரு புதிய திட்டத்தையும் செயற்படுத்த இயலாது. ஏற்கனவே இருக்கும் டெல்ட்டா பகுதிகள் பாதிக்காத வகையில்தான் எந்த ஒரு புதிய திட்டத்தையும் உருவாக்கி செயற்படுத்த முடியும் என்பது இந்த மன்றத்தில் இருக்கிற காங்கிரஸ் கட்சி நண்பர்களுக்கு தெரிந்த ஒன்றுதான். இருந்தாலும்கூட, தொழில் துறையில் வளர்ச்சி இல்லை என்ற குற்றச்சாட்டை இன்றைக்கு தமிழக அரசின்மீது எடுத்து வைக்கிறபோதுதான் உண்மையிலேயே வினோதமாக இருக்கிறது. ஆண்டுதோறும் தமிழகம் தண்ணீருக்காக ஏங்கித் தவிக்கிறது. தமிழகத்தைப் பற்றிக் கவலைப்படாமல், மத்திய அரசின் அனுமதியைப் பெறாமல், திட்டக் கமிஷனின் அனுமதி இல்லாமல் கர்நாடக அரசு 3 அணைகளை காவேரிக்கு குறுக்கே இன்றைக்கு கட்டியிருக்கிறது. இதை மத்திய அரசு இந்த நேரதில் தடுத்து நிறுத்த முடியவில்லை. (குறுக்கீடு). (கூச்சல்-குழப்பம்).

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** பேசி முடித்த பிறகு பதில் சொல்லுங்கள். வார்த்தைக்கு வார்த்தை எழுந்து பதில் சொல்ல முடியாது. தயவுசெய்து உட்காருங்கள். (குறுக்கீடு).

**திரு. என். எஸ். வி. சித்தன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அ.இ.அ.தி.மு.க. உறுப்பினர் சகோதரி வளர்மதி அவர்கள் எங்கள் மீது அடுக்கடுக்காக சில குற்றச்சாட்டுக்களை சொல்லிக்கொண்டுச் இருக்கிறார்கள். நீங்கள் சொல்லுவதுபோல் வார்த்தைக்கு வார்த்தை யாரும் பதில் சொல்ல வில்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினர் பேசும்போது எந்த ஒரு உறுப்பினர் மீதும் குற்றச்சாட்டைச் சொல்ல வில்லை. இங்கே மாநில அரசின் மீது குற்றசாட்டைச் சொல்லுகிறபோது அதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லுகிறார்கள். நீங்கள் பேசும்போது மாநில அரசின் மீது குற்றச்சாட்டைச் சொல்லுகிறீர்கள். தொழில் துறையில் முன்னேற்றமே இல்லை என்று சொல்லுகிறீர்கள். அதை இந்தப் பக்கம் இருப்பவர்கள் கேட்டுக்கொண்டு இருக்கிறார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது அதற்குப் பதில் சொல்வார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசும்போது மத்திய அரசு திட்டங்களுக்கு அனுமதி மறுக்கிறது. காலதாமதம் ஏற்படுகிறது என்று சொல்லியிருக்கிறார்கள் (கூச்சல்-குழப்பம்).



1986 மார்ச் 21]

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் இவ்வளவு ஆத்திரப்பட வேண்டிய அவசியம் இல்லை. அவர்கள் பேசும்போது எல்லாம் இந்த பட்ஜெட்டிலே எதுவுமே இல்லை, ஒன்றுமே இல்லை, உருப்படியாக எதுவும் இல்லை என்று சொன்னார்கள். நாங்கள் பொறுமையோடு கேட்டுக்கொண்டு இருந்தோம். இந்த அரசு ஒன்றுமே செய்யவில்லை என்று சொன்னார்கள், அப்போது பொறுமையோடு கேட்டுக்கொண்டு இருந்தோம். இதற்கு எல்லாம் நான் பதில் சொல்லும்போது சொல்லுவேன். அதே போல் மாண்புமிகு உறுப்பினர் அம்மையார் அவர்கள் தன்னுடைய கருத்தை எடுத்துச் சொல்லிக்கொண்டு இருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர்கள் சொல்லும்போது அவர்களுடைய கருத்தைச் சொல்லுகிறார்கள். எல்லோருக்கும் சேர்த்து இறுதியில் நான் பதில் சொல்ல இருக்கிறேன். ஆக எல்லாவற்றையும் நான் கேட்டுக்கொண்டுதான் இருக்கிறேன். மகிழ்ச்சியோடு கேட்டுக்கொண்டுதான் இருக்கிறேன். எந்த அளவுக்கு படித்து வந்து இருக்கிறார்கள், எந்த அளவுக்கு படிக்காமல் வந்து இருக்கிறார்கள் என்பதையும் பார்த்துக் கொண்டுதான் இருக்கிறேன். ஆகவே எதைப் பற்றியும் ஆத்திரப் படவேண்டிய அவசியம் இல்லை. குற்றச்சாட்டை நீங்களும் சொல்கிறீர்கள், அவர்களும் சொல்கிறார்கள். அவரவர்களுக்கு வாய்ப்பு ஏற்படும்போது பதில் சொல்லவேணடும். ஏதாவது இல்லாத ஒன்றை எடுத்துச் சொன்னால், ஏதாவது அலிகேஷன் என்று வந்தால், அல்லது மோட்டீவ் என்று வந்தால் உடனே குறுக்கிட்டு அதை மறுப்பது நல்லது. ஆனால் பொதுவாக எடுத்துச் சொல்லுகிறபோது எல்லாவற்றிற்கும் பதில் சொல்ல வேண்டும் என்று சொன்னால் யாருமே எதுவுமே சொல்ல இயலாது.

**திரு. டி. தீர்த்தகிரி கவுண்டர் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பாயின்ட் ஆப் ஆர்டர்: நம்முடைய மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் சொன்ன விளக்கத்தை நான் வரவேற்கிறேன். எங்கள் கட்சி சார்பாகப் பாராட்டுகிறேன். மிகவும் மூத்த அமைச்சர் அவர்கள், இந்த சபையின் முன்னவர் அவர்கள். அவருடைய கருத்தை பின் பற்றி நடக்க நாங்கள் தயாராக இருக்கிறோம். ஆனால் ஒன்று மத்திய மாநில அரசுகளின் உறவு நன்றாக இருக்க வேண்டும் என்று கருதுகிறோம். மத்திய மாநில அரசுகளின் உறவுகளுக்கு களங்கம் ஏற்படாமல் இருக்க வேண்டும். (குறுக்கீடு) கொஞ்சம் அமைதியாக, இருக்கவேண்டும். களங்கம் வரக்கூடாது. மாநில அரசு மீதோ நம் மீதோ நமக்குள் பேசிக்கொள்ளலாம்.

(முற்பகல் 11-00)

மத்திய-மாநில உறவுக்குக் களங்கம் ஏற்படுத்த வேண்டாம் என்ற மறைமுக குற்றச்சாட்டை எல்லாம், இங்கே சொல்ல வேண்டாம். நிதியமைச்சர் சொன்ன கருத்தைச் சொன்னேன். (குறுக்கீடு)

[1986 மார்ச் 21

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இது எப்படி பாய்ன்ட் ஆப் ஆர்டரில் வரும் என்று தெரியவில்லை. சபை நடவடிக்கைகளுக்கு, விதிமுறைகளுக்கு முரணாக நடப்பது தான் பாய்ன்ட் ஆப் ஆர்டரில் வரும். நீங்கள் ஒரு மூத்த உறுப்பினர். நான் சொல்லித்தான் உங்களுக்குத் தெரிய வேண்டுமென்பதில்லை. ' இட் வில் நாட் கம் அண்டர் பாய்ன்ட் ஆப் ஆர்டர் ' (குறுக்கீடுகள்).

திருமதி பா. வளர்மதி : மாண்புமிகு பேரவையின் துணைத் தலைவர் அவர்களே, நான் யாருடைய மனத்தையும் புண்படுத்த வேண்டுமென்ற நோக்கத்தோடு இந்த மன்றத்தில் தனிப்பட்ட கருத்துக்களை எடுத்து வைக்கவில்லை. எங்களுடைய இதய தெய்வம் புரட்சித் தலைவர் ஆட்சி நடத்துகிற விதம் சரியில்லை, இந்த ஆட்சியில் வளர்ச்சித் திட்டங்கள் உருவாக்கப்படவில்லை என்றும் இதற்கும் மேலே நேற்றைக்கு முன் தினம் எதிர்க் கட்சித் துணைத் தலைவர் மாண்புமிகு உறுப்பினர் திருமதி யசோதா அவர்கள் பேசியதைவிட நான் ஒன்றும் நிச்சயமாக எந்த அர்த்தத்திலும் இங்கே பேசுவதற்குத் தயாராக இல்லை, அவர் ஒரு படி மேலே போய் சர்வாதிகார ஆட்சி என்றெல்லாம் சொன்னார்கள். நான் அதற்குக்கூட பதில் சொல்லத் தயாராகயில்லை. நான் சொல்வது புரட்சித் தலைவர் ஆட்சியில் மத்திய அரசிடம் எத்தனையோ திட்டங்களை கேட்டு அனுப்பியிருக்கிறோம். இவைகளுக்கு அனுமதி வழங்கப் படவில்லை என்ற குற்றச்சாட்டைத்தான் எடுத்து வைத்திருக்கிறேன். நீங்கள் வேண்டுமானால், மத்திய அரசுடன் பேசி, இவ்வளவு திட்டங்களை தமிழ்நாடு அரசு அனுப்பியிருக்கிறதே, நீங்கள் மரியாதைக்குரிய பிரதம அமைச்சர் திரு. ராஜீவ் காந்தி அவர்களிடத்தில் எடுத்துச்சொல்லி, அனுமதியைப் பெற்றுத் தருவீர்களேயானால், அது சாலச் சிறந்ததாகச் இருக்கும். அதற்கு மாறாக, புண்படுத்துகிற மாதிரி நான் ஒருபோதும் சொல்லவில்லை. மாண்புமிகு உறுப்பினர் தீர்த்தகிரி கவுண்டர் அவர்கள் கூறியமாதிரி, நம்முடைய உறவு நீடிக்கவேண்டுமென்ற உணர்வோடுதான் நான் சில கருத்துக்களைத் தெரிவிக்க விரும்புகிறேன். இந்த மன்றத்தின் மூலமாக இந்த அரசினுடைய கவனத்திற்குக் கொண்டுவருவது.... ............(குறுக்கீடு).

திரு. டி. தீர்த்தகிரி கவுண்டர் : துணைத் தலைவர் அவர்களே, பாய்ன்ட் ஆப் ஆர்டர் மரியாதைக்குரிய சகோதரி வளர்மதி குறிப்பிட்டார்கள். ஒரு கருத்தைக் குறிப்பிட விரும்புகிறேன். எங்களுடைய தர்மபுரி மாவட்டத்தில் ஒரு சர்க்கரை ஆலையை ஏற்படுத்த வேண்டுமென்ற கோரிக்கையை வைத்தோம். இது இலாக்காப் பூர்வமாக பரிசீலிக்கப்பட்டு, இந்த அரசுடைய, அனுமதியைப் பெற்று, இன்னும் அது கிடப்பிலேயே இருக்கிறது அந்தக் கோப்பு போகவில்லை. மத்திய சர்க்காரை நாங்களே பலமுறை வலியுறுத்திக் கேட்டிருக்கிறோம். அது குறித்து ஒரு தீர்மானம்கூட கொடுத்திருக்கிறோம்.



1986 மார்ச் 21]

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இப்போது நீங்கள் கிளப்பியது பாயின்ட் ஆப் ஆர்டர் ஆகாது. தயவு செய்து இடைமறித்துப் பேசாதீர்கள்.

திருமதி பா. வளர்மதி : மாண்புமிகு பேரவையின் துணைத் தலைவர் அவர்களே, நான் இந்த நேரத்தில் இந்த மன்றத்தின் மூலமாக அரசின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். இன்றைக்குத் தமிழ் மொழியே ஆட்சி மொழியாக இருக்கின்ற காரணத்தால் அரசு தன்னுடைய அலுவல்கள் சம்பந்தப்பட்ட அனைத்தையும் தமிழில் தொடர நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன். 'எங்கும் தமிழ், எதிலும் தமிழ் ' என்கிற உணர்வு ஏற்படச் செய்வது முக்கியமான ஒன்றாகும். தமிழ் மொழி ஆட்சி மொழியாக்கப் பட்டு பல ஆண்டுகள் ஆகியும்கூட, இன்றைக்கும் தலைமைச் செயலகத்தில் கோப்புகள் அனைத்தும் தமிழில் எழுத முடியாத நிலை ஏற்பட்டிருக்கிறது. முழுக்க முழுக்க தமிழிலே கோப்புகள் எழுதுவதற்கு தமிழ் வளர்ச்சி பண்பாட்டுத்துறை நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து இந்த மன்றத்தின் மூலமாக இந்த அரசின் கவனத்திற்குக் கொண்டுவரவிரும்புகிறேன். சென்னை நகரில் அடிக்கடி புயல், வெள்ளம் ஏற்படுவதால் அதை ஈடுகட்டுவதற்கும், சரி செய்வதற்கும், அதற்கென்று தனியாக ஒரு தொகையை இந்த நிதிநிலை அறிக்கையில் தருவது, உண்மையிலே வந்த பின் காப்பதை விட வருமுன் காப்பதற்கு வசதியாக இருக்குமென்பதை இந்த மன்றத்தில் வைக்க விரும்புகிறேன்.

இந்தியாவிலே கல்வித் துறையில் ஒரு பெரும் சாதனையை புரிந்திருக்கிறது நம்முடைய தமிழ்நாடு. இந்தப் பெருமை நமக்கும், பல பேர்களுக்கும் மகிழ்ச்சி தரக் கூடிய ஒன்றாக இருக்கிறது. ஆனால் சில தனியார் கல்லூரிகளில், தனியார் பள்ளிக் கூடங்களில், அதை ஒரு வியாபாரப் பொருளாக மாற்றி, வியாபாரமாக நினைத்து மாணவர்களை சேர்ப்பதற்கு, இன்றைக்கு மிகுந்த பணம் வசூலிக்கும் நிலை இருக்கிறது. இந்த முறையைத் தடுத்து, அரசு கடுமையான சட்டங்களை உருவாக்கவேண்டுமென்று இந்த மன்றத்தின் மூலமாகக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களால் உருவாக்கப் பட்டிருக்கிற பொறியியல் கல்லூரிகள், பாலிடெக்னிக்குகள் மூலம் கிடைக்கிற பலன் நாட்டு மக்களுக்குத் தெரியாமல் போய்விடுவதற்கு வாய்ப்புகள் ஏராளம் உண்டு. உருவாக்கப்பட்ட பொறியியல் பட்டதாரிகள், பாலிடெக்னிக்குகளில் வெற்றி பெற்று வருகிறவர்கள் ஆகியவர்களுக்கு நம்முடைய அரசு மைய அரசின் மூலமாக பல தொழில் கூடங்களை ஏற்படுத்தித் தருவதற்கு ஏற்பாடுகளைச் செய்யுமானால் அவர்களுக்கு வேலை வாய்ப்பை ஏற்படுத்தித் தர முடியும்.

அடுத்து 5 பைசா முதல் 25 பைசா வரை உள்ள விலையில் ஊறுகாய் தயாரிக்கக்கூடிய பெண்கள்—குடிசைத் தொழிலாக ஒவ்வொரு வீட்டிலுமுள்ள வேலையில்லாத பெண்கள்—ஒரு தொழிலாக அதைச் செய்து கொண்டிருக்கிறார்கள். அந்த ஊறுகாய் சீதோஷ்ண நிலையால் பாதிக்கப்பட்டு சில நாட் களில் அழுகிவிடும் பொருள். 50 கிராம் பொருள் அதாவது 5 பைசா முதல் 25 பைசா வரை விலையுள்ள ஊறுகாய் பொட்ட லங்களுக்கு விற்பனை வரியிலிருந்து முழுவதுமாக விலக்கு அளிக்க வேண்டும். இப்படி வரிச் சலுகை அளிப்பதன் மூலமாக அந்தப் பெண்கள் அதைப் பயன்படுத்திக் கொள்வதற்கு வாய்ப் பாக இருக்கும்.

மயிலாப்பூர் சித்திரக் குளத்தை தூர் எடுத்து அங்கே பக்தர்களும் பொது மக்களும் வந்து பயன் அடைகிற வகையிலே —மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்—பல ஆண்டுகளாக தீராது இருக்கின்ற இந்தப் பிரச்சினையை தீர்த்து வைக்க வேண்டும் என்று மயிலை வாழ் தொகுதி மக்களின் சார் பாக நான் கேட்டுக் கொள்கிறேன்.

இலங்கைப் பிரச்சினை குறித்து கடந்த இரண்டு நாட்களாக இந்த மன்றத்திலே பேசிய எதிர்க் கட்சியினர் ஏதோ இந்த தமிழ்நாடு அரசாங்கம் அது சம்பந்தமாக நடவடிக்கை எடுக்க வில்லை, அது சம்பந்தமாக எடுத்த நடவடிக்கை இன்னும் கொஞ் சம் வேகமாக எடுத்திருக்க வேண்டும், இன்னும் சுறுசுறுப்பாக எடுத்திருக்க வேண்டும், வேகம் போதாது என்ற குற்றச்சாட்டை வைத்தார்கள். எங்களுடைய இதய தெய்வம் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் இலங்கைப் பிரச்சினை குறித்து மட்டுமல்ல, உலகத்திலே எந்த மூலையிலே தமிழன் கண்ணீர் சிந்தினாலும்கூட தன்னுடைய இதயத்திலிருந்து ரத்தம் சிந்து கின்ற இதயத்திற்குச் சொந்தக்காரர் ஆகத்தான்—நம்முடைய தமிழக முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள்— இருக்கிறார்கள் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

அவர்கள் அமெரிக்க நாட்டிலிருந்து திரும்பி வந்ததற்குப் பிறகு, தன் உடல் நிலையைப்பற்றிக் கவலைப்படாமல், சென்னையிலே அண்ணா நினைவாலயத்திற்கு முன்னாலே, மருத்துவர்களின் ஆலோசனையையும் மீறி, உண்ணாவிரதம் இருந்து இலங்கை அரசைக் கண்டித்தது நாடு அறிந்த உண்மை யாகும். இத்தனைக்கும் மேலாக அனைத்து எதிர்கட்சியினர் களையும் அழைத்துப் பேசி, இதே கோட்டையிலே அவர்களை அழைத்துப் பேசி இலங்கைப் பிரச்சினை சம்பந்தமாக மைய அரசின் கவனத்தை ஈர்க்க வேண்டுமென்பதற்காக பல தடவை கள் கூடிப் பேசி பேச்சு வார்த்தை நடத்தியது இந்த நாட்டிற்கு நன்றாகத் தெரியும். இத்தனைக்கும் மேலாக, புரட்சித் தலை வர் அவர்கள் மத்திய அரசிடம் இது சம்பந்தமாக ஒரு மனு





கொடுக்க வேண்டுமென்ற முறையிலே அனைத்துக் கட்சியினரை யும் அழைத்துப் பேசி கலைஞர் கருணாநிதி உட்பட அனைத்துக் கட்சியினரையும் டெல்லி மாநகரத்திற்கு அழைத்துச் சென்று இலங்கைப் பிரச்சினை தீர வேண்டுமென்ற முறையிலே தெரிவிக்க வேண்டுமென்ற நிலையிலே வந்தவர்களை அழைத்து டெல்லிக்கு சென்று இலங்கைப் பிரச்சினைக்கு கண்டனம் தெரிவித்ததை இந்த நாடே அறியும். தமிழ்நாடு முழுவதும் ஒரு நாள் கடை அடைப்பும் வேலை நிறுத்தமும் மேற்கொண்டு அரசின் சார்பாக இலங்கை அரசுக்கு தமிழ் நாட்டிலே இருக்கின்ற தமிழர்களின் சார்பாக கண்டனம் தெரிவித்தது இந்த நாடு அறிந்த உண்மை யாகும். இத்தனைக்கும் மேலாக ஒரு அரசாங்கம் என்ன நட வடிக்கை எடுக்க முடியும் என்பதை நான் கேட்க விரும்புகிறேன். இத்தன்னை நாட்களாக அமைதியாகவும், நிதானப் போக் கோடும் இருந்த பாரதப் பிரதமர் திரு. ராஜீவ் காந்தி அவர்கள் இன்றைக்குக் கோபப்பட்டுப் பேசுகிறார்கள். ஆத்திரப்பட்டுப் பேசுகிறார்கள், கண்டனம் தெரிவிக்கிறார்கள் என்றால் அதற்குக் காரணமே தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள்தான். தமிழக அரசால் வேண்டுகோள் வைக்கத்தான் முடியும், வேறு என்ன நடவடிக்கை எடுக்க முடி யும் என்று கேட்க விரும்புகிறேன்.

(முற்பகல் 11–10)

இலங்கைப் பிரச்சினை 1958 ஆம் ஆண்டிலிருந்து நடைபெற்றுக் கொண்டிருக்கிற பிரச்சினை. இன்னும் சொல்லப் போனால், 1974 ஆம் ஆண்டிலே திராவிட முன்னேற்றக் கழகம் தமிழ்நாட்டை ஆண்டது. அப்படி ஆளுகின்றபொழுது இதே இனப் படுகொலைகள் நடந்து தமிழர்கள் சாகடிக்கப்பட்டார்கள். தமிழச்சிகளின் தாலிகள் அறுக்கப்பட்டன. தமிழ்ப் பெண்கள் கற்பழிக்கப்பட்டார்கள். தமிழ்க் குழந்தைகள் மலையிலேயிருந்து உருட்டி விடப்பட்டு கொலை செய்யப்பட்டார்கள். எத்தனையோ கொலை வெறி சம்பவங்கள் நடந்தன. அப்பொழுது ஆண்டுகொண்டு இருந்த திராவிட முன்னேற்றக் கழகம், இப்பொழுது புரட்சித் தலைவர் அவர்கள் எடுத்துக் கொண்டிருக்கின்ற நடவடிக்கைகளிலே ஒரு பத்து சதவீதம் நடவடிக்கையாவது எடுத்து இருப்பார்களா என்பதை நான் இந்த நேரத்தில் கேட்க விரும்புகிறேன். ஆனால், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு இந்த அளவிற்கு நடவடிக்கை எடுத்து தன்னுடைய கண்டனத் தைத் தெரிவித்துக் கொண்டிருக்கிறது என்றால், உண்மை யிலேயே தமிழர்கள் கண்ணீர் சிந்துகின்ற இந்தப் பிரச்சினையை, இன்றைக்கு நாடே தெரிந்து கொண்டிருக்கின்ற இந்தப் பிரச்சினையைக் குறித்து மைய அரசுக்கு என்னென்ன கொண்டு செலுத்த முடியுமோ அவைகளைக் கொண்டு செலுத்துகின்ற வகையில் தமிழக அரசு இன்றைக்குச் செய்து கொண்டிருக்கிறது.

[திருமதி ப். வளர்மதி] [1986 மார்ச் 21

இலங்கையில் இராணுவச் செலவு ரூ. 500 கோடியாக உயர்த் தப்பட்டிருக்கிறது ; இராணுவ தளவாடங்களை இன்றைக்கு வாங்கிக் குவித்துக் கொண்டிருக்கிறார்கள். இஸ்ரேலிய மொசாத் கூலிப் படையினர் இலங்கை இராணுவத்திற்குப் பயிற்சி அளித்துக் கொண்டிருக்கிறார்கள். சீனா, தென் கொரியா, இஸ் ரேல், பிரிட்டன், ஸ்வீடன் ஆகிய நாடுகளிலிருந்து தளவாடங் களை வாங்கிக் குவித்துக் கொண்டிருக்கிறார்கள். இப்படிப் பட்ட சம்பவங்கள் இன்றைக்கு அங்கே நடந்து கொண் டிருக்கின்றன. ஒட்டு மொத்தமாக எல்லாத் தரப்பினரும் குரல் கொடுக்க வேண்டுமென்பதற்காக, எல்லாக் கட்சிகளும் சேர்ந்து குரல் கொடுக்க வேண்டுமென்பதற்காக நாம் இன்றைக்குக் குரல் எழுப்பிக் கொண்டிருக்கிறோம்.

இந்தச் சந்தர்ப்பத்தில் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களின் மூலமாக நான் கேட்டுக் கொள்ள விரும்பு வது, இவ்வளவுக்கும் பிறகு தூதுக்குழு, வட்ட மேஜை, நீள மான பெஞ்ச், சாய்வு நாற்காலி போன்ற சமாதான வழிகளில் தயவு செய்து ஈடுபட வேண்டாம். இனிமேல் தூதுக் குழுவை தயவு செய்து அனுப்பாதீர்கள், துப்பாக்கியை அனுப்புங்கள்; பண்டாரியை அனுப்பாதீர்கள், படையை அனுப்புங்கள்.

இலங்கை மீது போர் தொடுத்தால் அமெரிக்கக் குண்டு சென்னையிலே விழும் என்று அச்சுறுத்துகிறார்கள். இலங்கை யிலே வாழுகின்ற தமிழர்களை நாம் காப்பாற்றத்தான் முடிய வில்லை ; நம்முடைய சகோதரர்களோடு, சகோதரிகளோடு வாழ அவர்களைக் காப்பாற்ற இயலாத சூழ்நிலையில், அவர் களோடு சேர்ந்து வாழ முடியாத சூழ்நிலை இருக்கிறது. ஆனால் அவர்களோடு சேர்ந்து சாவதற்காவது தயவுசெய்து விடுங்கள் என்று இந்த சர்ந்தப்பத்தில் மைய அரசைப் பார்த்து என்னுடைய வேண்டுகோளாக துணைத் தலைவரவர்களின் மூல மாகக் கேட்டு, இந்த நிதிநிலை அறிக்கையை வரவேற்று விடை பெறுகிறேன், வணக்கம்.

***திரு. மா. மணிமாறன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, 1986—87 ஆம் ஆண்டுக்கான நிதி நிலை அறிக்கையின் மீது ஓரிரு கருத்துக்களைச் சொல்வதற்கு வாய்ப் பினை நல்கிய என்னுடைய கட்சியின் தலைவர்களுக்கு என் னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இங்கே நடைபெறுகின்ற இந்த விவாதத்தில் பல்வேறு கருத்துக்களைத் தொகுத்து வைத்திருக்கிறார்கள். 1986—87 ஆம் ஆண்டுக்கான இந்த நிதிநிலை அறிக்கையையும், ஏறக்குறைய 12 ஆண்டு களுக்கு முன்னால் சென்று 1975—76 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையையும் ஒப்பிட்டுப் பார்க்கின்றபொழுது, வளர்ச்சிப் பணிகள், மக்கள் முன்னேற்றத்திற்குரிய திட்டங்கள் ஆகிய இவைகளில் 12 ஆண்டுகளுக்குப் பிறகு இந்த அரசு எந்த அளவுக்கு மேற்கொண்டிருக்கிறது என்பதெல்லாம் தெளிவுபட



1986 மார்ச் 21] [திரு. மா. மணிமாறன்]

வேண்டுமென்பதற்காக நான்கைந்து துறைகளிலே 1975—76 ஆம் ஆண்டிலே மேற்கொண்ட பணிகளையும் இப்பொழுது உள்ள நிலையையும் ஒதுக்கீட்டையும் இந்த அவையின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

இன்றைக்கு உள்ளாட்சித் தேர்தல்களெல்லாம், முடிந்து இந்த உள்ளாட்சி நிறுவனங்களிலே இருப்பவர்கள் உள்ளாட்சி நிர்வாகத்தை நடத்த முடியுமா என்று சங்கடப்படுகின்ற நேரத் தில், இன்றைக்கு உள்ளாட்சித் துறை சம்பந்தமாக ஒதுக்கப்பட் டிருக்கும் நிதியையும், 1975—76 ஆம் ஆண்டில் ஒதுக்கியிருக்கின்ற நிதியையும் ஒப்பிட்டுப் பார்க்கின்றபொழுது மலைக்கும் மடு விற்கும் உள்ள வேறுபாடு காணப்படுகிறது. இந்தத் துறையிலே இன்றைக்கு இழப்பீடுகளும், ஒதுக்கீடும் என்பதற்கு ஒதுக்கப் பட்டிருப்பது ரூபாய் 27.6 கோடி ரூபாய்தான். ஆனால், 1975— 76ஆம் ஆண்டில்அன்றைய அந்த வருமானத்தில் 2.8 சதவீதம் இதற்காக ஒதுக்கப்பட்டிருக்கிறது. அந்த சதவீத அளவோடு இன்றைக்கு ஒதுக்கியிருக்க வேண்டுமென்றால் கிட்டத்தட்ட 92 கோடி ரூபாய்க்கு மேலே ஒதுக்கியிருக்க வேண்டும். ஆனால் சுமார் 27 கோடி ரூபாய்தான் இதற்காக நீங்கள் ஒதுக்கியிருக் கிறீர்கள்.

அடுத்து, மாண்புமிகு நிதியமைச்சரவர்கள் பாலம் பற்றிச் மிகச்சிறப்பாகச் சொன்னார்கள். அந்தத் தலைப்பில் இன்றைக்கு ஒதுக்கப்பட்டிருக்கின்ற தொகைக்கும், 1975—76 ஆம் ஆண்டில் ஒதுக்கப்பட்ட தொகைக்கும் இருக்கின்ற வேறு பாட்டை எண்ணிப் பார்க்கின்ற நேரத்தில் அதில் உள்ள வேறு பாடு மலைக்கும் மடுவிற்கும் உள்ள வேறுபாடாக இருக்கிறது. 1975—76-ஆவது ஆண்டில், சாலைகளும் பாலங்களும் என்ற அந் தத் தலைப்பிலே 4.1 சதவீதம் ஒதுக்கியிருக்கிறார்கள். இன் றைக்கு நீங்கள் ஒதுக்கியிருப்பது 2.4 சதவீதம். ஒதுக்கியிருக் கிற நிதியை ஒப்பிட்டுப் பார்க்கிற நேரத்தில், 1975—76-ஆவது ஆண்டில் ஒதுக்கியுள்ள கணக்கோடு ஒப்பிட்டால், இந்த ஆண்டு ரூ. 134 கோடிக்கு மேலாக ஒதுக்கியிருக்க வேண்டும். ஆனால், அந்தத் தலைப்பில் ரூ. 79 கோடிதான் ஒதுக்கியிருக்கிறீர்கள்.

அதே போல, வேளாண்மைத் துறையில் பார்த்தால், 1975— 76-இல் 4.23 சதவீதம் ஒதுக்கியிருக்கிறார்கள். இப்பொழுது, 3 சதவீதம்தான் ஒதுக்கியிருக்கிறீர்கள். அந்த விகிதத்தை ஒப்பிட்டுப் பார்த்தால், இப்பொழுது ரூ. 139 கோடிக்கு மேலாக ஒதுக்கியிருக்க வேண்டும். ஆனால், ரூ. 99 கோடிதான் ஒதுக்கி யிருக்கிறீர்கள்.

அதே போல, மருத்துவத்தைப் பார்த்தால், 1975—76-இல் மொத்த வருமானத்தில் 7.4 சதவீதம் ஒதுக்கியிருக்கிறார்கள். ஆனால், இப்பொழுது 4.2 சதவீதம் ஒதுக்கியிருக்கிறீர்கள். ரூ. 242 கோடி ஒதுக்க வேண்டிய நிலையில், இப்பொழுது ரூ. 139 கோடிதான் ஒதுக்கி இருக்கிறீர்கள்.

[திரு. மா. மணிமாறன்] [1986 மார்ச் 21

அதே போல, பொதுப் பணிகளைப் பொறுத்தவரை, 1975–1976-இல் 0.7 சதவீதம் ஒதுக்கியிருக்கிறார்கள். ஆனால், இப் பொழுது, 0.31 சதவீதம் ஒதுக்கியிருக்கிறீர்கள்.

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம் என்ற இனத் தைப் பார்க்கிற நேரத்தில், தாங்க முடியாத அளவு பள்ளத்திலே தள்ளியிருக்கிறீர்கள். 1975–76-இல், ரூ. 500 கோடியாக வரு வாய் இருந்த நேரத்தில் ரூ. 19.4 கோடி ஒதுக்கியிருக்கிறார்கள். ஆனால், இப்பொழுது, அந்த சதவீதத்தோடு ஒப்பிட்டுப் பார்த் தால், ரூ. 124 கோடி ஒதுக்கியிருக்க வேண்டிய அந்தத் துறைக்கு, ரூ. 47 கோடிதான் ஒதுக்கியிருக்கிறீர்கள். இப்படி, தொடர்ந்து ஒவ்வொரு முன்னேற வேண்டிய துறையை, வளர வேண்டிய துறைகளை எல்லாம் ஆராய்ந்து பார்த்தால், பள்ளத்திலே, படு குழியிலே தள்ளியிருக்கிறீர்கள். ஆனால், நிதி ஆதாரங்கள் பெருகி யிருக்கின்றன.

அன்றைக்கு ரூ. 500 கோடி நிதி ஆதாரத்தை வைத்திருந்த நிலை மாறி, இன்றைக்கு மொத்த வரவு-செலவுத் திட்டம், ரூ. 3,200 கோடிக்கு மேல், வரயிருக்கும் திருத்திய துணை மதிப்பீடுகள் எல்லாம் ஏறத்தாழ ரூ. 3,500 கோடிக்கு மேல் வரவு என்ற நிலையில், 12 ஆண்டுகளுக்குப் பின்னாலே இருந்த நிதி ஆதாரங்களைப் பார்க்கிற நேரத்தில், உங்களால், அந்த விகிதத்தை எட்டிப்பிடிக்க முடியாத நிலையை எண்ணி, நாங்கள் எல்லாம் வருத்தப்படுவதைத் தவிர, வேறொன்றும் சொல்ல முடியவில்லை.

இன்னொன்று நாவலர் அவர்கள் சொன்னார்கள். ரூ. 20 கோடி அளவுக்கு விற்பனை வரி விலக்கு அளிப்பதாகச் சொன் னார்கள். அதற்கு வியாபாரிகள் நன்றி சொல்ல வேண்டுமென்று சொன்னார்கள். பட்ஜெட் மெமோரண்டத்திலே பார்த்தால், ரூ. 20 கோடியை நீங்கள் குறைப்பதாகச் சொல்கிற நேரத்தில், ரூ. 126.4 கோடி விற்பனை வரியில் அதிகமாக வருவதற்கு வாய்ப்பு இருப்பதாகக் குறிப்பிட்டிருக்கிறீர்கள். அதைக் குறிப் பிட்டுவிட்டு, காரணத்தைச் சொல்லி இருக்கிறீர்கள்.

'The increase under Sales Tax and taxes on vehicles are due to the revision in the rates of tax. என்று எழுதி யிருக்கிறீர்கள். ரிவைஸ் பண்ணியதன் காரணமாகத்தான் ரூ. 126 கோடி அதிகரித்திருப்பதாகச் சொல்லியிருக்கிறீர் கள். இங்கே குறைத்திருப்பதாகச் சொல்லியிருக்கிறீர்கள் அங்கே மறு மதிப்பீடு செய்ததன் காரணமாக, திருத்தியதன் காரண மாகத்தான் ரூ. 126 கோடி அதிகரித்தது என்று நம்முடைய மாண்புமிகு நாவலர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். ரூ. 20 கோடி அளவுக்கு மக்களுக்கு நலம் உள்ள வரிக்குறைப்பு திட்டங் நிதிநிலை அறிக்கையில் உருவாக்கி இருப்பதாகக் கூறியுள்ளீர்கள். ஆனால் அறிக்கையில் நீங்கள் மறு மதிப்பீடு செய்ததன் காரணமாக, திருத்தத்தின் காரணமாக, ரூ. 126 கோடி கிடைக்கும் என்று நாவலர் அவர்கள் பட்ஜெட் மெமோரண்டத் திலே ஒத்துக்கொண்டிருக்கிறார்கள். எனவே, நீங்கள் செய்தது



1986 மார்ச் 21] [திரு. மா. மணிமாறன்]

நேர்மையா, இல்லையா, என்பதைவிட, இன்றைக்கு அந்தத் துறையிலே ரூ. 126 கோடி அதிகமாகப் பெற்றுவிட்டு, ரூ. 20 கோடி நாங்கள் குறைக்கிறோம் என்று சொல்வது, சூப்பர் டாக்ஸ், இன்கம் டாக்ஸ், கட்டக்கூடியவன், வள்ளலாக மாறுவது போன்று இருக்கிறது என்று நான் கருதுகிறேன்.

இதில் புதிய திட்டங்கள் ஒன்றும் இல்லை என்று என்னால் சொல்ல முடியாது. பல புதிய திட்டங்களை அறிவித்து இருக் கிறீர்கள். அப்படி அறிவித்த புதிய திட்டங்களுக்கு நிதி ஒதுக்கி யிருப்பதைப் பார்க்கிற நேரத்தில், முக்கியமான ஒன்று. இந்த நாட்டில் 70 சதவீதம் விவசாய மக்கள் இருக்கிறார்கள். நாவலர் அவர்கள் தஞ்சை மாவட்டத்திலே பிறந்திருக்கிற காரணத்தால் விவசாயக்குடும்பத்திலேயிருந்து வந்திருக்கின்ற காரணத்தால் அவ ருக்குக் குறிப்பிட விரும்புகிறேன். இன்றைக்கு அந்தத் துறைக்கு ஒதுக்கியிருப்பது ரூ. 1.4 கோடி. ஏறத்தாழ, ரூ. 3,200-க்கு மேல் எட்டிப்பிடித்திருக்கிற வரவு-செலவுத்திட்டத்தில், வேளாண் மைக்கு ஒதுக்கியிருப்பது ரூ. 1.4 கோடி. வேளாண்மைத்துறையை எந்த அளவுக்கு இந்த அரசு முன்னேற்ற எண்ணி இருக் கிறது என்பதைச் சுட்டிக் காட்டுவதற்காக இதைக் குறிப்பிட விரும்புகிறேன். இந்த ரூ. 1.4 கோடி ஒதுக்கீடு எந்த, எந்தத் தலைப்பிலே என்று பார்த்தால், வேளாண்மைக்கு ரூ. 55 இலட் சமும், எண்ணெய் வித்துக்களுக்கு ரூ. 2.8 இலட்சமும், வேளாண் மைப் பொறியியல், பணிகளுக்கு ரூ. 7.8 இலட்சமும், தோட்டக்கலை, தோட்டப் பயிற்சிக்கு ரூ. 3 இலட்சமும், விதைச் சான்றிதழ்களுக்கு ரூ. 2 இலட்சமும், கால்நடை வளர்ச்சிக்கு ரூ. 51 இலட்சமும், கோழி வளர்ப்புக்கு ரூ. 1.9 இலட்சமும், பால் பண்ணைக்கு ரூ. 11.8 இலட்சமும் ஒதுக்கியிருக்கிறீர்கள். இதையெல்லாம் கூட்டிப் பார்த்தால், கிட்டத்தட்ட ரூ. 1.4 கோடிக்கு நீங்கள் ஒதுக்கியிருக்கிறீர்கள் என்பது தெரியும். வேளாண்மைத் துறை இன்றைக்கு எந்த அளவுக்குப் பாதிக்கப் பட்டிருக்கிறது என்பதைப்பார்க்கிற நேரத்தில், ஒரு மறுமலர்ச்சி செய்ய வேண்டிய தொழிலாக, தொழில் முன்னேற்றம் ஏற்பட வேண்டிய நேரத்தில், தஞ்சை மாவட்டத்தில், வேறு தொழில் இல்லாமல் விவசாயிகள் இருக்கக்கூடிய பகுதியில், விவசாயத்தை தொழிலாகக் கொண்ட நேரத்தில், விவசாயத்திற்கு ஒதுக்கீடு மிகவும் குறைவாக இருக்கிறது.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சில குறிப்புகளை மட்டும் வைத்துக்கொண்டு, பேச முடியாது. வேளாண்மைத் துறையைப் பற்றி பெரிய புத்தகங்களில், 3 அடுக்கு அளவுக்கு, பல கிலோ எடையுள்ள அளவு கணக்குகள் சொல்லியிருக்கிறோம். அதையெல்லாம் புரட்டிப் பார்த்தால் தெரியும். வேளாண்மைத் துறைக்கு மட்டும் கிட்டத்தட்ட ரூ. 100 கோடிக்கு மேல் ஒதுக் கப்பட்டு, விவரங்கள் எல்லாம் கொடுக்கப்பட்டிருக்கின்றன. ஆகவே, அவற்றைப் பார்த்தால், முழு புள்ளி விவரங்கள் தெரியும். ஒரு குறிப்பிட்ட அளவிலே ஒதுக்கப்பட்டிருக்கிற நிதி 1.25 கோடி.

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1986 மார்ச் 21

அதை மட்டும் வைத்துக் கொண்டு பேசுவது சரியாக அமையாது. இன்றைக்கு 1.25 கோடி அல்லது 1.5 கோடி ரூபாயில் வேளாண்மைத் துறை இயங்க முடியுமா ? அப்படி இயங்கினால் மகிழ்ச்சிதான். ஆனால், இயங்க முடியாது. 100 கோடி ரூபாய்க்கு மேல் வேளாண்மைத் துறைக்கு ஒதுக்கப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் புள்ளி விவரங்களை எல்லாம் புரட்டிப்பார்த்தால் தெளிவாகும்.

(முற்பகல் 11-20)

திரு. மா. மணிமசறன் : நான் முன்பே குறிப்பிட்டேன். தொடர் இனமாக 99 கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கிறீர்கள், ஒப்புக் கொள்கிறேன். ஆனால், இந்த ஆண்டு புதிய திட்டத்திற்கு என்று 1.4 கோடி ரூபாய்தான் ஒதுக்கியிருக்கிறீர்கள். அதைத்தான் நான் குறிப்பிட்டேன்.

இன்றைக்கு படித்த பட்டதாரிகள் ஏறத்தாழ 16 இலட்சம் பேர் வேலைவாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்திருக்கிறார்கள். 16 இலட்சம் பட்டதாரிகளுக்கு வேலை வாய்ப்பு அளிக்க இந்த நிதிநிலை அறிக்கையில் என்ன திட்டத்தைச் சொல்லியிருக்கிறீர்கள் என்று பார்த்தால் எதுவுமே இல்லை. நம்முடைய முதலமைச்சர் அவர்கள் இரண்டு ஆண்டுகளுக்கு முன்னால் குறிப்பிட்டார்கள். '' நான் புரண்டு புரண்டு படுக்கிறேன் ; தூக்கம் வரவில்லை. எண்ணி எண்ணிப் பார்க்கிறேன், வருத்தப் படுகிறேன். காரணம் படித்த பட்டதாரிகள் 2.5 இலட்சம் பேர் வேலை இல்லாமல் இருக்கிறார்கள் '' என்று வேதனையோடு குறிப்பிட்டார்கள். இரண்டரை இலட்சம் பேர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்க முடியவில்லையே என்று வருத்தப்பட்ட முதலமைச்சர் இன்றைக்கு 16 இலட்சம் பேர்களாக உயர்ந்திருக்கிற அந்த பட்டதாரிகளுக்கு என்ன திட்டத்தை நிதிநிலை அறிக்கையில் வைத்திருக்கிறார்கள் என்று பார்த்தால் பெருத்த ஏமாற்றம் தான் ஏற்படுகிறது. வேலையில்லா பட்டதாரிகளின் எண்ணிக்கை இப்போது 16 இலட்சமாக உயர்ந்திருக்கிறது. அவர்களுக்கு என்ன செய்யப் போகிறீர்கள் ? வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்க என்ன திட்டங்களை வைத்திருக்கிறீர்கள் ?

இங்கே தொழிற்சாலைகள் உருவாக வாய்ப்பில்லை; தொழில்கள் பெருக வாய்ப்பில்லை. தொழில்களைத் தொடங்குவதற்கான முயற்சிகளிலும் அக்கறை காட்டவில்லை. இந்த அரசு தொழில்களைத் தொடங்க எந்த எந்த வகையிலே ஒத்துழைக்கவில்லை என்பதை நான் சொல்லவில்லை. இந்த அரசினுடைய பிரதிநிதியாக டெல்லியிலே இருக்கிற திரு. ஜி. ஆர். எட்மண்ட் அவர்கள் ஒரு அறிக்கை வெளியிட்டார்கள். மத்திய அரசோடு இந்த அரசு ஒத்துழைக்காத காரணத்தால் மூன்று தொழிற்சாலைகள் தமிழ்நாட்டில் தொடங்கப்படும் வாய்ப்ப இல்லாமல் போய்



1986 மார்ச் 21] [திரு. மா. மணிமாறன்]

விட்டது என்று அறிக்கை விட்டிருக்கிறார்கள். நேற்று இங்கே பேசும்போதுகூட மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர் திரு. சிந்தன் அவர்கள் குறிப்பிட்டுக் காட்டினார்கள். இந்த அரசினுடைய ஆர்வமின்மையால், அக்கறையின்மையால் 300 கோடி ரூபாய்க்கான திட்டம் புறக்கணிக்கப்பட்டிருக்கிறது என்று சொன்னார்கள்.

அது மட்டுமல்ல. இன்றைக்கு தஞ்சை மாவட்டத்தில் குற்றாலம் நரிமணத்தில் எண்ணெய் வளம் நல்ல முறையில் இருக்கிறது. எண்ணெய் உற்பத்தி பெருகி வருகிறது. அதே நேரத்தில் அங்கே கிடைக்கிற எரிவாயுவைப் பயன் படுத்திக் கொள்ளும் வாய்ப்பு இல்லாத காரணத்தால் அந்த எரிவாயுவை கொளுத்திக் கொண்டிருக்கிறார்கள். மத்திய அரசின் கவனத்திற்குக் கொண்டுவந்து அந்த எரிவாயுவை சேகரித்து வைக்க முயற்சி மேற்கொள்ளவில்லை. உரிய முறையிலே மத்திய அரசின் கவனத்திற்குக் கொண்டுவர மாநில அரசு தவறி விட்டது. இனிமேலாவது மாநில அரசு மத்திய அரசை வற்புறுத்தி அந்த எரிவாயுவை சேகரிக்கும் முயற்சியில் ஈடுபட வேண்டுமென்று வற்புறுத்திக் கேட்டுக் கொள்கிறேன். தஞ்சை மாவட்டத்தில் குத்தாலம் என்ற ஊரில் எண்ணெய் வளம் இருக்கிறது. அதனைப் பயன்படுத்தி அங்கே ஒரு தொழிற் சாலையை உருவாக்க மாநில அரசு மத்திய அரசை வற்புறுத்தக் கூடிய முறையிலே இந்த நிதிநிலை அறிக்கையில் ஏதாவது குறிப் பிடப்பட்டிருக்கிறதா என்று பார்த்தால் அதுவும் இல்லை.

அடுத்து, தஞ்சை மாவட்டத்தில் ஏற்பட்டுள்ள வெள்ளம், புயல், வறட்சி பற்றிச் சொன்னார்கள். தஞ்சை மாவட்டம் 1977-லிருந்து இன்று வரை வறட்சி, வெள்ளம், புயல் போன்ற இயற்கைச் சூழ்நிலைகளால் தொடர்ந்து பாதிக்கப்பட்டு வருகிறது. கடந்த வெள்ளத்தின்போதுகூட கடுமையான பாதிப்பு ஏற்பட்டது. வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஏதாவது நிவாரணம் கிடைத்ததா என்றால் இல்லை. வரி தள்ளுபடி இல்லை ; கூட்டுறவுச் சங்கக் கடனுக்கு வட்டி தள்ளுபடி இல்லை ; வசூல் செய்வது நிறுத்தப்படவில்லை. இதுபற்றி பல்வேறு அரசியல் கட்சிகள் சுட்டிக்காட்டியிருக்கின்றன. விவசாயிகளுக்கு கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் வழங்கப்பட்ட கடன் பெருகிவிட்டது ; கட்ட முடியமால் விவசாயப் பெருங்குடி மக்கள் கஷ்டப்படுகிறார்கள். வாங்கிய கடனைக் கட்டமாட்டோம் என்று அந்த விவசாயிகள் சொல்லவில்லை. கடன் சுமை தாங்க முடியவில்லை ; முதலை கட்ட நாங்கள் தயாராக இருக்கிறோம் ; வட்டியைத் தள்ளுபடி செய்து கொடுங்கள் ; முதலை தவணை முறையில் கட்டிவிடுகிறோம் என்று சொல்கிறார்கள். வல்லுநர்கள் எல்லாம்கூட இதுபற்றிச் சொல்லியிருக்கிறார்கள். அதற்கு இந்த அரசு எந்தவிதமான முயற்சியும் எடுக்கவில்லை என்பது இந்த நிதிநிலை அறிக்கையிலிருந்து தெரிகிறது.

[திரு. மா. மணிமாறன்] [1986 மார்ச் 21

விவசாயிகளுடைய துயர் துடைப்புக்கு நிதிநிலை அறிக்கை
யில் எதுவும் சொல்லப்பட்டதாகத் தெரியவில்லை 225 ரூபாய்
ஒரு குவிண்டாலுக்கு கொடுக்க வேண்டுமென்று மத்திய அரசைக்
கேட்டிருக்கிறீர்கள். இப்படி மத்திய அரசை இந்த அரசு
கேட்கிறபோது மாநில அரசு கொடுக்கிற விலை குறைவாக
இருக்கிறது; இந்த விலையை உயர்த்திக்கொடுக்க வேண்டும்.
விவசாயிகளுக்கு நெல் உற்பத்திக்கு அதிகமான செலவு ஏற்பட்
டிருக்கிறது.

நான் மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களிடம் ஒரு
பிரச்சனையைப் பற்றி கெஞ்சிக் கேட்டேன். கீழ்த்
தஞ்சை மாவட்டத்தில் சாலை சீரமைப்புப் பற்றிக் கேட்
டேன், அங்கே விவசாயிகளின் போக்குவரத்திற்கு சாலை வசதி
உகந்ததாக இல்லை. மழைக் காலங்களில குறுவை
நெல்லை உலர்த்த முடியவில்லை. ஆகவே, அவர்களுடைய
வசதிக்காக 50 கோடி ரூபாய் செலவில் அந்தச் சாலைகளைச்
சீரமைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். ஆண்டுக்கு
10 கோடி ரூபாயாவது ஒதுக்கி, இந்தத் திட்டத்தை நிறைவேற்ற
வேண்டும். நான் நிதி அமைச்சர் அவர்களிடம் கேட்டபோது,
நிதி ஆதாரம் குறைவாக இருக்கிறது என்று சொன்னார்கள்.
ஆர்.எல்.இ.ஜி.பி., திட்டத்திலிருந்து ஐந்து கோடி ரூபாய்,
என்.ஆர்.இ.பி. திட்டத்திலிருந்து ஐந்து கோடி ரூபாய், அரசாங்
கத்தின் பிற செலவினங்களிலிருந்து கொஞ்சம் கூடுதலாக நிதி
ஒதுக்கி ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் இந்த சாலை சீர
மைப்புப் பணியை கீழ்த்தஞ்சை மாவட்டத்தில் சிறப்பாகச்
செயல்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அது
கீழ்த்தஞ்சை மாவட்ட விவசாயிகளுக்கு மிகுந்த உதவிகரமாக
இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அங்கே இருக்கின்ற மண்ணைப் பொறுத்தவரையில் அது
களிமண். அப்படிப்பட்ட களிமண் சேறாக ஆகிவிட்டால்
போக்குவரத்திற்கு இடையூறு ஏற்படும் என்று நேற்றைய
தினமே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒத்துக்கொண்டார்கள்.
எனவே இந்த ஆண்டு இல்லாவிட்டாலும், அடுத்த ஆண்டிலாவது
மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் கட்டாயமாக கீழ்த்தஞ்சைப்
பகுதியில் உடனடியாகப் போக்குவரத்துக்கு உதவு
கின்ற வகையிலும், விவசாயத்திற்கு உதவுகின்ற வகையிலும்
கிராமப்புறச் சாலைகளை மேம்படுத்த நீண்டகாலத் திட்டத்தை
உருவாக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

1975–76 ஆம் ஆண்டில் திராவிட முன்னேற்றக் கழகத்தின்
மீது கஜானாவைக் காலி செய்துவிட்டதாகக் குற்றம்
காட்டினீர்கள். கொள்ளை அடித்ததாகக் குற்றம்
கள். அதாவது 5.4 கோடி ரூபாய் உபரியாக இருந்த 1975–76
ஆம் ஆண்டில் திராவிட முன்னேற்றக் கழகம் கொள்ளை அடித்து
விட்டது. கஜானாவை காலி செய்துவிட்டது என்று குற்றம்



1986 மார்ச் 21] [திரு. மா. மணிமாறன்]

சாட்டிய நீங்கள் உள்ளாட்சி அமைப்புக்களில் எதுவாக இருந்
தாலும், அதாவது முனிசிபாலிட்டியாக இருந்தாலும் மற்றவை
களாக இருந்தாலும் கொள்ளை அடிப்பதாக நாங்கள்
சொல்லமாட்டோம். ஏனென்றால் அவ்வாறு கொச்சையாகச்
சொல்வதற்கு நாங்கள் விருப்பப்படவில்லை. இன்றைக்கு உள்
ளாட்சி நிறுவனங்களில் எல்லாம் உங்கள் ஆட்சியில் நிதிநிலைமை
காலியாக்கி இருக்கிறீர்கள் என்பதை மெத்தப் பணிவோடு நான்
தெரிவித்து கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை.)

இன்றைக்குப் பல்வேறு திட்டங்களை நீங்கள் அறிவித்து
இருப்பதாகச் சொல்லியிருக்கிறீர்கள். அப்படி நீங்கள் திட்டங்
களை அறிவித்திருந்தாலும் உங்களின் திட்டங்கள் மூலமாக
மூடப்பட்ட பஞ்சாலைத் தொழிலாளர்கள் வேலை பெற முடிய
வில்லை. பஞ்சாலைகள் மூடப்பட்டதால் 5,000 பஞ்சாலைத்
தொழிலாளர்களுக்கு மேற்பட்டவர்கள் பாதிக்கப்பட்டிருக்
கிறார்கள். 25 பேர் இறந்து இருக்கிறார்கள். அதற்கெல்லாம்
நிவாரணம் கூறப்படவில்லை.

பல்வேறு கோரிக்கைகளை வைத்து ஆசிரியர்கள் போராடி
னார்கள். அப்படிப்போராடிய ஆசிரியர்கள் பலர் சிறைச்சாலை
யில் அடைக்கப்பட்டு பின்னர் தேர்தல் நெருங்கிய நேரத்தில்
பேச்சுவார்த்தைக்கு அழைக்கப்பட்டு பேசப்பட்டது. அப்படி
பேச்சுவார்த்தை முடிந்த பிறகு அவர்கள் வேலைக்குச் சென்றார்
கள். ஆனால் அவர்கள் நடத்திய போராட்டத்திற்கு ஆதரவு
தந்த அரசு ஊழியர்களில் 35 பேர் இன்றைக்கு வேலை நீக்கம்
செய்யப்பட்ட நிலையில் இருக்கிறார்கள். அவர்கள் ஆசிரியர்
போராட்டத்திற்கு ஆதரவாக உண்ணாவிரதம் இருந்து தங்
களை வருத்திக் கொண்டார்கள். அதற்காக நீங்கள் நடவடிக்கை
எடுத்தீர்கள். அதை கண்டித்துப் போராடினார்கள்.
35 ஊழியர்கள் இன்றைக்கு வேலைக்குப் போக முடியாத சூழ்
நிலையில் இருக்கிறார்கள். அதாவது போராட்டம் நடத்திய
ஆசிரியர்கள் வேலைக்குச் சென்றுவிட்டார்கள். அவர்களுக்கு
உதவியாகப் போராட்டம் நடத்திய அரசு அலுவலர்கள் இன்
றைக்குப் பாதிக்கப்பட்ட நிலைமையில் வெளியே நின்றுகொண்டு
இருக்கிறார்கள். அவர்களுடைய சங்கத்தின் பதிவு ரத்து செய்
யப்பட்ட நிலைமையில் அவர்களுக்கு எந்தவிதமான உதவியும்
செய்யக்கூடிய முயற்சியில் இந்த அரசு இல்லை.

மத்திய அரசின் ஊழியர்களைப் பொறுத்தவரையில்
311(2) பி சட்டத்தினைப்பற்றி உச்சநீதி மன்றத்தில் ஒரு தீர்ப்
பினை அளித்து இருக்கிறார்கள். அதாவது எந்த நேரத்திலும்

[திரு. மா. மணிமாறன்] [1986 மார்ச் 21

காரணம் காட்டாமல் ஊழியர்களை வெளியே அனுப்பிவிடலாம் என்று அதில் சொல்லியிருக்கிகிறார்கள். தொழிலாளர்களுக்கு உதவியாக இருப்பதாக கூறும் நீங்கள் எல்லாம் கட்டாயமாக கண்டிக்கக்கூடிய தீர்ப்பாக இது இருக்கிறது. இந்த 311 (2) பி, பிரிவு இருக்கக்கூடாது, அந்தச் சட்டத்தைத் திருத்த வேண்டும் என்று வங்காளத்தில் ஒரு தீர்மானம் போட்டிருக்கிறார்கள். என்னைப் பொறுத்தவரையில் நீங்களும் அப்படி ஒரு தீர்மானத்தைப் போட வேண்டும் என்று நான் கேட்கிறேன். ஆனால் உங்களைப் பாதுகாக்கக்கூடிய வகையில் அதாவது 356 வது சட்டப்பிரிவையே எதிர்க்க முடியாத நீங்கள் இந்த 311 (2) பி, பிரிவையா எதிர்க்கப்போகிறீர்க்ள் ? அது நடக்காத காரியம்தான். எனவே நாவலர் அவர்களைக் கேட்டுக்கொள்வதெல்லாம் முடிந்தால் இந்தச் சட்டத்தை எதிர்த்து, இதைத் திருத்த வேண்டும் என்று மத்திய அரசை வற்புறுத்த வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

நீங்கள் எதிர்க்க மாட்டீர்கள் என்று நான் சொல்லவில்லை. நீங்கள் எதிர்க்கக்கூடியவர்கள்தான். எதிர்த்திருக்கிறீர்கள். எதிர்த்ததன் காரணத்தால் பல திட்டங்களைத் தமிழகம் பெற்றிருக்கிறது. ஒரு காலத்தில் நடந்த போராட்டம் காரணமாகத்தான், கலைஞர் அவர்களோடு நீங்கள் இருந்த நேரத்தில் நீங்களும் சேர்ந்து காட்டிய எதிர்ப்பு காரணமாகத்தான் தூத்துக்குடி ஆழ்கடல் துறைமுகத்தைப் பெறப்பட்டிருக்கிறது. சேலம் இரும்பாலை பெறப்பட்டிருக்கிறது ஆனால் அந்த ஆலை உருக்காலையாக இருக்க வேண்டியது உருட்டாலையாக மாற்றப்பட்டிருக்கிறது. திருமதி இந்திராகாந்தி அம்மையார் அவர்களை கலைஞர் அவர்கள் எதிர்த்த நேரத்தில்கூட சில திட்டங்களைப் பெற்றிருக்கிறார்கள். அப்படி கிடைத்த திட்டங்களில் ஒன்றாக தூத்துச்குடி அனல் மின் நிலையம் இருக்கிறது. இந்திராகாந்தி அம்மையார் அவர்களை கலைஞர் ஆதரித்த நேரத்தில் பெற்ற திட்டமாக தூத்துக்குடி துறைமுகத் திட்டமும், சேலம் உருக்காலைத் திட்டமும் இருக்
கின்றன. எனவே எதிர்த்த நேரங்களில்கூட திட்டங்களைப்
பெற்றிருக்கிறோம். ஆனால் நீங்களும் இந்திராகாந்தியை எதிர்த்
திருக்கிறீர்கள். எப்போது? திருமதி இந்திராகாந்தி அம்மையார்
அவர்கள் கட்சி ஆளும் கட்சியாக வந்த நேரத்தில் அவர்களை
ஆதரிக்கிறீர்கள். ஆனால் எங்களைப் பொறுத்தவரையில்
அன்னையார் இந்திராகாந்தி அவர்கள் ஆட்சியை விட்டுச்
சென்றதற்குப் பின்னால் நாங்கள் அவர்களை ஆதரித்திருக்
கிறோம். அவர்கள் ஆட்சிபுரிந்த நேரத்தில் நாங்கள் எதிர்த்து
இருக்கிறோம். எதிர்த்த நேரத்தில், அவர்கள் ஆட்சியில் இருந்த
நேரத்தில் நாங்கள் நன்மைகளைப் பெற்றிருக்கிறோம். அதே
நேரத்தில் ஆட்சியில் இல்லாத நேரத்தில்கூட நாங்கள் தமிழ்
நாட்டின் முன்னேற்றத்திற்காகப் பெறுவதற்கரிய திட்டங்களை
எல்லாம் கேட்டுப் பெற்றிருக்கிறோம்.



1986 மார்ச் 21] [திரு. மா. மணிமாறன்]

ஒன்றே ஒன்றை மட்டும் தெரிவித்துக்கொள்கிறேன். பல் வேறு திட்டங்களை அறிவித்திருக்கிற நீங்கள் ஒரு காலத்தில் மாநில சுயாட்சிபற்றி என்ன சொன்னீர்கள் ? மாநில சுயாட்சி பற்றி அண்ணா பேசவில்லை என்று சொன்னீர்கள். இந்த மன்றத்தில் கூட அவ்வாறு சொன்னீர்கள். ஆனால் இப்போது மாநில சுயாட்சி வரக்கூடிய காலத்தில் அண்ணா அவர்களுடைய எண்ணங்கள் என்றெல்லாம் வேகமாகச் சொல்கிறீர்கள். ஒரு காலத்தில் மாநில சுய ஆட்சியை அண்ணா தம்முடைய கொள்கையில் சேர்த்துக்கொள்ளவில்லை என்று சொன்னீர்கள். அண்ணா அதைச் சொல்லவே இல்லை என்று சொன்னீர்கள். அப்படி அண்ணா சொல்லாதது என்று சொன்னதை இன்று சொன்னதாகசச் சொல்கிறீர்கள். எப்படியோ காலம் கடந்தாவது அண்ணாவின் கொள்கையோடு நெருங்கி வந்ததற்காக நன்றி.

[முற்பகல் 11-30]

இப்போது இன்னொன்றைச் சொல்லியிருக்கிறீர்கள். ஆதிதிராவிடர்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்கப்படுவதைப் பற்றிச் சொல்லியிருக்கிறீர்கள். லட்சக் கணக்கில் வீடுகளைக் கட்டப்போகிறோம் என்று சொல்லுகிறீர்கள். எப்படிக் கட்டப் போகிறீர்கள் ? அதற்கான நிதி ஒதுக்கீடே இல்லையே. மந்திரத்தாலே பந்தல் போடலாம் என்று ஆசைப்படுகிறீர்களோ என்னவோ. எப்படியோ பந்தல் வருகிறதா பார்க்கலாம். இப்படி வீடுகளைப் பணம் இல்லாமலேயே கட்டப்போகிற நீங்கள் இன்றைக்கு ஆதிதிராவிடர்கள் மீது இவ்வளவு அக்கறை எடுத்துக் கொள்வதாகக் காட்டிக் கொள்ளும் நீங்கள், அன்றைக்கு என்ன சொன்னீர்கள், ஆதிதிராவிடர்கள் வீடு கேட்கவில்லை, அவர்கள் கேட்பது எல்லாம் வீட்டுமனைகள்தாம் என்று சொன்னீர்கள் அல்லவா ?

இந்த மன்றத்திலே டாக்டர் கலைஞர் அவர்கள் கேட்டபோது, ‘ 1975-லே முடிவு செய்ததைப் போல ஏன் ஆதித்திராவிடர்களுக்கு வீடுகளை நீங்கள் கட்டவில்லை ? வீடுகள் ஆதிதிராவிடர்களுக்கு வேண்டும் அல்லவா ’ என்று கலைஞர் கேட்டபோது, வீடுகள் தேவைப்படுவது ஆதித்திராவிடர்களுக்கு மட்டும் அல்ல. எல்லோருக்கும் தான் தேவைப்படுகிறது. அப்படி எல்லோருக்கும் தேவைப்படுகிற ஒன்றை ஆதிதிராவிடர்களுக்கு மட்டும் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும் என்று சொன்னால், குடியானவர்கள் புரட்சி செய்வார்கள் என்று சொன்னீர்கள். அப்படி குடியானவர்கள் புரட்சி செய்வார்கள் என்று சொன்ன நீங்கள் இன்றைக்கு அதே ஆதிதிராவிடர்களிடம் அக்கறை கொண்டிருப்பதாகக் காட்டிக்கொண்டிருக்கிறீர்கள். ஏன் ? தேர்தலை எதிர்பார்த்துதானே

30 லட்சம் வீடுகள் கட்டப்போகிறோம் என்று சொல்லிக்கொண்டிருக்கிறீர்கள். எப்படிக் கட்டப்போகிறீர்கள்? அதற்கான நிதி ஒதுக்கீடே இல்லை. இப்படி முறையான திட்டம் இல்லாது, நிதி ஒதுக்கீடு இல்லாது, தேர்தல்கள் வருகின்ற நேரத்தில் ஏதேதோ வாக்குகளை அள்ளி அளித்துவிட்டு ஏழை எளியவர்களை ஏமாற்றுகிறீர்கள். ஏழை எளியவர்களிடத்திலே வாக்குச்சீட்டு இருக்கின்ற காரணத்தால்தான் நீங்களும் வாக்குகளை அளித்துக்கொண்டிருக்கிறீர்கள். அவர்கள் உண்மையிலேயே வாழ்க்கையில் முன்னேற வேண்டும் என்ற எண்ணம் உங்களுக்கு இல்லை.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை.)

ஏழை எளிய மக்களுக்கு சத்துணவு போடுகிறீர்கள். துணி கொடுக்கிறீர்கள். இப்படி அவ்வப்போது வாக்குகள் பெறுவதற்காக பல திட்டங்களைப் போடுகிறீர்கள். அவர்கள் உண்மையிலேயே வாழ்க்கையில் முன்னேற்றம் அடைய வேண்டு என்ற எண்ணம் உங்களுக்கு இருந்தால், அவர்கள் தாமாகவே தம்முடைய அன்றாட உணவுப் பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்ளும் வகையில், தாமாகவே துணிகளை வாங்கிக் கொள்ளும் வகையில்-பர்சேசிங் கெப்பாசிட்டியை உண்டாக்கினால்தான், அவர்கள் வாழ்க்கையில் முன்னேற முடியும். அப்படிச் செய்தால் தான் இந்த நாட்டினுடைய பொருளாதார முன்னேற்றத்தில் நீங்கள் அக்கறை எடுத்துக் கொள்வதாக முடியும் என்று சொல்லி வாய்ப்புக்கு நன்றி தெரிவித்து முடிக்கிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு திரு. யா. ஸை. மு. யூசுப்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, நமது மாண்புமிகு உறுப்பினர் மணிமாறன் அவர்களிடம் ஒரு விளக்கத்தை நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன். தமிழகத்தில் உள்ள பொது மக்கள், குறிப்பாக வாக்காளப் பெருமக்கள் எல்லாம் அரசாங்கத்தின் வாயிலாக வாக்குறுதிகளைக் கொடுத்து ஏமாற்றப்படுகிறார்கள் என்று சொன்னார்கள். அதன் மூலம் தமிழகத்தில் உள்ள மக்கள் எல்லாம் இப்படி லஞ்சம் பெற்றுக்கொண்டுதான் வாக்குகளைக் கொடுக்கிறார்கள் என்று திராவிட முன்னேற்றக் கழகம் கருதுகிறதா என்று தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

திரு. மா. மணிமாறன்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பொதுமக்கள் வாக்குகளைப் போடுவதற்காக லஞ்சம் பெறுகிறார்கள் என்பது அல்ல. பொது மக்களிடம் இருந்து வாக்குகளைப் பெறுவதற்காக இந்த அரசு தான் செயல்படுத்த திட்டமில்லாத, செலவுக்குக்கூட நிதி ஒதுக்காத திட்டங்களை அறிவிக்கிறது என்று சொன்னேன். ஆதி திராவிடர்களுக்கு 5 இலட்சம் வீடுகளைக் கட்டுவதாகச் சொல்லி வாக்குறுதி கொடுத்திருக்கிறீர்கள். அதற்கான நிதி ஆதாரங்களை ஒதுக்கவில்லை, எனவே நீங்கள் அவர்களை ஏமாற்றுகிறீர்கள் என்று குற்றச்சாட்டு சொல்லி முடித்தேன்.





திரு. கூடலூர் இ. வி. வேலு: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1986–87 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையை மாண்புமிகு நிதியமைச்சர் டாக்டர் நாவலர் அவர்கள் இங்கே கொண்டுவந்திருப்பதை வரவேற்று எனது ஒரு சில கருத்துக்களை நான் இந்த மன்றத்தில் வைக்க விழைகிறேன்.

இந்த நிதிநிலை அறிக்கையில் ஏழை எளிய மக்கள் பயன்படுத்துகின்ற பல்வேறு பொருள்களுக்கு அரசு வரிச் சலுகைகளை அளித்துள்ளது. பல பொருள்களுக்கு வரியைத் தள்ளுபடியும் செய்துள்ளது, வரவேற்கத்தக்கது. அன்றாட வாழ்க்கையில் மக்களை நோயிலிருந்து பாதுகாத்து காக்கின்ற முக்கிய உயிர் காக்கும் மருந்துப் பொருட்களுக்கு, அவற்றில் 41 இனங்களுக்கு 8 சதவீதம் வரியை 4 சதவீதமாகக் குறைத்திருப்பது வரவேற்கத்தக்கது. அதே நேரத்தில் அரசுப்பணியாளர்கள் வேலையிலே இருக்கும்போது வீடு கட்டக்கடன் வாங்கியிருந்தால், அவர்கள் பதவியில் இருக்கும்போதே இறக்க நேரிட்டால் அவர்களுடைய கடனை முழுமையாக தள்ளுபடி செய்ய வேணடும் என்ற சலுகை திட்டத்தினை இந்த நிதிநிலை அறிக்கையிலே அறிவித்திருப்பது வரவேற்கத்தக்கது.

ஏழை எளியவர்களின் ஒளி விளக்காய் திகழும் எங்கள் அண்ணன் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் இந்த நாட்டு மக்களுக்காகப் பல்வேறு திட்டங்களை நிறைவேற்றியிருக்கிறார்கள் என்பதை ஏழை மக்களே பாராட்டுகிறார்கள். இந்த நிதிநிலை அறிக்கையின் மீது நேற்றைக்கு முன் தினம் பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு. ரகுமான்கான் அவர்கள் ஒன்றைச்சொன்னார்கள். இந்த நிதிநிலை அறிக்கை எப்படி இருக்கிறது என்று சொன்னால் சகாரா பாலைவனத்தைத் தாண்ட முடியாத கிழட்டு ஒட்டகம் போன்று இருக்கிறது என்று அவர்கள் சொன்னார்கள். அவர்கள் சொல்வதை ஒரு வாதத்திற்காக ஒப்புக் கொண்டாலும்கூட' நாங்கள் வெறும் கிழட்டு ஒட்டகம் தான். ஆனால் நீங்கள் குருட்டு ஒட்டகம் என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும் என்று அவருக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேபோல நேற்றைய தினம் பேசிய நம்முடைய கம்யூனிஸ்ட் கட்சிநண்பர் திரு. சுப்பராயன் அவர்கள் ஒன்றைச் சொன்னார்கள். அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு ஒரு விஷப் பூண்டு என்று சொன்னார்கள். அவருக்கு நான் மெத்தப் பணிவோடு சொல்லிக் கொள்வதெல்லாம், 1980, ஆம் ஆண்டு புரட்சித்தலைவர் அவர்களோடு கம்யூனிஸ்ட் கட்சியினர் நல்லுறவு கொண்டிருந்த நேரத்தில் அவரை ரசித்து ருசித்துப் பாராட்டியவர்கள் தாம் அவர்கள். ஆனால் இன்றைக்கு உங்களுக்கு விஷப் பூண்டாக இருக்கிறது. காரணம் நீங்கள் சேர்ந்திருக்கிற இடம். எனவே நீங்கள் சொல்கிறீர்கள், பரவாயில்லை. நேற்றைக்குப் பேசுகிறபோது மரியாதைக்குரிய

திரு. சிந்தன் அவர்கள் ஒன்றைக் குறிப்பிட்டார்கள். பேரறிஞர் அண்ணா அவர்கள் மாநில சுயாட்சியைப் பெறுகிற வகையில் காங்கிரஸ் பேரியக்கத்தோடு கூட்டே வைத்துக் கொள்ளக்கூடாது என்று கருத்துக்களைச் சொன்னார் என்று குறிப்பிட்டார்கள். அவர்களுக்கு நான் சொலலிக்கொள்வது எல்லாம் பேரறிஞர் அண்ணா அவர்கள் தன்னுடைய திட்டங்களையும், கொள்கைகளையும் நிறைவேற்றுவதற்காக தனக்கு எதிரியாக இருந்த மூதறிஞர் இராஜாஜி அவர்களோடு கூட்டு வைத்துக்கொண்டு தன்னுடைய திட்டங்களையும் கொள்கைகளையும் நாட்டு மக்களுக்குச் சொன்னார். எனவே அந்த வகையிலே இன்றைக்கு புரட்சித் தலைவா அவர்கள் தன்னுடைய திட்டங்களையும் கொள்கைகளையும் நாட்டு மக்களுக்குச் சொல்வதற்காக கூட்டு வைத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே கூட்டு வைத்துக்கொள்வது என்பது திட்டங்களைய்யும் கொள்கைகளையும் வைத்துத்தான் ஆதரிப்பதா எதிர்ப்பதா என்று முடிவு செய்யமுடியுமே தவிர வேறொன்றுமில்லை.

இப்போது கூட காங்கிரஸ் பேரியக்க நண்பர்கள் எங்களுடைய கொள்கைகளை விமர்சனம் செய்கிறார்கள். நாங்களும் சில நேரங்களில் அவர்களை விமர்சனம் செய்கிறோம். எனவே அந்த விமர்சனமும், கொள்கையும் திட்டமும் என்பது வேறு. மக்கள் மத்தியிலே அதைக் கொண்டு செலுத்துகிற நேரத்திலே யாருடைய உதவியை நாடவேண்டுமென்ற உணர்வோடு தான் கூட்டு வைத்துக் கொண்டிருக்கிறோம்.

நேற்றைக்கு கூட அம்மையார் அவர்கள் ஒன்றைச் சொன்னார்கள். அவர்களோடு உறவு வைத்துக் கொண்டிருக்கிறோம் என்பதற்காக எங்களை ஒன்றும் சொல்லாமல் இருப்பதில்லை. சர்வாதிகாரி என்றெல்லாம் சொன்னார்கள். மாநில சர்க்கார் கட்டுப்பாட்டிற்குள் உள்ள அதிகாரத்தை வைத்துக்கொண்டு புரட்சித் தலைவர் அவர்கள் தமிழக மக்களுக்கு பல வரிகளைத் தள்ளுபடி செய்து வரிச்சலுகைகளைச் செய்திருக்கிறார்கள். அப்படியிருந்தும் உள்ளாட்சி அதிகாரம் உள்ளாட்சித் துறை அமைச்சரிடம் உள்ளது என்று மாண்புமிகு அமைச்சர் திரு.காளிமுத்து குறிப்பிட்டார் என்பதை பொறுத்துக் கொள்ள முடியவில்லை. அதனால் சர்வாதிகாரி என்று சொல்லி விட்டார்கள். இன்றைக்கு இளைய தலைமுறையாய் விளங்குகிற பாரதப் பிரதமர் திரு. ராஜீவ் காந்தி அவர்களின் அதிகாரத்தில் கரும்பிற்கு, நெல்லிற்கு, இரும்பிற்கு, பேப்பருக்கு அதைப்போல அயல்நாட்டுப் பொருள்கள் உள்நாட்டிற்கு வருவதற்கும், உள் நாட்டுப் பொருள்கள் அயல் நாட்டிற்குப் போவதற்கும், இன்னும் பீடி, சிகரெட், கட்டுகிற துணி முதலியவைகளுக்கும் வரிபோடுகிற அதிகாரம் இருக்கிறது. அதற்காக நாங்கள் திரு. ராஜீவ் காந்தி அவர்களைப் பார்த்து சர்வாதிகாரி என்று சொல்ல மாட்டோம். சர்வாதிகாரி என்று சொன்னதற்கு அடிப்படை காரணம் மாண்புமிகு திரு. காளிமுத்து அவர்கள் சொன்னார்கள், உள்ளாட்சித் துறையின் அதிகாரம் உள்ளாட்சித் துறை அமைச்சரிடம் இருக்கிறதென்று. அப்படி அவர் சொன்னதற்காக நீங்கள் இதைச் சொல்லி விட்டீர்கள். அவர் சொன்னதற்கு, காரணம் இன்றைக்கு நம்முடைய மரியாதைக்குரிய ரகுமான்கான் அவர்கள் ஒன்றைச் சொன்னார்கள். அவர்களுடைய தலைவர் வெளியே வெளிச்சம் போட்டுக் காட்டிக் கொண்டிருக்கிறார்கள். புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் எத்தனை முறை வெற்றி பெற்றாலும், எவ்வளவு சீட்டுகள் வெற்றி பெற்றாலும், அமோகமான வெற்றிபெற்றாலும் அடக்கத்தோடு, நாட்டு மக்களுக்குச் செய்யவேண்டிய பணிகளை ஆற்றுபவர். புரட்சித் தலைவர் அவர்கள் தன்னுடைய ஒரு பாடலில், பதவி வரும்போது பணிவு வரவேண்டுமென்று சொன்னார் அந்தத் தத்துவத்தின் அடிப்படையில் அவர்கள் பதவிக்கு வந்தால் பணிவோடு நாட்டு மக்களுக்குச் செய்ய வேண்டிய காரியங்களைச் செய்து கொண்டிருப்பார்கள்.





எனவே அந்த அளவிற்கு அவர்கள் பணிவோடு இருக்கிற நேரத்தில், இன்றைக்கு ஏதோ ஒருசில இடங்களில் உள்ளாட்சித் தேர்தலில் வெற்றி பெற்று விட்ட காரணத்தால் இவர்கள் இன்றைக்கு வெளிச்சம் போட்டுக் காட்டிக் கொண்டிருக்கிறார்கள். இவர்கள் எல்லாம் அரசாங்கத்தின் நிதியிலே தன்னுடைய பிறந்த நாளைக் கொண்டாடி, அதாவது பிச்சைக்காரர்கள் மறுவாழ்வுத் திட்டம், ஏழைகளுக்கு கண்ணொளி வழங்கும் திட்டம் என்று இப்படி பல்வேறு திட்டங்களைப் போட்டு தனக்கு விளம்பரம் தேடிக்கொண்டு விழாக்களைக்கொண்டாடியவர்கள் தான் இன்றைக்கு சட்டமன்றத்திலே பேசுகிற போது இந்த அரசாங்கம் தேர்தலில் வாக்குகளை சேகரிப்பதற்காக பல்வேறு காரியங்களைப் பொய்யாக சொல்லி செலவு செய்கின்றது என்று ஒரு குற்றச்சாட்டை இங்கே எனக்கு முன்னாலே பேசிய மாண்புமிகு மணிமாறன் அவர்கள் குறிப்பிட்டார்கள்.

புரட்சித் தலைவர் அவர்கள் 100 சதவீதம் வெற்றி பெற்றால் ஒரு சதவீதம் பெற்றதாகக் கூட காட்டிக்கொள்ள மாட்டார். ஆனால் உங்கள் தலைவரோ ஒரு சதவீதம் வெற்றி பெற்றால் 100 சதவீதம் வெற்றி பெற்றதாக மக்களிடம் வெளிச்சம் போட்டு காட்டிக்கொண்டிருக்கிறார்கள். அதோடு நிறுத்தி விட்டாரா என்ன? உள்ளாட்சித் துறையைப் பொறுத்தவரையில் வெற்றி பெற்றிருக்கிறார்கள். மறுநாளே முதலமைச்சர் அவர்களும், நாவலர் அவர்களும், உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களும் சொன்னார்கள், மக்கள் தீர்ப்பளித்து விட்டார்கள், வெற்றி பெற்றிருக்கிறீர்கள், எனவே அத்தனை பேரையும் நாங்கள் மனமார வாழ்த்துகிறோம், பணிகள் தொடரட்டும் என்று வாழ்த்தினார்கள். ஆனால் வெற்றி பெற்ற தி.மு.க.வைச் சேர்ந்த நண்பர்கள் நகராட்சிக்குச் சென்று ரோடு போடுவார்கள் என்று பார்த்தோம். நகராட்சிகளுக்கு சென்று பியூஸ் போன பல்புகளை மாற்றுவார்கள், கழிப்பறைகள்ள சுத்தம் செய்வார்கள் என்று பார்த்தோம்,

ஆனால் அது நடக்கவில்லை. என்ன நடக்கிறது இன்றைக்கு? தலைவர் பேசுகிறார், சாராயக் கடைகளை அகற்றுவோம் என்று. சாராயக் கடைகளைக் கொடுக்கும் அதிகாரம் நகராட்சியிடமா இருக்கிறது? அதற்கு எக்சைஸ் கலால் துறை என்று இருக்கிறது.

(முற்பகல் 11-40)

**ஆனால் அல்லவா** எந்தெந்த இடத்திலே கொடுக்க வேண்டும், எந்தெந்த இடத்திலே இருந்து அகற்ற வேண்டும் என்று சொல்ல முடியும். மசூதிக்கு முன்னால் இருக்கிறது என்று சொன்னால் மனு கொடுத்தால், அகற்றப் போகிறது அரசாங்கம். பள்ளிக்கூடத்திற்கு முன்னாலே சாராயக் கடைகள் இருக்கிறது என்று சொன்னால், மனு கொடுத்தால் அகற்றப் போகிறது அரசாங்கம். அதை விட்டு விட்டு நகராட்சிக்கு இல்லாத அதிகாரத்தைப் பற்றி பேசுகிறார்கள், மேடைகளிலே ஏறி. நகர மன்றத் தலைவர்கள் எல்லாம் சாராயக் கடைகளை அகற்றுவோம் என்று சொல்கிறார்கள். இது கூட அவர்களுக்குப் புரியவில்லை.

அதோடு மட்டுமல்ல, நாங்கள் கணக்கைப் பார்க்கப் போகிறோம் என்று சொல்கிறார்கள். கணக்குப் புத்தகத்தை காட்டவில்லை என்கிறார்கள். என்ன கணக்கு? நகராட்சி கணக்குகளும், ஒன்றியக் கணக்குகளும் அங்கேதான் இருக்கின்றன. ஆணையாளர் என்று ஒருவர் இருக்கிறார். பொது மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் போனால், அங்கே உள்ள அதிகாரிகளிடம் கேட்டால் அவர்கள் கொடுக்கப் போகிறார்கள். கணக்கை நீங்கள் பார்த்துக் கொள்ள வேண்டியதுதானே. கணக்கைப் பார்க்கப் போகிறோம் என்றால், அது என்ன உள்ளாட்சித்துறை அமைச்சருடைய ரூமிலோ அல்லது முதலமைச்சருடைய ரூமிலோவா இருக்கிறது? கணக்குப் புத்தகத்தை பார்த்துக் கொள்ளட்டும். அதில் எங்களுக்கு ஒன்றும் ஆட்சேபணை இல்லை.

அதோடு மட்டுமல்ல, இதிலே இன்னொரு வேடிக்கை. செக் புத்தகம் எங்களுக்கு கொடுக்கவில்லை என்று சொல்கிறார்கள். எனக்கு ஒன்றுமே புரியவில்லை. செக் புத்தகம் ஊராட்சி மன்றத் தலைவர்களுக்கு மட்டும்தான் கொடுக்கப்படும். ஊராட்சி ஒன்றியப் பெருந்தலைவர்களுக்கு செக் புத்தகம் கிடையாது. நகராட்சி மன்றத் தலைவர்களுக்கு செக் புத்தகம் கிடையாது. அப்படி இருக்கும்போது, நகராட்சித் தலைவர்களுக்கும், ஊராட்சி ஒன்றியத் தலைவர்களுக்கும் செக் புத்தகம் கொடுக்கவில்லை என்றால் எப்படிக் கொடுக்க முடியும்? வேடிக்கையாக இருக்கிறது. 7 ஆண்டுக் காலம் முதலமைச்சராக இருந்தவர்களுக்கு இதுகூடத் தெரியவில்லை என்கிற போது வேதனையாக இருக்கிறது.

அதோடு மட்டுமல்ல. மேடையிலே பேசுகிறபோது சொல்கிறார்கள். நகராட்சித் தலைவர்கள் எல்லாம் தங்களுடைய மேசை மீது 10 கட்டளைகளை வைத்துக் கொள்ள வேண்டும்.





என்று சொல்கிறார்கள். அவர்கள் என்ன உள்ளாட்சித்துறை அமைச்சரா? எனக்குப் புரியவில்லை. உள்ளாட்சித் துறை அமைச்சர் ஆக அண்ணன் ப.உ.ச. அவர்களை புரட்சித் தலைவர் அவர்கள் ஜனநாயக ரீதியாக அறிவித்திருக்கிறார்கள். ஆனால், பத்திரிகையிலே பார்த்தால், நகராட்சித் தலைவர்கள் எல்லாம், பத்துக் கட்டளைகளை தங்களுடைய மேசைகளின் மேலே வைத்துக்கொள்ள வேண்டும் என்று சொல்கிறார்கள். கருணாநிதி என்ன உள்ளாட்சித்துறை அமைச்சரா? எனக்குப் புரியவில்லை. எதற்காக நகராட்சித் தலைவர்களாக அவர்கள் வந்திருக்கிறார்கள் என்று பார்த்தால், இப்போதுதான் புரிகிறது. அவசரம் அவசரமாக பெயின்ட் அடித்தார்கள். என்னடா, பெயின்ட் அடிக்கிறார்களே என்று பார்த்தால், அங்கேயிருந்த தலைவர்களுடைய போட்டோக்களை எடுத்துவிட்டு, மரியாதைக்குரிய கலைஞர் அவர்களுடைய போட்டோவை வைத்துக்கொண்டிருக்கிறார்கள், நகராட்சியிலே. இதற்காகத்தான் எங்களை எல்லாம் இன்றைக்கு விமர்சனம் செய்துவிட்டு, நாட்டு மக்களை ஏமாற்றிவிட்டு, ஓட்டு வாங்கினீர்களா? நகராட்சிகளில் உள்ள குறைகளைப் போய்ப் பார்ப்பதை விட்டுவிட்டு, ரோடு வசதிகளைப் பார்ப்பதை விட்டுவிட்டு, அவசரம் அவசரமாக கலைஞருடைய படத்தை மாட்டி வைத்திருக்கிறார்கள். இப்படித்தான் நகராட்சிகள் இன்றைக்கு நடந்து கொண்டிருக்கின்றன என்பதாக நமக்குச் செய்திகள் வருகின்றன. ஆகவே, அவருடைய படத்தை மாட்டுவதற்காக, இன்றைக்கு அவசர அவசரமாக வேலைகளைச் செய்து கொண்டு இருக்கிறார்கள்.

அதோடு, நான்கு தினங்களுக்கு முன்னாலே அவர்களுடைய கட்சிப் பத்திரிகையைப் பார்த்தேன். அதில் என்ன சொல்லியிருக்கிறார்கள் தெரியுமா? தலைமைக் கழகம் கூடுமாம். தலைமைக் கழகத்திலே அவர்கள் சேர்ந்து ஆலோசனை செய்வார்களாம். ஆலோசனை செய்து அங்கே இருந்து தாக்கீதுகள் வெளியிடப்படுமாம். அந்த தாக்கீதுகள் எல்லாம் தயார் செய்யப்பட்டு, நேரடியாக நகராட்சிகளுக்கு அவைகள் வருமாம். அந்த தாக்கீதுகளை வைத்துக் கொண்டு நகராட்சிகள் செயல்படுமாம். அநேகமாக ஒவ்வொரு நகராட்சியிலேயும் பெரிய பெரிய வல்லுநர்கள் இருப்பார்கள் என்று கருதுகிறேன். ஆனால் இது எப்படி இருக்கிறது என்று சொன்னால், மழலைச் செல்வங்கள் எல்லாம் சேர்ந்து கொண்டு, வீடு கட்டிக் கொண்டு வேடிக்கை காட்டிக் கொண்டு இருக்கும் கிராமப்புறத்திலே, அதைப் போன்றுதான் இருக்கிறது இதுவும். எனவே, நகராட்சிகளைப் பற்றிய செய்திகளை பத்திரிகையிலே சொல்வதும், மேடையிலே பேசுவதும், செக் புத்தகம் வேண்டும் என்று கேட்பதும், மழலைச் செல்வங்கள் வீடு கட்டிக் கொண்டு அழகு பார்க்கிற நிலையாகத்தான் இருக்கிறதே தவிர, அது உண்மையாக, தங்களுடைய இயக்கத்தைச் சேர்ந்தவர்களுக்குச் சொல்கிற அறிவுரையாக இருக்க முடியாது. இதை நான் சொல்வதற்குக் காரணம், மழ

லைச் செல்வங்கள் வீடு கட்டிக் கொள்கிறது என்று நான் சொல்ல மாட்டேன். காரணம், இந்த நாட்டினுடைய முதலமைச்சராக இருந்தவர்கள் அவர்கள். இந்த நாட்டினுடைய நிதியமைச்சராக இருந்தவர்கள். அவர்களுக்குத் தெரியாததா எனக்குத் தெரியப் போகிறது? எனவே, இப்படியெல்லாம் அவர்கள் பேசிக்கொண்டிருக்கிறார்கள். நாட்டு மக்களை எல்லாம் குழப்பிக் கொண்டு இருக்கிறார்கள். எனவே, ஒரு அறிவுரை சொல்வோம் என்று கொஞ்சு மொழி பேசும் எங்கள் அண்ணன் காளிமுத்து அவர்கள் ஒன்றைச் சொன்னார்கள். என்னவோ கலைஞர் அவர்கள் பேசிக் கொண்டு இருக்கிறார்கள். அவர்கள் அல்ல உள்ளாட்சித்துறை அமைச்சர், உள்ளாட்சித்துறை என்று சொன்னால், ஊராட்சித் தலைவர்கள், ஊராட்சி ஒன்றியத் தலைவர்கள், நகராட்சித் தலைவர்கள் ஆகிய அத்தனை பேர்களும் உள்ளாட்சி அமைச்சருக்குக் கட்டுப்பட்டவர்கள். எனவே, உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் இருக்கிறார்கள். அவர் பெயர் மாண்புமிகு ப. உ. சண்முகம் என்று அமைச்சர் காளிமுத்து அவர்கள் சொன்னார்கள். எனவே, நம்முடைய அம்மையார் அவர்கள் சர்வாதிகாரம் என்று பேசியது இந்த மாமன்றத்திற்குத் தெரியும்.

அதோடு மட்டுமல்ல. இன்னொன்றையும் பேசியிருக்கிறார்கள். கலைஞர் அவர்கள் மேடையிலே ஒன்றைச் சொல்லியிருக்கிறார்கள். என்ன பேசுகிறார்கள் என்றால், தாழ்ந்தப்பட்ட மக்களுக்கு நியமன உறுப்பினர்கள் கொடுக்கிறோம் என்று சொல்லி மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு உரிமை கொடுத்திருக்கிறார்கள், இது ஜனநாயகப் படுகொலை என்று சேலத்திலே பேசுகிறபோது சொல்லியிருக்கிறார்கள். இது எப்படி ஜனநாயகப் படுகொலை? ஓர் ஆண்டுக் காலத்திற்கு முன்னால் புரட்சித் தலைவர் அவர்கள் எடுத்துக் கொண்ட முயற்சி, தாழ்த்தப்பட்ட மக்களுக்காக இட ஒதுக்கீடு தந்தாக வேண்டும் என்று அதிலே கண்ணும் கருத்துமாக இருந்தார்கள், உறுதியாக இருந்தார்கள். ஆனால், விட்டார்களா? பல்வேறு கட்சிக்காரர்கள் நீதிமன்றத்திற்குச் சென்றார்கள், இது கூடவே கூடாது என்று. ஹரிஜன் பிரசிடெண்டாக வரக்கூடாது, பெண்கள் எல்லாம் பிரசிடெண்டாக வரக்கூடாது, அவர்களுக்கு எல்லாம் உள்ளாட்சி மன்றங்களில் இடம் கொடுக்கக் கூடாது என்று நீதிமன்றம் போனார்கள். என்ன சொன்னீர்கள்? அன்றைக்கு சட்டத் துறை அமைச்சரவர்கள் சொன்னார்கள், நீதிமன்றத்திலே வழக்கு இருக்கிறது, முடியட்டும் என்று. விட்டார்களா? இதே 'மாமன்றத்திலே எத்தனை பேர் பேசினார்கள்? உள்ளாட்சித் தேர்தலை நடத்தியாக வேண்டுமென்று சொன்னார்கள். உடனே புரட்சித் தலைவரவர்கள் பழைய சட்டத்திலேயே தேர்தலை நடத்துங்கள் என்று சொல்லிவிட்டார்கள். அப்போது ஓராண்டு காலத்திற்கு முன் சொன்னார்கள், அப்படியே பழைய சட்டத்தில் உள்ளாட்சித் தேர்தல்கள் நடந்தாலும், அதில் பிற்படுத்தப்பட்ட



மக்கள், தாழ்த்தப்பட்ட மக்களுக்காக இட ஒதுக்கீடு அரசாங்கம் செய்யும் என்ற சட்டத்தை இந்த மாமன்றத்திலே கொண்டு வந்தார்கள். அப்போது ஏன் எதிர்க்கவில்லை? அப்போது ஏன் நீதிமன்றம் போகவில்லை? ஆனால், இன்றைக்கு வெற்றிபெற்ற பிறகு அந்த பிற்படுத்தப்பட்ட மக்கள், தாழ்த்தப்பட்ட மக்கள் எப்படியாவது ஊராட்சி மன்றத் தலைவர்களாக வந்துவிடக் கூடாது என்று இன்றைக்கு நீதி மன்றம் சென்று ஸ்டே வாங்குகிறார்கள். நான் கேட்கிறேன், அந்த பிற்படுத்தப்பட்ட மக்களும் தாழ்த்தப்பட்ட மக்களும் என்ன தவறு செய்தார்கள்? அவர்கள் அந்த உள்ளாட்சி மன்றங்களில் வரக்கூடாது என்று நீதி மன்றம் போகிறார்களே, என்ன நியாயம்? எனக்குத் தெரிந்து ஆக வேண்டும். அவ்வளவு பெரிய துரோகம் என்ன செய்துவிட்டார்கள். பாவம். தமிழகத்திலே எங்கோ ஒதுக்குப்புறமாக, வறுமைக் கோட்டிலே வாடிக்கொண்டிருக்கிற அவர்கள் வரக்கூடாது என்று நினைப்பது என்ன நியாயம்? எனவே, எந்த நியாயத்தின் அடிப்படையில் அவர்கள் வரக்கூடாது என்று இந்த நாமினேஷன்களை கலெக்டர் பெறக்கூடாது என்று இன்றைக்கு நீதி மன்றத்திற்குப் போய் இருக்கிறார்கள்? இதை நினைக்கிறபோது வேதனையாக இருக்கிறது. அதுமட்டுமல்ல, உள்ளாட்சித் தேர்தல் நடந்தது; உள்ளாட்சித் தேர்தலில் பல்வேறு அரசியல் கட்சிகளெல்லாம் போட்டி போட்டுக் கொண்டிருந்தன. ஆனால், முஸ்லீம் சமுதாயத்தினருக்கு ஏதோ அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினரும், புரட்சித் தலைவரோ தீங்கு நினைத்து விட்டார்கள் என்ற ஒரு உணர்வை திராவிட முன்னேற்றக் கழகம் பரப்பிவிட்டது. நடந்து முடிந்த தேர்தலில் என்ன நடந்தது? திராவிட முன்னேற்றக் கழகத்தவருக்கு நம்முடைய இந்து முன்னணிக் கழகம் உதவியாக இருந்தது, உண்மை. ஆனால், முஸ்லீம் சமுதாய மக்கள் புறக்கணிக்கப்பட்டார்கள். என்ன நியாயம்? திண்டுக்கல்லிலே தேசிய காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்ற கழக கூட்டணி வேட்பாளர், முஸ்லீம் சமுதாயத்தைச் சேர்ந்த ஒருவர் நின்றார். ஆனால் வெற்றி பெற்றது யார்? திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய நகராட்சித் தலைவர். அதற்கு ஒரு விதி, அந்தக் கட்சியில். நாகர்கோயில்-அங்கு ஒரு இந்து, இராகவன் என்பவர் நின்றார். ஆனால் கிருஸ்துவ சமுதாயத்தைச் சார்ந்த ஒருவர் அங்கு திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக நிறுத்திவைக்கப்படுகிறார். ஆனால், அங்கே இருக்கிற இந்து தோற்கப்படுகிறார். கிருஸ்தவ சமுதாயத்தைச் சேர்ந்தவர் நகராட்சித் தலைவராக வருகிறார். ஆகவே, இந்தத் தேர்தலில் இந்து முன்னணிக் கழகம் திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக ஒதுங்கி இருக்கிறது என்பதை என்னால் சொல்ல முடியும்.

டாக்டர் தே. குமாரதாஸ் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுகின்றபோது உண்மை நிலை என்ன என்பதை தெரியாமல் பேசி இருக்

இன்றார்கள் என்பதைத் தெரியப்படுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். அங்கே ஜெயித்தவர் கிருஸ்தவரா, இந்துவா என்ற பிரச்சனைக்கு இடமில்லை. இருந்தாலும் அங்கே திராவிட முன்னேற்றக் கழகம் வெற்றிபெற்றிருந்தாலும் அங்கே இந்து முன்னணி வேட்பாளரை நிறுத்தி தனியாகவே போட்டி போட்டிருக்கிறார்கள் என்பதை உங்கள் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். அங்கே, அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம், திராவிட முன்னேற்றக் கழகம், இந்து முன்னணி, இவைகள் எல்லாம் போட்டி போட்டன. ஆகவே, தவறான செய்தியை அவைக்குத் தரவேண்டாமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. வை. பாலச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் துணை தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசும் போது 'இந்து முன்னணிக் கழகம்' என்று சொன்னார்கள். ஆனால் 'இந்து முன்னணி' என்றுதான் எங்கள் இயக்கம் இருக்கிறதே தவிர, தமிழகத்தில் இந்து முன்னணிக் கழகம் என்று ஒரு இயக்கம் இல்லை. தயவு செய்து தவறைத் திருத்திக் கொள்ள வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. யா .சை. மு. யூசுப் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இங்கே இந்து முன்னணியின் சார்பில் நண்பர் பாலச்சந்திரன் அவர்கள் உறுப்பினராக இருக்கிறார்கள். இங்கே ஒரு குற்றச்சாட்டு சொல்லப்பட்டது. அவர் எழுந்தவுடன் அதை மறுப்பார் என்று கருதினேன். அவர் மறுக்காததைப் பார்த்தால் நம்முடைய மாண்புமிகு ஆளும் கட்சி உறுப்பினர் சொன்ன கருத்து உண்மை என்பதை அவர் ஏற்றுக் கொள்கிறார் அல்லது உண்மைதான் என்று நாட்டு மக்களுக்குத் தெரிகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. வை. பாலச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, இந்து முன்னணி இயக்கத்தைப் பொறுத்தவரையில் நடந்து முடிந்த உள்ளாட்சித் தேர்தல் சம்பந்தமாக ஒரு முடிவு மேற்கொள்ளப்பட்டது. அந்த முடிவின்படி கன்னியாகுமரி மாவட்டத்திற்கு என்று ஒரு நிலையும், கன்னியாகுமரி மாவட்டம் நீங்கலாக உள்ள மாவட்டங்களுக்கு என்று ஒரு நிலையும் முடிவாக்கப்பட்டது. அந்த கன்னியாகுமரி மாவட்ட நிலையின்படி எந்த ஒரு அரசியல் இயக்கத்திற்கும் ஆதரவு கொடுக்காது யார் தேர்தலில் போட்டியிட்டாலும் இந்து முன்னணி சுயேட்சை வேட்பாளர்களை ஆதரிப்பது என்றும், கன்னியாகுமரி நீங்கலாக உள்ள மாவட்டங்களில் இந்து வேட்பாளர்களை அரசியல் இயக்கத்தில் நம்பிக்கையான, இந்துவாக இருந்தாலும் இந்து சமுதாயத்தினருடைய உணர்வுகளை காக்கிற உணர்வு கொண்ட இந்து வேட்பாளர்கள் யார் யார் இருக்கிறார்களோ அவர்கள் எந்தக் கட்சியைச் சார்ந்தவர்களாக இருந்தாலும் அவர்களுக்கு ஆதரவு கொடுக்கலாம் என்று முடிவு எடுத்து சில இடங்களில் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த வேட்பாளர்கள் எங்கள்





நம்பிக்கைக்கு உரியவர்களாக இருந்த காரணத்தால் அவாகளை நாங்கள் ஆதரித்தோம். சில இடங்களில் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த நம்பிக்கையான இந்து வேட்பாளர்களையும் ஆதரித்தோம். கன்னியாகுமரி மாவட்டத்தைப் பொறுத்தவரையில் நாங்கள் சுயேட்சை வேட்பாளர்களை ஆதரித்ததன் காரணமாக வாக்குகள்கூட ஓரளவு சிதறி கூட இருக்கலாம். ஆனால் இன்றைக்கு கன்னியாகுமரி மாவட்டம் இந்து முன்னணியின் கோட்டையாக மாறி விட்டிருக்கிறது என்பதை கன்னியாகுமரி மாவட்டத்தில் தேர்தல் பொறுப்பை ஏற்று அங்கே முகாமிட்டு பணியாற்றிய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவார்கள் என்பதையும் நாடு அறியும்; நான் அறிவேன்.

(முற்பகல் 11—50)

ஆகவே, இந்து முன்னணி இயக்கத்தின் கொள்கையில், தீர்மானத்தில் தடுமாற்றம் இல்லை என்பதை நான் மிகத் தெளிவாகத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்து முன்னணி இயக்கம் வேறு எந்த அரசியல் இயக்கத்திற்கும் ஆதரவாகவும் இல்லை, எதிரியாகவும் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கூடலூர் இ. வி. வேலு : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆரம்பத்தில் என்னுடைய குற்றச்சாட்டே தி. மு. க. விற்கு இந்து முன்னணி உடந்தையாக இருந்தது, தோழமையாக இருந்தது என்பது தான். எனவே அதை ஆமாம் என்று ஒப்புக் கொண்டார்கள். வாதத்தின் அடிப்படையை...

திரு. வை. பாலச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தி. மு. கழகத்திற்கோ, அ.இ.அ.தி.மு. கழகத்திற்கோ அல்லது வேறு எந்த அரசியல் இயக்கத்திற்கோ பல்லக்குத் தூக்கி பாவாடை விரிக்கிற கடமை எங்களுக்கு இல்லை. அந்த வேலையும் இதுவரையில் வரவில்லை. அந்த பொறுப்பும் எங்களுக்கு இல்லை. எந்த அரசியல் இயக்கத்தைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் எங்களுடைய நம்பிக்கைக்கு உரிய ஒரு இந்துவாக இருப்பாரானால் அவரை குமரி மாவட்டம் தவிர மற்ற மாவட்டங்களில் ஆதரிக்கிறோம், என்ற ஒரே ஒரு அடிப்படையில்தான் இருக்கிறோம். எங்களுடைய நம்பிக்கைக்கு உரியவர்களுக்கு ஆதரவு கொடுத்தோம். அவர் எந்த இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் என்று நாங்கள் பார்க்கவில்லை. அவர் உண்மையான இந்துதானா என்பதை மட்டும் தான் நாங்கள் பார்த்தோமே தவிர, எந்த அரசியல் இயக்கம் என்று நாங்கள் பார்க்கவில்லை. தி.மு.க., அ.இ.அ.தி.மு.க. மற்ற அரசியல் கட்சிகள் எல்லாம் எங்களுக்கு ஒன்று தான்.

[1986 மார்ச் 21

திரு. எா. எம். இராசரத்தினம் : மாண்புமிகு பேரவைத்
துணைத் தலைவர் அவர்களே, இந்து முன்னணி இயக்கத்தில்
''உண்மையான இந்து'' அல்லது ''உண்மையற்ற இந்து'' என்ற
வேறுபாடு இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

திரு. வை. பாலச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் துணைத்
தலைவர் அவர்களே, எந்த வேட்பாளருக்கு ஆதரவு அளிக்க
லாம் என்று பார்க்கிறபோது குமரி மாவட்டம் மற்றும் வேறு
மாவட்டங்களில் இந்து சமுதாயம் புறக்கணிக்கப்படுகிற போது—
இப்போதும் இந்து சமுதாயம் புறக்கணிக்கப்படுகிறது அல்லவா ?
இப்படிப்பட்ட சந்தர்ப்பங்களின் போது—எங்களுக்கு யார், யார்
தோள் கொடுக்கிறார்களோ, இந்து சமுதாயத்தின் நியாயமான
கோரிக்கைகளுக்கு யார், யார் குரல் கொடுக்கிறார்களோ
அவர்களை இந்து முன்னணி இயக்கம் உண்மையான இந்து
என்று ஏற்றுக் கொள்கிறது. ஆனால் அரசியல் கட்சியினுடைய
போர்வையில் பதுங்கிக் கொண்டு, சிலபேர் இந்துவின் வாக்கு
களைப் பெற வேண்டும் என்று தேர்தல் நேரத்தில் மட்டும்
இந்து என்று சொன்னால் அவர்கள் உண்மையான இந்து என்று
இந்து முன்னணி இயக்கம் ஏற்றுக் கொள்ளவில்லை என்பதைத்
தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கூடலூர் இ. வி. வேலு : துணைத் தலைவர் அவர்
களே, ஒரு இயக்கத்திற்கு பொதுவான பொதுவுடைமைக்
கொள்கைதான் இருக்க முடியும். ஆனால் மாவட்ட வாரியாக
இருக்கிறது என்று சொல்கிறார்கள். பரவாயில்லை, வைத்துக்
கொள்ளட்டும். அதைப்பற்றிக் கவலை இல்லை. இந்த அவை
யில் உள்ள முஸ்லீம் கட்சியைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர்
கள் புரிந்து கொண்டால் போதும்.

இங்கே பேசுகிறபோது உறுப்பினர்கள் எல்லாம் தொழிற்
சாலை துவங்குவதற்கு வேண்டிய முயற்சிகள் எடுத்துக் கொள்ள
வில்லை என்று எல்லாம் குறிப்பிட்டார்கள். ஒரு உதாரணத்
திற்குச் சொல்கிறேன். சென்ற ஆண்டு 32 சர்க்கரை ஆலைகள்
தமிழ்நாட்டிற்கு வேண்டும்என்று நம்முடைய மாண்புமிகு புரட்சித்
தலைவர் அவர்கள் ஆட்சியில் மரியாதைக்குரிய மாண்புமிகு
அமைச்சர் திரு. ராஜாராம் அவர்கள் பரிந்துரை செய்து மத்திய
அரசுக்கு அனுப்பினார்கள். அந்த பரிந்துரை மத்திய அரசில்
இருந்து வந்த பின்பு தான் இங்கே ஆரம்பிக்க முடியும். மாண்பு
மிகு உறுப்பினர் திரு. டி. தீர்த்தகிரி கவுண்டர் அவர்கள்
சொன்னார்கள், தன்னுடைய பகுதிக்கு சர்க்கரை ஆலை வர
வில்லை என்றும், 6 மாதமாக கோப்புகள் அப்படியே இருக்கின்
றதே என்றும், சொன்னார்கள். மத்திய அரசுக்கு சென்ற
கோப்புகள் இன்னும் திரும்பி வரவில்லை. வந்த பிறகுதான்
மேற்கொண்டு நடவடிக்கைகளை எடுக்க முடியும். எனவே 32
சர்க்கரை ஆலைகளுக்கு அனுமதி வந்தால் நம்முடைய விவசாயி
கள் பயன் பெறுவார்கள். அவரும் ஒரு விவசாயி, நானும் ஒரு
விவசாயி. அது வந்தால் தான் விவசாயிகள் அதிக கரும்பை



1986 மார்ச் 21] [திரு. கூடலூர் இ. வி. வேலு]

பயிர் செய்து அதிகமான லாபத்தைப் பெறுவதற்கு வாய்ப்பாக
இருக்கும். இது போல பல சமயங்களில் பல காரியங்களுக்கு
மத்திய அரசுக்கு பரிந்துரை செய்தும் கூட இன்னும் அங்கிருந்து
வரவில்லை. அப்படி வந்தால்தான் இங்கே தொழிற்சாலை
களைத் துவங்குவதற்கு ஒரு வாய்ப்பாக இருக்கும். (மணியடிக்
கப்பெற்றது) மாண்புமிகு உறுப்பினர் திரு. மணிமாறன் அவர்
கள் பேசும்போது ஒன்றைச் சொன்னார்கள். வீடு கட்டுகிற
திட்டம் 26 கோடி ரூபாய் என்று சொல்கிறீர்களே, மந்திரக்
கோலா வைத்து இருக்கிறீர்கள் என்று சொன்னார்கள். மந்
திரக் கோல் இப்போது எங்களிடம் இல்லை. அது உங்களிடம்
தான் இருக்கிறது. மந்திரக் கோல் காட்ட வேண்டிய அவசியம்
இல்லை.

அன்று இதே சத்துணவுத் திட்டத்தை ஆரம்பிக்கும் போது
முதல் தவணையாக 2 கோடி ரூபாய் என்று சொன்னார்கள்.
இன்றைக்கு அதற்கு 168 கோடி ரூபாய் செலவு செய்து கொண்டு
இருக்கிறோம். எங்கிருந்து வந்தது என்று சொன்னால் அது
தான் புரட்சித் தலைவர், அது தான் புரட்சித் தலைவர். இன்
றைக்கு சத்துணவுத் திட்டம் என்று சொன்னாலும், இலவசமாக
பாடப் புத்தகம் கொடுக்கும் திட்டம் என்று சொன்னாலும்
மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் இந்த மன்றத்தில்
அறிவிக்கிறார் என்று சொன்னால் அது ஏழை எளிய மக்களுக்குப்
போய் சேருவதற்காக, அவர்கள் கதவைப் போய் தட்டுவதற்
காக தான் பட்டினி கிடந்தாவது அந்தத் திட்டத்தை நிறை
வேற்றுவார் எங்கள் மக்கள் தலைவர் புரட்சித் தலைவர் அவர்
கள்.

அதேபோன்று இங்கே நம்முடைய தாழ்த்தப்பட்ட மக்களுக்
காக 10 இலட்சம் வீடுகள் என்று சொன்னார்கள். இந்த ஆட்சி
யில் அதை கண்டிப்பாகக் கட்டிக் கொடுப்பார். 'நினைத்ததை
முடிப்பவர் புரட்சித் தலைவர் எம். ஜி. ஆர். அவர்கள்'. எனவே
மாண்புமிகு உறுப்பினர் திரு. மணிமாறன் அவர்கள் மனு
கொடுத்து தன்னுடைய தொகுதிக்கு பெற்றுக் கொள்ள வேண்
டும். அதைப் பார்த்து நாங்கள் மட்டற்ற மகிழ்ச்சி அடைவோம்.
அதற்காக அவர்கள் தவறாக எதையும் சொல்ல வேண்டாம்
என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, இங்கே நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு.
ரகுமான்கான் அவர்கள் ஒன்றைச் சொன்னார்கள். 77 நாட்
களாக முதலமைச்சர் அவர்களுடைய வீட்டில் தொலைபேசி
இல்லையென்றால், நாடு எப்படிப் போகும், எப்படி நடக்கும்
என்றெல்லாம் சொன்னார்கள். முதலமைச்சர் அவர்களுடைய
இல்லத்தில் 77 நாட்களாக தொலைபேசி இல்லாததால் நாட்
டிலே என்ன நடக்கவில்லை ? புயல் வந்த போதும், வெள்ளம்
வந்த போதும், முதலமைச்சர் அவர்களும், நிதியமைச்சர் அவர்
களும் சென்று பார்க்காமல் இருந்தார்களா ? சென்னையில்

புழலேரியில் வெள்ளம் வந்த நேரத்தில், உள்ளாட்சித் துறை
அமைச்சர் அவர்களையும், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்
சர் அவர்களையும் அனுப்பி பாதிப்பு அடைந்தவர்களுக்கு உண
வுப் பொட்டலங்கள் வழங்கப்படவில்லையா அல்லது தாழ்
வான பகுதிகளில் இருக்கிறவர்களுக்கு போட் கொடுத்து
மேடான பகுதிக்குக் கொண்டு வரவில்லையா ? காவல் துறை
பாதுகாப்பு கொடுக்கவில்லையா ? என்ன கொடுக்காமல் இருந்
தார்கள் ? ஆக ஒரு தொலைபேசி இல்லாததால் என்ன நடக்
காமல் போய்விட்டது ?

திரு. அ. ரகுமான்கான் : துணைத் தலைவர் அவர்களே,
முதலமைச்சர் அவர்கள் இல்லத்திலே 77 நாட்களாக தொலை
பேசித் தொடர்பு துண்டிக்கப்பட்டது என்ற தகவலை ஆளுங்
கட்சியைச் சார்ந்த நாடாளுமன்ற உறுப்பினராலும், நம்
முடைய விவசாயத்துறை அமைச்சர் காளிமுத்து அவர்களாலும்
தான் தெரிவிக்கப்பட்டது. இன்னும் சொல்லப் போனால், அவர்
கள் தெரிவித்த நேரத்திலே புயலும் இல்லை, வெள்ளமும்
இல்லை என்ற தகவலைக் கூட இந்தியன் எக்ஸ்பிரஸ் பத்திரிகை
எழுதியிருக்கிறது. அதற்கு மறுப்பும் தெரிவிக்கவில்லை. ஆக
தொலை பேசித் தொடர்பு துண்டிக்கப்பட்ட நேரத்தில், அந்த
77 நாட்களில் மழையில்லை, புயல் இல்லை, வெள்ளமும்
இல்லை. அதுமட்டுமல்ல, என்னைப் போன்றவர்கள் முதலமைச்ச
ரோடு தொடர்புகொள்ள முடியாமல் அவதிப்பட்டோம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அதைப் பற்றி
டிஸ்ப்யூட் பண்ணாதீர்கள். அதைப் பற்றித்தான் விளக்கம்
சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். ஒரு தொலைபேசி இல்லை
யென்றால், நாட்டிலே நிர்வாகமே நடக்காமல் போய்விட்டதா?

திரு. அ. ரகுமான்கான் : துணைத் தலைவர் அவர்களே,
அதைத்தான் சொல்ல விரும்புகிறேன். என்னைப் போன்றவர்கள்
மக்கள் பிரதிநிதிகள், முதலமைச்சர் இல்லத்தில் தொலைபேசி
துண்டிக்கப்பட்டபோது தொடர்பு கொள்ள முடியாது, மக்கள்
பிரச்சினைகளை பேசுவதற்குக்கூட, செயல்படமுடியாத ஒரு
சர்க்காராக இருக்கிறதே என்ற நிலைமைதான் ஏற்பட்டது.
அதற்கு அரசாங்கம் தகுந்த ஏற்பாடு செய்திருக்க வேண்டாமா ?

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் : மாண்புமிகு பேர
வைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்
ரகுமான்கான் ஒரு உண்மையை ஏற்றுக் கொண்டதற்காக நான்
என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்
பட்டவனாக இருக்கின்றேன். 77 நாட்களாகத்தான் முதலமைச்ச
ருடைய தொலைபேசி இயங்கமுடியாததால் அவர் முதலமைச்ச
ரோடு தொடர்பு கொள்ள முடியவில்லை, அதற்கு முன்பாகவும்,
பின்பாகவும் தொடர்பு கொள்ள முடிந்திருக்கிறது என்பதை
அவரே ஏற்றுக் கொள்கிறார் என்று கருதுகிறேன். அவர் பல





முறை இந்த அவையில் பல விவரங்களை, ஆதாரங்களை
கொடுக்காமல்கூட சொல்லியிருக்கிறார்கள். ஒரு முறை அவர்
சொல்லும்போது முதலமைச்சரோடு தொடர்புகொள்ள முடி
யாத நிலை இருந்ததாக சொல்லியிருக்கிறார்கள். அப்படி அவர்
கடந்த காலத்தில் சொன்ன குற்றச்சாட்டுக்கள் எல்லாம் ஆதார
மற்றவை என்று அவரே இதன்மூலம் பரிந்துரை செய்வதாக நான்
கருதுகிறேன்.

திரு. அ. ரகுமான்கான் : மன்றத்தினுடைய துணைத் தலை
வர் அவர்களே, முதலமைச்சரோடு மட்டுமல்ல, இந்த அர
சாங்கத்தில் இருக்கக் கூடிய அமைச்சர்களோடு, அதிகாரிகளோடு,
சம்பந்தப்பட்டவர்களோடு, அவ்வப்போது நான் தொடர்பு
கொண்டு, மக்கள் பிரச்சினைகளை, பல்வேறு பிரச்சினைகளை
அவர்களுக்குக் கடிதம் மூலமாகவும், மனுக்கள் மூலமாகவும்
தெரிவித்திருக்கிறேன். ஆக இந்த 77 நாட்களாக, மக்கள்
பிரச்சினைகளை முக்கியமான பிரச்சினைகளைக் கூட விவாதிக்க
முடியாத அளவிற்கு, மக்கள் பிரதிநிதிகள் தொடர்பு கொள்ள
முடியாத அளவிற்கு, தொலைபேசித் தகவல் துண்டிக்கப்பட்டது.
(குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : முதலமைச்ச
ருடைய டெலிபோன் செயல்படாமல் இருந்தால், செயலற்ற
சர்க்காராக ஆகிவிடாதே. அதைத்தான் அவர்கள் விளக்கிக்
கொண்டிருக்கிறார்கள்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : துணைத் தலைவர்
அவர்களே, முதலமைச்சரோடு தொடர்பு கொள்ளவேண்டும்
என்பதில், தொலைபேசி மூலம்தான் தொடர்பு கொள்ளவேண்டு
மென்பதில்லை. முதலமைச்சர் அவர்கள் அலுவலகத்திற்குக்கூட
பல முறை வந்திருக்கிறார்கள். பல நிகழ்ச்சிகளில் கலந்துகொண்
டிருக்கிறார்கள். 77 நாட்களில் வெளிநாட்டிற்கு எங்கும் போக
வில்லை. சென்னையிலேதான் இருந்தார்கள். தொலைபேசி
இல்லாதது ஒரு பெரிய குறைபாடு ஆகாது. அதனால் சர்க்கார்
செயலற்றதாக ஆகிவிடாது.

திரு. அ. ரகுமான்கான் : தொலைபேசி என்பது மிக மிக
முக்கியம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : முதலமைச்சர்
அலுவலகத்திற்கு வந்திருந்தார். அலுவலகம் செயல்பட்டுக்
கொண்டிருந்தது. அதற்குத்தான் அமைச்சரவர்கள் விளக்கம்
சொன்னார்கள்.

[1986 மார்ச் 21

**திரு. அ. ரகுமான்கான் :** மாண்புமிகு மன்றத்தினுடைய துணைத் தலைவர் அவர்களே, அலுவலகத்திற்கு முதலமைச்சர் வந்திருந்தார் என்று அமைச்சரவர்கள் குறிப்பிட்டார்கள். அந்த 77 நாட்களில் இந்த அலுவலகத்திற்கு . . . . . . . . . . . .

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** துணைத்தலைவர் அவர்களே, அலுவலகத்திற்கு வந்தார் என்று சொன்னேன். வந்து போனதற்கு ஆதாரம் கேட்டால் தருவதில் ஒன்றும் பிரச்சினை இல்லை. நான் மாண்புமிகு உறுப்பினர் அவர்களைக் கேட்டுக்கொள்வது, 77 நாட்களில் என்றைக்கு அவர் முதலமைச்சரோடு தொடர்பு கொண்டிருக்கிறார் என்பதாகும்.

**திரு. அ. ரகுமான்கான் :** மன்றத்தினுடைய துணைத் தலைவர் அவர்களே, என்னைப் பொறுத்தவரையில், பல்வேறு சம்பவங்களில் நான் தொடர்பு கொண்டிருக்கிறேன். * *

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை.)

(நண்பகல் 12—00)

** ** ** ** **

**திரு. அ. ரகுமான்கான் :** ஆதாரம் கொண்டு வந்திருக்கின்றேன். எல்லோருக்கும் சொல்லிவிட்டுக் கொடுத்து விடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அவையில் கொடுக்கக் கூடாது. ஒரு லிஸ்ட் போட்டு, ஒரு கவரிங் லெட்டர் வைத்து ஒரு டாக்கெட் போட்டு என்னுடைய அறையிலே வந்து கொடுக்க வேண்டும். (குறுக்கீடு).

**திரு. அ. ரகுமான்கான் :** ** ** **

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, ** **

அவர்கள் ஆதாரம் தருவதாகச் சொல்லியிருக்கிறார்கள். அதை முறைப்படி எழுதி கவரிங் லெட்டரோடு எழுதிக் கொடுக்கட்டும். நேற்று தருகிறேன் என்று சொன்னபடி தருவார்கள் என்று கருதுகிறேன். தொடர்ந்து இந்த அவை நடவடிக்கை நிகழ்ச்சிகளைத் தொடங்கும்படி கேட்டுக் கொண்டு, இதுவரையில் நடந்த அத்தனையையும் அவை நடவடிக்கைக் குறிப்பிலிருந்து நீக்கும்படியாகக் கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நீக்கப்படுகிறது.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.



1986 மார்ச் 21]

**திரு. அ. ரகுமான்கான்:** செயல்படாத அரசு என்று சொல்வதற்கு எங்களுக்கு உரிமை இல்லையா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, செயல்படாத அரசு என்று சொல்வதற்கு அவர்களுக்கு உரிமை உண்டு. இது முழுக்க முழுக்க முற்றும் முற்றும் செயல்படுகின்ற அரசு என்று சொல்வதறகு எங்களுக்கு உரிமை உண்டு. அதை நாங்கள் சொல்கிறோம்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** தலைவரவர்களே, செயல்படாத அரசு, செயல்படாத அரசு என்று சொல்வதற்கும், செயலற்ற அரசு என்று சொல்வதற்கும் நிறைய மாறுபாடு இருக்கிறது. பரவாயில்லை. செயல்படாத அரசு, செயலற்ற அரசு என்றெல்லாம் சொல்கிறார்கள். அமளி துமளி இல்லாமல் இவ்வளவு பெரிய தேர்தலை நடத்தி முடித்திருக்கின்ற புரட்சித் தலைவரவர்களின் இந்த அரசுக்குப் பெயர் செயலற்ற அரசா என்று கேட்க விரும்புகிறேன்.

**திரு. அ. ரகுமான்கான் :** ** ** **

**திரு. என்.எஸ்.வி. சித்தன் :** முக்கியமான நேரம் போய் விட்டது.

**திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம் :** தலைவரவர்களே, நான் கேட்பது என்னவென்றால். . . . . . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** சபையின் கண்ணியத்தைப் பாதுகாப்பதற்காக, இதுவரையில் நடந்த விவாதத்தை அவைக்குறிப்பிலேயிருந்து நீக்குகிறேன். அல்லது அது இருக்க வேண்டுமென்றால் இருக்கட்டும். என்னைப் பொறுத்தவரையில் என் மனசு தெரியும்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** பேரவைத் தலைவர் அவர்களே, அவற்றை அவைக்குறிப்பிலேயிருந்து நீக்குவதுதான் நல்லது. அடுத்த உறுப்பினரைப் பேசச் சொல்லும்படி கேட்டுக் கொள்கிறேன்.

(பிற்பகல் 12-10)

**திரு கூடலூர் இ. வி. வேலு :** ** ** **

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரும்பவும் சொல்கிறேன், வேலுக்கும் சேர்த்துதான். எந்தக் குற்றச்சாட்டாக இருந்தாலும் இனிமேல் எழுதிக் கொடுத்தாலொழிய அனுமதிப்பதாக இல்லை.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

எல்லோரையும் நான் பாதுகாக்க வேண்டும். இப்பொழுது நீங்கள்
யார்மேல் சொல்கிறீர்கள் என்று எனக்குத் தெரியவில்லை.
அதனால் சொல்கிறேன். இந்த அவையில் உறுப்பினர்கள் மீது
ஏதாவது குற்றச்சாட்டுகள் வர வேண்டுமானால், எழுப்பப்பட
வேண்டுமானால், எழுதிக் கொடுத்தாலொழிய இனிமேல் அதற்கு
அனுமதி இல்லை. ஆதாரங்களைத் தருவேன் என்று சொல்லி
விட்டு, பின்னால் தரமாட்டேன் என்று சொன்னாலோ, ஆதாரம்
சரியல்ல என்றாலோ எடுக்கப்படுகின்ற நடவடிக்கைக்கு உட்பட
ண்டும்.

திரு. கூடலூர் இ. வி. வேலு : இந்த அரசைப் பொறுத்த
அளவுக்குப் புரட்சித் தலைவர் ஏழை, எளிய மக்களைப் பாது
காக்கின்ற வகையில், குடிசைகளுக்கு மின் விளக்கு தந்தார்கள்.
இறந்தால் உதவித் தொகை தந்தார்கள், மரம் ஏறும்போது
இறப்போருக்கு உதவித்தொகை தந்தார்கள், என்னைப்போன்ற
விவசாயிகள் எல்லாம் மருந்து அடிக்கப் போகின்ற நேரத்தில்,
ஏதேனும் ஏற்பட்டால், அதற்காகப் பணம் ஒதுக்கினார்கள்.
கடன் சுமையிலே இருந்த விவசாயிகளுக்குக் கூட்டுறவுக் கடனை
யெல்லாம் ரத்து செய்து தந்தார்கள். இலவசமாகச் சத்துண
வைத் தந்தார்கள், இலவசமாகப் பாடப் புத்தகங்களைத்
தந்தார்கள். இலவசமாகச் சீருடையைத் தந்தார்கள். ஆகவே,
பல்வேறு காரியங்களை இந்த அரசு செய்து கொண்டிருக்கிறது.

** ** ** **

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இப்பொழுது நான்
சொன்னபொழுது நீங்களும் இந்த சபையிலே இருந்தீர்கள். எதை
நீக்கினேனோ, அதைத் திரும்பவும் பேசுகிறீர்கள். அது தவறு.
அது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. அடுத்து, திரு.
குமரி அனந்தன் பேசுவார்.

* திரு குமரி அனந்தன் : மாண்புமிகு சபாநாயகர் அவர்களே,
இந்த நிதிநிலை அறிக்கையிலே காந்தி காமராஜ் தேசிய காங்கிரஸ்
சார்பில் மிகுந்த உற்சாகத்தோடு பேச வேண்டுமென்று நினைத்து
வந்த நான், இப்போது ஏதோ பேசுகிறேன். இங்கே பல்வேறு
சலுகைகள் அளிக்கப்பட்டிருப்பதனைக் கண்டு நான் பாராட்டி,
முதலிலே, மெழுகுவர்த்தி போன்ற குடிசைத் தொழிலாக இருந்து
கொண்டிருக்கிற அந்த உற்பத்திப் பொருள்களுக்கு வரி விலக்கு
முற்றிலுமாக அளித்திருப்பது போன்றவைகளை எல்லாம் நான்
பாராட்டுகிறேன். நாட்டு சர்க்கரைக்கு வரி விலக்கு அளித்திரு
பவர்கள், பனை வெல்லத்திற்கும் வரி விலக்கு அளித்திருக்க
வேண்டுமென்ற வேண்டுகோளை இங்கே நான் வைக்கிறேன்.
விளையாட்டுப் பொருள்களுக்கு எல்லாம் வரி விலக்கு அளித்
திருப்பது, அதற்கு ஊக்கம் கொடுப்பதாக அமைகிறது. குழந்தை

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க
அகற்





களுக்கு வழங்கும் பால் உணவுப் பொருள்கள் அனைத்திற்கும்,
பால் வளப் பொருள்களுக்கும் 10 சதவீதம் ஆக இருந்த வரியை
4 சதவீதமாகக் குறைத்திருப்பதைப் பாராட்டுகிறேன். கோழி
தீவனத்தின் மீதான 5 சதவீத வரியை, 2 சதவீதம் ஆகக் குறைத்
திருப்பதை நான் பாராட்டுகிறேன்.

அதைப் போலவே, நீண்ட நெடுங்காலமாக, நமது நெஞ்சத்
தில் உறுத்திக் கொண்டிருந்த மது என்பதனை தமிழகத்திலிருந்து
நீங்கள் எடுப்பதற்கு முடிவு செய்திருப்பதையும் அதில் நீங்கள்
உறுதியாக இருக்கிறீர்கள் என்பதையும் கோடிட்டுக் காட்டும்
வகையிலே, இந்த நிதிநிலை அறிக்கையிலே தெரிவித்திருப்பதையும்
நான் மனதார காந்தி காமராஜ் தேசிய காங்கிரஸ் சார்பிலே
பாராட்டுகிறேன். வரவேற்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

மதுவிலக்கு தேவை என்பதை, எல்லாத் தலைவர்களும் ஒத்துக்
கொண்டதைப் போல, இங்கேயிருக்கிற பெரும்பாலானவர்கள்
ஒத்துக் கொண்டிருக்கிற முடிவை வரவேற்கின்றபொழுது, இப்
பொழுது கள் இறக்கிக் கொண்டிருக்கிற பனை ஏறும் தொழி
லாளர்களுக்கு ஒரு மாற்று ஏற்பாடு ஏதாவது செய்வதற்கு இப்
பொழுதே நீங்கள் திட்டம் இட வேண்டுமென்று நான் கேட்டுக்
கொள்கிறேன். அவர்கள் வேலை வாய்ப்பற்று தெருவிலே நின்று
விடக்கூடாது என்ற நோக்கத்தோடு இது சொல்லப்படுகிறது.

அடுத்தது, இங்கே மீனவ சகோதரர்களுக்காக பல திட்டங்
களை நீங்கள் அறிவித்திருந்தாலும்கூட, பல்வேறு புதிய தொழில்
தொடங்குவதற்குக் கடன் வசதி போன்றவைகள் கிடைக்க மாட்
டேன் என்று தெரிகிறது. ஒரு சின்ன உதாரணத்தைச் சொல்லி,
அதை நான் விளக்குவது பொருத்தம் என்ற காரணத்தாலே நான்
சொல்கிறேன். இப்பொழுது செங்கற்பட்டு மாவட்டத்திலே
இருக்கிற திருவொற்றியூர் கோட்டத்திலே, மீனவர் கூட்டுறவுச்
சங்கம் என்ற ஒன்று இருக்கிறது. இது 1959-லே ஆரம்பிக்கப்
பட்டது. அதிலே 300 பேர்கள் அப்பொழுது உறுப்பினர்களாக
இருந்தார்கள். 120 பேர்கள் கடன் வாங்கினார்கள். அவர்களிலே
80 பேர்கள் இறந்து போய் விட்டார்கள். அப்படி இறந்துபோய்
விட்டவர்களுடைய கடன் வரவில்லை என்ற காரணத்திற்காக,
ஏறத்தாழ 25 ஆண்டுகளாக ஒருவருக்குக் கூட, மீண்டும் கடன்
கொடுப்பதில்லை என்ற முடிவோடு இருந்து கொண்டிருக்கிறார்கள்.

அதனாலே இப்போது என்ன ஏற்படுகிறது என்று சொன்
னால் மூதாதையர் யாரோ வாங்கி, மறைந்துவிட்ட பின்னால்,
அந்தப் பரம்பரையில் வந்த காரணத்தால் நல்ல உடல் நலத்
தோடு இருக்கிற மீனவச் சகோதரர்கள் அரசாங்கத்தினுடைய
கடனைப் பெற்று, தொழில் நடத்த முடியவில்லை. எனவே,

இப்படிப்பட்ட ஒரு குறிப்பிட்ட ஆண்டுக்கு மேலே வாராது இருக்
கிற கடன்களை எல்லாம் எத்தனையோ சந்தர்ப்பங்களிலே
தள்ளுபடி செய்திருப்பதைப் போலே, அவர்களுக்கும் தள்ளுபடி
செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப் போலே, பனைவெல்லக் கூட்டுறவுச் சங்கங்கள் என்று
தமிழ்நாடு முழுவதும் பரவலாக இருந்த ஒன்று இப்போது இருக்
கிறதா என்று சொல்ல முடியாத அளவுக்கு இருக்கிறது. அதிலே
கூட சில சில சிறு தொகை கடன் நிலுவையாக, பாக்கியாக
இருக்கிறது என்ற காரணத்தினாலே அவை புத்துயிர் பெறாமல்
இருக்கின்றன. நிலுவை இருக்கின்ற காரணத்தினாலே அந்த
அமைப்புகள் எல்லாம் மீண்டும் கடன் பெற முடியாமல் இருப்ப
தினாலே அந்த கடன்களை நீங்கள் வஜா செய்து, அந்தத் தொழி
லிலே இப்போது ஈடுபடுகின்றவர்களை ஊக்குவிக்கின்ற முறை
யிலே கடன்களையும் மற்ற சலுகைகளையும் வழங்க வேண்டு
மென்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்த நிதிநிலை அறிக்கையிலே பல செய்திகள் சொல்லப்
பட்டிருக்கின்றன. அவற்றிலே ஒன்றிரண்டை சொல்ல விரும்பு
கிறேன். கல்வி ஆய்வுக் கூடங்கள் கட்ட ஒரு கோடி ரூபாய்
ஒதுக்கப்பட்டிருக்கிறது. கல்விக் கூடங்கள் எல்லா இடங்களிலும்
பரவலாக இருக்கிறபோது இந்த ஒரு கோடி ரூபாய் கொஞ்சம்கூட
போதுமானதாக இல்லை.

மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் பல்வேறு
திட்டங்களுக்கு நிதி ஒதுக்கீடு செய்கின்ற அளவுக்கு சிறப்பாகச்
செயல்பட்டிருக்கிறார்கள். ஆனாலும் கூட மருத்துவமனைகள்
கட்டுவதற்கு மொத்தம் 50 இலட்சம் ரூபாய்தான் ஒதுக்கப்பட்
டிருக்கிறது என்று சொன்னால் ஒரு பெரிய மருத்துவமனையில்
ஒரு பிரிவு கூட கட்ட முடியாது.

சாலைகளைப் பொறுத்த வரையில் மாண்புமிகு நிதி அமைச்சர்
அவர்கள் குறிப்பிட்டிருக்கிற வாசகம் இன்று பலரால் எடுத்தாளப்
படுகின்ற வாசகமாக இருக்கிறது. நான் இதைக் குறிப்பிடக்
காரணம் அண்மையில் தமிழ்நாடு முழுவதும் சுற்றுப்பயணம்
செய்தபோது பார்த்தேன். கிராமப்புறச் சாலைகளும் மாநில
அரசுப் பொறுப்பிலே இருக்கிற சாலைகளும் உடனடியாகச் செப்ப
னிடப்படவில்லை என்றால் விரைவிலேயே அவை ஒற்றையடிப்
பாதையாக மாறக்கூடிய சூழ்நிலையில் இருக்கின்றன என்பதை
இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அந்தச் சாலைகள் செப்ப
னிடப்படுவது மட்டுமல்ல; புதிய சாலைகள் அமைக்கப்படு
வதற்கும் இந்த நிதிநிலை அறிக்கையில் ஒதுக்கப்பட்டிருக்கிற
பணம் கொஞ்சம்கூட போதுமானதாக இல்லை.

நான் இதைக் குறிப்பிடுவதற்கு என்ன காரணம் என்று சொன்
னால் தூத்துக்குடி டிவிஷனில் மட்டும் அங்கே இருக்கிற பெரிய
அதிகாரிகள் பதினாறேகால் கோடி ரூபாய் வேண்டுமென்று





கேட்கிறார்கள். அங்கே இருக்கிற பிரதான சாலைகளைச் செப்ப
னிட வேண்டுமென்றால் கூட பதினாறேகால் கோடி ரூபாய்
கேட்கும்போது, இப்படிப்பட்ட பணிகளுக்காக மொத்தமே
3.05 கோடி ரூபாய்தான் ஒதுக்கியிருக்கிறோம் என்றால் அது
எந்த அளவுக்குப் போதுமானதாக இருக்கும் என்பதை எண்ணிப்
பார்க்க வேண்டும் என்பதற்காகச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.
இன்றைக்கு இருக்கிற கணக்கின்படி தமிழ்நாட்டில் இருக்கிற
சாலைகள் ஓரளவுக்குச் செப்பனிடப்பட்டு, நல்ல சாலைகள்
என்ற பெயரை எடுக்க வேண்டுமென்றால் ஏறத்தாழ 540 கோடி
ரூபாய்க்குமேல் செலவிட்டால்தான் முடியும். அந்த அளவுக்கு
நிதிநிலை இடம் கொடுக்காது என்பதை நான் அறிவேன். ஆனால்
பாழ்பட்டுக் கிடக்கின்ற சாலைகளாக, பள்ளமாகக் கிடக்கின்ற
சாலைகளாக, சில இடங்களிலே குண்டும் குழியுமாகக் கிடக்கின்ற
சாலைகளாக இருப்பதைப் பார்த்தால் எந்தவிதமான வாகனமும்
செல்ல முடியாமல் பழைய காலத்திலே பொதி மாட்டிலே செல்லு
கின்ற சூழ்நிலைபோல் ஏற்பட்டு விடுமோ என்கின்ற அச்சம் ஏற்
படுகிறது. 'சாத்து' என்று இலக்கியத்திலே சொல்வார்களே,
அத்தகைய பொதி மாடுகள் மீதுதான் சரக்குகளை ஏற்றிச்செல்ல
முடியும் என்ற அளவுக்கு மோசமாக சாலைகள் இருக்கின்றன
என்பதை மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களுடைய பார்வைக்கு
கொண்டு வருகிறேன்.

அதைப்போன்று போக்குவரத்துக் கழகங்கள்கூட சீரமைக்கப்
பட வேண்டும். ஏறத்தாழ 240 கோடி ரூபாய் மூலதனத்தில்
இயங்குகின்ற போக்குவரத்துக் கழகங்களிலிருந்து இரண்டு கோடி
ரூபாய்தான் இலாபம் வருகிறது என்றால் அது போதுமானதல்ல.
தொழிலாளர்களுடைய வருங்காலத் திட்டங்களுக்கு பணம்
எடுக்கிற அளவுக்கு வருவாய் பெருக வேண்டும்; அதற்கேற்ப
செயல்பட வேண்டும்.

அடுத்து, வீடு கட்டுவதற்கு என்று நல்லதொரு திட்டத்தை
மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள், பாராட்
டுகிறேன். 30 இலட்சம் வீடுகள் கட்டுகின்ற எண்ணம் வந்ததற்கு
காரணம் சமுதாயத்தில் நலிந்தவர்கள், ஏழை எளிய மக்கள்
நிறைய இருக்கிறார்கள். ஆனால் இந்தத் திட்டத்திற்கு ஒதுக்கப்
பட்டிருக்கிற தொகை போதுமானதாக இல்லை. இப்போது
6,000 ரூபாயில் ஒரு வீடு கட்டலாம் என்று அறிவிக்கப்பட்டிருக்
கிறது. அந்த அடிப்படையில் பார்த்தால் இந்தத் திட்டத்திற்கு
1800 கோடி ரூபாய் தேவைப்படும். 1800 கோடி ரூபாய்
தேவைப்படுகின்ற ஒரு திட்டத்தை நாம் அறிமுகப்படுத்தி,
அதற்கு 26 கோடி ரூபாய் மட்டுமே ஒதுக்கியிருக்கிறோம். ஆக,
43,333 வீடுகள் கட்டுவதற்குத்தான் பணம் ஒதுக்கப்பட்டிருக்
கிறது என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

[திரு. குமரி அனந்தன்] [1986 மார்ச் 21

அதைப்போன்று நல்ல குடிநீர் இல்லாத இடங்கள் அதிகமாகிக் கொண்டு வருகின்றன; அதிக கிராமங்கள் இப்போது வந்து கொண்டிருக்கின்றன. அதற்குக் காரணம் என்னவென்றால் நிலத் தடி நீரை நாம் அதிகமாக உறிஞ்சி எடுத்துவிட்டதுதான். அதன் காரணமாக 'வாட்டர் டேபிள்' என்று சொல்லுகின்ற நீர் மட்டம் வற்றி வற்றி கீழே வந்து கொண்டிருக்கிறது.

(பிற்பகல் 12-20)

இதற்கு மாற்று ஏற்பாடாக நாம் பல நதிகளைத் திருப்பி விடவேண்டும் என்று சொல்வதும், கங்கையைக் குமரியோடு இணைக்கவேண்டும் என்று சொல்வதும், அப்படிப்பட்ட உயர்ந்த லட்சியங்கள்— திட்டங்கள் ஒரு பக்கம் இருந்தாலும், கடற்கரைப் பகுதியிலுள்ள கடல் நீரையாவது குடிநீராக மாற்றுகின்ற முயற்சியை நாம் எடுத்துக்கொள்ளவேண்டும் என்று நான் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன். இல்லை என்று சொன்னால் உடனடியாக இந்தத் தண்ணீர்த் தட்டுப் பாட்டைச் சமாளிக்க முடியாத நிலைமை ஏற்பட்டுவிடும்.

அதைப்போலவே பொது நூலகத்திற்கு ஒதுக்கப்பட்டிருக் கின்ற தொகை மிகவும் குறைவு. எழுத்தாளர்கள் ஊக்கமும், உற்சாகமும் பெறவேண்டும் என்றால் நூலகங்கள்தான் இந்தப் புத்தகங்களை எல்லாம் வாங்கவேண்டி இருக்கிறது. எனவே இன்னும் அதிகமாகப் பணம் ஒதுக்கி இருக்கவேண்டும் என்பதை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

ஆழ்கடலில் மீன் பிடிக்க 56 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டு இருக்கிறது. ஆனால் ஒரு சின்ன குறிப்பு தர விரும்புகிறேன். தயவுசெய்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதைக் கவனத் தில் கொண்டால் நல்லது. கன்னியாகுமரிக்கு மேற்கே 22 மைல் தூரத்தில் Wedge Bank என்ற இடத்தில் மிக அதிகமான அளவில் மீன்கள் வந்திருக்கின்றன. அதை மீன் களின் சரணாலயம் அதாவது சாங்சுவரி என்று சொல்கிற அளவுக்குக் கூட சொல்கிறார்கள். சரணாலயம் என்று சொன் னால் அவற்றைப் பிடிக்காமல் பாதுகாக்க வேண்டிய இடம் என்பதற்காகச் சொல்லவில்லை. எல்லா இடங்களிலும் இருக் கின்ற மீன்கள் அங்கே வந்து குவிவதாகச் சொல்கிறார்கள். இன்னும் சில நேரங்களில் தைவான் நாட்டிலே இருந்து மத்திய அரசாங்கம், மாநில அரசாங்கம் ஆகியவற்றின் கண்களிலே மண்ணைத் தூவி விட்டு அங்கே மீன்களைப் பிடிப்பதாகச் சொல்கிறார்கள். அப்படிப் பட்ட Wedge Bank என்று சொல்லப்படுகிற இடத்தில் கிடைக்கிற மீன்கள் மிக அதிகம் என்று சொல்கிறார்கள். உலகத்திலேயே அதிகமாக மீன்கள் கிடைக்கின்ற இடம் அது என்று சொல்லப்படுகிற காரணத்தால் அதிலே மீன் பிடிக்கக்கூடிய அதிகமான முயற்சியில் அரசாங்கம் ஈடுபடவேண்டும் என்று நான் பணிவன்போடு கேட்டுக் கொள் கிறேன்.



1986 மார்ச் 21] [திரு. குமரி அனந்தன்]

இந்த அரசு கொடுத்திருக்கின்ற வரவு—செலவுத் திட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளவற்றில் சிலவற்றை நான் சுட்டிக் காட்டினேன். நிலவுடைமைப் பதிவு மேம்பாட்டுத் திட்டம் என்ற திட்டத்தின் கீழ் பல்வேறு சகோதரர்கள் வேலை வாய்ப்பு அளிக்கப்பட்டு இருக்கிறார்கள். ஆனால் அவர்களுக்கு ஊதிய உயர்வு கொடுக்கப்படவில்லை; அவர்களுடைய பணியும் நிரந்தரமாக்கப்படவில்லை.

அடுத்தாற்போல இவ்வளவு திறமையாக பெயர்பெற்ற போலீஸ் என்று யாராவது எங்கேயாவது சொல்ல வேண்டும் என்றால் தமிழ்நாட்டின் காவல்துறையைத்தான் சொல்ல வேண்டி இருந்தது. ஆனால் நேர்மாறான ஒரு சூழ்நிலை இப்போது உருவாக்கப்பட்டு இருப்பது நம்மைப் போன்ற வர்களை எல்லாம் வேதனையில் ஆழ்த்துகிறது. முன்பெல்லாம் பூட்டுப் போட்டுவிட்டு யாராவது வெளியூருக்குப் போய் விட்டால் அந்தப் பூட்டைத் திறப்பதுதான் வழக்கமாக இருந்தது கொள்ளையர்களுக்கு. இப்போது உள்ளே இருந்து கொண்டிருப் பவர்கள் உள்ளே இருக்க, வெளியே இருந்துகொண்டிருப்ப வர்கள் உள்ளே புகுந்து திருடிக்கொண்டு போகிற ஒரு சூழ் நிலை, அப்படி கொள்ளை அடித்துப் போகும் ஒரு சூழ்நிலை ஏற்பட்டிருப்பது மிகவும் வருத்தத்திற்குரியது. காவல்துறை இன்னும் செப்பனிடப்படவேண்டும் என்று சுட்டிக்காட்டுகின்ற ஒன்றாகும் இது.

அதோடு மட்டுமல்ல. போலீஸ் அதிகாரியினுடைய வீட்டி லேயே திருட்டு நடக்கிறது. பெண் போலீஸ் சப் இன்ஸ்பெக்டர் 'போகிறார்' என்றால் அவருடைய கழுத்திலே இருக்கிற ''தங்கச் சங்கிலியைத் தா'' என்று கேட்டு பறித்துக்கொண்டு போகிற அளவுக்கு பெரும் கொள்ளை நடக்கிறது என்பதை நாம் சிந்தித்துப் பார்க்கிறபோது நாம் பழைய பெருமையை இப்போது இழந்துகொண்டு வருகிறோமோ என்று சொல்கிற அச்சம் நமக்கு ஏற்படுகிறது.

நேற்று கூட மக்கள் கூடியிருக்கின்ற ஒரு பகுதியில் சைக் கிளிலே வந்து ஒரு பெண்ணினுடைய கழுத்திலிருக்கிற சங்கிலியை அறுத்துக்கொண்டு போய் இருக்கிறான். சுற்றி நின்ற, அவரைப் பற்றிப் பிடித்துவிடவேண்டும் என்று எண்ணிய இளைஞர்களை பட்டா கத்தி வீசி பயமுறுத்திச் சென்று இருக்கிறான் என்பதைப் பார்க்கிறபோது நாம் சட்டம், ஒழுங்கை இன்னும் எந்த அள வுக்குக் காப்பாற்றவேண்டும், எந்த அளவுக்கு இன்னும் அதிகக் கவனத்தோடு செயல்படவேண்டும் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். தினசரி நாளேடுகளை எடுத்துப் பார்க்கிறபோது விபத்துக்கள் இல்லாத நாளே இல்லை. போக்குவரத்திலே சின்ன வண்டிகள் செல் கின்றன என்றால் பெரிய வண்டிகளும், லாரிகளும் அந்தச்

[திரு. குமரி அனந்தன்] [1986 மார்ச் 21

சின்ன வண்டிகளுக்கு இடம் கொடுத்துவிட்டு ஒதுங்கி போவதைப்
பார்த்திருக்கலாம். ஆனால் இப்போது சின்ன வ்ண்டிகள்
போகிற நேரத்தில் கூட லாரிகள் அவற்றை ஓவர்டேக் பண்ணிக்
கொண்டு போவதைப் பார்த்தால் அது என்ன வேகத்தில்
போகிறது என்பனதக்கூட கண்ணால் பார்க்க முடியவில்லை.
அவை போகிற வேகத்தில் அவற்றின் பாகங்கள்கூட உதிர்ந்து
கீழே விழுந்துவிடுமோ என்று எண்ணுகிற அளவுக்கு அவை
ஓடிக்கொண்டிருக்கிற ஓட்டத்தைப் பார்க்கின்றபோது அவற்றை
எல்லாம் யாரும் தடுப்பதில்லை.

சுற்றுப்புறச்சூழல் என்று சொல்கிறோம். சுற்றுப்புறச்
சூழல் காரணமாக காற்று மாசுபடுகிறது என்று சொல்கிறோம்.
சில கார்களிலும், சில லாரிகளிலும் இருந்து வெளியே
வருகின்ற காற்றையும், புகையையும் பார்த்தால் பல தொழிற்
சாலைகள் விடுகிற புகையை இந்த வாகனங்களே விட்டு
விடும்போல் தெரிகிறது. இவற்றை எல்லாம் கண்காணிக்க
ஏதாவது வழி இருக்கிறதா என்பதைச் சிந்திக்கவேண்டும்
என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

இந்தச் சென்னையிலே இருக்கிற பல்வேறு சாலைகளை
இப்போது செப்பனிட்டுக்கொண்டிருக்கிறார்கள். எல்லா இடங்
களிலும் சாலைகளைப் போட முடியுமானால் அதை நாம்
வரவேற்கலாம்.

கல்வீக் குழுவினைப் பொறுத்தவரையில் நான் ஒரு வேண்டு
கோளை சொல்ல விரும்புகிறேன். 1984 ஆம் ஆண்டு ஜூன்மாதம்
18 ஆம் தேதி தமிழகத்தில் பல்வேறு இடங்களில் 6 அம்சக்
கோரிக்கையை காந்தி காமராஜ் தேசிய காங்கிரஸ்
கட்சி வைத்து அறப்போராட்டத்தை நடத்தியது. அதிலே
உள்ள ஒரு கோரிக்கை என்னவென்றால் கல்வி நிலையங்களிலே
எல்லாம் ஒரு வழிகாட்டிக் குழு இருக்கவேண்டும் என்பதாகும்.
அங்கு வந்து படிக்கின்ற மாணவர்களை நேரடியாக சந்தித்து
கலந்துரையாடி அவர்களுடைய ஆர்வத்துக்கும், திறமைக்கும்
ஆற்றலுக்கும், விருப்பத்திற்கும் ஏற்ப, அவர்கள் இனிமேல்
என்ன படிக்க வேண்டும், இல்லை என்றால் அவர்கள் என்ன
தொழில் துவங்க வேண்டும், அவர்களுடைய வருவாய் போது
மானதாக இல்லை என்று சொன்னால், எங்கேயெல்லாம்
அவர்களுக்கு உதவித் தொகை கிடைக்கும் என்பதற்கெல்லாம்
வழிகாட்டுவதற்குரிய ஒரு ஆலேர்சகர்ரோ அல்லது ஒரு
கெயிடன்ஸ் கமிட்டியோ இருக்க வேண்டும் என்பதை அந்த
அறப்போராட்டத்திலே ஒரு கோரிக்கையாக நாங்கள் வைத்
திருந்தோம்.

அதைப்போலவே ஏப்ரல் மாதம் 9 ஆம் தேதி 1985 ஆம்
ஆண்டு இதே சட்டமன்றத்திலே நான் மீண்டும் பேசும்போது,
இந்த வழி காட்டும் குழு அல்லது ஆலோசகர் உடனடியாக



1986 மார்ச் 21] [திரு. குமரி அனந்தன்]

நியமிக்கப்பட வேண்டும் என்று இந்த அரசாங்கத்தைக்
கேட்டுக் கொண்டேன். மாண்புமிகு முதல்வர் எம்.ஜி.ஆர்.
அவர்களுடைய தலைமையிலே இயங்கிக் கொண்டிருக்கிற
இந்த அரசாங்கம், அப்படிப்பட்ட கோரிக்கைகளை நேரடியாக
அவர்களுடைய காதுகளிலே வாங்கிக் கொண்ட காரணத்
தாலே, இன்று மேல்நிலை பள்ளிகளிலே படிக்கின்ற மாணவர்
களுக்கு, ஆலோசகரை நியமிக்கின்ற ஒரு திட்டத்தை அறிவித்
திருப்பதாக நான் அறிகிறேன். அதற்காக நான் மாண்புமிகு
முதலமைச்சர் அவர்களையும் இந்த அரசாங்கத்தையும்
பாராட்டுகிறேன்.

படித்தவன் தன்னுடைய பிள்ளைக்கு அடுத்து என்ன படிக்க
வேண்டும் என்று சொல்லிக் கொடுத்து உதவிவிடுவான். படிக்
காதவன் தன்னுடைய பிள்ளையை எந்த படிப்பு படிக்க
வேண்டும் என்று சொல்லிக் கொடுக்க முடியாத நிலையில் இருக்
கிறபோது, ஒரு ஆலோசகரை நியமிக்க முன் வந்ததற்கு
இந்த அரசாங்கத்தை நான் பாராட்டுகிறேன். ஆனால்
அதிலே ஒரு நெருடல் இருக்கிறது. என்னவென்று சொன்னால்,
மேல்நிலைப் பள்ளிகளிலே படித்துக் கொண்டிருக்கிற மாண
வர்களுக்கு மட்டுமே அந்த வழி காட்டுதல் கிடைக்கும்,
அந்த ஆலோசகருடைய உதவி கிடைக்கும். அப்படிக்
கிடைக்கின்ற அந்த ஆலோசகர்கூட ஒரு பள்ளிக்கூடத்தின்
முழு நேர ஊழியராக இருக்க மாட்டார். 5, 6 பள்ளிக் கூடங்
களுக்கு சேர்த்து இருக்கிற மாணவர்களை கவனிப்பவராக
இருப்பார். அது போதுமானது அல்ல. எனவே மேல்நிலை
பள்ளிக்கு மட்டும் என்று இருப்பதை எல்லா கல்வி நிலையங்
களுக்கும் என்றும் ; 5, 6 பள்ளிக்கு சேர்த்து ஒருவர் என்று
இருப்பதை ஒவ்வொரு பள்ளிக்கும் ஒரு ஆலோசகர், அதாவது
வழிகாட்டுபவர் என்றும், இந்த அரசு உருவாக்கித் தரவேண்டும்
என்று அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, இங்கே மிக முக்கியமாக நான் சொல்ல வேண்டிய
விஷயம்,— இப்போது நல்ல திட்டங்களையெல்லாம் கொண்டு
வந்து சிலதை செய்திருக்கிறார்கள். சில திட்டங்களை
இன்னும் சிறப்பாக அதிகமாக தந்திருக்க வேண்டும் என்
றெல்லாம் கூட நாங்கள்— சட்டமன்ற உறுப்பினர்கள் சுட்டி
காட்டிக்கொண்டிருக்கிறோம். ஆனால் அத்தனை திட்டங்
களும், இங்கே வந்து சட்டமன்ற உறுப்பினர்களையெல்லாம்
அமர வைத்து, எங்களுடைய கருத்துக்களைச் சொல்வதற்கு
உரிய வாய்ப்புகளை எல்லாம் கொடுத்து, அவைகள் எல்லாம்
இங்கே நிறைவேறியதற்குப் பிறகு, அவைகள் முறையாக,
செம்மையாக செயல்பட வேண்டும் என்று நான் விரும்புகிறேன்.
ஆனால் முன்பு அப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் சரியாக நடக்க
வில்லை என்பதை நான் இங்கே சுட்டிக் காட்டவிரும்புகிறேன்.

உதாரணத்திற்கு சொல்லப்போனால், அச்சகப் பொருள் துறைக்கு என்று ஒதுக்கப்பட்ட பணத்திலே, தேவைப்படுகின்ற தட்டச்சுகளை வாங்காத காரணத்தாலே அந்த இலாகா திருப்பிக் கொடுத்த பணம், ஒதுக்கப்பட்ட பணத்திலே திருப்பிக் கொடுத்த பணம், 1 கோடியே 6 லட்சம், அதைப்போலவே நீர்ப்பாசனத் துறையிலே செலவிடப்படாமல் திருப்பிக் கொடுத்த பணம் 19 கோடியே 64 லட்சம். என்ன காரணம் சொல்கிறார்கள் தெரியுமா? ஆரம்ப கால ஆய்வே முடியாமல் இருக்கும்போது அந்தப் பணம் ஒதுக்கப்பட்டிருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். வேலை துவங்குவதற்கு அரசு ஆணை இடாத காரணத்தினாலே 19 கோடியே 64 லட்சம் ரூபாய் திருப்பிக் கொடுக்கப்பட்டிருக்கிறது. இங்கே நிறைவேற்றப் பட்ட ஒன்று, இங்கே ஒதுக்கப்பட்ட ஒன்று இலாகாவினால் திருப்பிக் கொடுக்கப்படுகிறது. காரணம் என்னவென்று சொன்னால் அரசு ஆணை இல்லை என்பதற்காக.

இன்னொன்றையும் சொல்லிக் கொள்கிறேன். சாலைகள் பாலங்கள் கட்டுவதற்காக ஒதுக்கப்பட்ட பணத்தில் 38 லட்ச ரூபாயை திருப்பிக் கொடுத்திருக்கிறார்கள். ஏன் 38 லட்சம் ரூபாயை திருப்பிக் கொடுத்தார்கள் என்று சொன்னால், மேற்குத் தொடர்ச்சி மலையின் மேம்பாட்டு திட்டத்தை அப்போது மேற் கொள்ளாததனாலே, இந்த 38 லட்சம் ரூபாய் திருப்பிக் கொடுக் கப்படுகிறது என்று சொல்கிறார்கள். இன்னும் சாலை போக்கு வரத்துக்கு என்று ஒதுக்கிய பணத்திலே 1 கோடியே 62 லட்சத்தை திருப்பிக் கொடுத்திருக்கிறார்கள். இந்த 1 கோடியே 62 லட்சத்தை ஏன் திருப்பிக் கொடுத்தார்கள் என்பதற்கு இலாகா காரணம் கூட காட்டவில்லை. திருப்பிக் கொடுக்கிறோம் அவ்வளவுதான் என்று திருப்பிக் கொடுத்திருக்கிறார்கள்.

கிராமப்புற தொழில் நன்றாக வளர வேண்டும் என்று விரும்பு கிறோம். கிராமப்புற தொழில் வளர்ச்சிக்காக ஒதுக்கப்பட்ட பணத்தில் 21 சதவீதம் அதாவது 16 கோடிக்கு மேல் திருப்பிக் கொடுத்திருக்கிறார்கள். ஏன் திருப்பிக் கொடுத்தார்கள் என்று காரணத்தைக் கூடச் சொல்லவில்லை. அதிகாரிகள் விளக்க வில்லை. மதுரையிலே உலகத் தமிழ்ச் சங்கத்தை ஏற்படுத்த வேண்டும் என்று 105 லட்சம் ரூபாய் ஒதுக்கினோம். அந்த 105 லட்சம் ரூபாயை அப்படியே திருப்பியிருக்கிறார்கள். ஏன் தெரியுமா? பணம் ஒதுக்கிய பிறகுதான் சங்கத்தின் விதி முறை கள் வகுக்கப்படவில்லை என்று தெரிகிறது. சங்கத்திற்கான விதிமுறைகள் வகுக்கப்படாததற்கு முன்பே அதற்குத் தேவை யான நிதியை நாம் ஒதுக்கிவிட்டோம். சரி, பொது விதி முறைகள் ஏன் வகுக்கவில்லை என்று பார்த்ததற்குப் பிறகு, அதற்கு ஒரு குழு போடவில்லை என்று தெரிந்தது. குழு ஏன் போடவில்லை என்று ஆராய்ந்ததற்குப் பிறகு, அதற்கு அரசு ஆணையே இடப்





படவில்லை என்று தெரிந்தது. எனவே அரசு ஆணை போட
வில்லை, அதன்மூலம் குழு அமைக்கப்படவில்லை, அதன்மூலம்
விதிமுறைகள் வகுக்கப்படவில்லை என்று தெரிகிறபோது,
அதற்கு இடையிலே இத்தனை ரூபாய் இங்கே ஏன் ஒதுக்குவதற்
காக கோரப்பட்டது. இத்தனையும் செய்வதற்கு முன்பே
இங்கே நம்மிடம் வந்து, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்
களிடத்திலே, இதற்கு நிதி தேவை என்று அனுமதியை வாங்கி
விட்டு, நிதியமைச்சர் அதற்காக மிகச் சிரமப்பட்டு இரவு பகல்
விழித்திருந்து திட்டத்தை வகுத்து, இப்படித்தான் செயல்பட
வேண்டும் என்று விரும்புகிற நேரத்தில் அது திருப்பிக் கொடுக்கப்
படுகின்றது. அதுமட்டுமல்ல, பல்வேறு நல்ல காரியங்களைச்
செய்து கொண்டிருக்கிற மக்கள் நல்வாழ்வுத் துறையிலும்
பொதுப்பணித் துறையிலும் கூட நான் ஒரு செய்தியைச் சொல்ல
வேண்டியிருக்கிறது. தொழு நோய் கட்டுப்படுத்தும் நோக்கத்
தோடு மத்திய அரசு உதவித் திட்டத்தின் கீழ் ஒதுக்கப்பட்ட
பணத்திலே 66 சதவீதம் அதாவது 33 லட்சத்து 88 ஆயிரம்
ரூபாய் திருப்பிக் கொடுக்கப்பட்டிருக்கிறது. தொழு நோயைக்
கட்டுப்படுத்துவதற்கென்று மத்திய அரசு உதவியோடு பெற்ற
பணத்திலே 33 லட்சத்து 88 ஆயிரம் ரூபாய் திருப்பிக் கொடுக்கப்
பட்டிருக்கிறது. காரணம் என்ன தெரியுமா? தற்காலிக
கட்டிடங்களை எழுப்பிக் கொடுக்கவில்லை பொதுப்பணித்
துறை, அதிகாரிகளை நியமிக்கவில்லை அரசு. ஆகவே அதிகாரி
களை நியமிக்காத காரணத்தாலே மத்திய அரசினுடைய உதவிப்
பணம் 33 லட்சத்திற்கு மேலே திரும்பப் போயிருக்கிறது.

(பிற்பகல் 12-30)

அதைப்போல டேனிடா என்ற டேனிஷ் நாட்டின் உதவி
யோடு நமக்கு கழிப்பறைகளை கட்டுவதற்கு பணம் கிடைத்தது.
மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கழிப்பறைகளைக் கட்ட
வேண்டுமென்பதிலே எவ்வளவு அக்கறை கொண்டிருக்கிறார்கள்
என்பது உங்களுக்குத் தெரியும். கிராமப் புறங்களில் உள்ள
தாய்மார்களுக்கு அது எவ்வளவு தேவையென்று அவர் உணர்ந்
திருக்கிறார் என்பதும் உங்களுக்குத் தெரியும். அதற்காக
எல்லாம் இங்கே அதிகமாக பேசுகிறோம். நிதியமைச்சர் அவர்
களும் மற்ற அமைச்சர்களும் திட்டம் தீட்டுகிறார்கள். அந்தத்
திட்டத்திற்கு இங்கே ஒப்புதல் வழங்கப்படுகிறது. வெளிநாட்டி
லிருந்து உதவியும் கிடைக்கிறது. டேனிடாவிலிருந்து உதவி
கிடைத்திருக்கிறது. எதற்கு? கழிப்பறைகள் கட்டுவதற்கு.
எவ்வளவு திருப்பிக் கொடுத்திருக்கிறோம் தெரியுமா கழிப்பறை
கள் கட்டாமல், ஒரு கோடியே 68 லட்சத்து 62 ஆயிரம் ரூபாய்
திருப்பிக் கொடுத்திருக்கிறோம். ஆகவே ஒரு கோடியே 68
லட்சத்து 62 ஆயிரம் ரூபாயை திருப்பிக் கொடுத்ததற்கு காரணம்
என்னவென்றால் சர்வேயே எடுக்காமல் அந்தப் பணத்தைப்

பெற்றிருக்கிறோம். அந்த சர்வே செய்யாமல் கூட நாம் திட்டங்களை நிறைவேற்றுவதற்கு இங்கே முனைகிறோம் என்றால் எங்கோ ஏதோ செய்யத் தவறி இருக்கிறோம் என்பதை சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

அதைப்போல சென்னை மாநகராட்சியில் சாக்கடை திட்டத்திற்கு என்று ஒதுக்கப்பட்ட பணத்திலே ஒரு கோடியே 55 லட்சம் ரூபாய் திருப்பி கொடுக்கப்பட்டிருக்கிறது. அதிலே பல காரணங்களைச் சொல்கிறார்கள். அதிலே ஒரு காரணம் என்ன தெரியுமா? சாலைகளை குறுக்கே வெட்டுவதற்கு மெட்ராஸ் கார்ப்பரேஷன் ஒப்புதல் அளிக்கவில்லை. ஆகவே பாதாள சாக்கடை கட்டுவதற்கு, சாக்கடை தேங்கி விடாமல் ஓடுகிற அளவிற்கு செப்பனிடுவதற்கு ஒரு கோடியே 55 லட்சம் ரூபாய் பயன்படுத்த வேண்டியிருக்க அந்த ஒரு கோடியே 55 லட்சம் ரூபாயை திருப்பிக் கொடுத்ததற்கு காரணம் குறுக்கே தோண்டுவதற்கு மாநகராட்சி அனுமதி கொடுக்கவில்லை. மாநகராட்சியின் உள்ளே இருக்கிற மக்களுக்கு நன்மை செய்வதற்கு சாக்கடை திட்டம். அந்தத் திட்டத்திற்கு கூட குறுக்கே தோண்டுவதற்கு அனுமதி கொடுக்காத காரணத்தால் ஒரு கோடியே 55 லட்சம் ரூபாய் திருப்பி கொடுக்கப்பட்டிருக்கிறது.

அதைப்போல கிருஷ்ணா நதி நீர் சென்னைக்கு வருவதை உத்தேசித்து, வரும் முன் காப்போனாக இந்த அரசாங்கமும், அரசாங்கத்தில் இருக்கிற அமைச்சர்கள், அவர்களோடு இருந்து கொண்டிருக்கிற நாமும் சேர்ந்து கிருஷ்ணா நதி நீர்த் திட்டம் இங்கே வந்தால் அதை விநியோகிப்பது எப்படி என்பதற்காக சில திட்டங்களைத் தீட்டுவதற்கு, செயல்படுத்துவதற்கு ஐந்து கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கிறோம். அந்த ஐந்து கோடி ரூபாய் திருப்பிக் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஏன் தெரியுமா? அந்தப் பணியை இரண்டு இலாக்காக்கள் ஏற்கவேண்டும். Madras Metropolitan Water Supply and Sewerage Board இந்த இரண்டுமே அந்தப் பணியை தொடவே இல்லை. ஆகவே நாம் இங்கே பணம் ஒதுக்குகிறோம். நாங்கள் தொடவேமாட்டோம் என்று திருப்பிக் கொடுத்திருக்கிறார்கள்.

அதுமட்டுமல்ல, மீனவர்களுக்கு வீடு கட்டிக் கொடுப்பதற்கு ஒதுக்கிய பணத்திலே 81 லட்சத்து 39 ஆயிரம் திருப்பி கொடுக்கப் பட்டது. கடற்கரையில் வாழ்ந்து கொண்டிருக்கிற அந்த மீனவர்கள் வாடை காற்றிலே வாடிக் கொண்டிருக்கிற மீனவர் அவர்களுக்கு வீடு கட்டிக் கொடுக்க வேண்டுமென்ற நோக்கம் நல்லதாக இருந்தாலும், அதற்கு 81 லட்சத்து 39 ஆயிரம் ரூபாய் ஒதுக்கினாலும் அந்த வீடுகள் ஏன் கட்டிக் கொடுக்கப்பட வில்லை தெரியுமா? ஆதிதிராவிட நலத்துறையிடம் இருந்ததை மீனவத் துறைக்கு மாற்றினோம், வீடு கட்டும் பொறுப்பை. ஆனால் தேவைப்படும் அதிகாரிகளை நியமிக்கவில்லை. இலாக்கா





என்றால் என்ன அது? உங்களுக்குத் தெரியாதா? அதிலே இருக்கிற மக்கள், மீனவர்கள், அதிகாரிகள் தானே முக்கியம்? அதிகாரிகளை நியமிக்காமலே மீனவத் துறைக்கு மாற்றிய காரணத்தாலே அந்தப் பணத்தை திருப்பிக் கொடுத்திருக்கிறோம்.

அதுமட்டுமல்ல, நாம் மிகப் பெருமையாக பேசிக்கொள்வது என்ன தெரியுமா? வீட்டிற்கு ஒருவருக்கு வேலை திட்டம். அதிலே 15 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டது 1984-85-ல். 15 கோடி ரூபாயில் 14 கோடியே 94 லட்சத்து 50 ஆயிரம் ரூபாய் திருப்பிக் கொடுக்கப்பட்டது. ஏன் தெரியுமா? அந்த வீட்டிற்கு ஒருவர் யார் என்று கணக்கெடுக்க முடியவில்லை. அந்தக் கணக்கெடுக்க முடியாமலே 15 கோடி ரூபாய் ஒதுக்கிவிட்டு 15 கோடி ரூபாயைத் திருப்பிக் கொடுக்கிற நேரத்திலே சர்வே எடுக்காமல் 5½ லட்சத்தைக் குறைத்துக் கொடுத்திருக்கிறோம். 15 கோடியை திருப்பிக் கொடுக்க வில்லை. அதிலே ஐந்தரை லட்சம் ரூபாய் குறைந்திருக்கிறது. எதற்கு என்று தெரியாது. இவைகளை எல்லாம் இருந்து கொண்டிருக்கிற அமைச்சர்கள் கவனத்திற்கு வரவேண்டும் என்பதற்காகச் சொல்கிறேன்.

அதைப்போல 20 எண்ணெய் வித்துக்கள் மையங்கள் ஏற்படுத்த ஒதுக்கப்பட்ட பணத்தை 80 லட்சம் ரூபாயை அப்படியே திருப்பி கொடுத்திருக்கிறோம். ஏன் தெரியுமா? டைரக்டர் ஆப் ஆயில் சீட்ஸ் கொடுத்த புரபோசலை அரசாங்கம் ஏற்று உத்தரவு வழங்கவில்லை. அரசாங்கம் ஏற்று உத்தரவு வழங்காத காரணத்தாலே 20 எண்ணெய் வித்து மையங்களுக்கென்று ஒதுக்கப்பட்ட பணம் 80 லட்சம் ரூபாய் மீண்டும் திருப்பிக் கொடுக்கப்பட்டிருக்கிறது.

நீர்ப்பாசனம் எவ்வளவு முக்கியம் என்பது நமக்குத் தெரியும். ஆனைமலை நீர்த்தேக்க திட்டத்தை செயல்படுத்த வேண்டும் என்று நம்முடைய நிதியமைச்சர் அவர்கள் வரவு செலவுத் திட்டத்தில் போட்டார்கள். நாம் எல்லாம் மகிழ்ச்சி அடைந்தோம். ஆனால் அதிலே 33 லட்சத்து 46 ஆயிரம் ரூபாய் திருப்பிக் கொடுக்கப்பட்டது. ஏன் தெரியுமா? ஆண்டில் பெரும் பகுதி அங்கே பணியாளர்கள் நியமிக்கப்படவில்லை. No Field Officers were appointed. அதனாலே அந்தப் பணம் அப்படியே திருப்பிக் கொடுக்கப்பட்டது. நீர்த் தேக்கம் வேண்டும் என்று முடிவு செய்கிறோம். அதற்குப் பணமும் ஒதுக்குகிறோம். ஆனால் எங்கேயோ ஒரு கோளாறு இருக்கிற காரணத்தால், பாசன வசதி பெறாமல் அந்த விவசாயிகள் இருந்து கொண்டு இருக்கிறார்கள். நாம் நிறைவேற்றிய திட்டமே, இப்படி இடையிலே நின்று கொண்டிருக்கிறது. நம்மைப் போன்றவர்கள் இதைப்பார்த்து வேதனைப்பட்டுக் கொண்டிருக்கிறோம்.

[திரு. குமரி அனந்தன்] [1986 மார்ச் 21

அதேபோல் சோத்துப் பாறை நீர்த்தேக்கத் திட்டம். இந்த சோத்துப் பாறை நீர்த்தேக்கத் திட்டத்திலே கொடுத்திருந்த பணத்தில் 30 லட்சத்து 11 ஆயிரம் ரூபாய் திருப்பிக் கொடுக்கப் பட்டு இருக்கிறது. இவைகளை நான் சுட்டிக்காட்டுவதற்கு காரணம், அரிசி இருக்கலாம், பருப்பு இருக்கலாம், புளி இருக்கலாம், உப்பு இருக்கலாம், மிளகாய் இருக்கலாம், சமை என்று நாம் உத்தரவு போட்டு விடலாம், சமைத்துப்போடு என்று ஆணையும் பிறப்பித்துவிடலாம். ஆனால் சமைக்காமல் இருந்து விட்டால், பசித்த மனிதன், பசித்த மனிதனாகவே இருப்பான். சுவாமி விவேகானந்தர் சொன்னதைப்போல 'இந்த நாட்டிலே பசித்த வயிற்றுக்கு ஒரு கவளம் சோறு கொடுக்க முடியாத ஆண்டவன், மறுபிறப்பிலே சொர்கம் தருவான் என்பதிலே எனக்கு நம்பிக்கையில்லை' என்று சொன்னதைப் போல, நாம் போடுகிற திட்டங்களை நிறைவேற்றாத அதிகாரிகளோ, மற்றவர்களோ இருந்தால், அதைக் கவனிக்காத இலாக்கா இருந்தால், அதை ஒட்டுமொத்தமாக கவனிக்கவேண்டிய அமைச்சரவை கவனிக்காமல் இருந்தால், இங்கே திட்டம் போடுவது, அதைப் பற்றிப் பேசுவது, இன்னும் சொல்லப்போனால் சட்டம் வேறு போடுவது, இதனால் என்ன பலன் ? திட்டங்களை மட்டுமே நாம் போட்டுக் கொண்டு இருக்கிறோம். இத்தனையும் செய்ததற்குப் பிறகு, இவ்வளவு குறை இருப்பதைச் சுட்டிக்காட்டுவதற்குக் காரணம், இப்போது போடுகிற திட்டமும் அப்படி ஆகிவிடக் கூடாது என்பதற்காகத்தான். ஏறத்தாழ 1,774 கோடி ரூபாய் அளவிற்கு நாம் திட்டமிட்டோம் 1983-84-லே. இந்த 1,774 கோடி ரூபாயிலே 176 கோடி ரூபாயைத் திருப்பிக் கொடுத்துவிட்டோம். 176 கோடி ரூபாய் இப்படி திருப்பிக் கொடுத்ததற்கு என்ன காரணம் சொல்லியிருக்கிறார்கள் தெரியுமா ? சேமிப்பு. நாம் திட்டமிடுவதை சரியாகத் திட்டமிடாமல், செயல்படுத்தாமல், இடையிலேயே விட்டுவிட்டு அந்தப் பணத்தை சரண்டர் செய்வதற்குப் பெயர் சேமிப்பா? சமைக்காத காரணத்தாலே அரிசியை சேமித்ததாக பொருளா ? அவன் பசித்த வயிறோடு இருக்கிறான் என்று பொருள். செய்ய வேண்டிய காரியத்தைச் செய்யவில்லை என்று பொருள். ஆதலாலே இனிமேலாவது இப்படிப்பட்ட சம்பவங்கள் நடக்காமல் இருக்க வேண்டும் என்பதற்காகத்தான், 1983-84-லே போட்ட வரவு-செலவுத் திட்டத்திலே நாம் நிறைவேற்றிய திட்டங்கள் என்ன ஆயிற்று. இடையிலே கிடக்கிறது. அங்கேயே அப்படி அப்படியே இருக்கிறது. அவைகள் எல்லாம் திருப்பிக் கொடுக்கப்பட்டு இருக்கிறது. எந்தத் திட்டங்களும் நிறைவேற்றப்படவில்லை. அப்படிப்பட்ட சூழ்நிலை இனியும் வரக்கூடாது என்ற நல்ல எண்ணத்தோடுதான் சொல்கிறேன். இந்த நல்ல எண்ணத்தை மனதிலே வாங்கி, இந்த அமைச்சரவையும், முதலமைச்சர் அவர்களும், செயல்படுவார்கள் என்ற நம்பிக்கையின் அடிப்படையிலே, காந்தி காமராஜ் தேசிய காங்கிரஸ் எல்லாம் நலமாக இருக்கவேண்டும் என்று விரும்புகிற காரணத்



1986 மார்ச் 21] [திரு. குமரி அனந்தன்]

தாலே, அதனுடைய ஊழியனாக நின்று, இந்த கருத்துக்களைச் சொல்வதற்கு அனுமதி அளித்த தங்களுக்கு நன்றி தெரிவித்து அமைகிறேன் வணக்கம்.

திரு அ. ஆறுமுகம் : 'வெள்ளைக் கலை உடுத்து, வெள்ளைப் மணி பூண்டு, வெள்ளைக் கமலத்தில் வீற்றிருப்பாள், வெள்ளை அரியாசனத்து அரசரோடு என்னை சரியாக வைக்கின்ற சரஸ்வதியே'.

மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மதிப்பிற்குரிய கனம் நிதியமைச்சர் அவர்கள் எங்களுக்கு எல்லாம் 'இளந்தாடி இரா. நெடுஞ்செழியன்' என்று அந்தக் காலத்திலே பார்த்த நான், இன்றைக்கு இங்கே மாண்புமிகு நிதியமைச்சராகவும், டாக்டராகவும், நாவலராகவும் பார்ப்பதிலே மகிழ்ச்சி அடைகிறேன். இந்தச் சட்டமன்றத்திலே 1962 ஆம் ஆண்டு அந்தப் பக்கத்திலே உட்காருகின்ற வாய்ப்பைப் பெற்றபோது, அவர்கள் எதிர்க்கட்சித்தலைவராக இருந்தார்கள், என்பதையும் இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்கள் எதிர்க்கட்சித் துணைத் தலைவராக இருந்தார்கள் என்பதையும் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

1984 ஆம் ஆண்டு என்னுடைய சொந்தத் தொகுதியாக இருக்கின்ற செங்கத்திலே நிற்கின்ற வாய்ப்பை இழந்து, இந்தச் சட்டமன்றத்திற்கு வருகிற வாய்ப்பே இருக்காது என்று நான் எண்ணியபோது அன்னை மரகதம் சந்திரசேகர் அவர்கள் காங்கிரஸ் கட்சியினுடைய பார்லியமென்டரி போர்டு அங்கத்தினராக இருந்த நேரத்திலே அவர்கள் வாங்கிக் கொடுத்ததன் காரணமாக வந்தவாசி பெருமக்களும், காங்கிரஸ் கட்சிக்காரர்கள் மட்டுமல்லாது கூட்டணிக்கட்சிகளாக அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த அருமை ஒன்றியத் தலைவர்களும், மற்றவர்களும், மிகவும் திறமையாகவும், கட்டுப்பாடாகவும், விறுவிறுப்பாகவும், வேகமாகவும் வேலை செய்ததன் காரணமாக, திராவிட முன்னேற்றக் கழக வேட்பாளரைத் தோற்கடித்து வருகின்ற வெற்றி வாய்ப்பை நான் பெற்றேன். அதற்காக வந்தவாசி வாக்காளப் பெருமக்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(பிற்பகல் 12-40)

இந்த ஆண்டு நம்முடைய நாட்டிலே வெள்ளம், புயல் பாதிப்பை நீங்களெல்லாம் நன்றாக அறிவீர்கள். டாக்டர் நாவலர் அவர்களுக்குக் கூட சொல்வேன், 200, 300 ஆண்டுகளுக்கு முன்னாலே,

எங்கள் அப்பாவுக்கு அப்பா, அவருக்கு அப்பா, அந்தக் காலத்திலே இவற்றுக்கு காற்று, மழை என்று பெயர் உண்டு. அதைக் கேள்விபட்ட நானே இன்றைக்கு அனுபவிக்கின்ற ஒரு நிலையினை வருண பகவான் கொடுத்து விட்டார். வந்தவாசி பகுதியிலே, இங்கே என்னுடைய சக உறுப்பினர், செய்யார் வெற்றி வீரர், சட்டமன்றத்திற்கு வந்திருக்கிற குப்புசாமி அவர்களுடைய வட்டத்திலே பெருவாரியான பகுதிகளும், வந்தவாசி பகுதியும், தெள்ளார் பகுதியும் மிக அதிகமாக பாதிக்கப்பட்டது என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன். 24 உயிர்கள் அந்த வெள்ளத்தாலே பாதிக்கப்பட்டன. அதுகுறித்து நாங்களெல்லாம் நடவடிக்கை எடுத்துக்கொண்டதன் காரணமாக என்னுடைய மாவட்டத்திலே கலெக்டராக இருக்கிற ஈ. எஸ். டேனியல் குணாநிதி அவர்களும், அவர்களைச் சார்ந்த மற்ற ரெவின்யூ அதிகாரிகளும் வந்தவாசி தாலுக்கா மட்டுமல்ல, செய்யார் தாலுக்கா மட்டுமல்ல, வட ஆற்காடு மாவட்டத்திலே இருக்கிற எல்லா அதிகாரிகளையும் அழைத்து வந்து, ஒவ்வொரு ஊருக்கும் அனுப்பி சேதத்தை கணக்கிட்டு உடனடியாக அவர்களுக்கு நிவாரணத்தைக் கொடுக்கின்ற ஒரு உதவியை அவர்கள் செய்திருக்கிறார்கள். அந்த கலெக்டர் அவர்களுக்கு—டேனியல் குணாநிதி அவர்களுக்கு என்னுடைய பாராட்டுதலை நான் இங்கே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். ஏனென்றால்,

'' எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு ''

என்பதற்கிணங்க நான் அந்தக் கடமையைச் செய்தாக வேண்டும். அதேபோல அப்படி பாதிக்கப்பட்ட மக்களுக்கு, அன்றைக்குக் கொடுக்கக்கூடிய அரிசி, கெரோசின், 300 ரூபாய், அதோடு இப்போது நின்றுவிட்டிருக்கிறது. அந்தப் பகுதியிலே ஏரி உடைந்து, தெள்ளார் ஏரி உடைந்து, அதன் காரணமாக, எல்லா ஊர்களையும் அழித்துக்கொண்டு மதுராந்தகம் ஏரிக்கு அந்தத் தண்ணீர் வந்திருக்கிறது. அந்த ஒரு நிலைமை இன்னும் இருந்துகொண்டிருக்கிறது. அதனால் பழுதடைந்த ஏரிகளில் புதிதாக வேலையைத் துவக்கவும், இதனால் பாதிக்கப்பட்ட ரோடுகளை உடனடியாக சரிப்படுத்தவும் வேண்டும். ஆயிரக்கணக்கான நிலங்கள் இதனால் அழிந்து போய்விட்டன. விவசாயிகள் பல்லாயிரம் கிணறுகளையும், பம்ப்செட்டுகளையும் இழந்து இன்றைக்கு வேதனைப் பட்டுக்கொண்டிருக்கிறார்கள். அதே நேரத்திலே கூட்டுறவு வங்கிகள் போன்றவற்றில் பெற்றிருக்கிற கடனை வசூல் செய்வதற்காக ஊர்களிலே வந்து இப்போது தொல்லை கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். இவையெல்லாம் இல்லாமல், சர்க்கார் பார்த்துக்கொள்ள வேண்டுமென நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.



அடுத்தபடியாக, இங்கே எனக்கு முன்னே பேசிய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திலுள்ள எனது அருமை நண்பர்கள் மத்திய சர்க்கார் மீது சில குற்றச்சாட்டுகளை எடுத்துச் சொன்னார்கள். நான் உள்ளதை உள்ளபடியே சொல்கிறேன. உள்ளதை இல்லையென்று சொல்லவில்லை. நாவலர் அவர்கள் ஒப்புக்கொள்வார்கள் என்று கருதுகிறேன். நம்முடைய அமைச்சருக்கும், மத்திய அமைச்சருக்கும் நல்ல உறவு இருக்கிறதென்பதை இந்த நேரத்திலே நான் சொல்லிக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். ஒருவகையிலே காங்கிரஸ் கட்சி ஆளுகின்ற எந்த முதலமைச்சரையும் விட நம்முடைய முதலமைச்சருக்கு, புரட்சித் தலைவருக்கு, டாக்டருக்கு, மரியாதையும், மதிப்பும் கொடுக்கின்ற ஒரு பிரதமராக, இன்றைய இளைய தலைமுறையின் ராஜீவ் காந்தி அவர்கள் இருந்துகொண்டு இருக்கிறார்கள். நமக்குள் நல்ல உறவு இருக்கிறது. இன்னொன்று சொல்வேன். சென்ற தேர்தலிலே, உள்ளாட்சி தேர்தலிலே, காங்கிரஸ்காரர்களும், அண்ணா திராவிட முன்னேற்றக் கழகக்காரர்களும், தங்களுக்கு நிற்பதற்கு வாய்ப்பு இல்லையென்று ஒருவருக்கொருவர் போட்டி போட்டுகொண்டு அங்கே வேலை செய்ததன் காரணமாகத்தான், திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் பல பஞ்சாயத்து யூனியன்களில் வெற்றிபெற முடிந்தது என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இதைச் சொல்வதில் தவறு இல்லை. திராவிட முன்னேற்றக் கழக வேட்பாளர்கள் உதய சூரியனில் நின்றால் அதற்கு ஓட்டுப் போடுங்கள் என்று அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த பெரியவர்களும், தலைவர்களும், என்னுடைய கட்சியைச் சேர்ந்த வட்டார காங்கிரஸ் கமிட்டி தலைவர்களும், தாலுக்காக்களில் உள்ள தலைவர்களும் வேலை செய்ததன் காரணமாகத்தான் இந்தக் கூட்டணி இவ்வளவு மோசமான அளவுக்கு, நாம் அதிகமான இடங்களில் வர முடியாமல் போய்விட்டது என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நான் தொழிற்சாலையைப் பற்றி சொல்லிக்கொண்டு இருந்தேன், அதை விட்டுவிட்டு வேறு எதற்கோ போய் விட்டேன் (சிரிப்பு).

அன்பு சகோதரி அ.இ.அ.தி.மு.க. உறுப்பினர் தங்கை வளர்மதி, தங்கை என்று சொல்வதா அல்லது என் வயது கருதி மகள் என்று சொல்வதா என்று தெரியவில்லை. காரணம் நம்முடைய நாவலர் அவர்கள் ஆறுமுகத்திற்கு 55 வயது ஆகிவிட்டதா என்ன ஆச்சரியம் என்று கூட நினைப்பார்கள். எனக்கு 30 வயதில் ஒரு பெண் கூட இருக்கிறார். அவர்கள் மிக அழகாக பேசினார்கள். அவருடைய பேச்சை நான் மிகவும் ரசித்துக் கேட்டேன். அதேபோல் மாண்புமிகு நாவலர் அவர்

களுக்கே உரிய வகையில், அவருடைய பாணியில் இதை ஆரம்பத்திலிருந்து கடைசி வரையில் அழகாக பேசினார்கள். அதை கேட்டு எங்களுக்கு மயக்கமே வந்துவிட்டது. அந்த அளவுக்கு இந்த பட்ஜெட்டில் அவர்கள் அழகாக தன்னுடைய உரையை நிகழ்த்தி இருக்கிறார்கள்.

முதலில் அவர்கள் சொல்லியது மத்திய அரசு பல முக்கியமான பொருட்கள் மீது கெரோசின், இரும்பு, நிலக்கரி இப்படிப்பட்ட இன்றியமையாத பொருட்கள் மீது வரியை போட்டுவிட்டதால் இங்கே விலை ஏறிவிடுகிறது, அதனால் நம்முடைய மக்கள் பணம் கூட அங்கே போய்விடுகிறது என்று சொல்லியிருக்கிறார்கள். தயவுசெய்து உங்களை நான் கேட்டுக் கொள்கிறேன், நீங்கள் நிதியமைச்சர், உங்களுக்கு எப்படி எல்லாம் பணம் சேகரிப்பது, எப்படி செலவு செய்வது என்று தெரியும், அந்த வழியில் பணத்தை சேகரிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இலங்கைத் தமிழர்கள் மீது நான் மிகுந்த மதிப்பு வைத்து இருக்கிறேன். I have got great regard to the people who have come from Ceylon நானும் தமிழன் தான். காங்கிரஸ்காரர்கள் எல்லாம் தமிழர்கள் அல்ல, திராவிடர்கள் அல்ல என்று யாராவது சொன்னால் அது தப்பு. எங்களுக்கும் திராவிட ரத்தம் தான் ஓடுகிறது. இலங்கைத் தமிழர்கள் அங்கிருந்து வந்து கொண்டு இருக்கிறார்கள். விடுதலைப் புலிகளும் சில பேர் அங்கிருந்து வந்து இருக்கிறார்கள். இந்த விடுதலைப் புலிகள் என்ன பேசுகிறார்கள் என்றால் தி.மு.க. மேடையில் ஏறி இன்றைச்கு புரட்சித் தலைவர் இல்லாமல் எம்.ஜி.ஆர். இடத்தில் முதலமைச்சராக எங்கள் டாக்டர் கலைஞர் அவர்கள் இருந்தால் கதையே வேறு விதமாக இருக்கும் என்று எல்லாம் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, அவர்கள் நம் எல்லோருடைய அனுதாபத்தையும் பெற்றவர்களாக விளங்க வேண்டும். நம் நாட்டுக்கு வந்து விட்டு நம்மையே பிரித்து, பிரித்து பேசுவது. அ.இ.அ.தி.மு.க. சரியில்லை, காங்கிரஸ் கட்சி சரியில்லை என்றும் தி.மு.க. தான் சரி என்றும் சொன்னால் they will be losing our sympathy'

அப்போது மாண்புமிகு நாவலர் அவர்கள் எதிர்க் கட்சித் தலைவராக இருந்தார்கள், மாண்புமிகு ஆர். வெங்கட்டராமன் அவர்கள், இன்றைக்கு துணை ஜனாதிபதியாக அங்கே இருப்பவர், இங்கே தொழில் அமைச்சராக இருந்த காலத்தில் அவர்கள் தைரியமாக இந்த சட்டமன்றத்தில் சொன்னார்கள், ஒரு நாளைக்கு ஒரு தொழிற்சாலை என்ற அளவுக்கு அந்தக் காலத்தில் காரியங்கள் நடைபெற்றன. இன்றைக்கு என்ன நிலைமை? இன்றைக்கு பார்த்தால் எந்த புதிய தொழிற்சாலையை கட்டப் போகிறார்கள், எந்த ஒரு புதிய பெரிய தொழிற்சாலையையாவது



அமைக்க இருக்கிறீர்களா? ஒன்றுமே இல்லை. மாறாக அதற்குப் பதிலாக 32 சர்க்கரை ஆலைகள் வேண்டும் என்று பைலை டெல்லிக்கு அனுப்பியிருக்கிறோம் என்று நீங்கள் எங்களுக்கு சமாதானம் சொன்னாலும், ஒரு வேளை நாங்கள் சமாதானமாக இருந்தாலும், உங்களோடு இருக்கிற தோழமையின் காரணமாக, நாட்டு மக்கள் மன்னிப்பார்களா, நாட்டு மக்கள் அதை ஏற்றுக் கொள்வார்களா? ஆகவே, நம்முடைய அமைச்சர்கள் அடிக்கடி டெல்லிக்குச் செல்கிறார்கள், எந்த எந்த இலாக்காவில் அவர்கள் பைல் அங்கே தேங்கி இருக்கிறதோ அதை எல்லாம் சம்பந்தப்பட்ட அமைச்சரைப் பார்த்து நீங்கள் பதிலை பெற்றுக் கொண்டு வந்து நல்ல காரியங்களைச் செய்ய வேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து கல்விக் கொள்கை, டாக்டர் நாவலர் அவர்கள் தன்னுடைய உரையில் புதிய கல்விக் கொள்கை பற்றியும், புதிய தொழில் கல்விக் கொள்கை பற்றியும் சொல்லியிருக்கிறார்கள். அதைப் பற்றி ஒரு சில வார்த்தைகள் சொல்ல நான் கடமைப் பட்டு இருக்கிறேன். தமிழ்நாட்டிலே இரு மொழிக் கொள்கை தான் வேண்டும், மும்மொழிக் கொள்கையை நாங்கள் ஏற்றுக் கொள்ள மாட்டோம் என்று இங்கே ஒரே பிடியாக பிடித்துக் கொண்டு இருக்கிறீர்கள். ஒன்றை நான் தெரிந்து கொள்ள விரும்புகிறேன். நீங்கள் டெல்லிக்கு போகிறபோது இங்கே எம்.ஏ. வுக்கு மேலே படித்த நம்முடைய சபாநாயகராக இருந்தாலும் சரி, நம்முடைய அன்புக்குரிய மதிப்பிற்குரிய டாக்டர் நாவலர் அவர்கள் டெல்லிக்குச் சென்றாலும் சரி,

(பிற்பகல் 12–50)

Even if our Doctor goes to Delhi they speak only in English. அங்கிருக்கின்ற பெரிய அதிகாரி கூட ஆங்கிலத்திலே தான் பேசுகிறார். 1940–41-லே நான் இந்திப் படித்துக் கொண்டிருந்தேன். 4-வது வகுப்பிலே படித்துக் கொண்டிருந்தேன். அப்பொழுது கற்றிருந்தேன். அப்போது படித்தது எனக்குக் கொஞ்சம் ஞாபகம் இருக்கிறது. 'துமாரா நாம் க்யா ஹை? மேரா நாம் ஆறுமுகம் ஹை; துமாரா நாம் க்யா ஹை? மேரா நாம் கௌரி ஹை, கலம் கஹாம் ஹை? கலம் மேஜ் மே ஹை" என்று படித்திருக்கிறேன்.

நீங்கள் ஏன் ஓட்டுக்களை மக்களிடத்திலே பெற வேண்டும்? அதன் மூலம் நீங்கள் ஏன் ஆட்சிக்கு வர வேண்டும். உங்களுடைய சுயநலத்திற்காக, இந்த நாட்டினுடைய வருங்கால சந்ததியினரை, இளைஞர்களை நீங்கள் கெடுக்க வேண்டாம் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். நாவலர் அவர்களுக்கு தெரிவித்துக்கொள்கிறேன். அவர்கள் அடிக்கடி திருக்குறளைச் சொல்வார்கள். "உலகத்தோடு ஒட்ட ஒழுகல் பல கற்றும் கல்லார் அறிவிலாதார்" என்று சொல்வார்.

[திரு. அ. ஆறுமுகம்] [1986 மார்ச் 21

ஆக அந்த மூன்று மொழிக் கொள்கையை ஏற்றுக் கொள்ள வேண்டுமென்பதற்காகச் சொல்கிறேன். நம்முடைய திராவிட நாடு, கர்நாடகம், கேரளம், ஆந்திரம், தமிழ்நாடு ஆகியவை அடங்கியதாகும். ,All are people of Dravidian States. சர்க்கார் சொல்கிற மாதிரி—இந்தியை படிக்க வேண்டாம். அது அன்னிய மொழி, அது வட நாட்டான் மொழி என்றெல்லாம் நாம் ஒதுக்கி விட்டால், அது நல்லதல்ல. அலுவல் காரணமாக சட்டமன்ற உறுப்பினர்கள், கேரள எம்.எல்.ஏ. ஒருவர், கர்நாடக எம்.எல்.ஏ. ஒருவர், ஆந்திரக் காங்கிரஸ் காரர் ஒருவர் டில்லிக்கு சென்றால், அந்த மூவரும் நன்றாக பேசிப் பழகுகிறார்கள், பேசிக் கொள்கிறார்கள், இந்தியில். I was singled out; I was helpless. இந்தியைத் தெரிந்து கொள்வதில் என்ன கஷ்டம் ? இந்தியை சுலபமாகக் கற்றுக்கொள்ளலாம்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு உறுப்பினருக்கு இந்தி தெரியுமா ?

திரு. அ. ஆறுமுகம் : சோட்டா, சோட்டா மாலும் ஹை. (சிரிப்பு) 1941ல்- 4 ஆம் வகுப்பில் படித்தேன். 1942-43ல் 5 ஆம் வகுப்பில் படித்தேன். போர்டு ஹைஸ்கூல், செங்கத்தில் படித்தேன். அப்போது இந்தி பண்டிதர் இருந்தார். பிறகு இராஜகோபாலாச்சாரி வந்தார். இன்னும் எவ்வளவோ பல கதைகள் இருக்கின்றன. அவற்றை சொல்ல வேண்டாமென்று நினைக்கிறேன்.

ஆகவே நான் சொல்கிறேன். அவ்வப்போது பேசும்போது தேவையானவற்றை கேட்பேன். தொழில் மானியத்தில் பேசும் போது தொழிற்சாலை வேண்டுமென்று கேட்பேன். கல்வி மானியத்தில் பேசும் போது வந்தவாசியில் ஒரு பெண்கள் கல்லூரியை அமைக்க வேண்டுமென்று கேட்பேன். இப்போது தமிழ்நாட்டிலுள்ள 5 கோடி மக்களுடைய பிரச்சினைகளைப் பற்றி பேசுகிறேன். அது மட்டுமல்ல, நீங்கள் என்ன சொல்கிறீர்கள் ? திராவிட நாடுதான் எங்களுடைய உயிர் என்று சொல்கிறீர்கள். அரசியலில் ஆயிரம் பேசுவோம். நான் கூட, அண்ணா வாழ்க, நாவலர் வாழ்க, பெரியார் வாழ்க என்று சொன்னேன்.

I was sent out of the College because I was wearing black shirt at that time. I had to write the chemistry examination, then நான் படிக்கும்போது நாவலர் அவர்களுடைய பேச்சைக் கேட்காமல் விட மாட்டேன். ஒரு முறை எனக்கு கெமிஸ்ட்ரி எக்சாமினேஷன். ஆனாலும் கூட, அதை விட்டுவிட்டு, அதைப் பொருட்படுத்தாமல், நாவலருடைய வார்த்தைகளைக் கேட்க வேண்டுமென்று, அந்த ஆனந்தத்திலே மூழ்கியிருந்தேன்.

Mr Deputy Speaker, Sir, even though I am not a new member to this House I am giving my maiden speech for the first time after my change from that side to this side.



1986 மார்ச் 21] [திரு. அ. ஆறுமுகம்]

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை.)

இப்பொழுது சபாநாயகர் அவர்களே வந்து விட்டார்கள். நல்ல வேளை. சட்டமன்ற உறுப்பினராக இருந்தபோது, பெரிய வழக்கறிஞராக, உங்களைப் போல் இருந்த, அருமைத் தலைவர் செல்லபாண்டியன் அவர்கள் இப்போது நீங்கள் இருக்கின்ற இடத்திலே தலைவராக உட்கார்ந்திருந்தார்கள். ஆனால் புரட்சித் தலைவர் அவர்கள், தாங்கள் திருநெல்வேலி சீமையிலிருந்து வந்தவர், தைரியமானவர் என்பதால் உங்களைப் போட்டிருக்கிறார்கள். நெற்றிக் கண்ணைக் காட்டினாலும் குற்றம் குற்றமே என்று தீர்ப்பளிப்பவரைப் பார்த்து, சபாநாயகராகப் போட்டிருக்கிறார்கள். அமைச்சர் இராசாராம் அவர்கள் சென்ற முறை சபாநாயகராக இருந்து தற்போது அமைச்சராகியிருக்கிறார். அது போல தாங்களும் அடுத்த முறை அமைச்சராக வேண்டுமென்ற வாழ்த்துக்களை இப்போதே தெரிவித்துக் கொள்கிறேன்.

Now Sir, I am a member representing a reserved constituency தாழ்த்தப்பட்ட மக்களுக்காக, ஒதுக்கப்பட்ட தொகுதியிலிருந்து வந்திருக்கிறேன். அவர்களுடைய நலன்களுக்காக சில கருத்துக்களைத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். அதைச் செய்து விடுகிறேன்.

இந்த பட்ஜெட்டிலே இரண்டு விஷயங்கள் அதிகமாக என்னைக் கவர்ந்தன. ஒன்று, 30 லட்சம் வீடுகள் ஏழைகளுக்கு, தாழ்த்தப்பட்ட மக்களுக்கு நரிக்குறவர்களுக்கு பழங்குடியினருக்கு, வறுமைக் கோட்டிற்குக்கீழே இருக்கிற மக்களுக்குக் கட்டிக் கொடுக்கப் போகிறோம் என்று சொல்லியிருக்கிறீர்கள். அதை 50 லட்சம் வீடுகளாகக் கட்டிக் கொடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். 50 லட்சம் வீடுகள் அவர்களுக்கு கட்டிக் கொடுக்க வேண்டுமென்று நான் சொல்கிறபோது மனைக் கட்டுகள் எங்கே இருக்கின்றன ? நிலச்சுவான்தார்கள் கோடீஸ்வரர்கள் இருக்கிறார்கள். தாழ்த்தப்பட்ட மக்களுக்காக நிலம் ஆர்ஜிதம் செய்ய வேண்டுமென்று நடவடிக்கை எடுக்கிறபோது these rich people go to the Court and get a stay order. ஆகவே நாவலர் அவர்களே, எனக்கு அதைச் சொல்வதால் நன்மையல்ல, தாழ்த்தப்பட்ட மக்கள் 1 கோடிக்கு மேல் இருக்கிறார்கள், அவர்கள் உங்களுக்கு நன்றி தெரிவிக்க வேண்டும், ஆகவே அந்தச் சட்டத்தை திருத்துங்கள்.

The Court has no business to interfere in the matter. கலெக்டர் அவர்கள் இடத்தைக் கையகப்படுத்தி அதே ஊரிலே பட்டாக்களை வழங்குகின்ற முறையிலே சட்டத்தைத் திருத்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து குடிநீர் பற்றி நாவலர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். 25, 30 ஆண்டுகளுக்கு முன்னாலே அதாவது 1957 ஆம் ஆண்டிலே எல்லாம் எங்கள் ஊருக்கு கிணறு வெட்டிக் கொடுங்கள் என்று சொல்வார்கள். ஆனால் இன்றைக்கு கிராமங்களிலே உள்ள மக்கள் எல்லாம் சென்னைக்கும் மற்றப் பட்டணங்களுக்கும் சென்று பார்க்கிற காரணத்தினால் அவர்கள் பாதுகாக்கப்பட்ட குடிநீர் தரப்படவேண்டும், மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டிகள் கட்டிக் கொடுக்க வேண்டுமென்று இன்றைய தினம் கேட்கிறார்கள்.

குடிநீர் வடிகால் வாரியத் தலைவராக இருக்கின்ற நண்பர் திரு. எஸ். டி. உகம்சந்த் அவர்கள் தலைவராக இருந்து அங்கே சிறந்த முறையிலே நல்ல முறையிலே பணியைச் செய்து வருகிறார்கள். ஆய்வுத் தொகையைப் பஞ்சாயத்துக்களால் கட்ட முடியாத காரணத்தினால் அந்த வேலைகள் அப்படியே அங்கே தேங்கிக் கிடக்கின்றன. கடனோடு சேர்த்து அதைப் பின்னாலே வசூலித்துக் கொள்ளட்டும், அதை முன்கூட்டியே கட்ட வேண்டுமென்று சர்க்கார் வற்புறுத்தக்கூடாது என்று அவர்கள் தீர்மானம் போட்டு சர்க்காருக்கு அனுப்பியிருக்கிறார்கள். அதை சர்க்கார் கவனத்தில் கொண்டு ஏற்றுக்கொண்டு சீக்கிரமாக மக்களுக்குக் குடிநீர் வழங்க நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இறுதியாக மாவட்டங்கள் பிரிப்பதைப்பற்றிச் சொல்ல விரும்புகிறேன். மாவட்டங்களைப் பிரித்து சிறிய மாவட்டங்களாக ஆக்கி அதன் மூலமாக நாட்டு மக்களுக்கு நல்ல வசதிகளைச் செய்வது அரசின் கொள்கையாக வைத்திருக்கிறார்கள், நான் அதைப் பாராட்டுகிறேன். முதன்முதலாக அந்தக் கொள்கையை காங்கிரஸ் சர்க்கார் தான் நிறைவேற்றியது, காங்கிரஸ் சர்க்கார் இருந்தபோது சேலம் மாவட்டத்தை இரண்டாகப் பிரித்து தர்மபுரி மாவட்டம், சேலம் மாவட்டம் என்று ஆக்கினார்கள். அதற்குப் பின்னாலே நான் இந்த அவையிலே இந்தப் பக்கத்திலே பார்க்கிறேன். பசும்பொன் முத்துராமலிங்கம் இருக்கிறார் ஒரு மாவட்டத்திற்கு அவர் பெயர் சூட்டப்பட்டிருக்கிறது. பெரியார் இருக்கிறார், அவர் பிறந்த ஊரான ஈரோட்டைத் தலைநகராகக் கொண்டு பெரியார் மாவட்டம் ஆக்கப்பட்டிருக்கிறது. மகாத்மா காந்தியடிகள் இருக்கிறார்கள், என்ன செய்யப் போகிறீர்களோ தெரியவில்லை. அடுத்து அம்பேத்கார் இருக்கிறார், தாழ்த்தப்பட்ட மக்களின் தலைவராக இருக்கிறார். He was one of the great educationist in the world and also an architect of the Constitution of India. அவருக்கு எந்த மாவட்டத்தைக்கொடுக்கப் போகிறீர்களோ அதை உங்களுக்கே விட்டுவிடுகிறேன். மிச்சமெல்லாம் வைத்துவிட்டார்கள். காயிதே மில்லத் இருக்கிறார், நாகப்பட்டிணம் பகுதியைத் தருகிறீர்கள். திருவள்ளுவர் இருக்கிறார், போக்குவரத்துக்





கழகத்திலே அடிபட்டுக் கொண்டிருக்கிறது. அண்ணா அவர்கள் பெயரை திண்டுக்கல்லைத் தலைநகராகக் கொண்ட பகுதிக்கு வைத்திருக்கிறீர்கள். கள்ளுக்கடைகளை தமிழ் நாட்டிலே முதன்முதலாக ஒழிக்கவேண்டுமென்று கங்கணம் கட்டிய பெரிய தலைவர், முதல் தலைவர், ஒரே தலைவர் ராஜாஜி அவர்கள், அவர்கள் தீண்டாமையை ஒழிக்க அரும்பாடுபட்டார்கள். அவர் பிறந்த ஊர் ஓசூருக்குப் பக்கத்திலே ஏதோஒரு கிராமம், தர்மபுரி மாவட்டத்திலே இருக்கிறது.

(பிற்பகல் 1-00).

I request you, Sir, to use your good offices as one who is one of the leaders of this Country, particularly this State and as Finance Minister to see that Dharmapuri is named after Shri Rajaji. கள், சாராயக் கடைகளை எடுப்பது இருக்கிறதே, அதற்காக உள்ளபடியே மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன். குடிக்காத ஆளே இல்லாமல் போய் விட்டார்கள் நாட்டிலே. எங்களிடத்தில் பயந்து பயந்து, திருட்டுத் தனமாகக் குடித்து விட்டு வந்தவர்களெல்லாம் இன்றைக்கு நேராக வந்து நின்று பேசுகிறார்கள். ஏனென்றால் அவர்கள் மெஜாரிட்டியாக ஆகிவிட்டார்கள். அதை ஒழித்துக் கட்டினால் ஜென்மஜென்மத்திற்கும் நன்றி உள்ளவனாக இருப்பேன். எவ்வளவு ஆனாலும் பரவாயில்லை, அதை மத்தியக் அரசாங்கத்திடமிருந்து வாங்குவதற்கு முயற்சித்தால் அதற்காக நாங்களும் தூதுக்குழுவாகப் போனாலும் பரவாயில்லை, ஆனால் கள், சாராயக் கடைகள் மட்டும் இருக்கக் கூடாது. அதன் மூலமாக பேரறிஞர் அமரர் அண்ணா அவர்களுடைய வழியை நீங்கள் உண்மையாகவே பின்பற்றுவதாக எல்லோரும் கருதுவார்கள் என்று தெரிவித்துக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

## 4. அறிவிப்பு.

### டாக்டர் பி. சி. ராய் விருது பெற்றுள்ள டாக்டர் எச். வி. ஹண்டே அவர்கட்குப் பாராட்டு

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. மருத்துவத் துறையில் பல்வேறு வகைகளில் சிறப்பாக பணியாற்றிய பலருக்கு டாக்டர் பி. சி. ராய் தேசிய வெகுமதி அறிவிக்கப்பட்டுள்ளது. இவர்களில் நமது மாண்புமிகு நல்வாழ்வுத் துறை அமைச்சர் டாக்டர் எச். வி. ஹண்டே அவர்களும் ஒருவர் என்பதை இப்பேரவைக்கு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். அமைச்சர் அவர்களுக்கு இப்பேரவையின் சார்பிலும் என் சார்பிலும் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

The Hon. Dr. H. V. HANDE : [Thank you, Sir, Thank you very much for reading out the message. I would like to acknowledge at this point of time that we are very grateful to the Dr. P. C. Roy Committee for recognising the good work done by the State Government. Also, I thank the Honourable Chief Minister for constantly guiding me in the discharge of my duties. I would also like to place on record the co-operation given to us by the Doctors and para-medical personnel which has made it possible for us to receive this award. Thank you, Sir.]

## 3. வரவு-செலவுத் திட்டம் 1986-87 பொது விவாதம் தொடர்ச்சி

டாக்டர் தே. குமாரதாஸ் ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1986-87 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையின் மீதான விவாதத்தில் கலந்துகொண்டு சில கருத்துக்களைப் பரி மாறுகின்ற வாய்ப்பினைக் கொடுத்தமைக்காக முதலாவதாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த நிதி ஆண்டில் சமர்ப்பிக்கப்பட்ட பட்ஜெட்டைப்பற்றி இங்கே பலவிதமான கருத்துக்களை, பலவிதமான அபிப்பிராய வித்தியாசங்களை இந்த மாமன்றத்தில் எடுத்துரைத்தார்கள். அதே நேரத்தில், இந்த பட்ஜெட்டைப்பற்றி எல்லோரும் பலவிதமான கருத்துக் களைக் கொண்டிருந்தாலும் ஜனதா பேரியக்கம் இந்த பட்ஜெட் டைப்பற்றிக் கொண்டிருக்கிற கருத்தாக இருப்பது என்னவென் றால், இது சடங்கிற்காக வைக்கப்பட்டிருக்கின்ற ஒரு பட்ஜெட் டாக அமைந்திருக்கிறதே அல்லாமல் மக்களுக்குப் பயன்படும் விதத்தில் அமைந்துள்ள பட்ஜெட்டாக இதை எடுக்க முடியாத அளவிற்கு இருக்கிறது என்பதைக் குறிப்பிடக் கடமைப்பட் டிருக்கிறேன்.

இன்றையதினம் தாக்கல் செய்யப்பட்டிருக்கின்ற இந்த பட் ஜெட்டில் கிட்டத்தட்ட 3,275 கோடி ரூபாய் ஆண்டு வருமானம் வருவதாகக் குறிப்பிட்டு, அதே நேரத்தில் இந்தப் பணத்தைச் செலவு செய்வதற்கான வழிமுறைகளையும் அட்டவணைப்படுத்தி கொடுத்திருக்கின்றார்கள்.

இந்த நேரத்தில் நான் உங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். பெருந்தலைவா காமராஜ் அவர்கள் தமிழகத்தின் ஆட்சிப் பொறுப்பை ஏற்றபொழுது ஆண்டு வரு மானம் 52 கோடி ரூபாய் ; அவர்கள் ஆட்சியைவிட்டுப் போகின்ற பொழுது தமிழகத்தினுடைய ஆண்டு வருமானம் 134 கோடி ரூபாய் இந்த 134 கோடி ரூபாய் வருமானம் வந்தபொழுதுதான் அவர்கள் சென்னை மாநகரத்தை அடுத்துள்ள ஆவடியில் தொழிற் சாலை ஏற்படுத்தினார்கள். பெரம்பூரில் இருக்கின்ற





இரயில்வே பெட்டி தொழிற்சாலை வந்தது, திருச்சிக்குப் பக்கத் தில் சென்றால் துப்பாக்கித் தொழிற்சாலை, பி.எச்.இ.எல்., என்று சொல்லப்படுகின்ற பாரத் ஹெவி எலக்ட்ரிகல்ஸ் என்று இப்படி அடுக்கிக்கொண்டே போகலாம். இதையெல்லாம் செய் தார்கள் தமிழகத்தினுடைய ஆண்டு வருமானம் 134 கோடி ரூபாயாக இருந்தபொழுது. இன்னும் குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்றால், 134 கோடி ரூபாய் தமிழகத்தினுடைய ஆண்டு வருமானமாக இருந்தபொழுதுதான் எங்கள் மாவட்டத்திலே கோதையாறு மின்சார நிலையம் ஒன்றை அமைத்துத் தந்திருக் கிறார்கள். அதே போல், அங்கே நாகர்கோவிலில் இருக்கிற ராணித் தோட்டம் என்கின்ற பகுதியில் அரசு பணிமனை அமைத்திருக் கிறார். நாகர்கோவிலில் அரசு பாலிடெக்னிக் அமைந்திருக் கிறது. நாகர்கோவிலில் ஐ.டி.ஐ. அமைத்திருக்கிறார். ஆரல்வாய் மொழியில் நூற்பாலை இருக்கிறது. சிற்றாறு பட்டணங்கால் திட்டம் அமைக்கப்பட்டிருக்கிறது. இவற்றையெல்லாம் அடுக்கிக் கொண்டே போகலாம். இவற்றையெல்லாம் காமராஜர் அவர் கள் செய்தார். அன்றையதினம் ஆண்டு வருமானம் ரூ. 134 கோடி. இன்றையதினம் சுமார் ரூ. 3,275 கோடி வருமானத்தை வைத்துக் கொண்டு 10 பேர்களுக்கு வேலை கொடுக்கக் கூடிய அளவில் ஒரு தொழிற்சாலை அமைப்பதற்கான திட்டம் வகுக்க இந்த அரசு தயக்கம் காட்டுவது ஏன் ? இன்றையதினம் சொல் கிறார்கள், எந்தத் தொழிற்சாலை அமைக்க வேண்டுமானாலும், நாங்கள் மத்திய அரசிடம் வாதாட வேண்டும், போராட வேண் டும் என்று. அரிசி குறைகிறது என்று சொன்னவுடன், முதல் அமைச்சர் தலைமையிலே, கடற்கரையில் உண்ணாவிரதம் இருந்த அரசு, தொழிற்சாலைகள் அமைப்பதற்குத் தயக்கம் காட்டுகின்ற நேரத்தில், போராடத் தயக்கம் காட்டுவது ஏன் ? தமிழகத்தில் புதிய தொழிற்சாலைகள் வரவேண்டுமென்பதற் காகக் குரல் கொடுக்கின்ற நேரத்தில், நாங்கள் எதிர்க்கட்சிகள் என்று பாராமல், நாட்டு மக்களின் நலனில் அக்கறை கொண்ட வர்களாக, உங்களோடு தோளோடு தோள் நின்று, மைய அர சோடு போராடத் தயாராக இருக்கிறோம். அப்படிப்பட்ட எங்களையெல்லாம் நீங்கள் பயன்படுத்தி இந்த மாநிலத்தில் தொழிற்சாலைகள் அமைப்பதற்கு வழிவகைகள் காணாமல் விட்டு விட்டீர்கள் என்று குற்றம் சாட்டக் கடமைப் பட்டிருக் கிறேன்.

இங்கே, மின்சாரத்திற்காக ரூ. 379 கோடி ஒதுக்கீடு செய் திருப்பதாகக் கணக்குக் கொடுத்திருக்கிறீர்கள். நான் உங் களை எல்லாம் அன்போடு கேட்டுக் கொள்வதெல்லாம், அனல் மின்நிலையம் என்று அலைந்து திரிவதற்குப் பதிலாக, குமரி மாவட்டத்தில், பரலியாறு என்கிற ஒரு மின் திட்டத்தை அமைக் வேண்டுமென்று 1974-ல் இங்கிருந்து ஒரு திட்டம் மைய அர சுக்கு அனுப்பப்பட்டுள்ளது. அந்தத் திட்டம் இதுவரையில் என்னவாயிற்று? அதனுடைய நிலவரம் என்ன என்பதை

யெல்லாம் பற்றி சிந்திக்காமல், ஏன் அனல் மின் நிலையம் மட்டும்தான் அமைக்க முடியுமா? ரூ. 200 கோடி, ரூ. 300 கோடி செலவு செய்து, அப்படிப்பட்ட மின் இயந்திரங்கள்தான் அமைக்க முடியுமா? நீர் மின் நிலையங்கள் அமைக்கக் கூடாதா? பரலியாறு மின் திட்டம் அமைத்தால், தினசரி 25 மெகாவாட் மின்சாரம் தயாரிப்பதற்கான வாய்ப்பும் வசதியும் அங்கே இருப்பதாக, மின் வாரியத்திலிருந்து உங்களுக்குப் பரிந்துரை செய்த பிறகும், அதிலே தயக்கம் காட்டுவதற்கு என்ன காரணம் என்று புரியவில்லை.

அதே போல, கல்வித்துறையை எடுத்துக் கொண்டால், புதிதாக கட்டிடம் கட்டுவதற்காக, ரூ. 1 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. பெருந்தலைவர் காமராஜர் காலத்தில் அமைக்கப்பட்ட பள்ளிகளுக்கு வெள்ளை அடிக்கப்போதுமா அந்தப் பணம்? நீங்களே அவற்றை எல்லாம் கவனத்தில் கொள்ளவேண்டும்.

என்னுடைய தொகுதியில் கணபதியான் கால் என்ற பகுதியில் ரூ. 1 கோடியே 7 இலட்சத்திற்கு ஒரு எஸ்டிமேட் கொடுத்தார்கள், பாலம் கட்டுவதற்கு. இப்பொழுது, மொத்தம் ரூ. 3 கோடி ஒதுக்கியிருக்கிறீர்கள். என்னுடைய தொகுதி தமிழகத்திலுள்ள 234-வது தொகுதி. அந்தத் தொகுதியில் ஒரு பாலத்திற்கு ரூ. 1 கோடியே 6 இலட்சம் வேண்டுமென்று மதிப்பீடுகள் அனுப்பி இருக்கிறார்கள் என்றால், இந்த மாநிலத்தில் எத்தனை பாலங்கள் அமைக்கவேண்டும்? அப்படியென்றால், நீங்கள் ஒதுக்கியிருக்கிற பணம் போதுமா? அவற்றையெல்லாம் பற்றி சிந்திக்கிறீர்களா?

அதே போல, ஆங்கில முறை மருத்துவத்தை எடுத்துக் கொண்டால், அதற்கான மருத்துவமனையிலே ஒரு கருவி வாங்க வேண்டுமென்றால், கிட்டத்தட்ட ரூ. 80 இலட்சம், ரூ. 60 இலட்சம் ஒதுக்கீடு செய்து, அங்கே புதிய நவீன கருவிகளை வாங்கி வைக்கிறார்கள். அதே நேரத்தில், ஆங்கில மருத்துவத்திற்குச் சவால் விடுகின்ற விதத்தில், சித்த மருத்துவத்தில் எத்தனையோ மருந்துகள் இருக்கின்றன. அத்துறைக்கு ஆண்டொன்றுக்கு ரூ. 1 கோடி ஒதுக்கினீர்கள் என்றால், உலகம் போற்றக் கூடிய வகையில், புகழ் பெறத்தக்க விதத்தில், ஆராய்ச்சி மூலமாக, டையபெட்டீஸ், அதே போல், கான்சர், பெப்டிக் அல்சர், இப்படிப்பட்ட நோய்களைத் தீர்ப்பதற்கு மிக மிக அருமையான மருந்துகளைக் கண்டு பிடித்துத் தரமுடியும் அதற்கான பண ஒதுக்கீடு செய்து தருகிறீர்களா?

1984–85-ஆம் ஆண்டில், ரூ. 25 இலட்சம் ஆராய்ச்சி நிலையத்திற்கென்று ஒதுக்கினீர்கள். அதற்குப் பிறகு, 1985–86-ஆம் ஆண்டு ரூ. 45 இலட்சம் ஒதுக்கினீர்கள். 1986–87 ஆம் ஆண்டு அதை ரூ. 15 இலட்சமாகக் குறைத்திருக்கிறீர்கள் என்றால் அந்த மருத்துவம் வளர்ச்சி அடையுமா? இப்படி நீங்கள்





ஒதுக்குகின்ற பணம், பயன்படுத்துகின்ற பணம் மக்களுக்குப் பயன் உள்ளதாக, இந்த நாட்டுக்குப் பயன் உள்ளதாக அமைந்திருக்கிறதா என்று பார்த்தால், ஒட்டுமொத்தமாக இல்லையென்று சொல்லலாம். இங்கே நீங்கள் பட்ஜெட்டில் பெருமையோடு சொல்லிக்கொள்ளலாம், உமிக்கு வரி நீக்கியிருக்கிறோம், கரிக்கு வரி நீக்கியிருக்கிறோம் என்று. இவற்றிற்கெல்லாம் வரி இருப்பது நீங்கள் சொன்ன பிறகு, ஓகோ, இவற்றிற்கெல்லாம் வரி இருக்கிறது என்று எங்களுக்குத் தெரிகிறது. இவையெல்லாம் வரி நீக்கமா? மெழுகுவர்த்திக்கு வரியை நீக்கி இருக்கிறீர்கள். அப்படியென்றால், இவ்வளவு நாட்கள் ஏழைகள் வீட்டில் எரிந்து கொண்டிருக்கிற மெழுகுவர்த்திக்கு வரி வாங்கிக் கொண்டிருந்தீர்களா?

(பிற்பகல் 1-10)

இது சண்டாளத்தனம் என்று சொல்லவேண்டிய சூழ்நிலையில் இருக்கிறது. இப்படிப்பட்ட நிலைமைக்குக் காரணம் காட்டாமல் அதை நீக்கியிருக்கிறோம், இதை நீக்கியிருக்கிறோம் என்று சொல்லியிருக்கிறீர்கள். ஆனால் உருப்படியாக மக்களுக்குப் பயன்படக்கூடிய வகையில் எதுவும் இல்லை. மக்களுக்குப் பயன்படுகிறமாதிரி ஒன்றை அறிவித்திருக்கிறீர்கள். அதாவது இசைக்கருவிக்கு வரி நீக்கம் செய்திருக்கிறீர்கள். உங்களுடைய இசை ஆர்வத்தை வரவேற்கிறேன், நீங்கள் அதற்கு அளிக்கும் மரியாதையைப் பாராட்டுகிறேன். அதே நேரத்தில் அதனால் பயன்பெறுகின்றவர்கள் 0.002 சதவீதம் கூட இருக்க மாட்டார்கள். அதிகமாக வாங்கும் மக்கள் இல்லை. ஆகவே, இதனால் பயனில்லை.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, அப்படியானால் இந்த வரிகளை எல்லாம் பழைய படியே வைத்துவிடலாமா? பழைய நிலையிலே இருக்கலாம் என்று நீங்கள் கருதுகிறீர்களா?

டாக்டர் தே. குமாரதாஸ் : தலைவர் அவர்களே, வரியை நீக்க வேண்டாம் என்று நான் சொல்லவில்லை. ஆனால் நீங்கள் செய்திருப்பதினால் ஒரு காசு, இரண்டு காசு குறையும் என்றால், அந்த ஒரு காசு, இரண்டு காசுக்கு பயன் ஏற்படும் என்றால் அது வரவேற்கக்கூடியதுதான். இப்போது நடைமுறையில் ஒரு காசு, இரண்டு காசு இல்லை; குறைந்தது 5 காசுதான் இருக்கிறது. ஆகவே, நீங்கள் வரியைக் குறைப்பதினால் அல்லது நீக்குவதினால் ஒரு காசு இரண்டு காசு பயன்படுத்தும் மக்களுக்கு நன்மை என்று இருக்கும்போது அதைப்பற்றி நான் ஒன்றும் சொல்வதற்கில்லை. மேற்கொண்டு இதுபற்றி விவரிக்க நேரம் இல்லாததால் எங்களுடைய மாவட்டப் பிரச்சனைக்கு வருகிறேன்.

[டாக்டர் தே. குமாரதாஸ்] [1986 மார்ச் 21

எங்களுடைய மாவட்டத்தைப் பொறுத்தவரையில் நான் மிக வேதனையோடு, வருத்தத்தோடு சில கருத்துக்களை எடுத்து வைக்க விரும்புகிறேன். எங்களுடைய மாவட்டம் கன்னியாகுமரி மாவட்டம். கேரளத்திலிருந்து பிரிந்து, தாய்த் தமிழகத்தோடு இணைய வேண்டுமென்ற ஆர்வத்தால் 15 பேர்களைப் பலி கொடுத்து, தமிழகத்தோடு இணைந்தோம். அப்படி 15 பேர்களை இழந்து, இணைந்த பிறகு நாங்கள் அடைந்த பயன் என்ன? திராவிட முன்னேற்றக் கழகத் தலைவராக இருந்த அண்ணா அவர்கள் ஆட்சி செய்தபோது கலைஞர் கருணாநிதி அவர்கள் நெல்லையிலே ஒரு கூட்டத்தில் ''நெல்லை எங்கள் எல்லை, குமரி எங்களுக்குத் தொல்லை'' என்று கூறினார்கள். அண்ணா காலத்தில் சொன்னதை நடைமுறைப்படுத்துகின்ற வகையிலே திராவிட முன்னேற்றக் கழக அரசு காலத்திலும் அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு காலத்திலும் ஒட்டு மொத்தமாக எங்கள் மாவட்டம் புறக்கணிக்கப்பட்டிருக்கிறது. எதற்காக இதைச் சொல்கிறேன் என்றால் எங்கள் மாவட்டத்திலே படித்தவர்கள், பட்டம் பெற்றவர்கள் சதவீதத்தைப் பார்த்தால் தமிழ்நாட்டில் இருக்கிற எந்த மாவட்டத்திலும் அந்த அளவுக்கு இல்லை. இருந்தாலும் கன்னியாகுமரி மாவட்டத்திற்குப் பக்கத்திலே இருக்கிற நெல்லை மாவட்டத்தில் சித்த மருத்துவக் கல்லூரி, ஆங்கில மருத்துவக் கல்லூரி, விவசாயக் கல்லூரி, எஞ்சினீயரிங் கல்லூரி, சில ஆராய்ச்சி நிறுவனங்கள் எல்லாம் இருக்கின்றன. இப்படி ஏராளமாக அடுக்கிக் கொண்டே போகலாம். ஆனால் கன்னியாகுமரி மாவட்டத்தில் ஒரு 'புரொஃபஷனல் கோர்ஸ்' கல்லூரிகூட அமைக்கப்படவில்லை. நெல்லை மாவட்டத்திற்கு இவை வேண்டாம் என்று சொல்லவில்லை. அதே நேரத்தில் கன்னியாகுமரி மாவட்டத்தில் ஒரு புரொஃபஷனல் கோர்ஸ் கல்லூரி கூட இல்லையே! ஏன்? அங்கே கட்டினால் இடிந்துவிடுமா? அங்கே படிக்க தகுதியுடையவர்கள் இல்லையா?

அதைப்போன்று அரசியல் ரீதியாகப் பார்த்தாலும் எங்கள் மாவட்டம் புறக்கணிக்கப்பட்டிருக்கிறது. பெருந்தலைவர் காமராஜர் முதலமைச்சராக இருந்தபோது கன்னியாகுமரி மாவட்டத்திலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு உறுப்பினராக வந்த லூர்தம்மாள் சைமன் அவர்களுக்கு அமைச்சர் பதவி கொடுத்தார்கள். அதற்குப் பின்னால் 3, 4 முறை திராவிட முன்னேற்றக் கழகமும், அண்ணா திராவிட முன்னேற்றக் கழகமும் ஆட்சிக்கு வந்திருக்கின்றன. திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் அங்கிருந்து இரண்டு சட்டமன்ற உறுப்பினர்கள் வந்திருக்கிறார்கள். அதைப்போன்று அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலும் இரண்டு சட்டமன்ற உறுப்பினர்கள் வந்திருக்கிறார்கள். அவர்களில் யாருக்கும் பிரதிநிதித்துவம் கொடுக்கப்படவில்லை. ஆகவே, அரசியல் ரீதியாகவும் எங்கள் மாவட்டம் புறக்கணிக்கப்பட்டிருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.



1986 மார்ச் 21] [டாக்டர் தே. குமாரதாஸ்]

இன்னும் சொல்லப்போனால் கன்னியாகுமரி மாவட்டத்தில் எத்தனையோ விதமான தொழிற்சாலைகள் தொடங்கக்கூடிய வாய்ப்பு இருந்தும், இயற்கைவளங்கள் கொண்ட மாவட்டமாக இருந்தும் அங்கே ஒரு தொழிற்சாலைகூட தொடங்கப்படவில்லை. கழிந்த சட்டமன்றத் தொடரில் மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர் அவர்கள் குறிப்பிடும்போது அங்கே ஆண்டு ஒன்றுக்கு 18 கோடி ரூபாய் வருமானம் இரப்பரிலிருந்து மட்டும் கிடைக்கிறது என்று சொன்னார்கள். எங்கள் மாவட்டத்தில் இரப்பர் மூலம் ஆண்டுக்கு 18 கோடி ரூபாய் வருமானம் வருகிறது என்று சொல்லுகிறபோது, வெளியிலே இருந்து பணம் கொண்டுவர வேண்டாம், அந்த வருமானத்திலிருந்து பணத்தை ஒதுக்கி, ஒரு தொழிற்சாலை அமைக்க ஏன் தயங்குகிறீர்கள்? படித்தவர்கள், பட்டம் பெற்றவர்கள் சின்னாபின்னமாக சிதறிப்போகின்ற பரிதாபகரமான நிலைக்கு எங்கள் மாவட்டதை ஏன் புறக்கணிக்கிறீர்கள்? எங்கள் மாவட்டத்தைச் சேர்ந்த மரியாதைக்குரிய பொன்னப்ப நாடார் அவர்கள் இங்கே சட்டமன்ற உறுப்பினராக இருந்தபோது கன்னியாகுமரி மாவட்டத்திற்கு விவசாயக் கல்லூரி, மருத்துவக்கல்லூரி, பொறியியல் கல்லூரி வேண்டும் என்று பேசியிருப்பதை பழைய நடவடிக்கை புத்தகங்களைப் புரட்டிப் பார்த்தால் தெரியும். இப்படித் தொடர்ச்சியாக நாங்கள் கேட்டும், கேட்டும் பலனளிக்காமல் பிறகு என்ன செய்வது என்று புரியாத சூழ்நிலைக்கு எங்களைத் தள்ளிவிட்டீர்கள். இதை நீங்கள் ஒரு சவாலாகக் கூட எடுத்துக் கொள்ளலாம். அந்தப் பகுதியில் வேறு ஒன்றும் இல்லை. இந்த மாமன்றத்தில் இருக்கும் யாரானாலும் சரி, அங்கே வாருங்கள். என்னுடைய குரல் குமரி மாவட்ட மக்களின் குரலாகத்தான் இருக்குமே தவிர தனிப்பட்ட முறையில் குமாரதாஸிற்கு என்று எதுவும் கிடையாது. நான் என்னுடைய கிள்ளியூர் தொகுதியை ராஜினாமா செய்கிறேன். ஏனென்றால் நீங்கள் குமரி மாவட்டத்து மக்களை ஒட்டு மொத்தமாகப் புறக்கணித்திருக்கிறீர்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அந்த மாதிரி எல்லாம் பேசக் கூடாது. சவால் விடுகின்ற இடம் இதுவல்ல. எனவே சவால் விட்டுப் பேசுதல் கூடாது.

டாக்டர் தே. குமாரதாஸ் : தலைவர் அவர்களே, மக்களின் பிரதிபலிப்பை நீங்கள் தெரிந்து கொள்ளக்கூடிய ஒரு வாய்ப்பை உருவாக்கத் தயாராக இருக்கிறோம் என்பதுதான் என்னுடைய வாதம். எனவே நான் ராஜினாமா செய்து விடுகிறேன் என்பது மக்களின் குமுறலை நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டும் என்பதற்காகத்தான். அதனை ஒரு தேர்தல் களமாக அமைக்க வேண்டும் என்று சொன்னால் நான் ராஜினாமா செய்வதற்குக் கூடத் தயாராக இருக்கிறேன் என்பதுதான் எங்களுடைய வாதமேயல்லாமல் நான் ராஜினாமா செய்து விடுகிறேன் என்ற அர்த்தத்தில் பேசவில்லை. அந்த

[டாக்டர் தே. குமாரதாஸ்] [1986 மார்ச் 21

மக்களின் குமுறல் எந்த அளவுக்கு இருக்கிறது என்பதை எடுத்துக்காட்டுவதற்காகத்தான் இதை நான் உங்கள் முன்னாலே பேசக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்த அரசைப் பற்றிக் குறையாகச் சொன்னால் சொல்லிக்கொண்டே போகலாம்.

எங்கள் மாவட்டத்தில் தொழில் வளம் அறவே கிடையாது. மின்சாரம் என்ற ஒன்று இருப்பதாக நாங்கள் மாலை நேரத்தில் தெரிந்து கொள்கிறோம். 100 வால்ட் பல்பைப் போட்டால் 0 வால்ட் பிரகாசம் நிச்சயமாக இருக்கும். எங்கள் மாவட்டம் முழுவதும் இதே நிலவரம்தான். சப் ஸ்டேஷன் அமைப்பதாகப் பல இடங்களில் எஸ்டிமேட் எடுத்தார்கள். கேட்டால் பணம் இல்லை, இல்லை என்று சொல்கிறார்கள். நான் நினைத்தேன், ஒரு வேளை கன்னியாகுமரி மாவட்டத்தில் என்னுடைய தொகுதியில் மட்டும்தான் இந்த நிலைமையா என்று. ஆனால் பக்கத்திலே இருக்கின்ற அருமைச் சகோதரர் எஃப். எம். இராசரத்தினம் அவர்களுடைய தொகுதியைச் சேர்ந்தவர்களும் இதையேதான் சொல்கிறார்கள். இது பற்றி என்ன நிலைமை என்று கேட்டால் பணம் இல்லை, இல்லை என்று சொல்கிறார்கள். இப்படிப்பட்ட சூழ்நிலை இன்றைக்கு இருந்து கொண்டு இருக்கிறது. ஏன் இந்தத் துர்ப்பாக்கியமான நிலைமை?

நாங்கள் உங்களோடு இணைந்தோம். இப்போது, அன்றைக்கே பாண்டிச்சேரி மாதிரி ஏதாவது கேட்டிருந்தாலாவது பரவாயில்லையே என்று தோன்றுகிற அளவுக்கு நிலைமை இருக்கிறது. இங்கே காவல் கிணறு என்ற இடத்தைத் தாண்டி இந்தப் பக்கம் வந்தால் அவர் மலையாளி என்று சொல்கிறார்கள். அங்கே களியக்காவிளை என்பது ஒரு பகுதி. அதைத்தாண்டி அந்தப் பக்கம் போனால் இவன் தமிழன் என்று சொல்கிறார்கள். இப்படி யாருடைய பிடிமானமும் இல்லாத ஒரு துர்ப்பாக்கியமான சூழ்நிலை இருக்கிறது. இவற்றை நீங்கள் கவனத்தில் கொள்ள வேண்டும். இன்னும் சொல்ல வேண்டும் என்றால் அரசாங்கக் கல்லூரிகள் ஒன்றுகூட எங்கள் மாவட்டத்தில் அமைக்கப்படவில்லை. லட்சுமிபுரம் கல்லூரி ஒன்று இருக்கிறது. அது ஒரு கலைக் கல்லூரி. அங்கே படிக்க வேண்டும் என்றால் அது பெரும் பிரச்சினையாக இருக்கிறது. இப்படிப்பட்ட மோசமான சூழ்நிலைகள் பற்றி நான் கழிந்த சட்ட மன்றக் கூட்டத் தொடரில் கூட பேசினேன். இப்படி எங்கள் மாவட்டம் ஒட்டு மொத்தமாகப் புறங்கணிக்கப்பட்டு இருக்கிறது. அங்கே ஒரு இன்ஜினியரிங் கல்லூரியோ, விவசாயக் கல்லூரியோ, மருத்துவக் கல்லூரியோ வேண்டுமென்று நான் பலமுறை கேட்டேன்.

இந்த முறை ஆவலுடன் பட்ஜெட்டைப் பார்த்தால் உள்ளவையே நடக்கக்கூடிய நிலைமையில் இந்த பட்ஜெட் இல்லை. நாங்கள் முறையிட்டு, முறையிட்டு கேட்கிறோம். நீங்கள் இதை



1986 மார்ச் 21] [டாக்டர் தே. குமாரதாஸ்]

யும் கருத்தில் கொண்டு எங்களையும், உங்களில் ஒரு அங்கமாகக் கருதி, உங்களைப் போல் பாவித்து எங்கள் மாவட்டத்தில் வளர்ச்சி ஏற்படுகின்ற வகையில் தொழிற் சாலைகளை அமைக்க வேண்டும். கன்னியாகுமரி மாவட்டத்திலிருந்து நெடுந்தூரம் சென்று கொண்டிருக்கிற இரயில்களை எல்லாம் இப்போது நிறுத்தி திருவனந்தபுரத்திலிருந்து ஆரம்பிக்க இருக்கிறார்கள். இதற்கெல்லாம் ஒரு தீர்மானம் போட்டு கன்னியாகுமரி மாவட்டத்தில் ஓடுகிற இரயிலை ஏன் திருவனந்தபுரத்திற்குக் கொண்டு போகிறார்கள் என்று நீங்கள் கேட்க வேண்டும். நாங்கள் டைரக்டாக மத்திய அரசைக் கேட்பதை விட நீங்களாக தட்டிக் கேட்டால் நன்றாக இருக்கும். நீங்கள் தட்டிக் கேளுங்கள். அப்படித் தட்டிக் கேட்டும் அவர்கள் தரவில்லை என்றால், நீங்கள் எங்களுடன் வாருங்கள் என்று எங்களுக்கு அழைப்பு விட்டால் ஓடோடி வருவோம். எங்கள் மாவட்டத்தின் வளர்ச்சிக்காக, 12 உயிர்களை நாங்கள் ஒரு காலத்தில் பலி கொடுத்தோம். இன்னும் பல உயிர்கள் தேவையானால் நாங்கள் தரத் தயாராக இருக்கிறோம். எங்கள் மாவட்டத்தின் வளர்ச்சிக்காக எதையும் செய்யத் தயாராக இருக்கிறோம். எங்கள் மீது அக்கறை கொண்டு எங்களுடைய மாவட்டத்தில் வளர்ச்சியை உருவாக்கித் தாருங்கள் என்று கேட்டு அமைகிறேன். நன்றி, வணக்கம்.

(பிற்பகல் 1-20)

திரு. வை. பாலசந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1986-87 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையினைத் தமிழகத்தின் நிதியமைச்சர் மாண்புமிகு டாக்டர் நாவலர் அவர்கள் சமர்ப்பித்திருக்கிறார்கள். அதன் மீது ஒரு சில கருத்துக்களை நான் சார்ந்துள்ள இந்து முன்னணி இயக்கத்தின் சார்பாக தெரிவிக்க ஒரு வாய்ப்பு கொடுத்ததற்காக நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

வருகிற ஆண்டு ஜனவரி மாதம் 1-ஆம் தேதியிலிருந்து சமுதாயத்தைச் சீரழித்துக் கொண்டிருக்கும் கள், சாராயக் கடைகள் மூடப்படும் என்ற அறிவிப்பு செய்யப்பட்டு, அதன் காரணமாக நிதி இழப்பு அரசாங்கத்திற்கு ஏற்படும் என்ற கருத்தும் கூறப்பட்டதால், அந்த நிதி இழப்பை ஈடுகட்டுவதற்காக புதிய வரிகள் விதிக்கப்பட்டாலும் படலாம் என்று நாட்டு மக்கள் நினைத்துக் கொண்டிருந்தபோது, புதிய வரிகள் இல்லாத ஒரு நிதிநிலை அறிக்கையை, தமிழக அரசின் சார்பாக மாண்புமிகு டாக்டர் நாவலர் அவர்கள் சமர்ப்பித்திருக்கிறார்கள். புது வரி விதிப்பு இல்லாத இந்த நிதிநிலை அறிக்கைக்காக, ஏற்கெனவே வரிச் சுமையால் கூனிக் குறுகிப் போன மனிதனுடைய முதுகெலும்பை மீண்டும் குறுகி, கூன வைக்காத அளவுக்கு ஒரு நிதிநிலை அறிக்கையைக் கொண்டு வந்தமைக்காக இந்த அரசுக்கு எனது இயக்கத்தின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். நன்றி மட்டும் அல்ல, பாராட்டையும் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தமிழகத்திலே ஒரு நாட்டுப்பாடல் உண்டு. அதிலே மூப்பு இல்லாத மங்கையும். மூளை இல்லாத மன்னனும் பாழ்பட்டுப் போவார்கள் என்ற வரிகள் உண்டு. அந்த வகையில் பாராட்டு இல்லாத கோரிக்கை வீணாகப் போய்விடும் என்று நான் கருதி, என்னுடைய பாராட்டுதல்களோடு சில கோரிக்கைகளையும் இணைத்துக் கொல்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்றைக்குத் தமிழகத்தைப் பொறுத்தவரையில் இளைஞர் சமுதாயம் என்பது வேலை இல்லாத் திண்டாட்டத்தின் கொடிய கரங்களில் ஆட்பட்டு, எப்படி அந்தக் கரங்களிலிருந்து விடுதலை பெறுவது என்று தெரியாமல் தவிக்கின்ற துடிக்கின்ற ஒரு சமுதாயமாக இருந்து கொண்டிருக்கிறது.

வசதி வாய்ப்பற்றவர்கள் எப்படியோ கல்லூரிக்குச் சென்று படித்து பட்டம் பெற்று பிறகு வேலை கிடைத்தால், வறுமையைப் போக்கி வயிற்றுப் பசியை மாற்றுகின்ற நிலைமை ஏற்படும் என்ற நம்பிக்கையோடு அவர்கள் கஷடப்பட்டு படித்தாலும், பட்டம் பெற்றாலும் வேலை கிடைக்காத நிலையில் தவித்துக் கொண்டிருக்கிறார்கள். அந்த இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பை உருவாக்கிக் கொடுக்கின்ற வகையில் ஏதாவது ஒரு நல்ல திட்டம், நீண்டகால பயனைத் தருகின்ற திட்டம் இந்த அறிக்கையில் இடம் பெறவில்லையே என்பது வேதனைக்குரியதாக இருக்கிறது.

வேலையில்லாத் திண்டாட்டம் என்பது இன்றோ நாளையோ திடீர் என்று நினைத்தவுடன் புதிய திட்டங்களைக் கொண்டு வந்து செயலாற்றி வெற்றிபெற்று போக்கிவிடக்கூடிய அளவுக்கு ஒருமை நிலையில் உள்ள பிரச்சனை அல்ல. அது ஒரு தேசீய பிரச்னையாக மாறியிருக்கிறது. இந்தத் தேசீய பிரச்னையைக் தீர்க்க நீண்டகால பலனைக் கொடுக்கின்ற வகையில்ஒரு திட்டம் கொண்டு வரப்பட்டு, அதன் மூலமாக இப்பிரச்சினையை சிறுக சிறுக போக்க முடியுமே தவிர, அலாவுதீனின் அற்புத விளக்கு போன்று மாயா ஜாலத்தால் திடீர் என்று மாற்றி விட முடியாது. ஆகவே அப்படி ஒரு நீண்டகால பலனைக் கொடுக்கின்ற திட்டத்தை அறிவிக்க வேண்டும். அறிவிப்பதோடு மட்டும் அல்ல அது வெற்றிபெற நாம் அனைவரும் தீவிரமாக சிந்தித்துப் பாடு படவேண்டும்.

இப்படிப்பட்ட வேலை இல்லாத பட்டதாரி இளைஞர்கள் எல்லாம் வேலை வாய்ப்பு அலுவலகத்திற்குச் சென்று தங்கள் பெயரை வேலை வேண்டும் என்று கேட்டு பதிவு செய்திருக்கிறார்கள். அவர்கள் வேலை வாய்ப்பு பெறுவதற்கான வயது வரம்பைக் கடந்த பிறகும் கூட, வேலை கிடைக்காத சூழ்நிலையில்தான் இருக்கிறார்கள். இந்த நிலையை மாற்றுவதற்காக, யார் யார் தங்களுடைய பெயரை வேலை வாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்து கொண்ட பிறகு, வேலை கிடைப்பதற்கான வயது வரம்பைக் கடந்திருக்கிறார்களோ. அவர்களுக்கு



சீக்கிரமாக வேலை கிடைக்க ஒரு சலுகையை கொடுக்கின்ற வகையில் ஒரு புது நடைமுறையை இந்த அரசாங்கம் மேற்கொள்ள வேண்டும். அதற்குத் தேவையான சட்டத் திருத்தங்களைச் செய்வதற்கு மத்திய அரசை அணுகி வற்புறுத்த வேண்டும் என்ற வேண்டுகோளை வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல நம்முடைய நாட்டில் இருக்கிற சமுதாயப் பிரச்னைகளில் ஒன்று வரதட்சணைக் கொடுமை. பெண்ணுக்கு 18 வயது ஆன உடனேயே, வரதட்சணை கொடுக்க முடியாத காரணத்தால் தன்னுடைய மகளை வீட்டிலேயே வைத்திருக்க வேண்டியது இருக்கிறதே என்ற எண்ணமும், வேதனையும் பெற்றவர்களுக்கும், வரதட்சணை கொடுப்பதற்கு வழி வகை இல்லாத காரணத்தால் இந்த வீட்டிலேயே முடங்கிக் கிடக்க வேண்டியிருக்கிறதே என்ற எண்ணமும், வேதனையும் அந்தப் பெண்ணுக்கும் தோன்றும் வகையில், நாட்டில் நிலைமை நிலவி வருகிறது.

நேற்றைய தினம் மாண்புமிகு உறுப்பினர் ஒருவர் பேசும்போது கவச குண்டலத்தோடு கர்ணன் பிறந்தான் என்று குறிப்பிட்டுச் சொன்னார். இன்றைக்குப் பெண் பிறந்தால், அது போல பொன்னோடும் பொருளோடும் பிறந்தால்தான் அவளுக்குத் திருமணம் நடைபெறும் என்ற நிலைமை இருந்து கொண்டிருக்கிறது. ஆகவே பொருள் இல்லாத குடும்பத்தில் பிறந்த சகோதரிகள் திருமணம் செய்து வாழ வழி இல்லாமல் கண்ணீர் விடுகிறார்கள். அந்த நிலைமையை மாற்ற வேண்டும் என்றால் அவர்களே பொருள் ஈட்டித்தான் திருமணம் செய்து கொள்ள வேண்டும் என்ற நிலைமை உருவாகியிருக்கின்றது. ஆகவே 18 வயதான பெண்களுக்குக் கட்டாயமாக வேலை வாய்ப்பு கொடுக்கப்பட வேண்டும் என்ற நிலையை மாண்புமிகு முதல்வர் அவர்கள் உருவாக்கி அவர்களுக்கு உதவ முன் வந்து நம்முடைய சகோதரிகளின் கண்ணீரைத் துடைப்பதற்கு ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல விவசாயிகள் பிரச்னை. விவசாயிகள் காலையில் எழுந்து கழனிக்குச் சென்று பயிர் செய்து, தானியம் விளைவித்து, விளைந்ததைக் களத்திற்குக் கொண்டு வந்து நெல்லாக ஆக்கி, சந்தைக்கு கொண்டு சென்று விற்று விட்டு திரும்பும் போது, ''கடனோடுதான் திரும்பி வந்தோம்,'' என்று கூறுகிற அளவுக்கு அவர்களுடைய விவசாயச் செலவுகள் அதிகமாகி, விளைவால் வரும் லாபம் குறைந்திருக்கிறது. விவசாயம் பெருகுவதும், தட்டுத் தடுமாறி குறைந்து போய் இருக்கிறது. விவசாயிகள் தங்கள் முதுகெலும்பு உடைந்து போய் இருக்கிறார்கள். விவசாயிகளின் முதுகெலும்பு உடைந்து போன காரணத்தால் விவசாயத் துறை இன்றைக்கு முதுகெலும்பு உடைந்த நிலைக்கு வந்துவிடுமோ என்ற அச்சம் கிராமப் பகுதிகளில் வந்திருக்கிறது. விவசாயிகள் மகிழ்ச்சியோடு இருந்தால்தான் நாட்டு மக்கள் மகிழ்வோடு இருக்க

[திரு. வை. பாலச்சந்திரன்] [1986 மார்ச் 21

முடியும் என்பதை இந்த அரசு மனதிலே கொண்டு விவசாயி
களுக்கு வருமானம் அதிகமாக வருகிற அளவில் ஒரு திட்டத்தை
உருவாக்க வேண்டும். ஒரு விவசாயி கழனிக்குச் சென்று காலையி
லிருந்து மாலை வரையில் வேலை செய்ய தேவையில்லை. ஒரு
நாளைக்கு சில மணி நேரம் வேலை செய்துவிட்டு வேறு வேலை
இல்லாமல் வீணாக நேரத்தைக் கழிக்கிற சூழ்நிலை இன்றைக்கு
இருக்கிறது. ஆகவே அவர்களுக்கு ஒரு நாளில் இரண்டு மணி
நேரம், மூன்று மணி நேரம் வேலை செய்வதற்கான வாய்ப்பைப்
பல்வேறு திட்டங்களின் மூலமாக இந்த அரசு உருவாக்கிக்
கொடுக்க வேண்டும். சிறு தொழில்களின் மூலமாக அல்லது
இதுபோன்ற தொழில்கள் மூலமாக அத்தகைய வாய்ப்பை
அவர்களுக்கு உருவாக்கிக் கொடுப்பதற்குக் கருணை
உள்ளத்தோடு அரசாங்கம் நல்ல பல திட்டங்களை உருவாக்க
வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதைப்போல என்னுடைய மாவட்டத்தில் நெசவாளர்கள்
தறி இருந்தாலும் நெய்வதற்கு நூல் இல்லை. நூல் இருந்
தாலும் நெய்கிற பொருட்களுக்கு உரிய விலை இல்லையென்ற
அளவிற்கு அவர்கள் இன்றைக்கு வாடி போயிருக்கிறார்கள்.
நெசவுத் தொழிலில் ஈடுபட்டிருக்கும் நெசவாளர்கள் தங்
களுடைய கண்ணீர் துடைக்கப்பட வேண்டுமென்று பல்வேறு
கோரிக்கைகளை அரசாங்கத்திற்கு வைத்து இன்றைக்கு
நம்முடைய அரசாங்கம் அவர்களுடைய கோரிக்கை
களைக் கருணையோடு பரிசிலனை செய்தாலும், அவர்களு
டைய துயரைப் போக்குகிற ஒரு நிலைமை உருவாகவில்லை.
ஆகவே நெசவாளர்களுடைய பிரச்சினையைப் போக்குவதற்கு
நம்முடைய அரசாங்கம் உரிய வழிவகைகளைக் காண
வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

சங்க இலக்கியங்களில் ''நாரை விடு தூது'' என்று ஒன்று
உண்டு. அதைப்போலத்தான் எங்களுடைய கன்னியாகுமரி மாவட்
டத்திலிருந்து நாரைகளாக எங்களை எங்கள் மாவட்டத்து மக்கள்
பாவித்து, எங்களைப் பார்த்து 'நாராய்', நாராய் செங்கால்
நாராய், நீங்கள் சென்னைக்கு சென்று அமைச்சர்களைச் சந்தித்து,
அதிகாரிகளைச் சந்தித்து இந்த மாவட்டத்திற்கு நல்ல பலதிட்டங்
களை வாங்கித்தர வேண்டுமென்று சொல்லி இங்கே அனுப்பி
இருக்கிறார்கள். நாங்கள் நாரைகளைப்போல எங்கள் மாவட்டத்
திலிருந்து வந்து உங்களைப் பார்த்து கேட்பதெல்லாம் எங்
களுடைய மாவட்டம் புறக்கணிக்கப்பட்ட மாவட்ட
மாக இருக்கிறது. அது பின்தங்கிய மாவட்டம் மட்டு
மல்ல, புறக்கணிக்கப்பட்ட மாவட்டமாக இருந்து கொண்
டிருக்கிறது என்பது மறுக்க முடியாத உண்மையாக இருக்
கிறது. ஆகவே, கலங்கிக் கொண்டிருக்கும் மாவட்டத்திற்குக்
கலங்கரை விளக்கம் போல நல்ல பல திட்டங்களைத் தாருங்கள்.



1986 மார்ச் 21] [திரு. வை. பாலச்சந்திரன்]

மாம்பழத்துறை அணைக்கட்டும் திட்டத்திற்கு பல கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டதாகச் சொல்லப்பட்டது. பல கோடி ரூபாய் செலவில் மாம்பழத்துறை அணைத் திட்டம் கொண்டு வரப்பட்டுள்ளதாக, ஏட்டில் கூறப்பட்டாலும் அந்தத் திட்டம் இன்றையவரையில் செயலில் கொண்டு வரப்படவில்லை. அந்தத் திட்டத்தை அரசாங்கம் விரைவில் கொண்டு வரவேண்டும். இந்த அரசாங்கத்தின் கருணைக் கண்கள் எங்களுடைய மாவட்டத்தின் மீது ஓராண்டு காலத்திற்குள்ளாவது பதிய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போல அரசாங்கத்திற்கும் அரசாங்க ஊழியர்களுக்கும் இடையில் தாய் சேய் உறவு இருக்க வேண்டும். அப்படி தாய் சேய் உறவு இருக்குமானால் நிர்வாகம் சிறப்பாக செம்மையாக நடைபெற முடியும். ஆனால் ஆசிரியர்கள் போராட்டம் நடைபெற்ற போது அவர்களுக்குத் தோள் கொடுக்க வேண்டுமென்ற துணை நிற்கவேண்டுமென்று தோழமை உணர்வோடு அவர்களுக்குத்தோள் கொடுத்த தலைமைச் செயலக ஊழியர்கள் 35 பேர்கள் தற்காலிகமாக வேலை நீக்கம் செய்யப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் மீது அரசாங்கம் கருணை கொள்ள வேண்டும். ஜனநாயகத்தில் போராடுவது என்பது இயற்கை. ஜனநாயகத்தில் போராடுபவர்களை நாம் மன்னிப்பு கேட்க வேண்டுமென்று சொல்வது பல்வேறு இயக்கங்களை நடத்துகிற நம்மைப் போன்றவர்களுக்கு அழகாக இருக்காது. ஒரு இயக்கத்தின் மூலமாக ஆட்சி நடத்தும் இந்த அரசாங்கத்திற்கு கூட போராடுபவர்களை மன்னிப்பு கேட்க வேண்டுமென்று கேட்பது அழகாக இருக்காது. எந்த இயக்கத்தைச் சேர்ந்தவர்களும் மன்னிப்பு கேட்கக் கூடாது என்ற இலக்கணமே இன்றைக்கு ஒரு பொது இலக்கணமாக ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது. ஆகவே அந்ததற்காலிக வேலை நீக்கம் செய்யப்பட்ட அந்த ஊழியர்கள் மன்னிப்பு கேட்கவேண்டுமென்பதில் இந்த அரசாங்கம் தீவிரம் காட்டாமல் அவர்கள் மீது கருணை காட்டி, ஜனநாயகத்தில் இவை எல்லாம் சகஜம் என்பதை உணர்ந்து தாய் சேய் உறவை அரசாங்கத்திற்கும் தலைமைச் செயலக ஊழியர்களுக்குமிடையே உருவாக்குவதற்காக நமது சர்க்கார் வேலை நீக்கம் செய்யப்பட்ட ஊழியர்களை உடனடியாக வேலைக்கு எடுக்க வேண்டு மென்று இந்து முன்னணி பேரியக்கத்தின் சார்பாக வற்புறுத்திக் கேட்க ஆசைப்படுகிறேன். அவர்களுடைய வேலை நீக்கத்தை ரத்துசெய்து அவர்களை உடனடியாக பணியமர்த்த வேண்டு மென்ற வேண்டுகோளை மீண்டும் என்னுடைய இந்து முன்னணி பேரியக்கத்தின் சார்பாக கேட்டுக் கொள்கிறேன்.

இன்றைக்குப் பாராளுமன்றத்தில் முஸ்லீம் பெண்களுடைய உரிமைகளைப் பறிக்கின்ற அளவிற்கு குற்ற விசாரணைமுறைச்
ட்ட இருத்தம் சட்டமுன்வடிவாக வந்திருக்கிறது. அதை எதிர்த்து
ந்தியாவில் இருக்கிற ஒரு சட்டமன்றத்தில்—அதனை வாபஸ்
ச றவேண்டுமென்று—தீர்மானம் கொண்டு வரப்பட்டு அது
இ

[திரு. வை. பாலச்சந்திரன்] [1986 மார்ச் 21

நிறைவேற்றப்பட்டிருக்கிறது. அதைப்போல பாராளுமன்றத்திலே கொண்டு வரப்பட்டிருக்கிற அந்த சட்டமுன்வடிவை திரும்பப் பெறப்பட வேண்டும் என்று நம்முடைய சட்டமன்றத்திலும் ஒரு தீர்மானம் கொண்டு வந்து அதை நிறைவேற்ற மத்திய அரசை வற்புறுத்த வேண்டுமென்று நான் என்னுடைய பேரியக்கத்தின் சார்பாக கேட்டுக் கொள்கிறேன்.

பல்வேறு திட்டங்களை இந்த அரசாங்கம் கொண்டு வந்தாலும் இந்த அரசாங்கம் அவைகளை நிறைவேற்றுகிறபோது திட்டங்களின் பலன்கள் மனநிறைவோடு மக்களுக்கு கிடைக்கிறதா என்றால் கிடையாது. போடப்படுகிற திட்டங்களின் பின்னாலே இருந்து கொண்டு, திரை மறைவிலிருந்து திட்டங்களின் பலனை தட்டிப் பறிக்கிற கூட்டம் இருக்கக் கூடுமென்ற சந்தேகம் நாட்டு மக்களுக்கு இருக்கிறது.

(பிற்பகல் 1-30)

அப்படித் திரைமறைவிலே நின்றுகொண்டு தீட்டப்படுகிற திட்டங்களுடைய பலன்களைத் தட்டிப் பறிக்கிற கூட்டம் யாராக இருந்தாலும் அதை இந்த அரசாங்கம் கண்டுபிடித்து, அவர்களைக் கண்காணிக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு அமைகிறேன். நன்றி வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, திங்கட்கிழமை (24-3-1986) காலை 9-00 மணிக்குப் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1-31 மணிக்கு ஒத்தி வைக்கப் பெற்றது.

## 5. பேரவைமுன் வைக்கப் பெற்ற ஏடுகள்.

### (அ) சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

36. தமிழ்நாடு கரும்பு பண்ணைக் கழகத்தின் 1978-79ஆம் ஆண்டிற்கான ஐந்தாவது ஆண்டறிக்கை [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்).

37. தமிழ்நாடு கரும்பு பண்ணைக் கழகத்தின் (1979-80 ஆம் ஆண்டிற்கான ஆறாவது ஆண்டறிக்கை (1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்).



1986 மார்ச் 21]

38. தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத்தின் 1984-85ஆம் ஆண்டிற்கான முப்பத்தாறாவது ஆண்டறிக்கை [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது]. (தமிழ்).

### (ஆ) அறிக்கைகள், அறிவிப்புகள் ஏனைய தாள்கள்.

32. உடுக்குறியிடப் பெறாத வினாக்களும், விடைகளும் (1 முதல் 100 வரை) (மூன்றாவது பட்டியல்).

## இணைப்பு.

(480ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிடாத வினா எண் 65 (2580) க்கான விடையைக் காண்க.)

ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்திற்கும் (1985-90) நடப்பு ஆண்டு திட்டத்திற்கும் (1985-86) மத்தியத் திட்டக் குழு பல்வேறு வளர்ச்சித் தலைப்பின்கீழ் ஒப்புதல் அளித்துள்ள திட்ட நிதி ஒதுக்கீடு பற்றிய விவரங்கள் கீழே கொடுக்கப் பட்டுள்ளன:—

| திட்ட வளர்ச்சித் தலைப்பு. | | ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்திற்கு (1985-90) ஒப்புதல் அளித்த நிதி ஒதுக்கீடு. | நடப்பு ஆண்டுத் திட்டத்திற்கு (1985-86) ஒப்புதல் அளித்த நிதி ஒதுக்கீடு. |
|---|---|---|---|
| (1) | | (2) | (3) |
| | | (ரூபாய் இலட்சத்தில்.) | |
| I. வேளாண்மையும் தொடர்பான பணிகளும்— | | | |
| 1. வேளாண்மை-பயிர் வளர்ப்பு | .. | 20,000 | 4,550 |
| 2. ஆராய்ச்சி-கல்வி | .. | 1,300 | 405 |
| 3. நிலச் சீர்திருத்தங்கள் | .. | 120 | 10 |
| 4. விற்பனை, பொருள்களைப் பாதுகாப்பாக வைத்தல், கிடங்கு வசதி. | .. | 1,000 | 25 |

| திட்ட வளர்ச்சித் தலைப்பு. | ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்திற்கு (1985–90) ஒப்புதல் அளித்த நிதி ஒதுக்கீடு. | நடப்பு ஆண்டுத் திட்டத்திற்கு (1985–86) ஒப்புதல் அளித்த நிதி ஒதுக்கீடு. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| | (ரூபாய் இலட்சத்தில்) | |
| I. வேளாண்மையும் தொடர்பான பணிகளும்—தொடர்ச்சி | | |
| 5. கிராம வளர்ச்சிக்கான சிறப்பு பகுதித் திட்டங்கள். | 18,150 | 2,700 |
| 6. சிறுபாசனம் .. | 6,500 | 905 |
| 7. மண்வளப் பாதுகாப்பும், நீர் வளப் பாதுகாப்பும். | 3,000 | 344 |
| 8. கால்நடை வளர்ப்பு .. | 3,000 | 315 |
| 9. பால் பண்ணை வளர்ச்சி .. | 500 | 30 |
| 10. மீனவம் .. | 2,400 | 209 |
| 11. காட்டுவளம் .. | 7,000 | 1,608 |
| 12. சமுதாய நல வளர்ச்சி .. | 14,050 | 2,650 |
| 13. வேளாண்மை நிதியுதவி நிறுவனங்களின் முதலீடு. | 510 | 50 |
| 14. உணவு .. | 2,000 | 337 |
| மொத்தம்-I வேளாண்மையும் தொடர்பான பணிகளும். | 79,530 | 14,138 |
| II. 15. கூட்டுறவு .. | 3,500 | 261 |
| III. பாசன, வெள்ளக்கட்டுப்பாடு, மின்விசைத் திட்டங்கள்— | | |
| 16. நீர்வள மேம்பாடு—பாசனம் வெள்ளக் கட்டுப்பாடு. | 22,500 | 5,335 |
| 17. மின்விசை மேம்பாடு .. | 2,00,000 | 30,000 |
| மொத்தம்—III. பாசன, வெள்ளக் கட்டுப்பாடு, மின்விசைத் திட்டங்கள். | 2,22,500 | 35,335 |



| திட்ட வளர்ச்சித் தலைப்பு. | ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்திற்கு (1985–90) ஒப்புதல் அளித்த நிதி ஒதுக்கீடு. | நடப்பு ஆண்டுத் திட்டத்திற்கு (1985–86) ஒப்புதல் அளித்த நிதி ஒதுக்கீடு. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| | (ரூபாய் இலட்சத்தில்). | |
| IV. தொழிலும் கனிப் பொருள்களும்— | | |
| 18. நடுத்தரத் தொழில்களும் பெருந் தொழில்களும். | 14,500 | 2,206 |
| 19. கிராமத் தொழில்களும், சிறு தொழில்களும். | 13,000 | 1,842 |
| 20. சுரங்கம் வெட்டுதலும், உலோக வியல் தொழில்களும். | 1,000 | 200 |
| மொத்தம்—IV. தொழிலும் கனிப் பொருள்களும். | 28,500 | 4,248 |
| V. போக்குவரத்தும், சாலைகளும்— | | |
| 21. துறைமுகங்களும், கலங்கரை விளக்கங்களும், கப்பல் போக்குவரத்தும். | 1,000 | 149 |
| 22. சாலைகளும், பாலங்களும் .. | 13,000 | 2,350 |
| 23. சாலைப் போக்குவரத்தும் உள்நாட்டு நீர்வழிப்போக்குவரத்தும் | 13,700 | 2,307 |
| 24. சுற்றுலா .. | 500 | 17 |
| மொத்தம்—V. போக்குவரத்தும் சாலைகளும். | 28,200 | 4,823 |
| VI. சமூக-சமுதாய நலப் பணிகள்— | | |
| 25. பொதுக் கல்வி .. | 28,000 | 4,839 |
| 26. கலையும் பண்பாடும் .. | 640 | 115 |
| 27. தொழில் நுட்பக் கல்வி .. | 2,125 | 516 |
| 28. அறிவியல் பணியும் ஆராய்ச்சியும் | 2,370 | 60 |
| 29. மருத்துவம் .. | .. | .. |
| 30. பொதுச் சுகாதாரமும் துப்புரவும் | 15,000 | 2,169 |
| 31. கழிவு நீர் அகற்றலும் குடிநீர் வழங்கலும். | 60,000 | 10,000 |

[1986 மார்ச் 21

| திட்ட வளர்ச்சித் தலைப்பு. | ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்திற்கு (1985–90) ஒப்புதல் அளித்த நிதி ஒதுக்கீடு. | நடப்பு ஆண்டுத் திட்டத்திற்கு (1985–86) ஒப்புதல் அளித்த நிதி ஒதுக்கீடு. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| | (ரூபாய் இலட்சத்தில்) | |
| VI. சமூக-சமுதாய நலபணிகள்—தொடர்ச்சி. | | |
| 32. வீட்டு வசதி .. | 16,500 | 3,317 |
| 33. நகர்ப்பகுதி வளர்ச்சி .. | 16,000 | 3,000 |
| 34. செய்தி-விளம்பரம் .. | 300 | 17 |
| 35. தொழிலாளரும் தொழிலாளர் நலனும். | 1,500 | 399 |
| 36. ஆதிதிராவிடர், பழங்குடியினர் ஏனைய பின்தங்கிய வகுப்பினர் நலன். | 10,500 | 1,412 |
| 37. சமூக நலன் .. | 3,000 | 400 |
| 38. சத்துணவு .. | 54,000 | 10,337 |
| 39. ஏனைய சமூக—சமுதாய நலப் பணிகள். | .. | 100 |
| மொத்தம்—VI. சமூக சமுதாய நலப் பணிகள். | 209,935 | 36,681 |
| VII. பொருளாதாரப் பணிகள்— | | |
| 40. தலைமைச் செயலகம்—பொருளாதாரப் பணிகள் | 100 | 4 |
| 41. பொருளாதார ஆலோசனையும் புள்ளி விவரம். | 300 | 12 |
| மொத்தம் VII. பொருளாதாரப் பணிகள். | 400 | 1[illegible] |
| VIII. பொதுவான பணிகள்— | | |
| 42. பொதுப் பணிகள் .. | 2,350 | 443 |
| 43. எழுதுபொருள்-அச்சுத்துறை .. | 85 | 55 |
| மொத்தம் VIII. பொதுவான பணிகள். | 2,435 | 498 |
| பெரு மொத்தம் .. | 5,75,000 | 96,000 |

LIST OF AGENTS FOR THE SALE OF
TAMIL NADU GOVERNMENT PUBLICATIONS.

IN MADRAS CITY.

1 Account Test Institute, Egmore, Madras-8.
2 The City Book Company, Madras-4.
3 Higginbothams (Private) Limited, Madras-2.
4 P. Varadachary and Company, Madras-1.
5 C. Subbiah Chetty and Company, Madras-5.
6 The Universal Book House, Moore Market, Madras-3.
7 C. Sitharaman and Company, Madras-14.
8 Mohan Pathippagam and Book Depot, Madras-5.
9 C. Venkatesan Chetty and Company, No. 8-C, Pycrofts Road, Madras-5.
10 The South India Saiva Siddhanta Works Publishing Society (Tirunelveli) Limited Madras-1.
11 The Sangam Publishers, No. 11, Sunkurama Chetty Street, Madras-1.
12 New Century Book House (Private) Limited, Madras-2.
13 Kalaivani Book Centre, No. 1, Ponniamman Koil Street, Egmore, Madras-8.

IN MOFUSSIL OF TAMIL NADU.

1 A. Venkatasubban & Company, Vellore (North Arcot District).
2 Bharathamatha Book Depot, Thanjavur (Tanjore District).
3 P. V. Nathan Company, Kumbakonam (Tanjore District).
4 Appar Book Stall, Thanjavur.
5 P. N. Swaminathan and Company, Bazaar Street, Pudukkottai.
6 Palaniappa Bros., Tiruchirappalli-2.
7 S. R. Subramania Pillai, Tirunelveli Junction.
8 B. Aruldoss, Villupuram (South Arcot District).
9 Vasantham Stores, Booksellers, 9/31, Cross Cut Road, Coimbatore-12.
10 Mercury Book Company, 20, Karuppa Gounder Street, Coimbatore-1.
11 S. M. Jegannatham Book House, 35, Nandhi Koil Street, Tiruchirappalli.
12 Ganesh Stores, South Car Street, Sivakasi.
13 Mary Martin, Booksellers, Kottagiri (The Nilgiris).
14 A. K. Chandriah Chettiar & Sons, Salem-1.
15 Parameswari Book Shop, No. 45D, Old Market Street, Salem.
16 Meenakshi Pathipagam, Pudukkottai.
17 K. V. Narayana Iyer & Sons, Dindigul, Madurai District.
18 Jayakumari Stores, Nagercoil (Kanyakumari District).
19 Baby Stores, Booksellers, Villupuram (South Arcot District).
20 Dinamani Stores, No. 3/1, Old Post Office Road, Coimbatore-18.
21 Kumaran Book Depot, Booksellers, Erode-1.
22 Vela Book Company, No. A, Annaji Rao Street, Erode-1.
23 Radhamani Stores, 6-A, Raja Street, Coimbatore-1.
24 Ajantha Book Centre, Salem-1.
25 Sri Vidya, 63, Tennure High Road, Tiruchirappalli-2.
26 Sri Ramavilas Book Shop, 90, Amman Sannathi, Madras-1.

IN OTHER STATES.

1 Jain Book Agency, New Delhi.
2 Inter National Book House, Trivandrum.
3 The Book Syndicate, Hyderabad-1.
4 Labour Law Publications, Hyderabad.
5 Puthaghalayam, Pondicherry.
6 Prabu Book Service, Gurgaon, Haryana.
7 K. P. Bagohi & Company, 286, R.B. Gandhi Street, Calcutta-11.

© Published under Rules 234 and 237 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the Director of Stationery and Printing, Madras.

வெளியீடு 28-10-1986]

[Issued 28-10-1986

2907

BA

806/87

9923
29 மே 1987

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
# OFFICIAL REPORT

திங்கட்கிழமை, மார்ச் 24, 1986 - தொகுதி 18 எண் 5

Monday, 24th March 1986 - Volume 18 No. 5

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை - 600 009
Legislative Assembly, Secretariat, Fort St. George, Madras - 600009

Price Rs. 3-00

விலை ரூ. 3-00]

## உள்ளடக்கம்.

**24–3–1986.**


பக்கங்கள்.

1 வினாக்கள்-விடைகள்—

உடுக்குறியிட்ட வினாக்கள் .. .. .. 583—619

2 தகவல் கோரல்—

(அ) அரசு சார்பில் நடைபெறும் விழா அழைப்பிதழில் அந்தந்தத் தொகுதி உறுப்பினர் பெயரும் சேர்க்கப்படுதல். 620—627

(ஆ) சிறுபான்மை மொழிப் பள்ளிகளில் படித்து வரும் மாணவர்களுக்கான வேலைவாய்ப்பு. 627—628

3 கவன ஈர்ப்பு—

அண்ணா மாவட்டம், வேடசந்தூர் வட்டத்தில் நிலவும் வறட்சி நிலைமை குறித்து. 286—631

4 அரசினர் சட்ட முன்வடிவு—

தமிழ்நாடு சட்டமன்ற (தகவின்மையைத் தடுத்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு, 1986. 631

5 முன்பண மானியக் கோரிக்கைகள், 1986–87 .. 631

6 இறுதித் துணை நிதி அறிக்கை, 1985–86.. .. 632—634

7 அறிவிப்புகள்—

(அ) மானியக் கோரிக்கைகளுக்கு வெட்டுத் தீர்மானங்கள் கொடுப்பது. 634

(ஆ) பேரவையில் திரு. அ. ரகுமான்கான் கல்வித் துறை பற்றி முன்னறிவிப்பின்றி குறிப்பிட்ட ஒரு குற்றச்சாட்டு குறித்து. 640—642

(இ) நடவடிக்கைக் குறிப்பிலிருந்து நீக்கப்பெறும் பகுதி குறித்து. 702

பக்கங்கள்.

8 வரவு-செலவுத் திட்டம், 1986-87, பொது விவாதம் 634—640
—தொடர்ச்சி. 642—702

திரு. ஈ. வே. கி. ச. இளங்கோவன் .. .. 634—640

*திரு. சைதை சா. துரைசாமி .. .. 640—654

திரு. எப். எம். இராசரத்தினம் .. .. 655—665

திரு. ஜி. ஆனந்த கிருஷ்ணா .. .. 665—670

திரு. கோ. வீரய்யன் .. .. .. .. 670—676

*திரு. த. பழனி .. .. .. .. 676—685

திரு. எஸ். ரெத்தினராஜ் .. .. .. 685—693

திரு. ஆர். எஸ். ஆறுமுகம் .. .. .. 693—702

9 பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள் .. 703

2907

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

1986 மார்ச் 24, திங்கட் கிழமை

பங்குனி 10, குரோதன, திருவள்ளுவர் ஆண்டு-2017.

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்ட மன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9-00 மணியளவில், மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. பி. எச். பாண்டியன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :**

'' நன்றாற்ற லுள்ளுந் தவறுண்டு அவரவர்
பண்பறிந் தாற்றாக் கடை ''.

அவரவருடைய இயல்புகளை அறிந்து அவரவர்க்குப் பொருந்துமாறு செய்யாவிட்டால், நன்மை செய்வதிலும் தவறு உண்டாகும்.

## 1. வினாக்கள்—விடைகள்

### உடுக்குறியிட்ட வினாக்கள்.

### அரசு ஊழியர்களுக்கான துறை விசாரணை முறை.

238—(*வினா எண் 36)—திரு. டி. ஆர். வேங்கடரமணன் : மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருவள்ளுவர் போக்குவரத்துக் கழக செங்கோட்டைக் கிளை மேலாளர் துறை விசாரணை (Domestic Enquiry) தொடர்பாக கொலை செய்யப்பட்டதைக் கருத்தில் கொண்டு தமிழக அரசு அனைத்து அரசு ஊழியர்களுக்கான உள்துறை விசாரணையை (Domestic Enquiry) தனி அமைப்பின் மூலம் விரைவாக விசாரிக்க நடவடிக்கை எடுக்கும் செயற் குறிப்பு உள்ளதா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** இல்லை.

**திரு. டி. ஆர். வேங்கடரமணன் :** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மத்திய அரசாங்கத்தினுடைய பணியாளர்களைப் பொறுத்த வழக்குகளை விசாரிப்பதற்காகத் தனியாக ஒரு டிரிப்யூனல் அமைக்கப்பட்டிருக்கிறது. மாநில அரசினுடைய பொதுத் துறை நிறுவனங்களும் மற்றும் அதிகாரிகளும் இந்த டொமஸ்டிக் என்கொயரி என்று சொல்லப்படுகிற

உள்துறை விசாரணையிலே ஒரு தலைபட்சமாக சில மேல் அதிகாரிகள் நடந்து கொள்கிறார்கள் என்ற ஒரு பரவலான எண்ணம் இருக்கிறது. வழக்கறிஞர் என்ற முறையில் நானும் இதை அறிவேன். அதனுடைய உச்ச கட்டமாகத்தான், விசாரணை நடத்திக் கொண்டிருந்த அதிகாரி கொலை செய்யப்பட்ட துக்ககரமான ஒரு சம்பவம் என்னுடைய தொகுதியிலே நடைபெற்றது. இதைக் கருத்தில் கொண்டு இதுபோன்ற விசாரணைகளைத் தனியான இன்டிபெண்டன்ட் அத்தாரிட்டி மூலமாக விசாரிப்பதற்குத் தமிழக அரசு இனிமேலாவது ஏற்பாடு செய்ய முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, சாதாரணமாக, அரசு அதிகாரிகள் மீதும் பணியாளர்கள் மீதும் குற்றச்சாட்டுக்கள், மற்றவைகள வருகின்றபோது அந்தந்தத் துறையைச் சார்ந்த அதிகாரிகள் அதை விசாரித்து அவர்கள் தண்டனை கொடுக்கின்ற அளவுக்கு, சிறுசிறு தண்டனைகள் கொடுக்கின்ற அளவுக்கு விசாரணைகள் உள் துறையைப் பொறுத்தவரையில இருக்கத்தான் செய்யும். அந்தந்த துறைகளைச் சேர்ந்தவர்கள் விசாரணை செய்து கொண்டு வருகிறார்கள். ஆனால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுவது போன்று சிலபல சமயங்களிலே அரசாங்க அதிகாரிகள் தங்களுக்கு அநீதி இழைக்கப்பட்டு விட்டது என்று சொல்லி உயர் நீதிமன்றத்திலும், உச்ச நீதி மன்றத்திலும் வழக்குகள் தொடுக்கிறார்கள். அப்படி தொடுக்கின்ற வழக்குகளை, அதற்கென்று ஒரு தனி டிரிப்யூனல் வைத்து அதிலேதான் தொடுக்க வேண்டுமே தவிர. வழக்கு மன்றத்திலே தொடுக்கக் கூடாது என்று ஒரு ஏற்பாடு இருக்கிறது. அந்த ஏற்பாட்டைத்தான் தமிழக அரசு கொண்டு வரலாமா என்பது பற்றி ஆலோசனை செய்து வருகிறது ; அது வேறு. அவர்கள் போடுகின்ற வழக்குகளை உயர்நீதி மன்றத்திலே போடுவதற்குப் பதிலாக—காலதாமதம் ஏற்படுவதன் காரணமாக—அதற்கென்று ஒரு தனி டிரிப்யூனல் வைத்தால் அந்த டிரிப்யூனலில் மட்டும்தான் போட வேண்டும். அவர்கள் மட்டுமே விசாரித்து சொல்ல வேண்டுமென்பது வேறு. அதிகாரிகள், பணியாளர்கள் மீது சொல்லப்படுகின்ற குற்றச்சாட்டுகள் மற்றவைகளை டிபார்ட்மென்டே விசாரிக்கலாம் என்று வருகின்ற போது அந்த அந்த டிபார்ட்மெண்டில் அதற்கென விதிமுறைகள் மற்றவைகள் எல்லாம் இருக்கின்றன. அவர்களிடத்திலே கொடுக்க வேண்டுமென்றும், அவர்களுக்கு வாய்ப்பு அளிக்க வேண்டுமென்றும், நேரடியாக சாட்சியம் சொல்ல விரும்புகிறார்களா அல்லது எழுத்து மூலமாக தருகிறார்களா அல்லது விசாரணை வேண்டுமா இல்லையா என்றெல்லாம் புரொசீஜர்கள் வைத்திருக்கிறார்கள். அவை தான்



டிபார்ட்மெண்டுக்குள்ளாக, துறைகளுக்குள்ளாக நடைபெறுகின்ற விசாரணைகள் ஆகும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுவது வழக்குத் தொடுக்கப்படுகின்ற தன்மையைப் பொறுத்ததாகும். ஆக உள் விசாரணைகளையெல்லாம் கொண்டுபோய் கோர்ட்டிலே வைப்பது சரியாக இராது.

**திரு. டி. ஆர். வேங்கடரமணன் :** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நான் அப்பீலைப் பற்றி கேட்கவில்லை. உள் துறை விசாரணையைப்பற்றித் தான் கேட்டேன். அதற்காக தனி நீதிமன்றம் என்ற கருத்திலே சொல்லவில்லை. இப்போது கூட சேரன் போக்குவரத்துக் கழகத்திலே டொமஸ்டிக் என்கொயரி நடத்துவதற்காக ஒரு ஓய்வு பெற்ற நீதிபதியை—மாவட்ட அளவிலே உள்ள நீதிபதியை—வைத்துக் கொண்டு டொமஸ்டிக் என்கொயரியை நடத்துகின்றனர். என்னுடைய கேள்வியின் நோக்கமே. இந்த டொமஸ்டிக் என்கொயரி என்ற காரணத்தை வைத்துக் கொண்டு மேல் அதிகாரிகள் தங்களுக்குப் பிடிக்காத கீழ் அதிகாரிகளை ஹரஸ்மெண்ட் செய்து கொண்டிருக்கிற துர்பாக்கியமான நிலைமையை நீக்குவதற்காகவும், டொமஸ்டிக் என்கொயரி என்பது சட்டப்படி ஃபேர் ஆகவும், நியாயமாகவும் நடப்பதற்காகவும்தான். அந்த டொமஸ்டிக் என்கொயரிகளை நடத்துகின்றவர்கள் குற்றம் சாட்டுகின்றவர்கள்தான் நீதிபதியாக இருக்கின்ற சூழ்நிலை இருப்பதன் காரணத்தாலே அந்த டொமஸ்டிக் என்கொயரியை மட்டும் தனிப்பட்ட ஒரு இன்டிபென்டண்ட் அத்தாரிட்டி மூலமாக ஒரு துறைக்கென்றோ அல்லது தமிழகத்தில் மாவட்ட அளவிலே ஒரு ரிடையர்ட் டிஸ்டிரிக்ட் ஜட்ஜோ அல்லது டிஸ்டிரிக்ட் ஜட்ஜையோ வைத்து டொமஸ்டிக் என்கொயரியை நடத்த அரசு முன்வருமா என்பதுதான் என்னுடைய கேள்வி. அதுபற்றி அமைச்சரவர்கள்—ஏனென்று கேட்டால் நான் மத்திய அரசாங்கம் வைத்து இருக்கின்ற அப்பீல் வழக்குகளை ஹைகோர்ட்டிலே போடுவதற்காக தனி நீதிமன்றம் அமைப்பதையெல்லாம் நான் கம்பியூஸ் செய்து கொண்டு கேட்கவில்லை—தயவு செய்து விளக்க வேண்டுமென்று கேட்டு கொள்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக அரசின் அனைத்து 'ஊழியர்களைப் பொறுத்த வரையில் உள்துறை விசாரணை 'டொமஸ்டிக் என்கொயரி' என்று தனியாக இப்போது எதுவும் இல்லை. தமிழக அரசின் ஊழியர்களைப் பொறுத்த வரையில் ஒழுங்கு நடவடிக்கை மேற்கொண்டு அதன் விளைவாக வழங்கப்படும் தண்டனைகள் குறித்து தமிழக அரசு பணியாள் பாகுபாடு கட்டுப்பாடு மேல்முறையீடு விதி 8 இல் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்தத் தண்டனையைச் செயல்படுத்துவதற்கு முன்பு கடைபிடிக்க வேண்டிய நடைமுறை பற்றி தமிழ்நாடு அரசின் பணி

யாளர் பாகுபாடு கட்டுப்பாடு மேல் முறையீடு விதி 17 இல் வகை செய்யப்பட்டுள்ளது. விதி 17 (அ) மற்றும் (ஆ) இவற்றை விதி 8 இல் குறிப்பிடப்பட்டுள்ள தன்மையில் பாகுபாடு செய்யப்பட்டுள்ளது. இந்தத் தண்டனைகளைச் செயற்படுத்து வதற்கு முன்பு கடைபிடிக்க வேண்டிய நடைமுறை பற்று கூறப்பட்டுள்ளது. ஒழுங்கு நடவடிக்கைகளில் சம்பந்தப்பட்ட அதிகாரம் பெற்ற அதிகாரி, அரசு அதிகாரி விதி 17 (அ)—இன் கீழ் ஒரு அரசு ஊழியரின்மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப் படவேண்டும் என்று முடிவு செய்வாராயின் அந்தப் பணியாளர் மீது குற்றச்சாட்டு சாட்டப்படுவதற்கான காரணங்களைத் திட்டவட்டமான குற்றச்சாட்டாகவோ அல்லது குற்றச் சாட்டுகளாகவோ எழுத்து வடிவத்திலே கொடுத்து அவரிட மிருந்து விளக்கம் கேட்கும்போது அவர் தனது தற்காப்பின் நிமித்தமாக எழுத்து மூலம் வாக்குமூலம் ஒன்றை நியாயமான காலத்திற்குள் தாக்கல் செய்யவும், நேரில் சமாதானம் தெரி விக்கவும் விரும்புகிறாரா அல்லது நேரில் வாய்மொழி மூலம் விசாரணை செய்யப்பட வேண்டும் என்று விரும்புகிறாரா என் பதைத் தெரிவிக்க வேண்டும் என்று கேட்க வேண்டும். அத் தகைய வாய்மொழி விசாரணையைக் குற்றம் சாட்டப்பட்டவர் விரும்புகிறார் என்றால் அல்லது அதற்கு சம்பந்தப்பட்ட அலுவலர் விசாரணை நடத்தப்பட கட்டளை இடுவாராயின் விசாரணை நடத்த வேண்டும் என்ற முறையில்தான் ஒழுங்கு நடவடிக்கையைப் பொறுத்தவரையில் இந்த நடைமுறை வைக்கப்பட்டு இருக்கிறது.

கிரிமினல் குற்றம் வருமானால் அது வழக்கு மன்றத்தில் தொடுத்து வருகின்ற சூழ்நிலை இருக்கிறது. கிரிமினல் குற்றங் களை எல்லாம் விசாரிக்கப்படுகின்ற தன்மைகள் அதிகாரி களுக்குத் தரப்படுவது இல்லை. ஒழுங்கு நடவடிக்கை எடுக்கலாம், விசாரித்து அவர்கள்மீது தீர்ப்பு அளிக்கலாம் என்று இருக்கிறது. சில சமயங்களில் வழக்கு மன்றங்களுக்குப் போகும்போதுகூட முறைப்படி டிபார்ட்மெண்டில் என்கொயரி நடந்து விட்டதா ? அது நடந்து முடிந்த பிறகு வந்தால் இதுபற்றி யோசிக்கலாம் என்று கூட சிலபல வழக்குகளைத் தள்ளுபடி செய்து இருக் கிறார்கள். ஆகவே, இந்தக் கட்டுப்பாடு விதி 17 (அ) மற்றும் (ஆ) இன் கீழ் விசாரணைகள் நடைப்பெற்று வருகின்றன.

திரு. கு. சுப்பராயன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக டொமஸ்டிக் என்கொயரியில் கால தாமதம் ஏற்பட்டு நிர்வாகத்திற்கு ஆதரவாக வழங்குகின்ற அநீதி நிறைந்த தீர்ப்புகள்தான் தொழிலாளர்களுக்கு ஆத்திரம் ஊட்டுகிறது. எனவே குற்ற உணர்வு தூண்டுகிற, குற்றத் திற்குக் காரணமாக இருக்கின்ற அத்தகைய ஆத்திரம் ஊட்டு கிற நடவடிக்கையைத் தடுக்க அரசு ஏதேனும் நடவடிக்கை எடுக்க முன்வருமா என அறிய விரும்புகிறேன்.





மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காலதாமதம் ஏற்படுகிறது அதை நீக்க வேண்டும் என்பதை நான் ஒத்துக் கொள்கிறேன். சாதாரணமாக அதில் மேல்முறையீடு எல்லாம் வைத்து இருக் கிறார்கள். அதற்கு மேம்பட்ட முறையீடும் இருக்கிறது. கடைசியாக அமைச்சர்களுக்கும் வருகிறது, அரசு அளவிலும் வந்து சேருகிறது. ஆக அதற்கான வழிவகைகள் எல்லாம் இருக் கிற காரணத்தால் ஒருவர் தீர்ப்பே முடிந்த தீர்ப்பு என்று ஆகாது. ஆக அதற்குப் பிறகு தேர்வாணைக் குழுவைக் கலந்து முடிவு செய்து அவர்கள் ஒத்து கொண்டால் அதற்குப் பிறகு தான் சிலபல தண்டனைகளை நிறைவேற்றுகின்ற கட்டளைகள் இடப்படுகின்றன.

திரு. வி. பி. சிந்தன் : மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்தில் நடைபெற்ற ஒரு நிகழ்ச்சியைப்பற்றி இந்தக் கேள்வி எழுகிறது. அரசு போக்கு வரத்து ஊழியர்கள்மீது விசாரணை தொழில் தகராறு சட்டத் தின் அடிப்படையில்தான் நடைபெறுகிறதே தவிர, அரசு ஊழியர்களுக்கான சட்டத்தின் அடிப்படையில் நடைபெற வில்லை. இந்த அரசு போக்குவரத்துக் கழகங்களில் நடை பெற்ற ஏராளமான விசாரணைகளில் வழங்கப்பட்ட தீர்ப்புகள் தவறானவை என்று சென்னை உயர்நீதிமன்றமும், டெல்லி உச்ச நீதிமன்றமும் தீர்ப்புகள் வழங்கியிருக்கின்றன. இவற்றை எல்லாம் கவனத்தில் எடுத்துக் கொண்டு அங்கே முறையான விசாரணை நடப்பதற்கு டொமஸ்டிக் என்கொயரி நடப்ப தற்கு வழிவகையை அரசு செய்யுமா என அறிய விரும்பு கிறேன்]

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழிலாளர்களைப் பொறுத்தவரையில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுவது போன்று அதற்கு என்று தனியான சட்டம், விதிமுறைகள், கோர்ட்டுகள் எல்லாம் இருக்கின்றன. அரசு ஊழியர்கள், அரசு பணியாளர்கள், மேலாளர்கள், மேனேஜர்கள் என்று அரசின் சார்பாக நியமிக்கப்பட்டவர்களைப் பொறுத்து எந்த ஒழுங்கு நடவடிக்கை எடுப்பது, அதை எப்படி விசாரிப்பது என்பது குறித்துதான் அது அமைகிறது. ஆகவே, இதற்கு என்று தனி யாக—அந்த அந்த டிபார்ட்மெண்டே விசாரிக்காமல்—ஒரு கோர்ட் அமைப்பது என்பது இதுவரையில் நடைமுறையில் கடை பிடிக்க முடியாமல் இருக்கிறது. ஆகவே அவர்களுக்குத் தீர்ப்பு கிடைக்கவில்லையென்றால் மேலே போகலாம். மேலேயும் அவர் களுக்குத் தீர்ப்புக் கிடைக்கவில்லை என்றால் உயர்நீதி மன்றம் அல்லது உச்சநீதி மன்றம் செல்வதற்கு வழிவகைகள் இருக் கின்றன.

[1986 மார்ச் 24

திரு. ஆர். ரெங்கசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, டிபார்ட்மெண்டல் என்கொயரி, டொமஸ்டிக் என்கொயரி என்ற இரண்டும் ஒன்றுதான். சார்ஜ் கொடுக்கிறார்கள், எக்ஸ்பிளநேஷன் வாங்குகிறார்கள். அப்படி வாங்கிய பிறகு டிபார்ட்மெண்டல் என்கொயரி, டொமஸ்டிக் என்கொயரி போடுகிறார்கள். இந்த என்கொயரியை அந்த கன்சர்ண்ட் ஆபீஸர்தான் செய்கிறார். சார்ஜ் சீட்டும் அவர்தான் போடுகிறார். என்கொயரியும் அவர்தான் செய்கிறார். ஆகவே இதில் சிக்கல் இருக்கிறது. ஆகவே சார்ஜ் போடுகிற அந்த சம்பந்தப்பட்ட ஆபீஸர் என்கொயரி செய்வதைவிட வெளி ஆள். அதாவது ஜுடிஷயல் ஆபீஸர் அல்லது வேறு வெளி ஆள் வந்து விசாரணை செய்தால் நியாயமாக இருக்கும். அந்த அதிகாரிகளுக்கும் பாதுகாப்பு இருக்கும். ஆகவே, இந்த அப்பீல் என்று எல்லாம் கன்பியூஸ் செய்யாமல் நேரடியாக டிபார்ட்மெண்டல் என்கொயரி, டொமஸ்டிக் என்கொயரியைப் பொறுத்த வரையில் இந்த சம்பந்தப்பட்ட ஆபீசர் இல்லாமல் வேறு டிபார்ட்மெண்ட் மூலமாக என்கொயரி செய்யலாம். அப்படிப்பட்ட இன்டிபென்டன்டு என்கொயரி அவசியம். ஆகவே அப்படி வேறு ஆட்கள் மூலம் விசாரணை நடத்த அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 9-10)

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டதைப் போன்று அதிகாரிகளோ அல்லது மேலாளர்களோ ஊழியர்கள்மீது, மற்றவர்கள்மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கிற அடிப்படையிலே சார்ஜ்ஷீட் போடுவார்களானால் மறுபடியும் நியாயம் வழங்குகிற தன்மை அவர்களிடத்திலேயே விடப்படுவதில்லை. யார் சார்ஜ்ஷீட் போடுகிறார்களோ அவர்கள் விசாரிக்காமல் அவர்களுக்கு மேலே உள்ள அதிகாரிகள் தான்..

திரு. ஆர். ரெங்கசாமி : அவர்களே சார்ஜ்ஷீட் போட்டு அவர்களே என்குயரி நடத்துகிறார்கள்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : சார்ஜ்ஷீட் போடுகிறவர்களே என்குயரி செய்வது என்றால் நியாயம் கிடைக்கக்கூடிய நிலைமை இருக்காது. மாண்புமிகு உறுப்பினர் கூறுவது போன்று அதிலே ஏதாவது அனாமலி இருக்குமானால் அதைப் பற்றி விசாரித்து தக்க நடவடிக்கை எடுக்கலாம்.



1986 மார்ச் 24]

சங்கராபுரத்தைத் தாலுக்காலாக மாற்றல்.

239—(*வினா எண். 5047)—திரு. கோ. கலிதீர்த்தான் : மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சங்கராபுரத்தைத் தாலுக்காவாக மாற்றும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது செயல்படுத்தப்படும் ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) மற்றும் (ஆ) : இது குறித்த செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. கோ. கலிதீர்த்தான் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியிலே கள்ளக்குறிச்சி வட்டத்திலே சங்கராபுரம் பகுதியிலே ஏறத்தாழ 350 கிராமங்கள் இருக்கின்றன. அந்தக் கிராமங்களிலே உள்ள மக்கள் தாலுகா அலுவலகத்திற்குச் சென்று தங்களுக்கு வேண்டிய காரியங்களைச் செய்வதற்கு தற்போது மிகவும் சிரமமாக இருக்கிறது. அதற்காகவும் நிர்வாகக் குறைபாடுகளை நீக்குவதற்காகவும் உடனடியாக அந்தத் தாலுகாவைத் தனியாகப் பிரித்துக் கொடுப்பதற்கு அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கள்ளக்குறிச்சி மிகப் பெரிதாக இருப்பதன் காரணமாகவும் மாண்புமிகு உறுப்பினர் கூறுவது போன்று பரந்த இடத்திலே இருப்பதாலும் அங்கே உள்ள மக்கள் தங்களுடைய பணிகளை ஆற்றிக் கொள்வதற்கு வசதியாக இருக்கும் என்பதன் காரணமாகவும் அதைப் பிரிக்க வேண்டுமென்ற செயற்குறிப்பு பரிசீலனையில் இருந்து வருகிறது. வருவாய்த் துறை ஆணையர் அவர்கள் அந்தச் செயற்குறிப்பை அரசுக்கு அனுப்பியுள்ளார்கள். அரசு அதைப் பற்றி ஆராய்ந்த பிறகு விரைவிலே முடிவு செய்யும்.

திரு. கோ. கலிதீர்த்தான் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அது அரசின் பரிசீலனையில் உள்ளதாகக் கூறியிருக்கிறார்கள். இப்போது அங்கே நிலைமை மிகவும் சிரமமாக இருக்கிற காரணத்தினால் நடப்பு ஆண்டிலேயே நிர்வாகத்தின் வசதிகளை அனுசரித்து உடனடியாக அதைப் பிரித்துக் கொடுக்க அரசு முன்வருமா ?

[1986 மார்ச் 24

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆய்வை நடத்தி இந்த ஆண்டே முடிவு செய்கின்ற ஒரு சூழ்நிலை ஏற்பட்டு விடுமானால் இந்த ஆண்டே நடைமுறைப்படுத்த முயற்சிகளை எடுத்துக் கொள்ளலாம். ஒரு புதிய வட்டத்தை ஏற்படுத்துகிறபோது அரசுக்கு 11 இலட்சத்து 63 ஆயிரம் ரூபாய் கூடுதலாகச் செலவாகும். இதைத் தவிர அங்கே செய்யப்பட வேண்டிய பல்வேறு வகையான வசதி வாய்ப்புக்களுக்காக 35 இலட்ச ரூபாய்க்குமேல் செலவாகும். இவற்றையெல்லாம் கணக்கிலே எடுத்துக் கொண்டு தான் முடிவுகள் எடுக்க வேண்டிவரும்.

ஊராட்சி ஒன்றிய தையலாசிரியர்கள் பணி நிலை.

240—(*வினா எண். 4028)—திரு. செ. செம்மலை, திருமதி பா. வளர்மதி : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் பஞ்சாயத்து யூனியன்களில் வேலை செய்யும் தையலாசிரியைகளுக்குப் பதவி உயர்வு கொடுக்கப்படவில்லை என்பது உண்மையா ?

(ஆ) ஆம் எனில், அவர்களுக்குப் பதவி உயர்வு கொடுக்க அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) ஆம். (ஆ) அரசின் பரிசீலனையில் உள்ளது.

திருமதி பா. வளர்மதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோரிக்கைகள் தையல் ஆசிரியர்களின் சங்கத்தின் சார்பாக வைக்கப்பட்டிருக்கின்றனவா? அப்படியானால் என்னென்ன கோரிக்கைகள் வைக்கப்பட்டிருக்கின்றன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே தையல் ஆசிரியர்கள் சங்கத்தின் தலைவர்கள் கோரிக்கை வைத்தார்கள். அவர்களுடைய கோரிக்கைகளான, தையல் ஆசிரியர்களின் பதவிகளை ஊரக அலுவலர் நிலை 1, 2 என்று பெயர் மாற்றம் செய்வது அல்லது முதலமைச்சர் சத்துணவு அமைப்பாளர் என பெயர் மாற்றம் செய்வது, ஊரக அலுவலர்களுக்கு இணையாக ஊதியம் வழங்கவேண்டுமென்று தையல் ஆசிரியர் சங்கத் தலைவர்கள் கூறியிருந்தார்கள். ஆனால், அரசு இதை 1984-ல் நிராகரித்து விட்டது. அவர்கள் மீண்டும் வேண்டுகோள் வைத்திருக்கிறார்கள். அது அரசின் பரிசீலனையில் இருக்கிறது.



1986 மார்ச் 24]

திருமதி பா. வளர்மதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தையல் ஆசிரியர்களின் பதவி உயர்வுக்காக அரசு கல்வித் தகுதி, தையலில் அறிவாற்றல் ஆகியவற்றை எடுத்துக் கொண்டு நிர்ணயம் செய்துள்ளதா ? அப்படித் தையல் ஆசிரியர் பதவிக்குத் தகுதி உள்ளவர்களை பஞ்சாயத்துக்களில், மற்ற வேலைகளுக்குத் தகுதி பெற்றிருந்தால், அந்த வேலைகளில் நியமிக்க சிபாரிசு செய்வார்களா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : பேரவைத் தலைவர் அவர்களே, தையல் ஆசிரியர்கள் தற்போது நியமிக்கப்படுவதில்லை. ஏற்கெனவே நியமிக்கப்பட்டவர்கள்தான் இருக்கிறார்கள். அவர்கள் 20 ஆண்டுகளாக வேலை செய்து கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு வேறு பதவிகள் தருவதற்குத் தகுதி உள்ளதா, இல்லையா என்பதைப் பற்றி அரசு இன்னும் யோசிக்கவில்லை. இருந்தாலும், அவர்களை வைத்துக் கொண்டு வேறு பல சமூக நலத்திற்காக அரசு பயன்படுத்திக் கொண்டு வருகிறது. அவர்கள் கோரிக்கை அரசின் பரிசீலனையில் இருக்கிறது. அவர்கள் பதவி உயர்வு கேட்கிறார்கள், அல்லது ஊரக நல அலுவலர்கள் என்ற பெயர் மாற்றத்தைக் கேட்கிறார்கள். அவை பற்றி அரசின் பரிசீலனை முடிந்த பிறகுதான் சொல்ல முடியும்.

திரு. உ. சுப்பிரமணியன் : பேரவைத் தலைவர் அவர்களே, ஊராட்சிகளில் வாங்கிய தையல் மிஷின்கள் ஏற்கனவே ஊராட்சியிலுள்ள பெரிய தலைவர்கள் மூலமாக கிராமங்களில் பலருக்குக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. ஆனால், இப்போது பல இடங்களில் தையல் மிஷின்கள் யாரிடம் இருக்கின்றன என்பதைப் பற்றி தெரியவில்லை. அந்த விவரத்தை அறிந்து மக்கள் பயன்படுத்தும் வகையில் மாற்றி அமைக்க அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : இப்போது தையல் பயிற்சி கொடுக்கின்ற வேலை இல்லாத காரணத்தால் தையல் இயந்திரங்கள் வாங்கப்படுவதில்லை. ஏற்கனவே கொடுக்கப்பட்ட இயந்திரங்கள் என்னவாயிற்று என்று தனிக் கேள்வி போட்டால், விவரம் சேகரித்துத் தரமுடியும்.

குழித்துறையில் பேருந்து நிலையம்

241—(*வினா எண். 4522)—திரு. மா. சுந்தரதாஸ் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டம், விளவன்கோடு சட்டமன்றத் தொகுதி, குழித்துறை நகரத்தில் பேருந்து நிலையம் இல்லாததை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், பேருந்து நிலையம் கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா ?

[1986 மார்ச் 24

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) மற்றும் (ஆ): ஆம்.

திரு. மா. சுந்தரதாஸ் : பேரவைத் தலைவர் அவர்களே, காளையச் சந்தை பஸ் ஸ்டாண்டு அமைக்கப்படுவது காலதாமதப் பட்டுக்கொண்டிருக்கிறது. 200 பஸ்களுக்கு மேல் அங்கே ஓடிக் கொண்டிருக்கிற காரணத்தால் எப்போது அந்த வேலை தொடங்கப்படவிருக்கிறது ? அதற்கான நிலம் ஆர்ஜிதம் செய்யப்பட்டு விட்டதா அல்லது சொந்தமான இடத்தில்தான் நிலையம் கட்டப்படவிருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே, நகராட்சிக்குச் சொந்தமான காளையச் சந்தை என்ற இடத்தில் ரூ. 15 இலட்சம் செலவில் பேருந்து நிலையம் கட்டுவதற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டிருக்கிறது.

திரு. மா. சுந்தரதாஸ் : தலைவர் அவர்களே, அதற்காக அரசுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்தப் பணி எப்போது துவங்கும், எப்போது முடிவடையும் என்பதை அறிய விரும்புகிறேன். மேலும் காளையச் சந்தையில் பஸ் போவதற்கு வசதியாக ரோடுகள் இருந்து, அங்கே 200 பஸ்களுக்கு மேல் ஓடிக் கொண்டிருக்கின்றன. புதியதாக துவங்கவிருக்கும் அந்த ஸ்டாண்டில் கொண்டுபோவதற்கு அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே, புதிய பேருந்து நிலையம் கட்டுவதற்காக ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தின் கீழ் இவ்வாண்டு சேர்க்கப் பட்டிருக்கிறது. அனுமதி கிடைத்தவுடன் இந்த வேலை துவங்கப்படும்.

திரு. எட். எம். இராசரத்தினம் : தலைவர் அவர்களே, குழித்துறை நகராட்சியில் காவல் துறையினருக்கு ஒதுக்கப்பட்ட இடத்தில் பேருந்து நிலையம் அமைக்க வேண்டுமென்று தற்போது தொடங்கப்பட்டிருக்கக் கூடிய நகராட்சிக்குச் சொந்தமான காளையச் சந்தையில் காவல் துறையினருக்கு ஒதுக்க வேண்டுமென்று ஏதேனும் அரசுக்கு குறிப்பு வந்துள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே, இது சம்பந்தப்பட்ட கோரிக்கை ஒன்று அரசின் பரிசீலனையில் இருக்கிறது.



1986 மார்ச் 24]

காட்பாடி ஆக்சிலியம் பெண்கள் உயர்நிலைப் பள்ளிக்கு ஒதுக்கப்பட்ட இடம்.

242—(*வினா எண். 4910)—திரு. கோ. ரகுபதி மற்றும் திரு. எச். ஜி. ஆறுமுகம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காட்பாடி தொகுதியில் உள்ள ஆக்சிலியம் பெண்கள் கல்லூரிக்கு காந்தி நகர் பேரூராட்சி மூலமாக ஒதுக்கப்பட்டுள்ள இடம் பெண்கள் கல்லூரிக்குப் பயன்படாமல் விவசாயத்திற்குப் பயன்படுத்தப்படுகிறது என்பது உண்மையா ?

(ஆ) ஆம் எனில், அந்த நிலத்தைக் கைவசப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) மற்றும் (ஆ) : காட்பாடி தொகுதியில் உள்ள ஆக்சீலியம் பெண்கள் கல்லூரிக்கு காந்தி நகர் பேரூராட்சி மூலமாக நிலங்கள் ஒதுக்கப்படவில்லை.

[முற்பகல் 9-20]

திரு. தி. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, தமிழகத்தின் பலவிடங்களில் ஊராட்சி மன்றங்கள், பேரூராட்சி மன்றங்கள் ஆகியவைகளுக்கு உட்பட்ட பலவிடங்களைத் தனியார் ஆக்கிரமிப்பு செய்துகொண்டு, அவற்றை அந்த ஊராட்சி மன்றங்களிடம் ஒப்படைக்க மறுத்து வருகின்ற நிலைமை இருக்கிறது. ஆகவே, இப்படிப்பட்ட இடங்களை மீட்பதற்கும், இப்படிப்பட்ட ஆக்கிரமிப்புகளைத் தடுக்கவும் உள்ளாட்சித் துறை மூலமாக நடவடிக்கை எடுக்கப்படுமா ? இந்த ஆக்கிரமிப்புகளை அகற்றுவதற்குத் தனி அதிகாரங்கள் ஏதாவது வழங்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே, ஊராட்சி ஒன்றியங்களுக்குச் சொந்தமான இடங்களில் எங்கெங்கு ஆக்கிரமிப்புகள் நடைபெற்றிருக்கின்றனவோ நிச்சயமாக அவை தய்வு தாட்சண்யம் இன்றி அப்புறப்படுத்தப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கொங்கணாபுரம் ஒன்றியம் தங்காயூரில் குடிநீர் வழங்கல்.

243—(*வினா எண். 2887)—திரு. ச. கோவிந்தசாமி : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம் கொங்கணாபுரம் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த தங்காயூர் கிராமத்தில் குடிநீர் வடிகால் வாரியத்தால் மேல்நிலை தொட்டி கட்டப்பட்டு நீண்டநாள் ஆகியும் இன்னும் தண்ணீர் விடப்படாமல் இருப்பது உண்மையா ?

(ஆ) ஆம் எனில், அது குறித்து எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது ?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : (அ) மற்றும் (ஆ) : தங்காயூர் மேல்நிலைத் தொட்டி 1984 ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்தில் கட்டப்பட்டு வரதன்காட்டூரர் குடியிருப்பு ஆழ்துளைக் கிணறு மூலமாக தண்ணீர் கொண்டு வரப்படுவதை வரதன்காட்டூரார், காட்டுவளைவு, ஆலங்காடு முதலிய அக்கம் பக்கத்து குடியிருப்புகளில் உள்ள மக்கள் எதிர்ப்பு தெரிவித்ததால் தண்ணீர் விடப்படவில்லை. கோட்டாட்சியர் மூலம் சமரசம் செய்யப்பட்டு வரதன்காட்டூர் பகுதிக்குத் தனியே மேல்நிலைத் தொட்டி கட்டியபின் தங்காயூர் தொட்டிக்கு நீர் விடப்பட்டு அக்டோபர் 1985 முதல் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

திரு. ச. கோவிந்தசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கடுமையான வறட்சிக் காலத்திலும் குடிநீர் வடிகால் வாரியத்தால் கட்டப்பட்டுள்ள மேல்நிலைத் தொட்டிகளுக்கு மோட்டார் பொருத்தப்படுவதிலும், மின் இணைப்பு அளிக்கப்படுவதிலும், அவற்றை இயங்கச் செய்வதிலும் இருக்கின்ற காலதாமதத்தையும், மெத்தனப் போக்குகளையும் அரசு அறியுமா ? அதைப் போக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : தலைவரவர்களே, அப்படிப்பட்ட எந்தத் தாமதமும் இல்லை. ஏதாவது குறிப்பிட்ட பகுதியில் இப்படிப்பட்ட நிலைமை இருந்தால் அந்த அரசின் கவனத்திற்குக் கொண்டுவந்தால் நடவடிக்கை எடுக்கப்படும்.





மானூர்பட்டி கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

244—(*வினா எண். 3912)—திரு. சு. திருமலைச்சாமிக் கவுண்டர் : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உடுமலை தொகுதியில் மானூர்பட்டிக் கூட்டுக் குடிநீர்த் திட்டம் மற்றும் பூலாங்கிணறு கூட்டுக் குடிநீர்த் திட்டம் வேலைகள் எந்த நிலையில் உள்ளன ?

(ஆ) எப்பொழுது முடிவுபெறும் ?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : (அ) மற்றும் (ஆ) : மானூர்பட்டி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தில் நீர் சுத்திகரிப்பு நிலையப் பணிகள் மற்றும் நீர் உந்து குழாய்கள் பதிக்கும் பணிகள் தவிர இதர பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. பூலாங்கிணறு கூட்டுக் குடிநீர்த் திட்டத்தில் நீர் சுத்திகரிப்பு நிலையப் பணிகள் மற்றும் தலைமையிடப் பணிகள் தவிர இதர பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. இக் குடிநீர்த் திட்டப் பணிகள் 1986–87 நிதியாண்டு இறுதிக்குள் முடிவு பெறும் என எதிர்பார்க்கப்படுகிறது.

திரு. கு. ரமணி : தலைவரவர்களே, உடுமலை தாலுக்காவில் வறட்சி நிலைமை அதிகமாக இருப்பது மாண்புமிகு அமைச்சரவர்களுக்குத் தெரியும். பலவிடங்களில் குடிதண்ணீர்கூடக் கிடைக்காத கஷ்டம் இருக்கிறது. இங்கே சொல்லப்பட்டிருக்கின்ற இந்த இரண்டு இடங்களிலேயும் கூட்டுக் குடிநீர் திட்டத்திற்குக் காலதாமதம் ஆகிறது என்கின்ற பிரச்சினை அங்குள்ள மக்கள் மத்தியிலே வந்துள்ளது. ஆகவே, எந்தக் கால அளவிற்குள் அது செய்து முடிக்கப்படும் என்பதைத் திட்டவட்டமாக அமைச்சரவர்கள் அறிவிப்பார்களா ?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : தலைவரவர்களே, ஏற்கனவே நான் அறிவித்தபடி, 1986–87 நிதியாண்டு இறுதிக்குள் முடிவுறும்.

மாநகராட்சியுடன் இணைக்கப்பட்ட பகுதிகளில் காவல் மற்றும் நீதிப் பிரிவுகள்.

245—(*வினா எண். 4027)—திரு. வி. பி. சிந்தன், திரு. ஜே. ஹேமச்சந்திரன் : மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை நகராட்சியுடன் புதியதாக இணைக்கப்பட்ட 32—33—76 டிவிஷன்களில் காவல் மற்றும் நீதிப் பிரிவுகள் செங்கல்பட்டு மாவட்டத்திலிருந்து பிரித்து சென்னை நகரத்துடன் இணைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன ?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** (அ) ஆம். (ஆ) விவர அறிக்கை *அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

**திரு. வி. பி. சிந்தன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே, சென்ற ஆண்டு இந்தப் பிரச்னை இந்த மன்றத்தில் எழுப்பப்பட்ட போதும், அது பரிசீலனையில் உள்ளது என்று குறிப்பிடப்பட்டது. அது எந்தத் தேதிக்குள், எந்தக் காலத்திற்குள் அமல்படுத்தப்படும் என்று சொல்லுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னையை அடுத்த 19 கிராமங்கள் சென்னை மாநகராட்சியோடு இணைக்கப்பட்ட பிறகு, அதற்காக சட்டத் திருத்தம் கொண்டுவரப்பட்டு நீதிமன்றப் பகுதிக்கும் அது உட்படுத்தப்பட வேண்டுமென்று சட்டம் கொண்டு வந்த பிறகு, அதாவது 17–7–1985-க்குப் பிறகு Original Civil Jurisdiction of the High Court அந்த எல்லைக்கு உட்படுத்தப்பட்டு வருகிறது, நடைமுறைக்கு வந்துவிட்டது. Notification regarding Criminal Jurisdiction has to be issued under section 8(3) of the Criminal procedure code உடனடியாக இன்னும் சில தினங்களில் நோட்டிபிகேஷன் இஷ்யூ செய்யப்படும்.

**திரு. வி. பி. சிந்தன் :** தலைவரவர்களே, சென்னை மாநகராட்சியுடன் இணைக்கப்பட்ட 32, 33, 76 ஆகிய பகுதிகள் பற்றித்தான் இந்தக் கேள்வி. இந்தப் பகுதிகள் மாநகராட்சியின் பொறுப்பிலே இருக்கின்றன. ஆனால், நீதிமன்றப் பிரிவுகளும், போலீஸ் துறையும் செங்கல்பட்டு மாவட்டத்தைச் சார்ந்ததாக இருக்கிறது. இதனால் அந்தப் பகுதி மக்கள் பெரிதும் தொந்தரவுகளுக்கும், சிக்கல்களுக்கும் உள்ளாக்கப்படுகிறார்கள் என்பதைக் கணக்கில் கொண்டு, நீதித்துறை மட்டுமல்லாமல், போலீஸ் துறையும் இந்த சென்னை மாநகராட்சிக்கு உள்ளிட்ட பகுதியாக இருப்பதால் சென்னை போலீஸ் கமிஷனர் பொறுப்பிலே இந்தப் பகுதி காவல் துறையும் இயங்குவதற்கு ஏற்ற வகையில் திருத்தியமைக்க அமைச்சரவர்கள் முன் வருவார்களா? அது எப்பொழுது அமையும் என்பதற்குத் தெளிவாக பதில் அளிக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, கிரிமினல் புரொசீஜர் கோடு 8(3) பிரகாரம் சில நோட்டிபிகேஷன்களைக் கொடுக்க வேண்டியிருக்கிறது. அது ஆனதற்குப் பிறகு, Criminal Jurisdiction as well as Police Jurisdiction இரண்டுமே அதற்கு உட்படுத்தப்பட்டு விடும்.

---

*704ம் பக்கத்தில் இணைப்பு I ஆக அச்சிடப்பெற்றுள்ளது.





### சீர்காழியில் முதல் வகுப்பு நீதிமன்றம்.

246—(*வினா எண். 5262)—**திரு. க. பாலசுப்பிரமணியன் :** மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழியிலுள்ள 2 ஆவது வகுப்பு குற்றவியல் நீதிமன்றத்தைக் கூடுதல் முதல் வகுப்பு நீதிமன்றமாக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அது குறித்து எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** (அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

**திரு. க. பாலசுப்பிரமணியன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சீர்காழியில் இரண்டாவது வகுப்பு குற்றவியல் நீதிமன்றம் ஒன்றுதான் இருக்கிறது. சீர்காழி தாலுகா, தரங்கம்பாடி தாலுகா ஆகிய பகுதிகளிலிருந்து மயிலாடுதுறையிலுள்ள முதல் வகுப்பு குற்றவியல் நீதிமன்றத்திற்குச் செல்லவேண்டியிருக்கிறது. ஏறக்குறைய ஐம்பது கிலோ மீட்டருக்கு மேலேயே தரங்கபாடியிலிருந்தும் என் தொகுதியில் உள்ள குடியம்பாளையம், பழயாறை போன்ற இடங்களிலிருந்தும் செல்லவேண்டியிருக்கிறது. அது தவிர ஏறக்குறைய ஆறு காவல் நிலையங்களிலிருந்து சீர்காழி இரண்டாவது வகுப்பு குற்றவியல் நீதிமன்றத்திற்கு வரவேண்டியிருக்கிறது. ஆகவே இதையெல்லாம் கருத்திற்கொண்டு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இனிமேலாவது நடவடிக்கைகள் எடுத்து சீர்காழியில் முதல் வகுப்பு நீதிமன்றம் அமைக்க முன்வருவார்களா ?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** பேரவைத் தலைவர் அவர்களே, சீர்காழியிலுள்ள இரண்டாம் வகுப்பு குற்றவியல் நீதிமன்றம் முகாம் நீதிமன்றமாக வாரத்தில் ஒரு நாள் தரங்கம்பாடியில் நடத்தப்படுகிறது. நிரந்தரமான கோர்ட்டாக அது தற்போது இல்லை. பர்ஸ்ட் க்ளாஸ் மாஜிஸ்ட்ரேட் கோர்ட் வேண்டுமென்கிற அளவிற்குத் தேவை இருக்கிறதா என்பதுபற்றி உயர்நீதிமன்றத்தோடு கலந்து ஆலோசித்து அதற்கேற்ப நடவடிக்கை எடுக்க அரசாங்கம் பரிசீலிக்கும்.

**திரு. க. பாலசுப்பிரமணியன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்வது பொறையாரில் சீர்காழி இரண்டாவது வகுப்பு குற்றவியல் நீதிமன்றம் வெள்ளிக்கிழமை அன்று காம்ப் கோர்ட்டாக இருக்

கிறதே தவிர சீர்காழியில் அது காம்ப் கோர்ட்டாக இல்லை. அந்த கோர்ட் அமைக்கப்பட்டு ஏறக்குறைய ஐம்பது ஆண்டுகளுக்கு மேலாக சீர்காழியிலேயே இருக்கிறது. ஆகவே, சீர்காழியிலிருந்து செல்லும்போது முப்பது கிலோ மீட்டர் அளவிற்கு நீதிபதி அவர் கள் வெள்ளிக்கிழமை அன்று அங்கு செல்லவேண்டிய நிலை ஏற்படு கிறது. அடுத்து இரண்டு ஆண்டுகள் முன்னதாக தரங்கம்பாடி தனி தாலுகாவாக ஆகியிருக்கிறது. ஆகவே அதற்குத் தனியாக இரண்டாவது வகுப்பு குற்றவியல் நீதிமன்றம் தேவை என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கருத்தில் கொண்டு அங்கிருந்து தகவல்களைச் சரியாகப் பெற்று அதை ஏற்பாடு செய்வதற்கு முன்வருவார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : பேரவைத் தலைவர் அவர்களே, உயர்நீதி மன்றத்துடன் கலந்து அரசாங்கம் தக்க நடவடிக்கை எடுக்கும்.

திரு. பி. எம். தங்கவேல்ராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சில சிவில், கிரிமினல் கோர்ட்டுகளில் மாஜிஸ்ட்ரேட்டுகள் அல்லது முன்சீப்ஸ் போடாமல் இருக்கிறார் கள். மேலும் சென்னை வழக்கறிஞர்கள் சங்கம் வருகிற ஏப்ரல் மாதம் 23 ஆம் தேதிக்குள் அவர்களைப் போடாவிட்டால் நாங்களெல்லாம் போராட்டம் நடத்துவோம், கோர்ட்டுக்குச் செல்லமாட்டோம் என்று............

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்தக் கேள்விக்கும் அதற்கும் சம்பந்தமில்லை.

மதுரை தேனி நெடுஞ்சாலை.

247—(*வினா எண். 4400)—திரு. பி. கே. எம். முத்துராம லிங்கம் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை-தேனி நெடுஞ்சாலையை மேம்படுத்த அரசு திட்டமிட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது, எவ்வளவு மதிப்பீட்டில் செய் யப்பட உள்ளது ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : (அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.





திண்டுக்கல்லில் நத்தம் சாலையில் ரயில்வே மேம்பாலம்.

248—(*வினா எண். 4865)—திரு. ஆ. பிரேம்குமார் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திண்டுக்கல் நகரில் ரயில் நிலையத்திற்கு அருகில் உள்ள நத்தம் ரோடு லெவல் கிராசிங் ரோட்டின் மீது பாலம் கட்டும் திட்டம் (மத்திய அரசின் உதவியுடன்) அரசின் பரிசீலனை யில் உள்ளதா ?

(ஆ) அதன் திட்ட மதிப்பீடு என்ன ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : (அ) 1986–87 ஆம் ஆண்டு இரயில்வே பணிகள் திட்டத்தில் சேர்க்குமாறு ரெயில்வே யைக் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

(ஆ) 1985–86 ஆம் ஆண்டின் விலைவாசிப்படி ரூ. 250 இலட்சம் ஆகும் என்று கணக்கிடப்பட்டுள்ளது.

திரு. ஆ. பிரேம்குமார் : பேரவைத் தலைவர் அவர்களே, திண்டுக்கல்லில் இந்த லெவல் கிராஸிங்கை கடந்துதான் இன் டஸ்ட்ரியல் எஸ்டேட், பல மில்கள், டிராவலர்ஸ் பங்களா, கொடகனாறு தங்கும் விடுதி ஆகியவற்றிற்கெல்லாம் செல்ல வேண்டியிருக்கிறது. மேலும் தொழிலாளர்களுக்கும், அந்த வழியாகச் செல்லும் பஸ்களுக்கும், பொதுமக்களுக்கும் கடந்து செல்வதற்கு மிகவும் இடைஞ்சலாக இருக்கிறது. மேலும் அதிக நேரம் ஏற்படும் நிலையும் இருக்கிறது. ஆகவே இதன் முக்கியத்துவத்தைக் கருத்தில்கொண்டு மத்திய அரசை வற் புறுத்தி விரைவிலே அந்தப் பாலத்தைக் கட்டுவதற்கு அரசாங்கம் ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, அங்கு இருக்கிற பிரச்சினைகளை அரசாங்கம் முழு மையாக தெரிந்து இருக்கிறது. பல இடங்களில் அப்படி இருக் கின்றது. ஏறக்குறைய 14 இடங்களில் இப்படி மேம்பாலங்கள் கட்டப்பட வேண்டுமென்று மத்திய அரசுக்கு எழுதினோம். சில இடங்களில் மட்டும் கட்ட ஏற்றுக்கொண்டிருக்கிறது. படிப்படி யாக மற்றவையையும் ஏற்றுக்கொள்வதற்காக—அவர்கள் நிச்சயமாக செய்வார்கள் என்ற நம்பிக்கை இருக்கிறது. எனவே தொடர்ந்து வலியுறுத்தலாம்.

[1986 மார்ச் 24

## திருநகர்—மதுரை விமானதளம் சாலை.

249—(*வினா எண். 5049)—திரு. மு. மாரிமுத்து : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநகர்—திருப்பரங்குன்றம்—அவனியாபுரம் வழியாக மதுரை விமான தளம் செல்லுகின்ற நேரடிச் சாலை விரிவாக்கத் திட்டம் அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், திட்ட மதிப்பீடு எவ்வளவு ?

(இ) வேலைகள் எப்போது ஆரம்பிக்கப்படும் ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : (அ) இல்லை.

(ஆ) மற்றும் (இ) : இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. மு. மாரிமுத்து : பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திருப்பரங்குன்றம்—அவனியாபுரம் இணைப்புச் சாலை விரிவாக்கப்பட்டால் விமானதளத்திலிருந்து நேரடியாக திருப்பரங் குன்றம் வருவதற்கு வாய்ப்பு ஏற்படும். அதுமட்டுமல்ல. அருப் புக்கோட்டைச் சாலையையும் தேசிய நெடுஞ்சாலை எண். 7-ஐயும் இணைக்கின்ற சாலையாக ஏற்படக்கூடிய வாய்ப்பு இருக்கிறது. அருப்புக்கோட்டைப் பகுதியிலிருந்து வரக்கூடிய லாரி போன்ற வாகனங்களுக்குப் புறநகர்ச் சாலையாக இது பயன்படும். அதன் மூலம் மதுரை மாநகரத்தினுடைய போக்குவரத்து நெரிசல் குறையக்கூடிய வாய்ப்பும் இருக்கிறது. ஆகவே இவற்றையெல் லாம் கருத்தில்கொண்டு—கடந்த சில மாதங்களுக்கு முன்னால் உலக வங்கி உதவியோடு இந்தச் சாலையை விரிவுபடுத்தும் திட்டம் நடைமுறையில் இருப்பதாக அறிவிக்கப்பட்டதையும் கவனத்தில் கொண்டு இத் திட்டத்தை மேற்கொள்ள அரசாங்கம் முன் வருமா ?

(முற்பகல் 9–30)

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, பாகம் 2 திட்டத்தின் கீழ் இதை எடுத்துக் கொள்வதற்கான முயற்சி எடுக்கப்பட்டது. ஆனால், நிதிநிலை காரணமாக அதற்குப் பணம் ஒதுக்கப்பட முடியவில்லை. ஆனால், வருகிற காலங்களிலே பாகம்-2 திட்டத்திலே இதனை எடுத்துக் கொள் வதற்கான முயற்சியினை அரசு எடுக்கும். இல்லையென்றால், பராமரிப்புக்கு ஒதுக்கப்படுகின்ற பணத்தில் இதற்கு நிதி ஒதுக் கப்பட்டு, படிப்படியாக இதனை செய்வதற்கான நடவடிக் கையை அரசு மேற்கொள்ளும்.



1986 மார்ச் 24]

## மறைமலை நகரில் இணைப்புச் சாலைகள்.

250—(*வினா எண் 3759)—திரு. தமிழ்மணி : மாண்புமிகு வீட்டுவசதித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மறைமலை நகரில் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தால் ஒவ்வொரு பகுதிக்கும் இடையில் இணைப்புச் சாலை போடும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது போடப்படும் ?

மாண்புமிகு திரு. என். நல்லுசாமி : (அ) மற்றும் (ஆ): மறைமலை நகரத்தில் குடியிருப்போரின் வேண்டுகோளுக் இணங்க ரூ. 66,760 திட்ட மதிப்பீட்டின் அளவில் குடியிருப்பு பகுதி I, II, III ஆகிய மூன்று பகுதிகளையும் சாலை மூலம் இணைக்கும் திட்டம் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தால் தயாரிக்கப்பட்டுள்ளது. வீட்டு வசதி வாரியம் சாலை அமைக்கும் பணியை மேற்கொண்டுள்ளது. நடப்பு நிதி ஆண்டு இறுதிக்குள் இணைப்புச் சாலைகள் அமைக்கப்பட்டு விடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## சென்னையில் புதிய கட்டடங்களுக்கான அனுமதி.

251—(*வினா எண் 5440)—திரு. சைதை சா. துரைசாமி : மாண்புமிகு வீட்டு வசதித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினா வுக்கு விடையளிப்பாரா—

எம்.எம்.டி.ஏ. யின் மூலம் சென்னை மாநகரில் 1 கிரவுண்ட் நிலத்திற்கு மட்டும் வீடு கட்ட பிளான் அனுமதி வழங்குகின்ற முறையைத் தளர்த்தி 1/4, 1/2, 3/4 கிரவுண்ட் நிலத்திலும் வீடு கட்ட பிளான் அனுமதி வழங்க நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. என். நல்லுசாமி : சென்னைப் பெருநகர் வளர்ச்சித் திட்டத்தின் ஒரு பகுதியாக அமையும் வளர்ச்சிக் கட்டுப்பாடு விதிகளின்படி (Development Control Rules) சென்னை மாநகரில் 150 சதுர மீட்டர்களும் மற்றும் அதற்கு மேலும் பரப்பளவு கொண்ட மனையில் வீடு கட்ட அனுமதி வழங்கப் படுகிறது. தொடர் கட்டிடப் பகுதி என குறிப்பிட்ட பகுதி களில் ( Continuous Building Area ) 80 சதுர மீட்டர்களும் அதற்கு மேலும் பரப்பளவு உள்ள மனைகளிலும் பொருளாதாரத்தில் பின் தங்கியவர்கள் வசிக்கும் பகுதி எனக் குறிப்பிட்ட பகுதிகளில் (Economically Weaker Section Area) 20 சதுர மீட்டர்கள் மற்றும் அதற்கு மேலும் பரப்பளவுள்ள மனை களிலும் வீடு கட்ட திட்ட அனுமதி வழங்கப்படுகிறது.

[1986 மார்ச் 24

திரு. சைதை சா. துரைசாமி : மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, இந்தத் திட்டம் எப்போது அமுலாக்கப்
பட்டது ? எனக்குத் தெரிந்த வரையில், வீட்டு வசதி வாரியம்,
குடிசை மாற்று வாரியம் போன்ற பகுதிகளிலே மனை ஒதுக்கப்
பட்டவர்கள் தவிர, மற்றவர்களுக்கு இதுபோன்று இதுவரை
அனுமதி வழங்கப்படவில்லை என்று சொல்லப்படுகிறது.
அப்படி வழங்கப்பட்டிருந்தால், தனியார்கள் 1/4 கிரவுண்டு,
1/2 கிரவுண்டு, 3/4 கிரவுண்டு வைத்திருப்பவர்கள் சென்னை
மாநகரில் ஏராளமானவர்கள் இருப்பதால், அவர்களுக்கு
அப்படி அனுமதி வழங்கப்பட்டிருந்தால், அந்த விவரத்தை
அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா ? இல்லை யென்றால்,
அப்படிப்பட்டவர்களுக்கு அனுமதி வழங்க நடவடிக்கை எடுக்கப்
படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. என். நல்லுசாமி : மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, 1–10–1980லே இருந்து ஒரு கிரவுண்டு
வைத்திருப்பவர்களுக்கு அனுமதி வழங்கப்படுகிறது. அந்த
விதிமுறை இப்போது நடைமுறையில் இருந்து கொண்டிருக்
கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன கருத்தை
மனதில் கொண்டு பார்க்கிறபோது வீட்டு வசதி வாரியத்தின்
மூலம் மனை பெறுபவர்களுக்கும், குடிசை மாற்று வாரியத்தின்
மூலம் மனை பெறுபவர்களுக்கும் மட்டுமல்ல, சாதாரணமாக
யாராக இருந்தாலும், சட்டத்திற்குள் அவர்கள் வீடு கட்டு
வதற்கு மனு செய்தால் கவனிக்கப்படும். அப்படி யாராவது
விடப்பட்டிருந்தால், அவர்கள் குறைகளைத் தீர்ப்பதற்கு ஏற்
கனவே சட்டத்தில் இடம் இருக்கிறது.

திரு. சைதை சா. துரைசாமி : மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறி
விப்பிற்கு நன்றி. ஒரு கிரவுண்டு வைத்திருப்பவர்களுக்கு என்ன
விதியின் கீழ் அனுமதி வழங்குகிறீர்களோ, அந்த அடிப்படை
யிலே 1/4 கிரவுண்டு, 1/2 கிரவுண்டு, 3/4 கிரவுண்டு வைத்திருப்
பவர்களுக்கும், அந்த விதியைத் தளர்த்தி அவர்களுடைய
இடத்திற்கு ஏற்றாற் போன்று அந்த விதிகளை மாற்றம் செய்து
அனுமதி வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா ? இல்லை யென்
றால், 1 கிரவுண்டு விதியின் கீழ் இவர்களுக்கு அனுமதி வழங்கப்
படுமா அல்லது இதற்கு விதிகளைத் தளர்த்தி அனுமதி வழங்கப்
படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. என். நல்லுசாமி: மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, ஒரு கிரவுண்டுக்கு இருக்கின்ற விதிகளுக்
கும், அதற்குக் குறைவாக இருக்கின்ற கிரவுண்டுகளுக்கு இருக்
கின்ற விதிகளுக்கும் இடையே வேறுபாடு இருக்கிறது. உதவு
கின்ற தன்மையோடு, மற்ற இடங்களில் தொடர் கட்டிடங்கள்
இருந்தால், உதாரணத்திற்கு ஒரு கட்டிடத்திற்கும் மற்றொரு



1986 மார்ச் 24]

கட்டிடத்திற்கும் இடையே ஒரு சிறிய பகுதி இருந்தால் கூட
அதற்கும் இப்போது அனுமதி அளிக்கப்படுகிறது. அதேபோல்
எகனாமிகலி வீக்கர் செக்ஷன் பகுதியில் 215 சதுர அடி கொண்ட
இடத்திற்கும் இப்போது அனுமதி வழங்கப்படுகிறது. ஒரு கிர
வுண்டுக்கு உள்ள சட்ட திட்டங்களை, 215 சதுர அடி கொண்ட
கிரவுண்டுக்குக் கொண்டு வந்தால், அனுமதி வழங்குவதில் சிரமம்
ஏற்படும். எனவே, ஒரு கிரவுண்டிற்கு இருக்கும் சட்டம் வேறு.
அதற்குக் குறைவாக இருக்கும் இடத்தில் உதவுகின்ற தன்மையில்,
விதிகளை நடைமுறைக்குக் கொண்டு வந்திருக்கிறோம்.

திரு. மா. கதிர்வேலு : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, சென்னை நகரில் குடிசை மாற்று வாரியம் மூலமாக,
வீட்டுவசதி வாரியம் மூலமாக கட்டப்பட்ட வீடுகள் பல ஆண்டுக
ளாகப் பழுதடைந்து, வெள்ளை அடிக்கப்படாமல், பாசி பிடித்து,
பராமரிக்கப்படாமல் இருப்பதை அரசு கவனிக்குமா ? அதன்
மீது நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. என். நல்லுசாமி : மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, வாடகையையும் மற்ற நிதியையும் கொண்டு
அப்படிப்பட்ட குறைபாடுகள் இருக்கின்ற பகுதிகளைச் சரி
செய்வதற்கு இப்பொழுதே திட்டத்தில் இடம் இருக்கிறது. சில
இடங்களில் ஏதாவது குறை இருந்தால், அதை எழுதிக் கொடுத்
தால், நிச்சயமாக உதவுகின்ற தன்மையோடு அரசு நடந்து
கொள்ளும்.

திரு. சு. பாலன் : மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே,
அமைச்சர் அவர்கள் 215 சதுர அடி வைத்துள்ளவர்கள் வீடு
கட்டிக் கொள்வதற்கு வரைபடம் அனுமதி கொடுப்பதாகத்
தெரிவித்தார்கள். தற்போது சென்னையிலே ஏராளமான குடி
சைப் பகுதிகளிலே அதைவிடக் குறைவான இடத்திலே குடிசை
கள் கட்டிக் கொண்டிருக்கிறார்கள். வெள்ளப் பெருக்குக் காலங்
களில், அந்தக் குடிசைகள் விழுந்து, அரசும் அவர்களுக்கு
நிவாரணம் கொடுக்கிறது. அதற்குக் காரணம் அவர்கள் இருக்கிற
இடங்களில் கல் கட்டிடமாகவோ, அல்லது ஓடு போட்டோ
கட்டிக் கொள்ள மாநகராட்சி மறுக்கிறது. ஆகவே, குடிசைவாசி
கள் அத்தகைய வீடுகளை மாற்றி, தீப்பிடிக்காத வீடுகளைக்
கட்டிக் கொள்வதற்கு, அனுமதி கொடுப்பதற்கு அரசு முன்
வருமா? அவர்களுக்கு உதவி செய்யுமா என்று அறிய விரும்பு
கிறேன்.

மாண்புமிகு திரு. என். நல்லுசாமி : மாண்புமிகு பேர
வைத் தலைவர் அவர்களே, பல கேள்விகளை ஒன்றாக இணைத்
துக் கேட்கின்றார்கள். குடிசை மாற்று வாரியத்தின் மூலமாக,
அல்லது வீட்டு வசதி வாரியத்தின் மூலமாக இப்பொழுது
இருக்கின்ற வீடுகளை மாற்றி, ஓடு அல்லது கல் கட்டிடம் கட்டித்

தர வாய்ப்பு இருக்கின்றதா என்று கேட்டார்கள். அது தனிப்பட்ட வகையான கேள்வி. சாதாரணமாக 215 சதுர அடிக்கும் குறைவாக, குடிசைப் பகுதியிலே உள்ளவர்கள், வீடு கட்டிக் கொள்வதற்கு அனுமதி கொடுக்கப்படுமா என்ற சந்தேகத்திலே எழுப்பியிருக்கிறார்கள். அப்படிப்பட்டவர்களுக்கு நிச்சயமாக அரசு உதவும்.

திரு. வி. பி. சிந்தன் : பேரவைத் தலைவர் அவர்களே, குடிசை மாற்று வாரியத்திலும் வீட்டு வசதி வாரியத்திலும் உள்ள வீடுகளில் முறையாகக் குடிதண்ணீர் வழங்கப்படாததும், அந்தப் பகுதியிலுள்ள சாலைகள் செப்பனிடப்படாததும், அங்கே சாக்கடை வசதிகள் மற்ற பகுதிகளில் உள்ளதைப் போல் இல்லையென்பதையும் உணர்ந்து அமைச்சர் அவர்கள் உடனடியாக, அந்தப் பகுதிகளை, சம்பந்தப்பட்ட இலாகாக்களினுடைய பொறுப்புக்கு, மெட்ரோ அல்லது கார்ப்பரேஷனுக்குக் கொடுத்து குடிதண்ணீர் வசதி, மற்றும் நகரசுத்தி அபிவிருத்தித் திட்டங்களை நிறைவேற்றும் வகையில் மாற்றப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. என். நல்லுசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய இலாகாவைப் பொறுத்த வரையிலும் என்னால் பதில் சொல்ல முடியும். என்னுடைய இலாகாவிலிருந்து இன்னொரு இலாகாவிற்குத் தருகின்ற அதிகாரம் எனக்கு இல்லை.

திரு. டி. ஆர். வேங்கடரமணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூலக் கேள்விக்குப் பதில் சொல்கின்ற நேரத்திலே, மாண்புமிகு அமைச்சர் அவர்களே, சென்னை மாநகரத்திலே 25 சதுர மீட்டர், 80 சதுர மீட்டர், 150 சதுர மீட்டர் என்று 3 அளவுகளாக வைத்து, வீடு கட்ட அனுமதிகளை வழங்குகிறோம் என்று தெரிவித்தார்கள். இப்பொழுது சென்னை நகரத்திலே பல அன்ஸ்க்ருப்புலஸ் எலிமென்ட்ஸ் லே அவுட் அப்ரூவல் பெறாமலே கூட, விவரம் தெரியாதவர்களுக்கு நிலங்களை விற்று விட்டார்கள். ஆகவே, 25 சதுர மீட்டர், 80 சதுர மீட்டர், 150 சதுர மீட்டர் என்று சொல்லி, அடிப்படை வசதிகள் வீட்டிலே இருக்கவேண்டுமென்ற குறிக்கோளோடு அந்த இடத்திற்கு ஏற்றாற்போல், வைத்திருக்கின்ற மினிமம் ரிக்கொயர்மென்ட் விதிகளைத் தளர்த்த இந்த அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன். வீடுகள் கட்டுவதற்காக சில தேவையான, அடிப்படையான வசதிகள் இருக்க வேண்டுமென்று அரசு கூறுவதிலே யாருக்கும் ஆட்சேபம் இருக்க முடியாது. ஆனால், இடத்தை அவர்கள் வாங்கிவிட்ட காரணத்தால், மினிமம் ரிக்கொயர்மென்ட்ஸ் விதியை அரசு தளர்த்தி அனைவரும் இந்தப் பரந்த உலகத்திலே வீடு கட்டிக் கொண்டு வாழ இந்த அரசு ஒத்துழைக்க முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.



மாண்புமிகு திரு. என். நல்லுசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுகாதார அடிப்படை, காற்றோட்டம் புதிய நகரத்தை அழகுபடுத்த வேண்டுமென்ற எண்ணத்தோடு யாரும் வீடு கட்டுவதற்கு முறைப்படி, மனு செய்கின்ற நேரங்களில், பக்கத்தில் உள்ள சுற்றுச் சூழ்நிலையைப் பொறுத்துதான் இப்பொழுது அனுமதிக்கப்படுகின்றது. அவர்கள் சொல்வதைப் போல், இப்பொழுது ஒவ்வொரு விதியையும் தளர்த்திக் கொண்டு இருக்கிறோம். யாராவது தனிப்பட்ட வகையில், வீடு கட்டிக் கொள்ள வேண்டுமென்ற ஆர்வத்தோடு, எங்கேயோ, சம்பந்தப்பட்ட அனுமதி இல்லாத இடத்திலே, இடம் வாங்கும்போதுதான் அப்படிப்பட்ட பிரச்சினைகள் வருகின்றன. மற்ற இடங்களில் எப்படிச் சட்டம் இருக்கிறதோ, அந்தச் சட்டம் தவறாக வாங்கியவர்களுக்கும் பொருத்தமாக இருந்தால்தான் நன்றாக இருக்கும்.

திரு. ஆர். ரெங்கசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முக்கால் கிரவுண்டு, அரை கிரவுண்டு, கால் கிரவுண்டு அளவு இடம் குறைவாக இருப்பதாலே, அந்த இடம் முழுவதும் கட்டிடம் கட்டுவதற்கு இந்த அரசு அனுமதி கொடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. என். நல்லுசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே நான் மூன்று விதமான பதிலைச் சொல்லி இருக்கிறேன். அந்தப் பதிலிலேயே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டதற்குப் பதில் இருக்கிறது. இருந்தாலும், சிறிய இடத்திலே வீடுகள் கட்டும்போது, இடம் குறைந்துவிடுமா என்று கேட்கிறார்கள் என்று நினைக்கிறேன். இரண்டு கட்டிடத்தின் இடையிலே கட்டும்போது, இடவசதி செய்ய வேண்டியதில்லை. அல்லது சிறிய இடமாக இருந்தால் அதற்குத் தகுந்தாற்போல் நாங்கள் உதவுகின்ற தன்மையோடு விதிகளைத் தளர்த்தியிருக்கின்ற காரணத்தால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நினைக்கின்ற காரியம் இப்பொழுதே நடக்கும்.

(முற்பகல் 9-40)

திரு. வி. தங்கவேலு : தலைவரவர்களே, இன்று சென்னை மாநகரில் குறிப்பாக தாழ்த்தப்பட்ட, மலைவாழ் சமுதாய அரசுத்துறைப் பணியாளர்கள் மற்றும் நரிக்குறவர் சமுதாயத்தில் இருக்கிறவர்கள் கூட இப்படிப்பட்ட நிலங்களை வாங்கி வீடு கட்டிக் கொள்ள முயற்சியைச் செய்கின்றபோது அந்த நிலத்தை வீட்டு வசதி வாரியம் எடுத்துக் கொண்டு, ஒரு கிரவுண்ட் நிலத்தை 80,000 ரூபாய்க்கு வாங்கியிருந்தால், அவர்களுக்குக் குறைந்த காம்பன்சேஷன் தொகையைக் கொடுத்து

அந்த நிலங்களை ஆக்கிரமிப்பு செய்கிறது. இப்படிப்பட்ட ஆக்கிரமிப்புகளை இந்த அரசு தடுத்து நிறுத்துமா ? தாழ்த்தப்பட்ட, மலைவாழ், நரிக்குறவர் சமுதாய மக்களுக்கு விதியைத் தளர்த்தி குறைந்த அளவு நிலமாக இருந்தாலும் வீடு கட்டிக் கொள்ள அனுமதி வழங்கப்படுமா ?

மாண்புமிகு திரு. என். நல்லுசாமி : தலைவரவர்களே, நாடு எங்கேயோ போய்க் கொண்டிருக்கின்றது. பொதுவாக தனியார்தான் ஆக்கிரமிப்பு செய்கிற சூழ்நிலை இருக்கிறது. அரசாங்கத்திலே இருக்கிற எந்த இலாகாவும் ஆக்கிரமிப்புக் காரியங்களில் ஈடுபடாது. அந்த அளவுக்கு அரசாங்கம் இப்போது இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 252 மாண்புமிகு மறுவாழ்வு மற்றும் வேலைவாய்ப்புத் துறை அமைச்சர் வேண்டுகோளிற்கு இணங்க ஒத்திவைக்கப்படுகிறது.

ஆதிதிராவிடர்களுக்குத் தீப்பற்றாத வீடுகள்.

253—(*வினா எண். 3926)— டாக்டர் க. நல்லமுத்து : மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) தீ விபத்தால் பாதிக்கப்பட்ட ஆதி திராவிட மக்களுக்கு தீப்பற்றாத வீடு அமைத்துக் கொடுக்கும் திட்டம் உள்ளதா ?

(ஆ) ஆம் என்றால், திட்டம் எப்பொழுது அமுலுக்கு வருகிறது ?

மாண்புமிகு திரு. ஏ. அருணாசலம் : (அ) மற்றும் (ஆ) : தீ விபத்தால் பாதிக்கப்பட்ட ஆதி திராவிட மக்களுக்குத் தீப்பற்றாத வீடு அமைத்துக் கொடுக்கும் திட்டம் அரசின் ஆய்வில் இல்லை.

டாக்டர் க. நல்லமுத்து : தலைவரவர்களே, இனி மேலாவது தீ விபத்தால் பாதிக்கப்படுகின்ற ஆதி திராவிட மக்களுக்குத் தீப் பிடிக்காத வீடுகளைக் கட்டிக் கொடுக்கும் திட்டத்தை அரசு பரிசீலனை செய்யுமா ? எப்போது இந்தத் திட்டம் நடைமுறைக்கு வரும் ?

மாண்புமிகு திரு. ஏ. அருணாசலம் : தலைவரவர்களே, பட்டா கொடுக்கப்பட்ட நிலத்தில் தாட்கோ, ஆர். எல். இ. ஜி. பி., என். ஆர். இ. பி., திட்டத்தின் கீழ் வீடு கட்டிக் கொடுக்கும் திட்டம் இருக்கிறது, திடீரென்று தீ விபத்து, கலவரம் ஏற்படுகிற போது குறிப்பிட்ட இடத்தில் அந்த மக்களுக்குப் பட்டா கொடுக்கப்





பட்டிருந்தால் அங்கே வீடுகட்டிக் கொடுக்கும் சூழ்நிலை இருக் கிறது. அதைப்போன்று மாவட்ட ஆட்சித் தலைவரால் ஒரு குறிப்பிட்ட பகுதியில் தீ பிடித்து பாதிக்கப்பட்ட இடத்தில் வீடு கட்டிக் கொடுக்க வேண்டுமென்று பரிந்துரை செய்கின்ற போது, கலவரம்ஏற்படுகின்றபோது, திடீர் தீ விபத்து ஏற்படு கின்றபோது இப்படிப்பட்ட சூழ்நிலைகளில் வீடுகள் கட்டிக் கொடுக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் இருக்கிறது.

டாக்டர் ந. மாசிலாமணி : தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆர். எல். இ. ஜி. பி., என். ஆர். இ. பி., திட்டங்களின் கீழ் ஆதி திராவிட மக்களுக்குத் தீப்பிடிக்காத வீடுகள் கட்டிக் கொடுக்கப்படுவதாகவும், அதைப்போன்று தாட்கோ நிறுவனத்தின் மூலம் கட்டிக் கொடுக்கப்படுவதாகவும் சொன்னார்கள். கடந்த காலத்தில் ஆர். சி. ரூப் வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டன. சமீபத்தில் மங்களூர் டைல்ஸ், மரக்கட்டைகள் மேல் போட்டு கூரைகள் அமைத்து வீடுகள் கட்டிக் கொடுக் கப்படுவதால் தீ விபத்து ஏற்படுகிறது. எனவே, இந்த முறையை மாற்றி, பழைய நிலைமையை உருவாக்க ஏற்பாடு செய்யப்படுமா? இப்போது 6,000 ரூபாயில் வீடு கட்டப்படுகின்றது. இந்தத் தொகையை சற்று உயர்த்தி ஓரளவு நல்ல முறையில், பழைய முறையில் தீப்பிடிக்காத வீடுகளைக் கட்டிக் கொடுக்க அரசு ஏற்பாடு செய்யுமா என்று நான் அறிந்து கொள்ள விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. ஏ. அருணாசலம் : தலைவரவர்களே, 6,000 ரூபாயில் பழைய முறையில் வீடுகளைக் கட்டுகிறபோது பாதிப்பு ஏற்படுகிறது என்று சிலர் சொன்னார்கள். அதனால் ஓடு போட்டு, கூரை அமைத்த வீடுகளை ஆர்.எல்.இ.ஜி.பி., என்.ஆர்.இ.பி. போன்ற திட்டங்களின் கீழ் கட்டிக் கொடுக் கிறார்கள். இப்போது ஒதுக்கப்படுகிற 6,000 ரூபாய் போதாது என்று பரவலாகச் சொல்லப்படுவதால் 10,000 ரூபாய் ஒதுக்க லாமா என்பது பற்றி அரசு பரிசீலனை செய்து கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. உ. சுப்பிரமணியன் : தலைவரவர்களே, தீப் பிடித் தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு அரசு பல்வேறு வகைகளில் அவ்வப்போது சிறு சிறு உதவிகளைச் செய்கிறது. குறிப்பாக, ஆதிதிராவிடர்களுக்கு வீடுகள் கட்டும் திட்டம் இருக்கிறது. அதைப்போன்று மிகவும் பின்தங்கிய மக்களுக்குக் கடன் வழங்க இப்போது சட்டத்தில் இடம் இல்லை என்று சொல்லப்படுகிறதே, அதைத் தளர்த்தி, பாதிக்கப்பட்டவர்கள் யாராக இருந்தாலும் கடன் வழங்க, உதவி செய்ய அரசு முன்வருமா ?

[1986 மார்ச் 24

மாண்புமிகு திரு. எ. அருணாசலம் : ஆதிதிராவிடர்களுக்கு டிட்டும் வீடு கட்டுகிற திட்டம் இருந்தாலும் இப்போது மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்கள் அரசு தமிழ் நாட்டைப் பொறுத்த வரையில் வறுமைக் கோட்டிற்குக் கீழே இருக்கிற மக்கள் எந்த ஜாதியாக இருந்தாலும் அவர்களுக்கு வீடு கட்டிக் கொடுக்கும் திட்டத்தை பரிசீலனை செய்து வருகிறது. அதைப்போல வீட்டுவசதித் துறை மூலமாகக் கடன் கொடுத்து கட்டிக் கொடுக்கிற திட்டமும் இருக்கிறது. தாட்கோ நிறுவனத்தின் மூலமாகக் கட்டிக் கொடுக்கப்படுகின்ற திட்டத்தைப் பொறுத்த வரையில் நாம் இனாமாகத்தான் கட்டிக் கொடுக்கிறோம்.

திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதிதிராவிட மக்களின் குடிசைகள் தீப் பிடித்து எரியும்போது ஏதோ ஒரு சிறிய தொகை கொடுக்கப்படுகிறது. ஒரு சேலை, ஒரு வேஷ்டி, 5 கிலோ அரிசி, ஒரு லிட்டர் மண்ணெண்ணெய் ஆகியவற்றைக் கொடுக்கிறார்கள். இவ்வாறு தற்காலிகமாகக் கொடுப்பது அவர்களுக்குப் போதவில்லை, எனவே இதைக் கொஞ்சம் அதிகரித்துக் கொடுக்க அரசிடம் திட்டம் இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எ. அருணாசலம் : பேரவைத் தலைவர் அவர்களே, முதலில் 50 ரூபாயாக இருந்த உதவித் தொகை பிறகு 150 ரூபாயாக மாற்றப்பட்டது. இதயதெய்வம் புரட்சித் தலைவர் ஆட்சியில் 300 ரூபாய் என்ற அளவுக்கு அது உயர்த்தப் பட்டு இருக்கிறது. 5 கிலோ அரிசி கொடுக்கப்படுகிறது ; வேஷ்டி, சேலை கொடுக்கப்படுகிறது. குறிப்பாக தமிழகத்தைப் பொறுத்த வரையில் நிறைய இடங்களில் திடீர், திடீரென்று தீ பிடித்து விடுகிற காரணத்தால், அதிக செலவாகிறது. ஆனால் தற்போது உயர்த்துகிற திட்டம் பரிசீலனையில் இல்லை.

திரு. ஜி. கே. ஜெ. பாரதி : மாண்புமிகு பேரவையின் தலைவர் அவர்களே, ஆதிதிராவிட மக்களுக்கென்று தனித்தனியாக வீடு கட்டிக் கொடுக்கப்படுகிற திட்டத்தை விட அடுக்கடுக்கான அழகான மாடி வீடுகளைக் கட்டிக் கொடுத்தால் தீ விபத்து ஏற்படாமல் இருக்கும். அந்த மாதிரி திட்டத்தை அமைச்சர் பெருமான் வைத்திருக்கிறாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எ. அருணாசலம் : பேரவைத் தலைவர் அவர்களே, அதுபோன்ற திட்டம் கிராமங்களுக்குப் பயன்படுவதாக இருக்காது. அப்படிப்பட்ட திட்டங்கள் நகரத்திற்குத்தான் பயன்படும். எனவே, அப்படிப்பட்ட திட்டம் இந்த துறையைப் பொறுத்தவரையில் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



1986 மார்ச் 24]

திரு. பொ. உத்திராபதி : பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்கிறபோது ஆதிதிராவிடர்களுக்கு 6,000 ரூபாயில் வீடு கட்டிக் கொடுக்கப்பட்டது என்றும் இப்போது அவற்றை 10,000 ரூபாயில் கட்டிக் கொடுக்கும் வகையில் பரிசீலனையில் இருப்பதாகவும் சொன்னார்கள். எல்லாப் பொருட்களின் விலையும் இப்போது மூன்று, நான்கு மடங்கு உயர்ந்திருக்கிறது. அப்படிப்பட்ட விலையேற்றத்தின் காரணத்தால் பல இடங்களில் வேலைகள் தேக்க நிலையில் இருந்து கொண்டிருக்கின்றன. அந்தத் தேக்க நிலையைப் போக்க உதவுகின்ற வகையில் ஏற்பாடு செய்யப்பட வேண்டும். எனவே, தேக்க நிலையில் உள்ள வீடுகளைக் கட்டி முடிப்பதற்கும், புதிதாக வீடுகளைக் கட்டிக் கொடுப்பதற்கும் 10,000 ரூபாய் என்ற அளவுக்கு வழங்க இந்த நிதியாண்டிலேயே ஏற்பாடு செய்ய அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா ?

மாண்புமிகு திரு. எ. அருணாசலம் : பேரவைத் தலைவர் அவர்களே, முதலிலே 4,000 ரூபாயாக இருந்தது. கடந்த ஓராண்டுக்கு முன்பு 6,000 ஆக உயர்த்தப்பட்டிருக்கிறது. ஆகவே இந்த நிதியாண்டிலேயே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்பது போல் கொடுக்க முடியுமா என்று நிதி நிலையைப் பொறுத்துதான் ஆய்வு செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எஸ். பி. மணவாளன் : பேரவைத் தலைவர் அவர்களே, அரிசன மக்களுக்கு கடனாக அளித்து வீடு கட்டுகிற திட்டத்தைப் பொறுத்தவரையில் அந்தக் கடன் தொகை வீடுகட்டுவதற்குப் போதுமானதாக இல்லாத காரணத்தால் பல வீடுகள் கட்டி முடிக்கப்படாமல் இருக்கின்றன. இந்தச் சூழ்நிலையில் கடன் கொடுத்த தொகையைத் திருப்பிச் செலுத்துமாறு அதிகாரிகள் நோட்டீஸ் அனுப்புகிறார்கள். அவ்வாறு கட்டி முடிக்கப்படாமல் இருக்கின்ற வீடுகளைப் பொறுத்த வரையில் அரசு மானியமாக ஒரு தொகையை ஒதுக்கீடு செய்து அவற்றைக் கட்டி முடிக்க ஏற்பாடு செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எ. அருணாசலம் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த வினாவிற்கும், என்னுடைய துறைக்கும் சம்பந்தம் இல்லை. நாங்கள் கட்டிக் கொடுப்பதைப் பொறுத்த வரையில் கடன் என்றில்லாமல் முழுவதும் ப்ரீயாகத்தான் கட்டிக் கொடுக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. சா. ஜெயச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் தாட்கோ மூலமாக ஆதிதிராவிட மக்களுக்கு இலவசமாக வீடு கட்டித் தருவதாகக் கூறுகிறார்கள். அவ்வாறு தாட்கோ மூலமாக இலவசமாக அரசு வீடுகட்ட முன்

வரும்போது அங்கே ஆதிதிராவிட நலத் துறையின் மூலமாக இலவசமாக மனைப்பட்டா வழங்கப்பட்ட நிலங்களில்தான், அதுவும் காலியான மனையாக இருந்தால் மட்டுமே வீடுகள் கட்டிக் கொடுக்கப்படுகின்றன. கடந்த பத்தாண்டுகளுக்கு முன்பு பட்டா வழங்கப்பட்டதற்குப் பிறகு அவை கடந்த பத்தாண்டு களாக காலி மனையாக இருப்பதில்லை. இடையிலே அவர்கள் குடிசை வீடுகளைக் கட்டிக் கொண்டு குடியிருந்து வருகிறார்கள். ஆனால் தாட்கோ மூலமாகப் போகின்ற அதிகாரிகள் அங்கே குடிசைகள் இருந்தால் அந்த மனைகளிலே வீடுகள் கட்டிக் கொடுக்க அனுமதி அளிக்க மறுக்கிறார்கள். அப்படி குடிசை வீடுகள் இருந்தாலும் அவற்றை அகற்றி இலவசமாக வீடு கட்டு வதற்கு அனுமதி அளிக்க தாட்கோ நிறுவனம் முன்வருமா என் பதை அறிய விரும்புகிறேன். அப்படி அரசு பட்டாவாக இல்லா விட்டாலும், ஆதிதிராவிட மக்கள் சொந்தமாக 3 சென்ட் பட்டா வைத்திருந்தாலும், அந்தப் பட்டாவில் ஆதிதிராவிட மக்களுக்கு தாட்கோ மூலமாக இலவசமாக வீடுகட்டித் தர அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 9-50)

மாண்புமிகு திரு. எ. அருணாசலம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 3 சென்ட் பட்டா வைத்திருக்கும் நிலத் திற்குக் கட்டிக் கொடுத்துக் கொண்டு வருகிறோம். மேலும், அவர் கேட்கிற விவரத்திற்குத் தனிக் கேள்வி போட்டால் விளக்க மாகப் பதில் அளிக்கப்படும்.

திரு. எப். எம். இராஜரத்தினம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியில் ஆதிதிராவிட மக்களுக்கு ஏற்கனவே இருந்த ஆட்சியாளர்களுடைய காலத்தில் பட்டா கொடுக்கப்பட்டு, கட்டிக் கொடுக்கப்பட்ட பல வீடுகள் பழுதடைந்த நிலையில், மிக மோசமான நிலையில், அபாயகர மான நிலையில் உள்ளதால், அந்த வீடுகளுக்குப் பதிலாக, மாற்று ஏற்பாடுகள் செய்தோ அல்லது அந்த வீடுகளையே பழுது பார்த்துக் கொடுப்பதற்கோ ஏதேனும் உத்தேசம் உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எ. அருணாசலம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அது போன்ற தவறுகள் இருந்தால், அது பற்றி விசாரணை செய்து முடிவு எடுக்கப்படும்.





திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் இதுவரை தாட்கோ மூலமாகவும், ஆர்.எல்.இ. ஜி.பி., என்.ஆர்.இ.பி. போன்ற திட்டங்களின் மூலமாகவும் எத்தனை வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளன என்று அறிய விரும்புவதோடு, அரிசனங்கள் வீடு கட்டிக் கொள் வதற்கு வசதி இல்லாதவர்கள் என்பதால்தான் நாம் இதுபோன்ற திட்டங்களின் மூலம் அவர்களுக்கு வீடுகளைக் கட்டிக் கொடுக் கிறோம். 6 ஆயிரம் ரூபாய் ஒரு வீட்டுக்கு என்று ஒதுக்கு கிறோம். அது போதவில்லை. அதிலும் சில இடங்களில் களிமண் தரையாக இருப்பதால், வீடுகளை அந்தப் பணத்தில் கட்ட முடிவ தில்லை. அதிகாரிகளே, அரிசன மக்கள் மத்தியில் பேசும்போது, 6 ஆயிரம் ரூபாயில் வீடு கட்ட முடியாது ; ஆகவே, மேற்கொண்டு ஆயிரம் ரூபாய் நீங்கள் கொடுங்கள் என்று சொல்லுகிறார்கள். அதனாலே வீடுகளே கட்டாமல் கூட இருக்கிறார்கள். ஆகவே, அதைப் போக்க அரசு என்ன நடவடிக்கை எடுக்க இருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எ. அருணாசலம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாட்கோ மூலமாக 1979 முதல் 1985 முடிய 13,486 வீடுகள் கட்டப்பட்டிருக்கின்றன. அதேபோல தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் 31-3-1985 முடிய 9,358 வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அதே போல ஊரக நிலம் அற்றோர் வேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் ஆதிதிராவிடர்களுக்கு 31-3-1985 முடிய 19,400 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டிருக்கின்றன. அதேபோல கிராமப்புற வீட்டுவசதி வாரியத்தின் மூலமாகவும் கிட்டத்தட்ட 2 லட்சத்து 4 ஆயிரத்து 55 வீடுகள் கட்டப்படுகின்ற பொறுப்பில் 1 லட்சத்து 62 ஆயிரத்து 341 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டிருக்கின்றன. மாண்புமிகு உறுப் பினர் அவர்கள் களிமண்ணாக இருக்கிறதரையில் கட்டுகிற போது பணம் போதவில்லை என்று சொன்னார்கள். அது எப்படிப்பட்ட தரையாக இருந்தாலும் 6 ஆயிரம் ரூபாய் போத வில்லை என்பதற்காகத்தான் அதைப் பத்தாயிரமாக உயர்த்து வதற்கு ஆவன செய்து கொண்டிருக்கிறோம்.

காட்டுமன்னார்கோயிலில் ஆதிதிராவிட மாணவிகளுக்கு விடுதி.

254—(*வினா எண் 4729)— திரு. சா. ஜெயச்சந்திரன் : மாண்புமிகு ஆதி திராவிட நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காட்டுமன்னார் கோயிலில் ஆதி திராவிடர் மாணவி யர் விடுதி கட்டிடம் கட்டும் பணி கடந்த ஓராண்டு காலமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதற்குக் காரணம் என்ன ?

[1976 மார்ச் 24

மாண்புமிகு திரு. எ. அருணாசலம் : (அ) ஆம்.

(ஆ) 15–8–1982-ல் நிர்ணயிக்கப்பட்ட ஒப்பந்தக்காரர் பணியினை குறித்த காலத்தில் முடிக்காததால், அவரது ஒப்பந்தம் கடந்த ஜனவரி மாதம் ரத்து செய்யப்பட்டு மீதிப் பணிகளை முடிக்க மீண்டும் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு, புதிய ஒப்பந்தக்காரர் நிர்ணயிக்கப்பட்டு, 18–6–1985-ல் அவரிடம் வேலை தளமும் ஒப்படைக்கப்பட்டது. மேற்படி பணிகளைத் தாமதமின்றி ஆரம்பித்து முடிக்குமாறு புதிய ஒப்பந்தக்காரர் வலியுறுத்தப்பட்டு வருகிறார்

திரு. சா. ஜெயச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தற்போது வேலை நடந்து வருவதாகக் கூறுகிறார்கள். அமைச்சர் அவர்களுக்கு மிக்க நன்றி. அதேபோல கடந்த $1\frac{1}{2}$ ஆண்டுக்கு முன்னதாக காட்டுமன்னார் கோயிலிலே சுமார் 17 லட்சம் ரூபாய் செலவிலே ஆதித்திராவிட மாணவர்களுக்கு என்று ஒரு விடுதி கட்டுவதற்கு ஒப்பந்தக்காரர்களுக்கு உரிமை அளிக்கப் பட்டுள்ளது. அதனைக் கட்டுவதற்கு இன்னும் அஸ்திவாரம் கூட போடப்படவில்லை. ஆகவே அது எப்போது கட்டி முடித்து கொடுக்கப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எ அருணாசலம் : தலைவர் அவர்களே, மூலக் கேள்வி காட்டுமன்னார்கோயில் ஆதி திராவிடர் மாணவியர் விடுதி கட்டடம் கட்டுவதில் உள்ள காலதாமதம் பற்றியதாகும். 17 லட்சம் ரூபாயில் அதனைக் கட்டுவதற்கு ஒப்பந்தம் விடப்பெற்று, பணியில் காலதாமதம் ஏற்பட்டதால் வேறு ஒருவருக்கு அதனை மாற்றி இப்போது அதைக் கட்டுவதற்குத் துரித நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது

## ஸ்ரீவைகுண்டம் தொகுதியில் "பழந்தொலி" விவசாயத்திற்குத் தண்ணீர்.

255—(*வினா எண். 3526)— திரு. எஸ். டேனியல்ராஜ்: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

ஸ்ரீ வைகுண்டம் தொகுதியில் தாமிரபரணி வடிகால் ஆற்றுப் பாசனத்தில் 'பழந்தொளி' விவசாயத்திற்காக உடனே தண்ணீர் திறந்து விடுவதற்கு அரசு நடவடிக்கை ஏதும் எடுத்துள்ளதா ?



1986 மார்ச் 24]

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் : ஸ்ரீவைகுண்டம் அணைக்கட்டின் வடக்குப் பிரதான கால்வாயில் உள்ள 'அ' பிரிவு நன்செய் நிலங்களுக்கு மட்டும், பழந்தொழில் சாகுபடிக்குத் தண்ணீர் 1–4–1985 முதல் விடப்பட்டு வருகிறது.

## கொல்லிமலையில் அய்யலாற்றின் குறுக்கே அணை.

*256 (வினா எண். 4817)— திரு. க. சேரலாதன், திரு. வி. தங்கவேலு, திரு. எஸ். இராசாராமன், மற்றும் திருமதி ரா. சரோஜா : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கொல்லிமலையில் உள்ள அய்யலாற்றின் குறுக்கே அணை கட்டும் திட்டமேதும் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் : (அ) மற்றும் (ஆ): தலைமைப் பொறியாளர் (ஆய்வு) ஆய்வில் உள்ளது.

திருமதி ரா. சரோஜா : தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதி எல்லாவற்றிலும் பின்தங்கிய தொகுதியாகும். என்னுடைய தொகுதியில் கொல்லிமலையில் உள்ள அய்யலாற்றின் குறுக்கே அணையைக் கட்டுவதற்கு வேறு ஏதாவது இடையூறு உள்ளதா ? அப்படியிருந்தால் அதைக் களைந்து அந்த அணையைக் கட்டுவதற்கு அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் : தலைவர் அவர்களே, அந்தப் பகுதி மிகவும் பிற்பட்ட பகுதி என்ற காரணத்தினால் தான் இந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதற்காக ஆய்வுகள் நடத்தப்பெற்று துறையூர் வட்டம் புதுப்பட்டி கிராமத்திற்கு அருகே அய்யலாற்றின் குறுக்கே ஒரு நீர்த்தேக்கத்தைக் கட்டி அதன் வாயிலாக 200 மில்லியன் கன அடி தண்ணீரைத் தேக்கி அந்தப் பகுதி மக்களுக்குப் பாசன வசதியைத் தருவதற்காக ஆய்வு நடத்த அரசு ஆணையிட்டு, ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்ட நேரத்தில், அந்த ஆய்வுகளின் அடிப்படையில் அமைக்க உத்தேசித்துள்ள தளத்தின் கடைக்காலில் ஒருசில இடர்ப்பாடுகள் சுட்டிக்காட்டப்பட்டன. குறிப்பாக அந்தப் பகுதியில் உள்ள பாறைகள் பின்னப்பட்ட வகைப் பாறைகளாக அமைந்திருக்கின்றன. அந்த வகைப் பாறையில்

தகுந்த அளவு தண்ணீரைத் தேக்கத் திட்டத்தை அமைக்க முடியாத அளவிற்குப் பாறைகள் வலுவற்றதாக இருப்பதாகத் தெரிவிக்கப் பெற்றதால், அந்தப் பாறைகளைப் பயன்படுத்த முடியுமா என்று ஆய்வு செய்வதற்கு ஹைதராபாத்தில் உள்ள இந்திய அரசின் புவியியல் நில அளவைத் துறை முதல்நிலைப் புவியியல் வல்லுநரை இந்தத் திட்ட தளத்தைப் பார்வையிட்டு அறிக்கை அனுப்பும்படி அரசு கேட்டிருக்கிறது. அந்த அறிக்கை வந்த பிறகு மேற்கொண்டு ஆய்வு நடத்தப்படும். ஆய்வுகள் முடிந்த பிறகு இறுதியாக விரிவான ஆய்வு அறிக்கை அரசுக்கு வரும். அதில் அரசு நடவடிக்கை மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு வி. தங்கவேலு : தலைவர் அவர்களே, வல்வில் ஓரி இருந்த கொல்லிமலையில் அய்யலாற்றின் குறுக்கே அணை கட்ட அரசு முயற்சி செய்வதற்கு நன்றி. 1956 ஆம் ஆண்டு கொல்லிமலையில் புளியஞ்சோலை அணைக்கட்டுத் திட்டமென்று ஒரு திட்டத்தை உருவாக்கி மறைந்த கர்மவீரர் காமராஜர் அவர்களும், கனம் கக்கன் அவர்களும் அங்கே சென்று புளியஞ்சோலை அணைக்கட்டுத் திட்டத்தை உருவாக்க முடியுமா என்று பார்த்து அதனை அரசின் பரிசீலனையில் வைத்தார்கள். அந்தப் புளியஞ்சோலை அணைக்கட்டுத் திட்டத்தை இன்றைக்கு உருவாக்கினால் திருச்சி மாவட்டத்தைப் பொறுத்தவரையில் அந்த மாவட்டத்தைப் பொன்விளையும் மாவட்டமாக மாற்ற முடியும். ஆகவே புளியஞ்சோலை அணைக்கட்டுத் திட்டத்தை மறுபரிசீலனை செய்ய அரசு ஆவன செய்யுமா என்று அறிய ஆவலாக உள்ளேன்.

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் : தலைவரவர்களே, நான் முன்பே சொன்னதைப் போல புதுப்பட்டிக்கு அருகில் இருக்கிற அய்யலாற்றின் குறுக்கே அணை கட்டுகிற திட்டம் ஆய்வில் இருக்கிறது. கடந்த காலத்தில் நாட்டை ஆண்டவர்கள், அமைச்சரவையில் இருந்தவர்கள் எல்லாம் எந்தெந்த இடத்தைப் பார்த்தார்கள். என்னென்ன முடிவு எடுத்தார்கள் என்பதைக் குறித்த விவரங்கள் தற்போது என்னிடத்தில் இல்லை. அமைச்சரவர்கள், வருவதும் பார்ப்பதும் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்வதும் வழக்கமான ஒன்றுதான். பிற்பட்ட பகுதிகளை வளப்படுத்துவதற்கு அரசு முடிந்த அளவிற்கு முயற்சி செய்து அந்த நடவடிக்கையில் ஈடுபடும் என்பதை [illegible] இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

(முற்பகல் 10-00)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் அனுமதியுடன் வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்பெறுகிறது.



திரு. க. சோலைராசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அய்யலாற்றின் குறுக்கே அடித்தளத்திலே அணையைக் கட்டுவது பற்றி அந்த பொறிஞர்களுடைய ஆய்விலே கோளாறு இருக்கும் என்று சொன்னால், அந்தப் பகுதிகள் நீர்ப் பாசனம் பெற வேண்டும் என்ற நோக்கத்தோடு, அதை அப்பர் டவுனுக்கு மாற்றி, அணையைக் கட்டுகிற திட்டத்தை அரசு மீண்டும் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளுமா என்பதை அறிய விரும்புகிறேன். மேலும் குற்றாலத்திலுள்ள பழத்தோட்டம் என்கிற அருவியை விட மிகச் சிறப்பான முறையில் இங்கே இயற்கையாக அமைந்துள்ள ஒரு அருவி இருக்கிறது. அங்கே வரக்கூடிய உல்லாசப் பயணிகளைக் கவருகின்ற முறையிலேயும், அந்தப் பகுதியிலே வருமானத்தை ஈட்டுகின்ற வகையிலேயும், பொதுப் பணித்துறை இதை ஒழுங்குபடுத்தி சீர் செய்ய பரிசீலனை செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தின் சிறப்பை நேரடியாக உணர்ந்து கொள்ளக்கூடிய அளவிற்கு அந்தத் தொகுதியின் சட்டப்பேரவை உறுப்பினர் திருமதி சரோஜா அவர்கள் என்னை அழைத்துச் சென்று அந்த திட்டத்தைப் பார்வையிட வைத்தார்கள். அந்த முறையில் தொடர்ந்து உரிய நடவடிக்கை மேற்கொள்ள முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அது நீங்கலாக கொல்லிமலையில் இருக்கின்ற அருவியைப் பற்றிச் சொன்னார்கள். நாட்டிலே அருவி வளம் என்பது எங்கேயோ ஒருசில இடங்களிலேதான் அமைவது வழக்கம். அவ்வாறு கிடைக்கின்ற வாய்ப்பை அரசு பயன்படுத்திக் கொள்ளத் தயங்காது. பயணிகளைக் கவருவது பொதுப்பணித்துறையின் பணியாக இல்லாவிட்டாலும், அவர்களைக் கவருவதற்காக தனியாக ஒரு துறை இருந்தாலும், அந்த அருவியை ஆக்கபூர்மான பணிகளுக்குப் பயன்படுத்த முடியுமா என்ற முயற்சியில் பொதுப்பணித்துறை ஈடுபட்டு, உரிய அறிவுரைகளை உரிய துறைக்கு வழங்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

டாக்டர் ந. மாசிலாமணி : பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கொல்லிமலை அய்யலாற்றின் குறுக்கே அணைக் கட்டும் திட்டம் ஆய்வில் இருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். கடந்த காலத்திலே உள்ள அமைச்சரவையிலே இருந்து அமைச்சர்கள் சம்பரதாயத்திற்காக சொன்ன அந்த ஆய்வுப்போல் அல்லாமல், இது நிச்சயமாகத் துவக்கப்பட்டு, எந்த ஆண்டில் முடிவு அடைய இருக்கிறது என்ற தீர்க்கமான திட்டத்தை இப்போது அறிவிப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

[1986 மார்ச் 24

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் : பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த காலத்திலே இருந்த அமைச்சரவை மேற்கொண்ட நடவடிக்கைகள் சம்பிரதாயத்திற்காக இருந்ததா, இல்லையா என்பது எனக்குத் தெரியாது. இருந்தாலும், இந்த அமைச்சரவையைப் பொறுத்தவரையிலும் சம்பிரதாயத்திற்காக மேற்கொள்ளவில்லை என்பதை உணர்த்துவதற்காகத்தான் உண்மையிலேயே தீவிரமான முறையில் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. அவ்வாறு ஆய்வு மேற்கொள்ளப்பட்டு இருக்கிற நேரத்தில்தான் அமைக்கப்பட்ட இருக்கின்ற இடத்திலே இருக்கக்கூடிய கற்கள் எல்லாம் சிதறுகின்ற தன்மை வாய்ந்த கற்களாக, பாறைகளாக அமைவதைப் பார்த்து, அந்தப் பாறைகளை தளமாக வைத்து, அந்தப் பகுதியிலே நீர்த்தேக்கத்தைக் கட்ட முடியுமா என்ற ஆய்வைத்தான் ஹைதராபாத்தில் உள்ள புவியியல் துறை மேற்கொண்டு இருக்கிறது. ஆகவே இந்த அரசின் நல்லெண்ணத்தை மாண்புமிகு உறுப்பினர் புரிந்து கொள்வார்கள் என்று கருதுகிறேன். உரிய முடிவுகள் வந்த பிறகுதான் தொடர்ந்து பணிகளை மேற்கொள்ள முடியும்.

கடையநல்லூர் கருப்பா நதி நீர்த்தேக்க திட்டம்.

257—(*வினா எண். 5036) திரு. தெ. பெருமாள் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கடையநல்லூர் தொகுதி கருப்பா நதி நீர்த்தேக்கத் திட்டக் கால்வாய்களை மராமத்து செய்ய திட்டம் ஏதும் அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில் பாப்பான்கால், ஸ்ரீவல்லபன்கால், தேவர்கால் ஆகியவற்றுக்கான மதிப்பீடு எவ்வளவு ?

(இ) வேலை எப்பொழுது நிறைவுபெறும் ?

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் : (அ) ஆம்.

(ஆ) பாப்பான்கால், ஸ்ரீவல்லபன்கால், தேவர்கால் ஆகியவற்றிற்கான சிறிய அளவிலான செப்பனிட்டுப் பணிகள் மேற்கொள்ள முறையே ரூ. 30,000, ரூ. 47,000, ரூ. 18,000-க்கு மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டுள்ளன.

(இ) வேலைகள், வரும் நிதியாண்டில், நிதி ஒதுக்கீட்டிற்கேற்ப மேற்கொள்ளப்பட உள்ளன.



1986 மார்ச் 24]

திரு. தெ. பெருமாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் கருப்பா நதித் திட்டத்தின்கீழ் உள்ள மூன்று கால்வாய்களுக்கு நிதி ஒதுக்கியதற்காக என்னுடைய தொகுதி மக்களின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். கருப்பா நதி அணைக்கட்டில் ஏறத்தாழ ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்களுக்கு தண்ணீர் தட்டுப்பாடு ஏற்பட்டு இருக்கிறது. இது சிறிய நீர்த்தேக்கமாக இருப்பதால் அங்கே இருக்கிற கால்வாயின் இருபக்கமும் சுவர்கள் வைத்து தண்ணீர் திறந்துவிடுகிறபோது, உதாரணமாக 100 கன அடி தண்ணீர் திறந்துவிடுகிறார்கள் என்று சொன்னால், அது முறையான குளங்களுக்கு வரும்போது 50 கன அடி தண்ணீராகத்தான் இருக்கிறது— அங்கே வெறும் மணலாக இருக்கின்ற காரணத்தால், தண்ணீர் முழுமையாக வந்து சேருவதில்லை. எனவே இதை தடுக்கின்ற முறையில் சிமெண்ட் வைத்து செய்தால், 100 கன அடி தண்ணீரும் நேரடியாக அந்தக் குளங்களுக்குச் செல்கின்ற வகையில் வாய்ப்பு ஏற்படும் . எனவே இத்தகைய திட்டம் அரசிடம் உள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் : பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக இப்பேர்ப்பட்ட கால்வாய்கள் எல்லாம் நவீனப்படுத்தாததன் காரணமாக நீர் இழப்பு ஏற்படுகிறது என்பதை இந்த அரசு அறியும். அத்தகைய நீர் இழப்புகளில் இருந்து விடுதலை பெற்று, அவ்வாறு இழப்புக்கு உட்படுகின்ற தண்ணீரைச் சேமித்து அதைக் கூடுதலான பகுதிகளுக்கு பாசனம் பெறக்கூடிய அளவிற்கு திருப்பிவிட வேண்டும் என்பதுதான் இந்த அரசின் செயல்முறைத் திட்டமாகும். அந்த வகையில் நாட்டில் உள்ள பல கால்வாய்கள் எல்லாம் இன்று நவீனப்படுத்தப்பட்டு வருகின்றன. கருப்பா நதியைப் பொறுத்தவரையிலும் அங்கே மணல் பகுதி அதிகமாக இருக்குமானால், மணல் உறிஞ்சுகின்ற தன்மைகள் அதிகமாக இருக்கின்றது என்று சொல்வது சரியாக இருந்தால், நீர் இழப்பிலிருந்து அந்தப் பகுதிகளைப் பாதுகாப்பதற்காக சரியான நடவடிக்கைகள் மேற்கொள்ள தனியாக ஆய்வுகள் மேற்கொள்ள அரசு முடிவு எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. தெ. பெருமாள் : மாண்புமிகு பேரவைத் தலைவ ரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் அங்கே நீர் பிடித்தம் இருக்கின்ற இடத்திற்கு உண்டான நீர் பிடித்தம் இருக்குமே யானால் அதற்குத் தேவையான நடவடிக்கை எடுக்கப்படும் என்று உறுதி கூறியதற்கு நன்றியைக் கூறிக்கொள்கிறேன். அதே சமயத்தில் கருப்பா நதி நீர்த்தேக்கத்தைப் பொறுத்தமட்டில் மிகச்சிறிய நீர் தேக்கமாக இருக்கிறது. அங்கே பாசனங்கள் அதிகமாக இருக்கின்றன. மற்றைய நீர்த்தேக்கங்களைப் போல்

இந்த நீர்த்தேக்கத்தில் இந்த வருடத்தில் எப்போது அந்தக் கால்வாய்க்கு நீர் திறந்து விடப்படும் என்ற முன் அறிவிப்பு இதுவரை அறிவிக்கப்படவில்லை. அப்படி இதுவரை அறி விக்கப்படாத்து இனிமேல் அறிவிக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் :** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அந்தக் கருப்பா நதி நீர்த் தேக்கத் திட்டத்தின் ஆயக்கட்டுதாரர்களின் கூட்டத்தைக் கூட்டி பேசி எப்படி ரெகு லேட் செய்வது என்பதைப்பற்றி மாவட்ட ஆட்சித் தலைவ ருடைய ஆலோசனையோடு உரிய கால அட்டவணை தயாரிக்கப் பட்டு, அதை வருங்காலத்தில் நடைமுறைப்படுத்தக்கூடிய அள வுக்கு பொதுப்பணித் துறை நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இந்தக் கருப்பா நதித் திட்டத்திலே பாப்பான் கால்வாய் என்ற ஒரு கால்வாய் இருக்கிறது. இது புதுக்குடி போன்ற ஊர்களிலுள்ள கண்மாய்களின் வழியாகச் செல்கின்ற கால்வாய். இந்தக் கால்வாய் திட்டத்திற்காக 9 ஆயிரம் ரூபாய் மட்டுமே ஒதுக்கி இருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அந்தக் கால்வாய் மிகவும் தூர்ந்துபோய் இருக்கிற காரணத் தால் அதிக நிதி ஒதுக்கி அதை நவீனப்படுத்துவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப்:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நான் முந்தைய மூலக் கேள்விக்கும் விடை சொல்லியிருக்கிறேன். துணைக் கேள்விக்கும் விடை சொல்லி யிருக்கிறேன். பாப்பான் கால்வாய், ஸ்ரீவல்லபன் கால்வாய், தேவர் கால்வாய் ஆகிய மூன்று கால்வாய்களுக்கும் மேற் கொள்ள வேண்டிய உரிய செப்பனிட்டுப் பணிகளைப் பற்றியும் அதற்கு ஒதுக்கீடு செய்ய வேண்டிய தொகையினையும் நான் இங்கே சுட்டிக்காட்டியிருக்கிறேன். தகுந்த ஆய்வாளர் களுடைய முடிவின் காரணமாக ஆய்வுகள் மேற்கொள்ளப் பட்ட அந்த அடிப்படையில்தான் நிதி ஒதுக்கீடு செய்யப் படுகின்றது. ஆகவே நானோ நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்களோ இங்கே அமர்ந்துகொண்டு எத்தகைய அளவிற்கு நாம் பணத்தை செலவு செய்தால் திட்டம் சரியாக இருக்குமென்று சொல்வது அவ்வளவு சரியாக இருக்காது என்று கருதுகின்றேன். ஆய்வுகளில் ஏதாவது குறைபாடுகள் இருக்குமே யானால், குறிப்பிட்ட குறைபாடுகளை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சுட்டிக்காட்டினார்கள் என்று சொன்னால் தவறான ஆய்வுகள் மேற்கொண்டவர்கள் மீது நடவடிக்கைகள் கூட எடுக்க முடியும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.



**திரு. டி. ஆர். வேங்கடரமணன் :** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அமைச்சரவர்கள் தன்னுடைய பதிலைச் சொல்கின்றபோது இந்த மணற்பாங்கான கால்வாய்களிலே தண்ணீர் உறிஞ்சப்படுவதை அரசு அறியும் என்றும் அதற் காக சிமெண்ட் தளங்கள் அமைக்கப்படுகிறதென்றும் குறிப் பிட்டார்கள். அதை நான் ஏற்றுக்கொள்கிறேன். ஆனா லும்கூட இன்றைக்கு அமைச்சரவர்கள் திருநெல்வேலி மாவட் டத்தைச் சார்ந்தவர்கள்— திருநெல்வேலி மாவட்டத்திலே ஒரு கால்வாயில்கூட இந்த சிமெண்ட் தளங்கள் அமைக்கப்பட வில்லை என்பது அமைச்சர் அவர்களுக்குத் தெரியும். ஒரு நதியின் வேகத்தோடு, திருநெல்வேலி மாவட்டம் தண்ணீர் தட் டுப்பாடான மாவட்டம் என்பதைக் கருத்திலே கொண்டு, அது தன்னுடைய மாவட்டம் என்பதையும் கருத்திலே கொண்டு, இந்தத் திருநெல்வேலி மாவட்டத்திலே இதுபோன்ற சிமெண்ட் தளங்கள் அமைக்கின்ற பணியை அவர்கள் விரைவாக செயல் படுத்த முன்வருவார்களா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் :** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, சிமெண்ட் தளங்களை அமைத்து அந்தக் கால்வாய்களை நவீனப்படுத்துகின்ற திட்டம் எங்கேயும் செயல்படுத்தப்படவில்லை என்பது உண்மைக்குப் புறம்பான ஒன்றாகும். தாமிரபரணியிலே கூட அத்தகைய பணிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. நான் சார்ந்திருக்கிற ராதா புரம் தொகுதிக்கு அடுத்திருக்கின்ற நாங்குனேரி தொகுதியிலே கூட வடமலையான் கால்வாயிலே அத்தகைய பணிகள் மேற் கொள்ளப்பட்டிருக்கின்றன. என்றாலும் திருநெல்வேலி மாவட் டம் பொதுவாக விவசாயத்தை நம்பியிருக்கக்கூடிய ஒரு மாவட்டம். இருக்கக்கூடிய ஒரே சிறப்பான ஆறு தாமிர பரணியாறு. அதையொட்டி மணிமுத்தாறு போன்ற சில ஆறுகளெல்லாம் இருக்கின்றன. மணிமுத்தாறு ஆற்றைக்கூட பல இடங்களில் நவீனப்படுத்தியிருக்கிறோம். நவீனப் படுத் தக்கூடிய அளவிற்கு தனியாக திட்டத்தைத் தீட்டி செயல்படுத் திக் கொண்டு வருகிறோம் ஃபேஸ்டு புரோகிராமாக. திரு நெல்வேலி மாவட்டத்திலுள்ள தாமிரபரணியைப் பொறுத்த மட்டிலும் நவீனப்படுத்துவதற்கான ஒரு திட்டத்தினை தயாரித்து உலக வங்கியினுடைய ஒத்துழைப்போடு அந்தத் திட் டத்தை மேற்கொள்ள அரசு முயற்சி எடுத்துக்கொண்டு வரு கின்றது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப் பெற்றிருந்தால், அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 2. தகவல் கோரல்

(அ) அரசு சார்பில் நடைபெறும் விழா அழைப்பிதழில், அந்தந்தத் தொகுதி உறுப்பினர் பெயரும் சேர்க்கப்படுதல்.

*திரு. ஜி. கே. ஜெ பாரதி : பேரவைத் தலைவரவர்களே, என்னுடைய திருவொற்றியூர் தொகுதியைச் சேர்ந்த மணலியில் தமிழ்நாடு கனிம நிறுவனம் 100 விழுக்காடு ஏற்றுமதி செய்யக் கூடிய கிரேனைட்ஸ் பாறை அறுத்துக் கொடுக்கும் தொழிற் சாலை திறக்க 25-3-1986 அன்று நம்முடைய தமிழக அரசினுடைய தலைமையமைச்சர் மாண்புமிகு எம். ஜி. ஆர். அவர்கள் அங்கே வருகை தரவிருக்கிறார்கள். அப்படிப்பட்ட சிறப்பான விழாவிலே—நான் அந்தத் தொகுதியைச் சேர்ந்த பேரவை உறுப்பினர்—அந்த அழைப்பிதழிலே என்னுடைய பெயர் இல்லை. இந்தச் சூழ்நிலை தமிழகம் முழுவதும் இருக்கின்ற சட்டப் பேரவை மேலவை உறுப்பினர்களுக்கும், பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் உள்ளதாக அறிகிறேன். ஆகவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இனிமேல் இந்தமாதிரி தவறுகள் ஏற்படா வண்ணம் அதிகாரிகளிடம் சுட்டிக்காட்ட வேண்டுகிறேன்.

(முற்பகல் 10-10.)

மாண்புமிகு திரு. க. இராசாராம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த விழாவில் 6, 7 அமைச்சர்கள் கலந்து கொள்கிறார்கள். அதில் சட்டமன்ற உறுப்பினர்களும், நாடாளுமன்ற உறுப்பினர்களும் கலந்து கொள்வார்கள் என்று போடப்பட்டு இருக்கிறது.

திரு. ஜி. கே. ஜெ. பாரதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெயரைப் போடவில்லை...... (கூச்சல் குழப்பம்)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இப்படி எல்லோரும் ஒரே நேரத்தில் எழுந்து நின்று ஒருவருக்கு ஒருவர் நேருக்குநேர் பார்த்துக் கொண்டு பேசக்கூடாது.

திரு. ஜி. கே. ஜெ. பாரதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சரும் மற்ற அமைச்சர்களும் கலந்து கொள்வார்கள் என்று போட வேண்டியது தானே? (கூச்சல்-குழப்பம்)



திரு. உ. சுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கு கேட்கப்படும் கேள்வி, தொகுதியில் நடைபெறுகின்ற அரசு விழாக்களில், அழைப்பிதழில் அந்தத் தொகுதி சம்பந்தப்பட்ட சட்டமன்ற உறுப்பினர், நாடாளுமன்ற உறுப்பினர் பெயர்களைக் குறிப்பிட வேண்டும் என்பதும் அவர்கள் அந்த நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ள வேண்டும் என்பதும் ஒரு மரபு. அந்த வகையில் அந்த உணர்ச்சியை கிளப்பினார்கள். ஆகவே இங்கே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது மொத்தத்தில் சட்டமன்ற உறுப்பினர், நாடாளுமன்ற உறுப்பினர் கலந்து கொள்வார்கள் என்று சொன்னால் ஏதோ பொதுமக்களில் ஒருவராக கருதி சொல்வதுபோல் இருக்கிறது.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தலைவர் அவர்களே, யாரையும் மரியாதைக் குறைவாக நடத்த வேண்டும் என்ற எண்ணம் எனக்கு இல்லை.

திரு. உ. சுப்பிரமணியன் : தலைவர் அவர்களே, தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களுக்கு உரிய மரியாதையை தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். ஒட்டுமொத்தமாக 234 உறுப்பினர்கள் பெயரையும் போட வேண்டும் என்று கேட்கவில்லை. அந்த அந்த தொகுதியைச் சேர்ந்த சட்டமன்ற உறுப்பினர், பாராளுமன்ற உறுப்பினர் பெயர்களைப்போட்டு அவர்களை அந்த நிகழ்ச்சியில் பங்குபெற செய்ய வேண்டும் என்றுதான் நாங்கள் எப்போதும் கேட்டு வருகிற ஒரு கோரிக்கை ஆகும். ஆனால் அது மீண்டும், மீண்டும் மறுக்கப்படுகிறது. இனிமேலாவது வருங்காலத்தில் இப்படிப்பட்ட நிகழ்ச்சிகளில் அந்த அந்த சட்டமன்ற உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் பெயர்கள் இருக்குமானால் அவர்கள் கலந்து கொள்வார்கள். ஆகவே அந்த உறுதியைத் தருவார்கள் என்று நாங்கள் எதிர்பார்க்கிறோம்.

*திரு. க. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு நடத்துகின்ற விழாக்களில் அந்தத் தொகுதியைச் சேர்ந்தவர்கள் இடம்பெறுவார்கள் என்று அவை முன்னவர் அவர்கள் ஏற்கனவே இந்த அவைக்கு உறுதிமொழியை தந்து இருக்கிறார்கள். அந்தத் தொகுதியைச் சேர்ந்த சட்டமன்ற உறுப்பினர், நாடாளுமன்ற உறுப்பினர் பெயர் நிச்சயமாக அதில் போடப்படும் என்று முன்னவர் அவர்கள் ஏற்கனவே உறுதிமொழி கொடுத்து இருக்கிறார்கள். அதையும் மீறி முன்பு ஆலந்தூரில் நடைபெற்ற விழாவிலும், இப்போது திருவொற்றியூரில் நடைபெற இருக்கின்ற விழாவிலும் பெயர்கள் குறிப்பிடப்படாமல் இருக்கின்றன. இனிமேல் இவ்வாறு நடைபெறாமல் இருக்க இந்த அவையில் உறுதிமொழி கிடைக்குமா என்று முன்னவர் அவர்களை தங்கள் மூலமாகக் கேட்டுக்கொள்கிறேன்.

[1986 மார்ச் 24

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அவையில் பல தடவை
அதுபற்றி நான் விளக்கம் தந்து இருக்கிறேன். ஆக அரசு
சார்பாக நடைபெறுகின்ற நிகழ்ச்சிகள் எதுவாக இருந்தாலும்
எந்தத் தொகுதியில் நடைபெறுகிறதோ அந்தத் தொகுதிக்கு
உரிய சட்டமன்ற பேரவை உறுப்பினர், அந்தத் தொகுதிக்கு
உரிய சட்டமன்ற மேலவை உறுப்பினர், அந்தத் தொகுதிக்கு
உரிய நாடாளுமன்ற உறுப்பினர் பெயர்களை குறிப்பிட்டுப்
போட்டு மற்றவர்களோடு இணைக்க வேண்டும் என்பதுதான்
நாம் பொதுவாக கடைப்பிடிக்க வேண்டும் என்று வற்புறுத்தி
வருகின்ற கொள்கை.

அது பல இடங்களில் கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றது.
மாண்புமிகு உறுப்பினர் எடுத்துத் தெரிவித்தமாதிரி தவறு
தலாக சிலபல இடங்களில் விடுபட்டு இருப்பது வருத்தத்திற்
குரிய ஒன்று, அது விடுபட்டிருக்கக் கூடாது. இனிமேலாவது
எல்லாத் துறையினரும் இந்த அவையில் எழுப்பப்பட்ட பிரச்சி
னையை அடிப்படையாக வைத்துக்கொண்டு, அரசு நிகழ்ச்சிகள்
எங்கு நடைபெற்றாலும், அந்தத் தொகுதிக்குரிய சட்டமன்ற
உறுப்பினர், நாடாளுமன்ற உறுப்பினர், அவர்களை
அதிலே இடம் பெறச் செய்ய வேண்டும் என்பது அரசின் திட்ட
வட்டமான தெளிவான கொள்கை. அதிலே குறைபாட்டிற்கு
இடம் இல்லாமல் அரசு நிகழ்ச்சிகளை அமைக்க வேண்டும்.
அந்த வகையில் அந்தந்தத் துறையினர் ஈடுபடுவார்கள் என்பதை
இப்போது நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

டாக்டர் கே. பி. இராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர்களுடைய பெயரை
அரசு விழாக்களில் போடவில்லை என்று எதிர்க்கட்சித் தலைவர்
அவர்கள் எழுப்பினார்கள். (குறுக்கீடுகள்.)......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அது முடிந்துவிட்ட விவ
காரம். (குறுக்கீடு)....

டாக்டர் கே. பி. இராமலிங்கம் : மைய அரசு நடத்து
கின்ற விழாக்களில் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு அழைப்
பிதழ்கள் அனுப்புவதில்லை. அது ஏனோ என்று தெரிய
வில்லை. எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இதை அருள்
கூர்ந்து........(குறுக்கீடு).



1986 மார்ச் 24]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பார்லிமெண்டில் கேட்க
வேண்டும். அதிலே எனக்கு ஜுரிஸ்டிக்ஷன் இல்லை.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : பேரவைத் தலைவர்
அவர்களே, அரசு நடத்துகிற விழாக்களை, நிகழ்ச்சிகளைப் பற்றி
இங்கே குறிப்பிட்டார்கள். அரசு நடத்துகிற விழாக்களில்,
நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வதில்லை என்று திராவிட முன்
னேற்றக் கழக உறுப்பினர்கள் தீர்மானம் போட்டிருக்கிறார்கள்.
இப்போது அவர்கள் அந்த விழாக்களில் கலந்து கொண்டு, அர
சுக்கு ஒத்துழைப்பு தருவது என்ற தீர்மானத்தைப் போட்டிருக்
கிறார்களா என்பதை தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

திரு. க. அன்பழகன்: தலைவர் அவர்களே, எங்களைப்
பற்றி அக்கரையாக அமைச்சர் அவர்கள் கேட்கக் கூடிய ஒரு
காலம் வந்திருப்பதற்காக அமைச்சர் அவர்களுக்கு நன்றி.
இரண்டாவதாக, அரசு நடத்துகிற பொது விழாக்களில் நாங்கள்
கலந்து கொள்வது இல்லை என்று திட்டவட்டமாக தெரிவித்
திருக்கிறோம். ஆனால தொகுதிகளில் நடத்துகிற தொகுதி
சம்பந்தப்பட்ட அந்த விழாக்களில் அந்தத் தொகுதி சட்டமன்ற
உறுப்பினர் கலந்து கொள்ளலாம் என்றும் அப்பொழுதே தீர்
மானித்திருக்கிறோம். நீங்கள் நடத்துகிற நிகழ்ச்சிகளைப்
பொறுத்தது நாங்கள் கலந்து கொள்வது.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : தலைவர் அவர்
களே, கலந்து கொள்வது அந்த நிகழ்ச்சிகளைப் பொறுத்தது
என்று சொன்னார்கள். அந்த நிகழ்ச்சி எப்படி அமையும் என்
பதை அறிந்து, அதற்கேற்ப கலந்து கொள்வதாக பேராசிரியர்
அவர்கள் குறிப்பிட்டார்கள். அந்த நிகழ்ச்சிகளில் கலந்து
கொள்வதைப் பற்றி எப்படி முடிவு செய்வார்கள் அல்லது முடிவு
செய்ய மாட்டார்கள் என்பதை நாங்கள் எப்படி முன்னமேயே
நிர்ணயிப்பது ? பின்னர் அவர் கூறுகிற அழைப்பிதழ்களை எப்படி
அச்சடிப்பது ?

(முற்பகல் 10.20)

திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, நான் சொன்
னது விளங்கியிருக்கும் என்று கருதுகிறேன். அரசாங்கம்
சார்பாக சில விழாக்களை எடுக்கிறீர்கள். அந்த விழாக்களில்
பல பேரை பேசுவதற்கென்று அழைக்கிறீர்கள். அந்த முறையில்
..............(குறுக்கீடு). தலைவர் அவர்களே, அரசாங்கம் சில
பொது நிகழ்ச்சிகளை, சில பேர்களுடைய நினைவு நிகழ்ச்சிகளை
நடத்தி, அதிலே எதிர்க் கட்சியிலே உள்ள சிலரை பேச அழைக்
கிறார்கள். அவற்றியிலே நாங்கள் கலந்து கொள்வதில்லை.

தொகுதிகளிலே நடைபெறுகிற எந்த நிகழ்ச்சியாக இருந்தாலும்— அது நகர்மன்றம் சார்பாக நடத்தப்படுகிற நிகழ்ச்சியாக இருந்தாலும் அரசு நடத்துகிற நிகழ்ச்சியாக இருந்தாலும்— அந்த நிகழ்ச்சிகளிலே அந்தந்தத் தொகுதி சட்டமன்ற உறுப்பினர்கள் பொது மக்கள் பிரதிநிதிகள் என்ற முறையிலே, அதே போன்று நாடாளுமன்ற உறுப்பினர்கள் கலந்து கொள்ளலாம் என்று ஏற்கெனவே நாங்கள் அறிவித்து இருக்கிறோம். அந்த முறைப்படி தொகுதி நிகழ்ச்சிகளுக்குத் தான் கேட்கப்பட்டதே தவிர பொது விழாக்கள் பற்றி—நீங்கள் எவ்வளவோ விழாக்கள் நடத்துகிறீர்கள் அந்த விழாக்கள் பற்றி— இங்கே கேட்கப்படவில்லை.

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து :** தலைவர் அவர்களே, எந்த நிகழ்ச்சியிலும் கலந்து கொள்வதில்லை என்று ஏற்கெனவே தீர்மானம் போட்டிருந்தார்கள். இப்போது அதைத் தளர்த்தி இந்த நிகழ்ச்சியிலே கலந்து கொள்ளலாம் என்று வந்திருப்பதற்கு, இந்த மனமாற்றத்திற்கு நன்றி. (மேசையைத் தட்டும் ஒலி)

திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, அந்தத் தீர்மானத்திலே அப்போதே போடப்பட்ட கருத்து அது. தொகுதி சம்பந்தப்பட்ட பிரச்சினைகளுக்காக அல்ல, நீங்கள் நடத்துகிற சில விழாக்களுக்கு, ஒன்றிரண்டு விழாக்களுக்கு நீங்கள் என்னையோ அல்லது கலைஞரையோ அல்லது அப்படிப்பட்ட சிலரையோ அழைக்கிறீர்கள். அப்படிப்பட்ட நிகழ்ச்சிகளுக்கு வருவதில்லை என்று முடிவு எடுத்திருக்கிறோம். அதைத்தான் தெரிவித்திருக்கிறோம். ஒருவேளை நாங்கள் அதைத் தளர்த்தி விட்டோம் என்று அமைச்சர் அவர்கள் கருதுகிறார்களா? நாங்கள் எப்போது தளர்த்துகிறோம் என்பது எங்களுக்குத்தான் தெரியும். (மேசையைத் தட்டும் ஒலி).

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து :** தலைவர் அவர்களே, எப்போது தளர்த்துவார்கள், எப்போது நிறுத்துவார்கள் என்பது மக்களுக்கும் தெரியும். (சிரிப்பு).

திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, அதைத் தெரிந்து தான் மக்கள் அண்மையிலே ஒரு முடிவு எடுத்தார்கள். (சிரிப்பு).

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து :** தலைவர் அவர்களே, அந்த முடிவு நிலைக்கப் போவதில்லை, மீண்டும் அது நிச்சயமாக மாறும். (மேசையைத் தட்டும் ஒலி).





திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, ஜோஸ்யம் சொல்வதற்கு எத்தனையோ பேர்கள் ஆலமரத்தடியில் இருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி).

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து :** தலைவர் அவர்களே, கடந்த நாடாளுமன்றத் தேர்தல் முடிந்து நடந்த சட்டசபைத் தேர்தல் அதற்கு உதாரணமாக இருந்திருக்கிறது. இது அரசியல் ஆருடம் அல்ல, மக்களுடைய மனக்கணிப்பு, மக்களுடைய நாடித் துடிப்பைப் புரிந்து கொள்ள முடியும். (மேசையைத்தட்டும் ஒலி).

திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, அது கடந்த காலம், எதிர்காலமல்ல. (மேசையைத் தட்டும் ஒலி).

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இது உங்கள் இருவருடைய விவாதமல்ல, அதோடு நிறுத்திக் கொள்ளலாம்.

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து :** தலைவர் அவர்களே, நிகழ்காலமும் எங்களுக்குத்தான் சொந்தம், எதிர்காலமும் எங்களுக்குத்தான் சொந்தம். (மேசையைத் தட்டும் ஒலி).

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இப்படி ஒருவருக்கொருவர் எக்சேஞ்சஸ் தனிப்பட்ட முறையிலே தேவையில்லை.

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து :** தலைவர் அவர்களே, ஆசிரியர் கேள்வி கேட்கும்போது மாணவன் பதில் சொல்லித்தான் தீர வேண்டும். (சிரிப்பு).

திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, இரண்டு உண்மைகளை நான் சொல்லியாக வேண்டும். எதிர்காலத்திலே மக்கள் தீர்மானிப்பார்கள், அது அனைவருக்கும் பொது. இரண்டாவது, ஆசிரியர் எப்போதும் அறிவுரை சொல்லிக் கொண்டு தான் இருக்க வேண்டும். (சிரிப்பு).

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து :** தலைவர் அவர்களே, சில நேரங்களிலே ஆசிரியர் தவறும்போது மாணவன் எடுத்துக் காட்டுவதிலே தவறில்லை. (சிரிப்பு).

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இரண்டு பேர்களும் பேசுகிறீர்கள், எனக்கு ஒரு வாய்ப்புக் கொடுங்கள். இந்தமாதிரி எக்சேஞ்சஸ் சட்டமன்றத்திலே பரிமாறிக் கொள்வது சரியாக இருக்காது.

திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, தொடங்கியது நானல்ல.

[1986 மார்ச் 24

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** சரி, எப்பொழுது முடியும் என்று தெரியவில்லை. ஒரு தடவை சொல்லிவிட்டால் நின்று விடும் என்று நினைத்தேன். ஆனால் இது டென்னிஸ் கோர்ட் மாதிரி இங்கும் அங்கும் போய் வந்து கொண்டிருக்கிறது. (சிரிப்பு).

**திரு. க. அன்பழகன் :** தலைவர் அவர்களே, தங்களுக்கும் சொல்கிறேன், தொடங்கியவர்களை நிறுத்தச் சொல்ல வேண்டுமே தவிர பதில் சொல்கிறவர்களை நிறுத்தச் சொல்லக் கூடாது. தொடங்கியது நான் அல்ல.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** சரி, அதற்கும் பதில் வருமே.

**திரு. க. அன்பழகன் :** தலைவர் அவர்களே, அதோடு நிறுத்திக் கொள்ளுங்கள். ஆசிரியர் தவறு செய்கிறபோது மாணவர் திருத்த வேண்டியது கடமை என்று அமைச்சர் சொன்னார். நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். கடைசியில் திருத்துகிறவர் ஆசிரியராகத்தான் இருப்பார். (சிரிப்பு).

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து :** தலைவர் அவர்களே, மாணவனும் ஆசிரியராக மாற முடியும்.

**திரு. க. அன்பழகன் :** தலைவரவர்களே ..............

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இதை எப்பொழுது முடிப்பது ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, பிரச்சினை எங்கேயோ ஆரம்பித்து எங்கேயோ போய்க் கொண்டிருக்கிறது. வினாவை மாண்புமிகு அமைச்சர் காளிமுத்து அவர்கள் எழுப்பினார்கள். அதற்கு பேராசிரியர் அவர்கள் விடை சொன்னார்கள். கடைசி வினாவை இப்பொழுது எழுப்பினார். அதற்கான கடைசி விடையோடு இதை நிறுத்தி விடும்படியாக நான் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. க. அன்பழகன் :** தலைவர் அவர்களே, மாணவர்களும் ஆசிரியர்களாக் ஆவார்கள் என்பது நான் அறிந்த ஒன்று. நானே பல மாணவர்களை ஆசிரியர்களாக ஆக்கியிருக்கிறேன். இப்படி மாணவர்கள் ஆசிரியர்களாக ஆகிவிடுகின்ற காரணத்தினால், ஆசிரியர்கள் மாணவர்களாக ஆக மாட்டார்கள்.



1986 மார்ச் 24]

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து :** மாண்புமிகு தலைவரவர்களே, விட்டுக் கொடுக்கின்ற தன்மை ஆசிரியருக்குத்தான் வரவேண்டும். ஆனால், இதிலே மாணவன் பெருந்தன்மையோடு நடந்து கொள்கிறேன், இதோடு முடித்து விடுகிறேன்.

**திரு. க. அன்பழகன் :** தலைவரவர்களே, விட்டுக் கொடுக்கின்ற தன்மை........

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இதற்கு ஆசிரியர்களும் மாணவர்களும் சேர்ந்து பட்டிமன்றம் தான் வைக்க வேண்டும், வேறு வழி இல்லை.

**திரு. க. அன்பழகன் :** தலைவர் அவர்களே, நான் இதை வளர்த்த விரும்பவில்லை. ஆனால் அவர் சொல்லியதற்குப் பிறகு அதற்குப் பதில் சொல்ல வேண்டியிருக்கிறது. தலைவரவர்கள், பொதுயிடத்தில் இருப்பதாக நான் கருதிக் கொண்டு பேசுகிறேன். முன்னவரவர்கள் சொன்ன கருத்தைத் தாங்கள் ஏற்பீர்கள் என்று நான் நம்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அதுதான் சொல்கிறேன், பதிலோடு முடித்து விடலாம் என்று.

**திரு. க. அன்பழகன் :** தலைவரவர்களே, ஆசிரியருக்குத்தான் பெருந்தன்மை இருக்க வேண்டும், நான் மாணவன் பெருந்தன்மையோடு விட்டு விடுகிறேன் என்று சொன்னார்கள். என்னுடைய பெருந்தன்மை இந்த மன்றத்தில் பல முறை நிலை நாட்டப் பட்ட ஒன்று.

**(ஆ) சிறுபான்மை மொழிப் பள்ளிகளில் படித்து வரும் மாணவர்களுக்கான வேலைவாய்ப்பு.**

**THIRU T. VENKATA REDDY;** Hon. Mr. Speaker, there are many minority language schools. Especially in border areas like Hosur, Danganikotta, many schools are Telugu schools. Many boys are coming out of those schools after passing S.S.L.C. and in all the Government Departments, more so in Transport Department opportunity is not given......

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** உங்களுடைய இந்தக் கோரிக்கை மறுக்கப்பட்டுவிட்டது. ஏதாவது வேறு வழியில் கொண்டு வாருங்கள்.

**THIRU. T. VENKATA REDDY :** You have not given the reasons for denying them the opportunity.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதுவரை கடைபிடிக்கப்பட்டுள்ள முறையைத்தான் கடைபிடித்து வருகிறேன். கோரிக்கையை மறுப்பது என்றால் ரீசன்ஸ் சொல்வது இல்லை.

THIRU. T. VENKATA REDDY : The Hon. Speaker has not given the reason. It is an important matter.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் ஏற்கெனவே மறுத்துவிட்டேன் என்று சொல்லிவிட்டேன். இத்தோடு விட்டுவிடுங்கள். 'டோண்ட் ஆஸ்க் மி பர்தர்'

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : பொது விவாதம் நடைபெற இருக்கிறது. அப்போது அவர்கள் இதைத் தெரிவிக்கலாம். அல்லது வேறு ஒருவர், கட்சியின் மூலம் சொல்லலாம். அவ்வாறு சொல்வதற்கு வாய்ப்பு இருக்கிறது. ஆகவே இந்த நேரத்தை அதற்காகப் பயன்படுத்துவது சரியல்ல.

## 3. கவன ஈர்ப்பு.

### அண்ணா மாவட்டம் வேடசந்தூர் வட்டத்தில் நிலவும் வறட்சி நிலைமை குறித்து.

மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : (பேரவைத் துணைத் தலைவர்): மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''அண்ணா மாவட்டம், வேடசந்தூர் வட்டத்தில் வறட்சி நிலைமையின் காரணமாக ஏற்பட்டுள்ள நிலை குறித்த'' அவசரம் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு நிதி அமைச்சரின் கவனத்திற்கு கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அண்ணா மாவட்டம், வேடசந்தூர் வட்டத்தில் 1984-வது ஆண்டைவிட 1985 ஆம் ஆண்டில் சற்றுக் குறைவான மழை பெய்துள்ளது. சோளம், வரகு போன்ற புன்செய் தானியங்கள் 85,329 ஏக்கரில் பயிரிடப்பட்டு அறுவடை நடந்திருக்கிறது. நன்செய் நிலங்களில் 3997 ஏக்கரில் நெற்பயிர் செய்யப்பட்டுள்ளது. கிணற்றுப் பாசனத்தின் உதவியால் இந்த நன்செய் நிலங்கள் சாகுபடி செய்யப்பட்டுள்ளன. கண்மாய்களில் போதிய அளவு மழை மூலம் தண்ணீர் இல்லாததால் நன்செய் ஆயக்கட்டில் சில பகுதிகள் பயிரிடப்படாமல் தரிசாக உள்ளன. மற்றும் நன்செய்ப் பயிர்கள் 37 பைசா விகிதத்திற்குக் கீழும், புன்செய்ப் பயிர்கள் ?0 பைசா விகிதத்திற்குக் கீழும் மகசூல் கண்டுள்ளது. ஆகவே



பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நிலத் தீர்வையைத் தள்ளுபடி செய்வதற்கும், அரசுக் கடன் மற்றும் கூட்டுறவுக் கடன்களை அடுத்த ஆண்டிற்குத் தள்ளி வைப்பதற்கும் சிறப்பு ஆணையர் மற்றும் வருவாய் நிர்வாக ஆணையர் மூலம் செயற்குறிப்பு ஒன்றை அனுப்பி உள்ளதாக மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தெரிவித்து உள்ளார்கள். வருவாய் நிர்வாக ஆணையருடைய அறிக்கை வரப்பெற்றதும் அரசு அதன்மீது தக்க ஆணையைப் பிறப்பிக்கும்.

மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : (பேரவைத் துணைத் தலைவர்) : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அண்ணா மாவட்டத்தில் வேடசந்தூர் மட்டுமல்லாமல், மாவட்டம் முழுவதும் கடுமையான வறட்சி நிலவியிருக்கிறது என்றாலும்கூட, அந்த வறட்சி இன்று மையம் கொண்டிருக்கும் இடமாக வேடசந்தூர் தாலுக்கா இருந்து வருகிறது. அதற்கு வருவாய்த் துறையினுடைய ஆணையாளர் அவர்கள் அனுப்பியிருக்கிற குறிப்புகளின் அடிப்படையில் கூட்டுறவுக் கடன்களை ஒத்தி வைப்பதற்கும், நிலவரியை ரத்து செய்வதற்கும்......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. இராமலிங்கம் அவர்களுடைய இடத்தில் உட்காரவேண்டும். சும்மா, பஸ் ஸ்டாண்டில் நிற்பது மாதிரி நின்றால் எப்படி ?

மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்) : வருவாய்த் துறையினுடைய உயர் அதிகாரிகள் அனுப்பியிருக்கின்ற அந்தக் குறிப்பின் அடிப்படையில் நிலவரியை ரத்து செய்வதற்கும் கூட்டுறவுக் கடனை ஓராண்டு ஒத்திவைப்பதற்கும் நடவடிக்கைகளை மேற்கொள்ள இருக்கிறது என்ற வகையில் மாண்புமிகு நிதியமைச்சரவர்கள் இங்கே விவரங்களை எடுத்துச் சொன்னதற்காக நான் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். கடந்த ஒரு மாத காலத்திற்குள் அந்த வேடசந்தூர் வட்டத்தில் ஏகோம்பை, பஞ்சம் தாங்கி, ஆர்கோம்பை, மலைப்பட்டி ஆகிய பகுதிகளிலே மட்டும் கால்நடைத் தீவனம் இல்லாமல் சுமார் 400-க்கும் மேற்பட்ட கால்நடைகள் இறந்திருக்கின்ற கொடுமை அங்கே நிகழ்ந்து இருக்கிறது. இது சம்பந்தமாக நடவடிக்கை எடுத்து, அங்கே இருக்கின்ற விவசாயிகளினுடைய கால்நடைகளைக் காப்பாற்றுவதற்கு கடந்த காலங்களில் கொடுத்ததைப் போல, கால் நடைகளுக்குத் தீவனம் கொடுக்கின்ற நடவடிக்கையை விரைவாக எடுப்பதற்கு ஏதாவது நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என்கிற விவரங்களை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு
பேரவைத் தலைவரவர்களே, அந்தந்த மாவட்டங்களில் நிலவு
கின்ற வறட்சி நிலைமைகளைப்பற்றி, இருக்கின்ற சூழ்நிலைகளை
ஒட்டி அறிக்கை அனுப்பி வைக்கும்படி மாவட்ட ஆட்சித் தலை
வர் அவர்கள் கேட்டுக்கொள்ளப்பட்டு இருக்கிறார்கள்.
இப்பொழுது வருவாய் நிர்வாக ஆணையருக்கு அறிக்கை
அனுப்பி வைத்திருக்கிறார்கள் என்ற செய்தி வந்திருக்கிறது.
வருவாய் நிர்வாக ஆணையர் ஆய்ந்து அரசுக்கு அறிக்கை
அனுப்பியதற்குப் பிறகு அதன்மீது தக்க நடவடிக்கைகள்
எடுக்கப்படும். அவர் என்ன சொல்கிறார், எந்தவித நட
வடிக்கைகள் எடுக்கச் சொல்கிறார் என்பதன் பேரில், மாண்பு
மிகு உறுப்பினர் கூறிய கருத்துக்களும் மனதிலே வைக்கப்
பட்டு, உரிய வகையில், உரிய நடவடிக்கைகள் மேற்கொள்
ளப்படும்.

(முற்பகல் 10—30.)

மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்
பேரவைத் துணைத் தலைவர்) : மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, அந்த வருவாய்த் துறை அதிகாரி நில
வரி சம்பந்தமாக, கூட்டுறவுக் கடன்கள் சம்பந்தமாக, மட்டும்
குறிப்புகள் கொடுத்திருப்பதாக நானும் கேள்விப்பட்டேன்.
வறட்சிப் பகுதி என்பதை அறிவிக்கும்போது, முக்கியமான
கருத்தை மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் கருத்திலே
கொள்ள வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டு
கொள்கிறேன். மற்ற பகுதிகளை எல்லாம்விட, தொடர்ந்து
வேடசந்தூர் பகுதியில், எடுத்தவுடன் வறட்சி காலங்காலமாக
வந்து கொண்டிருக்கிறது. 1977 ஆம் ஆண்டு ஏற்பட்ட புயலில்
அந்த வட்டம் முழுவதும் இருக்கிற தனியார் குளங்கள், ஊராட்சி
குளங்கள், பொதுப் பணித் துறை குளங்கள், பெர்க்கொலேஷன்
டாங்க்ஸ், நீர் வரத்தைப் பெருக்கிக் கொள்கிற அமைப்புகள்
எல்லாம் உடைந்த நிலையில் இருக்கின்றன. பல்வேறு திட்டங்
களின் மூலம் புதிய பெர்க்கொலேஷன் டாங்க்ஸ் உருவாக்கி
யிருக்கிறோம், புதிய குளங்கள் உருவாக்கி இருக்கிறோம்.
என்றாலுங்கூட, 1977 புயலில் உடைந்த ஏராளமான,
நூற்றுக்கு மேற்பட்ட பழைய குளங்கள் இதுவரை சரி
செய்யப்படாததால், அங்கு நீர்வளம் குறைந்து, வறட்சி
உடனே வருவதற்குக் காரணமாக இருக்கிறது. அப்படி
வறட்சி என்று அறிவித்து அந்த வட்டம் முழுவதும் இருக்கிற
குளங்களைப் பழுதுபார்த்து, அந்த உடைப்புகளை அடைப்
பதற்கான நடவடிக்கைகளை வறட்சி நிவாரணத் திட்டத்தின்
கீழ் எடுத்துக்கொண்டால், அங்கே இருக்கிற மக்களுக்கு
வேலை வாய்ப்பும் பெருகும், தொடர்ந்து வருகிற வறட்சியைத்



தடுக்கிற வாய்ப்பும் ஏற்படும். எனவே, அதையும்,
கருத்திலே கொண்டு நடவடிக்கைகள் எடுக்கப்படுமா என்ற
விவரங்களையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கூறு
வது போன்று அந்தக் குறிப்புகளும் மாவட்ட ஆட்சித் தலைவரி
டத்திலேயிருந்து திட்டவட்டமாகவும் தெளிவாகவும் வருதல்
வேண்டும். வந்ததற்குப் பிறகு, அரசு ஆராய்ந்து தக்க
நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.

## 4. அரசினர் சட்ட முன்வடிவு.

### தமிழ்நாடு சட்டமன்ற (தகவின்மையைத் தடுத்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு 1986

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை
மொழிகிறேன் :

"1986 ஆம் ஆண்டு தமிழ்நாடு சட்டமன்ற (தகவின்மை
யைத் தடுத்தல்) திருத்தச் சட்ட முன்வடிவை பேரவை முன்
அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை
வேற்றப்பெற்று, அனுமதி வழங்கப் பெற்றது.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இச்சட்ட
முன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச்சட்ட முன்வடிவு அறி
முகம் செய்யப் பெற்றிருக்கிறது.

## 5. முன்பண மானியக் கோரிக்கைகள் 1986—87.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, 1986—87 ஆம் ஆண்டின்
செலவிற்கான முன்பண மானியக் கோரிக்கைகளை* பேரவை
முன் வைக்கிறேன்.

*705—716ம் பக்கங்களில் இணைப்பு-II ஆக அச்சிடப்
பெற்றுள்ளது.

[1986 மார்ச் 24

## 6. இறுதித் துணை நிதி அறிக்கை, 1985–86

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு
அவைத் தலைவர் அவர்களே, 1985-86 ஆம் ஆண்டிற்குரிய
இறுதித் துணை மதிப்பீடுகளை* இம் மாமன்றத்தில் வைப்பதில்
பெரும் மகிழ்ச்சியடைகிறேன். 1985-86 ஆம் ஆண்டிற்குரிய
வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் எதிர்பார்க்கப்பட்ட செல
வினங்கள் அனைத்தையும் சேர்க்க, அனைத்து முயற்சிகளும்
மேற்கொள்ளப்பட்டன. என்றாலும், வெள்ள நிவாரணம் குறித்த
செலவு, நான்காவது சம்பளக் குழுவின் பரிந்துரைகள் குறித்த
செலவு உட்பட சில புதிய செலவினங்களுக்கு 1985-86-ல் அனுமதி
வழங்கப்பட்டது. இப் புதிய செலவினங்களில் ஒரு பகுதி
ஏற்கனவே, முதல் துணை மதிப்பீட்டில் சேர்க்கப்பட்டுள்ளது.
மேலும், மக்களுக்குச் சிறந்த தொண்டாற்ற வேண்டும் என்னும்
நோக்கத்தோடு ஏற்கனவே செயற்படுத்தப்பட்டுவரும் திட்டங்
களில் பலவற்றுக்கான செலவுகளும் அதிகரிக்கப்பட்டன. இந்த
மதிப்பீடுகளில் சேர்க்கப்பட்டுள்ள மொத்தம் ரூ. 436.50 கோடி
யில், ரூ. 317.02 கோடி வருவாய்க் கணக்கிலும், ரூ. 119.48
கோடி மூலதனக் கணக்கிலும் வருகின்றன. இத் துணை மதிப்பீடு
தள்மூலம் கோரப்பட்டுள்ள தொகைகளின் விவரம் இத்துடன்
இணைக்கப்பட்டுள்ள விவர அறிக்கையில் கொடுக்கப்பட்டுள்ளது.
ஒரு சில முக்கியமான இனங்கள் பற்றி மட்டும் ஈண்டு குறிப்பிட
விழைகிறேன்.

இந்த ஆண்டில் நிலவிய பாதகமான பருவ நிலைகள் காரண
மாக உணவு தானிய உற்பத்தி சற்றே குறைந்தது. பொது
விநியோக முறையின்கீழ் மக்களுக்குச் சீராக உணவுப் பொருட்
களை வழங்க வேண்டுமென்ற நோக்கத்தில், அரசு, காவிரி
கழிமுகப் பகுதியில் ஏகபோகக் கொள்முதலை செயற்படுத்த
வேண்டியதாயிற்று. இருந்தாலும், ஏகபோகக் கொள்முதல்,
நடைமுறைப் படுத்தப்பட்ட பகுதிகளில் உற்பத்தி ஊக்கத்
தொகையாக குவிண்டால் ஒன்றுக்கு ரூ. 35 வழங்கப்பட்டது.
இதற்காக இந்த இறுதித் துணை மதிப்பீடுகளில் ரூ. 13 கோடி
நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

1985-86 ஆம் ஆண்டில் சொற்ப நில உழவர்களுக்கும் சிறு
உழவர்களுக்கும் உதவி அளிக்கின்ற ஒரு பெருந்திட்டத்தின்கீழ்
உழவர்களுக்கு உரங்களும், வீரிய விதைகளும் அடங்கிய சிறு
பைகள் (மினி கிட்), பயறு வகைகள், மோட்டா ரக தானியங்கள்
ஆகியவற்றின் விதைகள், எண்ணெய் வித்துக்கள் ஆகியவற்றை
இலவசமாக விநியோகிப்பதற்காக அரசு ரூ. 1.89 கோடி
அனுமதித்துள்ளது. இதற்குத் தேவையான நிதி ஒதுக்கம், இந்தத்
துணை மதிப்பீடுகளில் சேர்க்கப்பட்டுள்ளது.

---

*717–728ம் பக்கங்களில் இணைப்பு III-ஆக அச்சிடப்பெற்
றுள்ளது.



1986 மார்ச் 24] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

தமிழ்நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் கைத்தறித்
துறைக்குள்ள முக்கியத்துவத்தைக் கருத்தில் கொண்டு, அரசு,
கைத்தறித் துறைக்கு இயன்ற அனைத்து உதவிகளையும் செய்து
ஊக்கமளித்து வருகிறது. கட்டுப்பாட்டு விலை வேட்டி, சேலை
உற்பத்தி செய்யும் நெசவாளர்களுக்கு உதவித் தொகை வழங்கப்
பட்டு வருகிறது. கைத்தறித் துணி விற்பனை மீதான தள்ளுபடிக்
காகவும் அரசு நிதி ஒதுக்கம் செய்து வருகிறது. தொடக்க
நெசவாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்கப்படும்
நடைமுறை மூலதனக் கடன்களுக்குரிய வட்டியைச் செலுத்துவதற்
காகவும்கூட, அரசு உதவித் தொகை வழங்கி வருகிறது. இவற்
றிற்காக, இத் துணை மதிப்பீடுகளில் ரூ. 15.48 கோடி நிதி
ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது. தற்போதைய ரூ. 17.25 கோடி
ஒதுக்கீட்டிற்கும் கூடுதலாக இத்தொகை ஒதுக்கப்படுகிறது.

தமிழ்நாட்டில் பரந்து விரிந்து அமைந்துள்ள சாலைகளை
மேலும் சீரமைத்து நன்கு பராமரிப்பதற்காக, நடப்பாண்டில்
கூடுதல் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது. இதற்காக, இறுதித்
துணை மதிப்பீடுகளில் ரூ. 2.20 கோடி சேர்க்கப்பட்டுள்ளது.

கூட்டுறவு அமைப்புகள் உழவர்களுக்கு மேலும் பெரிய அள
வில் இடுபொருட்கள் வழங்குவதற்கு ஏதுவாக, அரசு, தமிழ்நாடு
கூட்டுறவு விற்பனை இணையம், தஞ்சாவூர் கூட்டுறவு விற்பனை
இணையம் மற்றும் நீலகிரி கூட்டுறவு விற்பனைச் சங்கம் ஆகி
யவற்றுக்கு வழிவகை முன்பணங்கள் வழங்கியுள்ளது. இதற்காக,
துணை மதிப்பீடுகளில் ரூ. 13.35 கோடி சேர்க்கப்பட்டுள்ளது.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை).

தமிழ்நாடு வேளாண் தொழிற் கழகம் தன் பணியை விரிவு
படுத்திக் கொள்வதற்கு ஏதுவாக அரசு இதற்கு ரூ. 2 கோடி
வழிவகை முன்பணம் வழங்கியுள்ளது. இத்தொகை இறுதித்
துணை மதிப்பீடுகளில் சேர்க்கப்பட்டுள்ளது.

பொது விநியோக முறையில் மக்களுக்கு மிகக் குறைந்த
விலையில் தொடர்ந்து அரிசி வழங்கப்பட்டு வருகிறது. அரசு,
தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்திற்கு, 1985-86
வரவு-செலவுத் திட்ட ஒதுக்கீட்டுக்கும் மேலாக உதவித் தொகை
யும் வழிவகை முன்பணங்களும் வழங்கி வருகிறது. இதற்காக,
இறுதித் துணை மதிப்பீடுகளில் கூடுதலாக ரூ. 25 கோடி சேர்க்கப்
பட்டுள்ளது.

தமிழ்நாட்டில், தொழில் மயமாக்கலில் தமிழ்நாடு தொழில்
மேம்பாட்டுக் கழகம் மிக முக்கியப் பங்காற்றி வருகிறது. அதன்
கடன் வழங்குப் பணிகளை மேலும் விரிவுபடுத்தவும், வட்டி
யில்லா விற்பனை வரிக் கடனை அதிக அளவில் அளிப்பதற்கும்
இறுதித் துணை மதிப்பீடுகளில் கூடுதலாக ரூ. 3.25 கோடி
சேர்க்கப்பட்டுள்ளது.

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1986 மார்ச் 24

இக்கோரிக்கைகளில் கண்டுள்ள அனைத்து இனங்களுக்கும் ஒப்புதல் அளித்து, அவற்றிற்குத் தேவையான நிதி ஒதுக்கத்தை வழங்கி, இம்மாநில அரசு வளர்ச்சிப் பணியில் மேலும் முன்னேற்றம் அடைய அனுமதிக்குமாறு அவையை வேண்டி அமர்கிறேன் வணக்கம்.

## 7. அறிவிப்புகள்,

(அ) மானியக் கோரிக்கைகளுக்கு வெட்டுத் தீர்மானங்கள் கொடுப்பது:

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு: 1985-86 ஆம் ஆண்டிற்கான செலவு குறித்த இறுதித் துணை நிதிநிலை அறிக்கையில் கண்டுள்ள மானியக் கோரிக்கைகளின்மீது வெட்டுத் தீர்மானங்கள் கொடுக்க விரும்பும் உறுப்பினர்கள் அவைகளை பேரவையின் 218-வது விதிக்கிணங்க 25-3-1986 செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3.00 மணிக்குள் பேரவைச் செயலாளரிடம் சேர்ப்பிக்க வேண்டும்.

## 8. வரவு-செலவுத் திட்டம் 1986-87 பொது விவாதம் (தொடர்ச்சி).

திரு. ஈ. வே. கி. ச. இளங்கோவன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1986-87 ஆம் ஆண்டிற்குரிய நிதிநிலை அறிக்கையை இந்த அவை ஏற்பதற்கு முன்பாக என்னுடைய சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

ஒட்டுமொத்தமாகப் பார்க்கும்போது இந்த நிதிநிலை அறிக்கை ஒரு 'பாப்புலஸ் அப்ரோச்' சாகத்தான் இருக்கிறதே தவிர ஒரு 'கன்ஸ்ட்ரக்டிவ் அப்ரோச்' என்ற முறையில் இது அணுகப்படவில்லை. ஏதோ அழுகின்ற குழந்தைக்கு பெட்டிக் கடையிலே ஆரஞ்சு மிட்டாய் வழங்குவது போல இந்த நிதிநிலை அறிக்கை அமைந்திருக்கிறதே தவிர அழுகின்ற குழந்தையின் துயரைத் தணிக்க என்ன நிரந்தர பரிகாரம் என்பதுபற்றி இந்த நிதிநிலை அறிக்கையிலே கூறப்படாதது மிகவும் வருந்தத்தக்கதாகும். இருந்தாலும்கூட துத்தநாகப் பூசப்பட்ட இரும்பு வாளி முதல் விதைகின்ற பருத்தி விதை வரையில் ஏறத்தாழ பத்து பொருள்களுக்கு வரிகள் அறவே இல்லை என்று அறிவித்திருப்பது வரவேற்கத்தக்கதுதான்.



1986 மார்ச் 24] [திரு. ஈ. வே. கி. ச. இளங்கோவன்]

ஆனால் அதேபோல் தான் சாராயத்தையும், கள்ளுக்கடையையும் மூடிவிடுவது என்பது பற்றி இங்கே கூறியிருக்கிறார்கள். மிகவும் வரவேற்கத்தக்க ஒன்றுதான் அது. ஆனால் இதனால் ஏற்படுகிற நிதிப் பற்றாக்குறையை எப்படி சரி செய்வது என்பதற்கு இதில் சரியான திட்டம் இல்லை. மாறாக ஒரே வரியில் மத்திய அரசிடமிருந்து நிதியுதவி பெறுவது என்று கூறப்பட்டிருக்கிறது. எனவே ஒன்றை இந்த மாநில அரசு மறைமுகமாக ஒத்துக்கொண்டிருக்கிறது. அதாவது மாநிலத்திலே நிதிப் பற்றாக்குறை ஏற்படும்போதெல்லாம், இயற்கை சோதனைகள் ஏற்படும்போதெல்லாம் இந்த மாநில அரசுக்கு மத்திய அரசு வாரி, வாரி நிதியினைத் தந்து இருக்கிறது. அந்த நம்பிக்கையின் அடிப்படையில்தான் இங்கே இந்தச் சாராய, கள்ளுக் கடைகளை மூடிவிடுவதால் ஏற்படுகிற நஷ்டத்தை மத்திய அரசிடமிருந்து பெறுவது என்பதை இங்கே கூறியிருக்கிறார்கள்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை).

இன்னொன்று, சாராயக் கடைகளையும், கள்ளுக் கடைகளையும் மூடிவிடுவதால் மக்களுக்கு நலம் கிடைக்கும் என்று எப்படி கருதுகிறார்களோ அதேபோல் தமிழகத்தில் இப்போது வேகமாக புது வியாதி போன்று பரவி வருவது ஜரிதா பீடா என்பதாகும். தமிழக மக்கள் இந்த ஜரிதா பீடாக்களை இப்போது அதிகமாக உபயோகித்துக் கொண்டு இருக்கிறார்கள். இந்த நிலை தொடர்ந்தால் எப்படி சாராயத்தாலும், கள்ளுக் கடைகளாலும் மக்கள் அழிகிறார்களோ அதுபோல் இந்த பீடாவும் மக்களை அழிக்கின்ற நிலைக்கு வந்துவிடும். ஆகவே, தயவு செய்து தொடக்கத்திலேயே இதனை இந்த அரசு கிள்ளி எறிய வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

(முற்பகல் 10.40)

அடுத்து, எதை எடுத்தாலும் மத்திய அரசின் மீது பழி போடுகிற மனப்பக்குவம் இங்கே இருக்கிற ஆளும் கட்சி உறுப்பினர்களுக்கு வந்திருப்பது வருந்தத்தக்கது. இன்னும் சொல்லப் போனால் குறிப்பாக இங்கே ஆளும் கட்சித் தரப்பிலே பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. செம்மலை அவர்களும், திருமதி வளர்மதி அம்மையார் அவர்களும் கூட மத்திய அரசினைக் குறை சொல்லிப் பேசுவதிலேயே அதிக காலத்தைக் கடத்தினார்கள்.

ஒன்றை நான் சொல்ல விரும்புகிறேன். கிருஷ்ணா ஆற்று குடிநீர்த் திட்டம் சென்னை வருவதற்கு ஏன் காலதாமதம் என்று கேட்டால் மத்திய அரசு இசைவு தர மறுக்கிறது அல்லது காலம் தாழ்த்துகிறது என்று சொல்கிறார்கள். நான் இந்த அவைக்கு ஒரு உண்மையை எடுத்து வைக்க விரும்புகிறேன்.

[திரு. ஈ. வே. கி. ச. இளங்கோவன்] [1986 மார்ச் 24

எனது தொகுதியிலே போலிப் பள்ளம் நீர்ப்பாசனத் திட்டத்தைப்பொறுத்த வரையில் 1982ஆம் ஆண்டு அங்கே இருக்கிற சி.இ. இன்வெஸ்டிகேஷன் அவர்களால் மதிப்பீடு செய்யப்பட்டு எஸ்.இ. இன்வெஸ்டிகேஷன் மூலமாக இந்த அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்டது. அந்தத் திட்டம் நிறைவேற்றப்படுமேயானால், அங்கேயுள்ள வனத் துறையைச் சார்ந்த இடங்கள் பாதிக்கப்படும் என்ற காரணத்தால் மத்திய அரசிடம் அனுமதி பெறவேண்டிய நிலை இருந்தது. இப்படி 1982 ஆம் வருடம் மதிப்பீடு செய்து அனுப்பப்பட்ட திட்டத்தைப் பொறுத்த வரையில் மத்திய அரசுக்கு மாநில அரசு 1983 ஆம் வருடம் கடிதம் போடுகிறது. அப்படி கடிதம் எழுதிய 10 நாட்களுக்குள் மத்திய அரசு சில விளக்கங்களைக் கேட்டு பதில் கடிதம் கொடுத்தது. ஆனால், மூன்று வருடங்கள் ஆகியும், மத்திய அரசு கேட்ட விளக்கங்களையும், மத்திய அரசு கேட்ட தகவல்களையும் இந்த அரசு இன்னும் கொடுக்கவில்லை. ஆகவே, அந்தத் திட்டம் ஏன் இன்னும் வரவில்லை என்று சொன்னால் மெத்தனப் போக்காகப் பதில் சொல்கிறார்கள். அதாவது மத்திய அரசு இசைவு தரவில்லை என்று பதில் சொல்கிறார்கள். மத்திய அரசிடம் அனுமதி பெற்று நடத்தப்படவேண்டிய பல திட்டங்கள் இன்னும் கிடப்பிலே போடப்பட்டிருப்பதற்கு என்ன காரணம்? இந்த அரசின் மெத்தனப் போக்கும், சுறுசுறுப்பு இல்லாத தன்மையும்தான். அதாவது ஃபாலோ அப் ஆக்ஷன் இல்லை என்பதால்தான் அவ்வாறு இருக்கின்றது என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

இப்படி போலிப் பள்ளம் நீர்ப்பாசனத் திட்டம் மட்டுமல்ல. எனது தொகுதியில் ஏறத்தாழ 7 நீர்ப்பாசனத் திட்டங்கள் இதே மாதிரிதான் கிடப்பிலே போடப்பட்டிருக்கின்றன. நான் இந்த அரசைக் கேட்டுக்கொள்வதெல்லாம், காங்கிரஸ்காரர்களாகிய நாங்கள் வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்வதெல்லாம் செயல்திறன் உள்ள அரசாக மாறுங்கள்; மக்களுக்கு நல்ல திட்டங்களைத் தாருங்கள் என்பதுதான். இதுதான் எங்களுடைய ஆசையும் வேண்டுகோளும் என்பதைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, இந்த ஆண்டு கல்விக்காக 551 கோடி ரூபாய் ஒதுக்கி இருக்கிறீர்கள். அதோடு உயர்நிலைப்பள்ளிகளையும், மேல்நிலைப் பள்ளிகளையும் கட்டுவதற்கு என்று இன்னொரு கோடி ரூபாயை ஒதுக்கியிருக்கிறீர்கள். இதை நான் வரவேற்கிறேன். புதிய பள்ளிகளையும், உயர்நிலைப் பள்ளிகளையும் ஏற்படுத்த வேண்டும் என்ற ஆதங்கம் இந்த அரசுக்கு இருப்பது வரவேற்கத்தக்கது. இருந்தாலும் கூட இப்போது இருக்கின்ற பள்ளிகளின் நிலைமை என்ன என்பதையும், அந்தப் பள்ளிகள் ஒழுங்காக இருக்கின்றனவா; அந்தக் கட்டடங்கள் உபயோகப்படுத்துகிற தன்மையைப் பெற்றிருக்கின்றனவா என்பதையும் ஆராய வேண்டும்.



1986 மார்ச் 24] [ஈ. வே. கி. ச. இளங்கோவன்]

குறிப்பாக, என்னுடைய தொகுதியிலே கள்ளிப்பட்டியிலே அரசு உயர்நிலைப் பள்ளிக் கட்டிடங்கள் கீழே விழுந்துவிடுகிற அபாயகரமான நிலைமையில் இருக்கின்றன. பலமுறை எடுத்துச் சொல்லியும் கூட இன்னும் பரிகாரங்கள் கிடைக்கவில்லை. நாங்கள் கூறுவதெல்லாம், நாங்கள் வேண்டி விரும்பிக் கேட்டுக் கொள்வதெல்லாம் இருக்கிற பள்ளிகள் கீழே விழாமல் இருக்கவும், அங்கே படிக்கிற பள்ளி மாணவர்களுடைய உயிர்களுக்கு உத்தரவாதம் தருகிற வகையிலும் இந்த அரசு தன்னுடைய திட்டங்களைச் செயல்படுத்த வேண்டுமென்பதுதான்.

இன்னொன்று, சத்துணவுத் திட்டம் இந்த சத்துணவுத்திட்டம் என்பது மிகச் சிறப்புப் பெற்ற ஒரு அரிய நல்ல திட்டம். இந்தத் திட்டத்தை தமிழகத்தில் செயல்படுவதைப் பார்த்து இந்திய துணைக் கண்டத்தில் இருக்கிற அத்துணை மாநில அரசுகளும் முன் உதாரணமாக எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். இன்னும் சொல்லப் போனால் தமிழக முதலமைச்சர் அவர்களுக்கு இந்த இந்திய நாடு முழுவதும் புகழ் சேர்த்த ஒரு முக்கியமான திட்டம் அது. ஆனால், நான் இங்கே கேட்டுக் கொள்ள விரும்புவது எல்லாம்,. சத்துணவு போடுவது ஒன்றே இந்த நாட்டின் எதிர்கால பிரஜைகளுக்குப் போதுமா என்று சிந்திக்க வேண்டும் என்பதுதான். அந்தப் பிரஜைகளுக்கு நல்ல கல்வி அறிவு தர வேண்டாமா? அத்தகைய எண்ணம் இந்த நிதிநிலை அறிக்கையிலே பிரதிபலிக்காதது வருந்தத் தக்கது.

அடுத்து, நமது நிதியமைச்சர் அவர்கள் பேசும்போது குறிப்பிட்டார்கள். தமிழகத்திலே ஏற்கெனவே சாலைகள் நன்கு அமைக்கப்பட்டிருக்கின்றன என்று. நான் அதை ஒத்துக் கொள்கிறேன். ஆனால் தொடர்ந்து சொல்லும்போது சொன்னார், நன்றாகப் பராமரிக்கப்பட்டு வருகின்றன என்று. இதை நான் மட்டும் அல்ல, இங்கே சாலைகள் மற்றும் பாலங்கள் துறைக்கு பொறுப்பு ஏற்றுக் கொண்டிருக்கின்ற போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களே கூட, ஏற்றுக் கொள்ள மாட்டார்கள் என்று கருதுகிறேன்.

உதாரணத்திற்குச் சொல்லவிரும்புகிறேன். எனது தொகுதியிலே பவானி நகராட்சியிலே இருந்து சத்தியமங்கலத்திற்கு செல்லுகின்ற ஒரு சாலை கடந்த 10 ஆண்டு காலமாக மிகவும் மோசமான நிலைமையில் இருக்கின்றது என்பதை இந்த அவைக்கு நினைவு படுத்த விரும்புகிறேன். இன்னும் சொல்லப்போனால் நானே கடந்த ஆண்டு பேசும்போதுகூட அதைப்பற்றிச் சொன்னேன். ஆனால் அந்தச் சாலையின் நிலைமைகள் இன்னும் அதே நிலையில்தான், செப்பனிடப்படாமல் இருக்

கின்றன. அந்தச் சாலையினுடைய நீளம் ஏறத்தாழ 50 கிலோ மீட்டர் இருக்கும். ஆனால் அந்த 50 கிலோ மீட்டர் தூரத்தையும் காரில் கடப்பதற்கும், கட்டை மாட்டு வண்டி யில் கடப்பதற்கும் ஒரே நேரம் தான் ஆகிறது என்றால், அந்தச் சாலை எவ்வளவு மோசமாக இருக்கிறது என்பதை நீங்கள் உணர்ந்து கொள்ள வேண்டும். அதைக் கட்டாயம் சீர் செய்து தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து இன்னொன்று. பணியிலே இருக்கிற அரசு ஊழியர் கள் இறந்து விட்டால், அவர்கள் வீடு கட்டுவதற்காக வாங்கி யிருக்கிற கடன் தொகை வட்டியோடு தள்ளுபடி செய்யப் படும் என்று அறிவித்திருக்கிறார்கள். வரவேற்கப்பட வேண் டியதுதான். அரசு ஊழியர்கள் ஒருமுனைப்பட்டு, ஆர்கனைஸ் டாக யூனியன்கள் மூலமாக இதுபோன்ற கோரிக்கைகளை அடிக்கடி வைத்துக் கொண்டேபோகும் போது, இந்த அரசு அவைகளைச் செய்கிறது. நாங்கள் அதைக் குற்றம் சொல்ல வில்லை. ஆனால் ஏழை விவசாயிகளுக்கு, எளியவர்களுக்கு வறுமைக் கோட்டிற்குக் கீழே இருப்பவர்களுக்கு இந்த அரசு நிரந்தரமாக என்ன நன்மைகளைச் செய்யப்போகிறது என்பதைத்தான் நான் இங்கே அறிய விரும்புகிறேன்.

அடுத்து விளையாட்டுப் பொருட்கள் மீது இருக்கின்ற வரிகளை அறவே தள்ளி இருக்கிறார்கள். நல்லதொரு திட்டம் தான். ஆனால் விளையாட்டுப் போட்டிகளில் கலந்து கொள்கிற தமிழர்களின் எண்ணிக்கை அதிகமாக வேண்டும் என்ற எண்ணம் நமக்கு வேண்டும். ஒரு வெங்கடராகவனையும், ஒரு கிருஷ்ணனையும், இரண்டு அமிர்தராஜ் களையும் வைத்துக் கொண்டு எவ்வளவு நாட்களுக்கு நாம் பெருமைப்பட முடியும்? நாமும் பல கபில்தேவ்களை, பல உஷாக்களை, பல கவாஸ் கர்களை உருவாக்க வேண்டாமா? அப்படி அவர்களுக்கு பயிற்சி தருவதற்கு நேஷனல் இன்ஸ்டிடியூட் என்றும் ஸ்போர்ட்ஸ் கவுன்சில் என்பது போன்றும், பஞ்சாப் மாநிலத் திலே பாட்டியாலாவில் உள்ளதுபோல, டெல்லிக்கு அருகிலே உள்ளது போல, இங்கேயும் விளையாட்டுக் கழகங்களின் அமைப்புகளை ஆரம்பித்து, விளையாட்டு வீரர்களை ஊக்கு விப்பதற்கு ஏற்பாடு செய்து தமிழக விளையாட்டு வீரர்கள் யாருக்கும் சோடை போனவர்கள் அல்ல என்பதை நிலை நிறுத்த வேண்டும்.

அடுத்து. 20 அம்சத் திட்டத்தை நிறைவேற்றுவதில் தமிழகம் முதன்மையாக இருக்கிறது என்ற ஒன்று மட்டும் போதாது. அந்தத் திட்டத்தை முழுமையாக முனைப்போடு விரைவாக அமல்படுத்தி நாட்டில் உள்ள அனைத்து ஏழை எளியமக்களும்





நன்மை பெறுகின்ற வகையில், வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக் கின்ற பயனுள்ள முறையில் செயலாற்ற வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்னொன்று, நடந்து முடிந்த தேர்தலிலே, முரசொலியை அடித்து ஓய்ந்து, அதை நடுவிலே நிறுத்தியிருந்தவர்கள், திரும் பவும் முரசொலியை அடிக்க ஆரம்பித்திருக்கிறார்கள் என் றால் அதற்கு என்ன காரணம் என்பதை சிந்தித்துப் பார்க்க வேண்டும். எத்தனையோ காரணங்கள் இருக்கலாம் அந்த தோல்வி ஏற்பட்டதற்கு. நம் இரு இயக்கங்களும் ஒன்றாக இணைந்து அதிலே போட்டியிட்டன. எதிர் பார்த்த அளவு நம்மிடையிலே ஒற்றுமை இல்லை என்ற காரணமும் இருந்தாலும் கூட, மிகப் பெரிய காரணம் என்ன என்பதை சிந்திக்க வேண்டும். மக்கள் எதையோ எதிர் பார்த்து, அது கிடைக்காத காரணத் தால் விலகிப் போய்க் கொண்டிருக்கிறார்கள். அப்படி விலகிப் போகின்ற மக்கள் நிரந்தரமாக நம்மை விட்டு, நம் கையை விட்டு விழாது இருக்கின்ற வகையில் நல்ல பல திட்டங்களைத் தீட்டி, மக்களின் நன் மதிப்பைப் பெற வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

(முற்பகல் 10–50)

இன்னொன்று, இந்தச் சபையில் இருக்கிற பெரும்பாலான நாம் இந்தச் சபையில் அமர்ந்திருப்பதற்கு முக்கிய காரணம் அருமை அம்மை இந்திரா காந்தி அவர்கள் என்பதை நாம் மறந்து விடக் கூடாது. இந்தச் சபையில் அவர்களின் படம் வைக்கப்படும் என்று முடிவெடுக்கப்பட்டு ஏறத்தாழ ஓர் ஆண்டுகாலம் ஆகிறது. அந்தப் படம் இன்னும் வைக்கப்பட வில்லை. இதுபோன்ற சிறுசிறு காரியங்களில் எல்லாம் கால தாமதம் செய்வது ஏனென்று புரிந்து கொள்ள முடியவில்லை. அதைப்போல மீனம்பாக்கம் செல்கிற வழியில் நேரு அவர்களின் சிலையை வைப்பதற்கு திட்டம் தீட்டி புல்வெளி, மேடை முதலி யவை எல்லாம் அமைக்கப்பட்டு ஏறத்தாழ இரண்டு ஆண்டு காலம் ஆகிறது. ஆனால் ஆசிய ஜோதி நேரு அவர்களின் சிலை இன்னும் அங்கே நிறுவப்படவில்லை. இதையும் விரைவில் நடவடிக்கையெடுத்து நிறுவிட வேண்டுமென்று கேட்டுக் கொள் கிறேன். அதைப்போல செங்கோட்டையில் வாஞ்சிநாதன் சிலையை அமைப்பதற்கு அரசு முடிவெடுத்து ஆண்டுகள் பலவாகியும் அந்தச் சிலை அங்கே நிறுவப்படவில்லை. அதையும் விரைவில் நிறுவிட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியான சத்தியமங்கலத்தில் அரசினர் மருத்துவ மனை கட்ட ஆரம்பித்து ஆண்டுகள் பலவாகின்றன. அது முடிவடையும் நிலையில் இருக்கிறது. இன்னும் சொல்லப் போனால் ஒரு மாதம் அங்கே வேலை செய்தால் கட்டடத்தை முழுமையாக முடித்து மக்களுக்கு பயன் தருகிற நிலையில்

மருத்துவமனையை ஆரம்பிக்க முடியும் என்ற சூழ்நிலை
இருக்கிறது. ஏறத்தாழ ஓராண்டு காலமாக அந்தப் பணி
அப்படியே நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது. அதிகாரிகளை
இது குறித்து காரணம் கேட்டால் அவர்கள் ஏதோ சமாதானம்
சொல்ல முயல்கிறார்களே தவிர அந்தப் பணிகளை ஆரம்பிக்க
நடவடிக்கைகளை மேற்கொள்கிற நிலை இல்லை. இதை அரசு
கவனித்து விரைவில் அந்தப் பணியை முடித்திட வேண்டுமென்று
கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, தமிழகத்தைப் பொறுத்தவரையில் பல கிராமங்
களில் 'அன்டிக்லேர்ட் பவர் கட்' இருந்து கொண்ருக்கிறது.
பவர் கட்டு இல்லையென்றாலும் கூட நடைமுறையில் பார்த்
தால் அத்தனை கிராமங்களிலும் காலை 9–00 மணியிலிருந்து
பிற்பகல் 1.00 மணிவரையில் மின்சாரம் இல்லை. ஆகவே
இந்த மின்சாரப் பற்றாக்குறையைப் போக்குவதற்கு அரசு
உடனே நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்
கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியில் பல திட்டங்களை நிறை
வேற்றிட வேண்டுமென்று கடந்த ஆண்டு கேட்டிருந்தேன்.
ஆனால் அவற்றில் ஒரு திட்டம் கூட இதுவரையில் இந்த அரசால்
நிறைவேற்றப்படவில்லை என்று சொல்லும் போது உண்மை
யிலேயே வேதனை அடைகிறேன். ஆகவே வருகிற காலங்
களில் சட்டமன்ற உறுப்பினர்கள் சபையில் பேசுவதை
வெறும் சடங்காக எண்ணாமல் உறுப்பினர்கள் சொல்கிற
குறைகளைக் கண்டிப்பாக தீர்க்கிற மனோபக்குவம் இந்த
அரசுக்கு வரவேண்டுமென்று கேட்டுக் கொண்டு, அளித்த
வாய்ப்பிற்கு நன்றி கூறி, என்னுடைய உரையை முடித்துக்
கொள்கிறேன்.

## 7. அறிவிப்புகள் — தொடர்ச்சி.

### (ஆ) பேரவையில் திரு. அ. ரகுமான்கான் கல்வித் துறைபற்றி முன்னறிவிப்பின்றி குறிப்பிட்ட ஒரு குற்றச்சாட்டு குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறி
விப்பு. 19–3–1986 அன்று பேரவையில் மாண்புமிகு உறுப்
பினர் திரு. அ. ரகுமான்கான் அவர்கள் நிதிநிலை அறிக்கையின்
பொது விவாதத்தில் கலந்து கொண்டு பேசும்போது சென்னை
அடையாற்றில் உள்ள அச்சுத் தொழில் நுட்பவியல் பயில
கத்தில் லித்தோகிராபி பிரிவில் 1983–84 ஆம் ஆண்டு
மாணவர்களைத் தேர்ந்தெடுப்பதில் முறைகேடுகள் நடந்துள்ள
தென்று கூறி கல்வியமைச்சர், இயக்குநர் மற்றும் அதன்
முதல்வர் மீது குற்றம் சாட்டினார். 20–3–1986 அன்று
மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் இந்தக் குற்றச்சாட்டிற்கு
விரிவான விளக்கம் அளித்து அதில் எவ்விதமான தவறும்





நடக்கவில்லையென்று தெளிவுபடுத்தினார். ஆனால் திரு.
ரகுமான்கான் அவர்கள் அதை மறுத்து தன்னிடம் அதற்கு
தகுந்த ஆதாரம் இருக்கிறதென்றும், அதனை தரத் தயார்
என்றும் கூறினார். 21–3–1986 மாலை திரு. ரகுமான்கான்
அவர்கள் எனக்கு ஒரு கடிதம் எழுதி அதனுடன் தன்னுடைய
ஆதாரங்களை இணைத்துள்ளார். அவர் அளித்த ஆதாரங்
களை நான் கவனமாகப் பரிசீலித்தேன். அவர் சாட்டிய
குற்றச்சாட்டுகளையும் அதற்கு அவர் அளித்த ஆதாரங்
களையும் ஒவ்வொன்றாக பரிசீலனைக்கு எடுத்துக் கொள்
கிறேன்.

(1) முதல் குற்றச்சாட்டு : ஹைகோர்ட்டில் பிரிண்டிங்
டெக்னாலஜியில் டைரக்டர் திரு. சீனிவாசன், இன்னொரு
புரபசர்....

திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, தங்களிடத்தில்
கொடுத்ததைப் பற்றி நேரிடையாக விளக்குவதற்கு அவர்
வாய்ப்பு கேட்டிருந்தார். அந்த வாய்ப்பு அவர்க்கு கொடுத்து
விட்டு ஒரு முடிவெடுத்துச் சொன்னால் நல்லது. அப்படி விளக்கு
வதற்கு வாய்ப்பு அளிக்காமல் முடிவு சொல்லிவிட்டு அதுபற்றி
பேசக்கூடாது என்று சொன்னால் அது அவ்வளவு முறையாக
இருக்காது. விளக்கத்தை நீங்கள் நேரில் பெற்றிருக்கிறீர்களா ?
இல்லையென்றால் நான் கூட அதை விளக்க முடியும். அந்த
வாய்ப்பை எங்களுக்கு தந்தீர்களா ? அல்லது இந்த அவையிலே
விளக்குவதற்கு எங்களுக்கு எதிர்காலத்தில் வாய்ப்பு உள்ளதா?
அல்லது இந்தப் பிரச்னையை முடிப்பதற்கு இதை ஒரு வாய்ப்
பாக பயன்படுத்துவீர்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எப்படிச் செய்ய வேண்டு
மென்று சொல்லுங்கள்.

திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, உங்களிடத்தில்
ரெக்கார்டு கொடுத்ததில் தேவைப்பட்டால் வந்து நேரில்
விளக்கி எங்களுடைய சமாதானத்தைச் சொல்லி, தங்களை
திருப்திபடுத்த முடியும் என்ற நிலையில் அவை கொடுக்கப்
பட்டிருக்கின்றன. ஆனால் அப்படி விளக்குவதற்கு வாய்ப்பு எங்க
ளுக்குக்கிடைக்கவில்லை. தாங்களே ஒரு முடிவு எடுத்து அறிவித்து
விட்டால், சபாநாயகர் முடிவு எடுத்து அறிவித்ததற்குப் பிறகு,
பிரச்சனையை கிளறுவதாக தாங்கள் தவறாகக் கருதக் கூடும்.
எனவே முடிவு தெரிவிக்க வேண்டிய நிலைமையில் தாங்கள்
நேரடியாக எங்களுக்கு வாய்ப்பு அளிக்கவேண்டும். இல்லை
யானால் நீங்கள் முடிவு சொன்னதற்குப் பிறகு, நாங்கள்
பேசுவதற்கு உரிமை இருக்கவேண்டும்.

[1986 மார்ச் 24

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எது சரி என்று படுகிறதோ
அதைச் செய்யுங்கள்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பேராசிரியர்
அவர்கள் சொல்வது போன்று மாண்புமிகு உறுப்பினர் ரகுமான்
கான் அவர்கள் கொடுத்து இருக்கிற ஆதாரங்கள் மீது ஏதாவது
விளக்கங்கள் தர விரும்பி, அந்த விளக்கங்களைத் தந்து,
அதன் பேரில் தாங்கள் ஏதாவது அவரிடத்திலே வினாக்கள்
கேட்டு, மேற்கொண்டு தாங்கள் விளக்கங்கள் பெறவேண்டு
மானால், விளக்கங்கள் பெற்றதற்குப் பிறகு, அதன் பேரில்
குறிப்பிட்ட துறையைச் சேர்ந்த கல்வி அமைச்சர் அவர்களி
டத்திலே விளக்கங்கள் பெறவேண்டுமென்றாலும் நீங்கள்
வினாக்களை ஏழுப்பி, விளக்கங்கள் பெற்று, எல்லாவற்றையும்
ஒன்று சேர்த்து வைத்துக்கொண்டு, அதற்குப் பிறகு தீர்ப்பு
அளிக்கின்ற ஒரு முறையை கையாளலாம். ஆகவே தீர்ப்பை
ஒத்தி போடலாம்.

திரு. உ. சுப்பிரமணியன் : பேரவைத் தலைவர் அவர்களே,
அவையை சுமுகமாக நடத்தி, அதனுடைய நிகழ்ச்சிகள்
நல்லபடியாக நடக்கவேண்டும் என்ற நல்லெண்ணத்தில் நான்
சொல்கிறேன். அவை முன்னவர் சொல்லியது போல் அவர்
களுக்கு ஒரு வாய்ப்பு அளித்து, அதற்குப்பின் நேரடியாக
தாங்கள் விளக்கங்கள் பெற்று, இறுதியாக தங்கள் முடிவைச்
சொன்னால் நல்லது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இப்போது நிறுத்திக்
கொள்கிறேன். என்னை வந்து பாருங்கள். (குறுக்கீடு)
Facts-க்குள் போகவில்லை. அது அப்படியே இருக்கலாம்.

8. வரவு-செலவுத் திட்டம் 1986-87—பொது விவாதம்—தொடர்ச்சி.

*திரு. சைதை சா துரைசாமி : மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, நிதி நிலை அறிக்கையின்
பொது விவாதத்தில் கலந்து கொண்டு சில பல
உணர்வுகளைச் சொல்வதற்கு வாய்ப்பு அளித்தமைக்கு
முதலில் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஒரு
சிறந்த நிதி நிலை அறிக்கையை ஏழை எளியவர்களின் வாழ்க்கைத்
தரத்தை பாதுக்காக்கின்ற தன்மையோடு புரட்சித் தலைவர்
அவர்கள், ஏழைகளின் நம்பிக்கை நட்சத்திரம் என்கிற
வகையில் இந்த நிதிநிலை அறிக்கையை சமர்ப்பித்து இருக்கி
றார்கள். இதிலே எல்லோருடைய உள்ளத்தையும் கவருகின்ற
வகையில் புரட்சித் தலைவர் அவர்கள், டீசல், மண்ணெண்
ணெய், பெட்ரோல், போன்றவற்றின் விலைகள் உயர்ந்தி
ருந்தாலும், பஸ் கட்டணத்தை நாங்கள் உயர்த்தமாட்டோம்





என்று சொல்லியிருப்பது ஏழைகளின் நலனைப் பாதுகாப்பதில்
புரட்சித் தலைவர் அவர்கள் அக்கறை உடையவர்கள் என்ப
தற்கு சான்று இது ஒன்றேயாகும்.

அதேபோல், இன்றைக்கு ஏழை எளியவர்கள் எல்லாம் உப
யோகப்படுத்துகின்ற அத்தியாவசியமான பொருட்களின் மீது
வரிகுறைப்பு செய்துள்ளார்கள். இங்கே அமர்ந்திருக்கும்
உங்களுக்கு எல்லாம் சாதாரணமாகத் தெரியலாம், கிராமப்
புறங்களில் உள்ள ஏழை எளியவர்கள் எல்லாம் அணிகின்ற
மெட்டிக்கு வரி விலக்கு என்பது, கிராமப்புறத்தில் இருப்பவர்
களுக்கும் சாதாரண ஏழை எளியவர்களுக்கும் இதை ஒரு நல்ல
சிறந்த சலுகையாக கருதிக்கொண்டு இருக்கிறார்கள்.
ஆகவே ஏழை எளியவர்கள் நல்வாழ்விற்காக புரட்சித் தலைவர்
அவர்கள், இந்த நிதி நிலை அறிக்கையை புதிய வரி போடாமல்,
புதிய வரி போட்டு மக்களை துன்புறுத்தாமல் அல்லது இருக்
கின்ற நிதிநிலையை வைத்துக்கொண்டு அவர்களைக்
காப்பாற்றுவது என்ற புதிய சிந்தனையோடு இந்த நிதி நிலை
அறிக்கையை தயாரித்து புரட்சித் தலைவர் அவர்கள் ஏழை
எளியவர்களை பாதுகாத்துக் கொண்டு இருக்கிறார்கள்.
ஆனால் நாங்கள் எதைப் போட்டாலும், எந்த ஒரு புதிய
கொள்கையைக் கொண்டு வந்தாலும், அல்லது எப்படிப்பட்ட
வளர்ச்சித் திட்டங்களைக் கொண்டு வந்தாலும், அதை
ஏற்றுக் கொள்கின்ற மனப்பக்குவம் உங்களுக்கு இல்லை
என்பது எங்களுக்குத் தெரியும். தூங்குகிறவனை எழுப்ப
லாம், ஆனால் தூங்குகின்றவனைப் போல் நடிப்பவனை
எழுப்ப முடியாது என்பதை நாங்கள் உணர்ந்தவர்கள்.
நீங்கள் இந்த அரசினுடைய கொள்கைகளையோ, அல்லது
இந்த அரசினுடைய நல்ல திட்டங்களையோ பாராட்டுகின்ற
மனப்பக்குவம் இல்லாதவர்கள். ஆகவே உங்களிடமிருந்து
பாராட்டுதல்களை எதிர்பார்க்காமல் எங்களை நம்பியிருக்
கின்ற மக்களிடமிருந்து, எங்களை நம்பி வாக்களித்து இருக்
கின்ற மக்களிடம் நாங்கள் நம்பிக்கையைப் பெறுவதற்காகத்
தான் புரட்சித் தலைவர் அவர்கள் பணியாற்றிக் கொண்டு
இருக்கிறார்கள். அன்பிற்குரிய சகோதரர் சட்டமன்ற
உறுப்பினர் இளங்கோவன் அவர்கள் சொல்லுகின்ற போது
கூட நாம் கவனமாக இருக்க வேண்டும், இந்தத் தேர்தலில்
நமக்குத் தோல்வி ஏற்பட்டு இருந்தாலும், ஏன் என்பதைச்
சிந்தித்துப் பார்த்து, நம்மை விட்டு மக்கள் செல்லாமல் பார்த்துக்
கொள்ளவேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். மக்கள் நம்மை
விட்டுச் செல்லவில்லை.

(முற்பகல் 11—00)

குளறுபடிகளால்தான் தோல்வியே
ஒரு சிலர் செய்கின்ற
தவிர மக்கள் நம்மை விட்டுச் செல்லவில்லை என்பதற்காக நான்
திரு. கருணாநிதி அவர்களுடைய புள்ளிவிவரத்தைச் சொல்லக்
கடமைப்பட்டிருக்கிறேன். அவர்களேகூட கடந்த சட்ட

மன்றத் தேர்தலின்போது சொன்னார்கள். எங்களுக்கு இருக்கின்ற வாக்கு சதவீதத்திற்கும் உங்களுக்கு உள்ள வாக்கு சதவீதத்திற்கும் உள்ள வித்தியாசம் இவ்வளவு. ஆகவே இடங்கள் அதிகமாகக் கிடைக்கவில்லையே தவிர வெற்றி இல்லை என்று சொல்வது தவறு என்றார். அதே கருத்தைத் தான் நானும் சொல்ல விரும்புகிறேன்.

திரு. ஆ. நடராசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர வர்களே, மாண்புமிகு துரைசாமி அவர்கள் கருணாநிதி சொன்ன புள்ளி விவரம் என்று சொல்கிறார்கள். அவர் இந்த அவையிலே உறுப்பினர் இல்லை. அவர் பதில் சொல்ல இயலாது. ஆகவே அதைத் தாங்கள் அனுமதிக்கிறீர்களா என அறிய விரும்புகிறேன். (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. துரைசாமி அவர்கள் பேசி முடித்தபிறகு உங்கள் கட்சியி இருந்து உறுப்பினர் பேசும்போது அதற்கு பதில் சொல்லலாம். (குறுக்கீடு). (கூச்சல், குழப்பம்) அவையில் இல்லாதவர்களைப் பற்றி பேசக் கூடாது. அவர் கட்சித் தலைவர் ஆயிற்றே. அது கட்சித் தலைவரைக் கட்டுப்படுத்தாது. (குறுக்கீடு). நீங்கள் பேசும்போது பதில் சொல்லுங்கள் (குறுக்கீடு) (கூச்சல், குழப்பம்) இப்போது இங்கே என்ன அநியாயம் நடந்திருக்கிறது என்று நீங்களே சொல்லுங்கள். நான் கேட்டுக்கொண்டுதான் இருந்தேன். அவர் பேசியதில் ஒன்றும் தவறு இல்லையே. (குறுக்கீடு).

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய தலைவர் அவர்கள் பெயரை இழுத்து இங்கே பேசவேண்டிய அவசியமே இல்லை. அவர் அவருடைய வாதங்களை சொல்லிக் கொண்டே வரலாம். ஆனால் அவரைப் போல, இவரைப்போல, என்று இழுக்க வேண்டிய அவசியம் இல்லை. தேவையான இடத்தில், கொட்டேஷன் கொடுக்கும்போது ஒரு குறிப்பிட்ட கருத்தை எடுத்துச் சொன்னார்கள் என்கிறபொழுது அவர்களுடைய பெயர்களைப் பயன்படுத்தலாம். ஆக, புள்ளிவிவரங்கள், அவரைப்போல என்று சொல்லவேண்டிய அவ்சியம் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் துரைசாமி அவர்கள் புள்ளி விவரங்கள் கொடுப்பதில் வல்லவர் என்று எல்லோருக்கும் தெரியும். ஆகவே அந்தப் புள்ளிவிவரங்களை அவரே கொடுத்துக் கொண்டிருக்கலாமே தவிர அவரைப்போல, இவரைப்போல என்று சொல்லவேண்டிய அவசியம் இல்லை. பெயரை விட்டுவிட்டு எடுத்துச் சொல்லலாம். அதனால் ஒன்றும் பாதகம் இல்லை. ஆனால் எல்லோரும் சேர்ந்து பட்ஜெட்டுக்கு வருவார்களேயானால் மிகமிக நன்றாக இருக்கும்.

நிதிநிலை அறிக்கைமீது, கருத்துக்களை வழங்கினால் நன்றாக இருக்குமே தவிர, இதற்கு அப்பாற்போய் பேசுவதானால் இந்த பட்ஜெட் கூட்டத் தொடருக்குத தக்க பலன் இல்லாமல் போய்விடக் கூடும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இங்கே எப்படி விவாதம் வருகிறதோ அப்படித்தான் அங்கிருந்து வரும். நாம் விவாதத்திலே ஈடுபடுகின்றபோது கருத்தோடு ஒன்றிப் போனால், பிரச்சினையே அல்ல. அன்றைக்கு வந்த பிரச்சினையே அதுதான். பர்சனல் என்று வரும்போது இவைகளெல்லாம் கண்டிப்பாக வரும்.

ஆகவே பர்சனலாக பேசுவதை தவிருங்கள். பர்சனல் அட்டாக் என்பது குறைந்தது என்றால் இப்படிப்பட்ட பிரச்சனைகள் வராது. பர்சனல் அட்டாக் என்றால்தான் பத்திரிக்கையிலே வருகிறது. நாட்டுக்காக நாம் பேசுவதெல்லாம் பத்திரிக்கையிலே வருவது இல்லை. குற்றச்சாட்டைச் சொன்னால்தான் பெரிதாக வருகிறது. (குறுக்கீடு) உறுப்பினர்கள் ஒருவருக்கொருவர் பேசும்போது கருத்து மோதல்கள் இருக்கட்டும். தனிப்பட்டவர்களைப் பற்றிப்பேசுவது தவிர்க்கப்படவேண்டும். பொதுவாக சொல்கிறேன். (குறுக்கீடு).

திரு. செ. ஆறுமுகம் : தலைவரைப்பற்றிப் பேசும்போது மரியாதையோடு பேச வேண்டாமா? அப்படியென்றால் நாங்களும் அவ்வாறு பேசலாமா? (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தனிப்பட்ட மோதல்களை தவிர்த்தால் இந்த மாதிரிப் பிரச்சினைகள் எல்லாம் வராது. (கூச்சல்-குழப்பம்).

திரு. ஆ. நடராசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சைதை துரைசாமி அவர்கள் பேசியதில் கருத்து வேறுபாடோ, தனிப்பட்ட எந்தவிதமான பிரச்சினையோ அல்ல. அவர் பேசும்போது கருணாநிதி என்று சொல்கிறார், அதேபோல் நாங்கள் மாண்புமிகு அமைச்சர்களைப் பார்த்து மதிப்பு தராமல் வெறும் பெயரை மட்டும் சொல்லலாமா? பெயர்களுக்கு முன்னால் மரியாதை தரவேண்டுமா? வேண்டாமா? என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதில் எந்த பிரச்சினையும் இல்லை. இதை ஒரு பிரச்சினையாக நினைக்க வேண்டாம். (கூச்சல்-குழப்பம்).

[1986 மார்ச் 24

திரு. உ. சுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக சட்டமன்ற உறுப்பினர் ஒரு அமைச்சரையோ அல்லது இதர சட்டமன்ற உறுப்பினரையோ பற்றி குறிப்பிடும்போது சம்பிரதாயம் இருக்கிறது. மாண்புமிகு திரு. என்று அடைமொழியைப் போட்டு பெயரைச் சொல்ல வேண்டும் என்பது சம்பிரதாயம். நாம் விரும்பினாலும், விரும்பாவிட்டாலும் இந்த சபையில் பேசும்போது அவர் ஏற்கனவே இந்த சபையில் அங்கம் வகித்தவர்கள், பொறுப்பில் இருந்தவர்கள், மரியாதைக்குரியவர்களை அடைமொழியைப் போட்டு பெயர் சொல்லுவது தவறு அல்ல. அப்படி கூப்பிடுவது தான் நாகரீகம் ஆகும். ஆகவே பிறர் மனது புண்படும் வகையில் சொல்லாமல் அவர்களுக்கு உரிய மாண்புமிகு உறுப்பினர் என்ற அடைமொழியைப் போட்டுச் சொன்னால் விவகாரம் குறையும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர்கள் பேசும்போது 'மாண்புமிகு' என்று அடைமொழியை போட்டு பேசவேண்டும். அப்படிப் பேசுவதால் என்ன குறைந்து போகிறது?

திரு. சைதை சா. துரைசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் மாற்றுக் கட்சித் தலைவர்களை, மாற்றுக் கட்சி நண்பர்களை கண்ணியக் குறைவாக அழைப்பதில் பெருமைப்படுபவன் அல்ல, அப்படிப்பட்ட முறையில் வளர்ந்தவனும் அல்ல என்பதை முதலில் தெரிவித்துக்கொள்கிறேன். மரியாதைக்குரிய, மாண்புமிகு முன்னாள் முதலமைச்சரும் இன்றைய சட்டமன்ற மேலவை உறுப்பினரும் ஆகிய மாண்புமிகு திரு. மு. கருணாநிதி அவர்களை நான் கொஞ்சங் கூட தரம் தாழ்த்தி அல்லது மரியாதை இல்லாத முறையில் சொல்ல வேண்டும் என்ற உணர்வு இல்லாதவன் என்பதை மாண்புமிகு உறுப்பினர்களுக்கும், சபைக்கும் தெரிவித்துக் கொள்கிறேன். அப்படி ஏதாவது நீங்கள் தவறு என்றோ கண்ணியக் குறைவு என்றோ கருதினால் அதை நான் திருத்திக் கொள்ள தயாராக இருக்கிறேன் என்பதை சொல்லி என்னுடைய உரையைத் தொடங்குகிறேன்.

கடந்த ஆண்டு நடைப்பெற்ற நிதிநிலை அறிக்கையில் நான் பல கோரிக்கைகளைச் சொன்னேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஈ. வே. கி. ச. இளங்கோவன் அவர்கள் சொன்னார்கள் சட்டமன்றம் ஒரு சடங்கு ஆகி விட்டது என்று எங்களைப் போன்றவர்களுக்கு அவ்வாறு தெரியவில்லை. நான் கடந்த ஆண்டு சட்டமன்றத்தில் பல கோரிக்கைளைச் சொன்னேன். பல குறிப்புகளைச் சொன்னேன். அந்த கோரிக்கைகள் குறித்து நல்ல பணிகள் தற்போது நிறைவேற்றப்பட்டு இருக்கின்றன என்பதை ஒருசில ஆதாரங்களுடன் சொல்ல நான் கடமைப்பட்டு இருக்கிறேன்.



1986 மார்ச் 24] [திரு சைதை சா. துரைசாமி]

கடந்த சட்டமன்ற தொடரின்போது சென்னை மாநகரத்தினுடைய வளர்ச்சிக்காகமேம்பாட்டுக்குழு ஒன்றை அமைத்தார்கள் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள். அக்குழுவில் ஒரு கருத்தைச் சொன்னர்கள், சென்னை மாநகரத்தினுடைய தனியார் தெருக்களுக்கு எல்லாம் அவர்கள் 25 சதவீதம் கட்டவேண்டிய தொகையை கட்டாமலேயே அவர்களுக்கு எல்லாவிதமான அடிப்படை வசதிகளும் செய்து தரப்படும் என்று. கடந்த ஆண்டு மேம்பாட்டுக் குழு வாயிலாக சொல்லப்பட்ட கொள்கை அறிவிப்பு இந்த ஆண்டு நிறைவேற்றப்பட்டு இருக்கிறது. இதனால் சென்னை மாநகர் முழுவதும் உள்ள தனியார் தெருக்களில் வசதிகளின்றி சிரமப்பட்டுக் கொண்டு இருந்த மக்கள் பாது காக்கப்பட்டு இருக்கிறார்கள். பயன் பெறப் போகிறார்கள். அதற்காக பல இலட்சக் கணக்கான ரூபாய் செலவில் புரட்சித் தலைவருடைய அரசு இன்றைக்குத் திட்டம் தீட்டிக்கொண் டிருக்கிறது.

(முற்பகல் 11-10)

அதேபோல் சென்ற கூட்டத் தொடரிலேயே சொன்னோம். சென்னை மாநகரத்தை மசாஜ் கிளப் சீரழித்துக் கொண்டிருக் கிறது என்று சொன்னோம். அதற்காக காவல் துறையினர் விரைந்து நடவடிக்கை எடுத்து, நல்ல முறையில் அந்த நிலையினை மாற்றியமைத்திருக்கிறார்கள்.

அதுபோன்று 'நிரோத்' விளம்பரத்தை தொலைக் காட்சிப் பெட்டிகளில் பார்க்கும்போது குடும்பத்தோடு சேர்ந்து பார்க்க முடியவில்லை என்று சொன்னோம். அந்த விளம்பரத்தை மாற்றி ஒளிபரப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. கடந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையில் பேசும்போது கோட்டூர்புரம் பகுதி வெள்ளத்தால் பாதிக்கப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு முறையும் மக்கள் சிரமப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே அங்கே நிரந்தரமான தீர்வு காணவேண்டும் என்று சொல்லப் பட்டது. அதற்கு புரட்சித் தலைவர் அரசு, அந்தப் பகுதியில் ஒரு நிரந்தர தீர்வு காணும் முறையில் எப்போது வெள்ளம் வந்தாலும், மழை பெய்தாலும், அந்தப் பகுதி மக்கள் பாதிக்கப் படாத வண்ணம், ரூ.2 கோடி செலவில் திட்டம் தீட்டி அந்தப் பணிகளை நிறைவேற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அது மாத்திரமல்ல, 147-வது வட்டம் பள்ளிப்பட்டு, ஸ்ரீராம் நகர், கழிக்குன்றம் ஆகிய பகுதிகள் நீண்டகாலமாக கழிவு நீர்ப் பாதைகள் இல்லாமல், குடிநீர் வசதி இல்லாமல் இருக் கிறது என்று சென்ற ஆண்டே சொன்னோம். அதற்காக ரூ. 40 இலட்சம் செலவில் கழிவு நீர் அகற்றுப் பாதைகளை அமைக்க புரட்சித் தலைவர் ஆட்சி நடவடிக்கை எடுத்திருக்கிறது.

[திரு சைதை சா. துரைசாமி] [1986 மார்ச் 24

அதேபோல் கோட்டூர்புரத்தில் கழிவு நீர் செல்லும் பாதை வசதிகள் இல்லை. புரட்சித் தலைவர் அரசு ரூ. 35 இலட்சம் செலவில் கழிவு நீர் செல்வதற்கான பாதைகளை அமைத்துத் தருவதற்கு நிதி ஒதுக்கீடு செய்திருக்கிறது.

அது மட்டுமல்ல. கடந்த ஆண்டு தீ விபத்து ஏற்பட்டது. திடீர் நகர், ஆற்றுமாநகர், கோதாமேடு போன்ற குடிசைப் பகுதிகள் தீ விபத்தால் பாதிக்கப்பட்டன. அந்த பாதிக்கப் பட்ட மக்களுக்கு வீடுகள் கட்டித்தர வேண்டுமென்ற கோரிக் கையை முதல்வர் அவர்களிடம் வைத்தவுடன், அவர்கள் அன் போடு ஏற்றுக்கொண்டு, 1,400 குடியிருப்புக்களைக் கட்டித் தருவ தற்காக ரூ. 1½ கோடி செலவில் திட்டம் தீட்டப்பட்டு, நடை முறைப்படுத்தப்பட்டு வருகிறது.

அது மாத்திரமல்ல. அதே பகுதிகளில் செட்டித்தோட்டம், ஆஸ்பத்திரி சாலை, சாரதி நகர், முத்து ரங்கம் பிளாக், பாரி நகர் போன்ற பகுதிகள் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட சூழ்நிலையை மாற்றி அமைக்க வேண்டுமென்பதற்காக அங்கே தடுப்புச் சுவர் எழுப்பவேண்டுமென்ற கோரிக்கையைச் சொன் னோம். ஏறத்தாழ 80 இலட்சம் ரூபாய் செலவில், இன்றைக்கு நிரந்தரமான கரையை எழுப்ப திட்டம் தீட்டப்பட்டுள்ளது. ஆற்றோரங்களில் உள்ள குடிசைப் பகுதிகளைப் பாதுகாக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. சூரியா நகர், ஜோதி யம்மாள் நகர், கோட்டூர் புரத்திலுள்ள தீப்பிடிக்காத குடி யிருப்புகள் ஆகிய பகுதிகளில் மக்களை வெள்ளம் பாதிக்காத பகுதிகளில் குடியமர்த்தி, மாற்று இடம் கொடுத்து, அந்த இடத்தை அவர்களுக்கே சொந்தமாக்கி, அங்கே அடிப்படை வசதிகளைச் செய்துதரவேண்டும் என்று சொல்லி, இன்றைய தினம் ரூ. 1½ கோடி செலவில் குடிசைமாற்று வாரியத்தின் மூலமாகவும் ஒதுக்கி அந்தப் பகுதிவாழ் மக்களைப் பாதுகாக் கின்ற காவலனாக புரட்சித் தலைவர் நடவடிக்கை எடுத் துள்ளார்.

மாநகராட்சியின் வாயிலாக பல இலட்சக்கணக்கான ரூபாய் களை ஒதுக்கி, என்னுடைய தொகுதியில் பழுது பார்க்கப்படாத சாலைகள், புதுப்பிக்கபடாத சாலைகள், பழுது பார்க்கப்பட்டு, புதுப்பிக்கப்பட்டு வருகின்றன. மழை நீர் கால்வாய்கள், 20, 25 ஆண்டு காலமாக பழுதுப்பார்க்கப்படாததால் அவைகள் மிகவும் மோசமான நிலையில் இருக்கும் நிலையை மாற்றி, இன்றைக்கு பல இலட்சக்கணக்கான ரூபாயில் சாலைகளை செப்பனிடவும், மழை நீர்க் கால்வாய்களை அமைத்திடவும், திட்டங்கள் தீட்டப்பட்டு காரியங்கள் நடைபெற்று வரு கின்றன.



1986 மார்ச் 24] [திரு. சைதை சா. துரைசாமி]

வேளச்சேரி நீர் பிடிப்புப் பகுதியில் வாழும் மக்கள், 10,000 பேர்களும் ஆண்டுதோறும் பாதிக்கப்பட்டு வருகிறார் கள் என்று சொல்லிச் சொல்லிப் பார்த்தோம். யாரும் கேட்க வில்லை. கேட்கின்ற அரசாக, காரியங்களைச் செய்கின்ற அரசாக ஏழைகளின்துன்பத்தைத் துடைக்கின்றஅசராக புரட்சித் தலைவர் அரசு இருக்கிறது, என்பதனால்தான் இன்றைக்கு ரூ. 5 இலட்சம் செலவில் வேளச்சேரி நீர் பிடிப்பைக் குறைத்து அதற்கான திட்டம் ஒன்று தீட்டப்பட்டு பணிகள் தொடங்கியிருக்கின்றன. வளர்ச்சிப் பணிகள், மக்கள் நலப் பணிகள் துவங்கப்பட்டிருக் கின்றன. புரட்சித் தலைவர் அரசு ஏழை எளியவர்களுடைய நல்வாழ்விற்காக ஏழைகளின் கோரிக்கைகளை நிறைவேற்று வதற்காக, ஏழைகளுக்காக எல்லாவிதமான காரியங்களையும் செய்வதற்கு முனைந்து பணியாற்றிக்கொண்டிருக்கிறது.

நாற்பதாண்டுக்காலமாக சென்னை மாநகரத்தின் ஒருங் கிணைந்த பகுதியாக இருக்கிற மடுவன்கரைப் பகுதியிலே குடிநீர் இல்லை. அந்தப் பகுதியிலே உள்ள மக்கள் கிணற்று நீரையும் வேறு பகுதிகளிலே இருந்து கொண்டுவரப்படுகிற நீரையும் குடித்துக் கொண்டிருந்தார்கள். இப்படிப் பட்ட கொடுமையை நாங்கள் புரட்சித் தலைவர் அவர்களிடத்திலே எடுத்து வைத்த போது 5 இலட்சம் ரூபாய் செலவிலே முட்டுக்காடு பகுதியிலிருந் குடிநீர் கொண்டுவரத் திட்டமிட்டிருக்கிறார்கள் என்ற நல்ல செய்தியை நான் தெரிவித்துக் கொள்கிறேன். இவையெல்லாம் வளர்ச்சிப் பணிகள் இல்லையா ? இப்படி மக்கள் கோரிக்கைகளை எடுத்துச் சொல்கிற நேரத்திலே மக்களுக்காகப் பணி யாற்றுகிற இந்த அரசையும் ஆட்சியையும், குறை சொல்வது எதிர்க்கட்சிக்கு வாடிக்கையாக இருக்கலாம். குறைகள் இருந்தால் அப்படிப்பட்ட குறைகளை நிவர்த்தி செய்கின்ற அரசுதான் புரட்சித் தலைவரின் அரசு என்பதை நான் தெரிவிக்கக் கடமைப் பட்டு இருக்கிறேன். நல்ல பல பணிகளை வளர்ச்சிப் பணி களை செய்து கொண்டிருக்கிற புரட்சித் தலைவர் ஆட்சியிலே இந்த நேரத்திலே ஒரு சில கோரிக்கைகளையும் வைத்து, நிறை வேற்றித் தரவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

வீட்டு வசதி வாரியத்திற்கும், குடிசை மாற்று வாரியத்திற்கும் இன்னும் கொஞ்சம் அதிகமான நிதியை ஒதுக்கித் தாருங்கள் என்றுநான் மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். குடிசைப் பகுதி மாற்று வாரியம் தமிழகம் முழு வதுமக்கும் விரிவுபடுத்தப்பட்டு வருகிறது. அவர்கள் மக்கள் நல பணிக்காகவும், திட்டங்களுக்காகவும் செயல்பட வேண்டு மென்றால் இப்போது ஒதுக்கப்பட்டிருக்கிற நிதி போதுமான

தல்ல. ஆகவே அதிகமான நிதி ஒதுக்கீடு செய்து கொடுக்க வேண்டுமென்று மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களை நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, சென்னை மாநகரத்திலே பல இடங்களிலே போதை மாத்திரைகளைச் சாப்பிட்டு அதற்கு ஆட்பட்டு விடுகிற காரணத்தினால் வளர்ந்து வருகின்ற மாணவ சமுதாயம் மிகப் பெரிய பாதகமான சூழ்நிலைக்குச் சென்று கொண்டிருக்கிறது. இதிலே தனிக் கவனம் செலுத்தி போதைப் பொருட்கள் விற்பனை செய்வதைத் தடுத்து, மாணவர்களைப் பாதுகாக்க சென்னை மாநகரக் காவல் துறை தீவிரமான நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

ஆசிரியர்கள் பிரச்சினைகளிலே ஒவ்வொரு டி.இ.ஓ. அலுவலகத்திலும் ஆசிரியர் ஒருவர் உதவியாளராக இருந்து வந்திருக்கிறார். ஆனால் அந்த முறை மாற்றப்பட்டு இன்றைக்கு சில பணியாளர்கள் அந்த இடத்திலே நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். அந்த இடத்திலே ஆசிரியர்களையே நியமித்து அவர்களுடைய கோரிக்கைகளைக் கேட்டறிந்து ஆவன செய்யவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் பார்வையிலே இந்த தலைமைச் செயலகத்திலே பணியாற்றுகின்றவர்கள் தவறாக ஏதாவது செய்திருந்தால்கூட அதைப் பொறுத்து அவர்களுக்கும் பாதுகாப்புக் கொடுக்க வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

இன்றைக்கு தமிழகத்திலே பல்வேறு விளையாட்டு வளர்ச்சித் துறைகளை நாம் உருவாக்கி நாடு பெருமையும் சிறப்பையும் பெறக்கூடிய முறையிலே நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறோம். இன்றைக்குத் தமிழகத்திலே—அன்பிற்குரிய திரு இளங்கோவன் அவர்கள் இங்கே சொன்னதைப் போல — விளையாட்டு வீரர்களின் எண்ணிக்கை குறைவாக இருக்கிறது, அதை அதிகரிக்க வேண்டும். சென்னை மாநகரிலே இன்றைக்கு நூற்றுக்கணக்கான விளையாட்டு மைதானங்கள் கேட்பாரற்றும் கவனிப்பாரற்றும் கிடக்கின்றன. அந்த விளையாட்டு மைதானங்களை தனியார் நிறுவனங்கள் அல்லது மிகப் பெரிய கம்பெனிகள் எடுத்து முறைப்படி அவற்றைப் பயன்படுத்திக் கொள்கிற முறையிலே விளையாட்டுத் துறையை ஊக்குவிப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.



உயிரோடு இருப்பவர்களின் பெயரையெல்லாம் வைக்கலாம்என்ற ஆணையை அரசு மாற்றியிருக்கிறது. ஆகவே, விளையாட்டுத் துறையில் ஆர்வமுள்ள இளைஞர்கள் என்னிடத்திலே காலையிலே மனுவைக் கொடுத்தார்கள். இருக்கின்ற ஒவ்வொரு விளையாட்டு மைதானத்திற்கும், விளையாட்டுத்துறையில் ஆர்வம் உடையவர்களின் பெயர்களை வைக்க ஏற்பாடு செய்யுங்கள். அப்படி வைத்தால் விளையாட்டு வீரர்களுக்கு எழுச்சி வரும். திரு. சி.பா. ஆதித்தனார் அவர்களின் பெயரை ஒரு விளையாட்டு மைதானத்திற்கு வைக்கலாம். அதைப்போல எழும்பூர் ஸ்டேடியத்திற்கு திரு. சிவந்தி ஆதித்தன் அவர்களுடைய பெயரை வைக்கலாம். இப்படி விளையாட்டுத் துறையில் ஆர்வம் உள்ள அறிஞர் பெருமக்களின் பெயர்களை வைக்கலாம் என்று ஒரு பட்டியலை என்னிடத்திலே கொடுத்திருக்கிறார்கள். அதை மாண்புமிகு முதல்வர் அவர்களிடத்தில் நான் தர இருக்கிறேன். அதைப் பரிசீலனை செய்து, இப்படி இருக்கின்ற நூற்றுக்கணக்கான விளையாட்டுத் திடல்களுக்குப் பெயர்களை வைக்கலாம். அப்படி வைத்தால் விளையாட்டு வீரர்கள் உற்சாகம் அடைந்து, அந்தப் பெருமக்களும் உற்சாகம் அடைந்து, விளையாட்டுகளை வளர்ப்பதற்கு உதவியாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(முற்பகல் 11—20)

தற்போது போக்குவரத்து நெரிசல் மிகப்பெரிய அளவிற்கு ஏற்பட்டிருக்கின்ற காரணத்தினால், இரயில், பஸ் ஆகியவற்றில் செல்வது மிகவும் சிரமமாக இருக்கிற இந்த நேரத்தில், கடல் வழிப்போக்குவரத்து முறையிலே, பறக்கும் படகு என்று சொல்லத்தக்க விதத்தில், சென்னைக்கும் கன்னியாகுமரிக்கும் இடையிலே விட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். வெளிநாடுகளிலே இந்த முறை மிகவும் பிரபலமாக உள்ளது. அந்த முறையைத் தமிழ்நாட்டிலேயும் அமல்படுத்த புதிய திட்டத்தைத் தீட்ட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சென்னை நகரத்தில், இரவு விடுதிகள் போன்ற இடங்களில் ஆபாச நடனங்களையும், பல்வேறு தவறான நடவடிக்கைகளையும் நடத்திக் கொண்டு இருப்பதாகக் கேள்விப்படுகிறோம். ஆகவே, அங்கேயெல்லாம் நாம் தகுந்த நடவடிக்கை எடுத்து, எப்படி மசாஜ் கிளப்புகளை ஒழித்தார்களோ, அதைப்போல இதையும் ஒழிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தமிழகத்தினுடைய சுற்றுலாத் தலங்களைத் திரைப்படமாகத் தயாரித்து வெளிநாடுகளிலேயிருந்து வருகின்ற வெளிநாட்டு உல்லாசப் பயணிகளுக்குக் காட்டினால் நம்முடைய

பெருமைகளையும், தமிழகத்தில் நாம் பெற்றிருக்கின்ற சுற்றுலாத் தலங்களைப் பற்றிய சிறப்புகளையும் அவர்களுக்குக் காட்ட முடியும். அதற்கு வழிவகை செய்யும்படியாகக் கேட்டுக் கொள்கிறேன்.

சென்னை நகரில் துரித இரயில் போக்குவரத்திற்கான பாதையைப் போட, விரைவில் செயல்படுத்த நடவடிக்கைகளை எடுக்க அதிக நிதி ஒதுக்க மத்திய அரசை வற்புறுத்த வேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்.

சென்னை நகரில் நிரந்தரப் பொருட்காட்சி என்று ஏற்கனவே சொன்ன இந்தத் திட்டம் இன்னும் நிறைவேற்றப் படாமல் இருக்கிறது. சென்னை நகர மக்களுக்கு எப்படி இயற்கை யான கடற்கரை அமைந்திருக்கிறதோ அதைப்போல நிரந்தரப் பொருட்காட்சியினையும் விரைந்து அமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன்.

திருவான்மியூருக்கு அப்பால் மகாபலிபுரம் செல்லும் கடற் கரைச் சாலையில் இரு பக்கமும் கட்டிடங்கள் கட்டுவதற்கு தடை விதிக்கப்பட்டிருக்கிறது. அப்படித் தடை விதிக்கப் பட்டிருப்பதால் புதியதாக, வீடுகள் கட்டப்படுகின்ற திட்டம் நிறைவேற்றப்படவில்லை. ஆனால், ஏற்கனவே ஒப்புதல் அளிக்கப்பட்டு, எம்.எம்.டி.ஏ.விற்கு அனுப்பப்பட்டு, அப்ரூவ்ட் லே-அவுட் என்று வாங்கப்பட்ட வீட்டுமனைகளின் சொந்தக் காரர்கள்கூட வீடு கட்டிக்கொள்வதற்கு முடியாமல் சிரமப் படுகிறார்கள். அவர்களெல்லாம் அந்த வீட்டு மனைகளில் வீடுகளைக் கட்டிக்கொள்வதற்கு வழி வகை செய்ய வேண்டு மென்பதை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழகத்தில் உள்ள எல்லாப் பள்ளிகளுக்கும் ஒரு தொலைக்காட்சிப் பெட்டியை நாம் வழங்க வேண்டும். அப்படி வழங்கி, விஞ்ஞானம், தொழில் நுட்பப் பாடங்கள், செயல் முறை விளக்கப் பாடங்கள் ஆகியவைகளைக் கொண்ட கேசட்டுகளைத் திரையிட்டுக் காட்டினால் தேவையான தொழில் கல்வி, மற்ற கல்வி ஆகியவைகளைச் சொல்லிக்கொடுக்கின்ற நவீனமான முறைகளைப் பயன்படுத்தினால் அது பள்ளி மாணவர்களுக்குப் பயனுடையதாக இருக்கும்.

இன்றைக்குப் பல்வேறு நலத் திட்டங்களை புரட்சித் தலைவருடைய அரசு நிறைவேற்றிக் கொண்டிருக்கிறது. குறிப்பாக, இன்றைக்கு சாராயக் கடைகளை மூடி விடுகின்ற நல்ல அறிவிப்பை, புரட்சித் தலைவர் அரசு செய்திருக்கிறது. சாராயக் கடைகளை மூடுகின்ற நேரத்தில், இன்னொன்றையும்

*1986 மார்ச் 24]* *[திரு. சைதை சா. துரைசாமி]*

நாம் கவனத்திலே கொள்ள வேண்டும். சாராயப் பழக்கத்திற்கு அடிமைப்பட்டிருக்கிற அந்தச் சமுதாயத்தினரை அப்பழக்கத்திலிருந்து விடுபடுத்தவும், அவர்கள் நாளுக்கு நாள் குடிப் பழக்கத்திலிருந்து அறவே விடுபடவும் மருத்துவ ரீதியில் அவர்களுக்கு ஏதாவது மாற்று ஏற்பாட்டை செய்ய வேண்டுமென்பதையும் இந்த நேரத்தில் நா கேட்டுக் கொள்கிறேன்ன்.

சாராயக் கடைகளை மூடிவிட்டால் மட்டும் போதாது. குடிப் பழக்கத்திற்கு ஆளானவர்களைத் திருத்தவேண்டும். அவர்களிடம் கொள்கையைச் சொல்லி, அறிவுறுத்தி, திருத்தவில்லையென்றாலும், மருத்துவ ரீதியாக திருத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இந்த நிதிநிலை அறிக்கையில் அதிகமான அளவு வளர்ச்சித் திட்டங்கள் இல்லை, எப்படிப்பட்ட வளர்ச்சித் திட்டங்களையும் அவர்கள் செயலாக்கவில்லையென்று சொன்னார்கள். சட்டியிலே இருந்தால்தானே அகப்பையிலே வரும். இருப்பதை வைத்து, இருக்கிற நிதி ஆதாரத்தை வைத்து, மக்களுக்கு அதிகமான வரியைப் போட்டு, தொல்லைப்படுத்தாமல், இருக்கிற நிதியை முறைப்படுத்தி, எதெதற்கு என்று இனவாரியாகப் பிரித்து, மக்களுக்குத் தேவையான பணிகள், நல்ல பணிகள் செயலாக்க, இந்த அரசு செலவிட்டிருக்கிறதே தவிர, இன்றைக்கு நாங்கள் மக்களை ஏமாற்றி, அல்லது மக்களைத் தொல்லைப்படுத்தி, அல்லது மக்களது எண்ணங்களுக்கு மாறாக நடக்கக் கூடாது என்பதால்தான் இப்படிப்பட்ட வரிச் சலுகைகள் ஒரு பக்கம், நலப் பணிகள் ஒரு பக்கம் அளித்திருக்கிறது அரசு. ஆகவே, 5 ஆண்டுகளாக, தொடர்ச்சியாக, அரிசனங்களுக்கு வீடுகள் கட்டித் தருகின்ற திட்டத்தைத் தொடர்ந்து நிறைவேற்றுகின்ற அந்தப் பணி, இப்படி வருடந்தோறும் நிதிநிலை அறிக்கையின் போது, புதிய திட்டத்தை அமுல்படுத்துவது என்ற கொள்கையை புரட்சித் தலைவர் அரசு இன்றைக்கு நிறைவேற்றியிருக்கிறது. அப்படிப்பட்ட இந்தப் புரட்சித் தலைவர் ஆட்சியின் மீதும், புரட்சித் தலைவர் மீதும், பல அவதூறுகளைச் சொல்கிறார்கள். நாங்கள் அவற்றையெல்லாம் தனியாக மானியக் கோரிக்கைகள் வரும்போது பேசிக் கொள்கிறோம்.

இன்னொன்று, நர்சரி பள்ளிகள், இன்றைக்கு நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து கொண்டிருக்கின்றன. நர்சரி பள்ளிகளில் கல்வியின் தரம் என்ன என்று தெரியாமல், ஒரு மோகத்தின் காரணமாக, அங்கே சென்று மாணவர்களை சேர்க்கிறார்கள், ஆகவே, அந்த நர்சரி

[திரு. சைதை சா. துரைசாமி] [1986 மார்ச் 24

பள்ளிகளைக் கட்டுப்படுத்தி, முறையான சூழ்நிலையை ஏற்படுத்தி, கல்வியின் தரத்தை அங்கே உயர்த்தும் திட்டத்தை அமுல்படுத்த வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

இறுதியாக, * *

(முற்பகல் 11–30)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர்கள் நேருக்கு நேர் பார்த்து பேசக்கூடாது. என் அனுமதி பெற்றுத்தான் பேச வேண்டும். பேசும்போது பிரச்சனைக்கு இடமில்லாமல் பேச வேண்டும். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஓர் உறுப்பினரைப்பற்றி இன்னொரு உறுப்பினர் குற்றச் சாட்டு சொல்ல வேண்டுமென்றால் முன் கூட்டியே எழுதிக்கொடுத்து, சம்பந்தப்பட்ட உறுப்பினரை ஆயத்தமாக இருக்க வைத்து, குற்றச்சாட்டுக்கு பதில் அளிக்கின்ற வாய்ப்பை உருவாக்கி, தலைவரின் அனுமதியைப் பெற்று குற்றச் சாட்டை எழுப்பலாம். ஏற்கெனவே இங்கே ஒரு குற்றச்சாட்டை மறைமுகமாக எழுப்பியபோது, அவைத் தலைவரின் ஆணைப்படி அது அவைக் குறிப்பிலிருந்து அகற்றப்பட்டது. ஆகவே, அந்தப் பிரச்சனை இங்கே எழுப்பப்படவில்லை என்றுதான் பொருள். ஆக, எழுப்பப்படாத ஒரு பிரச்சனைக்கு மாண்புமிகு உறுப்பினர் திரு. சைதை துரைசாமி அவர்கள் இங்கே பதில் சொல்ல வேண்டிய அவசியம் இல்லை, அந்தப் பிரச்சனை எழவில்லை. வெளியே பேசப்பட்டப் பிரச்சனைக்கு வெளியே பதில் சொல்லலாம், இங்கே வேண்டாம். ஆகவே, இங்கே எழுப்பப்படாத பிரச்சனைக்கு பதில் சொல்வதாக திரு. சைதை துரைசாமி அவர்கள் குறிப்பிட்டவற்றை அவைக் குறிப்பிலிருந்து எடுத்துவிடலாம்.

* *

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இங்கே இருக்கிற உறுப்பினர்களைப் பற்றி அவையிலே ச்சனை எழுப்பப் பட்டிருக்குமானால் சம்பந்தப்பட்டவர் அதற்கு விளக்கம் அளிக்கலாம். ஆனால் இங்கே இருக்கிற யாரைப் பற்றியும் சொல்லவில்லை. (குறுக்கீடுகள்). ஒரு உறுப்பினரைப் பற்றி அல்லது ஒரு அதிகாரியைப்பற்றி குற்றச்சாட்டு சொல்வ

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



1986 மார்ச் 24] [பேரவைத் தலைவர்]

தாக இருந்தால் முன் அனுமதி பெற்று, சொல்ல வேண்டும். (குறுக்கீடுகள்) பொதுக் கூட்டத்தில் பேசப்பட்டதற்கு பொதுக் கூட்டத்தில்தான் பதில் சொல்ல வேண்டும். இங்கே அதற்கு பதில் சொல்ல முடியாது. (குறுக்கீடுகள்).

திரு. கு. பாலன் : அன்றைக்கு இங்கே ஒரு பிரச்சனை எழுப்பப்பட்டு அவைக் குறிப்பிலிருந்து அது நீக்கப்பட்டிருக்கிறது. ** ஆகவே, அதை நீக்க வேண்டும் அல்லது விளக்கம் சொல்ல வாய்ப்பளிக்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் அவை முன்னவர் அவர்கள் சொன்னதற்குப் பதில் சொல்கிறேன். எழுப்பப்பட்ட பிரச்சினையைப் பொறுத்தவரையில் நான் சொல்ல விரும்புகிறேன். அவர்கள் பொதுவாகத்தான் பேசியிருக்கிறார்கள். (குறுக்கீடுகள்) நான் அவைக்குறிப்பினைப் பார்க்கிறேன். (கூச்சல் குழப்பம்) தவறாக ஏதேனும் கூறப்பட்டிருந்தால் அதனைப் பார்த்து நீக்கிவிடுகிறேன். எனவே அனைவரும் அமைதியாக அமரவேண்டும். (கூச்சல், குழப்பம்) இந்தப் பிரச்சினையை இத்துடன் விட்டுவிடுங்கள். நான் அவைக்குறிப்பைப் பார்க்கிறேன்; நீக்கவேண்டியது இருந்தால் நீக்கிவிடுகிறேன்.

திரு. செ. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அவையிலே எங்கள்மீது குற்றச்சாட்டுச் சொல்கிற போது அதை எந்தவிதத்திலும் மறைக்க நாங்கள் தயாராக இல்லை.

* * * *

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இங்கே இருக்கின்ற உறுப்பினர்களைப்பற்றி அவர்கள் சொல்லவில்லை என்று கருதுகிறேன். இருப்பினும் நிச்சயமாக அதனைப் பார்க்கிறேன். பார்த்து அப்படி இருந்தால் நான் நீக்கிவிடுகிறேன். நான் அவ்வாறு அதைப் படித்துப் பார்த்து அறிவிக்கிற வரையில் அதனை வெளியிட வேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறேன். (கூச்சல், குழப்பம்) நான் பார்த்துக்கொள்கிறேன் என்று சொல்லிவிட்டதற்குப் பிறகு அமைதியாக அமரவேண்டியதுதானே. அமருங்கள்.

திரு. எஸ். எம். இராசரத்தினம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிதியமைச்சர் டாக்டர் நாவலர் அவர்கள் இந்த மாமன்றத்தின் முன் வைத்துள்ள 1986–87 ஆம் ஆண்டுக்

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[திரு. எப். எம். இராசரத்தினம்] [1986 மார்ச் 24

கான நிதிநிலை அறிக்கையை வரவேற்று உரையாற்ற வாய்ப்பு வழங்கியமைக்காக நான் தங்களுக்கு (கூச்சல், குழப்பம்) நன்றி கலந்த வணக்கத்தை முதற்கண் தெரிவித்துக் கொள்கிறேன். (கூச்சல், குழப்பம்).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவர்கள் பேசியதில் தவறாக ஏதேனும் குறிப்பிடப்பட்டிருந்தால் அதைப் பார்த்து நான் நீக்கிவிடுகிறேன் என்று சொல்லிவிட்டேனே. அமைதியாக இருக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். * * (கூச்சல், குழப்பம்).

திரு. ஆ. நடராசன் ; பேரவைத் தலைவர் அவர்களே, * * * அவர் குற்றச்சாட்டு சொல்லியிருக்கிறார். அதற்கு நான் விளக்கம் சொல்ல வேண்டாமா ? (கூச்சல் குழப்பம்).

திரு. செ. ஆறுமுகம்: * *

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவற்றை எல்லாம் நான் பார்க்கிறேன். அமைதியாக அமருங்கள்.

திரு. எப். எம். இராசரத்தினம் : பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே உரையாற்றிய பல்வேறு உறுப்பினர்கள் தங்கள் உணர்வுகளை எடுத்து வைத்தார்கள்.

(முற்பகல் 11–40).

பேரறிஞர் அண்ணா அவர்கள் இன்றைக்கு நம்மிடையே இல்லை என்றாலும் அவர்கள் நமக்கு வழங்கிய கொள்கைகளையும், ஊட்டிய உணர்வுகளையும் பேணிக் காக்கின்ற அரசாக இந்திய தேசத்தின் ஒட்டு மொத்த நலனைக் காக்கின்ற அரசாக விளங்குகிறது என்பதற்கு, மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களின் இந்த நிதிநிலை அறிக்கையே ஒரு எடுத்துக் காட்டு. இந்திய ஒற்றுமையை பாதுகாக்கவும், ஒருமைப்பாட்டிற்கு உட்பட்டு, மாநிலத் தன்னாட்சி கோருகிற மாநிலங்கள், இன்னும் அதிக அளவில், அதிக அதிகாரம் பெறத் தக்க விதத்தில் இந்திய அரசியல் சட்டத்தைத் திருத்தவேண்டும் என்று கோரிய பேரறிஞர் அண்ணா அவர்களின் கொள்கைகளை எண்ணங்களை இன்றைக்கு சட்டமாக்கவேண்டும். (கூச்சல் — குழப்பம்)

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



1986 மார்ச் 24]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் திரு. சைதை துரைசாமி அவர்களின் உரையை படித்துப் பார்த்து பிறகு நீக்கி விடுகிறேன் என்று சொல்லியிருக்கிறேன். அதற்குப் பிறகும் மேலும் மேலும் இப்படி பேசிக் கொண்டிருப்பது சரியல்ல. தயவுசெய்து உட்காருங்கள்............

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சைதை திரு. சா. துரைசாமி அவர்கள் கடைசியில் பேசிய பேச்சுக்களில் எதையும் பத்திரிகைகளில் வெளியிட வேண்டாம் என்றும், அதைப் படித்துப் பார்த்து தவறு இருக்குமானால், நீக்கிவிட வேண்டிய அவசியம் ஏற்பட்டால் நீக்கிவிடுகிறேன் என்றும் பேரவைத் தலைவர் அவர்கள் கூறியிருக்கிற காரணத்தால், அவைகள் எதுவும் வெளியிடப்படமாட்டாது. தலைவரின் தீர்ப்பு கிடைத்த பிறகு அதைப் பொறுத்து என்னவென்று நடவடிக்கை எடுக்கலாம். அதற்கிடையில், அதே பிரச்னையை மீண்டும் கிளப்ப வேண்டிய அவசியம் இல்லை என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. எப். எம். இராசரத்தினம் அவர்கள் தொடர்ந்து பேசலாம்.

திரு. எப். எம். இராசரத்தினம் : இந்தியக் கூட்டாட்சி அமைப்பில் மாநில தன்னாட்சி கோரப்படுவதை வரவேற்று அரசியல் கொள்கையாக மத்திய அரசாங்கத்தில் ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும் என்பதற்கு பல்வேறுபட்ட நியாயங்களை, காரணங்களைக்கூறி இந்த நாட்டின் வளர்ச்சியை, ஒற்றுமையை, ஒருமைப்பாட்டை உள்ளத்தில் கொண்டு வலியுறுத்துகிறோம்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

சென்னை நகருக்கு குடிதண்ணீர் வழங்க கிருஷ்ணா ஆற்று குடிநீர்த் திட்டம் தீட்டப்பட்டு, நமது மரியாதைக்குரிய மறைந்த பாரதப் பிரதமர் இந்திரா காந்தி அம்மையார் கூட அந்த விழாவிலே கலந்து கொண்டு வாழ்த்துக்களை வழங்கிய நினைவுகள் இன்றைக்கும் நம் இதயங்களில் பசுமரத்தாணியைப் போல பதிந்துள்ளது. மாநிலங்களுக்கிடையிலே ஒற்றுமையை வளரச் செய்வதற்கு இது ஒரு எடுத்துக் காட்டு என்று கூட அன்றைக்கு அன்னை இந்திரா காந்தி அம்மையார் அவர்கள் அதனை ஆதரித்துப் பேசினார்கள். ஆனால் இன்றைய நிலைமை என்ன? ஆந்திரா அரசுக்கு கிருஷ்ணா குடிநீர் திட்டத்திற்காக 47 கோடி ரூபாயை இதுவரையில் வழங்கியிருக்கிறோம். தமிழகத்தில் எல்லையில் அமைக்கப்பட இருக்கிற 25.275 கிலோ மீட்டரில் ஏறத்தாழ 24 கிலோ மீட்டர் நீளக் கால்வாயை வெட்ட திட்டமிடப்பட்டு, அந்தப்பணி நடந்து வருகிறது. ஆனால் கால்வாயை

வெட்டுவதற்கு திட்டமிடப்பட்டுள்ள வனப்பகுதியை காப்பு வனப் பட்டியலிலிருந்து நீக்கப்பட வேண்டிய உத்தரவினை போட வேண்டியவர்கள் மத்திய அரசாங்கத்தினர். பெருமதிப்பிற்குரிய அன்னை இந்திரா காந்தி அம்மையார் அவர்களுடைய வாழ்த்துக்களைப் பெற்று தொடங்கிய திட்டமே இன்றைக்கு மத்திய அரசின் ஒப்புதலுக்காகக்காத்து இருக்கின்ற நிலைமையில் இருக்கிறது. அதனை நம்முடைய நண்பர்கள் சொல்ல வேண்டிய இடத்தில் சொல்லி, அனுமதியைப் பெற்றுத்தந்தால், அது நாட்டிற்கு நலம் பயக்கும் என்பதைச் சொல்லிக் கொள்கிறேன். கன்னியாகுமரி முதல் காஷ்மீர் வரை இருக்கின்ற நதிகளை இணைக்க வேண்டும். அப்படி இணைக்கின்ற பெரிய திட்டமாக உருவாக்குவதன் மூலமாக, நாடு முழுவதிலும், குடிதண்ணீர் பிரச்னையாக இருந்தாலும், மின்சார பிரச்சினையாக இருந்தாலும் அல்லது விவசாயத்துறை சம்பந்தமான பிரச்னையாக இருந்தாலும் ஒட்டு மொத்தமாகக் கண்காணித்து பாதுகாப்பதற்கு ஏதுவான வகையில் அந்தத் திட்டம் உருவாக்கப்பட வேண்டும், அதற்கு நம்முடைய அரசு மத்திய அரசிற்கு பரிந்துரைக்க வேண்டும் என்று இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

வடபுலத்தில் வருடந்தோறும் வெள்ளச்சேதத்தை உருவாக்கும் கங்கையையும், தென்புலத்தில் வறண்ட நிலையில் வறுமையின் கோரப் பிடியில் சிக்கியிருக்கும் காவிரியையும் இணைத்து, கங்கை- காவிரி இணைப்புத் திட்டம் ஒன்றை விரைவில் செயல்படுத்த வேண்டும் என்று 1971 ஆம் ஆண்டு காங்கிரஸ் கட்சியினுடைய தேர்தல் அறிக்கையில் கூறப்பட்டது உண்டு, ஆனால் அது தேர்தல் கால காகித அறிக்கையாகத்தான் இருந்ததே தவிர வேறு அல்ல. அதற்குப் பிறகு 1969-70-ல் சென்னைக்கு குடிதண்ணீர் கொண்டு வர வேண்டும் என்பதற்காக 21 கோடி ரூபாய் செலவில் வீராணம் திட்டம் என்று சொல்லக் கூடிய திட்டத்தை அன்றைக்கு திராவிட முன்னேற்றக் கழக சர்க்கார் தீட்டியது. 5 ஆண்டுக் காலத்தில், ஏறத்தாழ 1974-ல் சென்னைக்கு குடிதண்ணீர் கிடைக்கும் என்று சொன்னார்கள். ஆனால் 1976 வரை திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய சர்க்கார் தான் தமிழகத்தில் ஆளும் கட்சியாக இருந்திருக்கிறது என்பதையும், திட்டத்தின் மதிப்பீடுதான் கோடிக் கணக்கில் உயர்ந்ததே தவிர, நாட்டு மக்களுக்கு அந்த நலம் போய்ச் சேரவில்லை. ஆனால் புரட்சித் தலைவர் அவர்கள் ஒரு திட்டம் தீட்டுகின்றார்கள் என்று சொன்னால், அந்தத்திட்டத்தினாலே நாட்டு மக்கள் நீண்ட நெடுங்காலம் பயன் அடைய வேண்டும் என்ற தொலை தூரப் பார்வையோடு செயல்படுகிறார்கள் என்பதை இந்த நேரத்தில் சொல்லிக் கொள்ள வேண்டியது என்னுடைய கடமை என்று கருதுகிறேன். அந்த அடிப்படையில்தான் கிருஷ்ணா நதிநீர்த் திட்டத்திற்கு இன்றைக்கு நம்முடைய அரசாங்கத்தாலே 47 கோடி ரூபாய் ஆந்திர அரசிற்குக்கொடுக்கப்பட்டு, நடப்பு நிதியாண்டிலே கூட 45 கோடி





ரூபாய் அதற்காக ஒதுக்கியிருக்கிறார்கள் என்பதையும் இந்த அறிக்கையிலே பார்க்கிறோம். இந்த அளவிற்கு சென்னைக்கு குடிதண்ணீர் கொடுப்பதற்காக ஒரு நல்ல திட்டம் தீட்டப்பெற்று இன்றைக்கு மத்திய அரசினுடைய அனுமதிக்காக, இன்றைக்கு பாதுகாப்பு வனப் பட்டியலிலிருந்து அதை நீக்கவேண்டும் என்பதற்காக, கேட்கிற அந்த ஒரு சூழ்நிலையில் மத்திய அரசு ஒத்துழைக்க வேண்டுமென்பதை இந்த நேரத்தில் சொல்லிக் கொள்வதை என்னுடைய கடமையாகக் கருதுகிறேன்.

நான்கு மாதங்களுக்கு முன்பு இயற்கைச் சீற்றத்தால் தமிழகத்தில் ஏற்பட்ட சேதங்களுக்காக மத்திய அரசு 66.8 கோடி ரூபாய் வழங்கியது. இது வரையில் 45 கோடி ரூபாய் செலவழித்து இருக்கிறோம். நடப்பு நிதியாண்டு முடிவதற்குள் செலவுத் தொகை ரூபாய் 60 கோடியை எட்டிவிடும். மீதமுள்ள தொகை வரும் நிதியாண்டில் தொடர்ந்து செலவிடப்படும் என்று நிதிநிலை அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. நம்முடைய நாவலர் அவர்களால் இந்த நிலைமை தெளிவுபடுத்தப்பட்டிருக்கிறது. குற்றம் காணவேண்டுமென்று எண்ணுகின்ற நண்பர்கள் வேண்டுமென்றே மத்திய அரசு கொடுத்த 66.8 கோடி பணத்தை மாநில அரசு செலவழிக்கவில்லை என்ற செய்தியை மக்கள் மத்தியிலே பரப்பி, பொன்மனச் செம்மல் அரசின் மீது புழுதி வாரித் தூற்றும் நோக்கத்தோடு தெரிந்தோ, தெரியாமலோ விஷ விதைகளை விதைப்பது நியாயமல்ல என்று தெரிவித்துக் கொள்கிறேன். அவசர கோலத்தில் எடுத்தேன் கவிழ்த்தேன், என்று அரசாங்க பணத்தை நாம் செலவழிக்கவில்லை என்பது இந்த நிதிநிலை அறிக்கையில் தெளிவுப்படுத்தப்பட்டிருக்கிறது.

அரசாங்கப் பணம் என்ன இரும்பா கற்பனை படைப்புகளா? நினைத்தவுடனே பாலத்தைக் கட்ட, தலை அசைத்தவுடன் கண நேரத்தில் மாளிகைகளை, சாலை வசதிகளை உருவாக்க, இன்றைக்கு தாய் உள்ளம் கொண்ட தலைவர் புரட்சித், தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களைப் பொறுத்தவரையில், புரட்சித் தலைவர் அவர்களின் அரசைப் பொறுத்த வரையில், ஊழலற்ற முறையில் திட்டமிட்டு, திட்டமிடுகிற பணிகள் உறுதியாக அமைய, செலவழிக்கிற பணம் நாட்டு மக்களுக்கு பயன் உடையதாக அமைய முழுக்கவனம் செலுத்தி, நிதானத்துடன் நடவடிக்கைகளை எடுத்து வருகிறது என்பதை இந்த நேரத்தில் சொல்லிக் கொள்கிறேன். அத்தியாவசியப் பணிகளை அவசரப்படுத்துவதன் மூலமாக நீண்ட நாட்களுக்கு பயனளிக்க வேண்டிய பணிகள் சரியான முறையில் அமையாது. இதற்கு உதாரணம் குடகனாறு திட்டம். இந்த அணைக்கட்டுத் திட்டம் உருவாக்கப்பட்டு, அவசரக் கோலத்தில் கட்டியதன் காரணமாக அது உடைந்த

சூழ்நிலையைப் பார்த்தோம். பல்வேறு எடுத்துக்காட்டுகளை கடந்த ஆட்சியாளர்கள் காலத்தில் நாம் இதுபோன்று எடுத்துக் காட்ட இயலும்.

அடுத்து, இலங்கைத் தமிழர்கள் பிரச்சினை. அகதிகளுக்கும் தாயகம் திரும்புபவர்களுக்கும் நிவாரணப் பணிகளாக அவர்களது மறுவாழ்விற்காக தாய் உள்ளத்தோடு புரட்சித் தலைவர் அவர்கள் அரசு ஏறத்தாழ 45 கோடி ரூபாய் செலவழித்துள்ளது. காட்டுமிராண்டித்தனமாக, மனித வர்க்கமே தலை குனிகிற அளவிற்கு அடக்குமுறைகளை ஏவி, ஆணவத்தின் சிகரத்தில் நின்று சிங்கள இராணுவம் அப்பாவித் தமிழர்களை வேட்டையாடி வருகிற சர்வாதிகார சிங்கள அரசிற்கு நம்முடைய தமிழக அரசின் மூலமாகக் கண்டன தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. கண்டன ஊர்வலத்தை நடத்தியது. அரசாங்கமே முழு அர்த்தாலை நடத்தியது. தன்னுடைய உடல் நலத்தையும் பாராது நம்முடைய ஒப்புயர்வற்ற தலைவர் புரட்சித் தலவைர் அவர்கள் தானே உண்ணாவிரதம் மேற்கொண்டார்கள். ஆளும் கட்சியினர் கறுப்புச் சட்டை அணிந்தார்கள். சிங்கள நாட்டிலே நடைபெற்று வரும் தமிழினப் படுகொலைச் செய்தியை உலகநாடுகளுக்குத் தெரிவிக்க நாம் ஐ.நா. சபையில் வீரமுழக்கமிட்டோம். வீரத்திற்கு எடுத்துக்காட்டாக, சர்வாதிகாரத்திற்கு ஒரு சவாலாக தமிழ் மக்களின் நெஞ்சிலே நிலையாக நிலைத்து நிற்கிற குட்டிமணி போன்றவர்களின் தியாக குடும்பங்களுக்கு பல்வேறு சலுகைகளை உதவிகளை நாம் வழங்கி இருக்கிறோம். அதையெல்லாம் நாட்டு மக்கள் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். இலங்கைத்தமிழர்கள் பிரச்சினையைப் பொறுத்தவரையில் மத்திய அரசு மிகத் தீவிரமான நடவடிக்கைகளை அல்லது இராணுவ நடவடிக்கைகளை எடுத்தால் தான் இந்தப் பிரச்சினைக்கு முடிவு வரும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். தமிழக அரசைப் பொறுத்தவரையில் மத்திய அரசோடு அரசியல் ரீதியாக நடவடிக்கைகளை எடுப்பதற்கு பல்வேறு பணிகளை தூய்மையாக ஆற்றி வருகிறது. இந்தத் தூயப் பணிக்காக எங்களுடைய புரட்சித் தலைவர் அவர்களை நன்றி உணர்வோடு நான் வணங்குகிறேன். இவ்வளவுக்கும் பிறகு இந்த அரசைக் கேலி பேசுகிறவர்கள் உண்டு. கிண்டல் செய்கிறவர்கள் உண்டு. நரக நடையில் விமர்சிக்கிறவர்கள் உண்டு. போராடப் போகிறோம் என்று கர்ஜித்தவர்கள் உண்டு. அவர்கள் யார்? ஈழத் தமிழர்களுக்காக எதையுமே செய்யாதவர்கள், அரசியல் இலாபம் கருதி இனமானம் பேசுகிறவர்கள். 1974 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 10 ஆம் தேதி இலங்கை யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற நான்காவது உலகத் தமிழ் நாட்டின் போது பேராசிரியர் நைனாமுகம்மது அவர்கள் பேசிக் கொண்டிருக்கிறார்கள். அத்துமீறிய அளவில் அடாவடித்தனமாக சிங்கள அரக்கர் கூட்டம் மாநாட்டிற்





குள்ளே புகுந்து தமிழர்களை வேட்டையாடியபோது தட்டிக் கேட்காதவர்கள், ஈழத்தில் தமிழினம் அபயக்குரல் எழுப்பிய போது கண்டனம் செய்யாதவர்கள், கண்டிக்காதவர்கள். இலங்கையிலே நடைபெறுவது அந்த நாட்டுப் பிரச்சினை, இலங்கையிலே நடைபெறுவது, இலங்கை உள்நாட்டுப் பிரச்சனை என்று நிலை தடுமாறியவர்கள், கடந்த கால ஆட்சியாளர்கள்தான் என்பது இந்த நாட்டுக்குத் தெரியாதா என்பதை இந்த நேரத்திலே நான் சொல்லிக் கொள்கிறேன். இலங்கைத் தமிழர்களை நரக வேட்டையாடிவிட்டு, இரத்தக் கறையோடு வந்த இலங்கைப் பிரதமர் பண்டார நாயகா அவர்களை சென்னை விமான நிலையத்திற்குச் சென்று, மல்லிகை மலர் மாலையைப் போட்டு, மகிழ்ச்சியோடு வரவேற்ற ஆட்சியாளர்களை நாடு பார்த்தது என்பதை இந்த நேரத்திலே சொல்லிக் கொள்வதோடு, நினைவுபடுத்துவது என்னுடைய கடமை என்று கருதுகிறேன். ஆனால் இதய சுத்தியோடு, தூய சிந்தனையோடு இலங்கைத் தமிழர்களுக்காக இதய தெய்வம் டாக்டர் புரட்சித்தலைவர் அவர்கள் நல்ல பணியைச் செய்திருக்கிறார்கள். இதை மனதார, இதய சுத்தியோடு பாராட்ட வேண்டாமா என்பதை நான் இந்த நேரத்திலே சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

(முற்பகல் 11-50)

காங்கிரஸ்காரர்கள் போட்ட தார் ரோட்டிலே தான் நாங்கள் பயணம் செய்கிறோம் என்று சொல்கிறார்கள். வெள்ளைக்காரன் தான் பல அணைகளைக் கட்டினான், சாலைகளைப் போட்டான், மாட மாளிகைகளைக் கட்டினான் அதற்காக வெள்ளைக்காரனிடம் நாட்டினுடைய ஆட்சியை ஒப்படைக்க முடியுமா? திருவனந்தபுரத்திலிருந்து கன்னியாகுமரி வரை, சிமென்ட் ரோடு போட்டது, மன்னர் ஆட்சிக் காலத்திலே, அதற்காக மன்னராட்சியை நாம் ஏற்றுக் கொள்ள முடியுமா? இவைகள் எல்லாம் சரியான காரணங்கள் அல்ல என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

கன்னியாகுமரி மாவட்டம் விவசாயிகளை நம்பி இருக்கக் கூடிய மாவட்டம். மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்கள் மாம்பழத்துறை ஆற்றில் அணைக்கட்டு கட்டும் திட்டத்தை அவர்கள் நேரடியாக வந்து பார்த்துச் சென்றார்கள். எனவே அந்த மாம்பழத்தாறு திட்டத்தை உடனடியாக நிறைவேற்ற வேண்டும். அப்படி நிறைவேற்றுவதன் மூலமாக விவசாயப் பெருங்குடி மக்களுக்கு அது மிகவும் பயனுள்ளதாக அமையும் என்பதை இந்த நேரத்திலே நான் வற்புறுத்துகிறேன்.

[திரு. எப். எம். இராசரத்தினம்[ [1986 மார்ச் 24

கன்னியாகுமரி மாவட்டத்தில் ஏறக்குறைய 5 ஆயிரம் மீனவர்கள் குடும்பங்கள் இருக்கின்றன. இவர்களுடைய வீடுகள் எல்லாம் மிகவும் மோசமான நிலையில், தாழ்ந்த நிலையிலே உள்ள குடிசைகளாக இருக்கின்றன. எனவே அவர்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுப்பதற்கு நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

விவசாயிகளுக்கு கடன் தள்ளுபடி செய்ததைப் போல, இந்த மீனவர்களுடைய கடன்களையும் தள்ளுபடி செய்ய வேண்டும் என்று நான் இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

மேலும் இந்தியாவிலேயே நம்முடைய கன்னியாகுமரி மாவட்டத்தில் தான் தரமான ரப்பர் கிடைக்கிறது. இந்த ரப்பரைக் கொண்டு, இந்தியத்துணைக் கண்டத்திலே பல்வேறு இடங்களில் ரப்பர் தொழிற்சாலைகள் நடைபெறுகின்றன. கன்னியாகுமரி மாவட்டத்தில் உற்பத்தியாகிற அந்த ரப்பரைப் பயன்படுத்தி, ரப்பர் தொழிற்சாலை ஒன்றை அமைத்துத் தர வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

உலகச் சுற்றுலா மையமாக தமிழக அரசினுடைய அரவணைப்பில் உருவாகி வருகிற கன்னியாகுமரி மாவட்டத்தில் சுற்றுலாப் பயணிகள் அதிக அளவில் வந்து போகின்ற விதத்தில் வரலாற்றுப் புகழ்மிக்க, முதல் தமிழ்ச் சங்கம் இருந்ததாகக் கூறப்படும், நம்முடைய இயற்கை வளம் கொழிக்கும் கன்னியாகுமரி மாவட்டத்தின் தலைநகராக உள்ள நாகர்கோவிலில் ஒரு விமான நிலையம் அமைப்பதற்காக மத்திய அரசை வற்புறுத்த வேண்டும் என்று இந்த நேரத்திலே நான் கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல், இரணியல் வள்ளியாறு நீரேற்றுத் திட்டம், ராஜாத்திமங்கலம் பன்றி வாய்க்கால் நீரேற்றுத் திட்டம் ஆகிய இந்த இரண்டு திட்டங்களும், இன்றைக்குக் கோதையாறு மேம்பாட்டுத் திட்டம் என்று சொல்லக்கூடிய ஒரு திட்டத்திலே உருவாக்கப்பட்டிருக்கிறது. ஆனால் இந்தத் திட்டத்தைப் பொறுத்தவரையில் இது ஒரு பெரிய திட்டமாக இருக்கின்ற காரணத்தால், இதை நடைமுறைப்படுத்துவதற்கு பல சிக்கல்கள் வரலாம், பல கோளாறுகள் இருக்கலாம். பல்வேறு சட்டச் சிக்கல்கள் வரலாம், அல்லது அதற்கு நிதி ஆதாரம் இல்லை என்கிற உணர்வுகள் வரலாம். எனவே இந்த ராஜாத்திமங்கலம் பன்றி வாய்க்கால் திட்டத்தையும், இரணியல் வள்ளியார் நீரேற்றுத் திட்டத்தையும் அந்த மேம்பாட்டுத் திட்டத்திலேயிருந்து தனியாகவே பிரித்து, தனியான திட்டமாக உருவாக்கித் தந்தால், கடைமடையில் உள்ள அந்த விவசாயப் பெருமக்களுக்கு இது பெரிதும் நன்மை பயக்கின்ற வகையில் அமையும். எனவே அந்த வகையில் இந்தத் திட்டங்களை உருவாக்கித் தர வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.



1986 மார்ச் 24] [திரு. எப். எம். இராசரத்தினம்]

அதேபோல் என்னுடைய தொகுதியில் இலட்சுமிபுரம் கலை, விஞ்ஞானக் கல்லூரி இன்றைக்கு அரசாங்கத்தினுடைய மேற்பார்வையில் செயல்பட்டு வருகிறது. கல்லூரியினுடைய கட்டிடங்கள் பழுதடைந்து மிக அபாயகரமான நிலைமையில், மிக மோசமான நிலையில், இன்றைக்கு உயிர்சேதம் வருமோ என்ற நிலைமையில் இருந்து வருகிறது. எனவே இந்த இலட்சுமிபுரம் கலை, விஞ்ஞானக் கல்லூரியை அரசு ஏற்று நடத்த வேண்டும் என்று இந்த நேரத்திலே ஒரு கோரிக்கையாக இந்த மன்றத்திலே வைக்க விரும்புகிறேன்.

இன்றைக்கு மீனவர்களுடைய குடியிருப்புகளைப் பொறுத்தவரையிலும் அவர்களுடைய வீடுகள் கடற் காற்றின் காரணமாக மிகவும் பழுதடைந்த நிலைமையில் இருக்கின்றன. மணவாளக்குறிச்சி, பெரியமலைதுறை என்று சொல்லக்கூடிய அந்தப் பகுதியில் உள்ள கட்டிடங்கள் எல்லாம் மிகவும் மோசமான நிலைமையில் இருக்கின்றன. எனவே அந்தக் கட்டிடங்களைப் பழுது பார்க்கின்ற ஒரு நிலைமையை உருவாக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

கன்னியாகுமரி மாவட்டத்திற்கு தாய் உள்ளம் கொண்ட தலைவன், எங்கள் காவியத் தலைவன், இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் குழித்துறை ஆறு கூட்டுக் குடிநீர்த் திட்டம் என்கிற ஒரு திட்டத்தை உருவாக்கி, அதற்காக 4 கோடி ரூபாய் அளவிலே ஒரு பெரிய திட்டத்தை உருவாக்கி, அரசாங்கம் இன்றைக்கு அதற்கு ஒப்புதல் தந்தமைக்கு கன்னியாகுமரி மாவட்டத்தின் மக்கள் சார்பாக எங்களுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

அதே நேரத்தில் இந்தத் திட்டத்தை கொளச்சல் நகரத்தோடு இணைக்கவேண்டும் என்று ஒரு திட்டம் இன்றைக்கு தீட்டப்பட்டுள்ளது. அது தற்போது அரசின் ஆணைக்காகக் காத்திருக்கிறது. அதற்கும் அரசு அனுமதி தரவேண்டும் என்று இந்த நேரத்திலே நான் ஒரு வேண்டுகோளாக வைக்க விரும்புகிறேன். மேலும் குமரி மாவடடம் தாய்த் தமிழகத்துடன் இணைய வேண்டுமென்பதற்காக ஏறத்தாழ 50 மைல்களுக்கு அருகாமையிலுள்ள திருவனந்தபுரம் எங்களுக்கு தலைநகரமாக அமைய வேண்டுமென்பதில்லை, 500 மைல்களுக்கு அப்பாலே இருக்கிற சென்னை மாநகரம் தான் தலைநகரமாக வேண்டும் என்ற உணர்வோடு, ஒரு தமிழ் உணர்வோடு, தன்மான உணர்வோடு போராடி பலர் சிறைச்சாலைகளுக்குச் சென்றார்கள். பலர் உயிர் இழந்தனர். அப்படிப்பட்ட அந்த குமரி மாவட்டத்தை தாய்த்தமிழகத்தோடு இணைக்க வேண்டுமென்பதற்காகப் போராடிய அந்தத் தியாக வீரர்களுக்கு நாம் உதவிப் பணம் வழங்க வேண்டுமென்பதை நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன். அதுமட்டுமல்லாமல், இந்த

[திரு. எப். எம். இராசரத்தினம்] [1986 மார்ச் 24

கன்னியாகுமரி மாவட்டத்தில் நூற்றுக்கணக்கான மின் கம்பங்கள் நடப்பட்டு அதில் மின் இணைப்பு கொடுக்கப்படாமல், பல இடங்களில் மின் கம்பங்கள் இல்லாமலும் மின் இணைப்பு கொடுக்கப்படாமலும் இருக்கின்ற சூழ்நிலையை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும் இன்றைக்குக் குளச்சல் துறைமுகத் திட்டம் அரசாங்கம் அனுமதி வழங்கிய ஒரு திட்டமாகும். அதற்கான பணம் குறைந்த அளவுதான் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இருந்தாலும், அந்தத் துறைமுகத் திட்டத்திற்குக் கூடுதல் பணம் ஒதுக்கி அந்த விரைவுப் படுத்தப்பட்ட திட்டத்தை மிக விரைவாக செய்து தரவேண்டுமென்று இந்த நேரத்தில் சொல்லிக் கொள்கிறேன்.

மேலும் குளச்சல் உப்பளம் இன்றைக்கு ஒரு தனியாருடைய ஆக்கிரமிப்பில் இருந்து வருகிறது. அந்தத் தனியார் ஆக்கிரமிப்பை அகற்றிவிட்டு, அரசாங்கத்திற்குச் சொந்தமான ஏறத்தாழ 100 ஏக்கர் நிலத்தை அரசாங்கமே ஏற்பதன் மூலம், அந்த நிலங்களில் தனியாரால் செய்யப்படும் பல்வேறு மோசமான செயல்களைத் தடுப்பதுடன், அதிலே பல்வேறு தொழிற்சாலைகளாக இருந்தாலும் அங்கே பல்வேறுபட்ட அரசாங்கக் கட்டிடங்கள் ஏற்படுத்துவதற்கு வாய்ப்பு இருக்கிறதென்பதை இந்த நேரத்திலே சொல்லி, நில ஆக்கிரமிப்பை அகற்றுவதற்காக ஒரு வாய்ப்பினை உருவாக்கித் தர வேண்டுமென்று இந்த நேரத்திலே ஒரு வேண்டுகோளாக வைக்கிறேன். குளச்சல் நகர மருத்துவமனையை விரிவுபடுத்தி மாவட்டத்தினுடைய இரண்டாவது பெரிய மருத்துவமனையை உருவாக்க வேண்டும். அங்கே எக்ஸ்ரே பிரிவு இல்லை. அங்கே ஒரு எக்ஸ்ரே பிரிவை இணைக்கின்ற சூழ்நிலையை உருவாக்க வேண்டும். இன்றைக்கு இந்த நிதி நிலை அறிக்கையைப் பொறுத்தமட்டில் வரியைக் குறைப்போம், வசதியைப் பெருக்குவோம் என்று பேரறிஞர் அண்ணா அவர்கள் சொன்னார்கள். அந்த அடிப்படையில் தான் இந்த நிதி நிலை அறிக்கையினை நாம் பார்க்கிறோம். பல்வேறுபட்ட பொருள்களுக்கு விற்பனை வரியை ரத்து செய்திருக்கிறோம். மக்களின் உயிர் காக்கும் மருந்துகளின்மீது 8 சதவீதத்திலிருந்து 4 சதவீதமாக வரியைக் குறைத்து இருக்கிறோம். பால்வளப் பொருள்களின் 10 சதவீத வரியை 4 சதவீதமாகக் குறைத்து இருக்கிறோம். மற்றும் பல்வேறுபட்ட சலுகைகளை ஏழை எளியவர்களுக்கு, நடுத்தர வர்க்கத்திற்கு வழங்கும் அறிக்கையாக இந்த நிதி நிலை அறிக்கையை நாம் பார்க்கிற சூழ்நிலை இருக்கிறது. இந்தியத் துணைக் கண்டத்திலே இருக்கிற 22 மாநிலங்களில் 1986–87 ஆம் ஆண்டிற்கான நிதி நிலை அறிக்கையில் புதிய வரிகளைப் போடாமல் நடைபெறுகின்ற ஆட்சி தமிழகத்திலே நடைபெறுகின்ற புனித தலைவர், புரட்சித் தலைவர் அவர்களின் ஆட்சி ஒன்றுதான். இந்த ஆட்சியில் கிராம குடிநீர் திட்டத்திற்கு 45 கோடி திட்டம் சாலை மேம்பாட்டிற்காக 11.58 கோடி திட்டம், சத்துணவிற்கு 168.92 கோடி திட்டம்; இலவச சீருடை, இலவச பாடநூல் வழங்க 21.39 கோடி திட்டம்; மூன்று ஆண்டுகளில் 30 இலட்சம் வீடுகளை ஆதி திராவிடர்கள், பழங்குடியினர், நரிக் குறவர்கள் வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ளவர்களுக்காக பல்வேறுபட்ட சூழ்நிலைகளிலே ஆதரவற்றவர்களாக, அநாதைகளாக இருப்பவர்களுக்கு வீடு கட்டிக் கொடுப்பதற்காக, உறைவிடம் கொடுப்பதற்காக சிறப்பான திட்டங்கள் நடைபெற உள்ளது. சாத்தியமானது தானா, இது முடியுமா? நம்ப முடியுமா? என்றெல்லாம் வீண் சந்தேகத்தை எதிர்க்கட்சி நண்பர்கள் இன்றைக்கு கிளப்பத் தேவையில்லை. செய்கின்ற காரியத்தைச் சொல்கின்ற அரசுதான் புரட்சித் தலைவருடைய அரசாங்கம். புரட்சித் தலைவருடைய சத்துணவுத் திட்டத்தையும், தன்னிறைவுத் திட்டத்தையும், இலவச பாடநூல் திட்டத்தையும், இலவச சீருடைத் திட்டத்தையும் விமர்சித்தவர்களும், கிண்டல் பேசியவர்களும் உண்டு. இப்படித் தான் சந்தேகப்பட்டார்கள். ஆனால் அந்தத் திட்டங்கள் மக்களுடைய நல்ல ஆதரவோடு, வெற்றிகரமாக இன்றைக்குப் பயனுள்ளதாக நடைபெற்று வருகின்றன. எனவே வீண் சந்தேகம் இல்லை என்கிற உணர்வைச் சொல்லி, இந்த நிதி நிலை அறிக்கையைப் பொறுத்த வரையில், தமிழகத்தினுடைய வளர்ச்சிக்காக, தமிழகத்தினுடைய உயர்வுக்காக தொலை தூரப் பார்வையோடுபோடப்பட்டநிதி நிலை அறிக்கை தான் என்கிற உணர்வோடு இந்த நிதி நிலை அறிக்கையை வரவேற்று, வாழ்த்தி அமைகிறேன், நன்றி, வணக்கம்.



1986 மார்ச் 24] [திரு. எப். எம். இராசரத்தினம்]

**திரு. ஜி. ஆனந்த கிருஷ்ணா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, 1986–87 ஆம் வருடத்தினுடைய மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களுடைய நிதி நிலை அறிக்கையின் மீது காங்கிரஸ் கட்சியின் சார்பிலே என்னுடைய கருத்துக்களை வைக்க விழைகின்றேன்.

இந்த நிதி நிலை அறிக்கை காங்கிரஸ் கட்சியின் சார்பின் கண்ணோட்டத்திலே பார்க்கின்ற நேரத்திலே சாதாரண ஏழை எளிய மக்களுக்கு ஏமாற்றம் அளிக்கக் கூடிய ஒரு நிதி நிலை அறிக்கை தான் என்று கருத வேண்டியதிருக்கிறது. கொடுக்கப்பட்டிருக்கின்ற சலுகைகள், ஏழை விவசாயி, பாட்டாளி வர்க்கம் வேலையில்லா பட்டதாரிகள் போன்றவர்களுக்கு உற்சாகம் அளிக்கக் கூடியதாகவும், மகிழ்ச்சி அளிக்கக் கூடியதாகவும் இல்லை.

[திரு. ஜி. ஆனந்த கிருஷ்ணா] [1986 மார்ச் 24

(நண்பகல் 12-00).

இன்றைக்கு பல முக்கியமான பொருட்களுக்கு அறவே விற் பனை வரியிலிருந்து நீக்கப்பட்டு இருந்தாலும் அந்தப் பொருட் கள் அன்றாடம் மக்கள் உபயோகிக்கக் கூடிய பொருட்களாக இல்லை என்பது எங்கள் கருத்து. இன்றைக்கு மருந்து மீது உள்ள வரியை 8 சதவீதத்திலிருந்து 4 சதவீதமாகக் குறைத்து இருக்கிறார்கள். இதை நாங்கள் வரவேற்கிறோம். குழந்தை களுச்குக் கொடுக்கப்படும் பால் உணவுப் பொருட்கள் மீது 10 சதவீத வரியிலிருந்து 4 சதவீதமாகக் குறைக்கப்பட்டு இருக்கிறது இழுவை வண்டிகள் மீதான 15 சதவீத வரி 9 சதவீதத வரியாகக் குறைக்கப்பட்டு இருக்கிறது. இதை எல்லாம் எங்கள் கட்சி வரவேற்கிறது. கோழித் தீவனத்தின் மீதான 5 சதவீத வரியை 2 சதவீத வரியாகக் குறைக்கப்பட்டு இருக்கிறது. இந்த வரி அறவே நீக்கியிருக்க வேண்டும். அதே போல் மாட்டுத் தீவனத்திற்கு அறவே விற்பனை வரியை நீக்கியிருக்க வேண்டும் இந்தச்சலுகைகள் எல்லாம் வரவேற்கப்படுகின்றஒரு சலுகையாக இருக்கிறது.

இன்றைக்கு வணிக வரியைச் சீர்ப்படுத்துகின்ற வகையில் பல நல்ல திட்டங்களைக் கொடுத்து இருக்கிறீர்கள். அந்த வியாபாரி களுக்குச் சாதாரணமாக நடுத்தர மக்களுக்கு எல்லாம் அது உதவக் கூடிய நல்ல திட்டமாக இருக்கிறது.

இந்த நிதி நிலை அறிக்கையில் விவசாயிகள் பெரிதும் எதிர் பார்க்கும் புரட்சிகரமான திட்டங்கள் எதுவும் இல்லை. இந்த அறிக்கை வாசிக்கப்பட்ட போது விவசாய உயர்மட்டக் குழுவினுடைய சிபாரிசுகள் ஏற்றுக்கொள்ளப்படும் எனறு எதிர் பார்த்தோம். ஆனால் அந்த விவசாயிகளுக்காக உள்ள அந்த உயர்மட்டக் குழுவின் சிபாரிசுகள் ஏற்றுக்கொள்ளக்கூடிய அளவில் இந்த அறிக்கையில் எதுவும் இல்லை.

இன்றைக்கு நம்முடைய மாநிலத்திலே பல மாவட்டங்கள் செங்கற்பட்டு, தஞ்சை, தென் ஆற்காடு போன்ற மாவட்டங் களில் எல்லாம் புயலும், வெள்ளமும் வந்து பாதிக்கப்பட்டு இருக் கிறது. தர்மபுரி, சேலம் போன்ற மாவட்டங்கள் வறட்சியால் பாதிக்கப்பட்டு இருக்கின்றன. இப்படி பாதிக்கப்பட்ட மக்க ளுக்குச் சரியான முறையில் நிவாரணம் அளிக்கப்படவில்லை.

என்னுடைய செங்கற்பட்டுப் பகுதியில் உள்ள மதுராந்தகம் ஏரியால் பாதிக்கப்பட்ட மக்கள் இன்னும் அங்குள்ள ரோடு களிலும், ரயில்வே பாதைகளிலும் குண்டும், குழியுமாக, மண் ணும், மணலுமாக சூழப்பட்டு பாதிக்கப்பட்டு இருக்கிறார்கள், ஆகவே இவைகளை எல்லாம் அப்புறப்படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இன்றைக்கு மாவட்டங்களில் உள்ள



1986 மார்ச் 24] [திரு. ஜி. ஆனந்த கிருஷ்ணா]

பல தாலுக்காக்கள் வெள்ளத்தால் பெரிதும் பாதிக்கப்பட்டு இருக்கின்றன. அங்குள்ள விவசாயிகளுக்கு அவர்களுடைய அறுவடைக் காலத்தில் 15 சதவீத மகசூல் கூட கிடைக்கவில்லை. ஆனால் இன்றைக்குக் கூட்டுறவுத் துறையின் மூலமாக ஜப்தி நடவடிக்கையை கெடுபிடி செய்து கொண்டு இருக்கிறார்கள். இப்படி பாதிக்கப்பட்ட மாவட்டங்களில் உள்ள மக்களுக்கு நஷ்ட ஈடு கொடுக்க வேண்டும் எனறு ஏற்கனவே எங்கள் கட்சியின் சார்பில் கேட்டு இருக்கிறோம். குறைந்தபட்சம் அந்த பாதிக்கப் பட்ட மக்களுக்கு வரி வஜா செய்வீர்கள் என்று எதிர்பார்த் தோம். அதையும் நீங்கள் செய்யவில்லை. கூட்டுறவுக்கடனை 2 வருடம் தள்ளி வைப்பீர்கள் எனறு எதிர்பார்த்தோம். அது பற்றியும் இந்த நிதிநிலை அறிக்கையில் சொல்லப்படவில்லை.

மேலும் இந்த விவசாயப் பெருமக்கள் தர்மபுரி போன்ற பகுதி களில் வறட்சியால் பாதிக்கப்பட்டு இருக்கிறார்கள். அங்கே குடிப்பதற்குக் கூட தண்ணீர் இல்லை. கால்நடைகளுக்குத் தீவனம் இல்லை. எனவே இந்த வெள்ளத்தாலும் வறட்சி யாலும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நஷ்ட ஈடு கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதே போல் கூட்டுற வுக் கடன்களை வசூல் செய்வதை 2 வருடங்கள் தள்ளி வைக்க வேண்டும் என்று அரசை கேட்டுக்கொள்கிறேன். இந்த கிஸ்த்தியை வஜா செய்து அவர்களுக்கு நிவாரணம் அளிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

தர்மபுரி, சேலம் போன்ற பகுதிகளில் இருப்பவர்களுக்கு குடி நீர் வசதி செய்து கொடுப்பதற்காக அங்கே ஆழ் துளை குழாய்க் கிணறுகளைப் போட்டு அவர்களுக்கு தண்ணீர் கிடைக்க ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அதே போல் தர்மபுரி மாவட்டத்திலுள்ள கால்நடைகளுக்குத் தேவையான தீவனத்தை மற்ற மாவட்டங்களிலிருந்து பெற்றுக் கொடுப்பதற்கு ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்த அறிக்கையிலே பெரும் பகுதியான பணம் மத்திய அரசால் கொடுக்கப்படுகிறது. தேசீய ஊரக வேலைவாய்ப்புத் திட்டம் போன்ற பல திட்டங்களுக்கு மத்தியஅரசு கொடுக்கின்ற பணத்தை சரியான முறையில் செலவு செய்யாமல் அது இன் றைக்கு திருப்பி அனுப்பப்படுகின்ற நிலைமையைப் பார்க்கிறோம். ஆக மார்ச் மாதத்திற்குள் செலவு செய்யப்படாத பணம் சரெண்டர் செய்யப்படுகின்ற சூழ்நிலை இருக்கிறது. இந்த நிலை தவிர்க்கப்பட வேண்டும்.

என்னுடைய தொகுதியில் பல ஏரிகள் உடைந்து சேதம் அடைந்திருக்கின்றன. பொதுப் பணித் துறையின் கவனக் குறைவால் தான் இப்படிப்பட்ட நிலைமைகள் மாவட்டங்

களில் ஏற்பட்டிருக்கின்றன. பொதுப் பணித் துறையின் கவனக் குறைவினால் தான், நிரம்ப வேண்டிய ஏரிகள் எல்லாம் நிரம்பாமல், நன்றாகப் பாசனத்திற்கு உபயோகப்படக்கூடிய ஏரிகள் எல்லாம் உடைந்து இன்றைய நிலையில் விவசாயம் செய்ய முடியாத நிலை ஏற்பட்டிருக்கிறது. பொதுப் பணித் துறை அதிகாரிகளைக் கேட்டால் நிதி நிலையில் ஒதுக்கீடு செய்யப்படுகின்ற நிலைமை சரியாக இல்லாத காரணத்தால் அந்த ஏரிகள் எல்லாம் சரியாக பராமரிக்கப்படவில்லை என்று சொல்கிறார்கள். என்னுடைய தொகுதியில் திருநின்றவூர் ஏரி மிகவும் பெரிய ஏரி. வெள்ளம் வந்தபோதும் கூட, அந்த ஏரியில் நீர் செல்லவில்லை. அந்த ஏரியின் குறுக்கே ஒரு அணை கட்டப்பட்டு, 4, 5 ஆண்டுகளுக்கு முன்பு உடைந்து பாழாகியிருக்கிறது. ஆனால் அந்த அணையை மீண்டும் கட்டுவதற்கு அரசு இது வரை எந்தவிதமான முயற்சியும் எடுக்கவில்லை. இப்படிப்பட்ட நிலையில் பல ஏரிகள் இருக்கின்றன. எனவே பொதுப் பணித் துறையில் அதிகமான நிதியை ஒதுக்கி, இந்த ஏரிகளைப் பழுது பார்க்கின்ற ஒரு சூழ்நிலையை உருவாக்க வேண்டும். பெரிய பெரிய ஏரிகள் நிறைய இருக்கின்ற செங்கற்பட்டு மாவட்டத்தில், அந்த ஏரிகளை நல்ல முறையில் பராமரிக்க அதிகமான நிதியை ஒதுக்கீடு செய்யவேண்டும்.

அதுமட்டுமின்றி, நம்முடைய இந்த நிதிநிலை அறிக்கையில் வேலையில்லாத பட்டதாரிகளுக்கு எந்த விதமான சலுகையும், அவர்களுடைய வாழ்க்கையில் மறுமலர்ச்சி ஏற்படக் கூடிய வகையில் எந்தவிதமான திட்டமும் கூறப்படவில்லை. 1975–76 ஆண்டுகளில் பதிவு செய்தவர்களுக்குக் கூட வேலைவாய்ப்பு இல்லாத நிலையிருக்கிறது. புதிய தொழிற்சாலைகள் அமைக்கவும் பல இலட்சம் பேர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கக் கூடிய திட்டங்கள் ஏற்படுத்தவும் இந்த நிதிநிலை அறிக்கையில் எதுவும் இல்லை. இன்றைக்கு ஒரு காவல் துறையை எடுத்துக் கொண்டால், ஒவ்வொரு கிராமத்திலும் உள்ள காவல் நிலையத்தில் ஒரு புகார் கொடுத்தால் கூட, அதை உடனடியாக கவனிக்கக் கூடிய நிலையில் இல்லை. ஒரு வருடத்திலே 27 இலட்சம் ரூபாய்க்கு வாடகைக்காக செலவிடப்படுகிறது என்று சொல்கிறார்கள். ஒரு வருடத்திற்கு ஒரு மாவட்டத்திற்கு ரூ. 27 இலட்சம் வாடகைக்காக செலவாகிறது என்றாலும், வாகனம் வாங்கப்படாத நிலையிருக்கிறது. போலீஸ் நிலையத்திற்கு வாகனம் வாங்குவதற்கான ஏற்பாடுகள் இல்லை. வாகனங்கள் வாங்குவதற்காக அதிக அளவில் நிதி ஒதுக்கீடு செய்திருக்கலாம்.

பூவிருந்தவல்லி நெடுஞ்சாலையில் அதிக அளவில் அன்றாடம் சாலை விபத்துக்கள் ஏற்பட்டுக் கொண்டிருக்கின்றன. அந்த சாலை விபத்துக்களையெல்லாம் உடனடியாக தடுக்கக்கூடிய





நிலைமை இல்லை. காரணம், காவல் துறைக்கு போதிய வாகனங்கள் இல்லாததால் அங்கே பல விபத்துக்களுக்குள்ளானவர்கள், இறந்துபட்டு, பல மணி நேரக் கணக்கில் எடுத்துச் செல்லப்பட முடியாததால் பரிதாபமான காட்சியைப் பார்க்க முடிகிறது. பூவிருந்தவல்லி, ரெட்ஹில்ஸ் பகுதிகளில் ஒரு மருத்துவ மனை இருந்தால், இந்தச் சாலை விபத்துகளுக்கு உட்படுபவர்களை, உடனடியாக அந்த மருத்துவமனைக்கு அழைத்துச் சென்று, அறுவை சிகிச்சை செய்யவோ, அல்லது முதலுதவி கொடுக்கவோ முடியும். எனவே ஒரு மருத்துவ மனையை ஏற்படுத்த வேண்டும். அவ்வாறு மருத்துவமனை ஏற்படுத்தப்படுமாயின், சாலை விபத்துக்களைத் தடுக்கலாம். அந்த வகையில் பூவிருந்தவல்லியிலும், ரெட் ஹில்சிலும் ஒரு மருத்துவ மனை அமையவேண்டுமென்று ஆசைப்படுகிறேன்.

இன்றைக்கு வீட்டு வசதி வாரியத்தினுடைய பல பகுதிகளில், சென்னை நகரத்தில் பல இடங்களிலும், புற நகர்ப் பகுதிகளிலும் வீடுகள் கட்டப்பட்டிருக்கின்றன. அந்த வீடுகள் சரியான முறையில் கட்டப்படுவதில்லை. என்னுடைய தொகுதியில் முல்லைநகர் பகுதியில் வீடுகள் கட்டப்பட்டிருக்கின்றன. ஆனால் கட்டப்பட்டிருக்கின்ற வீடுகளில் 80 சதவீதம் வீடுகளில் யாரும் குடியேறுவதற்குத் தயாராக இல்லை. காரணம் கடந்த வெள்ளத்தினால் அந்தப் பகுதிகளிலுள்ள வீடுகளில் மூன்றாவது மாடியிலுள்ள வெள்ள நீர் இரண்டாவது மாடிக்கும், இரண்டாவது மாடியிலுள்ள வெள்ள நீர் முதல் மாடிக்கும், முதல் மாடியிலிருந்து தரைக்கும் வந்து மக்கள் குடியேற முடியாத நிலையில்; வசிக்க முடியாத நிலைமை இருந்தது. அதுமட்டுமின்றி, அங்கே பல பகுதிகளில் இந்த மாதிரி வீடுகள் கட்டப்பட்டிருக்கின்றன.

(பிற்பகல் 12–10)

கட்டப்பட்ட பகுதிகளில் கூட வீட்டு வசதி வாரியம் இடத்தை ஆர்ஜிதம் செய்கிற நிலைமை இருக்கிறது. மக்கள் வீடு கட்டாத இடமாக அவர்கள் எடுத்துக் கொண்டால் நலமாக இருக்கும். பல தொழிலாளர்கள் கடன் வாங்கி வீடுகளைக் கட்டியிருக்கிற அந்த இடங்களையெல்லாம் கூட ஆர்ஜிதம் செய்கிற நிலை இருக்கிறது. அதைத் தவிர்த்து காலியாக இருக்கிற இடங்கள் நிறைய இருக்கின்றன. அவற்றை வீட்டு வசதி வாரியம் எடுத்துக் கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

1987 ஆம் ஆண்டு ஜனவரி முதல் சாராயக் கடைகளை மூடிவிடுவோம் என்று அரசு அறிவித்திருக்கிறது. மகிழ்ச்சியடையக் கூடிய செய்தி. ஆனால் 1987 ஜனவரி முதல் அந்தக் கடைகள் மூடுப்படுமோ மூடப்படாதோ குறைந்த பட்சம் நகர்த்

(திரு. ஜி. ஆனந்தகிருஷ்ணா) [1986 மார்ச் 24

தினுடைய பஜார் பகுதிகள், மார்க்கட் பகுதிகளிலே அந்தக் கடைகள் இல்லாமல் ஊருக்கு ஒதுக்குப் புறமாக உள்ள இடங்களிலே இருக்கும்படி ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். கிராமத்தினுடைய நடுப்பகுதியிலே இருக்கிறது. அப்படியில்லாமல் ஒதுக்குப் புறமாக இருப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். இந்த நிதிநிலை அறிக்கையிலே இந்த அளவுக்கு என்னுடைய கருத்துக்களைச் சொல்லி முடித்துக் கொள்கிறேன்.

**திரு. கோ. வீரய்யன்** : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1986–87 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தை இந்த அவையிலே மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் மாநில அரசின் சார்பிலே முன் மொழியும் போது ஆரம்பத்திலே வள்ளுவரை முன்னாலே கொண்டு வந்து நிறுத்தி, அண்ணாவை அடையாளம் காட்டி அதை முன்மொழிந்திருக்கிறார்கள். அதன்மீது நான் சார்ந்திருக்கிற மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே சில கருத்துக்களைக் கூற விழைகிறேன்.

நிதி நிலை அறிக்கையை அளிக்கும்போது தமிழகத்திலே மிகப் பெரிய சம்பவம் நடைபெற்றிருக்கிறது, அதை இந்த நிதிநிலை அறிக்கையிலே கண்டு கொள்ளாமலே இருப்பது எந்த வகையிலும் பொருத்தமானதல்ல. 16 ஆண்டுகளுக்குப் பின்னாலே உள்ளாட்சி அமைப்புகளுக்கெல்லாம் தேர்தல் நடைபெற்றிருக்கிறது. 16 ஆண்டுகளுக்குப் பிறகு 10 ஆண்டுகளுக்குள் அதிகாரிகளுடைய அதிகாரத்திலே இருந்த அந்த அமைப்புகள்..இப்போது மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் வந்திருக்கிறார்கள் கிராமப்புறங்களுக்கும், பேரூராட்சிகளுக்கும் ஊராட்சி ஒன்றியங்களுக்கும் நகராட்சிகளுக்கும் மக்கள் தங்களுடைய பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுத்து அந்த நிர்வாகப் பொறுப்பை ஏற்றிருக்கக்கூடிய இந்த நேரத்திலே மாநில அரசு தன்னுடைய நிதிநிலை அறிக்கையை முன் மொழியும் போது..அந்த நிர்வாக அமைப்புகளுக்கான தேர்தலை நடத்தி மிகவும் குளறுபடி இல்லாமல் அமைதியான முறையிலே அந்தத் தேர்தலிலே பங்கு கொண்டு வெற்றிகரமாக நடத்திக் கொடுத்து அந்த மக்கள் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுத்த மக்களை இந்த அரசு பாராட்டியிருக்க வேண்டும்.

அது மட்டுமல்லாமல் அந்த அமைப்புகள் சீராகவும் செம்மையாகவும் செயல்பட நாங்கள் உதவுவோம் என்று தமிழகத்து மக்களுக்கு அரசு தன்னுடைய உறுதியைக் கூறியிருக்க வேண்டும். அது மட்டுமல்லாமல் இந்த அரசு பெருந் தன்மையோடு அப்படிக் கூறுவதற்கு முன்வரவில்லை. தேர்தல் முடிவுகளிலே ஆளுங்கட்சிக்கும் அவர்களைச் சேர்ந்தவர்களுக்கும் தோல்வி ஏற்பட்டதன் காரணமாக மக்களுடைய தீர்ப்பை



1986 மார்ச் 24] (திரு. கோ வீரய்யன்)

மதித்து உரிய மரியாதையை அதற்குக் கொடுக்கிற முறையிலே அதைக் கூறுவதற்கு இந்த அரசு தவறியிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அண்ணா அவர்கள் மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் வேண்டுமென்று கோரினார்கள் என்று இதிலே குறிப்பிட்டிருக்கிறார்கள். மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் வேண்டுமென்று கூறியதோடு மட்டுமல்லாமல், மாற்றான் தோட்டத்து மல்லிகைக்கும் மணம் இருக்கும் என்றும் அவர்கள் கூறினார்கள் என்பதைக் கூறிக்கொண்டு இருப்பவர்கள், இந்த நேரத்தில் மற்றவர்கள் அந்தப் பொறுப்புக்களிலே வந்திருந்தால் அதைப் பெருமனதோடு வரவேற்று இருக்கக்கூடிய வகையிலே அதைப்பற்றிக் கூறியிருக்கவேண்டும். ஆனால் மற்றவர்கள் அப்படி வந்திருப்பதைச் சகித்துக்கொள்ளக்கூட முடியாத அளவிற்கு இந்த அரசு இருக்கிறது என்பதைக் காட்டுவதோடு மட்டுமல்லாமல், அந்த மக்களின் ஜனநாயக முடிவுகளை மாற்றுவதற்கான முறையிலே இந்த அரசு முயற்சிக்கிறதோ என்ற சந்தேகம் கூட ஏற்படுகிறது.

இந்தத் தேர்தல்கள் முடிந்தபிறகு அந்த அமைப்புகளுக்குத் துணைத் தலைவர்களைத் தேர்ந்தெடுப்பதற்கான அவகாசம் 90 நாட்கள் என்று அறிவித்திருப்பது, அங்கே உள்ள மெஜாரிட்டி உரிமைகளை மாற்ற அல்லது சுயேச்சைகளைத் தங்களுக்கு ஆதரவாகத் திரட்டுவதற்கு அல்லது வேறு சிலரைக் கட்சி மாறிக் கொண்டு வருவதற்கு இப்படிப்பட்ட முயற்சிகளிலே ஈடுபடுவதற்கு அந்த மூன்று மாத கால அவகாசத்தை இந்த ஆட்சி, ஆளுங்கட்சி எடுத்துக்கொள்கிறதோ என்று கருத வேண்டிய நிலையில் இருக்கிறோம்.

ஊராட்சி மன்றத் தேர்தல் நடந்து முடிந்த பிறகு, உதவித் தலைவர்களைத் தேர்ந்தெடுப்பதற்கு 90 நாட்கள் தேவைதானா என்று பார்க்கின்றபொழுது தேவையற்ற ஒரு நிலையிலே 90 நாட்கள் அவகாசம் அளிக்கப்பட்டிருக்கிறது என்றால், மெஜாரிட்டி முடிவுகளை மாற்ற முயற்சி செய்ய அவகாசம் தேடுகிறார்களோ என்ற அச்சத்தை ஏற்படுத்துகிறது.

அதுமட்டுமல்லாமல், ஒன்றிய, நகராட்சி அமைப்புகளிலே பெண் உறுப்பினர்களை அல்லது தாழ்த்தப்பட்ட பழங்குடி உறுப்பினர்களைப் பொறுத்தவரையில், அவர்கள் தேர்ந்தெடுக்கப்படாமல் இருந்தால் அவர்களுக்குப் பிரதிநிதித்துவம் அளிக்கின்ற வகையில் அவர்களை நியமனம் செய்து கொள்ளலாம் என்று முன்னாலேயிருந்த அந்த முறையில் அந்தக் கவுன்சிலே நியமனம் செய்து கொள்வதற்குப் பதிலாக, ஒரு பகுதி நியமனம் செய்துகொண்டு, ஒரு பகுதியை மாவட்ட ஆட்சித் தலைவர் மூலம் நிரப்பலாம் என்ற சட்டத் திருத்தத்தைக் கொண்டு

வந்த காலத்திலேயே நாங்கள் அதை எதிர்த்திருக்கிறோம். இன்றைக்கு அந்தச் சட்டத் திருத்தத்தை நிறுத்தி வைத்து உயர்நீதிமன்றம் தடை விதித்திருந்தாலும், சட்டத் திருத்தம் அப்படியே நீடிக்கிறது. இது தமிழக மக்களுக்கு ஒரு அச்ச உணர்வை ஏற்படுத்துகிறது. மெஜாரிட்டியை மைனாரிட்டியாக மாற்ற அல்லது மக்களின் உணர்வுகளைப் பின்னுக்குத் தள்ளுவதற்காக இந்த அரசு முயற்சிக்கிறது என்ற அவநம்பிக்கை ஏற்படாமல் தடுக்க, மாவட்ட ஆட்சித் தலைவர் நியமிக்கலாம் என்று இருக்கும் அந்தப் பகுதியை மாற்றி, எத்தனை பிரதிநிதிகளை நியமிக்க வேண்டுமென்று விரும்புகிறோமோ அதை அந்த உள்ளாட்சி அமைப்புகளே நியமித்துக் கொள்ளலாம் என்ற அதிகாரத்தை வழங்குவதற்காக, மாவட்ட ஆட்சித் தலைவர் நியமிக்கலாம் என்ற அந்தப் பகுதியை நீக்குவதற்கான சட்டத்திருத்தத்தை இந்த அரசு கொண்டு வர முடியுமா, கொண்டு வர இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன். அப்படிப்பட்ட ஒரு சட்டத்திருத்தத்தைக் கொண்டுவரவேண்டும் என்று நான் சார்ந்திருக்கின்ற மார்க்கிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே இந்த நேரத்தில் வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறேன்.

ஊராட்சிகள் சீராக நடப்பதற்கு இந்த அரசாங்கம் உரிய அளவிற்கு அதிகாரம் வழங்கி, நிதி நிலைகள் கிடைக்கச் செய்து இணக்கமான ஒரு போக்கை உள்ளாட்சி அமைப்புகள் சம்பந்தமாக மாநில அரசு கடைப்பிடிக்க வேண்டும். மோதல் போக்கைக் கடைப்பிடித்து, உள்ளாட்சி அமைப்புகளின் மூலம் நிறைவேற்றப்பட வேண்டிய காரியங்களை நிறைவேற்ற முடியாமல் செய்யும் சூழ்நிலைகளை ஏற்படுத்தக்கூடாது, அது சரியல்ல என்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்லாமல், வேறொரு தகவலையும் நம்முடைய நிதியமைச்சர் அவர்களிடமிருந்து தெரிந்துகொள்ள விரும்புகிறேன். மத்தியப் பேரரசின் பிரதமர் அவர்கள், உள்ளாட்சி அமைப்புகளுக்கு அதிகாரம் வழங்குவது சம்பந்தமாக' நிதி ஆதாரங்களைத் தேடிக்கொள்வது சம்பந்தமாகவும் என்னென்ன நடைமுறைகளைக் கடைப்பிடிக்கிறீர்கள், என்னென்ன நடைமுறைகளைக் கடைப்பிடிக்க வேண்டுமென்று எல்லா மாநில அரசுகளுக்கும், மாநில முதலமைச்சர்களுக்கும் கடிதம் எழுதியதாகவும், அந்தக் கடிதத்திற்கு மேற்கு வங்கத்தில் நாங்கள் என்ன செய்து கொண்டிருக்கிறோம் என்று மேற்கு வங்க முதல்வர் மாண்புமிகு திரு. ஜோதிபாசு அவர்கள் இந்தியப் பிரதமர் அவர்களுக்குப் பதில் அனுப்பியுள்ளதாகவும் செய்திகள் வந்திருக்கின்றன. அப்படி நம்முடைய தமிழகத்திற்கு தமிழக முதலமைச்சரவர்களுக்கு மத்தியப் பேரரசிடமிருந்து உள்ளாட்சி அமைப்புகள் சம்பந்தமாக எப்படி நடந்து





தப்பட வேண்டுமென்று வழிகாட்டும் கடிதம் எதுவும் வந்ததா? அப்படி வந்திருந்தால் அதற்கு நம்முடைய மாநில அரசு ஏதாவது பதில் அனுப்பியிருக்கிறதா என்பதையும் நான் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

(பிற்பகல் 12-20)

அதோடு மட்டுமல்லாமல், இந்த வரவு-செலவுத் திட்டத்தில், பொருளாதார நிலையைப் பொறுத்தமட்டில் 10 பொருள்களுக்கான வரிகள் ரத்து செய்யப்பட்டிருக்கின்றன, 8 பொருள்களுக்கான வரிகள் 10 சதவீதத்திலிருந்து 4 சதவீதமாகவும், 8 சதவீதம் 4 சதவீதமாகவும் குறைக்கப்பட்டிருக்கின்றன. 14 பொருள்களுக்கான வரிகள் திருத்தி அமைக்கப்பட்டிருக்கின்றன. சில பொருள்களுக்கான பலமுனை வரிகள் ஒரு முனை வரியாக ஆக்கப்பட்டு, அதிலே 5 சதவீதம் என்பது 8 சதவீதம் என்று உயர்த்தப்பட்டிருக்கிறது. இப்படியெல்லாம் இந்த வரிகள் ரத்து செய்யப்பட்டும், குறைக்கப்பட்டும், திருத்தி அமைக்கப்பட்டும் அதன் மூலமாக, ரூ. 20 கோடிக்குத் தமிழக மக்களுக்கு வரிச் சலுகைகள் அளிக்கப்பட்டிருக்கின்றன என்று இந்த நிதிநிலை அறிக்கையிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதைப் பற்றியெல்லாம் இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் பலர் குறிப்பிட்டார்கள். இப்படி வரிச் சலுகைகள் அளிக்கப்பட்டதால், குடிசையிலே உள்ள ஏழைகள் நாட்டு சர்க்கரையை மூட்டை, மூட்டையாக வாங்க முடியும் என்றெல்லாம் குறிப்பிட்டார்கள். ஆனால், இந்த வரி குறைப்பினால், மக்களுக்குப் பயன் கிடைக்குமா, அதற்கேற்ற அளவிற்கு விலைகள் குறைக்கப்படுமா, அதற்கான முறையிலே அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

இந்த நிதிநிலை அறிக்கையின் பத்தி 46 (!)-ல் பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது. இச் சலுகையால் இம்மாநிலத்தில் இறுதிப் பொருள்களின் விலை பொதுவாகக் குறைந்து நுகர்வோர்க்குப் பயன் அளிக்கும்—-பயன் அளிக்க வேண்டும் என்று எதிர்பார்க்கிறேன். இப்படித்தான் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இந்த வரிவிலக்கினால், தமிழகத்து ஏழை, எளிய மக்களுக்கு இந்த அளவிற்கு விலை குறைக்கப்படுவதற்கான எதிர்பார்ப்பு என்று தான் இருக்கிறதே தவிர, விலை குறைக்கப்படும், விலையைக் குறைக்க இந்த அரசு நடவடிக்கை எடுக்கும் என்று உறுதி இந்த நிதிநிலை அறிக்கையிலே காட்டப்படவில்லையென்பதைக் கூறாமல் இருக்க முடியாது.

அதே போலத்தான், இந்த நிதிநிலை அறிக்கையைப் பற்றிச் சொல்லும்போது, புதிய வரிகள் போடவில்லையென்று குறிப்பிடுகிறார்கள். உண்மைதான். புதிய வரிகள் போடவில்லை

என்பது ஒருபுறம் இருந்தாலும் இன்னொரு பக்கத்திலே புதிய வரிகள் போடுவதற்கான எந்த ஒரு வாய்ப்பையும் மத்திய அரசு உங்களுக்கு விட்டு வைக்கவில்லையென்ற உண்மையைத் தமிழக மக்களுக்கு நீங்கள் சொல்ல மறுக்கிறீர்கள். புதிய வரி போடவில்லையென்பதைத்தான் பெருமையோடு சொல்கிறீர்களே தவிர, புதிய வரி போடுவதற்கான வாய்ப்பு எதையும் இந்த மாநில அரசுக்கு மத்திய அரசு விட்டு வைக்கவில்லையென்பதைத் தமிழக மக்களுக்குச் சொல்வதுதான் உண்மையான தக்க நிலையைக் கூறுவதாக இருக்கும் என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன்.

குறிப்பாக, வரவு-செலவுத் திட்டம் வருவதற்கு முன்னாலேயே, நாடாளுமன்ற ஜனநாயக நெறிமுறைகளுக்கெல்லாம் மாறுபட்டு, அரசாங்க உத்தரவின் மூலமாக, ரூ. 1,700 கோடிக்கு விலைகள் உயர்த்தப் பட்டன. பெட்ரோல் மீது, டீசல் மீது பெட்ரோலியப் பொருள்கள் மீது, உரப் பொருள்கள் மீது, மேலும் சில பொருள்கள் மீது வரி விதிக்கப், பெறுகிறது. இப்படி ரூ. 1,700 கோடிக்கு நிர்வாக உத்தரவின் மூலமாக விலைகள் உயர்த்தப் பட்டன. அப்படி உயர்த்தப்பட்டதன் விளைவை மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். மத்திய அரசு ஒரு புறத்திலே உதவி செய்தாலும், இன்னொரு பக்கத்திலும் திருப்பி வாங்கிக் கொள்கிறது என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அதையேகூட மத்திய ஆட்சிப் பொறுப்பிலே இருக்கிற கட்சிக்காரர்களால் சகித்துக் கொள்ள முடியவில்லை. அதற்குப் பிறகு, கடுமையாக, இப்படிக் குற்றம் சாட்டுகிறீர்களே, மத்திய அரசு தானே உதவி செய்கிறது என்று குறிப்பிடுகிறார்கள். இந்த நிதி நிலை அறிக்கையிலே அதிகமான தொகை மத்திய அரசு தானே கொடுத்திருக்கிறது என்றெல்லாம் கூடக் குறிப்பிட்டார்கள். இந்த அவையையும், தமிழகத்து மக்களையும் தவறான ஒரு நிலைக்கு, ஏதோ மத்திய அரசு, வாரி வாரி வழங்குவதால், இங்கே சகல வேலைகளும் நடந்து கொண்டிருக்கின்றன என்ற ஒரு நிலைக்கு வந்து விடுவது எந்த வகையிலும் பொருத்தமானது அல்ல. தமிழகத்திலிருந்து மத்திய அரசு பெறக்கூடிய நிதியிலிருந்து, தமிழகத்து மக்களுக்குக் கிடைக்க வேண்டிய முழு அளவு கிடைக்கிறதா? ஏதோ மத்திய அரசு தானம் வழங்குவது போலவும், நாம் அவர்களிடம் பிச்சை கேட்பதைப் போலவும் ஒரு படம் வந்து விடக் கூடாது. மத்திய அரசு தமிழகத்திலிருந்து பெறக் கூடிய நிதி ஆதாரங்களிலிருந்து, தமிழகத்திற்குக் கிடைக்க வேண்டிய உரிய பங்கைக் கொடுக்கிறதா? இப்பொழுது கூட பார்த்தோமானால், ரூ. 1,700 கோடி வரவு-செலவுத் திட்டத்தின் மூலமாக வரியாக வந்திருக்குமானால், அதற்கேற்ற முறையில், மாநிலத்திற்குப் பங்கு கிடைத்திருக்க முடியும்.





கிடைப்பதற்கான வாய்ப்புகள் உண்டு. ஆனால வரியாக இல்லாமல் விலை உயர்வு என்ற பெயரால நிர்வாக உத்தரவு மூலம் பெறப்படுகிற 1,700 கோடி ரூபாயில் தமிழ்நாட்டு மக்களுக்குக் கிடைக்கக்கூடிய பங்கு கிடைக்கப் போவதில்லை. இங்கே இருக்கக்கூடிய விவசாயிகள் பயன்படுத்தக்கூடிய உரம், இதரப் பொருள்கள்மீது விலை ஏறியிருக்கிறது. ஆனால், இந்த 1,700 கோடி ரூபாயில் அவர்களுக்கு எந்தவிதமான நிவாரணமும் இல்லை. இப்படிப்பட்ட வகையிலே இந்த மாநிலத்திற்குக் கிடைக்க வேண்டிய பங்கு கிடைக்காமல் அபகரித்துக்கொண்டிருக்கிற காரியத்தை மத்திய சர்க்கார் செய்துகொண்டிருக்கிறது என்பதை இந்த மாநில அரசு தமிழக மக்களுக்குச் சொல்லாமல் மறைப்பது ஏன்? அதற்கு என்ன காரணம் என்பதை என்னால புரிந்துகொள்ள முடியவில்லை.

அதைப்போலவே இந்த வரவு-செலவுத் திட்டத்தில் வரி போடுவதற்கான எந்தவிதமான வாய்ப்பையும் மத்திய சர்க்கார் வைக்காத நேரத்தில், தமிழ்நாட்டு மக்களுக்கு உரிய பங்கு கிடைக்காத நேரத்தில், இந்தக் குறையை தமிழக மக்களுக்குக் கூறுவதற்கு இடையிலே உங்களுக்கும் அவர்களுக்கும் இருக்கிற அரசியல் உறவு காரணமாக இருப்பதால் நீங்கள் அதிலிருந்து பின்வாங்குகிறீர்கள். உங்களுக்கு வேண்டுமானால் அது வசதியாக இருக்கலாம். உதவியாக இருக்கலாம். ஆனால் தமிழக மக்களுக்கு, தமிழ்நாட்டின் முன்னேற்றத்திற்கு அது உதவி செய்யாது என்று இந்த நேரத்தில் கூறிக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

அதைப்போன்றுதான் இந்த வரவு-செலவுத் திட்டத்தில் விவசாயிகளைப் பொறுத்தவரையில் நீங்கள் கண்டுகொள்ளவே இல்லை. விவசாயிகளுக்கு ஏற்பட்டிருக்கக்கூடிய பாதிப்பு என்பது முக்கியமான ஒரு பிரச்சினை. அதுபற்றி இந்த வரவு-செலவுத் திட்டத்தில் எந்தவிதமான குறிப்பும் இல்லை; நிவாரணத்திற்கு வழிவகைச் செய்யப்படவில்லை. குறிப்பாகச் சொல்ல வேண்டுமானால் காவேரி நதி நீர்ப் பிரச்சினையினால் இன்றைக்கு பெரும் பாதிப்பு ஏற்பட்டிருக்கிறது. அதைப் பற்றி நான் கூறவில்லை. எங்கள் கட்சி கூறவில்லை. வேளாண்மைத் துறை உதவி இயக்குநர் கூறியிருக்கிறார். காவேரி நதி நீர்ப் பிரச்சினையினால் 100 கோடி ரூபாய்க்கு உற்பத்தி இழப்பு ஏற்பட்டிருக்கிறது. மாவட்ட விவசாயிகளுக்கு இந்தப் பாதிப்பு ஏற்பட்டிருக்கிறது என்று குறிப்பிட்டிருக்கிறார். அதாவது 100 கோடி ரூபாய் இழப்புக்கு ஆளாகியிருக்கிற அந்த உழவர்களுக்கு நீங்கள் என்ன செய்யப்போகிறீர்கள் என்பதற்கு எந்தவிதமான அறிகுறியும் இதிலே இல்லை.

(திரு. கோ. வீரய்யன்) [1986 மார்ச் 24

அது மட்டுமல்ல. இந்த அரசே நியமித்த வேளாண்மை உயர்மட்டக் குழுவின் தலைவர் மாண்புமிகு திரு. மூனு ஆதி அவர்கள் அரசுக்குப் பரிந்துரை செய்திருக்கிறார். அவர்கள் தலைமையில் அமைந்த குழு பல்வேறு இடங்களுக்கும் சென்று பார்த்து, அதன் பிறகு பரிந்துரை செய்திருக்கிறது. பத்து ஆண்டுகளுக்கு மேலாக தேங்கியிருக்கிற கூட்டுறவுக் கடன்களைத் தீர்ப்பதற்கு, அதற்கு நிவாரணம் அளிக்க தீர்க்கமானதொரு சிபாரிசை மாநில அரசுக்குக் கொடுத்து ஏறத்தாழ ஒன்றரை ஆண்டுக்கு மேலாகிறது. அரசு அதை பரிசீலித்துக்கொண்டிருக் கிறோம்; பரிசீலித்துக் கொண்டிருக்கிறோம், என்று கூறுகிறதே தவிர எப்போது அந்தப் பரிசீலனை முடியும் ? எப்போது அதுபற்றி நீங்கள் அறிவிப்பீர்கள் ? அந்தக் குழுவின் அறிக்கையை ஏற்றுக் கொள்வீர்களா, இல்லையா ? அல்லது எதை எதை ஏற்றுக்கொள்ளுகிறீர்கள், எதை எதை நிராகரிக்கிறீர்கள், என்பதை தமிழ்நாட்டு விவசாய தமிழ் குடி மக்களுக்குத் தெரிவித்தால் அது அவர்களுக்கு உதவிகரமாக இருக்கும் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அது மட்டுமல்ல. இன்றைக்கு விவசாயிகள் வெள்ளத்தாலும் வறட்சியாலும் பாதிக்கப்பட்டிருக்கக்கூடிய நேரத்தில் ஓரளவு கிடைத்திருக்கிற மகசூலை கூட்டுறவுக் கடனுக்காக ஜப்தி செய்யக்கூடிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. இப்படி கடன் பாக்கியை வசூல் செய்யும் முயற்சியில் ஈடுபட்டிருக்கக்கூடிய நடவடிக்கை உண்மையிலேயே விவசாயிகளுக்கு விரோதமான நடவடிக்கை. இப்படிப்பட்ட கடன் பற்றியோ அல்லது தமிழ் நாட்டில் ஏற்பட்டிருக்கிற வறட்சியைப் பற்றியோ, வறட்சியினால் விவசாயிகளுக்கு ஏற்பட்டிருக்கிற பாதிப்பு பற்றியோ, பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் அளிப்பது பற்றியோ இந்த நிதிநிலை அறிக்கையில் கூறப்படவில்லை. காரணம் என்னவென்று தெரியவில்லை. விடுபட்டிருக்கிறதா அல்லது விடப்பட்டிருக்கிறதா என்பது புரியவில்லை.

இப்போது ஏற்பட்டிருக்கிற வறட்சியைப் பற்றி இங்கே குறிப்பிடும்போது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒன்றைக் குறிப்பிட்டார்கள். முதுமலைக் காடு தீப்பிடிக்கக்கூடிய அளவுக்கு வறட்சி ஏற்பட்டிருக்கிறது ; அதனால் அங்கே இருக்கிற மிருகங்கள் எல்லாம், தண்ணீர் இல்லாமல், வெளியேறிக்கொண்டிருக்கின்றன என்று குறிப்பிட்டார்கள். அந்த அளவுக்கு வறட்சி நிலை மிகவும் மோசமாக இருக்கிறது. இன்றைக்கு தமிழ்நாட்டில் பல்வேறு மாவட்டங்களில் குடிக்க தண்ணீர் கிடைக்காத அளவுக்கு வறட்சி ஏற்பட்டிருக்கிறது. வறட்சியால் பாதிக்கப்பட்டிருக்கிற மக்களுக்கு நிவாரணம் அளிப்பது பற்றி இந்த வரவு-செலவுத் திட்டத்தில் எதுவும் கூறப்படவில்லை.



1986 மார்ச் 24]

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** நீங்கள் 20 நிமிடங்கள் பேசியிருக்கிறீர்கள். இன்னும் ஆறு பேர் பேச வேண்டியிருக்கிறது. ஆகவே, இதோடு முடித்துக்கொள்ளுங்கள்.

(பிற்பகல் 12–30)

**திரு. கோ. வீரய்யன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நாகை நகரக்குப் பக்கத்தில் கிடைத்திருக்கக்கூடிய எண்ணெய் வளத்தைப் பயன்படுத்தி பின்தங்கிய பகுதியாக இருக்கின்ற அந்தப் பகுதிக்கு உதவி செய்யக்கூடிய முறையில் அங்கே நாகைத் துறைமுகத்தில் ஒரு எண்ணெய் சுத்திகரிப்பு ஆலையை ஏற்படுத்த மத்தியப் பேரரசுக்கு இந்த அரசு பரிந்துரை செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். கடைசியாக ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** சீக்கிரம் முடித்துவிடுங்கள். நிறையபேர் பேசவேண்டி இருக்கிறது.

**திரு. கோ வீரய்யன் :** நாகையைத் தலைநகராகக் கொண்ட காயிதே மில்லத் மாவட்டம் அமைப்பதைப் பொறுத்த வரையில் அங்கே இப்போது மாவட்டத்திற்குத் தேவையான அனைத்து அலுவலகங்களும் செயல்பட்டுக்கொண்டுதான் இருக்கின்றன. எனவே அங்கே ஒரு ஐ.ஏ.எஸ். கலெக்டரை நியமித்தாலே போதுமானதாக இருக்கும். எனவே அந்த வகையில் தொடரும் செலவு, தொடராச் செலவு ஆகியவை இல்லாத அளவுக்கு ஒரு ஐ.ஏ.எஸ். அதிகாரியை நியமிப்பதன் மூலமாக அந்த மாவட்டத்தை நடைமுறைக்குக் கொண்டுவர முடியும். எனவே அவ்வாறு வரப்போகிற நிதியாண்டிலேயாவது அமைத்துக் கொடுக்க இந்த அரசு ஏற்பாடு செய்யவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது.)

***திரு. த. பழனி:** மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் அவர்களே, 1986–87 ஆம் ஆண்டினுடைய நிதிநிலை அறிக்கையின் மீது பேசுகின்ற வாய்ப்பளித்த மாண்புமிகு இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்களுக்கு நான் நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். இலங்கைப் பிரச்சினையைப் பொறுத்த வரையில் கடந்த ஆண்டும், அதற்கு முந்திய ஆண்டுகளிலும் புரட்சித் தலைவர் அவர்களின் அரசு என்னென்ன நடவடிக்கைகளை எடுத்துக்கொண்டிருக்கிறது என்பதை இந்த மாமன்றமும் இந்த நாடும் அறிந்திருக்கிறது. இந்த மாமன்றத்தைப் பொறுத்தவரையில் பல்வேறு தீர்மானங்களை மத்திய அரசுக்குக் கொடுத்திருக்கிறது. இந்த நாட்டினுடைய உண்மையான எண்ணங்களையும் தமிழக மக்களின் உண்மையான எண்ணங்களையும் நடுவண் அரசுக்கும், இலங்கை அரசுக்கும் எடுத்துச் சொல்லியிருக்கிறது புரட்சித் தலைவர் அவர்களது அரசு.

[திரு. த. பழனி] [1986 மார்ச் 24

கடந்த ஒன்றரை ஆண்டுக் காலங்களில் இலங்கையில் ஏற்பட்டு இருக்கும் பெரும் கொடுமைகளின் காரணமாக உயிர் தப்பி இங்கே வந்திருக்கின்ற, தமிழகத்திற்கு வந்து தங்கி இருக்கின்ற அகதிகளின் எண்ணிக்கை 1,25,000 ஆக உயர்ந்திருக்கின்றது. இந்தப் புள்ளி விவரத்தை மாண்புமிகு நிதியமைச்சர் நாவலர் அவர்கள் இங்கே அறிவித்திருக்கிறார்கள். அதற்காகச் செலவு செய்யப்பட்டிருப்பது 45 கோடி ரூபாய் என்ற புள்ளிவிவரத்தையும் இங்கே அளித்திருக்கிறார்கள்.

பக்கத்திலே இருக்கின்ற இலங்கை அரசு தமிழக மக்களின் மீது கட்டவிழ்த்துவிட்டிருக்கின்ற அந்தக் கொடுமைகளைப் போக்குகின்ற நாள் எந்த நாளோ அந்த நாள்தான் தமிழன் தலை நிமிர்ந்த நாளாக இருக்க முடியும் என்ற உணர்வுகளை இந்த மர்மன்றத்தின் வாயிலாக மறு முறையும் நடுவண் அரசுக்குத் தமிழகத்தினுடைய ஒன்று சேர்ந்த குரலாக எடுத்துக்காட்ட வேண்டும் என்ற என்னுடைய கோரிக்கையை மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களுக்கு பணித்துக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன். அண்மையில் ஏற்பட்ட புயலின் காரணமாக அண்மையில் ஏற்பட்ட வெள்ளம் கர்ரணமாக இங்கே சென்னையையும் அதைச் சுற்றி இருக்கிற செங்கற்பட்டு மாவட்டத்தைச் சேர்ந்த பகுதிகளை மட்டும் கணக்கில் எடுத்துக் கொண்டு மத்திய அரசு ஏறக்குறைய 66.8 கோடி ரூபாயை நிதியாக ஒதுக்கித் தந்திருக்கிறது. வறட்சி நிவாரணம் என்பதைப் பொறுத்தவரையில் எங்கள் மாவட்டமான வடாற்காடு மாவட்டத்தில் குறிப்பாக அரக்கோணம், வாலாஜா, வட ஆற்காடு, ஆரணி, வேலூர், திருவண்ணாமலை, போன்ற பகுதிகள் ஏற்கனவே மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் சேர்த்து அனுப்பப்பட்டிருக்கின்றன. அதாவது வறட்சி என்று சொன்னாலும் புயல் என்று சொன்னாலும், மழை என்று சொன்னாலும் அவற்றால் எல்லாம் அதிகம் பாதிக்கப்படுகிற பகுதி எங்கள் பகுதியாகும். சாலைகள், குளங்கள், ஏரிகள் இப்படி அடுக்கடுக்காகச் சொல்லிக்கொண்டே போகலாம். அனைத்தும் பாதிக்கப்பட்டிருக்கின்றன. எனவே அவற்றை உடனடியாகச் செப்பனிடுவதற்குரிய வகையில் இந்த நிதிநிலை அறிக்கையிலேயே சேர்த்து அளித்திருக்கவேண்டும். அவ்வாறு நிதிநிலை அறிக்கையிலே சேர்க்கவில்லை என்று சொன்னாலும் கூட மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்கள் வரப்போகிற காலங்களிலாவது அந்த பாதிக்கப்பட்டிருக்கின்ற பகுதிகளை உடனடியாகச் சீர் செய்வதற்கான வாய்ப்பினை ஏற்படுத்தித் தரும்படி கேட்டுக்கொள்கிறோம்.

இந்த மன்றத்தின் வாயிலாக மற்றொரு முக்கியமான நிகழ்ச்சியை நான் சொல்லியாகவேண்டும். எங்கள் பகுதியைப் பொறுத்தவரையில், எங்கள் மாவட்டத்தைப் பொறுத்தவரையில் பாலாறு என்பது அனைத்து பகுதிகளுக்கும் குடிநீர் வழங்கு



1986 மார்ச் 24] [திரு. த. பழனி]

கின்ற தாயாக விளங்குகிறது. தோல் தொழில் காரணமாக அந்தப் பாலாறு பாதிக்கப்பட்டுக்கொண்டிருக்கிறது. தோல் பதனிடும் தொழிலிலே ஈடுபட்டிருப்பவர்கள் இன்று இங்கே பல இலட்சக்கணக்கான மக்களுக்கு குடிநீர்ப் பிரச்சினையை உருவாக்கிக் கொண்டிருக்கிறார்கள். இதுபற்றி இந்த மன்றத்தின் வாயிலாக பல உறுப்பினர்களும் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். நானும் எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். குறிப்பாக தோல் தொழிலைப் பொறுத்த வரையில் வடாற்காடு மாவட்டம் தமிழ்நாட்டின் முதன்மையான இடத்தைப் பெற்றிருக்கின்றது. இருந்தாலும் கூட, அந்தத் தொழிலின் மூலமாக ஏற்படுகிற கழிவு நீர், பாலாறு, பாலாற்றுக்கு ஆதாரமாக இருக்கின்ற நீர் ஊற்றுக்கள், அந்த நீர் ஊற்றுகளுக்கு ஆதாரமாக இருக்கின்ற ஏரிகள், குளங்கள் போன்றவற்றில் உள்ள தண்ணீரை எல்லாம் உப்புத் தண்ணீராக மாற்றிவிடுகின்ற சூழ்நிலை ஏற்பட்டு இருக்கிறது. தோல் தொழிற்சாலையில் இருந்து நேரிடையாக பாலாற்றிலே விடப் படுகிற அந்தக் கழிவு நீரால், ஏற்கெனவே ஆம்பூரிலும், வாணியம்பாடியிலேயும், பேரணாம்பட்டிலேயும், குடியாத்தத்திலேயும், விஷாகத்திலேயும், ராணிப்பேட்டையிலும், ஆற்காடு போன்ற பகுதிகளிலேயும் இருக்கிற தண்ணீர் உப்புத் தண்ணீராக மாறிக்கொண்டு வருகிறது. இதனால் வரப் போகின்ற காலங்களிலே, குடிதண்ணீரே பாழ்பட்டுப் போகக்கூடிய ஒரு அவலமான சூழ்நிலை அந்தப் பகுதியிலே உருவாகிக் கொண்டிருக்கிறது. அதை உடனடியாகப் போக்குவதற்கு மாவட்ட ஆட்சித் தலைவர் எடுத்திருக்கிற நடவடிக்கை போதுமானது அல்ல என்று பொது மக்கள் கருதுகிறார்கள். போதுமானது அல்ல என்ற நிலை இருந்தாலும், அந்த மாவட்ட ஆட்சித் தலைவரின் அறிக்கை மீது மேலும் வேகமாக மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் நடவடிக்கை எடுக்க நேரிடையாக ஈடுபடவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

அதேபோன்று மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் அந்தத் தோல் தொழிற்சாலைகளின் மீது எடுத்திருக்கிற நடவடிக்கைகளையும் பொது மக்கள் புரிந்துகொள்கிற விதத்திலே பொதுவாக்கி, அந்த அறிக்கையின் மீது நடவடிக்கை எடுக்கின்றபோது அந்தப் பகுதி பொது மக்களின் தண்ணீர்ப் பிரச்சினையைத் தீர்க்கின்ற வகையில், விவசாயிகள் விவசாய நிலங்களிலே பயிரிடுவதற்கு வாய்ப்பு ஏற்படுத்தாமல் பாழ்படுத்துகின்ற சூழ்நிலையை உடனடியாக மாற்றுவதற்கு ஏற்ற வகையில் நடவடிக்கைகளை எடுத்து, போதுமான தண்ணீர் விவசாய நிலங்களுக்கு கிடைக்க உத்தரவாதம் வழங்கும் வகையில் புரட்சித் தலைவர் அவர்கள் முன்வர வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. த. பழனி] [1986 மார்ச் 24

அதேபோல விவசாயத்தைப் பொறுத்தவரையில் தமிழகத்தில் தஞ்சைக்கு அடுத்தபடியாக வட ஆற்காடு மாவட்டம் நெற்களஞ்சியமாக இருந்து கொண்டிருக்கிறது. தமிழகத்திலே தாய் உள்ளத்தோடு நமது இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்கள் கொண்டு வந்திருக்கிற இரு பெரும் திட்டங்களான சத்துணவுத் திட்டத்திற்கும், நியாய விலைக் கடைகளில் அத்தியாவசிய உணவுப் பொருள்கள் வழங்கும் திட்டத்திற்கும் அரிசி இன்றியமையாதது என்பது நாம் அனைவரும் அறிந்த ஒன்று. அதற்காக தஞ்சை மாவட்டத்திற்காக ஏக போக கொள்முதல் நிலையங்களை ஏற்படுத்தி, அதற்கென அரசு வழங்குகின்ற 35 ரூபாய் மானியம் பற்றாது என்ற நிலையை உணர்ந்து, அதை அதிகப்படுத்திக் கொடுப்பதற்கான முயற்சியிலே அரசு முயன்று கொண்டிருக்கிறது என்று இந்த நிதிநிலை அறிக்கையிலே, ஒரு செய்தியை மாண்புமிகு டாக்டர் நாவலர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அதே சூழ்நிலையை எங்கள் மாவட்டத்திற்கும் ஏற்படுத்தித்தர வேண்டும் என்கிற என்னுடைய கோரிக்கையை நான் வலியுறுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

எங்கள் மாவட்டத்தைப் பொறுத்தவரையில் வறட்சி என்று சொன்னால் மிக அதிகமான வறட்சியும், புயல், காற்று என்று சொன்னாலும், மிக அதிக அளவில் புயலும் காற்றும் அடிக்கின்ற ஒரு பகுதியாக இருக்கின்றது. எங்கள் மாவட்டத்தைப் பொறுத்தவரையில் விவசாயிகள் மிகவும் கொதிப்போடு இருக்கின்ற சூழ்நிலை உருவாகியிருக்கிறது என்று பொதுமக்கள் கருதுகிறார்கள். ஒவ்வொரு நகரத்திலும் செக்போஸ்ட் இருக்கிறது. குறிப்பாக ஆற்காட்டைப் பொறுத்தவரையில் 4 சாலைகள் சந்திக்கும் இடங்களிலும் ஆற்காட்டிலே இருந்து வேலூர் செல்லுகின்ற பாதையிலும், ஆற்காட்டிலே இருந்து, சென்னை செல்லுகின்ற பாதையிலும், ஆற்காட்டிலே இருந்து செய்யாறு செல்லுகின்ற பாதையிலும், ஆற்காட்டிலே இருந்து திருவண்ணாமலை, ஆரணி செல்லுகின்ற பாதையிலும் செக்போஸ்டுகளைப் போட்டு, விவசாயிகளினுடைய வண்டிகளை மடக்கி தொல்லை கொடுக்கப்படுவதாக பொதுமக்கள் கருதுகிறார்கள். அதை உடனடியாக நீக்கவேண்டும் என்றால், புரட்சித் தலைவர் அவர்கள் நேரடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன். இப்படிப்பட்ட செக் போஸ்டுகளில் வியாபாரிகளிடத்திலேயிருந்து பெற வேண்டிய லெவி வரிப் பணத்தை, விவசாயிகளிடத்திலேயிருந்து வசூல் செய்கிறார்கள் என்றும் மூட்டைக்கு 20-லிருந்து ரூ. 25 வரை வாங்குகின்ற சூழ்நிலை அங்கே இருக்கிறது என்றும் சொல்லுகிறார்கள். அதை உடனடியாகப் போக்குவதற்கு உண்டான நடவடிக்கைகளை மாண்புமிகு



1986 மார்ச் 24] [திரு. த. பழனி]

இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவாகள் நேரடியான நடவடிக்கை எடுத்து அந்த விவசாயிகளைப் பாதுகாக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அதேபோல என்னுடைய தொகுதியைப் பொறுத்தவரையில் குடிதண்ணீர் பிரச்னை தீர்ந்தபாடில்லை. குடிதண்ணீருக்கான திட்டங்கள் நிறைய இருக்கின்றன. டுவார்டு போர்டால் ஏற்கெனவே எடுத்துக்கொள்ளப்பட்ட பாதுகாக்கப்பட்ட குடிதண்ணீர்த் திட்டங்கள் எல்லாம் ஆண்டுக்காண்டு தள்ளி வைக்கப்பட்ட சூழ்நிலையிலேயே இருக்கின்றன. அதற்குக் காரணம் ஒதுக்கப்பட்ட திட்டங்கள் அந்த ஆண்டிலேயே முடிக்கப்படாததன் காரணமாக, அவைகளே மீண்டும் மீண்டும் தொடர்ந்து வந்து செலவுக் கணக்கையே அதிகமாக்கக் கூடிய சூழ்நிலை உருவாகிக் கொண்டிருக்கிறது. அப்படிப்பட்ட நிலையில் அந்த டுவார்டு போர்டு இருந்து கொண்டிருக்கிறது. ஆகவே அவர்களுக்கு ஒதுக்குகின்ற பணத்தை முழுவதுமாக முறையாக செலவழித்து, அவர்களுக்கு வருடம் தோறும் ஒதுக்கப்படுகின்ற இலக்கை முடித்துத் தருகின்ற வகையில் டுவார்டு போர்டையே முழுவதுமாகத் திருத்தி அமைக்கின்ற சூழ்நிலையை தயவுசெய்து மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித் தலைவர் அவர்கள் உருவாக்கித் தர வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

முப்பதுவட்டிலைத் தலைமை இடமாகக் கொண்டு, பாலாற்றங் கரையிலே இருக்கிற அந்தப் பகுதி உப்புத் தண்ணீராக இருக்கிறது. அதைப்போல அதைச் சுற்றியிருக்கிற கிராமங்கள், மாங்காடு, சர்வம்தாங்கி, லப்பப்பேட்டை, குஞ்சரப்பந்தாங்கல், புன்னப்பாடி, லாடவரம், பில்லேரி, கல்லேரி, அத்தித்தாங்கல், கீழ்பாடி, லாத்தம்பாடி போன்ற பல்வேறு பகுதிகளோடு கணியனூர் பகுதியையும் சேர்த்து—கீழப்பாடி, பழையனூர் ஆகிய பகுதிகளையும் ஒன்றாகச் சேர்த்து குடிதண்ணீர்த் திட்டங்களை உருவாக்கித் தந்திட வேண்டும் என்ற கோரிக்கையை பல நாட்களாகவே அந்தப் பகுதியிலே இருக்கிற மக்கள் கேட்டு வருகிறார்கள். அந்தப் பகுதியிலே இருக்கிற மக்கள் குடிக்கத் தண்ணீர் இல்லாமல் கஷ்டப்படுகிறார்கள். ஒரு பகுதியிலே இருக்கிற தண்ணீர் உப்புத் தண்ணீராகவும், இன்னொரு பகுதியிலே இருக்கிற தண்ணீர் பாறைக் கிணறுகளாகவும் இருந்து கொண்டிருக்கிற காரணத்தால், அந்தப் பகுதியிலே இருக்கிற தாய்மார்கள், பல மைல்கள் கடந்து சென்று வயல்களுக்குத் தண்ணீர் பாய்ச்சுகின்ற மின்சார மோட்டாரிலிருந்து தண்ணீர் கொண்டு வருகின்ற சூழ்நிலையை மாற்றி அமைத்துத் தரவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

[திரு. த. பழனி] [1986 மார்ச் 24

[பிற்பகல் 12-40.]

அதைப்போல புறப்பாடியைத்தலைமையிடமாகக் கொண்டிருக்கின்ற திட்டங்கள் - அது பாலாற்றின் கரையில் இருந்து உப்புத் தண்ணீரைக் கொண்டிருக்கின்ற பகுதி. புதுப்பாடி, கிளாம்பாடி, குக்குண்டி போன்ற பகுதியில் இருக்கின்ற மக்கள் பாலாற்றில் ஓடிக்கொண்டிருக்கின்ற தண்ணீரைக் குடிப்பதற்கு வாய்ப்பில்லாமல் இருக்கிறறார்கள். அந்த மக்களின் தேவைக்கான குடிதண்ணீரை வழங்கிட வேண்டுமென்று இந்த நேரத்தில் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

அதைப்போல பெருங்கால்மேடு திட்டம். பெருங்கால்மேடு திட்டத்தோடு எசையனூர், வளவனூர், புதேரி, அனத்தாங்கல், அரும்பாக்கம் போன்ற பகுதிகள் உள்ளடங்கியிருக்கின்றன. இந்தக் குடிதண்ணீர்த் திட்டத்தை விரைவில் உருவாக்கித் தந்திட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

வாழைப்பந்தலைத் தலைமையிடமாகக் கொண்டு மூன்று ஆண்டுகளுக்கு முன்பு கொண்டு வரப்பட்ட திட்டம் தலைமைப் பொறியாளரின் ஒப்புதலுக்காக நிறுத்திவைக்கப்பட்டிருக்கிறதென மீண்டும், மீண்டும் தெரிவிக்கப்படுகிறது. வாழைப்பந்தலைத் தலைமையிடமாகக் கொண்ட இந்தத் திட்டம் மேலப்பழந்தை, மேல்புதுப்பாக்கம், சொரையூர், அரூர், பொன்னமங்கலம், குப்பிடிசாத்தாம், பாலி, கோடாலி, இருங்கூர், தட்டச்சேரி, மருதம், மருதமங்கலம், பாரிமங்கலம், தோணிமேடு ஆகிய பகுதிகளை உள்ளடக்கியதாக இருக்கிறது. இந்தத் திட்டத்தை விரைவில் நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். வரகூர், வரகூர்பட்டணத்தையும் சேர்த்து இந்தத் குடிநீர்த் திட்டத்தை நிறைவேற்றித் தந்திட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

நெடுஞ்சாலைத் துறையைப் பொறுத்தவரையில் தனியாக ஒரு தன்னிறைவுத் திட்டம் போடுகின்ற அளவிற்கு சாலைகள் எல்லாம் குழிகளாகவும், ஆங்காங்கு பழுது பார்க்க வேண்டிய சாலைகளாகவும் இருக்கின்றன. அந்தச் சாலைகளைப் பொறுத்த வரையில் எப்படி மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் கிராமப் புறங்களுக்காக மாபெரும் திட்டமாக தன்னிறைவுத் திட்டத்தை உருவாக்கி கிராமப்புறங்களில் இருக்கின்ற மக்களுக்காக குடிதண்ணீர் வசதி, சாலை வசதி, பள்ளிக்கூட வசதி திட்டங்களை வழங்கினார்களோ அதைப்போன்று போக்குவரத்திற்கும் ஒரு திட்டத்தை நிறைவேற்ற வேண்டும். ஏழை எளிய மக்கள், நடுத்தர மக்கள் பயன்படுத்துகின்ற வண்டிகள் பழுதடையாமல் அவர்கள் செல்ல வேண்டிய இடத்திற்கு சென்று வருகிற அள



1986 மார்ச் 24] [திரு. த. பழனி]

விற்குச் சாலை வசதிகளைச் சீரமைத்துத் தரவேண்டுமென்று என்னுடைய கோரிக்கையை மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களிடத்தில் முன்வைக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன். குறிப்பாக எங்கள் பகுதியில் புதுப்பாடி— இலுப்பை சாலை, ஆற்காடு— முப்பதுவட்டி சாலை, அத்தித்தாங்கல்— கரிக்கன் தாங்கல் சாலை, காவனூர்— கண்ணமங்கலம் சாலை, கலவை— வாழப்பந்தல் சாலை, களியனூர்— மலையூர் வெள்ளாண்டிச் சாலை, காவனூர்— வெள்ளக்கோவில் சாலை, கரிக்கன் தாங்கல்— அத்தித்தாங்கல் சாலை வழியாகச் செல்கின்ற பாதையில் ஒரு பெரிய கால்வாய் இருக்கிறது. வருடத்திற்கு ஆறு மாதம் அந்தப் பகுதியில் இருக்கின்ற 'மக்கள் இந்தப் பக்கத்திற்கு வர முடியாமலும், இந்தப் பக்கத்தில் இருக்கின்ற மக்கள் அந்தப் பக்கத்திற்குச் செல்ல முடியாமலும் இருக்கிறது. இந்தச் சூழ்நிலையைப் போக்குவதற்கு ஏற்கெனவே தலைமை பொறியாளர் அவர்களிடம் இருக்கிற திட்டத்தை நிறைவேற்றித் தந்திட வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து பொதுப் பணித்துறையில் இருக்கிற 500 ஏக்கர்களுக்கு மேல் பாசன வசதி தருகின்ற ஏரிகள் அவ்வப்போது தூர் வாரப்பட வேண்டும். இப்போது இருக்கிற வழிமுறைகளில் வெள்ளம் வந்தால் அல்லது வறட்சி வந்தால்தான் அந்தப் பணியைச் செய்வதற்கான நிலைமை இருக்கிறது. தேவையான இடங்களில் அவ்வப்போது இது போன்ற பணிகளைச் செய்வதற்கு பொதுப்பணித் துறை மற்றும் அதோடு இணைந்திருக்கின்ற துறை அதிகாரிகள் ஆர்வமாக இருக்க வேண்டும். இதுபோன்ற பணிகளை அதிகாரிகள் செய்வதில்லையென்ற எண்ணம் மக்கள் மத்தியிலே வரக்கூடாது. எப்படி புரட்சித் தலைவர் அவர்கள் ஏழை மக்களிடத்திலே, விவசாயப் பெருங்குடி மக்களிடத்திலே, நம்பிக்கை கொண்டு நல்ல முறையில் பல்வேறு பணிகளை ஆற்றி வருகிறார்களோ, அதைப்போல அவர்களின் எண்ணத்திற்கு உறுதுணையாக இப்பணிகள் நல்ல முறையில் மேற்கொள்ளப்பட வேண்டும். 500 ஏக்கர்களுக்கு மேல் பாசன வசதியை அளித்து வருகிற பெரிய ஏரிகளாக இருக்கிற திமிரி, சாத்தூர், வளையாத்தூர் போன்ற ஏரிகளை தூர் வாருவதற்கும், அந்த வாய்ப்போடு வரத்துக் கால்வாய்களைச் செப்பனிட்டுத் தருவதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோன்று, கீரம்பாடி, சுறையூர் ஆகிய இந்தப் பகுதிகளில் உள்ள கால்வாய்களுக்குத் கட்டிடம் கட்டி, நீர் வருவதற்கு வாய்ப்பை ஏற்படுத்தித் தந்த மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களுக்கும் பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்களுக்கும் நான் நன்றி சொல்லக் கடமைப்பட்டு இருக்கின்றேன்.

அதைப்போன்று ஆற்காடு மருத்துவ மனையைப் பொறுத்தவரையிலும் ஏறத்தாழ 30 இலட்ச ரூபாயில் கட்டி முடிவு பெற்று இருக்கின்ற அந்த மருத்துவமனையில், டாக்டர்கள் இல்லாத குறையின் காரணமாக, ஸ்வீப்பர்கள் இல்லாத குறையின் காரணமாக அது திறக்கப்படாமல் ஏறத்தாழ 1 ஆண்டுக்காலமாக இருந்து வருகிறது. இந்த நிலையைப் போக்க, மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் அதற்கான போஸ்டிங்சை சேங்க்சன் செய்தால்தான் அதைத் திறப்பேன் என்று டி. எம். ஓ. அவர்கள் அடாவடித்தனமாக, பிடிவாதமாக ஓர் ஆண்டுக்காலமாக சொல்லிக் கொண்டிருக்கின்றார்கள். எனவே, உடனடியாக அவர்கள் கேட்கின்ற அந்த போஸ்டிங்சை சாங்க்சன் செய்து, அதைத் திறப்பதற்கு உரிய வாய்ப்பை உருவாக்கித்தர வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோன்று கிராமப்புறத்திலே உள்ள ஏழை எளியவர்களுக்கு குறிப்பாக நடுத்தர மக்கள், வறுமைக் கோட்டுக்குக் கீழே இருப்பவர்கள், ஆதி திராவிட மக்களுக்கு பல்வேறு துறைகளின் மூலமாக வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டு இருக்கின்றன. எனவே, இத்தகைய நிறுவனங்களை எல்லாம், தாட்கோ, கிராமப்புற வீட்டு வசதி வாரியம். ஆர். எல். இ. ஜி. பி., போன்ற திட்டங்களையும் சேர்த்து, ஒரு தனி வாரியமாக அமைத்து, கிராமப்புறத்திலே இருக்கிற ஆதி திராவிட மக்களுக்கும், குறிப்பாக, ஏழை எளியவர்களுக்கும், பயன்படுகின்ற வகையில், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்கள், இந்தத் திட்டத்தை உருவாக்கித் தந்திட வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று, ஆதி திராவிட மக்கள் வாழ்கின்ற அந்தப் பகுதிகளில் 10, 15 ஆண்டுகாலமாக அவர்கள் கட்டி இருக்கிற வீடுகளுக்கு பட்டா பெறுவதற்கு பல ஆண்டு காலம் ஆகிறது. எனவே, ஏழை எளிய மக்களின் நலன் கருதி, பல்வேறு நலத் திட்டங்களை இந்த அரசு கொண்டு வருகின்றபோது, ஏழை எளிய மக்களும், நடுத்தர மக்களும், குறிப்பாக ஆதி திராவிட மக்களும் 10, 15 ஆண்டுக் காலமாக வீடுகளைக் கட்டிக்கொண்டு அங்கேயே வாழ்ந்து வருகின்ற இவர்களுக்கு, அங்கேயே நிரந்தரமாக வீடுகளைக் கட்டித் தரலாம் என்ற உத்தரவை மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் வழங்கிட வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல், ஆற்காடு நகராட்சியில் இருந்து கொண்டு இருக்கின்ற வீட்டு வசதி வாரியத்தின் நிலங்களில் உடனடியாக வீடுகளைக் கட்டித் தருவதன் மூலமாக, வீடுகள் கிடைக்காமல் மிகவும் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கின்ற மக்கள், குறிப்பாக ஆற்காடு, வாலாஜா, ராணிப்பேட்டை போன்ற பகுதிகளில் இருப்பவர்கள், சிப்காட்டில் அதிகமான தொழிற்சாலைகள்





வந்ததன் காரணத்தால், அந்தப் பகுதிகளிலே வீடுகளில் வாடகை உயர்ந்திருக்கின்ற காரணத்தால் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். எனவே, அந்தப் பகுதியின் உண்மையான நிலைமையை அறிந்து, அங்கே வீடுகளைக் கட்டித் தருமாறு கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கடைசியாக ஒன்றைச் சொல்லி விடைபெறலாம் என்று நினைக்கிறேன். எங்கள் பகுதியைப் பொறுத்தவரைக்கும் விவசாயப் பகுதி. அங்கே கரும்பாலைகளில் ஏறக்குறைய 15 ஆயிரம் ஏக்கர் அரவைக்கு பதிவு செய்யப்பட்டிருக்கின்றது. ஆனால், கரும்பாலைகள் அரைக்கின்ற அந்த ஏக்கர்களின் விஸ்தீரணம் ஏறக்குறைய 10 ஆயிரம் ஏக்கர்கள்தான். இதனால் அந்த மில்லில் கரும்புகளை, 16 மாதங்கள், 18 மாதங்கள் கழித்து அரைக்கிற, நிலையை அந்த வேலூரில் உள்ள சர்க்கரை ஆலை பெற்றிருகின்றது. எனவே, அங்கே ஒரு பி—பிளான்ட் உருவாக்க வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். ஆற்காடு, செய்யார், ஆரணி ஆகிய வட்டங்களின் சார்பாக, நாங்கள் ஏறத்தாழ, விவசாயிகளின் சார்பாக, ஒரு டன்னுக்கு 20 ரூபாய் நிதி ஆதாரத்தை அரசுக்குத் தருகிறோம். அதற்குத் தேவையான நிலத்தைத் தருகிறோம். 6 கோடி ரூபாய்க்குத் தேவையான நிதி ஆதாரங்களைத் தருகிறோம். எங்களுக்கு பி—பிளான்ட் அமைத்துத் தாருங்கள் என்று அரசைக் கேட்டிருக்கிறார்கள். எனவே அங்கே இருக்கின்ற வேலூர், சர்க்கரை ஆலையில், ஆற்காடு, செய்யார் மற்றும் ஆரணி ஆகிய பகுதிகளை உள்ளடக்கிய அந்தப்பகுதிகளில் இருந்து விவசாயிகள் தருகின்ற அந்த இடத்திலே, பி—பிளான்ட் ஒன்றை உருவாக்கித் தருமாறு கேட்டுக் கொள்கிறேன்.

மின்சாரம் இல்லாத நிலையில், கிணற்றிலே போதிய தண்ணீர் இல்லாத நிலையில், விவசாயிகள் பயிர் வாடுகின்ற நிலையில், அவர்கள் கரும்பை வைத்து, அதைக் கண்ணாக வைத்து, அதன் மூலமாக தங்களுடைய வருமானத்தைப் பெருக்கி வாழக்கூடிய நிலையை புரட்சித் தலைவர் அவர்கள் நிச்சயமாக ஏற்படுத்தித் தருவார்கள் என்ற நம்பிக்கையில், இந்த நிதிநிலை அறிக்கையில் எனக்குப் பேச வாய்ப்புத் தந்தமைக்கு நன்றி கூறுகிறேன். புரட்சித் தலைவர் அரசு ஏழை எளிய மக்களுக்காக உருவாக்கித் தந்திருக்கின்ற இந்த நிதிநிலை அறிக்கையை வரவேற்று விடைபெறுகிறேன். வணக்கம்.

திரு. எஸ். ரெத்தினராஜ் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1986-87 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையின் மீது என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். பொதுவாக நிதி நிலை அறிக்கை என்று சொன்னால், எதிர்பார்க்கக்கூடிய வரவினங்களும் தீர்மானிக்கப்பட்ட செல

வினங்களும்தான். Expected income and proposed expenditure. ஆனால் இவை இரண்டுமே முறையாக இல்லாமல் இந்த பட்ஜெட் கொண்டு வரப்பட்டிருக்கிறது. ஆளும் கட்சிக்காரர்கள் இதை மணக்கும் மல்லிகையாகச் சொன்னார்கள். ஆனால் இது என்னைப் பொறுத்த வரையில் வெறும் காகிதப் பூவாகத்தான் இருக்கிறது என்பதை நான் முதலிலே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

(பிற்பகல் 12·50)

இந்த நிதி நிலை அறிக்கையில் கல்விக்காக 1986-87 ஆம் ஆண்டிற்கு 551 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. இது கடந்த ஆண்டைவிட 83 கோடி ரூபாய் அதிகமாகத்தான் இருக்கிறது. ஒத்துக் கொள்கிறேன். ஆனால் அரசு சார்பில், புதிதாகக் கல்வி நிறுவனங்கள் அதிகமாக அமைப்பதற்குத் திட்டம் தீட்டியிருக்கிறதா என்று கேட்டால், நிச்சயமாக இல்லவே இல்லை. ஆசிரியர் பணி இடங்கள் ஆயிரக்கணக்கில் தமிழகம் எங்கும் காலியாக இருக்கின்றன. அந்த இடங்களை முழுமையாக நிரப்புவதற்குத் திட்டத்தில் இடம் இருக்கிறதா ? திட்டத்தில் கூறப்பட்டிருக்கிறதா ? நிச்சயமாக இல்லை.

இன்னும் சொல்லப்போனால், பள்ளிக் கட்டிடங்களைக் கட்டுவதற்கு 1 கோடி ரூபாய் மட்டும்தான் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. இந்த 1 கோடி ரூபாயில் 1 மாவட்டத்தில்கூட முழுமையாக பள்ளிகளைக் குறைவின்றி கட்டிமுடிக்க முடியாது என்பதை நான் இங்கே சுட்டிக் காட்ட விரும்புகிறேன். சொல்லப்போனால் என்னுடைய தொகுதியிலேயே 100 ஆண்டுகளுக்கு முன்னால் கட்டப்பட்ட 1 பாடசாலை, காட்டுவளை என்ற பாடசாலை மிகவும் இடிந்த நிலையில், ஆபத்தான நிலையில் இருக்கிறது. இதுபோல எத்தனையோ பாடசாலைகள், குமரி மாவட்டம் எங்கும், வெளிச் சந்தையிலும், சுண்டவற்றிவிளையிலும், மணவளையிலும், சேரமங்கலத்திலும் மற்றும் அநேக பகுதிகளிலும் நூற்றுக்கணக்கான பள்ளிகள் இடிந்து விழுகின்ற நிலையில், கூரை இல்லாத, சுவர் இல்லாத நிலைமையில், மிக மோசமான நிலையில் மாணவர்கள் படிக்க இயலாத நிலையில் இருந்து கொண்டிருக்கின்றன. இந்தப் பள்ளிகளைச் சீரமைப்பதற்குப் புதியகட்டிடம் கட்டுவதற்காக ஒதுக்கியிருக்கிற 1 கோடி ரூபாய் மிகவும் குறைவானது என்பதை சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.





கல்வித் துறையைப் பொறுத்த வரையில், சாதாரணமாக ஒரு பள்ளிக்கான அனுமதியை துறைக்கு நீங்கள் வழங்கி விடு கிறீர்கள். தனியாருக்கு ஒரு பள்ளியை நிறுவுவதற்கு அனுமதியை வழங்கிவிட்டு அந்தப் பள்ளியில் ஆசிரியர்களை நியமனம் செய் வதற்கு அந்தப் பணி இடங்கள் ஒதுக்கீடு செய்யாத காரணத்தால் அந்தப் பள்ளியிலே சம்பளம் பெறாமல் ஆசிரியர்கள் பணிபுரிய நேரிடுகிறது. இன்னும் சொல்லப்போனால், பல்வேறு பள்ளி களில் ஆசிரியர்களை நியமனம் செய்யாத ஒரு நிலைமை இருக்கின்ற காரணத்தாலே பள்ளிகளில் கல்வியின் தரம் குறைந் திருக்கிறது என்பதை நான் சுட்டிக்காட்டி ஒரு பாடசாலைக்கு அனுமதி கொடுக்கப்பட்டால் அந்தப் பாடசாலையில் அனைத்து பணியிடங்களுக்கும் அனுமதி கொடுக்கப்பட வேண்டும் என நான் கேட்டுக் கொள்கிறேன்.

தனியார் பாலிடெக்னிக்குகளைப் பொறுத்தவரையில் அங்கே லாப்கள் இல்லை, கட்டிடங்கள் இல்லை, கருவிகள் இல்லை. இப்படிப்பட்ட போதுமான வசதியில்லாத, பாலிடெக் னிக்குகள், என்ஜினியரிங் கல்லூரிகளுக்கு கொடுக்கப்பட்ட அனு மதியை உடனடியாக ரத்து செய்ய வேண்டுமென்று இந்நேரத்தில் நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

ஆளுநர் உரையில் ஊராட்சி, பேரூராட்சி தேர்தல்களை உரிய காலத்தில் நடத்துவதாக அறிவித்துவிட்டு அதோடு சேர்ந்து கூட்டுறவுச் சங்கங்களுக்கான தேர்தல்களை உடனடியாக நடத்தப் படும் என்று அறிவிக்கப்பட்டது. ஆனால் அதைத் தொடர்ந்து நிதிநிலை அறிக்கையில் கூட்டுறவுத் தேர்தல்களை நடத்துகிற அடையாளமே தெரியவில்லை. ஆகவே, அந்தத் தேர்தலை உடனடியாக நடத்தவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இந்த பட்ஜெட்டில் லார்ஜ் ஸ்கேல் இண்டஸ்டிரிஸ் தொடங்கு வதற்காக எந்தப் புதிய திட்டங்களும் இல்லை என்று அனைவரும் சுட்டிக் காட்டியதை நான் குறிப்பிட விரும்புகிறேன். குறிப்பாக, இங்கே ஆளும் கட்சி உறுப்பினர் மாண்புமிகு திரு. ராசரத்தினம் அவர்கள் ஒன்றைக் குறிப்பிட்டார்கள். குமரி மாவட்டத்தில் அணைக்கட்டுத் திட்டம் மாம்பலத்தூரிலே கட்டப்பட வேண்டு மென்று. அந்தப் பகுதியிலே மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் நேரிலே பார்வையிட்டார்கள். அது உட னடியாகக் கட்டப்படவேண்டுமென்று தெரிவித்தார்கள். அந்த அணைக்கட்டு உடனடியாகக் கட்டப்பட வேண்டும். மேலும், சொல்லப் போனால், குமரி மாவட்டத்தில் தரமான ரப்பர் கிடைக்கிறது. அந்த ரப்பரை அடிப்படையாகக் வைத்துக் கொண்டு மூலதனமாக வைத்து அங்கே பெரிய ரப்பர் தொழிற்சாலை நிறுவ வேண்டுமென்பதை அவர் சொன்னார்.

மாண்புமிகு திரு. பா. சை. மு. யூசுப் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில் மாம்பழத்துறை அணையைக்கட்ட வேண்டும் என்ற கோரிக்கையை வைத்து இருக்கிற மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நான் அந்த திட்டத்தின் இடத்தைப் பார்வையிடுவதற்காக சென்று வந்ததைக் கூட அரசியல் ஆதாயம் கருதி சென்று வந்ததாக கூறினார்கள். இப்போதாவது அந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதற்காகத் தான் நான் அங்கே சென்று பார்வையிட்டேன் என்ற என்னுடைய நல்ல நோக்கத்தை உணர்ந்ததற்காக என் சார்பில் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எஸ். ரெத்தினராஜ் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்த அணைக்கட்டுத் திட்டத்தை இந்த நிதி ஆண்டிலேயே மேற் கொள்ள இருக்கிறார்கள் என்று நம்புகிறேன். அப்படி செய் வார்களானால் நான் என்னுடைய இதய பூர்வமான மகிழ்ச்சியை சமர்ப்பித்துக் கொள்கிறேன்.

அடுத்து, வேலைவாய்ப்பைப் பொறுத்தவரையில் படித்த இளைஞர்களுக்கு வேலை வாய்ப்புக்காக சிறிது அடையாளம்கூட இந்த அறிக்கையில் இல்லை. இங்கே வேலை வாய்ப்பு அலுவலகத் தில் படித்த பட்டதாரி இளைஞர்கள் பதிவு செய்கின்றவர்களின் எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டே வருகிறது என்பதைப் புள்ளி விவரங்கள் காட்டுகின்றன. இந்த நிலையில் வேலை வாய்ப்பு அலுவலகத்தில் படித்தவர்கள் எப்படி அலைக்கழிக்கப் படுகிறார்கள் என்பதற்கு ஒரு உதாரணத்தைச் சொல்ல விரும்பு கிறேன்.

தூத்துக்குடி வேலை வாய்ப்பு அலுவலகத்தில் ஒரு பி.காம். படித்த பட்டதாரி தன்னுடைய பெயரைப் பதிவு செய்து இருந் தார். அந்தப் பட்டதாரி பெயர் சீனிவாசன். அவருடைய பதிவு எண். 8554/84/79. இவர் பனைபொருள் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கத்தில், தூத்துக்குடியில் நேர்முகத் தேர்விற்கு அழைக்கப்பட்டு இருக்கிறார். அவர் சென்று வந்த 2 மாதங்கள் வரை வேலைக்கான உத்திரவு வரும் என்று காத்திருந்து இருக் கிறார். அப்படி உத்திரவு வராத காலத்தில் வேலைவாய்ப்பு அலுவலகத்திற்குச் சென்று அங்கே கேட்டிருக்கிறார். அவர் பெயர் அங்கே பதிவேட்டிலிருந்து நீக்கப்பட்டு இருக்கிறது. ஏன் என் பெயரை நீக்கினீர்கள் என்று காரணம் கேட்டபோது உங்களுக்கு அங்கே வேலை கிடைத்து இருக்கிறது என்று அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். இவர் பனைபொருள் உற்பத்தியாளர் கூட்டுறவுச்சங்கத்தில் போய் கேட்டபோது அங்கே இவருக்கு வேலை கொடுக்கப்பட்டதாகவும், இவர் வேலையில் வந்து சேர வேண்டும் என்று உத்திரவு அனுப்பப்பட்டதாகவும், இவர் வந்து வேலையில் சேராததாகவும் சுட்டிக் காட்டி இவரை அலைக்கழித்து



இருக்கிறார்கள். பின்னால், இவர் இங்கே நான் வேலையில் இல்லை என்பதற்கு ஒரு அடையாளம், அத்தாட்சி கொடுங்கள் என்று அந்த கூட்டுறவுச் சங்கத்தில் கேட்டதற்கு அவர்கள் அவ் வாறு கொடுப்பதற்கு மறுத்திருக்கிறார்கள். இந்த செய்திகள் எல்லாம் தொடர்ச்சியாக ஜூனியர் விகடனில் வந்த பிறகு அவருக்கு மீண்டும் வேலை வாய்ப்பு அலுவலகத்தில் பெயரைப் பதிவு செய்து கொள்வதற்காக ஒரு வாய்ப்பு கிடைத்து இருக் கிறது. இப்படி இன்னும் பல நிகழ்ச்சிகள் நடைபெற்று இருக் கின்றன. இங்கே இருக்கிற சிப்காட்டில் நேர்முகத்தேர்வில் கலந்து கொண்ட ஒருவர் அவருடைய பதிவு எண். ......

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இப்படி எல்லாம் நீங்கள் சொல்வதற்கு முன்னால் அதை அமைச்சரிடம் கொடுத்து அவர்கள் துறையின் மூலம் பதில் வாங்கி இங்கே பதில் சொல்வதற்கு வசதியாக நீங்கள் முதலி லேயே எங்களிடம் காட்டிவிட்டுப்பேச வேண்டும். இப்படி ஏதாவது பதிவு எண் என்று எல்லாம் சொல்லிவிட்டால் அது இன்று மாலை யே பத்திரிகையில் செய்தியாக வந்து விடுகிறது. அதற்கு என்று ஒரு முறையை வைத்து இருக்கிறோம். அதைக் கடுமையாக கடைப்பிடித்தும் வருகிறோம். ஆகவே, இப்படிப் பேசுவதைத் தவிர்க்க வேண்டும். இப்படி முன்னாலே காண்பிக்காமல் பேசு வதால் 4 நாள் கழித்து அவை முன்னவர் அவர்கள் அதற்கு பதில் சொன்னாலும் அது முக்கியத்துவம் இல்லாமல் போய்விடுகிறது.

திரு. எஸ். ரெத்தினராஜ் : இதைப்போல இன்னும் எத்த னையோ இளைஞர்கள் தூத்துக்குடி வேலை வாய்ப்பு அலுவலகத் தில் பெயரைப் பதிவு செய்து கொண்டவர்கள் ஒரு நேர்முகத் தேர்வுக்கு சென்றுவிட்டு வேலை கிடைக்காத நிலையில் அவர்கள் மறுபடியும் பதிவு செய்து கொள்வதற்கு அல்லது வேறு ஒரு இடத் திற்கு தன்னுடைய பெயரை மாற்றம் செய்வதற்கு போகிற போது அங்கே உங்கள் பெயர் பதிவு ஏட்டில் இல்லை என்று சொல்லுகிற நிலைமை இருக்கிறது. இப்படிப்பட்ட நிலைமையில் படித்தவர் கள் வேலை வாய்ப்பு இல்லாதவர்கள் ஏமாற்றத்திற்கு ஆளா கிறார்கள் என்பதைச் சுட்டிக் காட்டவே இதைச் சொன்னேனே தவிர வேறு ஒன்றுக்கும் இதை சொல்லவில்லை. குறை சொல் வதற்காக நான் இதை சொல்லவில்லை. திருத்திக் கொள்ள வேண்டும் என்பதற்காகத்தான் சுட்டிக் காட்டுகிறேனே தவிர, வேறு அல்ல. அதேபோல் வேலை வாய்ப்பை அதிகமாக்கிக் கொடுக்கவேண்டும் என்று ஆசைப்படுகிற நான் மற்றும் ஒன்றையும் சொல்ல விரும்புகிறேன்.

1983 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் தமிழ்நாடு பப்ளிக் சர்வீஸ் கமிஷன் மூலம் குரூப் 3-க்கு வேலைக்கு ஆள் சேர்க்க விளம்பரம் செய்யப்பட்டது. 1984 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 17 ஆம் தேதி எழுத்துத் தேர்வு நடைபெற்றது. 1985 ஆம் ஆண்டு

[திரு எஸ். ரெத்தினராஜ்] [1986 மார்ச் 24

ஏப்ரல் மாதம் நேர்முகத் தேர்வு நடைபெற்றது. இதுவரையில் நியமனம் செய்யப்படவில்லை. 1983 ஆம் ஆண்டு விளம்பரம் செய்யப்பட்டு இன்றைக்கு 1986-87 ஆம் ஆண்டு வரை நியமனம் நடைபெறாமல் இருக்கிறது. இந்த நான்கு ஆண்டுக்காலத் தடை ஏன் என்று கேட்க விரும்புகிறேன்

(பிற்பகல் 1–00)

இந்த பட்ஜெட்டில் 10 பொருட்களுக்கு வரி விலக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. பெருமகிழ்ச்சி. ஆனால் அதே நேரத்தில் விவசாயிகளுக்கு உரமாகவும் பூச்சிமருந்தாகவும் இருக்கின்ற வேப்பம் பிண்ணாக்குக்கு வரி விலக்கு அளிக்கப்படாதது மிகவும் வருந்தத் தக்கது. இந்த வரி விதிப்பைப் பொறுத்தவரையில் அரசிடம் விளக்கம் ஒன்றைக் கேட்க விரும்புகிறேன்.

பற்பசை, சோப்பு, டால்கம் பவுடர் ஆகிய பொருட்களின் மீது மேக்சிமம் ரீடெய்ல் பிரைஸ் பிளஸ் லோகல் டாக்சஸ் எட்செட்டிரா என்று எழுதப்பட்டிருக்கிறது. இந்த லோகல் டாக்சை யார் வசூல் செய்கிறார்கள். எந்த விகிதத்தில் வசூல் செய்யப்படுகிறது என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

அதே நேரத்தில், ஒரு ஊரில் அதுவும் 100 மீட்டர் தூரத்தில் இருக்கிற மூன்று கடைகளில், சூப்பர் மார்க்கெட், கூட்டுறவு அங்காடி, சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன், தனியார் கடைகளில் விலையில் எப்படி வித்தியாசம் இருக்கிறது என்பதற்காக ஒரு உதாரணத்தைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

100 கிராம் பற்பசைக்கு ரூ. 12.40 ப்ளஸ் லோகல் டாக்ஸ் என்பதாகப் போடப்பட்டிருக்கிறது. கூட்டுறவு அங்காடியில் ரூ. 13.20-க்கு விற்கப்படுகிறது. சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷனில் ரூ. 12.90-க்கு விற்கப்படுகிறது. தனியார் கடையில் ரூ. 13.40-க்கு விற்கப்படுகிறது. இன்றைக்கு ரூ. 12 விலையிலுள்ள ஒரு பொருளுக்கு சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் லோக்கல் டாக்சாகப் போடுகிறது. அதே நேரத்தில் 70 பைசாவாக கூட்டுறவுக் கடைகளில் வரியாகப் போடுகிறார்கள். தனியார் கடைகளில் கிட்டத்தட்ட ரூ. 1 வரியாகப் போடுகிறார்கள். இவ்வாறாக வரிவிதிப்பானது கடைக்குக் கடை வேறுபடுகிற அளவிற்கு, கூட்டுறவுக் கடைகளில் ஒரு வரி, சிவில் சப்ளை கார்ப்பரேஷனில் தனி வரி. இப்படிப்பட்ட நிலைமைகள் தொடரக் கூடாது. இந்த நிலைமைகள் தவிர்க்கப்படுவதற்கு



1986 மார்ச் 24] [திரு. எஸ். ரெத்தினராஜ்]

என்னென்ன வழிவகைகளைச் செய்திருக்கிறீர்கள் என்று நம்முடைய நிதியமைச்சர் அவர்கள் விளக்கம் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, மின்சாரத்தைப் பொறுத்தவரையில், ரூ. 395 கோடி ஒதுக்கப்பட்டிருக்கிறது. மகிழ்ச்சி. இன்னும் எத்தனையோ இடங்களில் மின் இணைப்புகள் கொடுக்கப்படாமல் இருக்கின்றன. வங்கிகளில் கடன் வாங்கி மோட்டார்கள் இணைக்கப்பட்டபின்பும், விவசாயிகளுக்கு இணைப்புகள் கொடுக்கப்படாத நிலையிருக்கிறது. தொழிற்சாலைகள் ஆரம்பிக்கப்பட்டு, மின் இணைப்புகள் கொடுக்கப்படாமல், எவ்வளவோ தொல்லைகளுக்கு ஆளாகியிருக்கிறார்கள். கடனைத் திருப்பிக் கட்ட முடியாமல், பரிதவிக்கின்ற இந்த நிலையை உணர்ந்து அவர்களுக்கு உடனடியாக மின் இணைப்பைக் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, புதிய சாலைகளின் அமைப்புக்காக ரூ. 3.05 கோடி ஒதுக்கப்பட்டிருக்கிறது. இது போதுமானதல்ல. நம்முடைய பட்ஜெட் புத்தகத்திலே நம்முடைய நிதியமைச்சர் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். எல்லா சாலைகளும் நல்ல முறையில் பழுதுபார்க்கப்பட்டு தமிழ்நாட்டில் இருந்து வருகிறது என்று சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். அவர்களுக்குச் சொல்வேன், இங்கே இருக்கிற சாலைகள் அத்தனையும் பழுது பார்க்கப்படாது கிடக்கின்ற காரணத்தால், அதிலே ஓடுகின்ற அனைத்துப் பேருந்துகளின் மெயின்டனன்ஸ் காஸ்ட்டும் அதிகமாகிறது. எனவே பழுதுபார்க்கப்படுவதற்கு இந்த ரூ. 3.05 கோடி போதுமானதல்ல.

மணவாளக்குறிச்சியில் மூன்று ஆண்டுகளுக்கு முன்னால் ஒரு பாலம் கட்டுவதற்காக கல் போடப்பட்டது. ஆனால் இதுநாள் வரையிலும் அந்தப் பாலம் கட்டப்படவில்லை. எனவே மண்டைக்காடு பெருவிழா போன்றவற்றிற்கு செல்லமுடியவில்லை. கல்லூரிக்கு வர வேண்டிய மாணவர்கள் பல மைல்களுக்குச் சுற்றி வர வேண்டிய நிலைமை இருக்கிறது. அந்த நிலைமையைப் போக்க நிதி ஒதுக்கீடு வேண்டாமா? அந்தப் பாலம் கட்டப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டாமா?

சைமன் காலனி, மணக்குடி மீனவர் கிராமங்கள் அவைகளை இணைக்கின்ற போக்குவரத்துப் பாலம் துண்டிக்கப்பட்டிருக்கிறது. மீனவர்கள், ஏழை எளியவர்கள், பொருளாதார வளர்ச்சித் தேங்கிக் கிடக்கிறது, தடைபட்டுக் கிடக்கிறது என்பதை சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

[திரு எஸ். ரெத்தினராஜ்] [1986 மார்ச் 24

இன்னும் ஒன்றை மீண்டும் வலியுறுத்திக் கூறவிரும்புகிறேன். குமரி மாவட்டம், வறட்சியால் பிற்படுத்தப்பட்டிருக்கிறது. இந்த மாவட்டம் தென் மேற்குப் பருவக்காற்று மழையையும், வடகிழக்குப் பருவ மழையையும் பெற்று வந்தது. இவ்விரண்டு பருவ மழையும் பொய்த்துவிட்டதன் காரணத்தால் மடைகளில் தண்ணீர் இல்லை. கடற்கரைப் பகுதியிலே இருக்கிற குழாய் கிணறுகளில் இருக்கிற தண்ணீர் என்றைக்குமே உப்பு நீராக மாறிவந்திருக்கிறது.

தெங்கம்புதூருக்குத் தெற்கே புத்தளம், மாலையணிந்தான் குடியிருப்பு, சௌமியாபுரம், தேரிவிளை, உசரவிளை, இலந்தவிளை பணிக்கன் குடியிருப்பு, மணவாளபுரம், கிருஷ்ணன்புதூர் இன்னும் ஏராளமான கிராமங்களில், குழாய்க் கிணறுகளானாலும் சரி, குடிநீர்க் கிணறுகளானாலும் சரி, உப்பு நீராக மாறிவந்திருக்கிறது, அந்தப் பகுதியிலுள்ள கிராம மக்கள் நகரத்திற்கு இடம் விட்டு இடம் ஓடுகின்ற ஒரு நிலைமை ஏற்பட்டிருக்கிறது.

அந்தத் தண்ணீரை விவசாயத்திற்குப் பயன்படுத்தினால் தென்னை மரங்கள் பட்டுப்போகிற நிலை இருப்பதால் உடனடியாக அதைச் செய்ய நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொண்டு அதற்காக மாற்றுத் திட்டத்தைக் கொண்டு வந்து அணைக்கட்டிலிருந்து நேர்முகமாகவே பாசனத்திற்கு நீரைப் பயன்படுத்துகிற முறையிலே நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். ஏரிகளையும் குளங்களையும் அமைப்பதோடு ஏற்கனவே இருக்கிற குளங்களைத் தூர் எடுக்கவேண்டும். பாசனத் திட்டங்களை விரிவுபடுத்த வேண்டும்.

சில திட்டங்களுக்கு கல் போடப்படுகிறது. கல் போட்ட பிறகு நிறைவேற்றப்படுகிறதா என்றால் இல்லை, பல திட்டங்கள் கல் போட்டும் நிறைவேற்றப்படாமல் இருக்கின்றன. 1978 ஆம் ஆண்டு மதுசூதனபுரம் என்ற இடத்திலே ஒரு கிராம அலுவலகம் கட்டுவதற்கு நிதியமைச்சர் அவர்களால் கல் போடப்பட்டது. கல் கல்லாகவே இருக்கிறது. அது கல்லெடுகாதையாக முடிந்துவிடாமல் கட்டடத்தைக் கட்டவேண்டும். அதற்காக நிதி ஒதுக்கவேண்டும். இந்த நிதி நிலை அறிக்கையில் அரசு குமரி மாவட்டத்தைப் புறக்கணித்து இருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. ராசரத்தினம் அவர்கள் ஒன்றைச் சொன்னார்கள். லட்சுமிபுரத்திலே கலைக் கல்லூரி அரசுடைமையாக்கப் பட்டும் இன்னும் கட்டடங்கள் இல்லை. முன்பு நிர்வாகத்திலே சீர்கேடு இருந்ததன் காரணமாக அரசு அதைத் தன்னகப்படுத்தியது. அப்படி எடுத்தும் கூட இன்றுவரை அதற்குக் கட்டடம் கட்டப்படவில்லை, வெள்ளையடிக்கப்படவில்லை, மெயின்டெனன்ஸ்



1986 மார்ச் 24] [திரு. எஸ். ரெத்தினராஜ்]

இல்லை, இன்றைக்கு அது இடிந்து விழக்கூடிய அபாயகரமான நிலைமை இருக்கிறது. ஆகவே அந்தக் கல்லூரியை . . . . . . (மணியடிக்கப்பெற்றது).

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : ஒவ்வொருவருக்கும் 10 நிமிடங்கள்தான் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அதற்குள் முடித்துவிட வேண்டும். ஒவ்வொருவரும் ஒரு நிமிடம், ஒரு நிமிடம் என்று அதிகமாகப் பேசினால் மற்ற உறுப்பினர்கள் குறை சொல்வார்கள். மானியங்கள் வரும் போது பேசிக் கொள்ளலாம். அமருங்கள்.

*திரு. ஆர். எஸ். ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நிதியமைச்சர் மாண்புமிகு நாவலர் அவர்கள் நல்ல தமிழிலே சாமர்த்தியமாக நிதிநிலை அறிக்கையைத் தயார் செய்து உரை நிகழ்த்தினார்கள். நான் ஒன்றை ஞாபகப்படுத்த விரும்புகிறேன். 1952, 1957, 1962 ஆகிய ஆண்டுகளிலே ஆண்டு வருமானம் குறைவாக இருந்த போதிலும் அந்தக் காலத்திலே தமிழக அரசினர் பெரிய மின்சாரத் திட்டங்களையும் நீர்த் தேக்கத் திட்டங்களையும் ஏற்படுத்தினார்கள். ஆனால் இப்போது ஆண்டு வருமானம் 3,300 கோடி ரூபாய் ஆக இருந்தும்கூட பெரிய திட்டங்கள் எதுவும் எனக்குத் தென்படவில்லையே என்பதை நான் ஞாபகப் படுத்த விரும்புகிறேன்.

நான் பெரிய பொருளாதார நிபுணன் அல்ல. அனுபவ ரீதியாக சில இடங்களிலே என்ன நடக்கிறது என்பதையும் என்ன முன்னேற்றம் நடந்திருக்கிறது என்பதையும் சொல்லலாம் என்று எண்ணுகிறேன்.

குடிநீர்ப் பிரச்சினை மிக முக்கியமானது. கிராமங்களிலே பல இடங்களில் குடிப்பதற்குத் தண்ணீர் கிடையாது. அதைத் தீர்ப்பதற்குத் திட்டம் வகுத்திருக்கிறீர்களா ? இந்த ஆண்டு கிராமக் குடிநீர்த் திட்டத்திற்கு 30 கோடியும் இன்னொரு 15 கோடியும் ஆக மொத்தம் 45 கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கிறீர்கள். இந்த 45 கோடி ரூபாயை வைத்து எப்படி சமாளிக்கப் போகிறீர்கள் என்று கேட்க ஆசைப்படுகிறேன்.

உதாரணத்திற்கு என்னுடைய ஓட்டப்பிடாரம் தொகுதியை எடுத்துக் கொண்டால் அந்தப் பகுதியிலே பூமிக்கு அடியிலே உப்புத் தண்ணீர் தான். அந்தத் தண்ணீரைக் கொண்டு குடிநீர் கொடுக்கமுடியாது.

அவசரப்பிரகடனம் இருந்த காலத்திலே, அப்பொழுது இருந்த கவர்னர் பத்து கிராமங்களுக்குப் பாதுகாக்கப்பட்ட குடிதண்ணீர் கொடுத்ததைத் தவிர, இப்பொழுது இருக்கக்கூடிய மக்கள் குளத்திலே வருகின்ற நீரையும், உவர்தண்ணீரையும் அருந்திக் கொண்டிருக்கிறார்கள். திருநெல்வேலி தாமிரபரணியிலிருந்து கோவில்பட்டி, சாத்தூருக்குத் கயத்தார் வழியாக, பெரிய குழாய் மூலம் தண்ணீர் செல்கிறது. நான் கேட்கிறேன், எங்கள் தொகுதி மக்கள் மனிதர்கள் இல்லையா ? 100-க்கு 80 சதவீதம் தாழ்த்தப்பட்டவர்களாகவும், பிற்பட்ட மக்களாக வும் குடியிருக்கிறார்கள். அவர்கள் உப்புத் தண்ணீரை அருந்த வேண்டுமென்று அவர்கள் தலையில் ஆண்டவன் உலக்கையால் எழுதி வைத்திருக்கிறானா ? அந்தக் காலத்திலேதான் பெரிய திட்டங்களைப் போட்டுக்கொண்டிருக்கிறோம் என்று சாக்குச் சொன்னார்கள். இந்தக் காலத்திலேயாவது தாழ்த்தப்பட்ட மக்கள், பிற்படுத்தப்பட்ட மக்கள் இருக்கின்ற அந்த இடத்தைக் கவனிக்கக்கூடாதா ? உள்ளூரில் பிறந்த மாடுகள்தான் அந்தத் தண்ணீரைக் குடிக்கப் பழகியிருகின்றனவே தவிர, புதிதாக வரும் மாடுகள் பத்து நாட்களுக்கு அந்தத் தண்ணீரைக் குடிக்கத் தயங்கு கிறது. அப்படிப்பட்ட தண்ணீரை அந்த மக்கள் அருந்திக்கொண் டிருக்கிறார்கள்.

(பிற்பகல் 1-10)

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சரவர்களிடத்திலே கேட்டேன். கயத்தாறில் இருந்து செல்கின்ற அந்தக் குழாயி லிருந்து குழாய் வைத்து குடிநீர் கொடுப்பதாக வாக்குறுதி அளித்தார்கள். ஆனால் அது இன்னும் முடித்துக்கொடுக்கப்பட வில்லை. தூத்துக்குடிக்குப் போகின்ற ரோடு ஓரத்தில், புதூர் பாண்டியாபுரம் என்ற ஊர் இருக்கிறது. நிதியமைச்சர் அவர்கள் அந்தப் பாதையின் வழியாகச் சென்றால் உற்றுப் பாருங்கள். ஒரு குட்டையிலே நீர் கிடக்கும். அந்தத் தண்ணீரை அந்த மக்கள் எடுத்துக் கோரி குடத்திலே விடுவார்கள். அந்தத் தண்ணீரை மற்றவர்கள் உபயோகம் செய்யவே மாட்டார்கள். அதைத்தான் அவர்கள் வடிகட்டிக் குடிக்கிறார்கள். இந்த அவல நிலைமை நாட்டிலே இருப்பது நியாயமா? தர்மமா ? 1985 ஆம் ஆண்டு ஆளுநர் உரையின்மீது பேசுகின்றபொழுது சொன்னேன். இதுபோன்ற ஒரு காரியத்தைக்கூட செய்யவில்லை. இதுதான் நடந்த ஒரு வருஷ சாதனையா ? ஒரு வருஷம் பின்னோக்கிப் பார்க்கிறபொழுது பெருமைப்பட என்ன இருக்கிறது என்பதைப் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.





அதிருஷ்டவசமாக நாவலர் அவர்கள் 1962 ஆம் ஆண்டு எதிர்க்கட்சித் தலைவராக இருந்தவர்கள். அவர்களோடு நான் பல இடங்களுக்குச் சுற்றுப்பயணம் செய்திருக்கிறேன். ஏழை களைப்பற்றி அவர்கள் நன்கு புரிந்தவர்கள். தண்ணீருக்கு மாற்று வழி என்ன? தாமிரபரணித் தண்ணீரைக் குழாய்மூலம் கொண்டு வருகின்ற திட்டத்தை வகுப்பதைத் தவிர வேறு வழியில்லை. நிதியமைச்சரவர்களே, நீங்கள்தான் இந்த வழியை வகுக்க வேண்டும். தாமிரபரணி தண்ணீரைக் கொடுப்பதற்கு வழி வகுத்துத் தாருங்கள் என்று, மக்களைக் காப்பாற்றுங்கள் என்று ஏழை மக்களின் சார்பாகப் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

சாலைகளைப்பற்றிக் குறிப்பிட்டார்கள். சாலைகள் நன்கு அமைக்கப்பட்டு, பராமாரிக்கப்பட்டு வருகின்றன என்று சொல்லி இருக்கிறார்கள். ஒருவேளை தேசீய நெடுஞ்சாலைகளைப்பற்றி குறிப்பிடுகிறார்களோ என்று நான் கருதுகிறேன். தமிழக நெடுஞ் சாலைகள் எங்கே பராமரிக்கப்பட்டிருக்கின்றன ? இது குறித்து நான் வருந்துகிறேன். நான் சொல்வதற்கு மன்னிக்க வேண்டும். சாலைகள் நன்கு பராமரிக்கப்பட்டு வருகின்றனவா ? எங்கள் பகுதியிலே திருநெல்வேலியிலேயிருந்து சீவலப்பேரி, ஓட்டப் பிடாரம், குறுக்குச்சாலை ரோடு, புளியம்பட்டி—கடம்பூர் ரோடு, எப்பொதும் வென்றான், கழுகுமலை ரோடு கடம்பூர், கயத்தார் ரோடு இன்னும் சில சாலைகள் இருக்கின்றன. இந்த ரோடு கள் தமிழ்நாடு நெடுஞ்சாலைத் துறையின் கீழ் உள்ளவை. அந்தச் சாலைகளை ஒரு நாளைக்குப் போய் பாருங்களேன். அவைகள் பாரமரிக்கப்பட்டு வருகின்றனவா என்பதை நீங்களே ஒப்புக்கொள்வீர்கள். நீங்கள் பார்ப்பது மட்டுமல்ல, அங்கே யுள்ள அதிகாரிகளையே கேளுங்களேன். அவர்களே சொல் வார்கள் அவைகள் பராமரிக்கப்படவில்லை என்று. அவர் களைக் கேட்டால் பணம் இல்லை என்று சொல்வார்கள். இப் பொழுது 3 கோடியே 5 இலட்சம் ரூபாய் ஒதுக்கியிருக்கிறீர்கள். அவைகளைக்கொண்டு எங்கே பாரமரிக்கப் போகிறீர்கள்? நிதி யமைச்சரவர்களே, அந்த நிதியைச் சிறிது அதிகப்படுத்துங்கள், அப்படி ஒதுக்கி இப்படிப்பட்ட பகுதிகளுக்காக அதிகமாகச் செலவு செய்யுங்கள், ஓரளவுக்கு நல்ல முறையிலே அந்த ரோடு கள் இருக்கட்டும். அப்படி இருந்தால் அவைகள் உங்கள் காலத் திலே பெருமை அடையும் என்று பணிவோடு தெரிவித்துக்கொள் கிறேன்.

பேருந்துகள் போக்குவரத்தில், ஓட்டப்பிடாரம் மட்டும், விலக்கப்பட்ட, ஒதுக்கப்பட்ட, புறக்கணிக்கப்பட்ட தொகுதி யாக இருக்க வேண்டுமா ? கடந்த ஓராண்டுக் காலத்தில் நாங்கள் கேட்ட ஒரு பேருந்தாவது விட்டிருக்கக் கூடாதா ? கெஞ்சி கேட்டேன், எழுதிக் கொடுத்தேன், போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களே, ஒரு பேருந்து விடுங்கள், என்று. ஆனால், பக்கத்து தொகுதியிலே பேருந்துகள் ஓடுகின்றன. இதற்கு

என்ன வந்துவிட்டது ? என் தொகுதியிலுள்ள ஓட்டப்பிடாரத்தில் ஓடினால் சக்கரம் கழன்று ஓடிவிடுமா? என்ன வந்துவிட்டது? நானும் தோழமை கட்சிக்காரன் தானே ? நானும் தேர்தலில் புகழ் பாடியவன் தானே ? என்ன தவறு செய்தார்கள் அந்த மக்கள் ? அந்த நெல்லை மாவட்டத்திலே, அதிக ஓட்டு வித்தியாசம் பெற்ற இடம்தானே அது. ஒரு பேருந்தைக் கூட நாங்கள் கேட்டு அவர்கள் விடவில்லை.

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1952, 1957, 1962 ஆண்டுகளில் வருமானம் அரசுக்கு மிகவும் குறைவாக இருந்த நேரத்தில், மிகப் பெரிய அரிய சாதனைகளை எல்லாம் புரிந்த அந்தக் காலத்தில், இதே ஓட்டப்பிடாரம், இதைவிட இன்னும் மோசமாக இருந்ததே? அன்று அந்த ஓட்டப்பிடாரத்திற்குப் பரிகாரம் காணவில்லையே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அறிவார்களா ? அன்று ஏன் கிடைக்கவில்லை, இன்று கிடைப்பதற்கான முயற்சிகளில் அரசு ஈடுபட்டிருக்கிறதே, அதைப் பாராட்டிவிட்டு, கூடுதலாக வேண்டுமென்ற கோரிக்கைகளை அவர்கள் வைப்பார்களா என்று அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

திரு. ஆர். எஸ். ஆறுமுகம்: கடந்த ஆண்டிலிருந்து பக்கத்து ஊர்களில் எல்லாம் பேருந்துகள் ஓடுகின்றனவே, தாழ்த்தப்பட்ட, பிற்பட்ட மக்கள் வாழ்கின்ற இந்த இடத்திலே பேருந்து ஓடினால், சக்கரம் கழன்று விடுமா, ஓடிவிடுமா, என்ற ஒரு கேள்வியைக் கேட்டு, ஒரு பேருந்து விடக் கூடாதா என்று கேட்டதற்குப் பதில் இதுதானா ? அந்தக் காலத்திலே மின்சாரத் திட்டங்கள் போடவில்லையா, நீர்த் தேக்கங்கள் கட்டவில்லையா என்பதைப் பற்றி நான் பேசவில்லையா ? அதே நேரத்திலே, பக்கத்து தொகுதியிலே பேருந்துகள் ஓடுகின்றனவே, இங்கே ஒரு பேருந்தாவது விடக் கூடாதா என்று கேட்கிறேன். நான் உங்கள் தோழமைக் கட்சிக்காரன் அல்லவா என்று கேட்கிறேன். மாண்புமிகு நாவலர் அவர்கள் இருக்கிறார்கள், பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன். நான் 10 பேருந்துகள் விட வேண்டுமென்று கொடுத்தேன், 5-வது வரும் என்று நினைத்தேன். அந்த வகையிலே ஆணை வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஏதாவது விடுவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அங்கே K நைனாபுரம் என்ற அரிசன கிராமம் இருக்கிறது இன்னும் பல கிராமங்கள் இருக்கின்றன. ஒரு பேருந்து விட்டிருக்கிறார்கள். ரெயில்வே கேட்டுக்காக 6 பர்லாங் தூரம் ஒருபுறம் நின்று கொண்டிருக்க வேண்டிய நிலையிருந்தது. அந்த ரெயில்வே கேட்டுக்கு ஆள் இல்லை. அதனால், அந்தப் பெருந்து வர வழியில்லை. ரெயில்வே ஆட்களைக் கேட்டால், இப்பொழுது ரூ. 2:5 இலட்சம் பணம் கட்ட வேண்டுமென்ற





தெரிவிக்கிறார்கள். மேம்பாலம் கட்டுவதற்காகக் கோடிக் கணக்காக ரூபாய்களை செலவழிக்கிற அரசைக் கேட்டுக் கொள்கிறேன். அந்த பேப்பர்ஸ் இங்கே வந்திருக்கிறது. அதற்கு நீங்கள் ஒரு முடிவு எடுத்து, அந்தப் பணத்தை கட்டி, அந்த ரெயில்வே கேட்டுக்கு முதலில் ஒரு ஆள் போடுவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். அப்படி 3 இடங்கள் இருக்கின்றன. அங்கெல்லாம் ஆள் போடுவதற்கு ஏற்பாடு செய்யுங்கள். ஏழைகளுக்குப் பேருந்துகள் வேண்டும். அவர்களுக்கு உதவி செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

ஒரு சிறிய வேண்டுகோள், இரு சக்கர வண்டிகளில் செல்பவர்கள் ஹெல்மெட் அணிய வேண்டுமென்று சொல்கிறார்கள், நல்லதுதான். நாடு முழுவதற்கும் அந்த உத்தரவு இருக்கிறது. இந்த வெயில் காலத்திலே, அதை அணிவதால் என்னவோ வியாதி வருகின்றது என்று மருத்துவர்கள் சொல்கிறார்களாம். அதைக் கொஞ்சம் பரிசீலனை செய்யுங்கள். நான் பிடிவாதமாகச் சொல்லவில்லை, பரிசீலனை செய்யுங்கள் என்பதை மாத்திரம் தெரிவித்துக் கொள்கிறேன்.

பெரிய பாசன வசதிகள் எல்லாம் செய்ய முடியவில்லை, நம்முடைய பாசன அமைச்சர் அவர்களை நான் குறை சொல்லவில்லை. சிறு பாசன வசதியாவது செய்யக் கூடாதா ? கடந்த ஆளுநர் உரையிலே, பாசன வசதிபற்றிப் பேசினேனே, எழுதிக் கொடுத்தேனே, அதில் ஏதாவது ஒரு காரியத்தைச் செய்திருக்கிறீர்களா ? செய்யவில்லையே.

என் தொகுதியிலே கொம்பாடி என்ற ஒரு கிராமத்திலே அணையைக் கட்டிவிட்டால் பல குளங்கள்—புதியமுத்தூர், முப்பிலிப்பட்டி, ஓட்டப்பிடாரம், மற்றும் அதை அடுத்து, பல பெரும் குளங்கள் எல்லாம் பயன் பெறுமே, மூன்று போகம் விளையுமே, செந்நெல் விளையுமே, மக்கள் செழிப்பாக இருப்பார்களே, என்று சொன்னேன். ஒரு அதிகாரியாவது, பார்த்து, நல்ல பெயர் வாங்கியிருக்கக்கூடாதா ? இளவேலங்கால் என்ற ஒரு கிராமம் இருக்கிறது. வீணாகத் தண்ணீர் எல்லாம் கடலிலே போய்விழுகின்றது. அதே போல், தடுப்புச் சுவர் கட்டினால் பல குளங்களில் தண்ணீர் பெருகும், மக்கள் வாழ்வார்கள், நெல் விளையும் என்று சொன்னேன். ஒரு அதிகாரியாவது போகக் கூடாதா? பார்த்து பரிசீலிக்கக் கூடாதா ? ஒரு வருஷம் ஆகிறதே, இதுதான் இந்த அரசின் சாதனையா என்று மிகப்பணிவோடு கேட்கிறேன்.

இப்போது பெரிய திட்டங்களுக்கு வழியில்லை. சிறிய திட்டங்களைக் கிராமங்கள்தோறும் போடலாம். குளங்களை தூர் எடுங்கள். அதற்கு இப்போது திட்டம் இல்லை. எல்லாக் குளங்களுக்கும் மண் எடுத்து ஆழப்படுத்தத் திட்டம் போடக்கூடாதா ? முன்னால்தான் போடவில்லை. இப்போது நீங்கள் போடக்கூடாதா ? இதைச் செய்ய வேண்டுமென்று நான் மட்டும் சொல்லவில்லை ; எல்லாக் கிராமங்களில் உள்ளவர்களும் சொல்கிறார்கள். குளங்களை ஆழப்படுத்தினால் தண்ணீர் பெருகும்.

(பிற்பகல் 1–20)

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப்: துணைத்தலைவர் அவர்களே, திருநெல்வேலி மாவட்டத்தைச் சேர்ந்திருக்கிற ஒரு பெரிய அரசியல்வாதி என்பதினாலே மாண்புமிகு உறுப்பினர் மீது எனக்குத் தனி மரியாதை உண்டு. அதனால் நான் விளக்கம் தருவதற்காகக் குறுக்கிடுகிறேன். தமிழ்நாட்டிலே இருக்கக் கூடிய குளங்களை எல்லாம் தூர் எடுக்க வேண்டுமென்று சொன்னார்கள். ஏற்கனவே இருக்கிற ஒரு குளம் சரியாக இருக்கிறது என்றால், அதற்கு உரிய ஆயக்கட்டு நிலங்கள் இருக்கின்றன என்றால், ஒரு ஏரிக்கு ஆயிரம் ஏக்கர் பாசன வசதி இருக்கிறது என்றால், அந்த ஆயிரம் ஏக்கர் நிலத்திலும் பயிர்த் தொழில் நடைபெறுகிறது, உணவு உற்பத்தி நடைபெறுகிறது என்றால் அந்த ஏரியின் பயனை அந்தப் பகுதி மக்கள் முழுக்க முழுக்க பெற்றுவருகிறார்கள் என்று பொருள். ஆயக்கட்டுதாரர்கள் இப்படி பயனடைந்துவரும்போது மேற்கொண்டும் அந்த ஏரியைத் தோண்டி, ஆழப்படுத்த அரசாங்கம் செலவு செய்ய வேண்டிய அவசியம் இல்லை என்ற முடிவினை தமிழக அரசு மட்டும் அல்ல ; காங்கிரஸ் பேரியக்கம்— மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சார்ந்திருக்கிற கட்சி— ஆளுகின்ற மற்ற மாநிலங்களிலும் இதே முடிவினை எடுத்திருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஆர். எஸ். ஆறுமுகம்: துணைத்தலைவர் அவர்களே, அவர்கள் செய்யாவிட்டாலும் நீங்கள் செய்யக்கூடாதா ? எல்லாக் குளங்களுமே இப்போது தூர்ந்துபோய்விட்டன, தூர் எடுங்கள், கரையைப் பலப்படுத்துங்கள். குளங்கள் எல்லாம் தூர்ந்து போயிருக்கிற காரணத்தால் பெய்கின்ற மழை நீர் எல்லாம் வீணாகக் கடலுக்குப் போகிறது. ஒரு மாதம் கூட தண்ணீர் தேங்கிநிற்க வழியில்லை. இந்த மாதம் மழை பெய்தால் அடுத்த மாதம் தண்ணீர் இல்லாமல் பயிர் வாடுகிறது. நீர்ப்பாசனம் பெறுகிற மற்ற குளங்களைப் பற்றி நான் சொல்லவில்லை. நீர்ப்பாசனம் இல்லாமல், மழையினாலே மட்டும் தண்ணீரைப் பெறக்கூடிய குளங்களைச் சொல்கிறேன்.





ஒட்டப்பிடாரம் தொகுதி முழுவதும் அப்படிப்பட்ட குளங்கள் ஏராளமாக இருக்கின்றன. அந்தக் குளங்களை எல்லாம் தூர் வாரி, ஆழப்படுத்தினால் தண்ணீர் பெருகும். தூர் வாருங்கள் என்று சொன்னால் ஒரு அதிகாரி மண்ணை எங்கே போடுவது என்று கேட்கிறார். மண்ணை அந்தக் கரையிலே போடக்கூடாதா ? கரை 5 அடி அகலம் இருக்கிறது என்றால் அதை 10 அடி அகலமாக்கக்கூடாதா ? 10 அடி உயரம் இருந்தால் அதை 20 அடி உயரமாக ஆக்கக்கூடாதா ? அப்படிச் செய்தால் அது ஒரு பெரிய சாலையாகும். அங்கே மரங்கள் வளர்த்தால் சோலையாகும். சாலையிலே கார், வண்டி போகும். ஆயிரக்கணக்கான மக்கள் அந்த வழியாகப் போக வாய்ப்பு ஏற்படும். தண்ணீர் வீணாகப் போகாது. பக்கத்திலே இருக்கிற கிணறுகளுக்கு தண்ணீர் கிடைக்கும். கிணறுகளில் நல்ல ஊற்று இருக்கும். அந்தக் குளங்களிலே தண்ணீர் பெருகினால் வறட்சி இருக்காது, நாடு செழிக்கும். இதற்கு பெரிய விஞ்ஞானம் தெரிய வேண்டாம். இது எங்கள் கிராம மக்கள் தெரிந்து வைத்திருக்கிற விஞ்ஞானம். பெரிய பெரிய திட்டங்களைப் போடுங்கள் என்று நான் சொல்லவில்லை. குடிநீர் பிரச்சினையை தீர்ப்பதற்கு இப்படிப்பட்ட சிறிய திட்டங்களை தாராளமாகப் போடுங்கள். இருக்கிற குளங்களைத் தூர் எடுத்து, புதிய குளங்களையும் அமைத்தால் தண்ணீர் வீணாகாது, வறட்சி நீங்கும். ஆகவே, இதைச் செய்யுங்கள் செய்யுங்கள் என்று மிகப்பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன். இதற்கு மத்திய அரசு அனுமதி ஒன்றும் தேவையில்லை ; நீங்களே செய்துவிடலாம்.

அடுத்த பிரச்சினை கல்வி. ஆளுநர் உரையிலே ஊரெல்லாம் பள்ளிக்கூடம் திறக்கப்படும், பள்ளிக்கட்டிடம் கட்டப்படும் என்று சொன்னார்கள். நானும் அதுபற்றி பாராட்டி பேசினேன். தினமலர் பத்திரிகையில் நான் பேசியதை பெரிய எழுத்தில், கொட்டை எழுத்தில் போட்டார்கள். பள்ளிக்கூடம் கட்டப்படும் எனச் சொல்லப்பட்டது. நான் என்னுடைய தொகுதி முழுவதையும் சுற்றிப்பார்த்தேன். ஆளுநர் உரையில் கூறப்பட்டது போல பள்ளிக்கட்டிடங்கள் கட்டப்படவில்லை. ஒரு கவர்னர் இப்படிப்பட்ட காரியத்தைச் சொல்லலாமா ? அவர் வாயால் சொன்னால் அந்தக் காரியம் நிறைவேற்றப்பட வேண்டாமா ? அப்படி நிறைவேற்றப்படவில்லை என்றால் கவர்னர் தவறு செய்து விட்டார் என்று அர்த்தம் ஆகாதா என்பதைப் பணிவன்போடு தெரிவித்துக் கொள்கிறேன். கவர்னர் சொன்னமாதிரி அந்தக் காரியத்தை செய்து முடியுங்கள் என்று கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. ஆர். எஸ். ஆறுமுகம்] [1986 மார்ச் 24

மேலும், ஒட்டப்பிடாரத்தில் வ.உ.சி. உயர்நிலைப்பள்ளி ஒன்று இருக்கிறது. எட்டாவது வகுப்பு வரையில் ஒரு இடத்தில் இருக்கிறது. 9, 10, 11-வது வகுப்புகள் அங்கிருந்து ஒரு மைல் தூரத்திற்கு அப்பால் இருக்கின்றன. இப்படி ஒரு மைல் தூரத்தில் வகுப்புகள் நடைபெற்றால் தலைமை ஆசிரியர் எப்படி நிர்வாகத்தைக் கவனிக்க முடியும்? வகுப்புகள் எப்படி ஒழுங்காக நடக்க முடியும்? மழை பெய்தால் எட்டாவது வகுப்பு வரையில் உள்ள கட்டிடத்தில் குடை பிடித்துக்கொண்டுதான் இருக்க வேண்டும். இப்படிப்பட்ட கஷ்டங்கள் எல்லாம் இருப்பதினாலே இரண்டு கட்டிடங்களையும் ஒரே இடத்தில், நல்லமுறையில் கட்டிக்கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போன்று வீரபாண்டிய கட்டபொம்மன் பெயரால் கயத்தாறில் ஒரு பள்ளிக்கூடம் இருக்கிறது. அங்கே ஒன்றேகால் மைலுக்கு அந்தப் பக்கம் எட்டாம் வருப்புக்கு மேல் இருக்கின்றன. இந்தப் பக்கம் ஒன்று முதல் எட்டுவரை உள்ள வகுப்புகள் இருக்கின்றன. அவற்றையெல்லாம் ஒன்றாக வைக்கக் கூடாதா? மேலும் அது இடிந்த கட்டடமாக இருக்கிறது. ஒரு புதிய பள்ளிக்கூடமாக சேர்த்துக்கட்டித் தரக்கூடாதா?

கழுகுமலையில் மேல்நிலைப்பள்ளி இருக்கிறது. அந்த மேல் நிலைப்பள்ளியில் தீ பிடித்து பாதிக்கப்பட்டதன் காரணத்தால் மோசமான நிலைமையில் இருக்கிறது. 9 மாதங்கள் ஆகிவிட்டன. மழை இல்லாத நேரத்திலே மரத்தடி போன்ற இடங்களில் வைத்து வகுப்புக்களை நடத்துகிறார்கள். இதுபற்றி எவ்வளவோ எழுதினாலும் இன்னும் எதுவும் நடக்கவில்லை. இப்படி ஒரு நிலைமை இருப்பது நல்லதா என்று கேட்கிறேன். இதையெல்லாம் செய்து முடிக்க வேண்டாமா? இப்போது ஒட்டப்பிடாரத்தில் இரண்டு அறைகள் கட்ட அனுமதித்து இருக்கிறார்கள். அதற்காக நன்றி. ஆனால் அது போதாது. இந்தக் காரியங்களை எல்லாம் உடனடியாகச் செய்து கொடுக்குமாறு மிகவும் பணிவோடு நான் கேட்டுக் கொள்கிறேன்.

ஒட்டப்பிடாரத்தில் இருப்பது தாலுக்கா தலைமை மருத்துவமனை. ஆனால் அங்கே இருக்கின்ற வசதிகளைப் பார்த்தால் ஒரு கிராமத்தில் இருக்கின்ற வசதிகள் கூட இல்லை. 30 மைல் சுற்றளவில் இருந்து அங்கேதான் வருகிறார்கள். போதுமான டாக்டர் கிடையாது; மருந்துகள் கிடையாது. க்ளைவ் காலத்தில், மங்கம்மா காலத்தில் கட்டிய கட்டிடத்தில் அந்த மருத்துவமனையை வைத்திருக்கிறார்கள். எனவே



1986 மார்ச் 24] [திரு. ஆர் எஸ். ஆறுமுகம்]

இதனை நிதியமைச்சர் அவர்கள் கவனத்தில் கொள்ள வேண்டும். கொஞ்சம் நிதியினை அதிகமாக ஒதுக்கியாவது அவர்களுக்கு அதைச் சீர்செய்து கொடுக்க வேண்டும். அரசு மருத்துவமனை கயத்தாறிலே இருக்கிறது. அது அரசு மருத்துவமனையாக இல்லை என்றால் நான் அதைப்பற்றிச் சொல்லமாட்டேன். மிகக் கேவலமான முறையில் அந்த மருத்துவமனை இருக்கிறது. அதையும் சீர்படுத்த வேண்டும் என்று நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

எங்கள் தொகுதியிலே இரண்டு ஒன்றியங்கள் இருக்கின்றன. ஒரு ஒன்றியத்தில் 48 பஞ்சாயத்துக்களும், இன்னொரு ஒன்றியத்தில் 64 பஞ்சாயத்துக்களும் இருக்கின்றன. அதனை மூன்று ஒன்றியங்களாகப் பிரிக்க வேண்டும் என்று ஆட்சித் தலைவர் அவர்களும் எழுதி அனுப்பினார்கள். இன்னும் அதற்கான உத்தரவு வரவில்லை. எனவே விரைவில் அதை மூன்றாகப் பிரிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து நியாய விலைக் கடைகளைப் பற்றி குறிப்பிட்டு இருக்கிறார்கள். பல ஊர்களில் வெகுதூரம் சென்று பொருட்களைப் பெறவேண்டி இருக்கிறது. தளவாய்புரம், கொம்பாடி போன்ற இடங்களில் உள்ள அரிசன மக்கள் 5 மைலுக்கு அப்பால் போய் பொருட்களை வாங்கிச் செல்கிறார்கள். அவர்கள் எல்லாம் தூத்துக்குடியில் கூலி வேலை செய்துவிட்டு வீடு திரும்புகிறவர்கள். அவ்வளவு நேரத்திற்குப் பிறகு எப்படி 5 மைலுக்கு அப்பால் போய் பொருள்களை வாங்கிக் கொண்டு வர முடியும்? இதுபற்றி பலமுறை கேட்டாகிவிட்டது. அந்த ஊரிலேயே ஒரு நியாய விலைக் கடையை ஆரம்பிக்க வேண்டும் என்று கேட்டோம். அதற்கு விதி இடமளிக்கவில்லை என்று சொல்லி அவர்கள் விதியோடு விளையாடாதீர்கள். இன்னும் ஏதோ சட்டப் பிரச்சினை இருக்கிறதாம். எதுவாக இருந்தாலும் உரிய ஏற்பாடுகளைச் செய்து அவர்களுக்கு அங்கே கடைகளை ஏற்பாடு செய்து கொடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். கீழக்கோட்டையில் ஒரு நியாய விலைக் கடை ஏற்பாடு செய்து கொடுக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

கட்டபொம்மனுக்கு முன்னாள் முதல்வர் திரு. மு. கருணாநிதி அவர்கள் ஒரு கோட்டையைக் கட்டிவிட்டு போய்விட்டார்கள். அங்கே போய்ப் பார்த்தால் பெயர் இருக்கிறது. அவர் பெயரும் இருக்கிறது. வீரபாண்டிய கட்டபொம்மன் என்ற பெயரும் இருக்கிறது. நான் பணிவோடு கேட்கிறேன், கட்டபொம்மன் பெயரில் ஒரு தொழிற்சாலை ஏற்படுத்தினால் ஆயிரம் பேர் வேலை செய்யக்கூடிய வாய்ப்பு ஏற்பட்டு அவர்கள் அத்தனை பேரும் வாழ்த்துவார்கள். வ. உ. சிதம்பரனார் அவர்கள் நாட்டுக்காக உழைத்து சிறை சென்றார்கள். அவ்வாறு சிறை

சென்று பாடுபட்டு சுதந்திரம் வாங்கித் தந்தார்கள். அவர்களுடைய பெயரால் ஒரு மாவட்டத்தை ஏற்படுத்தப் போகிறோம். நான் பெருமைப்படுகிறேன். அதேமாதிரி அவர் பெயரால் ஒரு தொழிற்சாலையை ஆரம்பித்தால் ஆயிரம் பேர் வாயார வாழ்த்துவார்கள் அல்லவா? மக்கள் எல்லோரும் வேலைவாய்ப்பு இல்லாமல் வறுமையால் வாடிக் கொண்டிருக்கிறார்கள். எனவே இரண்டு தொழிற்சாலைகளை ஏற்படுத்தினால் மக்கள் பயனடைவார்கள் என்று மிக்க பணிவோடு கேட்டுக்கொண்டு பேசுவதற்கு வாய்ப்பளித்த தலைவர் அவர்களுக்கு நன்றி தெரிவித்து முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

## 7. அறிவிப்புகள்—தொடர்ச்சி.

### (இ) நடவடிக்கைக் குறிப்பிலிருந்து நீக்கப்பெறும் பகுதி குறித்து

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு: இன்று காலை மாண்புமிகு உறுப்பினர் திரு சைதை துரைசாமி அவர்கள் பேசியபோது பெயர் குறிப்பிடாமல் சில நபர்கள் மீது சாட்டிய குற்றம் குறித்து அவையில் எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டது. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் தாம் அதை படித்துப் பார்த்து, அப்பகுதி அவைக் குறிப்பில் இருக்க வேண்டுமா, வேண்டாமா என்று அறிவிக்கும் வரை வெளியிட வேண்டாம் என்று உத்தரவிட்டிருக்கிறார்கள்.

(பிற்பகல் 1.30).

அவைக் குறிப்பைப் பார்த்த பின் பேரவைத் தலைவர் அவர்கள் மாண்புமிகு உறுப்பினர் திரு. சைதை துரைசாமி அவர்கள் உரையிலே இறுதிப் பகுதியில் *** என்று தொடங்கி * * * என்று முடியும் வரை உள்ள பகுதியையும், அதன் தொடர்பாக எழுந்த குறுக்கீடுகளையும் அவைக் குறிப்பில் இருந்து பேரவைத் தலைவர் அவர்கள் நீக்கியுள்ளார்கள் என்பதை அவைக்கு அறிவிக்கிறேன்.

பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளை (25–3–1986) காலை 9.00 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1.31 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

---

***மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.



## 9. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

### (அ) சட்டப்படிக்கான விதிகளும் ஆணைகளும்.

39. தமிழ்நாடு 1954-ஆம் ஆண்டு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து பணியாளரமைப்பு நிர்வாகச் சீர்திருத்தத் துறையின் 26–12–85 ஆம் நாளிட்ட 1188 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை (இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 320 (5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது).

40. நகராட்சி மன்றங்களின் வரவு செலவின விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து நகராட்சி நிர்வாகம் குடிநீர் வழங்கல் துறையின் 29–4–1985 ஆம் நாளிட்ட 285 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை (தமிழ்நாடு 1920-ஆம் ஆண்டு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 5/1920) 304 (2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது).

41. தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தின் 1984–85 ஆம் ஆண்டிற்கான ஆண்டறிக்கை (1974 ஆம் ஆண்டு நீர் (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டத்தின் (மத்தியச் சட்டம் 6/1974) 39 (2) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது).

42. தமிழ்நாடு குழாய் கிணற்றுக் கழகத்தின் 1983–84 ஆம் ஆண்டிற்கான இரண்டாவது ஆண்டறிக்கை (1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது).

43. தமிழ்நாடு கைத்தறி வளர்ச்சிக் கழகத்தின் 1984–85ஆம் ஆண்டிற்கான இருபதாவது ஆண்டறிக்கை (1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது).

### (ஆ) அறிக்கைகள், அறிவிப்புகள் ஏனைய தாள்கள்—

எதுவுமில்லை.

இணைப்பு I

(....596-ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிட்ட வினா எண் 245 (4027)-க்கான விடையைக் காண்க).

விவர அறிக்கை.

17-7-1985 அன்று சட்டமன்றப் பேரவையில் 1935 ஆம் ஆண்டு சென்னை உயர்நீதிமன்ற (விசாரணை அதிகார வரம்பினை) நீட்டித்தல் மசோதா நிறைவேற்றப்பட்டு சட்டமாக ஆக்கப்பட்டுள்ளது. (Ac 42/1985) அதன் மூலம் செங்கல்பட்டு மாவட்டத்திலிருந்து பிரிக்கப்பட்டு சென்னை மாவட்டத்தில் இணைக்கப்பட்ட கீழ்க்கண்ட 19 கிராமங்களுக்கும் பொருந்துமாறு சாதாரண அசல் உரிமை இயல் வழக்குகளை சென்னை உயர்நீதிமன்றம் விசாரிப்பதற்கான அதிகார வரம்பு நீட்டிக்கப்பட்டுள்ளது

சென்னை மாவட்டம்.

| வட்டம் | வருவாய் கிராமம் |
|---|---|
| 1. கோட்டை—தண்டையார்பேட்டை. | 1. 30. சேலைவயல் |
| | 2. 31. கொடுங்கையூர் |
| | 3. 32. ஐம்புலி |
| | 4. 33. எருக்கஞ்சேரி |
| 2. புரசைவாக்கம்—பெரம்பூர். | 1. 65. குளத்தூர் |
| | 2. 71. கொன்னூர்—மல்லிகைச்சேரி. |
| | 3. 73. வில்லிவாக்கம் |
| 3. எழும்பூர்—நுங்கம்பாக்கம். | 1. 79. திருமங்கலம் |
| | 2. 106. கோயம்பேடு |
| | 3. 110. சாலிகிராமம் |
| | 4. 104. செஞ்சேரி 1-ம் பகுதி |
| | 5. 105. செஞ்சேரி 2-ம் பகுதி |
| 4. மாம்பலம்—கிண்டி | 1. 104. விருகம்பாக்கம் |
| | 2. 111. கோடம்பாக்கம் |
| | 3. 103. நெசப்பாக்கம் |
| | 4. 137. வேளச்சேரி |
| | 5. 138. தரமணி. |
| 5. மைலாப்பூர்—திருவல்லிக்கேணி. | 1. 139. கனகம் |
| | 2. 140. திருவான்மியூர். |

இந்தச் சட்டம் இயற்றப்பட்டுள்ளதால் இந்தப் பகுதியில் உள்ள காவல் நிலையங்களும் 1838 ஆம் ஆண்டு நகர காவல் சட்டத்தின் 8-வது பிரிவின்படி சென்னை நகரத்துடன் இணைக்கப்படும்.



இணைப்பு II

(......631 ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

பேரவை முன் வைக்கப் பெற்ற 1986 87-ஆம் ஆண்டிற்கான உடனடிச் செலவுக்கான மானியக் கோரிக்கைகள்.

A. வருவாய்க்கணக்கில் செலவு.

(ரூபாய் ஆயிரத்தில்)

| | |
|---|---|
| **கோரிக்கை—1 நில வரித் துறை—** | |
| மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள், எதிரே குறிப்பிட்டுள்ள தொகைக்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டுமென முன்மொழிவார். | 4.71,80 |
| **கோரிக்கை 2—மாநில ஆயத் தீர்வைத் துறை—** | |
| மாண்புமிகு ஆயத் தீர்வை, கைத்தறி, துணித் தொழில் துறை அமைச்சர் அவர்கள், எதிரே குறிப்பிட்டுள்ள தொகைக்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டுமென முன்மொழிவார். | 1,31,61 |
| **கோரிக்கை 3—மோட்டார் வண்டிகள் சட்டங்கள்—நிர்வாகம்—** | |
| மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள், எதிரே குறிப்பிட்டுள்ள தொகைக்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டுமென் முன்மொழிவார். | 87,22 |
| **கோரிக்கை 4—பொது விற்பனை வரியும், ஏனைய வரிகளும் தீர்வைகளும் — நிர்வாகம்—** | |
| மாண்புமிகு வணிகவரித் துறை அமைச்சர் அவர்கள், எதிரே குறிப்பிட்டுள்ள தொகைக்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டுமென முன்மொழிவார். | 4,24,80 |

[1986 மார்ச் 24

A. வருவாய்க் கணக்கில் செலவு—தொடர்ச்சி.

**கோரிக்கை 5—முத்திரைத்தாள்கள்—நிர்வாகம்—**

மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள், எதிரே குறிப்பிட்டுள்ள தொகைக்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டுமென முன்மொழிவார். **29,90**

**கோரிக்கை 6—பத்திரப் பதிவு—**

மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள், எதிரே குறிப்பிட்டுள்ள தொகைக்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டுமென முன்மொழிவார். **1,87,91**

**கோரிக்கை 7—மாநிலச் சட்ட மன்றம்—**

மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள், எதிரே குறிப்பிட்டுள்ள தொகைக்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டுமென முன்மொழிவார். **45,32**

**கோரிக்கை 8—தேர்தல்கள்—**

மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள், எதிரே குறிப்பிட்டுள்ள தொகைக்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டுமென முன்மொழிவார். **14,47**

**கோரிக்கை 9—மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள்—**

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், எதிரே குறிப்பிட்டுள்ள தொகைக்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டுமென முன்மொழிவார். **8,74,73**

**கோரிக்கை 10—பால் வழங்கு திட்டங்கள்—**

மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள், எதிரே குறிப்பிட்டுள்ள தொகைக்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டுமென முன்மொழிவார். **45,47**



1986 மார்ச் 24]

A. வருவாய்க் கணக்கில் செலவு—தொடர்ச்சி

(ரூபாய் ஆயிரத்தில்).

**கோரிக்கை 11—மாவட்ட நிர்வாகம்—**

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், எதிரே குறிப்பிட்டுள்ள தொகைக்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டுமென முன்மொழிவார். **10,87,09**

**கோரிக்கை 12—தமிழ்நாடு 1959-ஆம் ஆண்டு இந்து சமய – அறக்கட்டளைகள் சட்ட நிர்வாகம்—**

மாண்புமிகு செய்தி – அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள், எதிரே குறிப்பிட்டுள்ள தொகைக்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டுமென முன்மொழிவார். **98,05**

**கோரிக்கை 13—நீதி நிர்வாகம்—**

மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்கள், எதிரே குறிப்பிட்டுள்ள தொகைக்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டுமென முன்மொழிவார். **4,06,64**

**கோரிக்கை 14—சிறைச்சாலைகள்—**

மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்கள், எதிரே குறிப்பிட்டுள்ள தொகைக்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டுமென முன்மொழிவார். **2,64,99**

**கோரிக்கை 15—காவல் துறை—**

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், எதிரே குறிப்பிட்டுள்ள தொகைக்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டுமென முன்மொழிவார். **26,58,88**

[1986 மார்ச் 24

A. வருவாய்க் கணக்கில் செலவு—தொடர்ச்சி.

கோரிக்கை 16—தீயணைப்புப் பணிகள்—

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், எதிரே குறிப்பிட்டுள்ள தொகைக்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டுமென முன்மொழிவார். 2,08,52

கோரிக்கை 17—கல்வி—

மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள், எதிரே குறிப்பிட்டுள்ள தொகைக்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டுமென முன்மொழிவார். 1,37,66,60

கோரிக்கை 18—மருத்துவம்—

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் எதிரே குறிப்பிட்டுள்ள தொகைக்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டுமென முன்மொழிவார். 32,49,68

கோரிக்கை 19—பொதுச் சுகாதாரம்—

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள், எதிரே குறிப்பிட்டுள்ள தொகைக்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டுமென முன்மொழிவார். 17,12,59

கோரிக்கை 20—வேளாண்மை—

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் எதிரே குறிப்பிட்டுள்ள தொகைக்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டுமென முன்மொழிவார். 28,89,20

கோரிக்கை 21—மீனளம்—

மாண்புமிகு பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலத் துறை அமைச்சர் அவர்கள், எதிரே குறிப்பிட்டுள்ள தொகைக்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டுமென முன்மொழிவார். 1,53,03



1986 மார்ச் 24]

A. வருவாய்க் கணக்கில் செலவு—தொடர்ச்சி.

(ரூபாய் ஆயிரத்தில்)

கோரிக்கை 22—கால்நடை வளர்ப்பு—

மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் எதிரே குறிப்பிட்டுள்ள தொகைக்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டுமென முன்மொழிவார். 7,40,67

கோரிக்கை 23—கூட்டுறவு—

மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் எதிரே குறிப்பிட்டுள்ள தொகைக்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டுமென முன்மொழிவார். 2,73,48

கோரிக்கை 24—தொழில்கள்

மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் எதிரே குறிப்பிட்டுள்ள தொகைக்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டுமென முன்மொழிவார். 35,94

கோரிக்கை 25—சின்கோனா—

மாண்புமிகு செய்தி அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் எதிரே குறிப்பிட்டுள்ள தொகைக்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டுமென முன்மொழிவார். 97,67

கோரிக்கை 26—கைத்தறியும் துணித்தொழிலும்—

மாண்புமிகு ஆயத்தீர்வை, கைத்தறி— துணித் தொழில் துறை அமைச்சர் அவர்கள் எதிரே குறிப்பிட்டுள்ள தொகைக்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டுமென முன்மொழிவார். 4,84,21

[1986 மார்ச் 24

A. வருவாய்க் கணக்கில் செலவு—தொடர்ச்சி.

| | (ரூபாய் ஆயிரத்தில்.) |
|---|---|
| **கோரிக்கை 27—கதர்த் தொழில்—** | |
| மாண்புமிகு கதர்த் தொழில் துறை அமைச்சர் அவர்கள், எதிரே குறிப்பிட்டுள்ள தொகைக்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டுமென முன்மொழிவார். | 23,42 |
| **கோரிக்கை 28—சமுதாய நல வளர்ச்சித் திட்டங்களும் நகராட்சி நிர்வாகமும்—** | |
| மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்கள், எதிரே குறிப்பிட்டுள்ள தொகைக்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டுமென முன்மொழிவார். | 44,33,15 |
| **கோரிக்கை 29—தொழிலாளர் நலனும், தொழிற்சாலைகளும்—** | |
| மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள், எதிரே குறிப்பிட்டுள்ள தொகைக்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டுமென முன்மொழிவார். | 3,62,52 |
| **கோரிக்கை 30—சமூக நலன்—** | |
| மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் அவர்கள் எதிரே குறிப்பிட்டுள்ள தொகைக்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டுமென முன்மொழிவார். | 10,01,00 |
| **கோரிக்கை 31—பழங்குடியினர், ஆதி திராவிடர் முதலியோர் நலன்—** | |
| மாண்புமிகு ஆதி திராவிடர் நல அமைச்சர் அவர்கள், எதிரே குறிப்பிட்டுள்ள தொகைக்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டுமென முன்மொழிவார். | |



1986 மார்ச் 24]

A. வருவாய்க் கணக்கில் செலவு—தொடர்ச்சி.

| | (ரூபாய் ஆயிரத்தில்.) |
|---|---|
| **கோரிக்கை 32—பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் முதலியோர் நலன்—** | |
| மாண்புமிகு பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலத் துறை அமைச்சர் அவர்கள், எதிரே குறிப்பிட்டுள்ள தொகைக்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டுமென முன்மொழிவார். | 3,22,40 |
| **கோரிக்கை 33—வீட்டு வசதி—** | |
| மாண்புமிகு வீட்டு வசதி அமைச்சர் அவர்கள் எதிரே குறிப்பிட்டுள்ள தொகைக்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டுமென முன் மொழிவார். | 7,97,94 |
| **கோரிக்கை 34—நகர் பகுதி வளர்ச்சி—** | |
| மாண்புமிகு வீட்டு வசதி அமைச்சர் அவர்கள். எதிரே குறிப்பிட்டுள்ள தொகைக்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டுமென முன் மொழிவார். | 10,00,71 |
| **கோரிக்கை 35—நுகர்பொருள் வழங்கல்—** | |
| மாண்புமிகு உணவு அமைச்சர் அவர்கள் எதிரே குறிப்பிட்டுள்ள தொகைக்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டுமென முன் மொழிவார். | 36,30,86 |
| **கோரிக்கை 36—பாசனம்—** | |
| மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள், எதிரே குறிப்பிட்டுள்ள தொகைக்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டுமென முன்மொழிவார். | 16,21,66 |

[1986 மார்ச் 24

A. வருவாய்க் கணக்கில் செலவு தொடர்ச்சி.

(ரூபாய் ஆயிரத்தில்.)

கோரிக்கை 37—பொதுப்பணிகள்—கட்டடங்கள்—

மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள், எதிரே குறிப்பிட்டுள்ள தொகைக்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டுமென முன் மொழிவார். 1,01,12

கோரிக்கை 38—பொதுப் பணிகள்—பணியாளரமைப்பும், கருவிகளும் தளவாடமும்—

மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள், எதிரே குறிப்பிட்டுள்ள தொகைக்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டுமென முன்மொழிவார். 5,69,66

கோரிக்கை 39—சாலைகளும் பாலங்களும்—

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள், எதிரே குறிப்பிட்டுள்ள தொகைக்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டுமென முன்மொழிவார். 22,09,22

கோரிக்கை 40—சாலைப் போக்குவரத்துப் பணிகளும் கப்பல் போக்குவரத்தும்—

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள், எதிரே குறிப்பிட்டுள்ள தொகைக்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டுமென முன்மொழிவார். 1,29,61

கோரிக்கை 41—இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு—

மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள், எதிரே குறிப்பிட்டுள்ள தொகைக்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டுமென முன் மொழிவார். 10,17



1986 மார்ச் 24]

A. வருவாய்க் கணக்கில் செலவு—தொடர்ச்சி.

(ரூபாய் ஆயிரத்தில்.)

கோரிக்கை 42—ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வுகால நன்மைகளும்—

மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள், எதிரே குறிப்பிட்டுள்ள தொகைக்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டுமென முன்மொழிவார். 18,73,71

கோரிக்கை 43—பல்வகை—

மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள், எதிரே குறிப்பிட்டுள்ள தொகைக்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டுமென முன்மொழிவார். 26,10,48

கோரிக்கை 44—எழுதுபொருள்-அச்சுத் துறை—

மாண்புமிகு மின்துறை அமைச்சர் அவர்கள், எதிரே குறிப்பிட்டுள்ள தொகைக்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டுமென முன்மொழிவார். 4,73,90

கோரிக்கை 45—காட்டுவளத் துறை—

மாண்புமிகு செய்தி அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள், எதிரே குறிப்பிட்டுள்ள தொகைக்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டுமென முன்மொழிவார். 3,74,62

கோரிக்கை 46—இழப்பீடுகளும் ஒதுக்கீடுகளும்—

மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள், எதிரே குறிப்பிட்டுள்ள தொகைக்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டுமென முன்மொழிவார். 6,85,80

[1986 மார்ச் 24

A. வருவாய்க் கணக்கில் செலவு—தொடர்ச்சி

(ரூபாய் ஆயிரத்தில்.)

கோரிக்கை 47—செய்தி, சுற்றுலா, திரைப்படத் தொழில் நுட்பவியல்—

| | |
|---|---|
| மாண்புமிகு செய்தி—அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள், எதிரே குறிப்பிட்டுள்ள தொகைக்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டுமென முன்மொழிவார். | 76,93 |

கோரிக்கை 48—ஊரகத் தொழில்கள்—

| | |
|---|---|
| மாண்புமிகு ஊரகத் தொழில் அமைச்சர் அவர்கள், எதிரே குறிப்பிட்டுள்ள தொகைக்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டுமென முன்மொழிவார். | 2,94,63 |

கோரிக்கை 49—குடிநீர் வழங்கல்—

| | |
|---|---|
| மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள், எதிரே குறிப்பிட்டுள்ள தொகைக்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டுமென முன்மொழிவார். | 31,78,49 |
| மொத்தம்—A. வருவாய்க் கணக்கு | 5,85,85.51 |

B. வருவாய்க் கணக்கின் கீழ்வராத மூலதனச் செலவு.

கோரிக்கை 50—வேளாண்மை குறித்த மூலதனச் செலவு—

| | |
|---|---|
| மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் எதிரே குறிப்பிட்டுள்ள தொகைக்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டுமென முன்மொழிவார் | 57,03 |

கோரிக்கை 51—தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு—

| | |
|---|---|
| மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள், எதிரே குறிப்பிட்டுள்ள தொகைக்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டுமென முன்மொழிவார். | 3,41,99 |



1986 மார்ச் 24]

B. வருவாய்க் கணக்கின்கீழ் வராத மூலதனச் செலவு—தொடர்ச்சி.

(ரூபாய் ஆயிரத்தில்.)

கோரிக்கை 52—பாசனம் குறித்த மூலதனச் செலவு—

| | |
|---|---|
| மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள், எதிரே குறிப்பிட்டுள்ள தொகைக்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டுமென முன்மொழிவார். | 15,97,20 |

கோரிக்கை 53—பொதுப் பணிகள்—கட்டடங்கள் குறித்த மூலதனச் செலவு—

| | |
|---|---|
| மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள், எதிரே குறிப்பிட்டுள்ள தொகைக்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டுமென முன்மொழிவார். | 10,59,55 |

கோரிக்கை 54—சாலைகள், பாலங்கள் குறித்த மூலதனச் செலவு—

| | |
|---|---|
| மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள், எதிரே குறிப்பிட்டுள்ள தொகைக்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டுமென முன்மொழிவார். | 6,35,91 |

கோரிக்கை 55—சாலைப் போக்குவரத்துப் பணிகள், கப்பல் போக்குவரத்து குறித்த மூலதனச்செலவு—

| | |
|---|---|
| மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள், எதிரே குறிப்பிட்டுள்ள தொகைக்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டுமென முன்மொழிவார். | 72,21 |

கோரிக்கை 56—காட்டுவளம் குறித்த மூலதனச்செலவு—

| | |
|---|---|
| மாண்புமிகு செய்தி—அறநிலைத்துறை அமைச்சர் அவர்கள், எதிரே குறிப்பிட்டுள்ள தொகைக்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டுமென முன்மொழிவார். | 4,54,00 |

கோரிக்கை 57—ஊரகத் தொழில்கள் குறித்த மூலதனச் செலவு—

| | |
|---|---|
| மாண்புமிகு ஊரகத் தொழில் அமைச்சர் அவர்கள், எதிரே குறிப்பிட்டுள்ள தொகைக்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டுமென முன்மொழிவார். | 40,75 |

B. வருவாய்க் கணக்கின்கீழ் வராத
மூலதனச் செலவு—தொடர்ச்சி

(ரூபாய் ஆயிரத்தில்)

கோரிக்கை 58—பல்வகை மூலதனச்செலவு—

மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள், எதிரே குறிப்பிட்டுள்ள தொகைக்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டுமென முன்மொழிவார். 2,01,02

மொத்தம்—B. வருவாய்க் கணக்கின்கீழ் வராத மூலதனச் செலவு 44,59,07

C. கடன்கள், முன்பணங்கள் வழங்குதலும் கடனைத் திருப்பிக் கொடுத்தலும்

கோரிக்கை 59—மாநில அரசு வழங்கும் கடன்களும் முன்பணங்களும்—

மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள், எதிரே குறிப்பிட்டுள்ள தொகைக்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டுமென முன்மொழிவார். 1,00,30,75

பெரு மொத்தம் 7,30,15,31



## இணைப்பு III.

(50ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க).

பேரவைமுன் வைக்கப்பெற்ற 1985-86 ஆம் ஆண்டிற்கான துணை மானியக் கோரிக்கைகள்.

A. வருவாய்க் கணக்கில் செலவு.

(ரூபாய் ஆயிரத்தில்)

கோரிக்கை—

1 நிலவரித் துறை—

மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள், எதிரே குறிப்பிட்டுள்ள தொகைக்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டுமென முன்மொழிவார். 2,11,50

2 மாநில ஆயத் தீர்வைத் துறை—

மாண்புமிகு ஆயத்தீர்வை, கைத்தறி, துணித் தொழில் துறை அமைச்சர் அவர்கள் எதிரே குறிப்பிட்டுள்ள தொகைக்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டுமென முன்மொழிவார். 65,89

3 மோட்டார் வண்டிகள் சட்டங்கள்—நிர்வாகம்—

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள், எதிரே குறிப்பிட்டுள்ள தொகைக்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டுமென முன்மொழிவார். 31,72

4 பொது விற்பனை வரியும், ஏனைய வரிகளும் தீர்வைகளும்—நிர்வாகம்—

மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்கள், எதிரே குறிப்பிட்டுள்ள தொகைக்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டுமென முன்மொழிவார். 4,06,98

A. வருவாய்க் கணக்கில் செலவு—தொடர்ச்சி.

| கோரிக்கை— | (ரூபாய் ஆயிரத்தில்) |
|---|---|
| **5 முத்திரைத் தாள்கள் நிர்வாகம்—** | |
| மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள், எதிரே குறிப்பிட்டுள்ள தொகைக்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டுமென முன்மொழிவார். | 7,38 |
| **6 பத்திரப் பதிவு—** | |
| மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள், எதிரே குறிப்பிட்டுள்ள தொகைக்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டுமென முன்மொழிவார். | 63,31 |
| **7 மாநிலச் சட்ட மன்றம்—** | |
| மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள், எதிரே குறிப்பிட்டுள்ள தொகைக்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டுமென முன்மொழிவார். | 21,88 |
| **8 தேர்தல்கள்—** | |
| மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள், எதிரே குறிப்பிட்டுள்ள தொகைக்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டுமென முன்மொழிவார். | 75,80 |
| **9 மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள்—** | |
| மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், எதிரே குறிப்பிட்டுள்ள தொகைக்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டுமென முன்மொழிவார். | 6,36,88 |



A. வருவாய்க் கணக்கில் செலவு—தொடர்ச்சி.

| கோரிக்கை— | (ரூபாய் ஆயிரத்தில்) |
|---|---|
| **10 பால் வழங்கு திட்டங்கள்—** | |
| மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள், எதிரே குறிப்பிட்டுள்ள தொகைக்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டுமென முன்மொழிவார். | 30,68 |
| **11 மாவட்ட நிர்வாகம்—** | |
| மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், எதிரே குறிப்பிட்டுள்ள தொகைக்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டுமென முன்மொழிவார். | 12,40,22 |
| **12 தமிழ்நாடு 1959-ஆம் ஆண்டு இந்து சமய அறக் கட்டளைகள் சட்ட நிர்வாகம்—** | |
| மாண்புமிகு செய்தி அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள், எதிரே குறிப்பிட்டுள்ள தொகைக்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டுமென முன்மொழிவார். | 54,43 |
| **13 நீதி நிர்வாகம்—** | |
| மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்கள், எதிரே குறிப்பிட்டுள்ள தொகைக்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டுமென முன்மொழிவார். | 2,16,70 |
| **14 சிறைச்சாலைகள்—** | |
| மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்கள், எதிரே குறிப்பிட்டுள்ள தொகைக்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டுமென முன்மொழிவார். | 4,05,33 |
| **15 காவல் துறை—** | |
| மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எதிரே குறிப்பிட்டுள்ள தொகைக்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டுமென முன்மொழிவார். | 12,77,20 |

[1986 மார்ச் 24

A. வருவாய்க் கணக்கில் செலவு—தொடர்ச்சி.

(ரூபாய் ஆயிரத்தில்)

கோரிக்கை—

16 தீயணைப்புப் பணிகள்—

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், எதிரே குறிப்பிட்டுள்ள தொகைக்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டுமென முன்மொழிவார். 20,95

17 கல்வி—

மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள், எதிரே குறிப்பிட்டுள்ள தொகைக்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டுமென முன்மொழிவார். 1,09,46,21

18 மருத்துவம்—

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள், எதிரே குறிப்பிட்டுள்ள தொகைக்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டுமென முன்மொழிவார். 15,47,71

19 பொதுச் சுகாதாரம்—

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள், எதிரே குறிப்பிட்டுள்ள தொகைக்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டுமென முன்மொழிவார். 1,76,03

20 வேளாண்மை—

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள், எதிரே குறிப்பிட்டுள்ள தொகைக்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டுமென முன்மொழிவார். 17,36,35

21 மீனளம்—

மாண்புமிகு பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலத் துறை அமைச்சர் அவர்கள், எதிரே குறிப்பிட்டுள்ள தொகைக்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டுமென முன்மொழிவார். 20,78



1986 மார்ச் 24]

A. வருவாய்க் கணக்கில் செலவு—தொடர்ச்சி.

(ரூபாய் ஆயிரத்தில்)

கோரிக்கை 22—கால்நடை வளர்ப்பு—

மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள், எதிரே குறிப்பிட்டுள்ள தொகைக்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டுமென முன்மொழிவார். 30,07

கோரிக்கை 23—கூட்டுறவு—

மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள், எதிரே குறிப்பிட்டுள்ள தொகைக்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டுமென முன்மொழிவார். 4,36,59

கோரிக்கை 24—தொழில்கள்—

மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள், எதிரே குறிப்பிட்டுள்ள தொகைக்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டுமென முன்மொழிவார். 7,04,18

கோரிக்கை 25—சின்கோனா—

மாண்புமிகு செய்தி-அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள், எதிரே குறிப்பிட்டுள்ள தொகைக்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டுமென முன்மொழிவார். 54,49

கோரிக்கை 26—கைத்தறியும் துணித் தொழிலும்—

மாண்புமிகு ஆயத்தீர்வை கைத்தறி-துணித் தொழில் துறை அமைச்சர் அவர்கள், எதிரே குறிப்பிட்டுள்ள தொகைக்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டுமென முன்மொழிவார். 15,55,43

A. வருவாய் கணக்கில் செலவு—தொடர்ச்சி.

(ரூபாய் ஆயிரத்தில்)

கோரிக்கை 27—கதர்த் தொழில்—

மாண்புமிகு கதர்த் தொழில் துறை அமைச்சர் அவர்கள், எதிரே குறிப்பிட்டுள்ள தொகைக்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டுமென முன்மொழிவார். 1,05,64

கோரிக்கை 28—சமுதாய நல வளர்ச்சித் திட்டங்களும் நகராட்சி நிர்வாகமும்—

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள், எதிரே குறிப்பிட்டுள்ள தொகைக்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டுமென முன்மொழிவார். 1

கோரிக்கை 29—தொழிலாளர் நலனும் தொழிற்சாலைகளும்—

மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள், எதிரே குறிப்பிட்டுள்ள தொகைக்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டுமென முன்மொழிவார். 1,09,35

கோரிக்கை 30—சமூக நலன்—

மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள், எதிரே குறிப்பிட்டுள்ள தொகைக்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டுமென முன்மொழிவார். 37,57

கோரிக்கை 31—பழங்குடியினர், ஆதி திராவிடர் முதலியோர் நலன்—

மாண்புமிகு ஆதி திராவிடர் நல அமைச்சர் அவர்கள், எதிரே குறிப்பிட்டுள்ள தொகைக்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டுமென முன்மொழிவார். 6,77,61



A. வருவாய் கணக்கில் செலவு—தொடர்ச்சி.

(ரூபாய் ஆயிரத்தில்)

கோரிக்கை 32—பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் முதலியோர் நலன்—

மாண்புமிகு பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலத் துறை அமைச்சர் அவர்கள், எதிரே குறிப்பிட்டுள்ள தொகைக்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டுமென முன்மொழிவார். 25,81

கோரிக்கை 33—வீட்டு வசதி—

மாண்புமிகு வீட்டு வசதி அமைச்சர் அவர்கள், எதிரே குறிப்பிட்டுள்ள தொகைக்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டுமென முன்மொழிவார். 2,04,35

கோரிக்கை 34—நகர்ப்பகுதி வளர்ச்சி—

மாண்புமிகு வீட்டு வசதி அமைச்சர் அவர்கள், எதிரே குறிப்பிட்டுள்ள தொகைக்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டுமென முன்மொழிவார். 28,56,43

கோரிக்கை 35—நுகர் பொருள் வழங்கல்—

மாண்புமிகு உணவு அமைச்சர் அவர்கள், எதிரே குறிப்பிட்டுள்ள தொகைக்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டுமென முன்மொழிவார். 2,89,99

கோரிக்கை 36—பாசனம்—

மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள், எதிரே குறிப்பிட்டுள்ள தொகைக்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டுமென முன்மொழிவார். 6,32,18

[1986 மார்ச் 24

A. வருவாய்க் கணக்கில் செலவு—தொடர்ச்சி.

(ரூபாய் ஆயிரத்தில்)

கோரிக்கை 37—பொதுப் பணிகள்—கட்டடங்கள்

| | |
|---|---|
| மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் அவர்கள், எதிரே குறிப்பிட்டுள்ள தொகைக்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டுமென முன்மொழிவார். | 94,55 |

கோரிக்கை 38—பொதுப் பணிகள்—பணியாளரமைப்பும், கருவிகளும் தளவாடமும்—

| | |
|---|---|
| மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள், எதிரே குறிப்பிட்டுள்ள தொகைக்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டுமென முன்மொழிவார். | 3,50,78 |

கோரிக்கை 39—சாலைகளும் பாலங்களும்—

| | |
|---|---|
| மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள், எதிரே குறிப்பிட்டுள்ள தொகைக்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டுமென முன்மொழிவார். | 4,45,20 |

கோரிக்கை 40—சாலைப் போக்குவரத்துப் பணிகளும் கப்பல் போக்குவரத்தும்—

| | |
|---|---|
| மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள், எதிரே குறிப்பிட்டுள்ள தொகைக்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டுமென முன்மொழிவார். | 99,77 |

கோரிக்கை 41—இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு—

| | |
|---|---|
| மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள், எதிரே குறிப்பிட்டுள்ள தொகைக்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டுமென முன் மொழிவார். | 47,24 |

கோரிக்கை 42—ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வு கால நன்மைகளும்—

| | |
|---|---|
| மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள், எதிரே குறிப்பிட்டுள்ள தொகைக்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டுமென முன்மொழிவார். | 22,89,72 |



1986 மார்ச் 24]

A. வருவாய்க் கணக்கில் செலவு—தொடர்ச்சி.

(ரூபாய் ஆயிரத்தில்)

கோரிக்கை 43—பல்வகை—

| | |
|---|---|
| மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள், எதிரே குறிப்பிட்டுள்ள தொகைக்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டுமென முன்மொழிவார். | 1 |

கோரிக்கை 44—எழுது பொருள்-அச்சுத்துறை—

| | |
|---|---|
| மாண்புமிகு மின் துறை அமைச்சர் அவர்கள், எதிரே குறிப்பிட்டுள்ள தொகைக்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டுமென முன்மொழிவார். | 2,29,87 |

கோரிக்கை 45—காட்டுவளத் துறை—

| | |
|---|---|
| மாண்புமிகு செய்தி - அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள், எதிரே குறிப்பிட்டுள்ள தொகைக்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டுமென முன்மொழிவார். | 1,20,70 |

கோரிக்கை 46—இழப்பீடுகளும் ஒதுக்கீடுகளும்—

| | |
|---|---|
| மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள், எதிரே குறிப்பிட்டுள்ள தொகைக்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டுமென முன்மொழிவார். | 59,74 |

கோரிக்கை 47—செய்தி, சுற்றுலா, திரைப்படத் தொழில் நுட்பவியல்—

| | |
|---|---|
| மாண்புமிகு செய்தி - அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள், எதிரே குறிப்பிட்டுள்ள தொகைக்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டுமென முன்மொழிவார். | 81.21 |

[1986 மார்ச் 24

A. வருவாய் கணக்கில் செலவு—தொடர்ச்சி.

(ரூபாய் ஆயிரத்தில்)

கோரிக்கை 48—ஊரகத் தொழில்கள்—

மாண்புமிகு ஊரகத் தொழில் அமைச்சர் அவர்கள், எதிரே குறிப்பிட்டுள்ள தொகைக்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டுமென முன்மொழிவார். 1,39,08

கோரிக்கை 49—குடிநீர் வழங்கல்—

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள், எதிரே குறிப்பிட்டுள்ள தொகைக்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டுமென முன்மொழிவார். 2

மொத்தம்—A. வருவாய்க் கணக்கு .. 3,09,01,23

B. வருவாய்க் கணக்கின் கீழ் வராத மூலதனச் செலவு.

கோரிக்கை 50—வேளாண்மை குறித்த மூலதனச் செலவு—

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள், எதிரே குறிப்பிட்டுள்ள தொகைக்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டுமென முன்மொழிவார். 81,97

கோரிக்கை 51—தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு—

மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள், எதிரே குறிப்பிட்டுள்ள தொகைக்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டுமென முன்மொழிவார். 69,67



1986 மார்ச் 24]

B. வருவாய்க் கணக்கின்கீழ் வராத மூலதனச் செலவு—தொடர்ச்சி

(ரூபாய் ஆயிரத்தில்)

கோரிக்கை 52—பாசனம் குறித்த மூலதனச் செலவு—

மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள், எதிரே குறிப்பிட்டுள்ள தொகைக்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டுமென முன் மொழிவார். 3,97,05

கோரிக்கை 53—பொதுப் பணிகள்—கட்டடங்கள் குறித்த மூலதனச் செலவு—

மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள், எதிரே குறிப்பிட்டுள்ள தொகைக்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டுமென முன்மொழிவார். 3

கோரிக்கை 54—சாலைகள் பாலங்கள் குறித்த மூலதனச் செலவு—

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள், எதிரே குறிப்பிட்டுள்ள தொகைக்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டுமென முன் மொழிவார். 3,70

கோரிக்கை 55—சாலைப் போக்குவரத்துப் பணிகள், கப்பல் போக்குவரத்து குறித்த மூலதனச் செலவு—

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள், எதிரே குறிப்பிட்டுள்ள தொகைக்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டுமென முன்மொழிவார். 2,74,25

கோரிக்கை 56—காட்டுவளம் குறித்த மூலதனச் செலவு—

மாண்புமிகு செய்தி - அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள், எதிரே குறிப்பிட்டுள்ள தொகைக்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டுமென முன் மொழிவார். 2

[1986 மார்ச் 24

B. வருவாய்க் கணக்கின்கீழ் வராத மூலதனச் செலவு—தொடர்ச்சி.

| | (ரூபாய் ஆயிரத்தில்) |
|---|---|
| கோரிக்கை 57— ஊரகத் தொழில்கள் குறித்த மூலதனச் செலவு— | |
| மாண்புமிகு ஊரகத் தொழில் அமைச்சர் அவர்கள், எதிரே குறிப்பிட்டுள்ள தொகைக்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டுமென முன்மொழிவார். | 34,92 |
| கோரிக்கை 58—பல்வகை மூலதனச் செலவு— | |
| மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள், எதிரே குறிப்பிட்டுள்ள தொகைக்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டுமென முன்மொழிவார். | 13,56,06 |
| மொத்தம்—B. வருவாய்க் கணக்கின் கீழ்வராத மூலதனச் செலவு. | 22,17,67 |
| C. கடன்கள், முன்பணங்கள் வழங்குதலும் கடனைத் திருப்பிக் கொடுத்தலும்— | |
| கோரிக்கை 59—மாநில அரசு வழங்கும் கடன்களும் முன் பணங்களும்— | |
| மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள், எதிரே குறிப்பிட்டுள்ள தொகைக்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டுமென முன்மொழிவார். | 97,30,45 |
| பெருமொத்தம் .. | 4,28,49,35 |

தமிழ்நாடு ஆவணக்காப்பக நூலகம் சென்னை-600 008
136454
D
V211,31 N86
N86·18-4 45

## LIST OF AGENTS FOR THE SALE OF TAMIL NADU GOVERNMENT PUBLICATIONS.

### IN MADRAS CITY.

1 Account Test Institute, Egmore, Madras-8.
2 The City Book Company, Madras-4.
3 Higginbothams (Private) Limited, Madras-2.
4 P. Varadachary and Company, Madras-1.
5 C. Subbiah Chetty and Company, Madras-5.
6 The Universal Book House, Moore Market, Madras-3.
7 C. Sitharaman and Company, Madras-14.
8 Mohan Pathippagam and Book Depot, Madras-5.
9 C. Venkatesan Chetty and Company, No. 8-C, Pycrofts Road, Madras-5.
10 The South India Saiva Siddhanta Works Publishing Society (Tirunelveli) Limited, Madras-1.
11 The Sangam Publishers, No. 11, Sunkurama Chetty Street, Madras-1.
12 New Century Book House (Private) Limited, Madras-2.
13 Kalaivani Book Centre, No. 1, Ponniamman Koil Street, Egmore, Madras-8.

### IN MOFUSSIL OF TAMIL NADU.

1 A. Venkatasubban & Company, Vellore (North Arcot District).
2 Bharathamatha Book Depot, Thanjavur (Tanjore District).
3 P. V. Nathan Company, Kumbakonam (Tanjore District).
4 Appar Book Stall, Thanjavur.
5 P. N. Swaminathan and Company, Bazaar Street, Pudukkottai.
6 Palaniappa Bros., Tiruchirappalli-2.
7 S. R. Subramania Pillai, Tirunelveli Junction.
8 B. Aruldoss, Villupuram (South Arcot District).
9 Vasantham Stores, Booksellers, 9/31, Cross Cut Road, Coimbatore-12.
10 Mercury Book Company, 20, Karuppa Gounder Street, Coimbatore-1.
11 S. M. Jegannatham Book House, 35, Nandhi Koil Street, Tiruchirappalli-1.
12 Ganesh Stores, South Car Street, Sivakasi.
13 Mary Martin, Booksellers, Kottagiri (The Nilgiris).
14 A. K. Chandriah Chettiar & Sons, Salem-1.
15 Parameswari Book Shop, No. 45D, Old Market Street, Salem.
16 Meenakshi Pathipagam, Pudukkottai.
17 K. V. Narayana Iyer & Sons, Dindigul, Madurai District.
18 Jayakumari Stores, Nagercoil (Kanyakumari District).
19 Baby Stores, Booksellers, Villupuram (South Arcot District).
20 Dinamani Stores, No. 3/1, Old Post Office Road, Coimbatore-10.
21 Kumaran Book Depot, Booksellers, Erode-1.
22 Vela Book Company, No. A, Annaji Rao Street, Erode-1.
23 Radhamani Stores, 6-A, Raja Street, Coimbatore-1.
24 Ajantha Book Centre, Salem-1.
25 Sri Vidya, 63, Tennure High Road, Tiruchirappalli-2.
26 Sri Ramavilas Book Shop, 90, Amman Sannathi, Madras-1.

### IN OTHER STATES.

1 Jain Book Agency, New Delhi.
2 Inter National Book House, Trivandrum.
3 The Book Syndicate, Hyderabad-1.
4 Labour Law Publications, Hyderabad.
5 Puthaghalayam, Pondicherry.
6 Prabu Book Service, Gurgaon, Haryana.
7 K. P. Bagohi & Company, 286, R.B. Gandhi Street, Calcutta-11.

---

© Published under Rules 234 and 237 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the Director of Stationery and Printing Madras